”சங்ககால நெய்தலும் தற்கால பதிவுகளும்

(எட்டுத்தொகையில் அகம் சார்ந்தவை)”

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக

முனைவர் பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு

தெ.சந்திரா

முழு நேர ஆய்வாளர்

பதிவு எண் : 9645

தமிழாய்வு மையம்

ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி

தூத்துக்குடி - 628 002.

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி - 12

ஜூன் - 2016

முனைவர் சு.பானுமதி, எம்.ஏ.,எம்..்.பில்.,பிஎச்.டி., டி.ஜி.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி - 628 002.

நெறியாளர் சான்றிதழ்

"சங்ககால நெய்தலும் தற்காலப் பதிவுகளும் (எட்டுத்தொகையில் அகம் சார்ந்தவை)" என்னும் தலைப்பில் **தெ.சந்திரா** அவர்கள் செய்துள்ள இவ்வாய்வு, தூத்துக்குடி ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரியில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்ட காலத்தில் அவரால் தன்னிச்சையாகச் செய்யப்பட்டது என்றும் இவ்வாய்வின் மீது வேறு எந்தப் பட்டமும் ஆய்வாளருக்கு அளிக்கப் பெறவில்லை என்றும் சான்று அளிக்கிறேன்.

இடம் : தூத்துக்குடி (சு.பானுமதி)
நாள் : நெறியாளர் கையொப்பம்

தெ.சந்திரா, எம்.ஏ., எம்.்.பில்., டி.ஜி.டி.,

பதிவு எண் : 9645

முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழ் ஆய்வு மையம்,

ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,

தூத்துக்குடி - 628 002.

ஆய்வாளரின் உறுதிமொழி

"சங்ககால நெய்தலும் தற்காலப் பதிவுகளும் (எட்டுத் தொகையில் அகம் சார்ந்தவை)" என்னும் தலைப்பில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக முனைவர் பட்டத்திற்குச் செய்யப்பட்ட இவ்வாய்வு என் முயற்சியில் உருவானதாகும். இதற்கு முன் வேறு எந்த ஆய்வுப்பட்டத்திற்கும் இவ்வாய்வேடு அளிக்கப்படவில்லை என உறுதி அளிக்கிறேன்.

இடம் : தூத்துக்குடி (தெ.சந்திரா)

நாள் : **ஆய்வாளர் கையொப்பம்**

நெறியாளர் உறுதிக் கையொப்பம்

முனைவர் சு.பானுமதி, எம்.ஏ.,எம்..்.பில்.,பிஎச்.டி., டி.ஜி.டி.,
இணைப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி - 628 002.

நன்றியுரை

“சங்ககால நெய்தலும் தற்காலப் பதிவுகளும் (எட்டுத் தொகையில் அகம் சார்ந்தவை)” என்னும் தலைப்பில் முனைவர் பட்டத்திற்கு ஆய்வு செய்ய அனுமதி அளித்த மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்திற்கும், ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரித்தாளாளர் திரு.ஏ.பி.சி.வீ.சொக்கலிங்கம் அவர்களுக்கும், ஊக்கமளித்த கல்லூரி முதல்வர் திருமதி.வாசுகி அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வுக்கு மேற்பார்வையாளராக இருந்து துணைசெய்து இவ்வாய்வுச் சிறப்பாக அமைய வழிகாட்டி, கருத்துரைகள் வழங்கி ஊக்கமளித்து உதவிய அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய பேராசிரியர் முனைவர் திருமதி.சு.பானுமதி அவர்களுக்கு என் இதயங் கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன்.

ஆய்விற்குத் துணைபுரிந்த தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் திருமதி.நீ.கந்தம்மாள் அவர்களுக்கும், தமிழ்த்துறைப் பேராசிரியர்கள் அனைவருக்கும், நூலகர்க்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆய்வுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கிய பேராசிரியர் முனைவர் அ.கந்தசாமி அவர்களுக்கு என் நன்றியை உரித்தாக்குகின்றேன்.

ஆய்வுக்கு உறுதுணையாக இருந்து ஊக்கமளித்த என் அன்புப் பெற்றோருக்கும், கணவருக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

உரிய நேரத்தில் இவ்வாய்வேட்டை அழகாக வடிவமைத்துக் கொடுத்த சிவா கணிப்பொறி மையத்திற்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன். எல்லாம் வல்ல இறைவனுக்கு என் இதயம் நிறை நன்றியை உள் அன்போடு உரிதாக்குகிறேன்.

பொருளடக்கம்

வ.எண்	தலைப்பு	பக்கம் எண்
1.	ஆய்வு முன்னுரை	1-12
2.	நெய்தல் நில இலக்கியப் படைப்பாளிகள்	13-66
3.	சங்ககால நெய்தல் வாழ்க்கை	67-117
4.	தற்காலப் படைப்புகளில் நெய்தல் வாழ்க்கை	118-226
5.	சங்ககாலம் மற்றும் தற்கால நெய்தல் படைப்புகள் ஓர் ஒப்பியல் பார்வை	227-283
6.	ஆய்வு முடிவுரை	284-290
	துணைநூற்பட்டியல்	
	பின்னிணைப்புகள்	
	முன்வாய்மொழித் தேர்வுப் புகைப்படங்கள்	
	ஆய்வுக் கட்டுரை நகல்	
	படங்கள்	

சுருக்கக்குறியீட்டு விளக்கம்

அகம்.	-	அகநானூறு
ஐங்.	-	ஐங்குறுநூறு
உ.ஆ.	-	உரையாசிரியர்
கலி.	-	கலித்தொகை
கள.	-	களவியல்
கற்.	-	கற்பியல்
குறுந்.	-	குறுந்தொகை
சிலம்பு.	-	சிலப்பதிகாரம்
தொல்.	-	தொல்காப்பியம்
ப.	-	பக்கம்
பக்.	-	பக்கங்கள்
ப.ஆ.	-	பதிப்பாசிரியர்
பா.	-	பாடல்
புறம்.	-	புறநானூறு
பொருள்.	-	பொருளதிகாரம்
மேலது.,	-	மேற்கூறிய நூல்
நற்.	-	நற்றிணை
நூற்.	-	நூற்பா

ஆய்வு முன்னுரை

உலகின் மூத்த மொழிகளுள் ஒன்றாக விளங்குகின்ற மொழி தமிழ் மொழியாகும் கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்தோன்றி மூத்தகுடி' என்று புறப்பொருள் வெண்பா மாலை என்ற புற இலக்கண நூல் கூறுவதைக் கொண்டு தமிழின் பழமையை உணரலாம்.

தொடக்க காலத்தில் தமிழ் எந்தப் பகுதியில் பேசப்பட்டது என்பதைத் தொல்காப்பியம் என்ற பழம்பெரும் இலக்கணநூல் கூறுகிறது. தொல்காப்பியத்திற்குப் பாயிரம் எழுதிய பனம்பாரனார் என்பவர்

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறும் நல்லுலகம்

என்று தமிழ்நாட்டின் எல்லையைக் கூறுகின்றார். எனவே, வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே குமரிமுனை வரை தமிழ் பேசப்பட்டதாக நாம் இதன் மூலம் அறிகிறோம்.

தமிழ்நாட்டைச் சேர, சோழ, பாண்டியர் என்ற மூவேந்தர்களும், பல குறுநில மன்னர்களும் ஆண்டதாகச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. சேர நாட்டிற்கு வஞ்சி மாநகரும், சோழ நாட்டிற்குப் பூம்புகாரும், பாண்டிய நாட்டிற்கு மதுரையும் தலைநகர்களாக இருந்துள்ளன. மூவேந்தர்களில் பாண்டிய மன்னர்கள் தமிழ்மொழியைப் போற்றி வளர்க்கும் வண்ணம் தமிழ்ச் சங்கங்கள் வைத்து நடத்தியதாகப் பல்வேறு சான்றுகள் கிடைக்கின்றன. அச்சங்கங்களில் தமிழ்ப் புலவர்கள் இருந்து தமிழ் ஆய்வு செய்ததாகவும், தமிழில் பல்வேறு செய்யுள்களை இயற்றியதாகவும் சங்க இலக்கியங்கள், இறையனார் களவியல் உரை போன்ற நூல்களால் அறியலாம்.

தமிழ் என்ற சொல் இனிமை என்ற பொருளை உடையது. 'இனிமையும், நீர்மையும் தமிழ் எனலாகும்' என்று பிங்கல நிகண்டு கூறுகின்றது. 'மதுரமான மொழி' என வால்மீகி இராமாயணம் கூறுகின்றது.

இந்த இனிமையான தமிழ் மொழியைச் சங்கம் மூலம் புலவர்களும் கற்றறிந்தோரும் சிற்றரசர்களும், பேரரசர்களும் பல்வேறு வகைப்பட்ட செய்யுட்களைப் பாடி வளர்த்தனர்.

சங்க இலக்கியங்கள்

பல்லாயிரம் ஆண்டுக் காலப் பழமையான இலக்கிய இலக்கணங்களைக் கொண்ட மொழியாகத் தமிழ் மொழி விளங்குகின்றனது. அதனால் அம்மொழி

நீண்டகால இலக்கிய வரலாற்றினைக் கொண்டிருக்கிறது. இதில் முதன்மையான இலக்கிய வரலாற்றுக் காலம் சங்க காலமாகும்.

சங்கம் என்ற ஓர் அமைப்பு இருந்ததாகப் பல்வேறு ஆதாரங்கள் கிடைத்தாலும், சங்கத்திலே அமர்ந்து புலவர்கள் பாடிய பாடல்கள் சிலவாகத் தான் இருக்க முடியும். பெரும்பாலான பாடல்கள், பல்வேறு புலவர்களால் பாடப்பட்டவையாகத்தான் இருக்க வேண்டும். அவை கி.மு.500 முதல் கி.பி.200 முடிய உள்ள காலத்தில் பாடப்பட்டவையாக இருக்கலாம்.

சங்கப் பாடல்கள் எட்டுத்தொகை நூல்கள் என்றும், பத்துப்பாட்டு என்றும் பிரிக்கப்பட்டிருத்தல் காணத்தக்கது ஏராளமான பாடல்கள் ஓலைச் சுவடிகளில் இருந்து அழிந்துபோக, எஞ்சியவற்றைத் தொகுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அக்காலத்து அரசர்கள் புலவர்களின் துணையோடு செயல்பட்டனர். அவ்வாறு தொகுக்கப்பட்டவையே எட்டுத்தொகையும், பத்துப்பாட்டுமாகும். இக்காலப்பகுதியில் படைக்கப்பட்ட இலக்கண நூல்களுள் தொல்காப்பியம் மட்டுமே கிடைத்துள்ளது.

எட்டுத் தொகுதிகளாகத் தொகுக்கப்பட்ட எட்டு நூல்கள் எட்டுத்தொகை என்றும், பத்துப் பெரிய பாடல்கள் பத்துப் பாட்டு என்றும் பெயர் பெற்றன.

தொல்காப்பியம்

சங்க இலக்கியங்களை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னால் சங்க இலக்கியங்களுக்கு இலக்கணமாகத் திகழ்ந்த தொல்காப்பியம் பற்றி அறிந்து கொள்வது தேவையான ஒன்றாகும்.

சங்க இலக்கியங்களை அகம், புறம் எனப் பிரித்துப் பார்ப்பதற்கும், தமிழ் மொழியின் முழுமையான இலக்கணத்தை அறிந்து கொள்வதற்கும் தொல்காப்பியம் துணை நிற்கிறது.

சங்க இலக்கியங்களுக்கு முன்னால் பல நூறு ஆண்டுக்காலத் தமிழிலக்கியங்கள் இருந்திருக்க வேண்டும். கடல் பெருக்கெடுத்து ஊர்களை அழித்ததாலும், ஓலைச் சுவடிகள் பல்வேறு காரணங்களால் அழிந்ததாலும் அவ்விலக்கியங்கள் இன்றைக்குக் கிடைக்கவில்லை. அவ்விலக்கியங்களுக்கு அகத்தியர் எழுதிய அகத்தியம் என்ற இலக்கண நூல் இருந்ததாகவும், அதனைத் தொடர்ந்து அகத்தியரின் மாணவரான தொல்காப்பியர் தொல்காப்பியத்தை எழுதியதாகவும் தமிழ் அய்வாளர்கள் இறையனார் களவியல் உரையை அடிப்படையகக் கொண்டு கூறுகின்றனர்.

தொல்காப்பியர் கி.மு.500 அளவில் வாழ்ந்ததாக, பல்வேறு ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தொல்காப்பியர் எழுதிய தொல்காப்பியமே சங்க இலக்கியத்தின் இலக்கணமாகத் திகழ்ந்தது.

தொல்காப்பியம் மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட இலக்கண நூலாகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என்பன அவை. ஒவ்வொரு அதிகாரமும் ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த இலக்கண நூல்தான் தமிழர் நாகரிகத்தை உலகின் தலைசிறந்த நாகரிகமாக எடுத்து விளக்குவதற்குச் சான்றாக நிற்கின்றது.

மேலும், இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம், கம்பனின் இராமகாதை ஆகிய செவ்வியல் காவியங்களை முன்னுதாரணங்களாகக் கொண்டு, பெரிய புராணம் முதலிய பிற தமிழ்க் காப்பியங்களைப் பார்ப்பதும் இதன் அடிப்படையில் அதுசரியான காப்பியமே என்றோ காப்பியம் அன்று என்றோ மதிப்பிடுவதும் முடிபுமுறைத் திறனாய்வு ஆகும்.

எட்டுத்தொகை நூல்கள்

எட்டுத்தொகையில் உள்ளவை எட்டுத் தொகை நூல்களாகும். இவற்றைக் குறிக்கும் பழம் பாடல் ஒன்று உள்ளது. இப்பாடலை மனப்பாடம் செய்து கொண்டால் இந்நூல்களின் பெயர்களை நாம் நன்கு நினைவில் வைத்துக் கொள்ளலாம்.

நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியொடு அகம்புறம் என்று
இத்திறத்த எட்டுத் தொகை.

இவற்றுள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகியவை அகநூல்களாகும். பதிற்றுப்பத்தும், புறநானூறும் புறநூல்களாகும். பரிபாடல் அகமும், புறமும் கலந்த நூலாகும்.

பத்துப்பாட்டு

சிறிய பாடல்கள் எல்லாம் எட்டுத்தொகையுள் அடங்கிவிட, பத்துப் பெரிய பாடல்களின் தொகுதி பத்துப்பாட்டு எனப் பெயரிடப்பட்டது. இப்பத்துப் பாடல்களையும் குறிக்கும் பழம்பாடல் ஒன்று உள்ளது.

முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளம்துரைக் காஞ்சி – மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சி பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து

இப்வெண்பாவில் உள்ள முருகு என்று கூறப்படுகின்ற திருமுருகாற்றுப்படை, பொருநாளு என்று சொல்லப்படுகின்ற பொருநர் ஆற்றுப்படை, பாணிரண்டு என்று கூறப்படுகின்ற சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கடாம் என்று அழைக்கப்படுகின்ற மலைபடுகடாம் ஆகியவை ஆற்றுப்படை என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தவை. இவை புறப்பாடல்கள் ஆகும். இவை தவிர மதுரைக்காஞ்சியும் புறப்பாடல் ஆகும்.

முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவை அகப்பாடல்களாகும். இவற்றுள் முல்லைப்பாட்டு 103 அடிகளை உடைய மிகச் சிறிய பாடலாகும். மதுரைக் காஞ்சி 782 அடிகளை உடைய மிகப் பெரிய பாடலாகும். இப்பத்துப்பாட்டும், எட்டுத்தொகையும் இணைந்து பதினெண்மேற்கணக்கு எனவும் பெயர் பெறுகின்றன.

சங்க இலக்கியத்தின் சிறப்புப் பிரிவுகள்

சங்க இலக்கியங்களை அகம், புறம் என்று பிரிப்பர், காதலைப் பற்றிப் பாடும் பாடல்களை அகம் என்றும், காதல் தவிர, பிறசெய்திகளைப் பாடும் பாடல்களைப் புறம் என்றும் கூறுவர். இதற்கான இலக்கணத்தைத் தொல்காப்பியம் கூறுகிறது.

அகப்பாடல்கள் கற்பனையான தலைவன், தலைவியின் காதலைப்பற்றி விளக்கியுரைக்கின்றன. புறப்பாடல்கள் நாட்டை ஆளும் அரசனின் வீரம், கொடை, சமூகத்திற்கு அரசன் ஆற்ற வேண்டிய கடமைகள்,கல்வியின் சிறப்பு போன்றவற்றைக் கூறுகின்றன. பெரும்பாலான புறப்பாடல்கள் அரசனின் புகழைப் பாடுவனவையாகவே உள்ளன.

பூம்புகார், உறையூர், மதுரை, வஞ்சி போன்ற நகரங்களைத் தவிர, பெரும்பாலும் சிற்றூர்களே அக்காலத்தில் இருந்தமையால் மக்கள் இயற்கையோடு இயைந்த சீரிய வாழ்க்கையை வாழ்ந்ததைச் சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.

அகப்பாடல்கள்

ஒருவனும் ஒருத்தியும் தமக்குள்ளே கண்டு காதலிப்பது, காதலைத் தோழி மூலம் செவிலித்தாய், நற்றாய் ஆகியோருக்கு மெல்லத் தெரியப்படுத்துவதும் அக்காலத்தில் வழக்கத்தில் இருந்துள்ளன. இவ்வாறு காதலைத் தெரியப்படுத்துவதற்கு அறத்தொடு நிற்றல் என்ற பெயரும் உண்டு. பெற்றோர் திருமணத்திற்கு ஒத்துக்கொள்ளாத சூழலில் காதலனும் காதலியும் ஊரைவிட்டு வெளியூர் சென்று விடுதல் உண்டு. இதற்கு உடன்போக்கு என்று பெயர்.

அக்காலத்தில் காதலித்த பெண்ணை மணந்து அவளோடு இன்பத்துடன் வாழ்ந்து வரும் தலைமகன் வேறு பெண்களை நாடிச் செல்வதும் வழக்கமாக இருந்திருக்கிறது. இதற்குப் பரத்தையிற் பிரிவு என்று பெயர். அதனால் தலைவி அவனிடம் சினம் கொண்டு ஊடல் கொள்ளுதலும் பழக்கமாக இருந்துள்ளது.

அகப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனைப் பாடல்களாக இருந்தாலும், அக்கால மக்களின் காதல் வாழ்க்கையை முழுமையாகவே வெளிப்படுத்துகின்றன.

புறப்பாடல்கள்

புறப்பாடல்கள் பெரும்பாலும் கற்பனையாகப் பாடப்படவில்லை. இரு அரசர்களுக்கிடையே போர் ஏற்படும் போது புலவர்கள் தலையிட்டுப் போரைத்

தடுத்துள்ளனர். அரசன் மக்களிடம் அளவுக்கதிகமாக வரி வாங்கும் நேரத்தில் புலவர்கள் தலையிட்டு அரசனுக்கு அறிவுரை கூறியுள்ளனர். இந்நிகழ்வுகள் புறப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன.

புறப்பாடல்களில் இயற்கைக்கு மீறிய செய்திகள் கூறப்படவில்லை. சங்க கால வரலாற்றைத் தொகுப்பதற்கு, சங்கப் புறப்பாடல்கள் ஓரளவுக்குத் துணை நிற்கின்றன. அரசர்கள் தமக்குள் போரிட்டுக் கொண்டாலும் புலவர்களைப் பெரிதும் மதித்துள்ளனர். யாருமே தொட அஞ்சும் முரசு கட்டிலில் ஏறிப்படுத்து உறங்கிய மோசிகீரனார் என்னும் புலவரைத் தண்டிக்காது, அவர் தூங்கி எழுகின்றவரை கவரி கொண்டு அவருக்கு விசிறினான் சேரமன்னன் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்று புறநானூறு கூறுகிறது.

அரசன் கோப்பெருஞ்சோழன் மேல் நட்புக் கொண்டிருந்த காரணத்தால், அவன் வடக்கிருந்து உயிர் துறக்கும் நேரத்தில் புலவர் பிசிராந்தையாரும் அவனுடன் உயிர் துறந்தார் எனவும் செய்தி உண்டு. பேகன் என்னும் அரசன் தன் மனைவி கண்ணகியை விட்டு நீங்கி இன்னொருத்தியுடன் வாழ்ந்ததை மாற்றி. கண்ணகியுடன் சேர்த்து வைத்தனர் கபிலரும் பரணரும் என்ற செய்தி கூறப்படுகிறது.

இவ்வாறு அரச குடும்பங்களின் துன்ப நிகழ்வுகளிலும் புலவர்கள் பங்கு கொண்டு செயல்பட்டமை குறித்த செய்திகள் புறநானூற்றில் உண்டு. மேலும் மலையமான் திருமுடிக்காரியின் சிறு குழந்தைகளைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் யானையின் காலில் இட்டு மிதிக்கச் செய்ய முற்பட்டபோது கோவூர்கிழார் கூறியதால் அக்குழந்தைகள் காப்பாற்றப்பட்டனர் என்ற செய்தியும் புறநானூற்றில் இருக்கிறது.

தமிழ் இலக்கியத்தின் பொற்காலம் சங்க காலமாகும். தனிப்பாடல்களாக, அடியளவில் குறைந்தும் மிகுந்தும்காணப்பட்ட 2381 பாடல்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்று இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. காதலையும், வீரத்தையும் பாடுபொருளாகக் கொண்டவை. நிலம் சார்ந்த இயற்கை பின்னணியில் வாழ்ந்த மக்களின் வாழ்வியல் பதிவுகளைப் பதிவு செய்யும் கருவூலமாகச் சங்க இலக்கியம் திகழ்கின்றது. கடலும் கடல் சார்ந்த நிலத்தில் வாழும் நெய்தல் நில மக்களின் வாழ்வியல்சார் தொழில்கள், நிலம்சார் உயிரினங்கள், மரபுகளும் மாற்றங்களும், வரலாற்றுப் பின்புலங்கள் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அப்பதிவுகள் கால மாற்றத்திற்கு ஏற்ப பல்வேறு மாற்றங்களைக் கொண்ட தூத்துக்குடி மக்களின் வாழ்வியல் பதிவுகளோடு ஒப்பிட்டு ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

தமிழ்நாட்டில் ஆதி வரலாற்றுக் காலத்தில் வாழ்ந்த பல்வேறு சமூகக் குழுக்களுள் ஒன்று வேளிர் என்ற குழு. இன்னொன்று பரதர் என்ற குழு இக்குழுக்களைச் சார்ந்தோர் ஆதி வரலாற்றுக்காலத்தில் தென்னிந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்ததற்கான சான்றுகள் கல்வெட்டுச் சான்றுகளும் தொல்லியல்

சான்றுகளும் உள்ளன. தமிழக கரையோரப்பட்டினங்களில் இவர்கள் கடல்சார் தொழில் புரிவோராகவும் வணிகராகவும் செல்வாக்குப் பெற்றிருந்தனர் (கா.இந்திரபாலா - இலங்கையில் தமிழர் – ஓர் இனக்குழு ஆக்கம் பெற்ற வரலாறு) நெய்தல் நிலத்தில் வாழ்ந்த மக்களைச் சங்கத் திணைகளாக வகுக்கப்பட்ட நிலங்களில் நெய்தல் நிலத்தின் திணைக்குரிய தலை மக்களாக ஆண்கள் என அடையாளப்படுத்தப்பட்டவர்கள் சேர்ப்பன், புலம்பன், கொண்கன், துறைவன், ஆகியோரும் பெண்களாக பரத்தி, நுளைச்சி என்றும் குறிக்கின்றன.

நெய்தல் நிலத்திற்குரிய மக்களாக ஆண்கள் பரதவர், நுளையர், அளவர் பெண்களாக நுளைச்சியர் பரத்தியர். அளத்தியர் என்றும் அடையாளப்படுத்தப்பட்டனர். உப்பு வணிகம் செய்தவர்களை உமணர் என்கிறது சங்கப்பாடல்கள். மீனவர்களில் ஒரு பிரிவினரான நுளையர் என்ற பெயர் அகநானூற்றிலும் திமிலர் என்ற பெயர் மதுரைக் காஞ்சியிலும் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் பரதவர் என்ற பெயர்தான் பெரும்பாலான சங்க இலக்கியங்களில் காணப்படுகிறது. பரதவர்கள் காவிரிப் பூம்பட்டினத்தில் வாழ்ந்ததாக பட்டினப்பாலை கூறுகிறது.

புறநானூறு – திண் திமில் பரதவர் – (உறுதி மிக்க படகையாளும் பரதவர்) பட்டினப்பாலை – புன் தலை இரும்பரதவர் – (உப்பு நீர் படுவதால் பழுப்பேறிய தலைமுடியைக் கொண்ட வலிமைமிக்க பரதவர்) நுண் வலைப் பரதவர், பெருங்கடல் பரதவர், பழந்திமில் கொன்ற பரதவர், வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர். உரைசால் சிறப்பின் அரசுவிழை திருவின் பரதவர் மலிந்த பயங்கொழு மாநகர்” (மறையறம் படுத்த காதை)” அரச குமாரரும் பரவ குமாரரும்” (இந்திர விழா ஊர் எடுத்த காதை) அரசர் முறையோ பரதர் முறையோ” இந்தப் பாடல்கள் பரதவருக்கும் கடலுக்கும் உழைப்பிற்குமான தொடர்பை நமக்குக் காட்டும் சித்திரங்கள் இவை, பரதவர்கள் சங்ககாலத்திலும் அதன் பின்னரும் மீனவர்களாக, முத்துக்குளிப்போர்களாக, வணிகர்களாக, சிற்றரசர்களாக படைத்தலைவர்களாக எதிரிப்படைகளில் பங்கு கொண்டவர்களாக வரலாற்றில் வாழ்ந்துள்ளனர் என்பதற்கான ஆதாரமாக ஏராளமான பாடல்கள் சங்க இலக்கியங்களில் காணக்கிடைக்கின்றன. பாண்டியர்களின் பண்டைத் தலைநகரான கொற்கையும், கோவலன் கண்ணகி கதையும் காவிரிப்பூம்பட்டினமுமாக செல்வத்தோடும் செல்வாக்கோடும் வாழ்ந்த சமூகங்களில் பரதவர்களும் பிரதானமானவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். என்பதற்கான சான்றுகள் இவை. இந்த பரதவர்கள் வரலாற்றில் யாருக்கும் அடங்காமல் செருக்கோடு வாழ்ந்ததும் சில நேரங்களில் சோழர்கள் இவர்கள் மீது படையெடுத்தமையும் பல நேரங்களில் நாடு பிடிக்கும் ஆசையோடு கடல் கடந்த போது பரதவர் துணையோடு போர் புரிந்தமைக்கான சான்றுகளும் உள்ளன. “தென்பரதர் மிடல் சாய வட வடுகர் வாள் ஒட்டி” என்கிற புறநானூற்றுப் பாடல் மூலம் அவர்கள் பாண்டியர்களின் ஆளுகைக்குட்படாத தனி இனக்குழுவாக பிரத்தியேக ஆட்சி முறையை நடத்தியிருக்கிறார்கள் என்பதும் அவர்களை பாண்டியர்கள் போர் செய்து

வென்றதையும் உணர்த்துகிறது. சிலப்பதிகார காலத்திற்குப் பிந்தைய மதுரைக்காஞ்சியில் பாண்டியர்கள் பெரும்படை திரட்டி பரதவர்களோடு போர் புரிந்ததை தென் பரதர் போர் ஏறே" என்கிற பாடல் மூலம் அறிந்து நிலங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறையினைப் பட்டியலிட்டது சங்ககாலம். பின்னர் பேரரசுகளின் விரிவு வெளிநாட்டு ஆதிக்கத்தின் நிலம் தவித்த ஏனைய நிலங்கள் படிப்படியாக மறைந்து பின்னிலைக்குச் சென்றன என்கிறார் பேராசிரியர் சிவத்தம்பி, (நூல் - பண்டைத் தமிழ்ப்போக்கில் சாதி ரீதியாக தங்களை மேன்மைப்படுத்தும் போக்கை நீண்ட காலமாக செய்து வருகின்ற நிலையில் ஒரு சமூகத்தில் பல்லாயிரம் ஆண்டுகளாக நடந்து வரும் அசைவியக்கத்தை ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருவது அவ்வளவு எளிமையான ஒன்றல்ல, தமிழ் சமூகத்தில் வரலாற்றுக்கு முந்தைய காலந்தொட்டு வாழ்ந்து வரும் கடலோரச் சமூகங்களில் சங்க இலக்கியங்கள் குறிப்பிடும் சமூகம் பரவர். இன்றைக்கு பரதவர் என்ற பெயரில் இராமேஸ்வரம் தொடங்கி கன்னியாகுமரி வரை வங்கக் கடலோரத்திலும், கன்னியாகுமரி தொடங்கி கேரளக் கரையோரங்களிலும் இலங்கை கரையோரங்களிலும் வாழ்கிறார்கள் இவர்கள். பரவர் அல்லது பரதவர் என்பது தற்காலத்தில் சாதிப் பெயராக அடையாளம் காணப்பட்டாலும் அது சாதிப் பெயர் அல்ல. பண்டையு இலக்கியங்களில் நெய்தல் என்னும் திணையின் தலைவர்களாக வருகிறவர்களே இந்த பரவர்கள். பரதவர்களில் பல சாதிகள் இன்று தங்களை சைவ மரபினராக மாற்றிக் கொண்டுள்ளனர். காலம் தோறும் ஒடுக்கப்பட்ட சமூகங்களைத் தூய்மைப்படுத்திக் கொள்ளவும் மேன்மக்களாக காட்டிக் கொள்ளவும், பிற இழிந்த சாதியினரை விட தாங்கள் மேலானவர்கள் என்பதைக் காட்டிக் கொள்ளவும் மரபை மாற்றிக் கொள்வதுண்டு. அந்த வகையில் உப்பு வணிகத்தோடு தொடர்புடைய நெய்தல் நில மக்களை நாட்டுக்கோட்டை செட்டியார்கள் என்று சொல்கிறவர்களும் உண்டு. இவர்கள் உமணர்கள் என்றும் வணிக உமணர்கள் என்றும் சில குறிப்புகளும் ஆய்வுகளும் சொல்கின்றன. பொதுவாக இன்றைக்கு செட்டியார்கள் என்றழைக்கப்படுவோரிடம் மீன் பிடிச் சமூகங்களின் எச்சங்கள் இருக்கிறது. சங்க இலக்கியங்கள் செட்டி என்றும் மாசத்துவன் என்றும் குறிப்பிடும் செட்டிகள் Paravar, கடல் வணிகத்தில் ஈடுபட்டவர்கள் என்பதற்கான ஏராளமான ஆதாரங்கள் உள்ளன. இப்போதும் பரதவர்களிலும் காலப்போக்கில் நிலம் மறைந்து சாதிகள் ஆக்கம் பெற்ற போது பல சாதிகள் தங்களைச் சைவமாக மாற்றிக் கொண்டன. அப்படித்தான் செட்டிகள் செட்டியார்கள் ஆகியிருக்கலாம். எட்கர் தர்ஸ்டனின் பரவன் பற்றிய குறிப்புகள். இன்னொரு கதை பரதவர்கள் தங்களை அயோத்தியைச் சார்ந்தவர்கள் என்றும் மகாபாரதப் போருக்கு முன்னர் யமுனைக்கரையில் வாழ்ந்ததாகவும் கூறிக் கொள்கின்றனர். சூத்திரப் பெண் ஒருத்திக்கு பிராமணன் வாயிலாக வந்தவர்கள் என்றும் இலங்கையில் இவர்கள் இராமனால் குடியமர்த்தப்பட்ட குகன் மரபினர் என்றும் தங்களை அழைத்துக் கொள்கிறார்கள். சென்ற யுகத்தின் முடிவில் உலகம் நீரால் சூழப்பட்டிருந்த போது தங்களைக் காத்துக் கொள்ளும் விதமாக ஒரு தோணியைச் செய்து அதில் ஏறி பயணப்பட்டு பின்னர் நீர்வற்றி தரை தட்டிய போது தாங்கள் குடியேறியதுதான்

தோணிபுரம் என்றும் கூறப்படுகிறது. இந்தக் கதைகள் எவற்றுக்கும் ஆதாரங்கள் எதுவும் கிடையாது. இவைகள் பழமரபுக் கதைகளாகவோ புராணக்கதைகளாகவோ காலந்தோறும் மக்களிடையே வழங்கிவருகின்றன. ஒரு காலத்தில் பரவர் செல்வாக்குடையோராகவும் கடற்பயணம் பற்றியதான் தங்கள் அறிவின் காரணமாக அவர்கள் மற்ற சாதியார் மீது செல்வாக்குச் செலுத்துவோராகவும் இருந்துள்ளனர். இவர்களுள் சிலர் ஆதிரயரசர்கள் என்ற பெயரில் ஆண்டுள்ளதாகவும் தெரிகிறது. இவர்களுள் சிலர் உத்திரகோசமங்கையிலிருந்து ஆண்டதாகவும், அந்நாட்களில் கடலோரப்பட்டினமான இந்த நகரம் மங்கை என்ற பெயரில் அழைக்கப்பட்டதாகவும் தெரிகிறது. இராமநாதபுரத்திற்கு அருகே உள்ள புகழ்பெற்ற இந்துக் கோவிலாக இன்று அது திகழ்கிறது (எட்கர் தர்ஸ்டன் - தென்னிந்திய குலங்களும் குடிகளும், தொகுதி ஆறு). இது போக வலைவீசு புராணத்தில் சிவன் பார்வதி தொடர்புடைய கதையொன்றும் 1912-இல் வெளிவந்த மேல்மலையனூர் வீரப்பதாசனார் எழுதிய ஆதி ஆதி ஐதீக புராணத்தில் பரதவர்களின் தொண்ணூறு மரபுகளை பட்டியிலிடுகிறது. (பரதவர் – அரு.பரமசிவம் - காவ்யா வெளியீடு) இதெல்லாம் இன்றைய காலச் சூழலில் ஒவ்வாது என்னும் நிலையில் 1901-இல் சென்னை மாநில சாதிக் கணக்கெடுப்பில் பரவன் என்பவன் முறையே தமிழ், மலையாளம், கன்னடம் ஆகினவற்றைப் பேசும் மூன்று சாதிகளாக உள்ளனர். இந்த மூன்று பிரிவினருமே தமிழ் பேசும் பரவன் அல்லது பரதவனின் வழித்தோன்றல்களே. இவர்களின் தலைமையிடம் தூத்துக்குடி ஆகும். (தென்னிந்திய குலங்களும் குடிகளும் - தொகுதி ஆறு) ஆனால் தூத்துக்குடி என்பது பரதவர்களின் பிற்கால தலைநகர்தான் பண்டையில் அவர்களின் பிரதான நகராக இருந்தது கொற்கை அது கடல் சார்ந்த இயற்கைப் பேரிடரில் பெரும் அழிவுற்றதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நினைவுக்கு எட்டிய காலத்திற்கு முன்பிருந்தே முத்துக்குளித்தல் தொழில் உரிமை பரவர்களிடமிருந்தது. பழைய தமிழ் நூலான கல்வேடு என்ற நூலில் பாண்டிய மன்னனுக்கும் முத்துக்குளிக்கும் பரவருக்கும் இடையேயான உறவு பற்றிய குறிப்பு காணப்படுகிறது. வேத நாராயணன் செட்டியும் முத்துக்குழிக்கும் பரவரும் மதுரையை ஆண்ட பாண்டியன் மகளான அல்லியராசானி அவள் கப்பலில் பயணம் மேற்கொண்டிருந்த போது புயலில் அகப்பட்டு இலங்கையில் சென்று ஒதுங்கினாள். அங்கு அவர்கள் கரை ஒதுங்கிய நோகை, குதிரை மலை ஆகிய இரண்டு இடங்களைக் கண்டனர். வேத நாராயணன் செட்டி தன் கப்பலில் இருந்த செல்வம் முழுவதையும் அங்கே கொண்டு சேர்க்கும்படி பரவரைப் பணித்ததோடு கடல்கிலபம், கள்ளக்கிலபம் ஆகிய துறைகளில் முத்துக்குளிக்க ஏற்பாடுகள் செய்ததோடு இரும்பைப் பொன்னாக்கும் ரசவாதத்திற்கு உதவும் மரங்களையும் அங்கிருந்து கொண்டு வந்தான் என்கிறது அந்தக் குறிப்பு. பாண்டியர் அரசு வலிமையானதாக இருந்தவரை பரவர்கள் பாண்டிய மன்னர்களிடமிருந்து பொது வரிவிதிப்பிலிருந்து விலக்கையும் பாதுகாப்பையும் பெற்று வந்தனர். 16-ஆம் நூற்றாண்டு வரை பரவர் செல்வச் செழிப்போடும், யாருக்கும் கட்டுப்படாமலும் வாழ்ந்து வந்தற்கான சான்றுகள் உள்ளன. மலபார் கன்னட கடற்கரை சார்ந்த கப்பல் படைத் தலைவனான வான்

ரீதெயும் மதுரையினைச் சார்ந்த துறைமுகங்களின் தலைமை வணிகனான யுரெனஸ் ஆகியோர் எழுதிய கடிதங்கள் ஆதாரங்களாக உள்ளன. 19.02.1669 ல் எழுதப்பட்ட கடிதம் இப்படிச் சொல்கிறது "இங்கு அவர்கள் (பரவர்கள்) அவர்களின் சாதித் தலைவனுக்கே கட்டுப்பட்டவர்களாக உள்ளனர். அரசனுக்கு ஆண்டுதோறும் கப்பமாக ஒரு தொகையைக் கட்டிவந்தார்களே தவிர நாட்டின் பிற மக்களுக்கு உள்ளது போன்ற கடுமையான வரிச்சுமை ஏதும் இல்லை. அரசனின் நேரடி ஆளுகைக்குட்படாதவர்களாக தங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சாதித் தலைவனுக்கே கட்டுப்பட்டவர்களாக உள்ளனர். அரசனுக்கு ஆண்டுதோறும் கப்பமாக ஒரு தொகையைக் கட்டிவாந்தார்களே தவிற நாட்டின் பிற மக்களுக்கு உள்ளது போன்ற கடுமையான வரிச்சுமை ஏதும் இல்லை. சாதித் தலைமைகளால் ஆளப்படுவோராக பரதவர்கள் உள்ளனர். கொல்லம் முதல் இராமேஸ்வரம் வரை வாழும் பரவர் இந்த சாதித் தலைவருக்கு வரிச் செலுத்துகின்றார்கள் என்கிறது அந்தக் கடிதக் குறிப்பு. (எட்கர் தர்ஸ்டனின் தென்னிந்திய குலங்களும் குடிகளும்) மேற்கண்ட கடிதம் பரதவரின் வாழ்வுக்கு ஒரு எடுத்துக்காட்டான ஒன்றாக விளங்குகிறது. வரலாற்றுக்கு முந்தைய காலம் தொட்டு அவர்கள் யாருக்கும் கட்டுப்படாமல் வாழ்ந்தமையும் அதுவே பல போர்களுக்கும் ஆக்ரமிப்புகளுக்கும் காரணமாக அமைந்ததையும் நாம் வரலாற்றை நோக்கும்போது புரிந்து கொள்ள முடிகிறது.

இத்தகு சிறப்புகளும் பெருமைகளும் மிகுந்த பரதவர் வாழ்வியலை இலக்கிய உலகிற்கு வெளிக்கொண்டு வருவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வுத் தலைப்பு

"சங்ககால நெய்தலும் தற்காலப் பதிவுகளும்" என்பது இந்த ஆய்வின் தலைப்பாகும். சங்ககால இலக்கியங்களில் இடம்பெற்றுள்ள பரதவர் வாழ்க்கை முறைகளும் தற்காலப் பதிவுகளான 'ஜோ டி குருஸ்' அவர்கள் எழுதிய 'கொற்கை' மற்றும் 'ஆழி சூழ் உலகு' ஆகிய இரு புதினங்களில் இடம்பெற்றுள்ள பரதவர்களின் வாழ்வியலும் இந்த ஆய்வில் ஒப்பியல் நோக்கில் பார்க்கப்படுகின்றன.

ஆய்வு நோக்கம்

எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் அகம்சார்ந்த நெய்தல் நில மக்களின் வாழ்வியலோடு தற்கால நெய்தல் நில வாழ்வியலை (தூத்துக்குடி நெய்தல்சார் மக்களின் வாழ்வியல் நிலப்பதிவுகள் ஒப்பிடுவதன் மூலம் சமுதாய மேம்பாட்டிற்கு வழிவகுக்கும் என்பதே ஆய்வின் நோக்கமாகும்.

ஆய்வின் கருதுகோள்

நெய்தல்சார் நில பரதவர் குலமக்களின் தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டில், அவர்களின் வாழ்வியல் வறுமைக்கோட்டிற்குப் பின்தங்கிய நிலையில் காணப்படுகின்றது என்பதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

ஆய்வு எல்லை

எட்டுத்தொகையில் அகநூல்களில் காணப்படும் நெய்தல் திணை குறித்த பாடல்கள், தற்காலத்தில் நெய்தல் நிலப் பதிவுகளை உள்ளடக்கிய ஆழிசூழ் உலகு, மற்றும் கொற்கை ஆகிய இரு புதினங்கள் ஆய்வு எல்லையாகும்.

முதன்மைச் சான்றாதாரங்கள்

சங்கநூலான எட்டுத்தொகை அகநூல்களாகிய நற்றிணை, குறுந்தொகை ஐங்குறுநூறு அகநானூறு மற்றும் கலித்தொகை ஆகியவற்றில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணைப் பாடல்களும், கடலோர மாவட்ட மக்களின் வாழ்வியலைப் பற்றிய ஆசிரியர் திரு ஜோ.டி.குருஸ் அவர்கள் எழுதி சென்னை பாவை பிரிண்டர்ஸ் பதிப்பித்த ஆழி சூழ் உலகு மற்றும் காலச்சுவடு பதிப்பகம் வெளியிட்ட கொற்கை ஆகிய இரு நாவல்களும் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன.

துணைமைச் சான்றாதாரங்கள்

நெய்தல் திணை குறித்த சங்க இலக்கியம் தொடர்பான கட்டுரைகள், ஆய்வேடுகள், கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், நெய்தல் நில மக்களின் வாழ்வியல் தொடர்பான ஆய்வுக்கோணங்கள், நூல்கள் பேட்டி, வினாநிரல் போன்றன துணைமை ஆதாரங்களாகும்.

ஆய்வு முன்னோடிகள்

டாக்டர் தி.முத்துக் கண்ணப்பன் அவர் எழுதிய "சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்" என்ற நூலும், திருவனந்தரபுரம் கேரளப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்த செயின்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியை ஓ.ஏ.அல்போன்சா அவர்களின் "Socio Economic Trans Formation of the Parava Community in the Pearl fishery coast" (1500 – 19000) என்ற டாக்டர் பட்ட ஆய்வேடும், திரு.எம்.ஜெ.ஏ.ரஞ்சினா தாஸ், அனிதா எம்.ஜபரி ஆகியோர் தனது ஆய்வு செய்து பரதவர் வாழ்க்கைப்பற்றி சேகரித்து "State Resource Centre for non formal education, No.1 Istst. Venkataraman, Nagarexterision, Adayar – Chennai 1996 -97" "Social Economic and Cultural Perspective of Parava fisher folk along the coramandal coast" என்னும் ஆய்வறிக்கையும் தூத்துக்குடி காமராஜ் கல்லூரியில் வரலாற்றுத் துறையில் இணைப் பேராசிரியராகப் பணிபுரியும் திருமதி.சூ.பிரகாசி டிலைட்டா என்பவர் 2012 – 2015 ஆண்டுகளுக்கு மேற்கொண்ட " பரதவர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கை என்ற முனைவர் பட்ட (PH.D) ஆய்வேடுகள். "(The socio Economic status of pearl coast fishing parava community") இந்த ஆய்வின் முன்னோடிகளாகத் திகழ்கின்றன.

உலகு நாவல்களில் மீனவ வாழ்வியல் ஆகியன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

ஆய்வு அணுமுறை

எந்தவொரு ஆய்வும் செம்மையாக அமைவதற்கு அணுகுமுறை இன்றியமையாதது. ஆய்வு அணுகுமுறையே ஆய்வின் வெற்றிக்கு அடித்தளமாக அமைகிறது. "சங்ககால நெய்தலும் தற்கால பதிவுகளும் (எட்டுத்தொகையில் அகம் சார்ந்தவை" என்னும் இவ்வாய்வின் வாழ்க்கை வரலாற்று அணுகுமுறை, விளக்கமுறை, பகுப்பாய்வு, ஒப்பாய்வு ஆகிய ஆய்வு அணுகுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.

ஆய்வுப்பகுப்பு

இவ்வாய்வு முன்னுரை, முடிவுரை நீங்கலாக பின்வரும் நான்கு இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை

1. நெய்தல் நில இலக்கியப் படைப்பாளிகள்
2. சங்ககால நெய்தல் வாழ்க்கை
3. தற்காலப் படைப்புகளில் நெய்தல் வாழ்க்கை
4. சங்ககாலம் மற்றும் தற்கால நெய்தல் படைப்புகள் ஓர் ஒப்பியல் பார்வை

என்பவையாகும்.

ஆய்வுச்சுருக்கம்

முன்னுரையில் ஆய்வுப்பொருள், ஆய்வு நோக்கம், ஆய்வின் கருதுகோள், ஆய்வு எல்லை, சான்றாதாரங்கள், ஆய்வுப்பகுப்பு ஆகியவை இடம்பெறுகின்றன.

'நெய்தல் நில இலக்கியப் படைப்பாளிகள்' என்ற முதலாம் இயலில் பரதவர் சொல்லாட்சி விளக்கம், தோற்றம் பற்றியக் கருத்து, உட்பிரிவுகள், உருவத் தோற்றம், பரதவர்களின் தலைமை, சங்ககால நெய்தல்நிலப ் புலவர்கள், தற்கால நெய்தல் படைப்பாளி, சங்க இலக்கியம் காட்டும் கொற்கைத் துறைமுகம், ஜோடி குருஸ் நாவலின் கொற்கை செய்திகள், அவர்தம் இளமைக் காலம், படைப்புகள், இலக்கியத்தில் பரதவர் போன்ற செய்திகள் ஆராயப்பட்டுள்ளன.

'சங்ககால நெய்தல் வாழ்க்கை' என்ற இரண்டாம் இயலில் பரதவர் புராண மரபு வரலாறு, பரவ இன மரபு வரலாறு, தொன்மை, நாகரிகம், சங்க இலக்கியத்தில் பரதவர், நெய்தல் நில மலர்களும், மரங்களும், நெய்தல் நிலத்து உயிரினங்கள், நெய்தல் நிலக்குடியிருப்பு, மக்கள் வாழ்வு, பரதவர் தொழில், முத்துக்குளித்தல், சங்குக் குளித்தல், பழக்கவழக்கம், மணமுறை, விருந்தோம்பல், இறைவழிபாடு, குளித்துறை, பரதவர் வணிகம், மரக்கல வகைகள் போன்றவை விளக்கப்பட்டுள்ளன.

‘தற்காலப் படைப்புகளில் நெய்தல் வாழ்க்கை’ என்னும் மூன்றாம் இயலில் ஆழி சூழ் உலகு நாவல் கருத்துக்கள், பாத்திரப் படைப்புகள், வழிபாடு, காதல், வாழ்க்கை, திருமணம், உறவுச் சடங்கு, கொற்கை நாவலில் இடம் பெறும் பாத்திரப் படைப்புகள், கப்பல் பயணம், கொற்கைத் துறைமுகம், பருத்தி ஏற்றுமதி, ஏழுகடற்கரை பாளையக்காரர் ஆட்சி, தொழில், முத்து, சங்குக் குளித்தல், முத்து சிப்பி வளர்த்தல், சங்கின் வகை, பயன்பாடு, இன்றைய சங்குக் குளிப்பு, திருமந்திர நகர் பெயர்க் காரணம், பரதவர்களும், கிறுஸ்தவமும், வணிகக் குழுக்கள், போர்ச்சுகீசியர் வருகை, அரபியர் மோதல், டச்சுகாரர்கள், முத்துக்குளியல் இழப்பு, பனிமயமாதா ஆலயத் தோற்றம் திருவிழா போன்ற கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

‘சங்கக் காலம் மற்றும் தற்கால நெய்தல் படைப்புகள் ஓர் ஒப்பியல் பார்வை’ என்னும் நான்காம் இயலில் முத்துக் குளித்துறை பரதவர்த் தோற்றம், பழையகாயல் வரலாறு, மீனவர் வரலாறு, பரதவரே பாண்டியர், சங்கக்காலக் கொற்கை, இறக்குமதி, ஏற்றுமதி பொருட்கள், உள்நாட்டு வெளிநாட்டு வணிகம், பரதவர் அரசியல், பொருளாதாரம், பாண்டியரும் பரதவரும், பரதவர் போர், வீரம், சங்ககால பரதவர் மரபு, பரதவரைப் பகைத்த பாளையக்காரர், சமயங்களின் வளர்ச்சி, உவரித் துறைமுகம், ஜோடி குருஸின் கொற்கை மற்றும் ஆழிசூழ் உலகு நாவல்களில் மீனவ வாழ்வியல் ஆகியன விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

இயல்தோறும் ஆராய்ந்து அறிந்து கொள்ளப்பட்ட மெய்ம்மைகள் ஆய்வு முடிவுரையில் தொகுத்து அளிக்கப்பட்டுள்ளன.

இறுதியாக துணைநூற்பட்டியலில் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்ட நூல்கள் அகர வரிசைப்படுத்திக் கூறப்பட்டுள்ளன. பிண்ணிணைப்பில் முன்வாய்மொழித் தேர்வுப் புகைப்படங்கள், ஆய்வுக்கட்டுரை நகல், படங்கள் போன்றவை இடம்பெறுகின்றன.

நெய்தல் நில இலக்கியப் படைப்பாளிகள்

முன்னுரை

இந்த இயலில் சங்ககாலத்தைச் சார்ந்த நெய்தல் நில புலவர்களாகிய உலோச்சனார், அம்மூவனார், நவ்வந்துவனார் புலவர்கள் பற்றியும், அவர்கள் பாடிய பாடல்கள் மற்றும் சிறப்புகள் இடம்பெற்றுள்ளன. அதேபோல தற்கால நெய்தல நில படைப்பாளியான ஜோ டி குருஸ் அவர்களின் வாழ்வியல் பின்புலம், படைப்புச் சூழல் மற்றும் அவருடைய படைப்புகளாகிய ஆழி சூழ் உலகு மற்றும் கொற்கை நாவல்கள் பற்றியும் இடம்பெற்றுள்ளன.

பரதவ சமுதாயத்தின் தோற்றம் குறித்தும், அதன் வரலாற்றுத் தொன்மை குறித்தும் செய்திகளை ஒன்றுத் திரட்டித் தொகுப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

'பரவர்களின் தோற்றமும் வரலாறும்' (Remarks on the Origin and History of the Paravars) என்ற ஒரு கட்டுரையை இலங்கையைச் சேர்ந்த சைமன் காசி செட்டி (simon Casie Chetty) என்பவர் ராயல் ஏசியாட்டிக் சொசைட்டி வெளியிட்ட இதழில் (Journal of the Royal Asiatic Society of Great Britain and Ireland IV) 1837-ஆம் ஆண்டில் திறம்பட எழுதியுள்ளார்.

சைமன் காசி செட்டி

"சைமன் காசி செட்டி (Simon Casie Chetty) என்பவர் கொழும்பு செட்டி சமுதாயம் ஈன்ற ஒரு புகழ்மிக்க தமிழ் அறிஞராவார். இலங்கை சட்ட மன்றத்து தமிழ் உறுப்பினராகவும் மாவட்ட நீதிபதியாகவும், இலங்கை அரசின் முதல் குடிமை பணியாளராகவும் பணியாற்றிய இவருடைய மூதாதையர்கள் தென்னிந்திய திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் என்ற ஊரைச் சேர்ந்த இந்து மதத்தினர் என்று அந்த சமுதாயத்து இன்றைய வரலாற்று ஆசிரியர்கள் ஷெர்லி புள்ளே டிஸ்ஸேரா (Shirley Pulie Tissera), ஏ.டி.எஸ்.பால் (A.T.S. Paul) தமது புத்தகங்களில் உறுதிபடுத்துகின்றனர்."[1]

ஆழ்வார் ஊரைச் சேர்ந்த கஸ்பார் காசி செட்டி (Casper Casie Chetty) என்பவர் இலங்கைக்கு குடிபெயர்ந்து, கத்தோலிக்கராக மதம் மாறி, 1620-ஆம் ஆண்டு முதல் இலங்கையின் தலைநகரமான கொழும்பு நகரில் வாழ்ந்து வந்தார் என்றும் மேற்கூறிய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

மேலும், கொழும்பு செட்டிமார்கள் வைசிய குலத்தின் மேன்மை பிரிவான தனவைசியர்கள் அல்லது வணிகர்கள் என்றே வரலாற்று ஆசிரியர் டிஸ்ஸேரா கருத்துக் கூறுகின்றார்.

கொழும்பு செட்டி சமுதாயத்தில் பிறந்த சைமன் காசி செட்டி, 1859-ஆம் ஆண்டில் தமிழ் புளூடார்ச் (The Tamil Plutarch) என்ற ஒரு சிறந்த நூலை எழுதியுள்ளார். தென்னிந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த புலவர்களைப் பற்றிய தொகுப்பே இந்தப் புத்தகமாகும். சிலோன் கெஜற்றியர் (The Geylon Gazetteer) என்ற நூலை இவர் 1834-ஆம் ஆண்டில் எழுதியுள்ளார்.

தமிழ் இன பிரிவுகளைப் பற்றி இவர் தனது நூல்களில் மிக நேர்த்தியாக விவரித்துள்ளார்.

சைமன் காசி செட்டியின் கட்டுரை

சைமன் காசி செட்டி எழுதிய 'பரவர்களின் தோற்றமும் வரலாறும்' (Remarks on the Origin and History of the Paravars) என்ற கட்டுரையின் தமிழாக்கம் கீழ்வருமாறு:

"தமிழ் குலங்களையும் குடிகளையும் இனவாரியாகப் பிரிவு செய்யும் முயற்சியில், மீனவர் இனத்தின் தலைசிறந்த பிரிவினர் பரவர்கள் என்று அறிய வருகிறது. மத்தியத் தரைக்கடலின் (Mediterranean Sea) பழமையான கடலோடிகள் போனீஷியர்கள் (Phoenicians) போல, பரவர்களை இந்திய பெருங்கடலின் தொன்மையான கடலோடிகள் என்றே ஏற்றுக்கொள்ளலாம்."[2]

சூடாமணி நிகண்டு

தமிழ் அகராதியான சூடாமணி நிகண்டு, பரவர்களை நெய்தல் நில மக்கள் என்று குறிப்பிடுகின்றது.

சமஸ்கிருத மொழியில்

'பரதர்', 'பரதவர்', 'பரவர்' என்று தமிழில் அழைக்கப்படும் இவர்கள், சமஸ்கிருத மொழியில் 'பரசவர்' (Parasavas) என்றும், 'நிசாதர்' (Nishadas) என்றும் வழங்கப்பட்டனர்.

கிறித்தவ தேவ அகராதி

1735-ஆம் ஆண்டில் தரங்கம்பாடியில் அச்சிடப்பட்ட 'கிறித்தவ வேத அகராதியின்' ஆசிரியர், பரவர்களைக் கிறித்தவ மறைநூல்களில் (Scriptures) கூறப்பட்டள்ளவர்களான 'பர்வையம்கள்' (Parvaim) என வகைப்படுத்தியுள்ளார்.

சாலமன் அரசர் காலத்தில் கடற்பயணங்கள் மேற்கொண்டவர்களில் பரவர்கள் புகழ் பெற்றவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார். ஆனால் இத்தகைய கருதுகோளுக்கு அடிப்படை ஆதாரங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை.

அயோத்திய குடிமக்கள்

தங்களது நாடு அயோத்தி (Ayudhya) என்றும், மகாபாரதப் போர் நிகழ்வதற்கு முன்னர் யமுனை ஆற்றங்கரையில் தாங்கள் வாழ்ந்து வந்ததாகவும், பரவர்களிடையே ஒரு பொதுவான கருத்து நிலவுகின்றது.

இப்போது இவர்கள் திருநெல்வேலி மாவட்டத்தின் கடற்கரையில் உள்ள துறைமுகப்பட்டணங்களிலும், இலங்கையின் வடமேற்குக் கடற்கரையிலும் வாழ்கின்றனர்.

பரவர்களின் தோற்றம் பற்றி ஒன்றுக்கொன்று முரண்பாடான கருத்துக்கள் நிலவிவருகின்றன.

தந்திர நூல்கள்

இந்திய இனங்களைக் கணக்கிடும் முயற்சியில், கோல்புரூக் (Colebrooke) கையாண்ட தந்திர நூல்களில் பரவர்கள் சூத்திரப் பெண்ணுக்கும் பிராமணன் ஒருவருக்கும் பிறந்த சந்ததியினர் என்று கூறப்படுகின்றனர்.

சாதிபேத நூல்

தமிழர்களிடையே வழக்கில் உள்ள சாதிபேத நூல் (Jatibedi Nul) பரவர்கள் இனத்தினர் குறவன் என்னும் கூடைமுடைபவன் (Kuruva) செட்டியினப் பெண்ணிடம் (Chetty) கொண்ட தொடர்பால் பிறந்தவனின் சந்ததியினர் என்று கூறுகின்றது.

பரவர்களிடையே அவர்களது தோற்றம் பற்றி பல வழக்கு வரலாறுகள் புராணக் கதைகளோடு தொடர்புடையனவாக நிலவி வருகின்றன.

வருணனின் வழித்தோன்றல்

பரவர்கள் தங்களைக் கடல் தெய்வமான வருணன் என்பவனின் வழிவந்தவர்கள் என்று கூறிக்கொள்கின்றனர். சிவன் அசுரர்களை வெல்ல போர்க்கடவுளான கார்த்திகேயனைப் படைத்தபோது சரவணப் பொய்கையிலிருந்து அவனுடன் கூடத் தோன்றி அவனைப் போலவே கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவர்கள் என்றும் கூறிக்கொள்கின்றனர்.

கடந்த யுகத்தின் முடிவில் உலகம் முழுதும் நீரால் மூடப்பட்டு மூழ்கியபோது, பரவர்கள் ஒரு தோணியினைக் கட்டியதாகவும் அதில் ஏற்றிக்கொண்டு பேரழிவிலிருந்து தப்பியதாகவும் பின்னர் நீர் வற்றி மீண்டும் நிலம் புலப்பட்டு தோணி தரை தட்டியபோது அந்த இடத்தில் குடியமர்ந்ததாகவும், அதனால் அந்த இடத்திற்குத் 'தோணிபுரம்' என்று பெயரிட்டதாகவும் கூறப்படுகின்றது.

ஆதியரசன் வம்சத்தினர்

பரவர்கள் ஒரு காலத்தில் மிகுந்த செல்வாக்கு உடையவர்களாகவும் கடற்பயணம் பற்றிய தங்களது அறிவின் காரணமாக பிற இனத்தவர் மீது ஆதிக்கம் செலுத்துபவர்களாகவும் இருந்துள்ளனர், என்பதில் ஐயமேதுமில்லை.

இவர்களுள் 'ஆதியரசன்'' என்றப் பட்டப்பெயர் கொண்ட அரச வம்சம் இருந்துள்ளதாகவும், அதில் சிலர் 'மங்கை' என்று அழைக்கப்பட்ட நகரிலிருந்து ஆண்டதாகவும் தெரிகின்றது. மங்கை என்ற ஊர் இப்போது இராமநாதபுரம் அருகே இந்துக்களின் புகழ் பெற்ற கோவிலூர் 'உத்தரகோசமங்கை' என்று விளங்குகின்றது.

வலைவீசு புராணம்

சிவனின் மனைவி பார்வதியும், மகன் கார்த்திகேயனும் சொல்லக்கூடாத சில இரகசியங்களை வெளியிட்ட காரணத்தினால், தேவர்களின் உலகிலிருந்து வெளியேறும்படி பணிக்கப்பட்டனர். பல மானிட பிறவிகள் எடுத்த பிறகே மீண்டும் தேவலோகத்திற்குள் அனுமதிக்கப்படலாம் எனச் சாபம் பெற்றனர். பார்வதியின் வேண்டுகோளுக்கு இணங்க, அவர்களது குற்றத்திற்குத் தண்டனையாக ஒரு மானிட பிறவி மட்டும் எடுத்தால் போதுமானது என்று அவர்களுக்காக தண்டனைக் குறைக்கப்பட்டது.

இந்த சமயத்தில் பரவர்களின் அரசனான திரியம்பகனும் அவனது மனைவி வருணவள்ளியும் புத்திரப் பாக்கியத்திற்காக தவம் புரிந்து கொண்டிருந்தபடியால், பார்வதி அவர்களுடைய மகளாகத் திரைசேர் மடந்தை என்ற பெயருடன் பிறந்தாள். கார்த்திகேயன் ஒரு மீனாக உருவெடுத்தான்.

சில காலம் வடகடலில் மீனாக திரிந்தபடி இருந்த கார்த்திகேயன், தென்கடலுக்கு வந்து மிகப் பெரிய மீனாக வளர்ந்து பரவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்திய கலங்களையெல்லாம் தாக்கி வந்தான். பரவர்களின் மீன்பிடித் தொழில் சீரழிந்து வருவதை கண்ட பரவர்களின் அரசன் திரியம்பகன், யார் அந்த மீனைப் பிடிக்கின்றார்களோ அவர்களுக்கே தனது மகளை மணமுடித்துத் தருவதாகப் பறையடித்து அறிவித்தான்.

அப்போது, சிவன் ஒரு பரவனாக உருவெடுத்து அந்த மீனைப் பிடித்து, அரசனின் மகள் திரைசேர் மடந்தை என்ற பெயரோடு வாழ்ந்து வந்த தனது மனைவியான பார்வதியை மணந்துகொண்டான்.

மகாபாரதம்

மகாபாரத்தின் 'ஆதிபருவம்' என்ற பகுதியில், பரவனின் அரசன் யமுனை ஆற்றங்கரையில் அரசாண்டதாகவும், ஒரு மீனின் வயிற்றிலிருந்து அவன் ஒரு பெண்

குழந்தையைக் கண்டெடுத்ததாகவும், அவளுக்கு மச்சகந்தி என்று பெயரிட்டு தனது மகளாக வளர்த்ததாகவும், அவள் பருவம் அடைந்தபின் குலவழக்கப்படி பரவப் பெண்களோடு சேர்ந்து ஆற்றின் குறுக்கே பரிசலோட்டிப் பயணிகளை மறுகரை சேர்க்கும் பணியினை மேற்கொண்டதாகவும் கூறப்பட்டுள்ளது,

ஒரு நாள் பராசர முனிவர் பரிசல்துறையில் மச்சகந்தியைக் கண்டு காதல்கொள்ள, அவள் கருவுற்று பெற்ற குழந்தைதான் புராணங்கள் பலவற்றை இயற்றிய புகழ்பெற்ற 'வியாசர்' என்பவராகும்.

பின்னர் மச்சகந்தியின் பேரழகில் மயங்கிய சந்திரகுல அரசனான சந்தனு அவளைத் தன் மனைவியாக்கிக் கொள்ள, அவள் பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் மூதாதையான விசித்திரவீரியன் என்பவனைப் பெற்றெடுத்தாள். பாண்டவர்களும் கௌரவர்களும் அஸ்தினாபுர அரசுக்கு உரிமை கொண்டாட நடத்திய பெரும்போரே மகாபாரத இதிகாசத்தின் கருப்பொருளாகும்.

இதனாலேயே, பரவர்கள் தங்களைச் 'சந்திரகுலத்தவர்' என்று பெருமை கொள்வார்கள். மேலும், தங்களது திருமண விருந்தின்போது சந்திரகுலச் சின்னங்களையும் கொடிகளையும் ஏற்றி வைக்கின்றனர்.

கிறித்தவர்களாக மாறிய பரவர்கள்

காசி செட்டி தனது கட்டுரையில், இஸ்லாமியரின் ஆட்சியின்போது மீன்பிடித்தலையும் முத்துக்குளித்தலையும் பறிகொடுத்த பரவர்கள், இஸ்லாமியரின் அடக்குமுறையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ள விருப்பங்கொண்டு, மலபாரைச் சேர்ந்த ஜான் டி குரூஸ் என்பவரின் அறிவுறுத்தலின்படி போர்த்துக்கீசியர் ஆதரவைப் பெற்று, அதனைத் தொடர்ந்து 20,000 என்ற எண்ணிக்கைக் கொண்ட ஒரு முழு இனமாக கத்தோலிக்க மதத்தைத் தழுவினர் என்று குறிப்பிடுகின்றார்.[3]

பரவர்களின் உட்பிரிவுகள்

காசி செட்டி தனது கட்டுரையில் குறிப்பிட்டுள்ளபடி, பரவர்கள் 13 வகுப்பினராகப் பிரிக்கப்பட்டுள்ளனர். அவை பின்வருமாறு :

1. சாதித் தலைவர்
2. துணி விற்பவர்
3. பவளம் குளிப்பவர்
4. கலம் செலுத்துபவர்
5. முத்துச் சிப்பிகள் குளிப்பவர்
6. சங்கு குளிப்பவர்
7. துணிகள் கட்டுக் கட்டுபவர்
8. ஆமைகள் பிடிக்கும் மீனவர்

9. கடற்பன்றிகள் பிடிக்கும் மீனவர்
10. சுறா மற்றும் பிற மீன்கள் பிடிக்கும் மீனவர்
11. பல்லக்குச் சுமப்பவர்
12. தலைமைக்காரர்களின் குற்றேவலர்
13. நண்டுகள் பிடிக்கும் மீனவர்[4]

இந்தப் பிரிவுகளுக்கிடையே மிக சிறிய வேறுபாடுகளே காணப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரவர்களின் உருவத் தோற்றம்

முகத்தோற்றத்திலும், நிறத்திலும், உடலமைப்பிலும், பரவர்கள் மற்ற தமிழ் இனத்தவரை விட சற்றே வேறுபடுகின்றனர். பெரும்பாலும் தங்களது தலைகளை மொட்டையடித்துக் கொண்டு, பெரிய அடர்ந்த மீசையுடனும், காது குத்தி அதில் அணிகலனுடனும் காட்சியளிப்பார்கள்.

பரவர்களில் மேன்மையானவர்கள், சோமன் (Somen) என்று அழைக்கப்படும் மென்னிறக் கரைக்கொண்ட மெல்லிய துணியை தங்களது இடுப்பைச் சுற்றி அணிந்து கொள்வர். கணுக்கால் வரை நீண்டுள்ள இந்த இடுப்புத் துணிமேல், அங்கார்கர் (angarka) என்ற பெயர்கொண்ட மஸ்லின் அங்கி (muslin coat) அணிந்து, தோளின் இருபக்கமும் தொங்கும் சால்வை (shawl) போர்த்தி, தலைமீது தலைப்பாகையுடனோ அல்லது வெல்வெட் துணியால் செய்யப்பட்ட பெரும்பாலும் தங்க வேலைப்பாடுகள் நிறைந்த தொப்பியுடனோ காணப்படுவர். இலங்கையில், angarka-விற்கு பதிலாக asair என்றழைக்கப்படும் மேல்சட்டை (short jacket) அணிவார்கள்.

தாழ் நிலையிலுள்ள பரவர்கள், கைலி எனப்படும் துணியை இடுப்பைச் சுற்றி கட்டிக்கொண்டு, urumal என்ற சதுர துணியால் தலையைச் சுற்றிக் கொள்வர்.

பரவப் பெண்டிர் சேலையணிந்து நேர்த்தியாக காணப்படுவர். அவர்கள் அணியும் சேலையின் தரத்தால் மட்டுமே அவர்களை மேனிலையினர். தாழ்நிலையினர் என வேறுப்படுத்த முடியும்.

பரவர்களின் தலைமை

தென்னிந்தியாவில் பரவர்கள் தங்களது தலைவனான ஜாதித்தலைவன் என்பவனின் தலைமையின் கீழ் ஒரு தனி இனமாக வாழந்தனர். தூத்துக்குடியை இருப்பிடமாக கொண்ட 'ஜாதித் தலைவன்'. இதர அரசு-ஜமீன்தார்களைப் போல ஆட்சி புரிந்து வந்தார்.

ஏழு கடற்றுறையின் ஏகத் தலைவனாக விளங்கிய ஜாதித்தலைவன், தனது ஆட்சியின் நிமித்தமாக அனுபவித்த பல உரிமைகளிலும் சலுகைகளிலும் மிக

முக்கியமானது, முத்துக் குளித்தலில் ஒரு பகுதியை தனது உடமையாக்கிக் கொள்வதேயாகும்.

இலங்கையைச் சேர்ந்த பரவர்கள், 'அடப்பனார்' என்பவர்களைத் தங்களது தலைவர்களாக கொண்டிருந்தாலும், அவர்கள் வாழும் மாவட்டத்தின் 'முதலியார்' என்பவரின் அதிகாரத்திற்கு உட்பட்டவர்களாகவே உள்ளனர்." [5]

மேற்கூறியன அனைத்தும் சைமன் காசி செட்டி எழுதிய கட்டுரையின் குறிப்புகளாகும்.

சங்ககால நெய்தற்நிலப் புலவர்கள்

நெய்தல் திணையில் பல புலவர்கள் பாடல்களைப் பாடியுள்ளனர். ஐங்குறுநூறு, குறுந்தொகை, நற்றிணை, அகநானூறு, கலித்தொகை ஆகிய அகநூல்களில் பல பாடல்கள் நெய்தல் திணையில் பாடப்பட்டுள்ளன.

நெய்தலைப் பாடிய புலவர்கள் பலர் இருப்பினும், தலைசிறந்து விளங்குபவர்கள் மூவர் ஆவார். அவர்கள் முறையே உலோச்சனார், அம்மூவனார், நல்வந்துவனார் என்பவராகும்.

ஐங்குறுநூற்றில் நூறுநெய்தல் பாடல்களையும் பாடியவர் அம்மூவனார். கலித்தொகையில் நெய்தல்கலிப் பாடல்களைப் பாடியவர் நல்லந்துவனார். நெய்தல்கலிப் பாடல்கள் மொத்தம் முப்பத்து மூன்று.

உலோச்சனார்

இவர் பாடிய நெய்தற்றுறைப் பாடல்கள் நற்றிணையில் மொத்தம் 19 (பாடல் எண் : 11, 38, 63, 74, 131, 149, 191, 203, 223, 249, 254, 278, 287, 311, 354, 363, 372, 398) கலித்தொகையில் 4 (175, 177, 205, 248) அகநானூற்றில் 8 (20, 100, 190, 200, 210, 300, 330, 400) ஆகிய பாடல்களாகும்.

நெய்தல் பாடுவதில் எவரும் இவருக்கு நிகராகார் என்று கூறுவது மிகையாகாது. இவர் கீழைக் கடற்கரையைச் சிறப்பித்துப் பாடும் புலவராதலால், பரதவர் மரபினராக இருக்கலாம் என்று துணியத் தோன்றுகிறது. [6]

இந்தக் கருத்தினை நற்றிணை உரையாசிரியர் நாராயணசாமி ஐயரும், தமிழ் கலைக்களஞ்சியமான அபிதான சிந்தாமணியும் ஒத்துக் கொள்கின்றனர். [7]

அம்மூவனார்

இவர் ஐங்குறுநூற்றில் 100 பாடல்கள் (101 முதல் 200 வரை) கொண்ட நெய்தல் திணை முழுவதையுமே பாடியுள்ளார். நற்றிணையில் 13 பாடல்களும் (4, 35,

138, 275, 307, 315, 327, 318, 327, 340, 351, 397, 401) அகநானூற்றில் 5 பாடல்களும் (10, 140, 280, 370, 390) இவர் பாடியுள்ளார்.

அம்மூவனார் 127 பாடல்கள் பாடியுள்ளதாக ஒரு குறிப்பும் காணப்படுகிறது.[8]

இவர் தொண்டி, மாந்தை முதலிய சேரநாட்டு ஊர்களை அடிக்கடி சிறப்பித்துப் பாடியிருப்பதால், இவர் மேலைக் கடற்கரையைச் சேர்ந்தவராய் இருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது.[9]

நல்லந்துவனார்

கலித்தொகையின் நெய்தல் திணையின் ஆசிரியர் நல்லந்துவனார். இவர் கலித்தொகையில் மொத்தம் 33 பாடல்கள் (118 முதல் 150 வரை) பாடியுள்ளார்.

இவர் இயற்பெயர் அந்துவன் என்பது. இவர் மதுரையாசிரியர் நல்வந்துவனார் என்று சிறப்பிக்கப்படுவதால், இவர் மதுரை ஊரைச் சார்ந்தவர் எனக் கொள்ளலாம்.[10]

நெய்தல் கார்க்கியார்

குறுந்தொகையில் இவர் பாடியுள்ள பாடல்கள் இரண்டுமே நெய்தல் திணை பற்றியவையாகும்.[11]

இவரது இயற்பெயர் கார்க்கியார். ''கார்க்கி'' என்ற பெயர் உபநிடதங்களில் சிறப்பாக வழங்கும் ஒரு பெண்பால் பெயராதலால், சங்க காலத்தில் பலர் இந்தப் பெயரை ஏற்றிருந்தனர். பிற கார்க்கியர்களில் இருந்து இப்புலவரை வேறு பிரித்து அறிவதற்காக ''நெய்தல்'' என்னும் அடை இவரது பெயருக்குமுன் சேர்க்கப்பட்டது.[12]

நெய்தல் தத்தனார்

இவர், நெய்தல் திணை பற்றி அகநானூற்றில் 243 ஆம் பாடலும், நற்றிணையில் 49, 130-ஆம் எண்ணுள்ள பாடல்களும் பாடியுள்ளார். இவையெல்லாம் நெய்தல் திணைபற்றியே அமைந்துள்ளமையால் நெய்தல் தத்தனார் என்ற இவர் பெயர் பெற்றார்.[13]

கபிலர்

சங்க காலத்தில் பெரும்புலவராக சிறப்புற்று விளங்கிய கபிலர் பாடிய 235 பாடல்களில், குறுந்தொகை 246-ஆம் பாடலும், நற்றிணையில் 267, 291-ஆம் பாடல்களும் நெய்தற் திணைப் பற்றியவையேயாகும்.[14]

சங்க இலக்கியத்தில் மிகுதியான எண்ணிக்கையுள்ள பாடல்கள் பாடிய புலவர், கபிலரே.[15]

திருவள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார்

"திருவள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் ஆகியோரை நெய்தல் நிலத்தைச் சார்ந்த புலவர்கள்" என்று 'கடற்கரைப் படைப்பாளிகள்' என்ற நூலில் ஆசிரியர் திரு.தொ.சூசைமிக்கேல் குறிப்பிடுகிறார். [16]

சிலப்பதிகாரம்

இளங்கோவடிகள் எழுதிய இன்பச் சிலப்பதிகார காப்பியத்துள் 'பரதவர்', 'பரதர் என்ற சொற்கள் வரும் இடங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

"உரைசால் சிறப்பின் அரசுவிழை திருவின்
பரதவர் மலிந்த பயங்கெழு மாநகர்" [17]

"புகழ் பொருந்திய சிறப்பினை உடையவர்களும், அரசர் மதிக்கும் செல்வ வளம் மிகுந்தவர்களும் ஆகிய பரதவர்கள் நிறைந்து வாழ்வதால் பயன்பெற்று விளங்கும் பூம்புகார் நகரம்", என்று அரும்பத உரையாசிரியர் பொருள் கூறுகின்றார். மேலும், அவர் 'பரதவர்' என்றச் சொல்லுக்கு 'வணிகர், 'கடலோடிகள்' என்றே பொருள் கூறுகின்றார்.

"மீன்வலைப் பரதர்" [18]

என்று குறிக்கப்படும் 'பரதர்' என்னும் சொல்லுக்குப் 'பட்டினவர்' என்று பொருள் கூறுகிறார். அடியார்க்கு நல்லார்.

"அரச குமாரரும் பரதம குமாரரும்" [19]

என்று குறிக்கப்படும் 'பரதவர்' என்னும் சொல்லுக்கு 'வணிகர்' என்றே பொருள் கூறுகிறார் அரும்பத உரையாசிரியர்.

"மறையின் மணந்தாரை வன்பரதர் பாக்கத்து" [20]

என்று குறிக்கப்படும் 'பரதர்' என்னும் சொல்லுக்குப் 'பரதர் என்றே பொருள் உரைக்கிறார் அரும்பத உரையாசிரியர்.

"சேரிப் பரதர்வலை முன்றில்" [21]

என்று குறிக்கப்படும் 'பரதர்' என்னும் சொல்லுக்குப் 'பட்டினவர்' என்ற பொருள் தருகிறார் அடியார்க்குப் நல்லார். பரதர் என்னும் வகுப்பினர் மட்டும் சேர்ந்து செறிவாக வாழ்ந்ததால், அந்தப் பகுதி 'சேரி' எனப்பட்டது.

சங்க இலக்கியம் பாடிய பரதவர்

நெய்தல் நிலத்தைப் பற்றி சங்க இலக்கியங்கள் அள்ளித் தந்த குறிப்புகளில் இருந்து, நெய்தல் நில மக்களாக பரதவர் முன் நிறுத்தப்பட்டுள்ளதை காண்கிறோம்.

நெய்தல் நில மக்கட்பிரிவில் நுளையர், திமிலர், பரதவர் என்ற பெயர்கொண்ட பிரிவினர் இருந்துள்ளனர் என்றாலுங்கூட, சங்க இலக்கியங்களில் பரதவரைப் பற்றிய செய்திகளே பல்கி காணப்படுகின்றன.

ஆதலின், நெய்தல் நில மக்களுள் பரதவரே முதன்மையானவர்கள் ஆவர்.

தற்கால நெய்தல் படைப்பாளி

ஸ்ரீவைகுண்டம் அணையிலிருந்து கிளம்பும் தாமிரபரணி, ஆழ்வார் திருநகரி, ஏரல், ஆத்தூர் வழியாக கடலை நோக்கி பயணிக்கிறது. வழி எல்லாம் வரலாற்றை ரகசியம்போல் தன்னுள்ளே புதைத்து வைத்திருக்கிறது நதி. ஒவ்வொன்றையும் தோண்டத் தோண்ட ஆச்சர்யம். அவற்றில் கொற்கையும் ஆதிச்சநல்லூரும் பிரமிக்க வைக்கின்றன. மேற்குலகில் நாகரிகம் வளர்ச்சி அடையாத அந்தக் காலக்கட்டத்தில் இங்கே மாட மாளிகைகளும் கூடகோபுரங்களும் கட்டி மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள்.

துறைமுகம் கடல் கொண்டது

தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூரிலிருந்து ஏரல் செல்லும் வழியில் இருக்கிறது கொற்கை. ஊர் முகப்பில் வீழ்ந்து கிடக்கிறது ஒரு மரம். சுமார் 2000 ஆண்டுகள் பழமையான வன்னி மரம் என்கிறார்கள். அதன் கீழே சில கற்சிலைகள் இருக்கின்றன. வரலாற்றை அசைபோட்டபடி கொற்கையில் கால் வைத்தபோது வெறுமை மனதில் அப்பிக்கொண்டது. ஆள் அரவமற்ற தெருக்கள், சிறு பள்ளிக்கூடம், ஆளே இல்லாத ஒரு தேநீர் கடை என சிறு கிராமமாக காட்சியளித்தது கொற்கை.

பாண்டியர்களின் தலைநகரம்

கொற்கையைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் ஏராளம். வெளிநாட்டுப் பயணியான தாலமி, கி.பி.130 வரை கொற்கை பாண்டியரின் துறைமுகமாக இருந்தது என்று குறிப்பிட்டுள்ளார். கி.மு.300 தொடங்கி கி.பி 500 வரை பழம் பாண்டியர்கள் கொற்கையை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தார்கள். பின்னர் அது மதுரைக்கு மாற்றப்பட்டிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

தாமிரபரணி கடலில் கலக்கும் முன்பு வண்டலுடன் முத்துக்களையும் வாரிக்கொண்டு வந்திருக்கிறது. அந்த முத்துக்களால் பிரசித்தி பெற்றதுதான் கொற்கை. இங்கே கிடைத்த முத்துக்கள் உலகம் முழுவதும் புகழ் பெற்றன. கிரேக்கர்களும் அரேபியர்களும் போட்டிப் போட்டுக்கொண்டு முத்துக்களை வாங்கிச் சென்றார்கள். கொற்கையை ஆண்ட பாண்டிய மன்னர்கள், ரோம் நாட்டின் அகஸ்டஸ்

மன்னரின் அரசவைக்கு கொற்கை முத்துக்களை பரிசாக அளித்தார்கள் என்று குறிப்பிடுகிறார் வரலாற்று அறிஞர் ஸ்டிராபோ.

பாண்டிய மன்னர்களின் குதிரைப்படடைகளுக்காக ஆண்டுதோறும் கொற்கைத் துறைமுகத்தில் ஆயிரக்கணக்கான பாய்மரக் கப்பல்களில் 16,000 அரேபியக் குதிரைகள் வந்திறங்கின என்று குறிப்பிடுகிறார் வரலாற்று ஆசிரியர் வாசப்.

'மறப்போர் பாண்டியன் அறத்தின் காக்கும் கொற்கையம் பெருந்துறை முத்து' என்கிறது அகநானூறு. 'நற்றிறம் படரா கொற்கை வேந்தே' என்கிறது சிலப்பதிகாரம். கி.மு.2500-ம் ஆண்டு உக்கிரப் பெருவழுதியால் நிறுவப்பட்டு, அகத்தியராலும் பிற தமிழ் புலவர்களாலும் தமிழ் ஆய்வு செய்யப்பட்ட இடைச்சங்கம் எழுந்தது கொற்கையில்தான் என்று தனது 'கோநகர் கொற்கை' நூலில் குறிப்பிட்டுள்ளார் வரலாற்று ஆசிரியர் ராகவன் அருணாசல கவிராயர்.

சங்க இலக்கியம் மற்றும் வரலாற்றில் 'மதுரோதய நல்லூர், பாண்டிய கபாடம், கொல்கை, கொல்கை குடா' என்றெல்லாம் கொற்கை குறிப்பிட்டுள்ளது.

கடல் கொண்ட கொற்கை

பிற்காலத்தில் மார்க்கோபோலோ மற்றும் கிரேக்கர்களின் குறிப்புகளிலிருந்து கொற்கையை ஆய்வு செய்த பிஷப் கால்டுவெல் அன்றைய ஆங்கிலேய அரசின் உதவியுடன் இங்கே அகழ்வாராய்ச்சி மேற்கொண்டார். அவர் எழுதிய குறிப்பில், இங்கே நிலமட்டத்திலிருந்து எட்டு அடிக்கு கீழே பழங்கால கொற்கைத் துறைமுகம் இருந்துள்ளது. அதில் பாதி கடலிலும் மீதி தாமிரபரணியிலும் புதையுண்டிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய காலத்தில் தாமிரபரணி இங்கே வடக்கு நோக்கி ஓடியது. தற்போது நதி திசைமாறி ஏரலை நோக்கி தெற்கு திசையில் ஓடுகிறது. அதை உறுதி செய்யும் வகையில் இங்கே நட்டாத்தியம்மன் கோயில் இருக்கிறது. ஆற்றின் நடுவே அமைந்த அம்மன் கோயில் என்பதே அதன் பொருள். ஆறு இன்று திசை மாறியிருப்பதை இது உணர்த்தகிறது. அதன் பின்பு மத்திய அரசின் தொல்பொருள் ஆய்வுத் துறை கொற்கையில் 12 இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்து ஏராளமான தொல்பொருள்களை கண்டெடுத்துள்ளது.

தென் தமிழகத்தை கடல்கோள் கொண்டபோது கொற்கை அழிந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அழிவுக்கு இன்னும் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், இன்று கொற்கையில் கடல் இல்லை. கடல் அலைகள் இல்லை. கடல் காற்று இல்லை. ஆனாலும், ஊருக்குள் நடக்கும்போது பாதத்தின் அடியில் சங்குகளும் சிப்பிகளும் மிதிபடுகின்றன. வாழ்வாங்கு வாழ்ந்த தமிழர் வரலாற்றின் எஞ்சிய சாட்சியங்கள் அவை.

சங்க இலக்கியம் காட்டும் கொற்கைத் துறைமுகம்

சங்ககாலத்தின் 200 ஆண்டுகளுக்கு முன்பாக தலைசிறந்த துறைமாகக் கொற்கை துறைமுகப்பட்டினம் விளங்கியது. பாண்டியர்களின் தலைநகரம் மதுரையும் துறைமுகப்பட்டினம். இதனுடைய துணை துறைமுகங்களாக பழையகாயல், காயல்பட்டிணம், வீரபாண்டியபட்டணம், குலசேகரப்பட்டிணம் விளங்கியது. வணிக மையங்கள் உமரிக்காடு, ஆத்தூர், ஆறுமுகநேரி, குரும்பூர், சோனகன்விளை ஆகிய ஊர்களில் இருந்தன. கொற்கைக் குடாக்கடலின் மேற்குக்கரையில் கொற்கைத் துறைமுகப்பட்டிணம் அமைந்திருந்தது. கொற்கைக் குடாக்கடல் நிலப்பகுதிகள் ஐந்துமைல் வரை ஊடுருவியிருந்தது. தாமிரபரணி ஆறு இக்குடாக்கடலினுள் ஓடிவந்து கலந்தது. ஆறுகள் கடலில் கலக்க முத்துச்சிப்பிகள் இயல்பாக உருவாகும். கொற்கைக் குடாவில் உயர்வகை முத்துச்சிப்பிகள் உருவாயின. வலம்புரிச்சங்குகளும் ஏராளமாக விளைந்தன. மன்னர்கள் அணிந்த முத்து ஏகவடம் ஆகும். தமிழகத்துப் பெண்கள் கொற்கை முத்தை தங்களுடைய அணிகலனாக அணிவதை விரும்பினர். 5000 ஆண்டுகள் பழமை வாய்ந்த ஹரப்பா நாகரிகத்தில் கொற்கை முத்து காணப்படுகிறது. 5000 ஆண்டுகளுக்கு முன்பு கொற்கை முத்து வியாபரம் கொடிகட்டிப் பறந்ததை அறிய முடிகிறது.

சங்ககாலப்பாடல்கள், அக்கால மக்களின் பண்பாடுகள், அரசியல் வாழ்வியற் செய்திகளின் காலக்கண்ணாடியாக காட்டுகின்றன. தமிழ் மண்ணின் சிறப்புகளை தமிழனின் நாடித்துடிப்பாக விளங்கும் இலக்கியங்கள் இனிமையாகக் குறிப்பிடுவதைப் பார்ப்போம்.

கொற்கைத் துறைமுக நகரின் கடற்கரையில் தாழை மரங்களின் சோழையும் அவற்றின் பூக்களின் மணமும், கடற்கரையில் இயல்பாக வீசம் மீன் நாற்றத்தைப் போக்கியது.

> ‘‘முண்டகம் கெழீஇய மோட்டுமணல் அடைகரை,
> பேஎய்த் தலைய பிணர்அரைத் தாழை
> எயிறுவடை நெடுந்தோடு காப்ப பலவுடன்
> வயிறுடைப் போது வாலிதின் விரீஇ
> புலவுப் பொருதழித்த பூநாறு பரப்பின்
> நற்றேர் வழுதி கொற்கை முன்துறை’’[22]

மதுரைப் பாண்டியர்களின் கொற்கைக் கோமான் கொற்கை பொருநன் என்றும் சிறப்பிக்கப்பட்டனர்.

> ‘‘பேரிசைக் கொற்கைப் பொருநன் வென்வேல்
> கடும்பகட்டு யானை நெடுந்தேர்ச் செழியன்
> கொற்கைக் கோமான் கொற்கையும் பெருந்துறை’’[23]

கொற்கை முத்துக்களை அணிகலனாக்கி அணிவதை பிறநாட்டவர்கள் பெரிதும் விரும்பினர். முத்துச்சிப்பிகளையும் சங்குகளையும் முத்துக்குளிப்போர் அள்ளிக்கொண்டு வந்து விற்றனர்.

''பல்மீன் கொள்பவர் முகந்த இப்பி
நாரரி நறவின் மகிழ்தொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கை''[24]

முத்துக்குளிக்கும்பொழுது கடலினுள் சுறா மீன்கள் தாக்கி, ஆபத்து ஏற்படாமலிருக்க, சுறா வசியம் கூறி, முத்துக்களை அள்ளியிருக்கிறார்கள்.

''இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமிற் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்ப, கல்லென
கலிகெழு கொற்கை''[25]

கொற்கைத் துறைமுகம் பாண்டிய நாட்டின் செல்வச் செழிப்பின் அடையாளமாகத் திகழந்தது. கடலலை முத்துக்கள் இழுத்து வரப்பட்டு கடற்கரையில் ஒதுங்கின. அவ்வழியே சென்ற குதிரைகளின் கால்களில் முத்துச்சிப்பிகளும் முத்துக்களும் மோதின. இதனால் குதிரையின் வேகம் தடைபட்டது.

''இவர்திரை தந்த ஈரங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வெடுத் தபுக்கும்
நற்றேர் வழுதிக் கொற்கை முன்துறை''[26]

பாண்டிய மன்னர்கள் மக்களைக் காக்கும் நலத்திறன் வழி நிற்கும் கொற்கை முத்து போன்றவர்கள்.

''மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையம் பெருந்துறை முத்து''[27]

கொற்கை முத்துக்களின் ஒளி சூரியக்கதிர் போன்றது.

''புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தம்'' [28]

கொற்கைத் துறைமுகத்தில் பெருமை வாய்ந்த பௌர்ணமி வழிபாட்டைக் கொற்கை மகளிர் செய்தனர். வழிபாட்டில் முத்துக்களையும் வலம்புரிச் சங்கினையும் படைத்தனர்.

''மகிழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை
அவிர்கதிர் முத்தாமாடு வலம்புரி சொரிந்து
பழையவர் மகளிர் பனித்துறை பரவப்
பகலோன் மறைந்த அந்தி ஆரிடை

உருகெழு பெருங்கடல் உவவுக் கிளர்ந்தாங்கு''[29]

துறைமுகத்தால் கொற்கைக்குச் சிறப்பேற்பட்டது. உப்பு வணிகரின் வீட்டிலிருந்த குழந்தைகள் கடற்கரையில் காணப்படும் கிழிஞ்சல்களையும், கிலுகிலுப்பையும் அசைத்து ஒலியெழுப்பி விளையாடினர். அதனை கண்ட குரங்கு குட்டி கடற்கரையில் கிடந்த கிழிஞ்சல்களை எடுத்து அதனுள் கடலலையால் ஒதுங்கிக்கிடக்கும் முத்துக்களை எடுத்துப்போட்டு கிலுகிலுவென அசைத்து மகிழ்ந்தது.

''நோன் கட்டுமணர் ஒழுகையோடு வந்த
மகாஅர் அன்ன மந்தி மடவோர்
நாகாஅர் அன்ன நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத் தடக்கித்
தோள்புற மறைக்கும் நல்கூர் நுசுப்பின்
உளரியல் ஜாம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலுயாடும்
தத்தநீர் வரைப்பின் கொற்கைக் கோமான்'' [30]

கொற்கைத் துறைமுகம் பண்பாடுமிக்க மிகப்பழமையான ஊர். இங்கு உலகம் போற்றும் உயர்வகை விளைகின்றன.

''பேருலகத்து மேல் தோன்றிச்
சீருடை விழுச்சிறப்பின்
விளைந்து முதிர்ந்த விழுமுகத்தின்
இலங்குவளை இருஞ்சேரிக்
கட்டிக்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கை''[31]

கொற்கையில் முத்துக்கள் குவியல் குவியலாகக் கிடைத்தன.

''முத்தப்படு பரப்பின் கொற்கை முன்துறை''[32]

மணிமேகலையின் வரலாற்றைக் கூறும் மணிமேகலைக் காப்பியத்தில் கொற்கையில் பொன்னாலான தேரோடியது என்பதை,

''பொற்றோர்ச் செழியன் கொற்கையம் பேரூர்''[33]

என்ற பாடல் அடியும் கொற்கைத் துறைமுகத்தின் பெருமையை உணர்த்துகிறது. பாண்டிய மன்னனின் சிறப்பை பறைசாற்றும் விதத்தில் கொற்கை முத்து போற்றப்பட்டது. பாண்டி நாடென்றால் 'முத்தும் முத்தமிழும' என்ற சொல்லாட்சி ஏற்பட்டது. தமிழகத் தொல்லியல் வரலாறு பாண்டியர்களின் ஆட்சியின் பெருமையை

எடுத்துக் கூறுவது. வேள்விக்குடிச் செப்பேடு ஆகும். பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்பவன் வேள்விக்குடி என்ற ஊரில் சிறப்பு வாய்ந்த ஒன்றைச் செய்தான். உலகம் போற்றிய அவ்வேள்வியை நிறைவு செய்தவன் கொற்கையைச் சேர்ந்த நற்கொற்றன் என்பவன்.

சோனகர், யவனர், எகிப்தியர் மற்றும் பல நாட்டு வணிகர்களும் அரசியல் தூதர்களும் வந்த சிறிய கப்பல்களின் ஒலியும் கொற்கைக்குடாவின் அலைகளற்ற கடலும், தாமிரபரணி பொருநை மெல்ல நடந்து வந்து கலந்து நின்ற பொலிவும், கதவுகளற்ற முத்து வியாபாரக் கடைகளின் ஒலிகளும் இன்றும் மலரும் நினைவுகளாக வந்து செல்கின்றன. மன்னன் மதுரைத் தலைநகரிலிருக்க, இளவரசர் கொற்கைத் துறைமுகத்தின் ஏற்றமிகு நிர்வாக வருவாயைப் பார்த்து வந்தான். சுனாமியின் இயற்கைத் தாண்டவத்தால் கடலலைகள் மணலை அள்ளிக் குவித்தன. தாமிரபரணியும் மண்ணை அள்ளிக் குவித்தது. இத்தகைய சீற்றத்தால் ஐந்து மைல் தூரம் உள்வாங்கியிருந்த கொற்கைக்குடா மண்மேடிட்டுப் போனது. இயற்கைத் துறைமுகம் என்ற கட்டமைப்பை இயற்கையே பறித்தெடுத்தது.

கி.பி. 1992-இல் தென்தமிழகம் வருகைத்தந்த இத்தாலியைத் சேர்ந்த மார்க்கோபோலோ பழையகாயல் குறிப்பின்படி 12 ஆம் நூற்றாண்டின் தொடக்காலம் வரை கொற்கைத்துறைமுகம் இருந்துள்ளது. கொற்கைப் பொழிவிழந்து மண்மேடான பின்பு பழையகாயல் இயற்கையான துறைமுக அமைப்பைக் கொண்டிருப்பதால் துறைமுகம் என்ற உயர்நிலைப் பெற்றது. கடல்கோளினால் பழையகாயல் துறைமுகம் தூர்ந்து போயிற்று. தாமிரபரணி ஆற்றின் கரையோரமிருந்த இரண்டாவது துறைமுகம் மறைந்துபோனது. கி.பி.1580 இல் போர்ச்சுக்கீசியரால் தூத்துக்குடி துறைமுகம் தொடங்கப்பெற்றது.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே உலகம் போற்றும் துறைமுகம் என்ற சிறப்பை தூத்துக்குடி மாவட்டம் தக்கவைத்துக் கொண்டிருக்கிறது.

கொற்கையில் அகழாய்வு செய்து அங்கு கிடைக்கப் பெற்ற அரிய பொருட்களை கொற்கையில் அருங்காட்சியகம் அமைத்து அங்கேயே பாதுகாத்திடுவது நம் முன்னோருக்கும் தமிழரின் பண்பாட்டிற்கும் செய்யும் சேவையாகும்.

இத்தகு வரலாற்றுத் தொன்மை பழஞ்சிறப்புகள் மிக்க கொற்கை துறைமுக பரதவர்களின் வாழ்க்கையினை எடுத்துக்காட்டும் வகையில் 'கொற்கை' என்ற நாவலும், பரதவர்களின் வாழ்வியலை எடுத்துக் காட்டுவதும், தமிழ்நாடு அரசின் 2004-ஆம் ஆண்டிற்கான சிறந்த நாவல் என்னும் பரிசுபெற்ற மற்றொரு நாவலுமான 'ஆழி சூழ் உலகு' ஆகியவற்றை எழுதி 'கொற்கை' நாவலுக்கு சாகத்திய அகாடமி விருது பெற்ற நாவலாசிரியர் 'ஜோ டி குரூஸ்' அவர்களின் வரலாறு மற்றும் அவரது இந்த இரு நாவல் படைப்புகள் குறித்த செய்திகளை இப்பகுதியில் இடம்பெறக் காணலாம்.

ஜோ டி குருஸ்

ஜோ டி குருஸ் ஒரு தமிழக எழுத்தாளர். சென்னை இராயவரம் பகுதியைச் சேர்ந்தவர். பொருளாதாரத்தில் முதுகலை, முனைவர் பட்டங்களைப் பெற்றிருக்கிறார். கப்பல் போக்குவரத்துத் துறையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வருகிறார். புலம்பல்கள் எனும் கவிதை நூல் 2003-இல் வெளியாகியுள்ளது.

இளமைக் காலம்

தூத்துக்குடி மாவட்டம் உவரி கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஜோ டி குருஸ் கொற்கை என்ற புதினத்தையும் ஆழி சூழ் உலகு என்ற நூலையும எழுதியுள்ளார். இவர் சென்னை லயோலா கல்லூரியில் முதுகலைத் தமிழ் பட்டம் பெற்றுள்ளார். அவரது இரு புதினங்களும் மீன்பிடித் தொழில் புரியும் பரதவர் வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. மேலும் 2013-இல் வெளியான மரியான் திரைப்படத்துக்கு வசனம் எழுதியுள்ளார்.

படைப்புகள்

- ஆழி சூழ் உலகு (நூல்)
- கொற்கை (நூல்)
- புலம்பல்கள் (நூல்)
- விடியாத பொழுதுகள் (குறும்படம்)
- எனது சனமே (குறும்படம்)

விருதுகள்

- இவரது 'கொற்கை' என்ற புதினத்திற்காக 2013-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது.
- இவர் எழுதிய 'ஆழி சூழ் உலகு' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2004-ஆம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதினம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

கொற்கை நாவலுக்கு சாகித்ய அகாடமி விருது

ஜோ டி குரூஸ் எழுதிய கொற்கை நாவலுக்கு 2013-ஆம் ஆண்டிற்கான இலக்கியத்துக்கான சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது.

தூத்துக்குடி மவாட்டம் உவரி கிராமத்தைச் சேர்ந்தவரான ஜோ டி குரூஸ் ஏற்கனவே எழுதிய ஆழி சூழ் உலகு பரவலான வரவேற்பைப் பெற்றது. தமிழக அரசின் 2004-ஆம் ஆண்டின் சிறந்த நூலுக்கான விருதையும் பெற்றது. கடலை

மையமாக வைத்து எடுக்கப்பட்ட மரியான் திரைப்படத்தின் வசனம் எழுதியிருக்கிறார் ஜோ டி குருஸ்.

பண்டைக் காலத்தில் முத்து வணிகத்தில் கொழித்து விளங்கிய நெல்லை மாவட்டத்தின் (தற்போது தூத்துக்குடி) கொற்கை துறைமுகப் பிரதேசத்தில் 1914-இல் ஆரம்பமாகும் நாவலின் கதை, 2000-ஆம் ஆண்டில் நிறைவு பெறுகிறது.

கப்பல் வணிகத்தின் முன்னேற்றம், கொற்கையில் கொழித்த பிற தொழில்களின் விருத்தி, கதை நடக்கும் காலத்தில் இடம்பெறும் அரசியலின் முக்கிய நிகழ்வுகள், வெள்ளையர்கள் மற்றும் கத்தோலிக்க மத பிரதிநிதிகள் உண்மை முகம் என கொற்கையின் உருமாற்றத்தை பிரமிக்கவைத்த வகையில், எண்ணற்ற தகவல்களுடனும் பாத்திரங்களுடனும் கூறியிருக்கிறார் நாவலாசிரியர் ஜோ டி குருஸ்.

சாகத்திய அகாடமி விருது குறித்து ஜோ டி குரூஸ் கூறுகையில், கடற்கரை சமுதாயத்திற்கு கிடைத்த அங்கீகாரமாக கருதுகிறேன். இதன் மூலம், சமவெளி சமுதாய மக்களின் பார்வை, நீர் தேவதையின் மக்கள் மீது படும் என நினைக்கிறேன். சாகித்ய அகாடமி விருதை எதிர்பார்க்கவில்லை. பெரிய பெரிய இலக்கிய ஜாம்பவான்கள் பிறந்த நெல்லை மண்ணில் பிறந்ததற்காகவும் எனக்கு விருது கிடைத்தற்காகவும் மகிழ்கிறேன் என்றார்.

இலக்கியத்தில் பரதவர்

பண்டைய தமிழக ஐவகைத் திணைப் பிரிப்பைக் கொண்டது. குறிஞ்சி, முல்லை, நெய்தல், மருதம், பாலை என அவை சொல்லப்படும். நெய்தல் கடலும் கடல் சார்ந்த பிரதேசமாகும். இங்கு வாழும் மக்களை பரதவர்கள் என இலக்கியங்கள் குறிக்கும். பரதவர்கள் பல்வேறு கடல்சார் தொழில்களில் ஈடுபட்டதன் மூலம் பொருளீட்டினார்கள். மீன்பிடி, முத்து சங்கு குளித்தல், உப்பு விளைவித்தல், சங்கறுத்தல், கடலோடுதல், கடல் வாணிபம் எனப் பல தொழில்களால் பல உட்பிரிவுகளாக பிரிந்தார்கள். அவ்வுட் பிரிவுகளின்படி தொன்மங்களையும் ஐதீகங்களையும் உருவாக்கிக் கொண்டார்கள்.

பழம் குலப் பெயர்கள்

பரதவர்களிடையே குருகுலம், வருணகுலம், குகன் குலம், ஆரிய நாட்டார் (ஆரியன்), கங்கை நாட்டார், சிந்து நாட்டார் சிவன் படையினர் போன்ற தொன்மப் பெயர்கள் வழக்கில் உண்டு. இதில் ஒரு பெயரான ஆரியன் என்ற பெயர் சோழநாட்டு பட்டினவரைக் குறிக்கும் பெயராகும். இது இன்றும் வழக்கில் உண்டு. துறைமுகங்களில் வாழும் பரதவர்களைப் பட்டினவர்கள் என அழைப்பர். அதில் சோழநாட்டுத் துறைமுகங்களில் வாழ்ந்த பட்டினவர் ஆரியன் என்று அழைக்கப்பட்டார்கள். பரதவர்கள் குருகுலம் என்ற ஐதீகத்தையும் கொண்டிருந்தார்கள். குரு குலத்தில் இருந்து உதித்த இன்னொரு குலமே வருண குலம் ஆகும். பட்டினவர்

தொழில்களாக கடல் ஓடுதல், கடல் வாணிபம் செய்தல், கடற்படை வீரர்களாக அரசபடைகளில் வணிக கணங்களின் கடற்படையில் பணி செய்தார்கள்.

சிறப்புக்கள்

பல்வேறு கல்வெட்டுக்கள் மற்றும் சங்க இலக்கிய நூல்கள் இந்த பரதவர்களின் சிறப்பை உரைக்கின்றன. பதினைந்தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இவர்கள் இசுலாமியர்களால் ஒடுக்கப்பட்டு பின் கிறிஸ்தவ மறையைத் தழுவினர். முன்நாட்களில் பாண்டியர் என்றும், படையாட்சியர், வில்லவராயர், பூபாலராயர், பாண்டியதேவர், சிங்கராயர் என்றெல்லாம் அழைக்கப்பட்டவர்கள் இன்று பெர்னாண்டோ, மச்சாடோ, மஸ்கார்னாஸ், ரோட்ரிகோ என்ற போர்த்துக்கீசிய பெயர்களால் அழைக்கப்படுகிறார்கள். பரதகுலத்தினர் பேரரசர் குலத்தவர் என்பதற்கான பல அடையாளங்கள் அகழ்வாராய்ச்சிகளிலும் கிடைத்தவண்ணம் உள்ளன.

தியாகி பெஞ்சமின்

குலசேகரப்பட்டினம் உப்பளத்தில் விடுதலைப் போராட்ட வீரர்கள் குழு ஒன்று அங்கிருந்த ஆங்கிலேயருடைய கொட்டகைக்குத் தீ வைத்து, அவர்களிடமிருந்த துப்பாக்கி முதலிய ஆயுதங்களைப் பறித்துக்கொண்டு தப்ப முயன்றது. இந்தக்குழுவைக் துப்பாக்கியின் பின்புறத்தினால் தாக்கிய டபிள்யூ. லோன் (W.Loane) துரை என்ற ஆங்கிலேய அதிகாரியை அந்தக் குழு கொலை செய்தது. இந்தக் குற்றத்திற்காக இந்தக் குழுவினருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. இந்தக்குழுவினருள் மூன்றாமவர் பரதர் குலத்தைச் சேர்ந்த தியாகி பெஞ்சமின். இந்தக் குழுவினருக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனையை ரத்து செய்யக் கோரி நடைபெற்ற வழக்குகளில் கடைசியாக ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. நாடு விடுதலையடைந்ததை அடுத்து இவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

கொற்கை நாவல்

2013ம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட கொற்கை நாவல் பரதவர்கள் மற்றும் அவர்களின் வாழ்க்கை முறைகளை அழகாக ஆவணப்படுத்துகிறது. இதை எழுதியவர் எழுத்தாளர் ஜோடி குருஸ். மேலும் இவர் மீனவ இனத்தைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எழுத்தாளரைப் பற்றி

தூத்துக்குடி மாவட்டம் உவரி கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஜோடி குருஸ் கொற்கை என்ற புதினத்தையும் ஆழி சூழ் உலகு என்ற நூலையும் எழுதியுள்ளார். அவரது இரு புதினங்களும் மீன்பிடி தொழில் புரியும் பரதவர் வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. மேலும் 2013ல் வெளியான மரியான் திரைப்படத்துக்கு வசனம் எழுதியுள்ளார்.

மீன் பிடித் தொழிலை குலத் தொழிலாக கொண்டுள்ள பரதவ இன மக்களைப் பற்றி எழுத இனப் பாசம் தவிர வேறு எதுவும் காரணங்கள் உள்ளதா? விளக்கமளிக்கிறார் எழுத்தாளர்.

மீனவர்களைப் பற்றி எழுத எது உந்துகோலாக இருந்தது?

ஆழிசூழ் உலகு நாவலில் அடித்தள மீனவ மக்களின் குறுக்கு வெட்டுத்தோற்றத்தை சொல்லியிருந்தேன். பரதவர்கள், மீன் பிடிக்கிறவர்கள் மட்டுமல்ல கடல்வழி வாணிபத்தின் முன்னோடிகள் என்பதை கொற்கை நாவலில் சொல்லியிருக்கிறேன். ஏழு மற்றும் எட்டாம் நூற்றாண்டில் கொற்கை செழித்து விளங்கிய துறைமுகம். பாண்டியநாடு வளமுடைத்து என்ற வாக்கு உருவானதே கொற்கை துறைமுகத்தை வைத்துதான். கொற்கையில் கிடைத்த நன்முத்துக்கள் பாண்டிய நாட்டை வளமுள்ளதாக ஆக்கியிருந்தது. கொற்கையில் கிடைத்த முத்துக்கள் அந்நூற்றாண்டுகளிலேயே பல நாடுகளுக்கு ஏற்றுமதி ஆகியிருக்கிறது. இதனால் கடல்வழி வாணிபம் சிறந்திருக்கிறது. சில்க் ரூட், பெப்பர் ரூட் என்று சொல்வதைப்போல் கொற்கைக்கு பெர்ல் ரூட் இருந்திருக்கிறது.

முத்துக்களுக்காக கிரேக்கர்கள், அரேபியர்கள், போர்த்துக்கீசியர், டச்சுக்காரர்கள், வெள்ளையர்கள் கொற்கையைத் தேடி வந்திருக்கிறாகள். ஆனால் இது எதுவுமே வரலாற்றில் சரியாக பதிவாகவில்லை. ஏராளமான கடல் வளமுடைய மிகப்பெரிய துறைமுகமான கொற்கை பரதவர்களால் ஆனது, ஆளப்படடது. வெள்ளையர்களின் வருகைக்குப் பிறகு அந்த சந்ததிகளுக்கு என்ன ஆனது என்பது குறித்து வரலாறு இல்லை. வணிகமும் கலாச்சாரமும் சிறந்து விளங்கிய கொற்கையைப் பார்த்து ரசித்து வெள்ளையன் உள்ளே வந்திருக்கிறான். இதுபற்றிய குறிப்புகள் நம்மிடம் இல்லை. வெள்ளையர்கள் பார்த்து, ரசித்து உள்ளே வருகிறான். இப்படி வளம்பெற்ற கொற்கை கடந்துவந்த நூறு ஆண்டுகளின் கதையைத்தான் கொற்கை நாவலில் சொல்லியிருக்கிறேன்.

கடந்த நூறு ஆண்டுகளில் நிகழ்ந்த சமூக, பொருளாதார கலாச்சார மாற்றங்களை பேசுகிறது நாவல். போர்த்துக்கீசியர்கள், வெள்ளையர்கள் வெளியேறி சுதேசி அரசாங்கம் வந்த பிறகு கொற்கையில் வாழ்ந்த பரதவர்கள் சமூகம் எப்படி மாறியது என்பதையும் பரதவர்களின் பல்வேறு பிரிவுகளுக்குக்கிடையேயான சமூக சிக்கல்கள்.அதை அவர்கள் கையாண்ட விதம் இதெல்லாம் தான் நாவலாக்கியிருக்கிறேன். இதை வரலாற்று ஆவணம் என்று சொல்லமுடியாது. நாவலுக்குள் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களால் இதுவரலாற்று ஆவணமாகலாம்.

மீண்டும் மீனவ சமூகத்தின் பின்னணியில் நாவல் எழுதக் காரணம்?

சங்கப் பாடல்களில்கூட அம்மூவனார் போன்றவர்கள் நெய்தல் கரையைப் பற்றி பாடினார்களே தவிர, நெய்தல் நில மக்களின் சுக துக்கங்களை பாடவில்லை. நெய்தல் நிலத்தைச் சேர்ந்தவன் என்ற வகையில் இதுகுறித்து எனக்கு நிறையவே

ஆதங்கம் உண்டு. நெய்தலின் மீது நெய்தல் மக்களின் மீதும் உள்ள பாசத்தின் வெளிப்பாடுதான் என் எழுத்து முயற்சி. வருமானத்துக்காக ஒரு வேலையில் இருக்கிறேன். ஆத்ம திருப்திக்காக எழுதுகிறேன்.

என் சமூகத்தில் உள்ள அவலங்களை கோளாறுகளை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியமாகபடுகிறது. ஆழி சூழ் உலகு நாவல் வெளிவந்த பிறகு, ஊரில் நிறைய எதிர்ப்பு வந்தது, வந்துக்கொண்டிருக்கிறது. நிலைக்கண்ணாடி போல ஒரு சமூகத்தில் உள்ள குறைகளைச் சுட்டிக்காட்டினால் வெறுப்பையும் விரோதத்தையும் சம்பாதிக்க வேண்டியிருக்கும். மாற்றம் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான் சமூக அதனால் மேற்படியான எதிர்ப்புகள் பற்றி கவலைப்படுவதில்லை!

நாவலில் சொலல் வந்ததை ஒரு கட்டுரையிலேயே கூட சொல்லி முடித்திருக்கலாம். ஆனால் அதை அப்படி சொல்ல விரும்பவில்லை. வாழ்வாக சொல்ல விரும்பினேன். ஆழி சூழ் உலகு எழுதி முடித்த உடனே கொற்கையை எழுத உட்கார்ந்தேன். 2005 தொடங்கி 2009 ஆண்டு முடிய நாவலுக்காக உழைத்திருக்கிறேன். சின்ன வயதிலிருந்து எனக்குள் போன செய்திகளை மெருகுபடுத்தி சேர்த்திருக்கிறேன். வெவ்வேறு தலைமுறைகளைச் சேர்ந்த பெண்கள், ஆண்களை சந்தித்து பேசி தகவல்களை திரட்டினேன். நாவலை எழுதி முடித்தவுடன் ஒருவித அயற்சி ஏற்பட்டது. எழுதி முடித்த பக்கங்களைத் தூக்கி பரணில் போட்டதைப் பார்த்த என் மனைவி பதறிக்கொண்டு ஐந்து வருட உழைப்பை வீணாக்கலாமா? என்றார். பிறகுதான் எழுதியதை பதிப்பகத்திடம் கொடுக்கும் முடிவுக்கு வந்தேன். நாவல் எழுதி முடிந்தபோது ஏற்பட்ட அயற்சிக்குக் காரணம், முன்னோடியாக இருக்க வேண்டிய சமூகம் இப்படி முடங்கிக் கிடக்கிறதே என்கிற ஆதங்கம் தான்! என் சமூகம் ஏன் இப்படி இருக்கிறது என்கிற கேள்வி என்னை சதா துளைத்துக்கொண்டே இருக்கிறது.

எழுதுவதைத் தாண்டி மீனவர்களின் இன்னல்களை ஆவணப்படுத்தும் முயற்சியிலும் இறங்கியிருக்கிறீர்கள். குறிப்பாக இலங்கை ராணுவத்தால் தொடர்ந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்படும் தமிழக மீனவர்கள் பற்றி ஆவணப்படங்கள் எடுத்ததன் பின்னணி என்ன?

காலம்காலமாக தமிழக மீனவர்கள், வடமேற்கு இலங்கை நோக்கி மீன் பிடிக்கப்போவதுதான் வழக்கம், 1983ல் இலங்கை யாழ்பாணத்தில் நூலகம் எரிப்பு என்கிற நிகழ்வுக்குப்பிறகு, விடுதலைப்புலிகளின் எழுச்சி தொடங்கியபோதுதான் தமிழக மீனவர்கள் மூலமாக விடுதலைப்புலிகளுக்கு உதவிகள் கிடைப்பதாக கருதியே இலங்கை அரசு இத்தகைய தாக்குதல்களை ஊக்குவித்தது. இன்று ஈழம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது. ஈழப் போராட்டத்தின் பின்னணியில் தென் தமிழக மீனவர்களின் இரத்தமும் கலந்திருக்கிறது என்பது நிதர்சனமான உண்மை. தமிழினம் என்கிற காரணம் மட்டுமல்ல, தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு இன்னும் ஏராளமான கோர முகங்கள் உண்டு. மீனவர்கள் பிடித்த மீன்கள் பிடிங்கிக் கொண்டு

வளையை அறுத்துவிடுவதிலிருந்து காதில் இருக்கிற கடுக்கணை பிடிங்கிக் கொள்வது வரையான கடற்கொள்ளையர்களைப் போன்ற செயல்களையும் அவர்கள் செய்கிறார்கள். பச்சை மீனை திண்ணச் சொல்வது. ஐஸ்கட்டியில் நிர்வாணமாக படுக்கவைப்பது, கடலில் தள்ளிவிட்டு இரண்டு, மூன்று மணி நேரம் நீந்தவிட்டு களைத்துப்போகும்போது ஹெலிகாப்டரிலிருந்து சுட்டுப் பழகுவது, இதையெல்லாவற்றையும்விட அப்பன் மகன் என்று தெரிந்த பின்னும் உறவு கொள்ள கட்டாயப்படுத்துவது கொடுமையின் உச்சம்! கச்சத்தீவை மீட்போம் என்று நாட்டில் கூச்சலிடும்போதெல்லாம் கடலில் இருக்கிறவனுக்கு மரண அடி விழுகிறது.

மீனவர்கள் நாதியில்லாதவர், அவர்களுக்கென்று அமைப்புகள் கிடையாது, ஒருங்கிணைந்த குரல் கிடையாது. இதுதான் காரணமேயில்லாமல் இத்தனை பேரின் இறப்புக்கும் பல இழப்புகளுக்கும் காரணம். நம்முடைய அரசியல் வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எல்லைகளில் வாழ்கிறவர்கள் தானே என்கிற விட்டேத்தி மனோபாவம். இருபது வருடங்களுக்கும்மேலாக மீனவர்களிடையே பணியாற்றுவதாக சொல்லிக்கொள்ளும் தொண்டு நிறுவனங்களிடம்கூட மீனவர்களின் வாழ்வாதாரத்தை மாற்றுவதற்கான எந்தவித திட்டமும் இல்லை. குறைகளை கணக்கெடுத்திருப்பதுதான் தொண்டு நிறுவனங்கள் செய்திருக்கும் மிகப்பெரிய சேவை!

இதெல்லாம்தான் 'விடியாத பொழுதுகள்' என்ற முதல் ஆவணப்படம் எடுக்க தூண்டுதலாக அமைந்தது. அவலங்களை மட்டும் சொன்னால் எனக்கும் தொண்டு நிறுவனங்களின் செயல்பாட்டுக்கும் வித்தியாசம் இல்லாமல் போய்விடும். அதனாலேயே பிழைப்புக்காக எல்லைத் தாண்ட நேரிடும் மீனவர்களுக்கு மாற்று வழியைச் சொல்லும் நோக்கில் 'விடியலை நோக்கி' என்ற ஆவணப்படத்தை எடுத்தேன். மன்னார் வளைகுடா பகுதியில் அமைந்துள்ள மூக்கையூர் பகுதியில் மீன்பிடி துறைமுகம் அமைக்க வேண்டும் என்பதே அந்தத் தீர்வு. மூக்கையூர் பகுதியில் வீணாகிக்கொண்டிருக்கும் ஆழ் கடல் வளத்தை பயன்படுத்த வாய்ப்பாகவும் இந்தத் தீர்வு அமையும். பரவலாக கவனம் பெற்ற இந்த ஆவணப்படத்திற்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் விருது கொடுத்திருக்கிறது. விருது பெறுவது, கவனம் பெறுவது என்பதைவிட என் மக்களின் துயரம் அறியப்படவேண்டும் என்பதுதான் என் நோக்கம். மீனவ சமூகத்திலிருந்து வந்த எனக்கு, என் சமூகத்தின் வலி நன்றாகவே தெரியும். ஆம்புலன்ஸ் சத்தம் கேட்டாலே அலறுகிறார்கள் எம் மக்கள். கைநிறைய சம்பளமும் வசதி குறைவில்லாத வாழ்க்கையும் எனக்கு நிறைவைத் தந்துவிடாது. எம் மக்களின் வாழ்வுக்காக எதையாவது நான் செய்துகொண்டே இருப்பேன். ஏனெனில் மூச்சுவிடுவது மட்டுமே வாழ்க்கையில்லை!

ஜோ டி குரூஸ் எழுத்தும் பேச்சும்

நான் ஒரு மீனவன்... பிறவி மீனவன்! சாதாரண குடும்ப பின்னணி. ஊர்ல படிப்பு வசதிகள் சரியாக கிடையாது. எப்படியோ இளங்கலை முடிச்சேன். அப்பா 'படிச்சது போதும்; வேலைக்குப் போ!'னு சொல்றார். அம்மாதான் உறுதியா இருந்து

காலேஜிக்கு அனுப்பறாங்க. படிச்சி வேலைக்கு போய் வீட்டை காப்பாத்தனும்கிற பெரிய கடமை உணர்வெல்லாம் கிடையாது.

அம்மாவுக்கு மேற்கொண்டு நான் படிக்கனும்னு விருப்பம். எனக்கு இங்க சுத்தினது போதும். மெட்ராஸீக்குப் போனா நிறைய படம் பார்க்கலாம். ஊர்சுத்தலாம்னு லயோலா காலேஜ்ல எம்.ஏ சேர்ந்துட்டேன். ஏழைன்னாலும் ஆசைகள் இருக்கத்தானே செய்யும்... இயல்பா எல்லோருக்கும் இருக்கிறதுதானே! லயோலா காலேஜ்ல புதுவிதமான உலகத்தைப் பார்க்கிறேன். முதல் தடவையா என்னோட படிக்கிற பசங்க ஓட்டி வர்ற காரைப் பர்க்கிறேன். அதை தொட்டுப் பார்க்கிறேன். இது மாதிரி ஒரு கார் வாங்க முடியுமான்னு யோசிக்கிறேன்.

அப்போ விழுந்தது முதல் விதை. ஆனாலும் தொடர்ந்து பல சிரமங்கள்... நான் படிச்ச எக்னாமிஸ்க்கும் இங்க சொல்லித்தற எகனாமிஸ்க்கும் ஏகப்பட்ட இடைவெளி. படிக்க கஷ்டமா இருக்கு. ஊருக்கு வந்து அப்பாவுக்கு உதவியா தோணி வேலைக்குப் போறேன்னு அம்மாவுக்கு லெட்டர் எழுதறேன். அதுக்கு அம்மா, உன்னையாரு படிக்க அனுப்பினா? அங்கபோய் சந்தோஷமா இருக்கத்தான் அனுப்பினேனுன்னு பதில் எழுதுறாங்க. எவ்வளவு தீர்க்கதரிசனமான வார்த்தைன்னு இப்போ நினைச்சுப் பார்க்கிறேன். முதல் செமஸ்டர்ல எல்லா பாடலத்துலேயும் அரியர்ஸ். ரெண்டாவதுல பாதியா குறையுது. படிக்கிறதோட அவசியம் புரிய ஆரம்பிக்கிறது. ரெண்டாவது வருஷம் முடிக்கும்போது ஏ கிரேட்ல படிச்சு முடிச்சிருக்கிறேன். எம்..'.பில் படிக்கும்போது நான் சார்ந்த மீனவ சமூகத்தின் பொளாதாரத்தை ஆய்வு செய்கிறேன். அதைத் தொடர்ந்து பி.எச்.டி. சில பிரச்சனைகளால தொடர முடியாம போயிடுது. மும்பைல போய் வேலை பார்க்கலாம்னு கிளம்பிடறேன்.

இந்திய சரக்கு போக்குவரத்து தொழில்ல முன்னோடியா இருக்காங்கன்னு சொன்னதும் நானும் வரிசையில போயி கைகட்டி நின்னுட்டேன். இருக்கிறதுலே கீழ்மட்ட வேலை. பியூனுக்கு சமமான வேலை கெடைச்சது. எனக்கு இந்தி தெரியாது. தெரிஞ்ச பட்லர் இங்கீலீசை வச்சித்தான் வேலை பார்த்தேன். இப்படி கடைநிலை ஊழியராக இருந்து பல படிகளைத் தண்டி 19 வருட கடும் உழைப்புக்கு பிறகு இன்னிக்கு ஒரு நிறுவனத்தோட துணைத்தலைவரா வளர்ந்திருக்கிறேன்.

இந்தியாவின் எல்லா துறைமுகங்களிலும் வேலை பார்த்திருக்கிறேன். அலுவலகத்துல இருந்துகிட்டு என்னால எந்த நாட்டுல இருந்து வர்ற கப்பல், எந்த துறைமுகத்துல வந்து சரக்குளைக் கையாள்றதுக்கு வசதியா இருக்கும்னு சொல்லமுடியும்.

இப்படி நான் வேலைரீதியா உயரத்துக்குப் போயிட்டு இருந்த சமயம், பர்சனலா பயங்கர அடி. என்னோட அடிகளை, புலம்பல்களை கவிதையா எழுதிட்டேன். ஆனா, கவிதைக்கான எந்த தரத்துலயும் அது இல்லை. அறிய அறிய அறியாமை புரிஞ்சது. எழுத்து எனக்கு பலவிதத்திலும் வருடிக்கொடுக்கும்னு ஒரு நாவல் எழுத முடிவு

செஞ்சேன். நான் பிறந்தது, வளர்ந்தது, வேலை பார்க்கிறது எல்லாமே இந்த கடலும், கடல் சார்ந்த இடமும்தானே... அதுதானே எனக்கு எழுதவரும். கடிவாளம் போட்ட குதிரைபோல நாவலை எழுதி முடிக்கிற வரைக்கும் அதே சிந்தனையா திரிஞ்சேன். ஆழி சூழ் உலகு உருவான கதை இதுதான். நான் எழுத்தாளரான கதையும் இதுதான்! அது வரைக்கும் இலக்கியம் படிச்சதுகூட கிடையாது.

இலக்கியம் என்பது சமூகத்தை பிரதிபலிக்கிற கண்ணாடி. கண்ணாடின்னா உண்மையைத்தானே காட்டணும்! மக்களோட வாழ்க்கை, கலாச்சாரம், நடை, உடை, பாவனை இதைத்தானே காட்டணும். ஒரு சமூகத்தின் மீது கூறப்பட்ட பழிகள், குற்றச்சாட்டுகளைக் கூட இந்தக் கண்ணாடி மூலமா பொதுவான சமூகத்திற்கு வெளிப்படுத்த முடியும். அதை யார் சொல்லுறதுங்கிறதும் கேள்விதான்! வலிக்குதாம்னு சொல்லுறதைவிட வலிக்குதுன்னு சொல்லுறதுக்கு உயிர் அதிகம். தலித்துகள் கஷ்டப்படறாங்கன்னு சொன்னா, அதை அவங்களா பதிவு பண்ணாத்தான் சரியா இருக்கும். துப்புரவுத் தொழிலாளர்களைப் பத்தி அறிவழகன் கழிசடைனு ஒரு நாவல் எழுதியிருக்கிறார். அந்த வாழ்க்கையை இதைவிட வலியோடு சொல்ல முடியுமான்னு ஆச்சர்யப்பட வைக்கிற பதிவு இது.

சின்ன வயதிலிருந்தே என் சமூகத்தை உள்ளுக்குள்ள நேசிக்க ஆரம்பிச்சுட்டேன். வளர வளர, என் சமூகம் ஏன் மாறாம இருக்கிற வேதனையும் தொடர்ந்துகிட்டே இருக்கு. வேர்களை மறந்த சமூகம் உருப்படாது; வேர்களை புதுப்பித்துக்கொள்ளாத சமூகம் நிலைக்காதுங்கிறது உண்மை.

மீனவ சமுதாயம் மீன்களை வேட்டையாடுகிற சமுதயாம். தனிப்பட்ட வெற்றி, தோல்விகள்தான் சாத்தியம். எல்லாரும் சம பலம் கொண்டவர்களாக இருக்கும்போது, கூட்டு முயற்சிகளுக்கு அங்கே வாய்ப்பு இல்லை. இது காலம் காலமா அவங்களுடைய ஜீன்களிலேயே ஊறிவரும் குணம். ஒவ்வொருத்தனும் தலைவனாதான் இருக்க விரும்புவான். அதனாலதான் குரல் கொடுக்க ஒரு வலுவான தலைமை இல்ல. இத்தனை காலமும் இருளடைஞ்ச வாழ்க்கைதான் அவங்களுக்கு வாய்ச்சிருக்கு.

எங்க கிராமங்கள்ல விதவைகளும், அனாதைகளும் அதிகம். கேரளத்துல ஈழவர்கள்னு ஒரு சமூகம். அதுல நாலு, அஞ்சு பேரு தங்களோட சமூகத்தை பத்தி எழுத வந்தாங்க. மடமடன்னு அந்த சமூகம் வளர ஆரம்பிடுச்சருச்சு. அவங்க வளர்ச்சியை யாராலயும் புடிச்சி நிப்பாட்ட முடியல. அது விழிப்புணர்வு பெற்ற சமுதாயமா மாறிடுச்சு. அது என்னோட சமூகத்திலும் ஏற்படனும்னு விரும்பறேன். நான் அவங்களுக்கு ரோல் மாடலா இருக்க விரும்பறேன். எனது சமூகத்திலிருந்தும் நிறைய எழுத்தாளர்கள் வந்து சமூகத்தின் உண்மையான நிலைபற்றி எழுத வேண்டும். அது சமூகத்தில் சத்தியசோதனையாக முன்வைக்கப்பட வேண்டும். ஏனென்றால் நான் ஒரு பாரம்பரிய மீனவன்... பிறவி மீனவன்!.[34]

அது ஒரு நிலாக்காலம்...

பாலனாக, பள்ளிச் சிறுவனாக, துள்ளித் திரிந்த காலத்தில் ஆமந்துறையின் வீடு, திண்ணை, நடுத்தெரு. தெற்குத் தெரு, மேலத்தெரு. கீழத்தெரு, வடக்குத்தெரு, பெட்டி ஆபிசர் விளை, மாடத்தாவிளை எங்கும் நிறைந்திருந்தது உறவுக்கூட்டம். கடற்கரையே உலகம். இந்த உறவுகளே உலகின் மொத்த மக்கள் கூட்டமென மகிழ்ந்திருந்த காலம். வெள்ளை மனது, கனிந்த புன்னகை, கபடே அறியாத வாழ்க்கை...

இங்கே ஊரே நிரம்பி வழிய உற்றாரும், உறவினரும், மற்றோரும் மகிழ்ந்து கொண்டாடும் புனிதரின் பெருவிழா, எனது சனமே... எனது சனமே என அழைத்து மொத்த ஊரையும் சோகத்தில் ஆழ்த்தும் தவக்காலத்தின் புனித வெள்ளி, ஊர் மக்கள் மட்டுமே கொண்டாடி மகிழும் சின்ன அந்தோணியார், அந்திரையார் திருவிழாக்கள், முளைப்பாரி வைத்தும், குடில் சோடித்தும், குழிப்பணியாரம், சீடை, முறுக்கு, முந்திரிக்கொத்து என பண்டங்கள் செய்தும், ஓலைவெடி வெடித்தும் வரவேற்கும் பாலன் பிறப்பு, புத்தாடை உடுத்தி, உயர் பட்சணங்கள் சுவைத்தருந்தி, மூத்தோர், முதியோரை வீடுவீடாய் சென்று தரிசித்து ஆசிர்பெற்று மகிழும் புத்தாண்டுப் பரவசங்கள்.

விடுமுறையில் பொழுது விடிந்தால் சில்லிப்பாரருகே சில்லி எடுப்பதற்காக வருவோம். அலையின் வேகத்தைக் கணிக்கத் தவறி அடிவயிற்றில் அடிவாங்கி மூச்சுத்திணறினாலும் மீண்டும் மீண்டும் அந்த அலையோட போராடுவதே. நமது போராட்டக் குணம் இங்கிருந்தே முளைவிட்டிருக்கலாம். இது என்னவோ தெரியவில்லை. கடல்நீரின் கரிப்பால் வரும் கண்ணெரிச்சலை நீரைக் கைமாற்றிக் கொடுத்துப் போக்குவோம். இந்த ஒற்றுமையும், ஒருவருக்கொருவர் உதவும் பக்குவம்தான் சமூக அளவில் இன்னும் வந்தபாடில்லை.

கடலுக்குள் குழியோடி கல்லெடுத்து வந்து காட்டுவதும், கடலடி மண்ணை, பாசியை வாயில் கவ்வி வந்து காட்டி மகிழ்வதும், கடலுக்குள் கட்டுமரத்தின் வாடப்புறம் மூழ்கி சோழப்புறம் வெளிவந்த அந்த நாளின் நடைமுறை. காலை இளவெயிலில் கடலில் விளையாடிவிட்டு சுடுமணலில் கூரை காய்ந்து உடலெல்லாம் வெள்ளைமணல் ஒட்ட உருண்டு புரண்டு விளையாடுவது கொள்ளை இன்பம். மழைக்காலம் நெருங்கும் முன்னால் தெருக்களிலே பனங்கொட்டை விதைப்பார்கள். இது அந்தோணியார் திருவிழா நேரம். பீலிவெட்டுக் கொண்டு நிற்கும் கிழங்கு பிடுங்கும்போது கிடைக்கும் முளைக்கொட்டைத் தவனுகக்காக நாக்கு ஊறும்.

அந்தோணியார் கோவிலின் கொடிமரத்திற்கு நேர் பணியே கடலுக்குள் வெள்ளை மணற்பரப்பு, குதித்துக் கும்மாளமிட அருமையான இடம் கோவிலின் நேர்பணியே பாற்கடலில் அஞ்சாளைக் கூட்டம், பார்த்துப் பயந்ததாக ஞாபகமில்லை. கோடை விடுறையில் தெருவோரத்து வேப்பமரத்தில் ஊஞ்சல் கட்டி, புளியமுத்து

பிரித்து, வறுத்து, தோல் அகற்றி, அவித்து சாப்பிட்டு, வயிற்றுவலியில் அழுது புரண்டு, அப்பப்பா... காற்றடி காலங்களில் பட்டம்விடுவதும், நவம்பர் மாதங்களில் வாடைக் காற்றை எதிர்த்துவரும் வண்ணத்துப்பூச்சிகளைச் சுளவுகளால் மடக்கிப் பிடிப்பதும், பாலன்பிறப்புக் காலங்களில் காடுமேடாக சவுக்குமரத்துக்கும், சப்பாத்திக்கள்ளிப் பூவுக்குமாக அலைவதும், கல்வெட்டாங் குழியில் சோறுபொங்கி விளையாடுவதும், குருவித்தேரியில் உருண்டு புரண்டதும் இன்னும் மறக்காத இனிய நினைவுகள்.

ஆன்மீக வழிநடத்திய அமைதியான குருக்கள் கன்னியர், கைப்பித்துப் பாடம் சொன்ன மரியசிலுவை டீச்சர் போன்ற ஆசிரிய ஆசிரியைகள், பிரம்பிப்பூட்டும் நெய்தலின் ஆளுமைகளாய் தாத்தாமார், பாசத்தை அள்ளித் தந்ததோடு பழங்கதைகள் சொல்லி மகிழ்ந்த பாம்படம் அணிந்த பாட்டிமார், அன்பை உருக்கித்தந்து பால்நிலவு காட்டிப் பால்ச்சோறு ஊட்டி வளர்த்த ஆத்தாமார் அத்தைமார், ஆஜானு பாகுவாய் பங்காளிக் கூட்டம், எமது சேட்டைச் சில்மிஷங்கள் அத்தனையும் பொறுத்துக் கொண்டு எம்மை மார்பிலும், தோளிலுமாய் தூக்கி வளர்த்த சின்னையா, சித்திமார், மாமா, மாமிமார், இன்னும் மச்சான்மார், மதினிமார் என்று கடற்கரை எல்லைக்குள்ளே விரிந்து வியாபித்திருந்தது உறவு.பால்நிலா இரவுகளில் தெற்கே கட்டுமரங்களுக்கு பனியே இறங்கினால் வெள்ளியை உருக்கி விட்டாற்போல் தெரியும் கடல், அள்ளிப் பருகலாம் போலிருக்கும், குத்துவலை வைத்துக் கொண்டு வருவார் சின்னய்யா ஜெரால்டு வீரச்சந்திரா துடிக்கத் துடிக்க மதனமும், ஓராவும், குறுவலயும், வெங்கணையும, தெளியும் பாசியோடு கரையேறும், கொதிக்கக் கொதிக்க அவியல் வைத்துத் தருவாள் சித்தி...

காடுகளில் முள்ளடித்துச் சுமந்து, அசையும் உதடுகள் அசைந்தபடியே இருக்க கைவலிக்க, குறுக்குதேய மால் முடித்து, குடும்பங்களைச் சுமந்த அக்காமாரையும், வெங்குளிரிலும் வெயிலிலும், புயலிலும் மழையிலும், இரவிலும் பகலிலும் ஆழி கடந்து அரும்பாடுபட்ட எம் அண்ணன்மாரையும், நாம் என்ன பாடுபட்டாலும் பரவாயில்லையே என்று காட்டுக்கு மீன் சுமந்த ஆத்தாமாரையும், தோள் எலும்புத் தேயத் தேய பள்ளிக்குத் தூக்கிச் சுமந்த தாத்தாமாரையும் நினைத்ததாலேயே நெஞ்சில் ஒரு பாரம் வந்து அப்பிக் கொள்கிறது. இவர்களுக்காக என்ன செய்யப் போகிறோம் என்ற எண்ண அலைகளே எப்போதும் என்னைத் துரத்திக் கொண்டிருக்கின்றன. இன்று பெரும் விருட்சமாக வளர்ந்து நிற்பதற்குக் காரணமும் இந்த வேர்களின் தியாகம் தானேயன்றி வேறென்ன...

அந்தக் காலத்தில் "மனை சிறுத்து மக்கள் பெருத்து" என்ற பழமொழியை பெரியவர்கள் கூற என் காதுபடக் கேட்டிருக்கிறேன். இன்று, மனைகளும் பெருத்து மக்களும் பெருத்திருக்கிறார்கள் ஆனால் மனங்கள் தான் ஒன்றிணையக் காணோம். காணாமல் போன உவரியின் கடற்கரையைப் போலவும், உறவும், உணர்வும், பாசங்களுமே இல்லாமலே போய்விட்டன. பக்கத்து வீடாக இருந்தாலும் தொலைபேசியிலோ அல்லது அலைபேசியிலோ அழைத்ததுதான் பேசுகிறோமே

அல்லாது அருகில் சென்று அன்பொழுகப் பேசுவதை மறந்துவிட்டோம். தகவல் தொழில்நுட்பம்தான், முன்னேற்றம்தான், மறுக்கவில்லை, ஆனால் மனதளவில் வெகுதூரம் போய்விட்ட உணர்வு.

எம்மைப் பொறுத்தவரையில், வாழ்வின் கனவுகளும் லட்சியங்களும் தொலைதூரம் தூக்கிவந்தாலும், தனிமனித ஆளுமையால் பல்வேறு பணித்தளங்களில் முத்திரை பதித்தாலும், தாய் மண்ணும், தாய் வீடும் எம்மை எப்போதும் வசீகரத்தபடியே இருக்கின்றன. ஊவரியை நினைத்தாலே எப்போதும் மனதுக்குள் ஊஞ்சலாடுவது போன்ற ஒரு உணர்வு. ஊருக்கு வருவதும் உறவுகளோடும் நண்பர்களோடும் கூடிக்களிப்பதும், மகிழ்வதும், கடற்கரையில் கால்பாவி நுரைப்பூக்கள் மத்தியில் நடப்பது போன்ற உன்னத அனுபவம். ஆனால் எத்தனைமுறை வந்தாலும் சென்றாலும் ''மானட்டா விலக்கை'' கடந்து ஊருக்குள் நுழையும் போது கிடைக்கும் மகிழ்ச்சிஅதைக் கடந்து வெளியே போகும்போது இல்லவேயில்லாமல் போய்விடுகிறது. இது எங்கள் பாட்டன், பூட்டன் வாழ்ந்து களித்த பலநூறு கதை சொல்லும் சரித்திர பூமி, எங்கள் பாரம்பரியம் காத்த புண்ணிய பூமி. இந்த மண்ணுக்கென்று ஒரு மணம், அதன் உறவுக்குள் இருக்கிறது ஆனைபலம்.[35]

புலி வாலைப் பிடித்தாயிற்று...

மீசை அரும்பும் காலத்தில் குறும்பும் காதல் போல கவிதை ஆசை என்னுள்ளும் வந்து போனதில் வியப்பேதும் இல்லை.

''கவிதை எழுதாதீங்க, வாழக்கையை எழுதுங்க'' என்று தமிழினி வசந்தகுமார் அணைபோட்டு மடை மாற்றிய போது சிறிது வருத்தமாகத்தானிருந்தது. ''சிலிர்க்க சிலிர்க்க அந்த அலைகளை மறித்து முத்தம் தரும் போதெல்லாம் துடிக்கத் துடிக்க ஒரு மீனைப் பிடித்தத் தருகிறது இந்த கடல்.'' என்ற எழுதிய பிரான்ஸிஸ் கிருபாவுக்கு வாய்த்தது போல மொழியின் நளினமும், அதன் ஆளுமையும் எனக்குத் தெரிந்திருக்கவில்லை. வாழ்வை அதன் போக்கிலேயே எழுத ஆரம்பித்தேன். பிறகுதான் தெரிந்தது அடடா, எப்பேறு பெற்ற உலகத்திற்குள் வந்திருக்கிறோம் என்று...

பாடங்கள் தவிர்த்து நான் படித்த முதல்புத்தகம் ''சின்னக் குறிப்பிடம்'' என்று ஞாபகம். பத்துக் கட்டளைகள், பர, பிரி, திரி மந்திரங்கள் போன்றவைதான் இருக்கும். நான் ஆறாவது படிக்கும்போதே பெரியப்பா சூசை வீரச்சந்திரா (அப்பாவின் அண்ணன்) கோவிலில் உபதேசியாராக இருந்தவர். நவம்பர் மாதம் ஆத்துமாக்களின் மாதம் என்பதால் கோவிலில் இரவு ஜெபத்திற்கு பிறகு ''ஆத்ம தாகம்'' என்ற புத்தகத்தைக் கொடுத்து சத்தமாக வாசிக்கச் சொல்வார். இறந்துபோன நல்ல ஆத்மாக்கள் நடப்புலகில் வந்து இங்கு இருப்பவர்களுக்கு உதவுவது பற்றியதான நிகழ்வுகள் அந்தப் புத்தகத்தில் இருக்கும். வாசித்தபின் இரவில் இருட்டில் வீட்டிற்கு நடந்து போவதற்கே பயமாக இக்கும். அதே காலத்தில் தான் நண்பன் மோகனரூபன்

கொழும்பில் இருந்து சொந்த ஊர் உவரிக்கு வந்திருந்தான். இனியும் சிங்களர்களோடு வாழ முடியாது என்று அவனது தந்தையார் முடிவெடுத்து பொருள்தேடும் நோக்கில் முப்பது வருடங்களுக்கு மேலாக வாழ்ந்த கொழும்பு நகரத்தைப் பிரிய முடியாமல் பிரிந்து வந்திருக்கிறார்கள். நடை, உடை, பாவனை பேச்சு எல்லாமே வித்தியாசமாக இருக்கும். எழுதும் தமிழில் அவன் எழில் கொஞ்சிப் போவதும் கதை சொல்வதும் எப்போதும் கேட்டுக்கொண்டே இருக்கலாம் போலிருக்கும். இவன்தான் எனக்கு இரும்புக்கை மாயாவியையும், அம்புலி மாமாவையும் அறிமுகம் செய்து வைத்தவன். தினத்தந்தியில் வரும் கன்னித்தீவு கதையில் எனக்கு ஒரு லயிப்பை ஏற்படுத்தி ஐயையோ அந்தப் பூதம் சிந்துபாத்தைக் கொன்றுவிடுமோ என்று பதைபதைப்புடன் ஒவ்வொரு நாளும் தினத்தந்தியைப் படிக்க வைத்தவன் மோகன். அக்பர்-பீர்பால், விக்கிரமாதித்தன்-வேதாளம் என நிறைய குட்டிக்கதைகள் சொல்வான். கொழும்பு மிட்டாய், கொழும்புச் சட்டை, கொழும்புப் போனா போல கொழும்புக் கதைகளும் எனக்கு மிகவும் பிடிக்கும்.

ஆரம்பப் பள்ளியில் படிக்கும்போதே மரியசிலுவை டீச்சர் கதை சொல்ல ஆரம்பித்தால் அது முழுக்க முழுக்க புனிதர்கள் பற்றி நீதிபோதனைக் கதைகளாகவே இருக்கும். அந்தோணியார் மீன்களுக்குப் போதித்தது, அகுஸ்தினார் மெய்யறிவு பெற்றது, அசிசியார் இறைவா நான் உன் கருவி என்றது, சவேரியார் பாரிஸ் பல்கலைக்கழகம் துறந்து இங்கு கார்மணம் கடற்துறையில் வாழ்ந்து மக்கள் பணி செய்தது போன்றவற்றை கேட்டு மகிழ்ந்திருக்கிறேன். கோவிலில் பீடப்பரிசாரகனாய் இருந்த காலங்களில் பலிபூசை வேளையில் சின்னப்பர், எபேசியர்கள், ரோமர்களுக்கு எழுதிய கடிதங்களை வாசகமாய் வாசித்திருக்கிறேன். பள்ளித் தோழனாய் வாய்த்து இன்றுவரை நண்பனாய்த் தொடரும் சார்லஸ் எம்.ஜி.ஆர். படம் பார்த்து வந்து "எழுத்துப் போட்ட உடனே...." என்று ஆரம்பிப்பான். இப்படியாக ஆரம்பித்த என் கதை கேட்கும் ஆவல், என்னைக் கடற்கரைக்கும் கூட்டி வந்தது. பொடிசுகள் கரையில் அமர்ந்தபடியே கடலில் செல்லும் கட்டுமரங்கள் பற்றி ஏல் சொல்லுவார்கள். நல்ல கூதல் காற்றில் ஒரு சாரத்தை உடுத்திக் கொண்டு காற்றுக்கு வாகாக அமர்ந்து மடக்கலப்பிள்ளை தாத்தாவிடம் கதை கேட்டிருந்தான். "சாணக்காரன் ஜேம்ஸ் வேலெடுத்துப் பாய்ந்தால் எதிரே நிக்கிற கூட்டம் ரெண்டா பொளந்துரும்". 'காத்து மாறப்போறது தெரியாம மாசலத்துள எங்க மேலத் தூவுனானுவ, பொறவு கண் எரிய பூட்டுக்கால் புடுச்சு தேரிக்காட்டுல ஊடுனதப் பாக்கனும்," பரத பாண்டியாபதிகளின் வீரதீரங்கள், பாண்டியாதிபதியின் கப்பல்களைப் பார்த்து பயந்த கடற்கொள்ளையர்கள், கடல் மேல் நடக்கும் பங்காளிச் சண்டைகள், மீன் வேட்டைகள், இப்படியாகத் தொடரும். பண்டித ரூபின் வர்மாவையும், அந்தோணிக் குட்டி அண்ணாவியையும் இன்பக்கவிராயரையும் எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர் மடக்கலப்பிள்ளை தாத்தாதான். இது போல எத்தனையோ கவிராயர்கள் இருந்தும் நெய்தலின் வாழ்க்கை பெருமளவு பதிவு பெறாமல் போயிருக்கிறதே என்றால் காரணம் எல்லோரும் மதமயக்கத்தில் இருந்ததால்தான். ஆன்மீகம் வேறு, சமூகம் வேறு என்று பிரித்துப்

பார்க்கத் தெரியாமல் கழிந்திருக்கிறது ஒரு காலக்கட்டம். இன்று நிலை மாறியிருக்கிறது. நெய்தலின் பிள்ளைகள் வாசிக்கிறார்கள். ஒரு வாழ்வு அனுபவத்தை வாசித்து உணரும்போதுதான் தனக்குக் கிடைத்த வாழ்வின் உன்னதம் புரிகிறது என்கிறான் மென்பொருள் நிறுவனத்தில் பணிபுரியும் இனம் தம்பி ஒருவன்.

விடுதியில் தங்கிப் படித்த காலத்தில் வரும் ஆத்தாவின் கடிதங்கள் எல்லாம் கட்டுரை வடிவிலேயே இருக்கக் கண்டிருக்கிறேன். ஒருவேளை எனது எழுத்து முயற்சியும் அதன் தொடர்ச்சியோ தெரியவில்லை. எனது தந்தையார் மிகப்பெரிய கதைசொல்லி. எந்தக் கப்பலில், எந்த நேரத்தில் எப்படிப்பட்ட பிரச்சினைகளை எதிர்கொண்டோம் என்று நண்பர்களோடு பேசிக்கொண்டிருப்பார். ''கிறிஸ்துமஸ் நேரம், ஜிப்ரால்டரிலிருந்து அமெரிக்கன் கோர்ஸ் புடுச்சா அட்லாண்டிக் கடல் பால் மாதிரிப் பொங்கி பொங்கி வரும், எப்ப என்ன நடக்குமோ தெரியாது'' வாழ்ந்த காலத்தில் அவர் எதிர் நின்று பேசவே பயம். சரி வாய்ப்பு வரும்போது கேட்டுக்கொள்ளலாம் என்றிருந்தால் அவர் வாழ்வே முடிந்து போனது என்னைப் பொறுத்தவரை மிகப் பெரிய இழப்பு.

இரவு நேரங்களில் பால் நிலவு காயும் வேளையாக இருந்தாலும், அம்மாவாசை இருட்டாக இருந்தாரும், வீட்டு முற்றத்தில் வேப்பமரதின் கீழே பெண்கள் கூடி கதை பேச ஆரம்பிப்பார்கள். வலைமால் முடித்தபடியும், ஓமல் இளைத்த படியும், வெற்றிலை இடித்தபடியும் பாட்டிமார், அத்தைமார் சொல்லும் கதைகள் விடியவிடிய தொடரும். ''ஒரே ஒரு ஓலத்தீ கூடிப்போச்சுக்கா, சவ்வு முட்டாய் இறுவி கல்லாயிப்போச்சி'', ''ரசத்த கொதிக்கவுட்டா நல்லாவாயிருக்கும்.

கல்லூரிக்காலத்தில் சாண்டில்யனும் கல்கியும் அருகில் வந்தார்கள். மு.மேத்தாவும் வைரமுத்துவும் வலம்புரி ஜானும் அறிமுகம் ஆனார்கள்.

வாலிபத்தில் விடுமுறைக் காலங்களில் ஊருக்கு வந்தால் நண்பர்களோடு செக்கலுக்கு சாளை வலை போடுவேன். ஆழி மேல் வரும் போது நெஞ்சப் பிடித்துக் கொண்டு வருவோம். அப்போது முந்தின வாரம் கடலடியில் உருண்டு கிடந்த கதைகளை தாழையான் சந்தியா கூறக் கேட்டிருக்கிறேன். லயோலாக் கல்லூரியில் படிக்கும்போது கலீல் ஜிப்ரான், ராபர்ட் பிராஸ்ட் போன்றவர்கள் படிக்க கிடைத்தார்கள். எம்.பில் ஆய்வுக்காக கடற்கரை ஊர்களில் சுற்றித்தரிந்த போது ''அம்பா பாடல்கள்'' அறிமுகமானது. கடந்கரையின் அளப்பரிய சொத்து இந்த அம்பா பாடல்கள் அறிமுகமானது.

இன்று சுகதேவ் என்று அறியப்படும் இளையபெருமாள் சூளைமேடு கோபால் நிவாசில் தங்கி இருந்த காலத்தில் பாரதி பற்றிய பெரிய தாக்கத்தையே என்னுள் ஏற்படுத்தினார். பின்னாளில் தினமணியின் வணிகமணியில் ''தள்ளாடும் தோணித் தொழில்'' என்ற தலைப்பில் எழுத வைத்து அழகு பார்த்தார். நண்பர் பெரியகுளம் முருகானந்தம் அறிவொளி இயக்கத்தை எனக்கு அறிமுகம் செய்து என்னைக்

கட்டுரைகளை எழுதவைத்தார். இப்படியாக கழிந்த வாழ்க்கையில் வேலை என்று வந்தபோது படிப்பே நின்றுபோனது.

சரி, வசந்த குமார் சொல்கிறாரே, வாழ்வை எழுதித்தான் பார்ப்போமே என்று எழுத ஆரம்பித்தால் அருவி போல் கொட்டியது நெய்தலின் வாழ்வு. நான் ரசித்த, ருசித்த, வெறுத்த, பயந்த, பிரமித்த நெய்தலின் ஆளுமைகள், வாழ்வின் நிகழ்வுகள், கொண்டாட்டங்கள், கொடுமைகள், மனித நாடகங்கள் எல்லாம் மனக்கண் முன்னே வந்து நிழலாடின. எந்த அளவிற்கு என் நிலத்து மக்களை நான் நேசித்திருக்கிறேன் என்று எனக்கே தெரிய ஆரம்பித்தது.

உடலுக்குள் ஏதோ ஒரு சக்தி புகுந்துகொண்டு என்னை ஆட்டிப்படைத்து. 'வேள்வி, எழுத்து வேள்வி'. 'வெறி, அடங்காப் பெருவெறி' என்னுள். உண்ண, உறங்க, நிற்க, நடக்க நேரமில்லாமல் அலைந்தேன். நார்னியாவின் குழந்தைகள ஒரு புது உலகத்துக்குள் நுழைந்ததும் கூத்தாடிக் குதூகலித்தார்களே அது போல எழுத்து என் ஆன்மாவிற்கு வெகு நேசமாய் இருந்தது. மனம் ஆனந்தக் கூத்தாடியது. எழுதும் வேளைகள் மகிழ்வாயும், மனநிறைவாயும் இருந்தது. மனதில் பொங்கிப் பொங்கிப் அனைத்தையும் காகிதத்தில் வடித்து எடுத்துவிட வேண்டும் என்ற அடங்காப் பெருவெறி என்னை ஆக்கிரமித்திருந்தது. அடைகாக்கும் தாய்க்கோழியானது சிறிது நேரமேனும் இரை தேடவாவது தான் அடைகாக்கும் முட்டைகளை பிரிந்து மீளும். ஆனால் நான் என் எழுத்துப் பிரதியை பிரிந்து இருந்ததாய் எனக்கு நினைவே இல்லை. கங்காரு தன் குட்டியை சுமந்து கொண்டு திரிவது போல ஆழி சூழ் உலகின் பிரதியை பிரிய மனமில்லாமல் சுமந்து கொண்டே திரிந்தேன். பணமோ, பொருளோ அதன் முன எனக்கு ஒரு பொருட்டாய்த் தெரியவேயில்லை என்னைப் பொறுத்தவரையிலும் அதை நான் உயிரினும் மேலாக பேணிக் காத்தாக வேண்டும். விமான நிலையமோ, பேருந்து நிலையமோ ரயில் நிலையமோ, துறைமுகமே, பணியிடமோ, படுக்கையறையோ எப்போதும் அது என்னுடனே. மனைவியிடமும். பிள்ளைகளிடமும் பேசுவதைக் கூடத் தவிர்த்திருந்தேன். என் சிந்தனை, சொல், செயல் எல்லாமே எழுத்து என்றாகியிருந்தது. திரும்பத்திரும்ப அதைப் படித்துச் செழுமைப்படுத்தும்போது பேரானந்தமாயிருந்தது. குடும்பச் சிலுவையையும் சுமந்து கொண்டு எழுத்தையும் உடன் சுமப்பது ஆனந்த அனுபவம். எழுதிக் கொண்டிருந்த இரவுகளில் வீடே அதிரும்படி சிரித்ததாயும், அழுததாயும், மேசையை ஓங்கி ஓங்கி கையால் குத்தியதாயும், மனைவி சொன்னாள்.

என் முதல் நாவல் வெளிவந்து அதன் முதல் பிரதியைப் பார்த்தபொழுது, அதற்கு முன் இருந்த எல்லா வலியும் காணாமல் பஞ்சாய்ப்பறந்து போயிற்று. இதன் வெளியீட்டு விழா தூத்துக்குடியில் நடைபெற்றது. வெளியீட்டு விழாவில் எழுத்தாளர் ச.தமிழ்ச்செல்வன் உட்பட பலர் கலந்து கொண்டு பேசினார்கள். அவர் அப்போது விழாவில் என்னைப் பார்த்து "நண்பா உன்னை கதையுலகம் இருகரம் விரித்து வரவேற்கிறது" என்றார்.

எழுத்தாளனாக ஆகியே தீரவேண்டும் என்ற குறிக்கோளோடு வந்தவனல்ல நான். ஆனால் காலம் என்னை எழுதுபவனாகவே முன்னிறுத்தியிருக்கறிது. என் உறவுகளுக்கு ஏனோ நான் எழுதுபவனாக இருப்பதில் உடன்பாடு இல்லை. எப்போதுமே ஒரு எக்காளம், எகதாளம், கிண்டல், கிருச்சாட்டியம்... ''வேல பார்த்தியா நாலு காசு சம்பாதிச்சியான்னு இருக்கிறத வுட்டுட்டு எழுதி சமூக புரட்சி பன்றானாம் வெறும்பய'' என்று என் காதுபடக் கூறியிருக்கிறார்கள். ''அவம் சமூகத்த வித்துத் தின்னுகிட்டுருக்காம்'' என்கிறார்கள் சிலர். ஆனால் இந்த முதல் பிரவேசம் பா.ரா., நா.வே அருள், கிருபானந்தசாமி, ஜெயராமன், இரா.தெ.முத்து. வ.கீதா. கவிஞர் குட்டி ரேவதி, தி.பரமேஸ்வரி, பிரான்ஸிஸ் ஜெயபதி, கவிஞர் பீரமணி, பேரா.முத்துகுணசேகரன், ஜஸ்டின் திவாகர் போன்ற நண்பர் குழாமைத் தந்திருக்கிறது. அது உள்ளத்துக்கும் உவகையூட்டுவதாயிருக்கறது. ஆனால் எது எப்படியோ என்னைப் பொறுத்தவரை புலி வாலைப் பிடித்தாயிற்று.[36]

சுட்ட கருவாடு சுண்ட வைத்த மீனு....

வழக்கம் போலவே இந்தக் கோடையிலும் சென்னையில் நல்ல சூடு. கோடை மழை வந்து சூட்டைத் தணிக்காதா என எதிர்பார்த்துப் பார்த்து ஏமாற்று போய் நின்ற போது வங்கக் கடலில் 'லைலா' புயல் உருவாகி அதன் புண்ணியத்தில் ஊரெங்கும் நல்ல மழை. அதிகாலையிலேயே அலுலவகத்திலிருந்து அலைபேசியில் அவரச அழைப்பு வந்ததால் காலை உணவு உட்கொள்ளக் கூட அவகாசம் கிடைக்கவில்லை. துறைமுகத்தில் கட்டியிருந்த கப்பல்களின் கயிறுகள் பேயாய் வந்து மோதிய காற்றில் முறுகி, இழுபட்டு தெறித்துவிட்டனவாம். வருவதற்கும் மதியச் சாப்பாட்டு வேளை நெருங்குவதற்கும் நேரம் சரியாய் இருந்தது. மதிய உணவிற்காக வீட்டிற்கு புறப்பட்டேன். கடற்கரைச் சாலையிலேயே முட்டளவு தண்ணீர். நகரின் மத்தியில், அதுவும் கடற்கரைக்கு அருகாமையில்கூட வடிகால் வசதி சரியாய் செயல்படவில்லையே என்ற வருத்தம் ஒருபுறமிருந்தாலும் கோடையில் பரிசாய் கிடைத்த இந்த புயல் மழையால் நிலத்தடி நீர்வளம் பெருகுமே என்ற எண்ணம் மனதுக்கு மகிழ்ச்சியையே தந்தது. வானமெங்கும் இருள் கெட்டி விடாத அடை மழை, குளிரில் கை கால்கள் எல்லாம் கொடுவிப் போய்விட்டன. நல்ல பிச, ஆனால் மனமோ கருவாட்டுக் குழம்புக்காக ஏங்கியது. அது என்னவோ தெரியவில்லை மழை காலமானால் மனம் கருவாட்டுக் குழம்பைத் தேடிவிடுகிறது.

ராயபுரத்தில், வெங்கடேசன் தெருவில் முதல் மாடியில் வீடு. என்ன ஆச்சரியம்...! படிக்கட்டில் கால் வைத்ததுமே கருவாட்டுக் குழம்பின் சுகந்த மணம் மூக்கைத் துளைத்தது. என் எண்ணவோட்டத்தை டெலிபதியில் புரிந்து கொண்டாளோ என்னவோ, ''என்னங்க மழையா... வெளியே போக முடியல, கருவாட்டுக் குழம்புதாம் வச்சம்'' என்றாள் மனைவி. புன்சிரிப்போடு உள்ளே வந்தேன். ஊர்ப்பக்கங்களில் தொடர் மழை காலங்களில் மீன் பிடிக்கக் கடலுக்குச் செல்ல முடியாததால் பரணில் பாதுகாக்கப்பட்ட கருவாடுகள் சமையற்கட்டிற்குள் வரும். சிறு வயது முதலே

பழக்கப்பட்டு போனதால் மழைகாலமானதால் மனசு கருவாட்டுக் குழம்பையே தேடுகிறது. பசியில் அரக்க, பரக்க சாப்பிட அமர்ந்தால் கொதிக்க கொதிக்க சாதத்தில் குழம்பை ஊற்றினாள் என் மனைவி. நல்ல வாளைக் கருவாடு, உருளைக்கிழங்கும், கத்தரிக்காயும் நறுக்கிப் போட்டு காரசாரமாய் குழம்பு வைத்திருந்தாள். பசி பறந்த இடம் தெரியவில்லை. பக்கத்திலேயே முந்தின நாள் வைத்த கறி குழம்பு இருந்தது, நான் சீண்டவேயில்லை. சுடச் சுட கறிக்குழம்பு சாப்பிடும் போது மீன் குழம்பைக் கண்டால் மீன் குழம்புக்கு ஆசைப்படும் மனது கருவாட்டுக் குழம்பைக் கண்டுவிட்டாலோ மீனிலிருந்து கருவாட்டுக்குத் தாவிவிடுகிறது. நான்கு நிமிடங்களில் சாப்பிட்டுவிட்டு எழுந்தேன் புறங்கையை நக்கியவாறே...

மீன் கிடைக்காத நாட்களில் சமைப்பதற்காக வீட்டில் எப்போதுமே கருவாடு கைவசம் இருப்பு உண்டு. கருவாட்டில் ருசியே சீலாதான். சென்னையில் இதற்கு வஞ்சிரம் என்று பெயர். சின்ன மீன் கருவாடுகளில் எனக்குப் பிடித்தது காரலும், ஓட்டாம் பாறையும். கடற்கரை ஊரைவிட்டே அதிகம் வெளியே வராத என் உறவினர் ஒருவருக்கு நகர்ப்புறத்தில் பெரிய பெரிய அதிகாரிமாரோடு தொடர்பு இருந்தது எல்லாமே சீலாமீன் கருவாடு செய்த புண்ணியம்.

சிறு பிராயத்திலிருந்தே சாப்பாட்டில் எனக்கு அதிக அக்கறையுண்டு. ஆனாலும் உவரியில் ஆத்தா கைப் பக்குவமாய் இடித்து தரும் மாசிச் சம்பலையும், இடியாப்பத்தையும் இன்று நினைத்தாலும் அடிநாக்கில் எச்சில் ஊறுகிறது. மாசி என்பது சுக்காய் காய்ந்து பக்குவப்படுத்தப்பட்ட சூரை மீன். வழக்கமான கருவாட்டு நாற்றமில்லாத மீன் வகை. பலசரக்கு கடைகளிலும் கிடைக்கும். சம்பலுக்கு ருசி கொடுப்பதே இந்த மாசிமீன்தான். நமது பக்கங்களில் சூரை மீனை கறிக் குழம்பு பக்குவத்திலும் சமைக்கிறார்கள். ஆனாலும் மாசியாய் ருசிப்பது மாலத்தீவு மீன்தான். அந்தக் காலத்தில் மாலத்தீவின் பொருளாதாரமே சூரை மீன் பிடிப்படிதிலும் அதை பக்குவப்படுத்துவதிலும் அதன் ஏற்றுமதியிலே இருந்திருக்கிறது. இன்று மாலத்தீவின் பொருளாதாரமே சுற்றுலாவை மையமாக வைத்து இயங்கினாலும், அரசின் அன்பும் ஆதரவும் மீனவர் வாழ்வில் தொடர்ந்து வளமை சேர்க்கிறது.

நிலத்திற்குத் தகுந்தாற்போல் தமிழரின் உணவு வகைகள். நெய்தலின் உணவுப் பழக்கங்களும் அதுபோலவே. கடற்கரையில் வாழ்ந்த மீனவர்களுக்கு அரிசி, கம்பு, சோளம் போன்ற தானிய வகைகளை மேட்டு நிலத்தில் வாழ்ந்தவர்கள் கொடுத்திருக்க வேண்டும். பண்ட மாற்றாக இவர்கள் மீன்களையும், உப்பையும் கொடுத்திருக்கலாம். வேர்ப் பஞ்சம் நடந்ததாகச் சொல்லப்படும் காலத்தில் கூட கடற்கரையில் வாழைக் குத்தியை அவித்து திருக்கை கருவாடு கூட்டிச் சாப்பிட்டார்களாம். சாப்பாட்டு விசயத்தில் வஞ்சகமே இல்லாமல் சாப்பிடுவது நெய்தல் மக்களின் வழக்கம். அவியல், கறியல், பொரியல் என்று அமர்க்களப்படும் எல்லா வகைச் சமையலுமே மீன் உணவு சார்ந்தவையே. அசைவ உணவு வகையில் மீன் உணவு தவிர்த்தால் ஆட்டுக் கறியும், கோழியும் தான் நினைவிற்கு வருகிறது. பெரும்பாலும் காய்கறிகளை இவர்கள் கண்டு கொள்வதில்லை. மீன் இல்லாத

நாள்களில் தப்பித்தவறி காய்கறிக் குழம்போ அல்லது சாம்பாரோ வைத்து விட்டால் காதுப் பக்கம் நின்ற யாரோ ஊளையிடுவது போலிருக்கிறது. அந்தக்காலத்தில் கோடையில் கடற்கரை மணலில் வளரும் உமரிக் கீரையை சமைத்துச் சாப்பிட்டிருக்கிறார்கள். எனக்கு விபரம் தெரிய எங்கள் வீட்டுக்குள் குசுனியில் அங்களம் வகித்தது முருங்கை. காயாகவோ, கீரையாகவோ நெய்தல் மக்கள் முருங்கையை விரும்பிச் சாப்பிடுவார்கள். மீன் குழம்பில் ருசியை கூட்டி புலால் வாடையைத் தவிர்ப்பதற்காக முருங்கைக் காயோ, கத்தரிக் காயோ சேர்த்துச் சமைக்கிறார்கள் எம் வீட்டுப் பெண்கள்.

மற்றபடி அந்தக் காலத்தில் சாப்பிட்டவை என்றால் உடனே நினைவில் பனங்கிழங்கு. தேரிக்காட்டில் பிடிங்கிக் கொண்டு வந்த பனங்கிழங்குகளை ஆத்தா அவித்துக் கொட்டியதுமே ஆவி பரக்க சாப்பிட்டது போக மீதியானவை கூரை மேல் காயப்போய்விடும். சில நாள்கள் கழிந்து சுக்காய் காய்ந்து போன கிழங்குகளை எடுத்து வந்து பக்குவமாய் முறித்து சீரகம், சுட்ட வத்தல், உப்பு வைத்து இடித்து உருண்டை பிடித்து தருவார்கள். இரண்டு உருண்டை சாப்பிட்டாலே போதுமென்றிருக்கும். அதுபோலவே தவிடும் கருப்பட்டிக்கட்டியும், எள்ளும் கருப்புக் கட்டியும், கஞ்சியும் காணத்துவையலும்... நல்ல வலுவான உணவு வகைகள்.

சிறு பிள்ளைகளாய் இருந்த காலத்தில் செட்டியான் தொம்மாந்திரைத் தாத்தா சாப்பிட அமர்ந்தால் அக்காவும் நானும் பக்கத்தில் போய் அமர்ந்து விடுவோம். சட்டியில் சோறு போட்டு பாறைமீன் குழம்பு மீன் ஊற்றிப் பிசைந்து 'பீம கவளம்' உருட்டித் தருவார். ஒரு கவளத்திலேயே வயிறு முட்டிப் போனதுண்டு. அண்மையில் நாகர்கோவிலில் நண்பர் ஜஸ்டின் திவாகர் இல்லத்திற்கு சென்றிருந்தேன். அவர் மனைவி புன்னைக்காயல் வாரிசாம், மதியச் சாப்பாட்டு நேரம் நெருங்கியபடியிருந்தது. தயக்கத்தோடு அருகே வந்தவர் ''சாப்புடுறீங்களா'' என்றார். என்ன தயக்கம் என்று விசாரித்ததில் ''மசாலாச்சோறு'' செய்திருப்பதாகச் சொன்னார். அந்த கணமே எனக்கு மூளையில் பொறி தட்டியது இது மிளகுச்சோறாகத்தான் இருக்க வேண்டுமென... நவீன உலகில் மறக்கப்பட்ட உணவு வகை. எங்கள் ஊர்ப் பக்கங்களில் இதற்கு 'முளவுச்சோறு' என்று பெயர். சாதத்தில் கஞ்சி வடிப்பதேயில்லை அப்படியே குழைய விட்டு விடுவார்கள். அதனால்தான் என்னவோ இதற்கு 'கொழையச்சோறு' என்றும் பெயர். சாதம் பொங்கி வரும்போது தேவையான மசாலை, கருவாடு, முருங்கைக்கீரை இத்தியாதிகளை போட்டு கடைந்து கொண்டு வந்து வைப்பார்கள். கருவாட்டிலும் அரைவேக்காட்டிலிருக்கும் ஊரைக் கருவாடுதான் விஷேசம், ஆனால் முள் பார்த்துச் சாப்பிட வேண்டும். முளவுசோறுக்குக் கடிக்க கருப்பட்டி அவசியம். ருசி மாற்றம் கொடுத்து அதிகமாய் சாப்பிட வைக்கவும், சாப்பிட்ட உணவு செரிமானமாவதற்கும் கருப்பட்டி.

நெல்லை மாவட்டக் கடற்கரையில் அவியல் சிறப்பு. சிறிது மஞ்சள், கொஞ்சம் தேங்காய் சீரகம் அம்மியில் வைத்து அரைத்து, இரண்டு பச்ச மிளகாயைக் கீறிப்

போட்டு, நாலைந்து கறிவேப்பிலை, உப்பு, புளித்தண்ணீர... கொதித்துவரும் போது கழுவிச் சுத்தமாக்கிய நெய்க்காரல் மீன் துண்டுகளைப் போட்டு மூன்று, நான்கு கொதியில் இறக்கிவிடுவார்கள். ருசிக்காக ஒன்றிரண்டு தக்காளிப் பழங்களும் சேர்த்துக் கொள்ளலாம். இன்று நினைத்தாலும் வாயில் எச்சில் ஊறுகிறது. பாம்பன் கடற்கறையில் இதற்கு 'புளிலாத்தண்ணி' என்று பெயர். கைக்குத்தல் அரிசிச்சோற்றில் வைக்கும் பழங்கஞ்சிக்கும். முளாமீன் அவியலுக்கும் கொண்டுவா, கொண்டுவா என்றிருக்கும். நாஞ்சிலில் அதே அவியலுக்கு 'மஞ்சத்தண்ணி' என்று பெயர். பாம்பனில் அண்ணன் ராயப்பன் வீட்டிற்கு போனால் காலையானல் புளிலாத் தண்ணியும் கஞ்சியும் தூத்துக்குடி மேசைக்காரர்களோ இதே அவியலை 'பாலாணம்' என்ற பெயரோடு சாப்பிடுகிறார்கள். அவியலில் எல்லா மீன்களும் ருசிப்பதில்லை. பதமான வெள்ளை வாவல், நெய்க்காரல், பாம்பன் தென் கடலில் கிடைக்கும் மாமியாப் பாறை போன்றவை எவ்வளவு சாப்பிடடாலும் திகட்டுவதேயில்லை. பெரும்பாலும் குழம்பில் ருசிப்பவை சாளை, வாலை, பொடி மீனகள். முள் அதிகமுள்ள மீன்களும் ருசியானவையே.

இரவு சாப்பிட்டுவிட்டுப் படுத்துத் தூங்கியவர்கள் கூட செக்கலுக்கு வலைபோய் கொண்டு வரும் கானங்கொழுத்தி, அயரை, சீடை மீன்களை துடிக்க துடிக்க அரிந்து அவியல் வைத்துக் கொடுத்தால் அடித்துப் பொறண்டு எழுந்து சாப்பிடுவார்கள். தெற்கு கடற்கரைப் பக்கம் பாறைமேல் குத்துவலை வத்து வரும்போது கிடைக்கும் மதனம் போன்ற மீன்களையும் எந்த இரவானாலும் சாப்பிடுவார்கள். சென்னை, பாண்டிச்சேரி, நாகப்பட்டிணம் பக்கம் மற்றொரு பக்குவம் சொல்கிறார்கள். காய்ந்த மிளகாவையும், தேங்காயையும் அம்மியில் வைத்து அரைத்து, உப்பும் தண்ணீரம் சேர்த்து மீனைக் கொதிக்க வைத்து இறக்கினால் அதற்கு 'சுண்டவைத்த மீன்' என்று பெயர். ருசியில் நாக்கு மேல் தாடையோடு ஒட்டிக் கொள்கிறது. நெல்லை, தூத்துக்குடி பகுதிகளைப் போலல்லாமல் சென்னை, பாண்டிச்சேரி, நாகப்பட்டிணம் பகுதிகளில் மீன் குழம்புக்கு தேங்காய் விடுவதில்லை. மாங்காய் போட்டுக் 'கவலைமீன்' குழம்பு வைக்கிறார்கள். "மாதா ஊட்டாத சாதத்த மாங்கா ஊட்டும்" என்ற வாய்மொழியோடு... சென்னை அயோத்திக் குப்பத்தில் 'தீயசோறு' விஷேசம். இரவில் மீதியான சாதத்தை மீன் குழம்பு ஊற்றி அடுப்புத் தணலில் போட்டுவிடுவார்கள். தணலில் நன்றாக வெடித்த சாதம் மறுநாள் சாப்பிடுவதற்கு தேவாமிர்தம் போலிருக்குமாம்.

நாஞ்சிலில் நல்ல வெடித்த கப்பக் கிழங்குக் காரமாய் நெத்திலி மீன் குழம்பு வைத்துச் சாப்பிட்டிருக்கிறேன். அந்தப்ப பக்கம் பாறைகளில் தோடு கிடைக்கும். குறுமபனை பெர்லினோடு அவித்த தோடும் மரவள்ளிக்கிழங்கும் சாப்பிட்டிருக்கிறேன். இரண்டுக்கும் அப்படியொரு ருசியான பொருத்தம். தூத்துக்குடிப் பக்கம் நல்ல சங்குவாயன் திருக்கை மீனை கறிக்குழம்பு மசாலை போட்டுச் சமைப்பார்கள். எங்க அய்யாவுக்கு திருக்கை மீன் குழம்பை மறுசட்டி வைத்தே ஆக வேண்டும், அதாவது தாளிசம் பண்ணவேண்டும. மூக்கை உறிந்து சாப்பிடுவார். சாப்பிடும் மீன்களை

வைத்தே மனிதர்களைத் தராதரம் பார்க்கும் வழக்கமும் கடற்கரையிலிருந்திருக்கிறது. கெழுது, சுறா, அடல் போன்ற மீன்களை சிலர் சாப்பிடுவதேயில்லை. குமட்டும் நாற்றத்திற்காக கெழது மீன் சாப்பிடாதவர்கள் சுட அதன் முட்டையை ஆவலாய் சாப்பிடுகிறார்கள். ''ஆம திங்கிற பெயல்வ'' என்று கடற்கரையில் எக்காளமாய் பேசுவார்கள். ஆனால் ஆமைக்கறியோ குளிர்ச்சியான உணவு. எல்லா ஆமைகளும் சாப்பிடத்தக்கவை அல்ல, எலிமூஞ்சி ஆமை போன்றவை மிகவும் விஷத்தன்மை கொண்டது. இன்று ஆமை அழியக்கூடிய இனமாய் அறிவிக்கப்பட்டிருப்பதால் ஆமை பிடிப்பதும் உண்பதும் தடை செய்யபட்டடிருக்கிறது. உருண்டு நீளமாய் பாம்புபோலிருக்கும் மாவளா மீனைக் கண்டாலே எனக்கு ஆகாது. ஆனால் மாவளாவோ மிக ருசியான மீன் வகை, குழம்பாகவோ, வறுத்தோ சாப்பிடலாம். இன்று ருசித்துச் சாப்பிடப்படும் எறா, கடமா போன்ற மீன்களை அந்தக் காலத்தில் சூடு என்று ஒதுக்கியிருக்கிறார்கள். சென்னை வந்தபிறகு தான் கடமா சாப்பிட ஆரம்பித்தேன். உவரிப் பக்கம் இதற்கு 'கணவா' என்று பெயர். பொடிப் பொடியாய் அரிந்து வறுத்துப் சாப்பிடலாம், அல்லது சுண்ட வைத்தும் சாப்பிடலாம். கடமா கருவாடும் நாக்கில் எச்சில் ஊற வைப்பதே.

எந்த ருசியில்லாத சாதத்தையும் ஒரு சாதாரண ஓட்டம் பாறைக் கருவாடு ஊட்டிவிடும். புளியோதரையும் வறுத்த நெத்திலிக் கருவாடும், சுட்ட காரப்பொடியும் இல்லாமல் மூக்கையூர்க்காரர்கள் வாடிப்பட்டி திருவிழாவுக்கு கிளம்புவதேயில்லையாம். அலைவாய்க் கரையில் அலைகள் கரையில் மோதித் திரும்பும் வேளையில் சிறுவாகள் மணலோடு கொறிப் பிடிக்கும் ஆமைப் பூச்சிகளை தீயில் வாட்டிச் சாப்பிடலாம் அல்லது அம்மியில் வைத்து அரைத்து அவித்து முட்டை எடுத்து கத்திரிக்காயும் தேவையான மசாலையும் போட்டுப் பொறித்துச் சாப்பிடலாம். நாகப்பட்டினம், பாண்டிச்சேரிப் பக்கம் கோலாமீன் உருண்டையும், தித்திப்பு மீனும் விஷேசம். தென் மாவட்டங்களில் எறா மீன் கிடைக்கும். வங்காள பிராமணர்கள் மீன்களை 'கடல் புஷ்பங்கள்' என்று உணர்கிறார்களாம்.

மாலத் தீவு உணவு விடுதிகளில் எந்த ஒரு உணவை ஆர்டர் செய்தாலும் அந்த உணவில் மீன் இருக்கிறதாம். கேரளாவில் தலைச்சேரியில் திருமண விழாக்களில் திருக்கைக் கறி விசேஷம். பனங்கள்ளுக்கு மிக ருசியான துணை உணவு திருக்கை குடல் வறுவல், சுட்டமீனும் சுவையானதே. புட்டு என்றால் அதில் கருவாளை மீன் புட்டுதான் ருசி, சுறாமீனில் செய்யும் புட்டு அதன்பிறகுதான்.

தூத்துக்குடி திரேஸ்புரத்தில் சங்குச்சதை கிடைக்கும். அவித்து அரிந்து உலரவைத்துக் கொடுப்பார்கள். ஒருவகையான அசைவ அப்பளம். இப்போதெல்லாம் பெரும்பாலும் ஏற்றுமதியாவதாகச் சொல்கிறார்கள். கொழும்புக்காரர்கள் காலையில் ஆப்பம் சாப்பிடும்போது கூடவே கருவாடும் சேர்த்துக் கொள்கிறார்கள். பம்பாய் பப்ளிமாஸ் கருவாடு, நாற்றத்தில் ஊரைக் கூட்டினாலும் வாயில் வைத்தால் ருசியோ ருசி. அந்தக்காலத்து வேளா முட்டைப் பணியாரத்தை இன்று நினைத்தாலும் வாயில்

எச்சில் ஊறுகிறது. வேளா ஒரு வகை சுறாமீன், உவரியில் பெண் வேளாமீன் பிடித்த வலைக்காரர் கிடைக்கும் முட்டையைப் பணியாரம் செய்து அதை ஊரில் எல்லோருக்கும் நண்பர், பகைவர் பாகுபாடின்றி வழங்க வேண்டும். சுயதொழில் செய்பவர்களாய் இருந்தாலும் விசேஷ குணமான விருந்தோம்பலை அதன் தரம் குறையாமல் இன்றும் கடற்கரை ஊர்களில் பார்க்கலாம்.

உலர்ந்த எறாக்குஞ்சுகளை சிறிது மசாலையோடு சேர்த்து பொடி பண்ணினால் அதற்கு 'சென்னாகூனி' பொடி என்று பெயர். இட்டிலிக்கு தொட்டுக்கொள்ள பிரமாதமாக இருக்கும். குழந்தை பெற்றவளுக்கு பால் சுரக்க பிள்ளைச்சுறா, நெஞ்சில் சளி மிஞ்சிப்போனால் காரல் மீன் சூப், எறா சூப். மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் மீன்தலை சூப்புக்கென்றே தனி உணவு விடுதி இருப்பதாய்ச் சொல்கிறார்கள். பாம்பன் கடற்கரையில் 'கிளைக்கான்' மீனைக் கண்டுவிட்டாலோ சாச்சாமாருக்கு கொண்டாட்டம். முந்தானை முடிச்சி முருங்கைக்காய்க்கு ஒத்த பலமாகும். நரம்புகள் முருக்கேறி நல்ல தெம்பு கொடுக்குமாம். தூண்டில் மீன் தொழில் நடக்கும் காலங்களில் சீலாமீன் தலைக்கு ஆலாய் பறக்கும் புதுமாப்பிள்ளைகளைப் பார்த்திருக்கிறேன். மூலநோய்க்கு குளிர்ச்சியான சங்குச்சதையும், ஆமைக்கறியும் சிறந்த மருந்தாகும். காலில் வரும் வாதநோய்க்கு சிமிழி மீனை மிதித்தால் குணம் கிடைக்குமென்ற நம்பிக்கை கடற்கரைப் பெரியவர்களிடம் இருக்கிறது.

வாலிபத்தில் அலைவாய்க்கரையில் நண்பர்களோடு சேர்ந்து கட்டுமரங்களை பட்டறை ஏற்றி விட்டு வந்தால் குறைந்தது நான்கைந்து வறுத்த முழு மீன்கள் சாப்பிடுவேன். பெரும்பாலும் வாவலும், குதிப்பும், பன்னாவும் எனக்குப் பிடிக்கும். காற்றுக் கடலில் தனியாய் 'கோடா' வைத்துவிட்டு வரும் என் நண்பர்கள் அதிகமாய்ச் சாப்பிட்டிருக்கலாம். ஒத்தைக்கு ஒத்தை கோடா வைப்பவனுக்கு பெண் கொடுக்க கடற்கரையில் கடும் போட்டி இருந்தது. அந்தக் காலத்தில் கடினமான வேலை செய்தோம், பசி எடுத்தது, உண்ட உணவும், செரிமானமானது. இன்று பசி எடுப்பதற்கும் உண்ட உணவு செரிமானமாவதற்குமே மாத்திரைகள் சாப்பிட வேண்டியுள்ளது. சமீபத்தில் பரிசோதனைக்காக மருத்துவரிடம் சென்றபோது மாமிசமே ஆகாது என்றவர் மீன் சாப்பிடலாம் எவ்வளவு வேண்டுமானாலும் சாப்பிடலாம் என்றார். எந்த பக்க விளைவையும் ஏற்படுத்தாத பக்குவமான புரத உணவு மீன்.

சாமத்தில் எழுந்து வலை போவதற்காக கிளம்புறவர்களுக்கு அந்த நேரத்தில் வயிற்றுக்கு கிடைப்பது பழைய நீராகாரமும் ஒரு துண்டு கருப்பட்டியும் தான். மதிய வேளைகளில் கரை திரும்புபவர்களுக்கு சாதத்தில் வடித்த கஞ்சியை சுடச் சுடக் கொண்டுவந்து கடற்கரையிலேயே பசியாற்றுவார்கள் கரை திரும்புபவர்களும், பிற்பகலிலோ, அல்லது காலம் தப்பி சாப்பாட்டைத் தவிர்ப்பவர்கள் வலை போட்டுக் கிடக்கும்போது பசி தெரியாமல் இருப்பதற்காக வெற்றிலை பாக்கு போடுவார்கள். நாள்பட இந்த பழக்கம் கூடவே ஒட்டிக்கொண்டு தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

சுருட்டு புகைக்கும் பழக்கமும் இது போலவே கடலில் தூக்கத்தை தவிர்ப்பதற்காக அறிமுகமாகி பிறகு வாழ்நாள் முழுவதும் தவிர்க்க முடியாமல் தொடர்கிறது.

வடகடல் பகுதியில் கோலாமீன் பிடிக்கும் காலங்களிலும், தென் பகுதியில் தங்கி தொழில் செய்யும் காலங்களிலும் கஞ்சிக் கலையத்தைக் கூடவே எடுத்துச் செல்கிறார்கள். தெய்வத்திற்கு உண்டான மரியாதை இந்த கஞ்சிக் கலையத்திற்கு. அதுவும் கரைக்கறுப்பு தெரிந்த பிறகே இந்தக் கஞ்சிக் கலையத்தை தொட பெரியவர்களால் அனுமதிக்கப்படுகிறார்கள். புயல் மழை எடுத்து நிலைமை மோசமடையலாம். எல்லாச் செயல்பாடுகளும் நெய்தலின் அடி நாதமான நிலையாமை என்ற அச்சாரத்தை ஒட்டியே சுழல்கிறது.

அண்மையில் அண்ணாச்சி ஒருவரை ரயில் பயணத்தில் சந்தித்தேன், எலும்பும் தோலுமாக குன்னிப் போயிருந்தார். விழியாலே வினவியபோது சொன்னார். ‘‘அய்யா, சுகரு, கொழுப்பு எல்லா எழவும் இருக்குல்லா... டாக்டரப் போயி பாத்தா, கலோரி கிலோரின்னு பயங்காட்டுதாம். ஆதாம் தூத்துக்குடிப் போயும் ஆழ்வார் கட புரோட்டா திங்காம பூட்டுக் கால் புடிச்சாக்கும் ஓடியாந்தோம்’’. ‘நொருங்கத் தின்றால் நூறு வயதென்பது’ அந்தக் காலம், இன்று கோழி கொத்துவது போல் ஏதோ வெந்ததை சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம். எதை எடுத்தாலும் அந்த உணவில் கொலஸ்ட்ரால் எவ்வளவு, கலோரி எவ்வளவு என்று பார்த்து பார்த்து சாப்பிட்டு, சாப்பாட்டு வழக்கமும் இயந்திரமயமாகிக் கொண்டிருக்கிறது. அந்தக் காலத்தில் ஆசை, ஆசையாய் சாப்பிட்ட வெள்ளைக்குறிமீன், குதிப்பு போன்ற பல மீன்கள் இன்று இல்லாமலே போய்விட்டன. காரணம் தொலைநோக்குப் பார்வைற்ற நமது மீன் பிடிக்கொள்கை. எப்போதும் அரசையே குற்றம் சாட்டிக்கொண்டிருப்பதிலும் ஞாயமில்லை, இயற்கை வளங்களைப் பாதுகாப்பதில் அரசுக்கு இருக்க வேண்டிய அதே அக்கறை தனிமனிதர்களுக்கும் இருக்க வேண்டும்...!

இந்த நாற்பத்தி ஏழாவது வயதிலும் தயங்காமல் சொல்வேன், எனக்கு இன்றும் இயக்கம் தருவது இளமையில் ஆத்தா கைப்பக்குவத்தில் சாப்பிட்ட உணவு வகைகள்தான். வாரத்தில் ஆறு நாட்களும் மீன் குழம்புச் சாப்பாடு, ஏழாவது நாள் ஞாயிற்றுக்கிழமை கறிக் குழம்பு. எனக்கு விபரம் தெரியும்போதே கடற்கரையூர்களில் கைக்குத்தலரிசிச்சோறு சாப்பிடுவது நடைமுறையாகி இருந்தது. அய்யா காலத்திலெல்லாம் கம்பஞ்சோறும், கேழ்வரகுக்கூழும், சோளக் கஞ்சியும் சாப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அன்றிலிருந்து இன்றுவரை மாறாதது என்னவோ அந்த சுட்ட கருவாடும், சுண்டவைத்த மீனுந்தான்.[37]

ஊடுதாவு, நெடுந்தீவுச் சல்லி, வாடையக் குண்டு

எழுத்தாளர் ஜோ.டி.குருசை பற்றி தமிழக வாசகர்களுக்கு அறிமுகம் தேவையில்லை. இருப்பினும் அவர் ஒரு மீனவ படைப்பாளி என்பது பலருக்கும் தெரிந்திருக்காது. அவரின் உயிரோடு கலந்த படைப்பு ‘ஆழி சூழ் உலகு’ ஏற்படுத்திய

தாக்கம் இன்னும் ஓயவில்லை. அவரின் சமீபத்திய படைப்பான 'கொற்கை'யும் அதே அதிர்வுகளை ஏற்படுத்தியது. சிங்களப் படையினர் மீனவர்களைச் சுட்டுக் கொல்லும் பிரச்சனையில் உணர்வுப்பூர்வமாக தலையிட்டு வரும் ஜோ டி குரூசிடம் ஒரு நேர்காணல்.

கேள்வி : சிங்களப் படையினரால் தமிழக மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படும் பிரச்சினையில் தாங்கள் அக்கறையுடன் ஈடுபாடு காட்டி வருகிறீர்கள். இதற்கு ஏதாவது சிறப்பு காரணங்கள் உண்டா?

பதில் : ஒரு பாரம்பரிய மீனவரின் மகனாய் இருப்பதாலும், எம்மவரைப் பற்றிய அக்கறை எனக்கே இல்லை என்றால் வேறு யாருக்கு வரும் என்ற உந்துதலும், தொடர்ச்சியான எந்தப் போரட்டமும் ஒரு தெளிவான விடிவை எம் மக்களுக்கு இன்றுவரையும் வழங்காததாலும் என்னால் முடிந்தவரை இந்தப் பிரச்சனையில் பங்கு கொள்கிறேன். அடிக்கிறது வலிக்கிறதாம் என்று சொல்வதைவிடவும். அடிக்கிறது வலிக்கிறது என்பதற்கு வலியும், உயிரும் அதிகமல்லவா... என் பெற்றோர் எனக்குத் தந்த வலியும், நான் இதுவரையில் பெற்ற வாழ்வியல் அனுபவமும், என் மக்களுக்கான விடிவுக்காக பாடுபடுகிறதென்றால் அதைவிடவும் மன நிறைவு தரும் விசயங்கள் வேறு என்ன இருக்க முடியும்.

கேள்வி : கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வரும் இப்பிரச்சனையில் இதுவரை 600 மீனவர்கள் சிங்களப் படையினரால் கொல்லப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் ஊனமுற்றுள்ளனர். இந்திய அரசு இன்றுவரை ஏன் எந்த திட்ட வட்டமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை?

பதில் : மத்தியில் ஆள்பவர்களுக்கு தென் இந்தியர்களைக் கண்டாலே ஆகிறதில்லை. அது ஒரு நதி நீர் பங்கீடாக இருந்தாலும் சரி, வாழ்வாதாரப் பிரச்சினையாக இருந்தாலும் சரி...

தீபகற்பத்தின் தென் பகுதியில் இருப்பவர்களும் மனிதர்ளே என்ற எண்ணமே அவர்களுக்கு இல்லை, இராமாயண காலம் தொட்டே வரும் காழ்ப்புணர்வு. அவர்கள் வேறு நிலப் பரப்பைச் சேர்ந்தவர்கள் அவர்களுக்கு நெய்தலின் வாழக்கை புரிவதே குதிரைக் கொம்பு. இந்த இலட்சணத்தில் அவர்கள் வந்து இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வா சொல்லப் போகிறார்கள்.

வாழும் நிலம் வேறு, பேசும் மொழி வேறு, கலாச்சாரம் வேறு, வர்க்கம் வேறு, இதற்கிடையில் அரசியல் படுத்தும் பாடு வேறு. அரசியல்வாதியும் சரி, அரசு அதிகாரியும் சரி, யாருக்கு மக்கள் என்றொரு கூட்டம் இருக்கிறது என்ற எண்ணம் இருக்கிறது. எல்லாமே இந்திரலோகத்து சுந்தரிகளோடு குடித்தனம் நடத்துகிறவர்கள் போலல்லவா நடந்து கொள்கிறார்கள். பின் அடித்தள மக்கள் பற்றியோ, எல்லைப் புறங்களில் வாழ்பவர் பற்றியோ சிந்தனை யாருக்கு வரும். யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதெல்லாம் எமது பாட்டன் கணியன் பூங்குன்றனோடு போயாயிற்று. அரசோ,

அரசின் அதிகார வர்க்கமோ அல்லது அடித்தள மக்களுக்காகவே தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக் கொள்வதாக பாவனை செய்யும் தொண்டு நிறுவனங்களோ யாருக்கும் பிரச்சனைகள் முடிவடைதில் எந்த உடன்பாடும் இல்லை, பிரச்சனை, பிரச்சினையாகவே இருக்க வேண்டும் அப்படி இருந்தால் தான் நாம் நன்றாக குளிர்காய முடியுமென்பதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லாது இருக்கிறார்கள். இந்த இலட்சணத்தில் 600 பேர் இறந்தாலென்ன, 1000 பேர் ஊனமுற்றாலென்ன?.

கேள்வி : இலங்கை மீனவர்கள் இந்திய எல்லைக்குள் வந்தாலும், அதே போல பாகிஸ்தான் மீனவர்கள் இந்திய கடலுக்குள் வந்தாலும் கண்ணியத்துடன் நடத்தப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றனர். ஆனால் இதே முறையை ஏன் இலங்கை அரசு கடைப்பிடிக்க மறுக்கிறது?

பதில் : இங்குதான் மாபெறும் இந்தியக் கலாச்சாரம் வந்து இலங்கை மீனவர்களைக் காப்பாற்றுகிறது. ஏனென்றால் இந்திய அதிகார வார்க்கத்தில் அநேகர் இராவணணின் உறவினர்கள்... இந்திய அரசுக்கு அவர் தம் குடியுரிமை பெற்ற மக்கள் மேல் எந்த அக்கறையும் இல்லை என்பதுதான் அப்பட்டமாகத் தெரிகிறதே...

கேள்வி : கச்சத்தீவை இந்தியா தாரைவார்த்ததினாலும், அது தொடர்பன ஒப்பந்தத்தினை இலங்கை அரசு மீறுவதால்தான் பிரச்சினை என அனைத்துக் கட்சிகளும் கூறுவது உண்மையா?

பதில் : நமது அரசு பிள்ளைகளைக் காப்பாற்றத் தவறுகிறது என்பதுதான் உண்மையே தவிர ஒப்பந்தம், அதன் மீறல் என்பதெல்லாம் தேவையில்லாத பிதற்றல்.

கேள்வி : கச்சத்தீவை திரும்ப பெற்றுவிட்டால் மீனவர்கள் பிரச்சனையின்றி மீன்பிடித்து வரமுடியுமா?

பதில் : பிரச்சனைக்குரிய பகுதியில் நமது மீனவர்களுக்கான மீன்படி தளங்களே கச்சத்தீவின் வடகிழக்கே, ஈழப்பகுதிகளை ஒட்டியுள்ள ஊடுதாவு, நெடுந்தீவுச் சல்லி, வாடைய குண்டு போனற பகுதிகள்தாம், இந்த நிலையில் கச்சத்தீவை மீட்டுவிட்டால் மட்டும் மீன்பிடி தளங்கள் கிடைத்துவிடுமா என்ன?

கேள்வி : கப்பல் படை அதிகாரிகளும் இந்திய அரசு அதிகாரிகளும் மீனவர்கள் அதிக மீன்பிடிக்க ஆசைப்பட்டு எல்லை தாண்டிச் சென்று மீன்பிடித்து வருகின்றனர். அவர்கள் இந்திய எல்லையைத் தாண்டக்கூடாது என்று கூறி வருகின்றனர். இதைப்பற்றி தாங்களின் கருத்து என்ன?

பதில் : மக்களின் பாதுகாப்புக்குத்தான் படைகள் இருக்கின்றன. ஆனால் அந்ந எண்ணத்தை தென் பகுதியில் முகாமிட்டிருக்கும் படைகள் மறந்து வெகுகாலம் ஆயிற்று. ஒத்திகை நடத்துவதும், விரைப்பான உடை உடுத்தி, புரியாத மொழியில்

பேசி மக்களை, மிரட்டுவதும்தான் இன்றைய அளவில் இவர்களது குறிக்கோள். நடப்பதோ மீன்வேட்டை, கடலில் எல்லை தாண்டுவதென்பது ஒரு சாதாரண நிகழ்வு.

அக்கறை என்பது ஒரு சாரார் சார்ந்தது அல்ல, இரு நாட்டு மீனவரையும் சார்ந்தது. எமது மீனவரின் கைகள் நீளமாக இருக்கிறது என்பதால் அது அயல் நாட்டு மீனவரின் சமையல் கட்டுவரையிலும் நீளுவதையும் அனுமதிக்க முடியாது. எல்லாருமே பாரம்பரிய மீனவர்கள், தொழில் சார்ந்து ஒன்றுபட்டவர்கள், சக மீனவனும் வாழ வேண்டும் என்ற எண்ணம் அடிப்படையிலேயே இருவருக்கும் வர வேண்டும்.

கேள்வி : மீனவர்களைச் சுடக்கூடாது. அவர்களை சட்டப்படி நடத்துங்கள் என்று இந்திய அரசு கேட்டுக் கொண்டதற்கிணங்க, இப்போது இலங்கை அரசு மீனவர்களை கைது செய்யத் தொடங்கியுள்ளது. மீனவர்கள் பிரச்சனையின்றி மீன்பிடிக்க வழியில்லையா?

பதில் : கண்கெட்ட பிறகு சூரிய வணக்கமா? இங்கு, நமது அரசு கைது செய்தவர்களுக்கு ராஜ வரிசையில் உபசரிப்பும், சாப்பாடும் கொடுக்கிறது. நம்மவர்களை அவர்கள் நடத்தும் முறையோ நாயிலும் கேவலம். கைதாகி இம்சைப்பட்டு அவமதிக்கப்படுவதைவிட இறந்தே போகலாம் என்பதுதான் எம்மவரின் கூற்று.

கேள்வி : கடலுக்குச் செல்லும் மீனவர்கள் காணாமல் போனால் அவர்களை கண்டுபிடிக்க சட்டப்படி இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதா?

பதில் : அரசியலை முன்னிறுத்தி, அடுத்து வரும் தேர்தலையும் முன்னிறுத்தி ஒரு சில தேடல்கள் நடைபெறுகின்றன. சட்டப்படி நடவடிக்கை என்பதெல்லாம் இலங்கை மீனவருக்கும், அமெரிக்க மீனவருக்குமே கிடைக்கும் மனித உரிமை. எம்மவருக்கு அல்ல.

கேள்வி : ஒரு நாட்டின் குடிமக்கள் என்ற முறையில் அவர்கள் தத்தம் தொழிலில் ஈடுபடும்போது ஏதாவது ஒரு சட்டத்தினால் பாதுகாப்பு அளிக்கப்படுகிறார்கள். அதுபோல மீனவர்களுக்கு பாதுகாப்பு அளிக்க சட்டம் உள்ளதா?

பதில் : ஆள்பவர்களுக்கு பாரம்பரிய மீனவர்கள் இந்தியத்தாயின் குடியுரிமை பெற்ற மக்கள் என்ற எண்ணமே இல்லை, பின் எங்கிருந்து சட்டம் பாதுகாப்பு எல்லாம கடற்கரை மேலாண்மைத் திட்டம் வந்து மீனவர்களை கடற்கரையிலிருந்து விரட்டுகிறது, கடல் மீன்பிடிச் சட்டம் வந்து கடலுக்குள்ளிருந்தும் மீனவர்களை விரட்டுகிறது.

கேள்வி : ஐ.நாவின் கடல் சட்டத்தை எந்த நாடாவது மதிக்கிறதா? அச்சட்டத்தல் மீனவருக்கு பாதுகாப்பு கிடைக்குமா?

பதில் : தென் இந்திய பாரம்பரிய மீனவர்களுக்கு எங்கிருந்தும், எந்த வகையிலும் பாதுகாப்பும் இல்லை.[38]

வரலாறும் நமது அடையாளங்களும்

எல்லோருக்கும் வணக்கம். நண்பர் என்னை அறிமுகப்படுத்தனது போலவே வரலாறும் நமது அடையாளங்களும் என்ற தலைப்பில் பேசுவதற்கு எனக்கு மிகுவும் மகிழ்வாக இருக்கிறது என்பதை முதலில் பதிவு செய்ய விரும்புகிறேன். காரணம் என்னவென்று சொன்னால் என்னுடைய பெயரைப் பாருங்கள், ஜோ டி குரூஸ் ஆனால் நான் தமிழில் பேசுகிறேன். நான் தமிழனாய் இருப்பதில் மகிழ்வடைகிறேன். அப்படியிருக்கும்போது என்னுடைய பெயர் ஜோ டி'குரூஸ் என்று இருக்கிறது. உங்கள் எல்லோருக்கும் தெரியும் இது தமிழ் பெயர் கிடையாது.

நான் ஒரு சரியான பொருத்தமான ஆள் என்பதற்கு இதுவே ஒரு உதாரணமாக இருக்கும். அனுபவசாலிகள் தான் தன்னுடைய அனுபவத்தை பகிர்ந்து கொள்ள முடியும். நான் ஒரு அனுபவம் பெற்றவன். எனக்கு இன்று 49 வயது ஆகிறது. 49 வருடங்கள் நான் பெற்ற அனுபவங்களை உங்களிடம் வந்து சொல்லப் போகிறேன்.

நான் எப்படிப் பிறக்கிறேன்? எப்படி வளர்கிறேன்? வளர்ந்த பிறகு எப்படி வளர்ச்சி அடைகிறேன்? நான் இருப்பதாக இருப்பதின் உண்மை என்ன? எந்த இடத்தில் நின்று கொண்டிருக்கிறேன்? அப்படி உள்ள சில விஷயங்களை, நான் சந்தித்த சில உண்மைகளை, நான் உணர்ந்ததை, உங்களிடம் சொல்லலாம், பகிர்ந்து கொள்ளலாம் என்பதுதான் நான் இங்கு வந்திருப்பதின் நோக்கம்.

ஜோ டி' குரூஸ் என்ற பெயருக்கான விளக்கம் என்னவென்றால், என்னுடைய சொந்த பெயர் அதாவது எனது அம்மா அப்பா வைத்த பெயர் ரெஜிஸ் ஜோ ஆனந்த் என்றுதான். ஆனால் எங்களது குடும்பப் பெயர் டி குரூஸ். டி குரூஸ் அப்படி என்றால் இது பல நெடுங்காலங்களுக்கு முன்னால் போர்ச்சுக்கீசியர்களால் கொடுக்கப்பட்ட ஒரு அடையாளம் இந்த பெயர் மாற்றத்திலிருந்தே ஒரு விசயம் புரிகிறது என்னவென்றால் நாம் நமது அடையாளங்களை இழந்து வேறொரு அடையாளத்திற்குள் புகுந்து அதன் மூலமாக உலக காட்சிப் பொருளாகிவிட்டோம் என்பதுதான்.

வரலாறு என்பது தனிமனித வரலாறு அப்படியல்ல. வரலாறு என்பது அடித்தள மக்கள் இருக்க வேண்டும். இங்கே நான் மிகப்பெரிய உரையாற்றுவதற்காக வரவில்லை. நான் ஏற்கனவே சொன்னதுபோல் எனது அனுபங்களை சொல்வதற்காக வந்திருக்கிறேன்.

எனக்கு சொந்த ஊர் நெல்லை மாவட்டம் உவரி கிராமம். சாதாரண ஒரு கடற்கரை மீனவ கிராமம். இந்த கிராமம் எனக்கு தெரிய அது ஒரு கத்தோலிக்க கிராமம். விவிலியத்தில் வரும் 'கானகத்தில் ஒருவன் குரலொலி கேட்கிறது' அப்படியென்று ஸ்நாபக அருளப்பர் பற்றி சொல்வார்கள். அவர் வெட்டுக்கிளியையும் காட்டுத்தேனையும்தான் சாப்பிட்டு வந்தாராம். இதிலிருந்து நான் என்ன புரிந்துகொள்கிறேன் என்றால் வெளிநாடுகளிலும் நம்மைப்போல அடியார்கள் இருந்து கொண்டிருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு அடியார்தான் ஏசு கிறிஸ்து. எப்படி

ஸ்நாபக அருளப்பரை ஒரு அடியார் என்று ஏற்றுக் கொள்கிறேனோ, இறைவனுக்கு தன்னை முழுவதும் ஒப்புக் கொடுத்த, தன்னை அடிமைப்படுத்திக்கொண்ட, சரணாகதி அடைந்த ஒரு அடியாராகப் பார்க்கிறோமே, அதுபோலத்தான் யேசு கிறிஸ்துவும், ஸ்நாபக அருளப்பரும், எல்லோரும். இப்போ நான் சொல்ல வருவது என்னவென்றால், "இறையரசு நெருங்கிவிட்டது எல்லோரும் மனந் திரும்புங்கள். வெறியன் பாம்பு குட்டிகளே வரப்போகும் விபரீதத்திலிருந்து எங்ளை தப்பித்துக் கொள்ள உங்களுக்கு சொல்லிக் கொடுத்தவன் யார்?" என்று கேட்கிறார். இதெல்லாம் நான் சிறுவயிதிலிருக்கும்போது ஒரு மிகப்பெரிய குடிகாரனின் வாயிலிருந்து கேட்கிறேன்.

என்னடா இன்று சப்தத்தை கேட்கவில்லை என்றால் அன்றைக்கு அவரது குரலை காணோம். அவர் ஏதாவது சில வரிகள் சொல்வாரே. அவரது சில வரிகளை கேட்டுவிட்டுதானே நான் தூங்கப்போவேன் இன்று அவரை கானோம் என்று பார்த்தால், இன்று ஊர் கூட்டம் கூடியிருக்கிறது. எல்லோரும் அங்கே வாங்க என்று சொன்னார்களாம்.

கடற்கரை கிராமங்களில் மிகப்பெரிய பஞ்சாயத்துக்கள் இருக்கும். ஊரில் நடக்கக்கூடிய குடும்ப பிரச்சனைகளாயிருக்கட்டும், பக்கத்து கிராமங்களுக்கிடையே உள்ள பிரச்சனைகளாயிருக்கட்டும், அல்லது கடலில் வாழ்வாதாரம் சம்மந்தமாக மரங்கள், வலைகள், படகுகள், இயந்திரங்கள், தொழில் எல்லை இவைபோன்ற எல்லாவற்றையும் ஒரு ஊர் கமிட்டி அல்லது பஞ்சாயத்தில் பேசி முடிவெடுப்பார்கள். அப்படிப்பட்ட பஞ்சாயத்து அழைக்கப்பட்டிருக்கிறது. நான் சாதாரண ஒரு சிறுவனாக சட்டையும், கால்சட்டையும், அணிந்துகொண்டு மரத்தடியில் நின்றுகொண்டு கவனிக்கிறேன். அவதானித்துக் கொண்டிருக்கிறேன். என்ன நடக்கிறது என்று, அங்கே கபி என்பவர் ஊரிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறார்? காரணம் என்ன? கடற்கரையிலிருந்து மேட்டுநிலங்களில் தேரிக்காடுகள் இருக்கும். இந்த தேரிக்காட்டில் முத்தாரம்மன் கோயில் ஒன்று இருக்கிறது. இந்த முத்தாரம்மன் வருடத்திற்கு ஒரு தடைவ வீதிவலம் வருவாள். அவளை சப்பரத்தில் தூக்கி வைத்து சப்பரத்திலிருந்து ஊரை சுத்திவந்து கொண்டாடுவார்கள். ஊரார்கள் அவர்களது பிரசன்னத்திற்கு காத்திருப்பார்கள். ஆனால் கத்தோலிக்கர்களான பிறகு கட்டமைக்கப்பட்ட ஒரு கத்தோலிக்கத்திற்குள் இந்த மீனவர்கள் வந்த பிறகு இந்த முத்தாரம்மனை தொழுவதற்கோ, கோயிலில்போய் உட்காருவதற்கோ அங்கே கொடுக்கப்படுகிற பிரசாதத்தை சாப்பிடுவதற்கோ, அங்கே நடைபெறக்கூடிய நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்கோ அவர்களுக்கு உரிமை இல்லை. உரிமைகள் அங்கு மறுக்கப்படவில்லை. இங்கிருந்து அவர்கள் போகக்கூடாது என்று தடை விதிக்கப்படுகிறது. இப்போது கபி இரவு நேரங்களில் ஊரார் கூடிய அங்கே ஊர் கூட்டம் முன் கைக்கட்டி வாய் பொத்தி நின்று கொண்டிருக்கிறார். வாய்பொத்தி நிற்பவருக்கு ஊரிலிருந்து நீ விலக்கி வைக்கப்படுகிறாய் இத்தனை நாளைக்கு என்று என்ன கொடுரம் அவர் விளைவித்துவிட்டார். முத்தாரம்மன் கோயில் நிகழ்விலே முத்தாரம்மனை எடுத்து சப்பரத்தில் வைத்து, அந்த சப்பரம்தான் பவனி வரும்.

இப்படிவரும் சப்பர பவனிக்காக முத்தாரம்மனை அந்த சிலையை எடுத்து சப்பரத்தில் வைப்பார்கள். அப்படி வைக்கும்போது காலங்காலமாவே ஒரு பாரம்பரியமாக ஒரு பழக்கம் இருந்து கொண்டிரக்கிறது 'இது ஒரு பரதவனால் எடுத்து வைக்கப்பட வேண்டும்' என்பது பரதவர்கள் என்றால் மீனவர்கள். மீனவர்கள் என்பதை நீங்கள் எப்படி புரிந்துகொள்ள வேண்டுமென்றால் மீனவர்கள் என்றால் மீனபிடித்தல் என்ற தொழிலை மட்டும் செய்பவர் அல்ல. மீன்பிடித்ததும் அவர்கள்தான், மூழ்கி முத்தெடுத்ததும் அவர்கள்தாம், காலங்காலமாக அண்டை நாடுகளுடன் வாணிபம் வளர்த்தவர்களும் அவர்கள்தாம். ஆனால் இன்றைய நிலையில் மக்களுடைய புரிதல் ''மீன்பிடித்தல், மட்டும்தான் என்பதைத்தவிர முத்துக்குளித்தல் இல்லாமல் போய்விட்டது. பாய்மரக் கப்பல் ஓட்டுவது இல்லாமல் போய்விட்டது. கடற்கரையில் இன்று கடாரம் கொண்டது என்றான். கங்கையும் கடாரமும், இராஜேந்திரன் கடாரம் கொண்டான் என்றால் நெய்தல் மக்களை விட்டுவிட்டு கடாரம் கொண்டிருக்க முடியாது. கண்டிப்பாக முடியாது. இந்த பரதவர்தான் மிகப்பெரிய ஆளுமையின் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு சாதாரண மீனவன் அந்த முத்தாரம்மனை தொட வேண்டும். இவர்கள்தான் காலங்காலமாக தொட்டு வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். இவர்கள்தான் நான் எடுத்து வைக்கப்பட வேண்டும் என்று அந்த முத்தாரம்மன் விரும்புகிறாள். ஆனால் கத்தோலிக்க விசுவாசத்திற்குள் என்ன சொல்லிக் கொடுக்கப்படுகிறதென்றால் ஏசு கிறிஸ்துவும், மரியன்னையும், சூசையும்தான் உண்மையான தெய்வம். நீங்கள் வழிபடக்கூடிய மற்ற தெய்வங்களெல்லாம் கற்சிலைகள். இந்த நிகழ்வில் நான் என்ன பதிவு செய்ய விரும்புகிறேன் என்றால், முத்தாரம்மன் மேட்டுநிலப்பகுதியில் வாழ்பவர்களால் இப்போதும் பூஜிக்கப்படுகிறாள். கொண்டாடப்படுகிறாள். ஆனால் அவர்கள் எடுக்கும்போது வர மறுக்கிறாள். அவள் கல்சிலையாக இருந்திருந்தால் யார் வேண்டுமானாலும் எடுக்கலாமே. எடுத்து சப்பரத்தில் வைக்கப்பட வேண்டிய நிகழ்வு. எனக்கு மயிர்கூசக்கூடிய நிகழ்வு அது, சப்பரத்தில் ஏற்றுவதற்கு அந்த முத்தாரம்மன் சிலையை எடுக்க முயற்சி செய்கிறார்கள். அசைய மறுக்கிறது. அந்த பூசாரி வந்து என்னதெல்லாமோ கைங்கரியம் செய்கிறார் நடக்கவில்லை. ஊர்க்கூட்டம் போட்டு முடிவெடுக்கிறார்கள் ஏன் இந்த சிலை அசைய மறுக்கிறது? ஏற்கனவே கத்தோலிக்க விசுவாசத்தில் சொல்லிக் கொடுக்கபட்டிருக்கிறது என்னவென்றால் ஏசுவைத் தவிர மற்றவையெல்லாம் சிலை. கற்சிலை. அது உண்மையிலேயே கற்சிலையாக இருந்தால், உயிர் இல்லாமலிருந்தால் அது ஏன் அசைய மறுக்கிறது? காரணம், காலங்காலமாக நீ தானே என்னை வழிபட்டுக் கொண்டிருந்தாய்? நீ கூட்டமாக வந்து வழிபட்டாயோ அல்லது தனிமனிதனாக வந்து வழிபட்டாயோ, ஆனால் உன்னடைய கரம், உன்னுடைய ஸ்பரிசம், உன்னுடைய ஸ்பரிசத்தின் மூலம் என்ககு உன் சமூகத்தின் ஸ்பரிசம் கிடைக்கிறது என்று அந்த தாய் விரும்புகிறாள். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்பார்கள். நீ மொத்தமாக வந்தாலும் சரி ஒருவனாக வந்தாலும் சரி யாரோ ஒருவனின் ஸ்பரிசத்தின் மூலம் இந்த சமூகத்தின் ஸ்பரிசத்தை உணர்ந்து கொள்கிறேன் அப்படியென்பதை உயிர்த்துடிப்போடு அந்த முத்தாரம்மன் சொல்லி

உட்கார்ந்து கொண்டிருக்கிறாள். கபி குடிவெறியில் போய் அங்கே கை வைக்கிறார். முத்தாரம்மன் அசைந்து கொடுக்கிறாள். சந்தோஷத்தோடு துள்ளி எடுத்து வந்து சப்பரத்தில் அமர்கிறாள். முத்தாரம்மனை வீதிவலம் கொண்டு வருகிறார்கள், சுத்துகிறார்கள். விழா முடிந்துவிடுகிறது. திரும்ப கபி அழைக்கப்படுகிறார். 'எப்படி நீ ஒரு கத்தோலிக்க விசுவாத்திலிருந்து கொண்டு நீ ஒரு மாற்று மதத்து முத்தாரம்மனை வழிபடுவாய்? இன்றிலிருந்து நீ ஊரிலிருந்து விலக்கி வைக்கப்படுகிறாய்'. யார், யாரைச் சொல்வது?

காலகாலமாக எனக்கு நினைவு தெரிந்து கடலில் பெரிய மீன்கள் வந்து குறும்பு பண்ணுவது வழக்கம். பெரிய மீன்கள் என்பது விதவிதமான மீன்கள் இருக்கிறது. சுறா மீன்களில் பல வகைகள் உள்ளது. வரிச்சுறா, கொம்பன் சுறா என்றும் ஒன்றுள்ளது. திமிங்கலங்களில் பலவிதமான திமிங்கலங்கள் உண்டு. இதுபோன்ற பெரிய பெரிய மீன்கள் கடலில் வந்து குறும்பு பண்ண ஆரம்பித்தால் சாதாரண கட்டுமரத்தை வைத்து தொழில் செய்பவர்கள் அங்கு தொழில் செய்ய முடியாது, இந்த மீன்கள் எல்லாமே தங்கள் கட்டுமரத்தைவிட 5 முதல் 10 மடங்கு பெரிதாக உள்ள மீன்கள் குறும்பு செய்ய ஆரம்பித்தால் இவர்களால் தொழில் செய்ய முடியுமா? அவர்களது தொழிலுக்கு இடையூறு விளைவித்தால் இவர்கள் உயிரோடு இருக்க முடியுமா? முடியாது. அப்படி வரக்கூடிய சூழலில் என்ன நடக்கிறதென்றால் என்னுடைய பெரியவர்கள் தாத்தாமார்கள் பூட்டிமார் பாட்டிமார் சொல்ல கேட்டிருக்கிறேன். பெரிய மீன்கள் வரும் சூழலில் அந்த மீன்களின் தலையில் தைரியமாகக் கை வைத்து, என்னுடைய பாட்டனார் சொல்கிறார், எனது பாட்டனாரின் பூட்டனாரும் சொல்கிறார், இன்றும் எங்கள் அய்யா சொல்கிறார். அந்த மீனின் தலைமீது வைத்து "என் ஆத்தா குமரியின் மீது ஆணையாகச் சொல்கிறேன், எங்களால் உனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. அதுபோல உன்னாலும் எங்களுக்கு எந்த பிரச்சனையும் இல்லை. அதுபோல உன்னாலும் எங்களுக்கு எந்த பிரச்சனையும் வரக்கூடாது" என்று தமிழிலே ஆணையிடுகிறார்கள். இன்றைக்கு வரை நடந்து கொண்டிருக்கிறது.

இங்கு என்ன நடக்கிறது? கத்தோலிக்க விசுவாசத்திலிருக்கக்கூடிய கத்தோலிக்க கிறிஸ்தவ பரவர்கள் இதை செய்து கொண்டிருக்கிறார்கள். இங்கு மதம் என்றால் என்ன? நான் எந்த விசுவாசத்திற்குள் இருந்து கொண்டிருக்கிறேன்?

பாய்மரக் கப்பல்களில் கொற்கையிலிருந்து கிளம்பி கொழும்பு நடை போகும்போது, கொற்கை எனப்து இன்றைய தூத்துக்குடியை அன்றைய கொற்கையாக பார்த்துக் கொண்டிருக்கிறேன். எனவே தூத்துக்குடி என்று சொல்வதற்கு நான் விரும்புவதில்லை. கொற்கை என்றே அழைக்க விரும்புகிறேன். அது 7……8-ம் நூற்றாண்டின் பாண்டியரது மிகச்சிறந்த வணிகஸ்தலம். மிகச்சிறந்த துறைமுகம் இப்படிப்பட்ட தூத்துக்குடியிலிருந்து கிளம்பும் பாய்மரக் கப்பல்கள் கொழும்பு நடை போகும்போது. மணப்பாட்டுக் கலங்கரை விளக்கம் தென்பட்டு விட்டால் மச்சானுக்கு

கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் ஒரு தேங்காய் உடைத்துவிட்டு தொடர்ந்து சொல்கிறார்கள். யார் அந்த மச்சான்? முருகன் அந்த மச்சான் என்று சொல்கிறார்கள். காலங்காலமாக.

"பரத்தி மக்கள் தெய்வானை
குலக்கொடியாள் இங்கிருக்க
குறத்திமேல ஆசைகொண்டு
வேலவர் குறவேசம் ஆனாரோ!
ஆராரோ ஆரிராரோ"

என்று வாய்வழிப்பாடல் உண்டு. நான் தாலாட்டு பெற்றிருக்கிறேன் இந்த பாடல் மூலமாக.

மருமகனுக்கு இரண்டு மனைவி. மூத்தவள் தெய்வானை இரண்டாவது வள்ளி. தெய்வானை பரத்தி, வள்ளி குறத்தி என்கிறார்கள். மச்சானுக்கு காய் உடைத்துவிட்டு போகும் அதே பாய்மர ஓட்டிகள், மலையாள நடைபோகும்போது கன்னியாகுமரி முனையில் திரும்பும்போது ஆத்தாவுக்கு ஒரு காய் உடைத்து விட்டுச் செல்வது இன்றுவரை வழக்கம். நாம் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள், இன்றும் ஆத்தாளை வணங்கிக் கொண்டிருக்கிறோம்.

தூத்துக்குடி பகுதியிலே பாண்டியபதி ஜாதித்தலவமோர் என்றவொரு வம்சம் இருந்துகொண்ருக்கிறது. சமீபத்தில்தான் அதனுடைய கடைசி வம்சம் இறந்திருக்கிறார்கள். இவர்கள் யாரென்றால் பரம்பரை பரம்பரையாக வந்த மன்னர் பரம்பரை. மதுரையில் பாண்டியர்கள் கோலோச்சினார்கள் என்றால் இரண்டாவது தலைநகரமாக கொற்கையாக இருந்திருக்கிறது. கொற்கையை ஆளுமை செய்தவர்கள் பரதவர்கள். இந்த பரதவர்கள் யாரென்றால் நான் ஏற்கனவே சொன்னதுபோல் இவர்கள் மிகப்பெரும் கடலோடிகள். மீன் பிடிதிருக்கிறார்கள. மூழ்கி முத்தெடுத்திருக்கிறார்கள். இந்த வணிகம் வளர்த்தவர்கள் தங்களுக்குள் தங்களுக்காக ஏற்படுத்திய தலமை. கொற்கை பகுதியாக அது இருந்து கொண்டிருக்கும்போது பாண்டிய நாட்டின்அடுத்த வாரிசு கொற்கையிலிருந்துதான் வந்திருக்கிறது. பாண்டிய அரசு கட்டிலில் ஆள் இல்லாத போது கொற்கையிலிருந்து போனவர்கள் ஆட்சி உரிமை பெற்றிருக்கிறார்கள். ஆனால் கொற்கையை ஆளுமை செய்தவர்கள் பரதவர்கள், மீனவர்கள்.

இப்படிப்பட்ட பின்னனணியுள்ள இந்த சமூகம், பாண்டியபதி கொற்கையில் ஆட்சிப்பதவி ஏற்கும்போது அவருடைய வாரீசுகள், குடும்பம் கலைந்தபிறகும் கூட, பெண்ணுரிமை உள்ளே வந்த பிறகும் கூட, மதுரையில் மீனாட்சியை வழிபடுவதும், உத்திரகோச மங்கையில் மங்கலேஸ்வரியை வழிபடுவதும், கொற்கையில் சந்தணமாரியை வணங்குவதும், குமரியில் ஆத்தாவை வணங்குவதும் காலங்காலமாக நடந்து கொண்டிருக்கிறது.

இந்த பாண்டியபதி என்பவர் ஏழு கடல் துறைகளில் தலைவர். இந்த ஏழு கடற்துறைகள் என்பது திருவனந்தபுரத்திலிருந்து மன்னார் கடல்வரையுள்ள முத்து விளையக்கூடிய இடம். இந்த கொற்கை பாண்டிநாட்டின் மிகவும் வளமுடையது.

நாடுகளிலே பாண்டியநாடு வளமுடைத்து தென்னாடு வளமுடைத்து. பாண்டிநாடு எப்படி வளமுடைத்து என்றால் கொற்கையில் கிடைத்த மிகப்பெரிய நல்ல முத்துக்களால் பாண்டியநாடு வளமுடையது. இப்படிப்பட்ட வளமுடைய பாண்டிய நாட்டின் இந்த முத்தால் சிறப்படைகிறார்கள். நாடு வளமடைகிறது என்று தெரியும்போது இந்த முத்துக்காக வேண்டி மிகப்பெரிய போராட்டங்கள் வெடிக்கின்றன. இந்த போராட்டங்களால் முத்துக்காக போர்ச்சுக்கீசியர்கள் வருகிறார்கள், வடக்கிலிருந்து வடுகர்கள் வருகிறார்கள். இதேபோல வந்தவர்கள் முகலாயர்களும். நமது முகமதியச் சகோதரர்கள். இவர்கள் வரும்போது என்ன நடக்கிறது என்றால், வடுகர்களோடு போராடி ஓய்ந்திருக்கிறார்கள், போர்த்துக்கீசியர்களுடன் மல்லுக்கட்ட முடியவில்லை. பரதவர்களுக்கு உரிமைப்பட்ட இந்த முத்துப் படுகைகளைக் காலகாலமாக வாழ்ந்த பூமியை, கால காலமாக எங்கள் வாழ்வாதாரமாக இருந்ததை, காலகாலமாக எங்களால் ஆளுமை செய்யபட்ட இந்த பகுதியை விட்டுக்கொடுப்பதா? முத்து எடுக்கும் உரிமையை நாங்கள் விட்டுக்கொடுப்பதா? என்ற மிகப்பெரிய பேராட்டம் வருகிறது. எதற்காக சண்டையிட வேண்டும்? முகமதியர்கள் இந்த பகுதியை வென்றுவிடத் துடிக்கிறார்கள். வென்று, பரவதர்களின் முத்து வணிகத்தைத் தான் கைப்பற்றி விடலாம் என்ற மிகப்பெரிய கனவு கோட்டை கட்டுகிறார்கள். இங்கிருந்து எப்படி வெளிப்படுவது? இப்போதுள்ளதுபோல் அதிக மக்கள் தொகையும் இல்லை. இருப்பினும் 1538 வருட காலக்கட்டத்தில் 2000 பரதவர்கள் முகலாயருடன் போரிட்டு இறந்திருக்கிறார்கள். எத்தனை நாள் இப்படி எத்தனை பேரை இப்படி காவு கொடுத்துக் கொண்டிருப்பது? இனக்குழுத் தலைமை கூடி முடிவெடுக்கிறார்கள். என்ன செய்யலாம் என்று யோசித்திருந்போது, போர்த்துக்கீசியர்கள் கள்ளிக்கோட்டைப் பகுதியில் வந்திறங்கியிருக்கிறார்கள். இறங்கிய போர்த்துக்கீசியர்களிடம் துப்பாக்கி இருக்கிறது. இந்த 2000 பேர் இறந்ததற்கு காரணம் முகமதியரிடம் இருந்து துப்பாக்கியும் தோட்டாவும். பரதவர்களிடம் இருந்ததோ வாளும், வில்லும், அரிவாளும், கேடயம்தான். இந்த ஆயுதங்களை வைத்துக்கொண்டு முகமதியருடன் எப்படி நான் போராட முடியும்? வீரம் இங்கே விளைந்து கிடக்கிறது. அனால் தூரத்திலிருந்து அவன் சுட்டு விடுகிறானே! அப்படி அவன் சுட்டுவிடும்போது அதுபோல ஆயுதம் நம்மிடம் இல்லையே என்று ஆதங்கப்படும்போது ஒரு குதிரை வியாபாரி அவருடைய பெயர் ஜோவாம் டி' குரூஸ் இவர்களுக்கு ஒரு ஐடியா கொடுத்தார். அது என்னவென்றால் உங்களுடைய தலைவர்கள், உங்களது பட்டங்கட்டிமார், உங்களது அடப்பன்மார் இவர்களெல்லாம் கிளம்பிவந்து கொச்சி, காலிகட்டில் இருக்கக்கூடிய போர்த்துக்கீசியர்களைச் சந்திக்கலாமே, அவர்கள் உங்களுக்கு படையுதவி தரலாம் என்றார். இவர்களுக்கு படையுதவி தேவையில்லை துப்பாக்கியும் தோட்டாவும்தான். துப்பாக்கியும் தோட்டாவும் வாங்குவதற்காக ஒரு குழு இங்கிருந்து போகிறார்கள்.

இவர்களை ஜோவம் டி'குரூஸ் எப்படி பயன்படுத்திருக்கிறார்கள் என்றால் ஏற்கனவே கள்ளிக்கோட்டை பகுதியிலிருந்து அவர் போர்த்துக்கீசியருக்கு பரிச்சயமான ஒரு குதிரை வியாபாரி. இந்த பரிச்சயமானவர் தன்னுடைய வாணிகளம் சிறக்க வேண்டுமென நினைத்து போர்த்துக்கீசியருக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று

சமூகத்திடம் வந்து பேசுகிறார். அதுபோக இப்பரதவர் சமூகம் இப்போது முகமதியரிடமும் வடுகரிடமும் பாதிகப்பட்டுக் கொண்டிருக்கிறதே, இதிலிருந்து அவர்கள் தப்பிக்க வேண்டுமென்று ஒரு எண்ணாமாகக்கூட இருக்காலம். இந்த பரதவர்களின் தலைவர்கள் போர்த்துக்கீசியர்களை வந்து சந்திக்கிறார்கள். போர்த்துக்கீசியர்களுக்கு ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்துவிட வேண்டுமென ஆசை.

நான் பெரும்பாலான நிகழ்வுகளில் ஒரு விஷயத்தை சொல்ல மிக விரும்புவேன். டச்சுகாரர்களோ, போர்த்துக்கீசியர்களோ, வெள்ளைக்காரர்களோ இங்குவந்து நமக்கு கலாச்சாரத்தை சொல்லித்தரவில்லை. திரும்பவும் விவேகானந்தரை இங்கு நான் நினைவு கொள்ள விரும்புகிறேன். ஏன் சொல்லுகிறேன் என்றால் 'எழு, விழு நிற்காதே' என்ற சொன்னவர் அதன்பின் நீ யாராக வேண்டுமென்றாலும் இருந்துவிட்டுப் போ, ஆனால் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் பழமைவாய்ந்த மாபெரும் இந்திய கலாச்சாரத்தின் அங்கமாய் நீ நின்று கொண்டிருக்கிறாய். நீ தோட்டியாக இரு. தேரோட்டியாக இரு, நீ ஆணையராக இரு, அரசியல்வாதியாக இரு, யாராக இருந்தாரும் இந்திய தாயின் பாரம்பரியத்தின் பிரதிநிதியாக நின்று கொண்டிருக்கிறாய், நடந்து கொண்டிருக்கிறாய், பணி செய்து கொண்டிருக்கிறாய், பேசிக் கொண்டிருக்கிறாய் என்பதை நினைவில் கொள் என்று சொன்னார்கள்.

அப்படி இவர்கள் அங்கு படையுதவிக்காக போகிறார்கள், அவர்களுக்கு படையுதவியும் தோட்டாவும் துப்பாக்கியும் உத்திரவாதமளிக்கப்படுகிறது, ஆனால் அவர்கள் கைமாறாக நீங்கள் தெய்வத்தை வழிபடவேண்டும் என்று கேட்கிறார்கள்.

ஓ... வழிபடுவதுதானே... எங்களுக்கு ஏற்கனவே முப்பத்துமுக்கோடி தேவர்கள் இருக்கிறார்கள். அவர்களோடு இன்னும் ஒன்று அவ்வளவுதான். ஏற்கனவே இருக்கும் முப்பது முக்கோடி தேவர்களுடன் சேசுவையும், சூசையும், மேரியையும் சேர்த்துவிடுவோம். அவ்வளவுதான், சேர்த்தாகிவிட்டது. ஆனால் அந்த காலக்கட்டத்தில் அவர்கள் மதம் மாற்றினார்கள் என்றில்லாமல் அவர்களையும் கும்பிடச் சொல்கிறார்கள். கும்பிட்டுவிடலாம். ஆனால் அப்படி ஏற்றுக்கொண்ட இந்த மதம் என்ன செய்கிறதென்றால் இவர்களுக்கு துப்பாக்கியையும் தோட்டாவையும் கொடுக்கிறார்கள். இந்த துப்பாக்கியையும் தோட்டாவையும் கொண்டுவந்து முகமதியரோடு போரிட்டு வென்று இந்த ஏழு துறையிலுள்ள முத்துப்படுகைகளை தக்கவைத்துக் கொள்கிறார்கள் இந்த பரதவர்கள் ஆனால் இதற்கு தட்சணையாக நாங்கள் கிறஸ்துவையும் கும்பிடுகிறோம் என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். சாதாரணமாக ஒரு கோதுமைக்காகவே, ஒரு அரிசிக்காகவோ, அல்லது எந்த பணத்திற்காகவோ இந்த இனக்குழு கத்தோலிக்கத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. முத்துப்படுகைகளின் உரிமைகளை மீட்டுக் கொள்ள வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக அவரிடமிருந்து துப்பாக்கியும் தோட்டாவும் வாங்கிவிட்டோமே என்ற ஒரே காரணத்திற்காக அவர்கள்

வழிபடும் தெய்வத்தை நாங்களும் வழிபடுகிறோம் என்று வழிபடச் சம்மதிக்கிறார்கள். ஆனால் அதன் பின்னர்தான் வருகிறது கட்டமைக்கப்பட்ட கிறிஸ்தவ மதம்.

இந்த கட்டமைக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தின் பிரதிநிதியாக பிரான்சிஸ் சேவியர் எனப்படுகிற பாரிஸ் பல்கலைகழகத்தின் மிகப்பெரிய பேராசிரியராக இருந்தவர். புனித இஞ்ஞாசியாரால் அவருடைய 'நீ உலகமெல்லாம் தனதாக்கிக் கொண்டாளும் உன் ஆத்துமத்தை இழந்துவிட்டால் அதனால் உனக்கு என்ன பயன்? என்று கேட்டு அவர் இந்த கிறிஸ்தவத்துக்குள் வந்ததாகச் சொல்வார்கள். அப்படி அவரால் செய்யப்பட்டு உள்ளே வந்தவர் இங்கு கிறிஸ்தவராக்கப்பட்ட இந்த பரதவர்களை கிறிஸ்துவுக்குள் இணைப்பதற்காக வருகிறார். கட்டமைக்கப்பட்ட கத்தோலிக்கத்தின் பிரதிநிதியாக வருகிறார். வந்து அவர்களுக்கு எப்படி ஜெபம் செய்வது, எப்படி அன்னிய தெய்வங்கள் என சொல்லப்படுகிற இந்திய நாட்டு தெய்வங்களை புறக்கணிப்பது என்பதை சொல்லி ஓம் நமச்சிவாயவுக்கு பதிலாக மரிய மாதாவை இணைத்தார்.

நான் சொல்ல விரும்புவது, இந்த இனக்குழு ஒரு போராட்டத்தில் வெற்றிபெற வேண்டுமென்பதற்காகத்தான் இவ்வாறு மாறினார்கள். ஆனால் உள்ளே போகக்கூடிய இந்த உனக்கு, தான் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலே செய்துவிடுகிறது. நடந்த அந்த நிகழ்வில்கூட, நீ இந்த மத நம்பிக்கையிலிருந்து உன்னுடைய மத நம்பிக்கைக்கு போகமாட்டாய் என்பது என்ன நிச்சயம்? நாங்கள் அதை எப்படி ஏற்றுக் கொள்வது? என்று கேட்டுக்கொண்டபோது, நீ மதிக்கத்தக் ஒரு தெய்வத்தின்மீது ஆணையிட்டுச் சொல் என்று கேட்கிறார்கள். இதை போர்த்துக்கீசியர்களும் ஒத்துக் கொள்கிறார்கள். அவர்கள் ஆணையிட்டுச் சொல்வதற்காக தேர்ந்தெடுத்த தெய்வம் எங்கள் குமரி ஆத்தா தலையில் சத்தியம் அடித்து, குமரி ஆத்தா தலையில் ஆணையிட்டு "நாங்கள் இன்றிலிருந்து, நாங்கள் ஆணையிடுகிறோமே அவளை வணங்கமாட்டோம், இவர்களை வணங்குவோம்" என்று ஆணையிடுகிறார்கள். மரியாதை இங்கு யாருக்கு! தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் செய்துவிடுகிறார்கள்.

ஏசுபெருமான் சிலுவையில் உயிர்விட்டபொழுது அவர் விலா பகுதியில் ஈட்டியில் குத்தி கடைசியாக நீரும் குருதியுமாக வெளிப்படும் நேரத்தில் ஏசு ஒரு வார்த்தை சொல்கிறார்.

"பிதாவே இவர்களை மன்னியும்' இவர்கள் செய்வது என்னதென்று அறியாமல் செய்கிறார்கள்".

அதே மாதிரியான வார்த்தைப் பிரயோகம்தான் இங்கு இருக்கவேண்டும். இந்த மக்கள் தாங்கள் கத்தோலிக்க விசுவாசத்தை ஏற்றுக்கொண்ட போது நாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமலேயே செய்துவிட்டார்கள். காலங்காலமாக இன்றைக்கு இருக்ககூடிய தேவாரம், திருவாசகம், எத்தனை! இந்த பிறவி போதுமா? ஆன்மீகத்தில்

உச்சத்தை தொட்டவர்கள் நாம். ஆன்மீகம் என்றால் அந்த ஆன்மீகத்தைத் தெரிந்து கொள்ளத்தான் மேலைநாட்டவர் இங்கு வந்தனர், கிறிஸ்து உட்பட, இப்படிப்பட்ட நம்முடைய இனக்குழு தாங்கள் என்ன செய்கிறோம் என்பதை அறியாமல் கத்தோலிக்கத்தை ஏற்றுக் கொண்டோம். இன்றைய சூழலில் பரதவரின் பிரதிநிதியாக இருக்கக்கூடிய நான் 'செஞ்சோற்று கடன் தீர்க்க... ஹஹ... செஞ்சோறு கடன் தீர்க்க நின்று கொண்டிருக்கிறேன்.' என்னுடைய அடையாளங்கள் மாறிப்போய்விட்டன. என்னுடைய நாட்டிலேயே எதிரியாகப் பார்க்கப்படுகிறேன். என்னுடைய வீட்டிலேயே எதிரியாகப் பார்க்கப்படுகிறேன். என்னுடைய கலாச்சாரத்திலேயே எதிரியாகப் பார்க்கப்படுகிறேன். எப்படி அது சாத்தியம்? இந்த வெள்ளையர்கள் வந்து நமக்கு கலாச்சாரத்தைப் போதிக்கவில்லை. இந்த கடற்கரையில் இருந்த கட்டமைப்பையும், அரசியலையும், பாதுகாப்பபையும் உணர்ந்துதான் இங்கு வந்தார்கள். இன்று மும்பைக்கு ஒரு வணிக விஷயமாகப் போகலாம், லண்டனுக்கு ஒரு வணிக விஷயத்திற்கு போகலாம். ஓ. லண்டன்... ஒரு சிறப்பான நகரம்.. அங்கு பாதுகாப்பாக ஒரு தொழில் செய்யலாம் என்ற நம்பிக்கை வராலம். இதே நம்பிக்கை நமக்கு சோமாலியாவில் வருமா? இதே நம்பிக்கை சூடானில் வருமா? காரணம் என்ன? சூடான் போனஸ் மணிபர்ஸ் வைத்திருக்க வேண்டும். அதில் ஒரு பத்து டாலர் இருக்கனும். யாராவர் முரடன் உங்கள் அருகில் வந்தால் உங்கள் மணிபர்சைக் கொடுத்துவிட வேண்டும். அல்லது அவன் உங்களைச் சுட்டுவிடுவான். இது அங்கே நடைமுறை கலாச்சாரம். ஆனால் டச்சுக்காரர்களும், போர்ச்சுக்கீசியர்களும், வெள்ளையர்களும் இங்கு நமது கடற்கரைக்கு வந்தபோது அங்கு இருந்த பேரமைதியைப் பார்த்திருக்கிறார்கள். சரியான அரசியல் அமைப்பைப் பார்த்திருக்கிறார்கள். சரியான கட்டுப்பாட்டு அமைப்பை பார்த்திருக்கிறார்கள். இந்த அமைதியும் அரசியல் அமைப்பும் பாதுகாப்பையும் அறிந்து இங்கு வந்து வணிகம் செய்தால் சிறக்கும என்ற மிகப் பெரிய அறிவை அவர்களுக்கு கொடுத்திருக்கிறது. அந்த கலாச்சாரத்தின் சொந்தக்காரர்களாக நாம் அன்று இருந்திருக்கின்றோம். அந்த பாரத கலாச்சாரத்தின் சொந்தக்காரர்களாக நாம் இருந்து கொண்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நம்மை ஆன்மீகத்திற்காக அடுத்தவரிடம் கையேந்த விட்டுவிட்டார்கள் என்பதுதான் எனது நிலைப்பாடு. நாம் ஆன்மீகத்தின் உச்சத்தைத் தொட்டிருக்கிறோம். உச்சத்தைத் தொட்ட நாம் போர்த்துக்கீசியரிடம் கையேந்துகிறோமா? ஏதோ அவர்கள் தோட்டாவும் துப்பாக்கியும் தந்துவிட்டார்கள் என செஞ்சோற்று கடன் தீர்க்க நின்று கொண்டிருக்கிறோமே? அதற்கான நாம் கொடுத்த விலை என்ன? நமது வரலாறும் நம்முடைய அடையாளங்களும் இன்று யாரிடமோ இருந்து கொண்டிருக்கிறது. சொந்த வீட்டிலேயே எதிரியாகப் பார்க்கப்படுகிற நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்பது மிகப் பெரிய வேதனை தரும் விஷயமாக இருந்து கொண்டிருக்கிறது. நன்றி.

கேள்வி : இந்து மதத்தின் பல தெய்வ வழிபாடு பற்றி உங்கள் கருத்து என்ன?

இன்று தை பொங்கல். 1863-ம் ஆண்டு ஜனவரி 13-ம் நாள் அன்றுதான் விவேகானந்தர் பிறக்கிறார். இந்த நாளுக்கு ஒரு முக்கியத்துவம் இருக்கிறது. அவர்

“மத நம்பிக்கைகள், இது பிராமணனின் சிவன், இது சத்திரியனின் சிவன், இது சூத்திரனின் சிவன் என்பதல்ல. சிவன் என்பது தத்துவம். முருகன் வழிபாடு என்பது தத்துவம். இந்த தத்துவத்திற்குள் வா நீ.”

இதே விவேகானந்தர் தமிழ்நாட்டிற்கு வந்தபோது, அவர் நரேந்திரனாக வந்து விவேகானந்தனாக வெளிவந்த போது, சட்டநம்பி என்பவரை சந்திக்கிறார். திருவிதாங்கூர் சமாஸ்தானத்தில் சட்டநம்பி சைவ சித்தாந்தத்தைப் பற்றி சொல்கிறார். இதை கேட்டு விவேகானந்தரே வியந்தார். அப்போது சட்டநம்பியின் சிஷ்யரில் பிராமணனுக்கு ஒரு சிவன், சூத்திரனுக்கு ஒரு சிவன் என்றல்லாம் வைக்கலாமா? என்று வினவ அவர் ‘வைத்துக்கோ’ என்றார். சாமியை எப்படி எப்படியெல்லாம் கும்பிடலாமோ அப்படியெல்லாம் கும்பிட்டுக்கோ, ‘சிவம் என்பது தத்துவம் சிலை அல்ல’ அந்த தத்துவத்தை வழிபடு அவ்வளவுதான். அப்படியென்று சொன்னார். அதனால் போகர், முருகன்சிலை, பாஷாணம், இதெல்லாம் உங்கள் நம்பிக்கைக்குள் வருவதற்காக, ஏதாவது ஒரு மதத்திற்குள் இருந்து கொண்டு இறைநம்பிக்ககைக்குள் வரவேண்டும் இறை நம்பிக்கைக்குள் வந்த பிறகு, கண்ணை மூடி கடவுளைக் கும்பிடும்போது, எதிரில் இருக்கும் சிலை தெரியாது, எதிரிலிருக்கும் முருகன் தெரிய மாட்டான், எதிரிலிருக்கும் சிவன் தெரியாது, சிவம் எனும் தத்துவம் தெரியும்.

கேள்வி : அறிவுபூர்வமான சமயப்பயணம் சாத்தியமென்று நினைக்கிறீர்களா?

நான் கத்தோலிக்க விசுவாத்தில் இருக்கிறேன். இப்போது இருந்துகொண்டிருக்கிறேன். ஒரு செய்தி பரப்பப்படுகிறது. உள் நாட்டுக்காரன் எல்லாம் பேய். வெளிநாட்டுக்காரன் எல்லாம் புனிதர்கள்.

பார்த்தீர்களென்றால் கத்தோலிக்க விசுவாசத்திறக்குள்ளேயே அதிகமாக புனிதப்பட்டம் பெற்றவர்கள் வெளிநாட்டுக்காரர்களாக இருக்கிறார்கள். உள் நாட்டுக்காரர்களுக்கு புனிதர் பட்டமே கொடுக்கப்படுவதில்லை. அதற்கே ஒரு அரசியல் இருக்கிறது.

செத்துப் போயாச்சு, ஆத்மாவாயாச்சு, பிரம்மத்தை அடைஞ்சாச்சு, அவர்கள் புனிதப்பட்டம் பெறுவதற்கு நாளை இறக்கு உடலெல்லாம் இங்கு ஆடிக்கொண்டிருக்கிறது. பள்ளிப்படிப்பில் 5 வரை ஒரு அறிவு, மேல் நிலைக்கு வரும்போது ஒரு அறிவு, கல்லூரியை முடிக்கும் போது ஒரு அறிவு, கல்யாணம் பண்ணும்போது ஒரு அறிவு, பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஒரு அறிவு, முதிர்ந்த நிலையில் ஒரு அறிவு என்று பக்குவப்பட்டுக்கொண்டே வருகிறோம். உங்களது சிந்தனை தெளிவாக இருந்ததேயானால் தெரியத்தெரிய அறியாமை விலகுவது என்பது மிகப் பெரிய கொடுப்பினை. அது மனிதர்களுக்கு கிடைத்த மிக்ப பெரிய பாக்கியம். இந்த பிறவியில் உன்னைப்பற்றி அறிய வாய்ப்பு கிடைத்ததே பெரிய சந்தோஷம்.

கேள்வி : வணிகம் செய்ய வந்த போர்த்துக்கீசியர்கள் பரதர்களை ஏன் மதமாற்றம் செய்ய நினைத்தார்கள்?

போர்த்துக்கீசியர்கள் தங்கள் வணிகம் சிறக்குமென்ற இந்த பகுதிக்கு வருகிறார்கள். அப்படி வரும்போது போர்த்துக்கீசியர்களிலிருந்து அடிமைகளை கொண்டுவர முடியாது. அங்கிருந்து வேலையாட்களைக் கொண்டுவர முடியாது. அதுபோல ஒரு வேலையாளை வைக்குமபோது அவன் ஒரு வேலையாளாக மட்டும் தான் இருப்பான். 8 மணி நேரம் வேலை செய்தால் கூலி கொடுக்க வேண்டும். ஆனால் அவர்களை என்னுடைய மக்களாகவே மாற்றுவது எது என்றால், மதத்தால்தான் அவர்களை தனது மக்களாகவே மாற்ற முடியும். அவர்களைத் தமது மக்களாகவே மாற்றிவிட்டால் அவர்கள் வேலையாட்களல்ல. அவர்களுக்கு கூலி கொடுக்க வேண்டியதல்ல. சாப்பாடு போட வேண்டியதில்லை, மத நம்பிக்கைக்குள் கொண்டுவருவதன் மூலமே அவர்களை தங்களது பிரஜைகளாக மாற்றிவிட்டார்கள். அப்படி மாற்றியதால் போர்த்துக்கீசியர்களுக்கு மிகப்பெரிய வெகுமதி கிடைத்தது. செலவே இல்லாமல் ஒரு முரட்டு கடற்கரை பரத இனம் அவர்களின் வணிகத்தின் காவலர்களாக நின்று கொண்டிருந்தார்கள். அப்படிப்பட்ட ஒரு மிகப்பெரிய வாய்ப்பு போர்த்துக்கீசியருக்கு மதமாற்றத்தால் கிடைத்தது.

செஞ்சோற்று கடன்தீர்க்க சேராத இடந்தன்னில் என்பதற்கு உண்மையான உதாரணம் தமிழக தென்பகுதியிலுள்ள முரட்டு கடற்கரை பரதர் இனம். எல்லோருமே கத்தோலிக்க கிறிஸ்தவர்களாகவே இருக்கிறார்கள். இன்றைய நாளில் நிறைய பிரிவுகளாகப் பிரிந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் எல்லோரும் கிறிஸ்தவர்களாகவே இருக்கிறார்கள்.

கேள்வி : இந்து கிறிஸ்தவ ஆலயங்களிலும், கிறிஸ்தவர் இந்து ஆலயங்களிலும் பெறும் இறையனுபவம் அவர்கள் தத்தம் ஆலயங்களில் பெறும் அனுபவங்களிலிருந்து மாறுபட்டதா?

நான் இந்து நண்பர்களுடன் கோயில்களுக்கு போவேன். ஆச்சரியமாய் பார்ப்பார்கள் என்னை. கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் இந்து கோயில்களுக்கு வருவார்களா என்று. ஆனால் நான் ஆச்சரியமாய் பார்ப்பது என்னவென்றால் எங்களது பக்கத்திலுள்ள ஊரில், உதாரணத்திற்கு உவரியின் அருகிலிருக்கும் சுயம்புலிங்க சுவாமி கோயில் எங்க கோயில். நாங்க வழிபட்ட கோயில். அங்குள்ள பக்தர்கள் வேளாங்கண்ணி மாதா கோயிலில் வந்து மிக பக்தியோடு, ஸ்ரத்தையோடு வழிபடுகிறார்கள். எப்படி ஒரு சிவாலயத்திற்குள் வழிபடுகிறார்களோ, எப்படி ஒரு முத்தாரம்மனை வழிபடுகிறார்களோ, எப்படி ஒரு சந்தன மாரியம்மனை கையெடுத்து கும்பிடுகிறார்களோ, அதே மரியாதையோடு, அதே சங்கையோடு, அதே பக்தியோடு ஒரு வேளாங்கண்ணி மாதா கோயிலிலும், அந்தோணியார் ஆலயத்திற்குள்ளேயும் வழிபடுகிறார்கள்.

ஆனால் கிறிஸ்தவனாகிய நான் ஒரு சிவாலயத்திற்குள் சென்றால் அங்குள்ள சிலைகளின் அழகை பார்ப்பதற்குதான் போகிறேனே தவிர நான் அங்கே போய் கையெடுத்துக் கும்பிடவில்லை. நான் சிவாலயத்திற்குள் சிவனை வணங்குகிறேன்.

நமச்சிவாய வாழ்க
நாதன் தாள் வாழ்க
இமைபொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க

என வாழ்த்துகிறேன் நான்.

கேள்வி : வரலாற்று அடையாள மாற்றம் பற்றி தாங்கள் ஆழமாக அலசிப் பேசிய பேச்சுக்கு நன்றி. நிகழ்ச்சியை நிறைவு செய்ய ஒரு சில சொற்களில்...?

நாங்கள் காலகாலமாக வருணனை வழிபட்டவர்கள். கடற்கரையில் நெய்தல்நில கடலும் கடல்சார்ந்த மக்களும் வருணனை வழிபட்டவர்கள். அப்படி வருணனை வழிபட்ட மக்களை கத்தோலிக்கத்திற்கு வழிநடத்தி கத்தோலிக்க விசுவாசத்திறகுள் கொண்டு போனது ஜோவம் டி' குரூஸ். அதைப்பற்றி உங்களோடு இன்று பகிர்ந்து கொள்வது ஜோ டி' குருஸ்.[39]

இந்த வாழ்வியல் அனுபவங்கள் குரூஸ் அவர்களை கொற்கை மற்றும் ஆழி சூழ் உலகு ஆகிய இரு நாவல்கள் எழுதுவதற்கு காரணமாக அமைந்திருக்க வேண்டும். ஏனெனில் இவருடைய அனுபவங்களை அடியொற்றியே நாவல்களில் செய்திகள் இடம்பெற்றுள்ளன.

இயல் முடிவுகள்

சைமன் காசி செட்டி (Simon Casie Chetty) என்பவர் கொழும்பு செட்டி சமுதாயம் ஈன்ற ஒரு புகழ்மிக்க தமிழ் அறிஞராவார். இலங்கை சட்ட மன்றத்து தமிழ் உறுப்பினராகவும் மாவட்ட நீதிபதியாகவும், இலங்கை அரசின் முதல் குடிமை பணியாளராகவும் பணியாற்றிய இவருடைய மூதாதையர்கள் தென்னிந்திய திருநெல்வேலி மாவட்டத்தில் ஆழ்வார் என்ற ஊரைச் சேர்ந்த இந்து மதத்தினர்.

பரவர்களின் தோற்றமும் வரலாறும் என்ற ஒரு கட்டுரையை சைமன் காசி செட்டி ராயல் ஏசியாட்டிக் சொசைட்டி வெளியிட்ட இதழில் 1837-ஆம் ஆண்டில் திறம்பட எழுதியுள்ளார்.

நெய்தலைப் பாடிய புலவர்கள் பலர் இருப்பினும், தலைசிறந்து விளங்குபவர்கள் மூவர் ஆவார். அவர்கள் முறையே உலோச்சனார், அம்மூவனார், நல்வந்துவனார் என்பவராகும்.

திருவள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் ஆகியோரை நெய்தல் நிலத்தைச் சார்ந்த புலவர்கள் என்று கடற்கரைப் படைப்பாளிகள் என்ற நூலில் ஆசிரியர் திரு.தொ.சூசைமிக்கேல் குறிப்பிடுகிறார்.

தூத்துக்குடி மாவட்டம் உவரி கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஜோடி குரூஸ் கொற்கை என்ற புதினத்தையும் ஆழி சூழ் உலகு என்ற நூலையும் எழுதியுள்ளார். அவரது இரு புதினங்களும் மீன்பிடி தொழில் புரியும் பரதவர் வாழ்க்கையைக் களமாகக் கொண்டவை. மேலும் 2013-இல் வெளியான மரியான் திரைப்படத்துக்கு வசனம் எழுதியுள்ளார்.

இவரது 'கொற்கை' என்ற புதினத்திற்காக 2013-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது.

இவர் எழுதிய 'ஆழி சூழ் உலகு' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2004-ம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதினம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

நெய்தல் கடலும் கடல் சார்ந்த பிரதேசமாகும். இங்கு வாழும் மக்களைப் பரதவர்கள் என இலக்கியங்கள் குறிக்கும். பரதவர்கள் பல்வேறு கடல்சார் தொழில்களில் ஈடுபட்டதன் மூலம் பொருளீட்டினார்கள். மீன்பிடி, முத்து சங்கு குளித்தல், உப்பு விளைவித்தல், சங்கறுத்தல், கடலோடுதல், கடல் வாணிபம் எனப் பல தொழில்களால் பல உட்பிரிவுகளாகப் பிரிந்தார்கள். பல்வேறு கல்வெட்டுக்கள் மற்றும் சங்க இலக்கிய நூல்கள் இந்த பரதவர்களின் சிறப்பை உரைக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. The Histroy of the Colombo Chetties 'by Shirley Pulie Tissera and 'The history of Colombo Chetty community' by A.T.S.Paul, P.5.
2. சைமன் காசி செட்டி, பரவர்களின் தோற்றமும் வரலாறும் கட்டுரை, ப.10.
3. மேலது, ப.10.
4. மேலது, ப.11.
5. மேலது, ப.12.
6. தி.முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.262
7. ஆ.சிங்காரவேலு முதலியார், 'அபிதான சிந்தாமணி', ப.259
8. மொ.அ. துரை அரங்கசாமி- 'சங்க காலச் சிறப்புப் பெயர்கள்', ப.129
9. முனைவர் தி.முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.267
10. மேலது, ப.274
11. குறுந்தொகை, பா. 15, 212
12. மொ.அ. துரை அரங்கசாமி, 'சங்க காலச் சிறப்புப் பெயர்கள்', ப.170
13. மேலது, ப.170
14. மேலது, ப.172
15. மேலது, ப.71
16. தொ.சூசைமிக்கேல், 'கடற்கரைப் படைப்பாளிகள்', ப.18
17. சிலம்பு., மனையறம் படுத்த காதை, அடி, 212
18. சிலம்பு., இந்திரவிழா ஊர் எடுத்த காதை, அடி, 25
19. மேலது., அடி, 158
20. மேலது, கானல்வரி, அடி, 29
21. மேலது., அடி, 38
22. அகம்., பா.130
23. மேலது., பா.296
24. மேலது., பா.296
25. மேலது., பா.350
26. மேலது., பா.130
27. மேலது., பா.211
28. மேலது., பா.201
29. மேலது., பா.250
30. சிறுபாணாற்றுப்படை, பா.56-62
31. மதுரைக்காஞ்சி, பா.133-138
32. நற்றிணை, பா.131

33. மணிமேகலை, ஆபுத்திரன் திறன் அறிவித்தகாதை, அடி, 84
34. ஜஸ்டின் திவாகர், ஜோ டி குருஸ் எழுத்தும் பேச்சும், பக்.7-9
35. மேலது, பக். 10-13
36. மேலது, பக். 14-19
37. மேலது, பக். 20-28
38. மேலது, பக். 56-59
39. மேலது, பக். 75-89

சங்ககால நெய்தல் வாழ்க்கை

முன்னுரை

பண்டைத் தமிழ் பெருங்குடி மக்களான பரதவர், நெய்தல் நிலத்து மண்ணின் மைந்தர்கள் என்ற சங்க இலக்கியத்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றது. சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் பல கல்வெட்டு, செப்பேடு, தொல்லியல் பொருட்களால் உறுதி செய்யப்படுகின்றன. 'பரதவர்' என்ற பெயர் சங்க இலக்கியத்துள் பல இடங்களில் காணப்படுகின்றது. 50-க்கும் அதிகமான இடங்களில் குறிக்கப்பட்டுள்ள 'பரதவர்' என்ற பெயருக்கு சங்க இலக்கியங்கள் ஈன்றுள்ள முக்கியத்துவம் தெளிவாகுகிறது. இது தவிர, 'பரதர்' என்ற பெயர், சங்க இலக்கியத்தில் மூன்று இடங்களில் (பெரும்பாணாற்றுப்படை (322-323), மதுரைக்காஞ்சி (315-17), திணைமொழி (45:1-3) கையாளப்பட்டுள்ளது என்று தமிழறிஞர் தி. முத்துக் கண்ணப்பன் கூறியுள்ளார். சங்க இலக்கிய நூல்களில் உள்ள பரதவர் குறித்த செய்திகளை இந்த இயலில் விரிவாக காண இருக்கிறோம்.

"சங்க இலக்கியப் பாடல்களுள் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, புறநானூறு ஆகிய புறத்திணைப் பாடல்களில் 120 அடிகளுள், நற்றிணை, குறுந்தொகை, அகநானாறு, ஐங்குறுநூறு, கலித்தொகை ஆகிய அகத்திணைப் பாடல்களில் 410 வரிகளும் பரதவர் குறித்துப் பேசுகின்றன"[1] என்று தமிழறிஞர் கேசவராமன் கூறியுள்ளார்.

இன்று தமிழகத்தின் இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும் 'பரதர்' என்ற பெயர், சங்க இலக்கியத்தில் மூன்று இடங்களில் கையாளப்பட்டுள்ளன.

இப்போது வழக்கிலுள்ள 'பரவர்' என்ற சொல் இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வெலி, கன்னியாகுமரி, மாவட்டங்களில் உள்ள மீனவர்களைக் குறிப்பதாக இருந்தாலும், அந்த 'பரவர்' என்ற சொல் சங்க இலக்கியங்களில் எந்தவொரு இடத்திலுமே கையாளப்படவில்லை என்பது விந்தைக்குரியதே!

பரதவர்கள் சிற்றரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பதற்குத் தக்க இலக்கியச் சான்றுகள் உள்ளன.

பாண்டியப் பெருமன்னர்களும், சோழப் பேரரசர்களும் பரதவர்களின் வலிமையையும், திண்மையையும், படை வலிமையையும் கண்டு பலகால் பெருங்கவலை கொண்டிருந்ததாக சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன.

தமிழகக் கடற்கரையில் பேராதிக்கம் கொண்டு வாழந்த பரதவர்களைத் தலைமையேற்க தலைவர்கள் இருந்தார்கள். முத்துக்குளித்தலுக்கு முழு உரிமை

பூண்டவர்கள், பரதவர்களின் தலைவர்களே. முத்துக்குளித்ததில் வரும் செல்வத்தை அந்தந்தப் பகுதியின் தலைவர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர்.

ஆதலால் பரதவ தலைவர்கள் சிறந்த செல்வமும் செல்வாக்கும், தலைமையும் பெற்றுத் தன்னிகரற்று விளங்கினர். பிற அரசர்களின் கொடுமைகளினின்றும், அவ்வரசர்களின் குடிமக்களால் ஏற்படும் தொல்லைகளினின்றும், தங்களைப் பாதுகாத்துக்கொள்ள, பரதவ தலைவர்கள் படைவீரர்களை வைத்திருந்தனர்.

பரதவர்கள் தங்களிடத்தே இருந்த செல்வச் செருக்காலும் படை பலத்தாலும் எவர்க்கும் அஞ்சாமல், அரசர்களுக்கு அடங்காமல் தொல்லைக் கொடுக்கும் வண்ணம் குறும்பு செய்து வந்தனர் என எண்ணலாம்.

சங்க இலக்கியங்கள் தந்த சான்றுகளிலிருந்து, பரதவர்கள் சிற்றரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் விளங்கினர் என்றும், தமிழகத்தின் பேரரசர்களாய் திகழ்ந்த பாண்டிய மன்னர்களையும் சோழப் பேரரசர்களையும் எதிர்க்கவல்ல பெரும் படைபலமும், பேராற்றலுடன் போராற்றலும் பெற்றிருந்தனர் என்றும் உண்மை புலனாகின்றது.

நெய்தல் நிலத்தைப் பற்றி சங்க இலக்கியங்கள் அள்ளித் தந்த குறிப்புக்களில் இருந்து, நெய்தல் நில மக்களாக பரதவர் முன் நிறுத்தப்பட்டுள்ளதை காண்கிறோம்.

நெய்தல் நில மக்கட்பிரிவில் நுளையர், திமிலர், பரதவர் என்ற பெயர்கொண்ட பிரிவினர் இருந்துள்ளனர் என்றாலுங்கூட, சங்க இலக்கியங்களில் பரதவரைப் பற்றிய செய்திகளே பல்கி காணப்படுகிறது. ஆதலின், நெய்தல் நில மக்கட்குள் பரதவரே முதன்மையானவர்கள் ஆவார்.

வலைவீசு புராணத்துள் 'பரதவர்'

வலைவீசு புராணத்துள் 'பரதவர்' என்ற சொற்கள் வரும் இடங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

பிரளயம், கோத்து பூமியைக் கொள்ளா நின்ற காலத்து, தோணியிலே சிவனுருவைப் பத்திரமாக வைத்துக் கொண்டிருந்து, இவ்வுருவை இப்போதும் வணங்கி, சீர்காழி நகருக்குத் தோணிபுரம் என்ற பெயர் உருவாவதற்குக் காரணமாக இருந்தவர் பரதவர் ஆவர். இப்பரதவ மரபை,

"தோணி புரமென் றொருநாமம்
தொல்லை யுலகில் வழங்குவித்துப்
பூணும் புகழா மரபினர்காண்
.... பரதவர் ....."[2]

என்ற வலைவீசு புராணம் பாடல் அடி குறித்துள்ளது.

சமுத்திரம் முற்றும் பெருகி, பூமியைக் கொள்ளா நின்ற காலத்து, சிவபெருமானைத் தோணியேற்றி, கரையில் பாதுகாப்பாக இருக்கச் செய்த மரபு, பரதவ மரபு. இதனை கீழ்வரும் பாடல்,

"துள்ளு மகர நெடுங்கடலில்
சொலிக்கும் வடவைக் கனலவித்து
வெள்ள மிகுந்து கிளர்ந்தோங்கி
விண்ணும் மண்ணும் பரந்தெழுநாள்
உள்ள மகிழந்து தோணிநமக்
குதவி யுடனே யீந்து புகழ்
கொள்ளும் பெருமை படைத்துடைய
குலங்காண் பரதவர் குலமென்றார்" [3]

என்ற வலைவீசு புராணம் பாடல், பிரளய காலத்தில் சிவபெருமானுக்கு உதவிய பரதவன் என்று குறித்துள்ளது.

சேரனுக்கு உடம்பிலே துவறதோடம் உண்டாகி, இத்தோடம் தீர உவரிக்கடல் நடுவில் மாமங்கம் எனும் தீர்த்தமாட (கும்பகோணம் மகாமகக் குளம்) மாறும் என்று மகாவிருடிகள் சொல்ல, வீரசோழ வேதியரையன் என்பான் ஒரு பரவன், சேரனைத் தோணியில் ஏற்றுவித்து தீர்த்தமாடுவித்து, துவறதோடம் மாற்றுவித்தான். இதனை

"ஆர் வளைகள் பலமுழங்க
வம்பொற் றோணி தனின்மீது
சேர பதியை யுடன்வைத்துக்
திரைவா ருதியில் நடுச்சென்று
சார வரிய மாமங்கம்
காட்டிச் சடநோய் தவிர்ப்பித்த
வாரமுடைய மரபுகா
ணுமையே பரதவர் மரபென்றார்" [4]

என்ற வலைவீசு புராணம் பாடல் அடிகள், சேரனுக்கு உதவிய வீரசோழ வேதியரையன் எனும் பரதவன் என்று மெய்ப்பிக்கின்றது.

பாண்டியனுக்கு ஆகாத நாளையிலே பிள்ளை பிறக்க, அப்பிள்ளை இருந்தால் ஆறு ஆண்டுகள் மழை பெய்யாது, பிராணிகள் நாசமாகுமென்றும், அதனைக் கடலில் போடுகிறது. தான் தருமம் என்றும் சோதிடர்கள் சொல்லப் பாண்டியன், தேவந்திர வல்லவதரையன் என்பானொரு பரதவனை அழைத்து, 'நீ இப்பிள்ளையைக் கடலிலே போட்டு வருவாய்' என்ற, அதற்கு அப்பரதவன் 'நாம் இப்பிள்ளையைக் கொல்வது சரியல்ல' என்று கருதிப் பிள்ளையைத் தன் மனைவி கையில் கொடுத்துத் தன் பிள்ளையைக் கடலிலே போட்டுச் சில காலம் சென்ற பின்பு பாண்டியனுக்கு இராசயோகம் பறிந்த காலத்துத் தான் வளர்த்த பிள்ளையைக் கொண்டு சென்று காட்டி, அப்பிள்ளைக்குப் பட்டாபிடேகம் செய்தார். 'தென்னவர் தம் குலந்தான்

உலகில் நிலை நிற்கப் பைம்பொன் மகுடம் புனைவித்த குலங்காண் பரதவர் குலம்', இதனை,

"கோல முடைய மைந்தனிவன்
பிறந்த நாளிற் கொடுமையினால்
ஞாலந் தன்னில் மழைபெய்யா
நடுவே கொடுபோய் நீயிவனை
வேலை தனிற்போக் கெனமொழிய
வேந்தன் மகளை வளர்த்துத்தன்
பாலன் தனைவே லையிற்போக்குங்
குலங்காண் பரதவர் குலம் ..."[5]

என்ற வலைவீசு புராணம் பாடல் வரிகள், பாண்டிய குலம் தழைக்க தன் குலத்து மைந்தனைக் கொன்ற பரதவன் என்று சுட்டி நிற்கின்றன.

பராசரப் பிரம்ம விருடி நிமித்தமாக மச்சேந்தி மாறிப் பரிமளகந்தியாகி, வேத வியாசரைப் பயந்தெடுத்த கெந்தவதியைக் குருகுல வமிசத்துச் சந்தனராசனுக்குத் திருமணம் செய்து கொடுத்து, அவன் புத்திரனாலே குருகுல வம்சம் பரிபாலித்தவர் பரதவர், இதனை,

"அருமறை சேர் வியாசனைமுன்
பயந்த வணங்கு தலையீந்து
குருமா மரபை நிலையிட்ட
குலங்காண் பரதவர் குலம்" [6]

என்ற வலைவீசு புராணம் செய்யுளடிகள், குரு வம்வசத்தை (கி.மு. 3000) உருவாக்கிய பரதவர் என்று சுட்டி நிற்கின்றன.

பார்வதியம்மன் இருந்த திருத்தொட்டில் உத்தரகோச மங்கைத் துறையை அடைந்தது என்பதை,

"மங்கைப் பதியைக் குறுகி பங்கயச்
செங்கண் மானைப் பரதவர் தவஞ்செய்கின்ற
மங்கைத் துறையில் வைத்து வந்தது"[7]

என்ற வலைவீசு புராணம் : 96 எனும் செய்யுள்வரிகள், மாதோட்டம் எனும் பெருந்துறையான உத்தரகோச மங்கைக்கு அதிபனான அதிரையன் மகளாகப் பார்வதியம்மன் எனும் திரைசேர் மடந்தை அவதரித்ததாக, குறித்துள்ளன.

பண்டைய நாளில் பரவர்

தமிழகத்தில் வாழ்ந்த மிகப் பழைய குடியினர் வில்லவர், மீனவர் என்பவர்களே, இவ்விருகிளையினத்தவர்களும் இந்தியா முழுவதும் பரவியிருந்த ஒரு முற்பட்ட கால மனித இனத்தவர் என்பது தெளிவு என்று கருதுகிறார் முதன் முதலில் தமிழக வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய வி. கனகசபை பிள்ளை.

மீனவரான பரவர்களின் வரலாற்றை அறிய முற்படும்போது, பண்டைய தமிழக வரலாற்றை அறிதல் சற்றே அவசியமாகிறது. தமிழக வரலாற்றை வரைவதற்கு மூல ஆதாரங்களாகத் திகழ்பவை கல்வெட்டுகள், செப்பேடுகள், பழங்காசுகள், தொல்லியல் பொருட்கள் ஆகியவையே.

அண்மைக் காலத்தில் கிடைத்த கல்வெட்டுகள், செப்பேடுகள், பழங்காசுகள், தொல்பொருட்கள் அனைத்தும் தமிழக வரலாற்றின் தொன்மையை உலகிற்கு உணர்த்துவது மட்டுமல்லாது உறுதிப்படுத்தவும் துணிகின்றது.

தமிழ் அறிஞர், சொல்லின் செல்வர் திரு.ரா.ப. சேதுப்பிள்ளை, ''அந்தக் காலத்தில் பழங்குடி மக்களாகிய பரதவர்கள் மரக்கல வாணிகத்தால் வளம் பெற்ற மாட மாளிகைகளில் வாழ்ந்தார்கள்'' [8] என்று கூறியுள்ளார்.

''தமிழ்நாட்டுப் பழங்குடிகளின் ஒரு வகுப்பார், பரதவர், கடற்கரையூர்களில் வாழ்பவர் பரதவர் என்று தமிழ் இலக்கியம் கூறும். பழங்காலத்தில் சிறந்திருக்க காவிரிப்பூம்பட்டினம், கொற்கை முதலிய துறைமுக நகரங்களில் பரதவர் செழித்து வாழ்ந்தார்கள். காவிரிப்பூம்பட்டினம்பரதவர் மலிந்த பயன்கெழு மாநகராக வியங்கிற்று. கொற்கைக் கடலில் மூழ்கி முத்தெடுத்து, 'தென்னாடுமுத்துடைத்து', என்று எந்நாட்டவர்க்கும் காட்டியவர், பரதவரே. பரதவர் என்பது பரதர் என்று குறுகி, பரவர் என்று மருவி வழங்குகின்றது. தூத்துக்குடியில் பரவர் குலத்தார் இன்றும் செழுமையுற்று வாழ்கின்றார்கள்''[9] என்று முதன்முதலில் சாகித்திய அக்காதெமி பரிசு பெற்ற 'தமிழின்பம்' என்ற தனது நூலில் சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்.

பைந்தமிழில் பரவன் என்ற சொல்லிற்குக் 'கடல் மனிதன்' என்ற பொருளாகும். இச்சொல்லின் பன்மைப் பதமான 'பரதவர்', பரவர் என்றும் வழங்கப்பட்டனர்.[10]

''கடல் கடந்த நாடுகளில் புகழ் பரப்பி நின்ற பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே நிலையாய் வாழ்ந்தனர் பரதவர். இதனால்தான் தமிழக மூத்த குடியினருள் ஒரு குடியினராக இருந்தவர் பரதவர்''[11] என்கிறார் தமிழறிஞர் சீனிவாச ஐயங்கார்.

பரதவரின் உடல் திறம் கண்டு வியந்த பாண்டிய மன்னர்கள் கடற்கரையில் அடுத்தப் பகுதியை ஒரு குறுநில நாடாகவே கருதினர். பரதவர் தெரிந்துகொண்ட குலத்தலைவரை குறுநில மன்னராக ஏற்றுக்கொண்டு, அவர்களிடமிருந்து ஆண்டுக்கொரு முறை கப்பம் மட்டும் பெற்று வந்தனர். அந்நாட்களில் நிலவிய இந்தப் பிற்பட்ட காலத்திலும் நாயக்கர் மதுரையை ஆண்ட காலத்திலும் நீடித்து வந்தது.

முத்துக்குளித்துறை டச்சுக்காரர்கள் வசம் இருந்தபோது, மலபார் நாட்டின் ஆளுநராகவும் (Governor of Dutch Malabar), பிறகு இலங்கையின் யாழ்ப்பாணத்துப்

படைத்தலைவராகவும் (Commander of Jaffna), செயலாற்றிய வான் ரீத் (Hendrik van Rheede)', என்பவர் 1669-ஆம் ஆண்டில் இலங்கை ஆளுநரான வான்கோன்ஸ் (Rijchloff van goens), என்பவருக்கு எழுதிய கடிதத்தில் போர்த்துக்கீசியர் வருகைக்கு முன்பு நிலவிய முத்துக்குளித்துறையின் நிலைமையை இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பண்டைய நாளில் கடலையடுத்த இடங்களை மன்னர்களிடம் இருந்து பெரும் பணம் கொடுத்துப் பரதவர் பெற்று, அப்பகுதிகளில் நிலையாகத் தங்கத் தொடங்கினர். தங்களுக்கென்று தனித்த தலைவனை மட்டும் தாங்களே தேர்வு செய்தனர். பின்னைய நாட்களில், தெரிவு செய்த தலைவனின் வழித்தோன்றல்கள் பரதவரின் மன்னர்களாகவே அழைக்கப்பட்டு வந்தனர். கடல்துறை மக்களின் வருமானத்தைப் பெற உரிமை படைத்த பரதவரின் மன்னர்கள் ஒவ்வொரு முத்துக்குளிப்பின்போது அனைத்து மரியாதையுடன் காணப்பட்டனர்.[12]

பாண்டிய மன்னர்கள் மிகுந்த செல்வாக்குடனும் அதிகாரத்துடனும் ஆட்சி புரிந்த காலங்களில், பரதவர் அவர்களிடமிருந்து சில உரிமைகளையும் சலுகைகளையும் பெற்று வந்தனர். பரதவர் வருடா வருடம் பாண்டிய மன்னர்க்கு ஒரு சிறிய நன்கொடை மட்டும் கொடுத்துவிட்டு வேறு எவ்வித வரிச்சுமையும் இல்லாமல் இருந்தனர்.[13]

பரவ இன மரபு வரலாறு

இந்திய மக்களின் பண்டைய தொகுதியில் முதன்மையாய் இருந்தவர்கள், திராவிட இனத்தவரே.

திராவிட இனத்தவர் மேற்கு ஆசியாவில் குறிப்பாக நடுநிலக் கடல் பகுதியில் தோன்றி கொஞ்சம் கொஞ்சமாய் இந்தியாவிற்கு கடல் வழியாகவும் நிலவழியாகவும் வந்திருக்க வேண்டும் என்ற கருத்து மானிடவியல், வரலாற்றியல், மொழியியல் அறிஞர்களால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது.

திராவிடர்களுக்கு முற்பட்ட காலத்தில் பழங்குடி மக்கள் தமிழகத்தில் வாழ்ந்ததாகவும், திராவிடர்கள் நடுநிலக் கடலினத்தைச் சேர்ந்தவர்களாகவும், திராவிடர்கள் நடுநிலைக்கடல் இனத்தில் இருந்து பிரியாத காலத்திலேயே ஆற்றிலே செலுத்தக்கூடிய பலவகைப் படகு அமைப்புகளைச் செய்யும் திறன் கொண்டிருந்ததாகவும். காற்பங்கு அளவுள்ள சுக்கான் படகு செய்யும் முறையையும் சங்குச் சிப்பியைப் பயன்படுத்தும் முறையையும் அறிந்திருந்ததாகவும் ஹார்னெல் கருதுகிறார்,

தென்னிந்தியாவில் வாழ்ந்து வந்த திராவிட இனத்து மக்களில் ஒரு சாரார் கி.மு. 5000 அளவில் வணிகம் பொருட்டு கடல் வழியாகவும், நிலவழியாகவும் மேற்காசிய நாடுகளோடு தொடர்பு கொண்டு, அதன் மூலம் நடுநிலக்கடற்பகுதியில்

திராவிட குடியேற்றங்கள் சில அமைக்கப் பெற்றிருக்கலாம் என்ற கருத்தும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்.

இந்திய நாகரிகத்தையும் பண்பாட்டையும் முழு நிறைவுடையதாக்கிப் பொலிவுறச் செய்தவர்கள், திராவிடர்களே ஆவார்.

கி.மு. 5000-ஆம் ஆண்டு முதற்கொண்டே தமிழகம், இலங்கை ஆகிய இருநாடுகளுக்கிடையே வணிகத் தொடர்பு இருந்ததை தொல்லியல் சான்றுகள் உறுதிப்படுத்துகின்றன. இக்காலம் ஆரியர்களின் தோற்றத்திற்கு மிக முந்தியவையாக இருப்பதால், தமிழர் இனம் திராவிடர் இனமே என்றும், பரதவரின் இனப்பாகுபாடும் திராவிடர் இனமே என்றும் துணிந்து கூறலாம்.

முத்துக்குளித்தலில் பரவர்

சங்க காலத் தமிழ் இலக்கியங்களில் முத்துக்கள், சங்குகள் பற்றி ஏராளமான தகவல்கள் இடம் பெற்றுள்ளன. சங்க இலக்கியங்கள் கொற்கை நகரில் நடந்த முத்துக்குளித்தல், முத்து வணிகம் பற்றிக் குறிப்பிடுவதை ஆய்ந்து நோக்கும்போது, முத்துக்குளித்தலில் ஈடுபட்டவர்கள், பரதவர்கள் என்று கூறப்படும் பரவர்கள் என்றே தெளிவாகுகிறது.

ஆதி வராலாற்றுக் காலத்தில் புகழ்பெற்ற துறைமுகமான கொற்கையிலிருந்தும் பின்னர் மதுரையிலிருந்தும் அரசாண்ட பாண்டியர்கள் முத்துக்குளித்தலையும் முத்து வணிகத்தையும் தங்களது ஏகபோக உரிமையாக தம் வசம் வைத்திருந்தனர். எனினும், முத்துக்குளித்தலிலும் முத்து வணிகத்திலும் முழுமையாக ஈடுபட்டவர்கள், பரதவர்களே!

சங்க காலத்திற்கு முன்பிருந்தே முத்துக்குளித்துறையில் சங்கெடுத்தல் நிழ்ந்து வந்திருக்கவேண்டும் என்பதைச் சங்க இலக்கியங்களும், அகழ்வாய்வுகளும் மெய்ப்பிக்கின்றன. முத்துக் குளித்தல், சங்கெடுத்தல் ஆகிய இரு தொழில்களையும் பரதவர்களே மேற்கொண்டிருந்தனர்.

பரவரும் வணிகமும்

சங்க கால வரலாற்றுச் சூழலில் பரதவர் நெய்தல் நிலத்தில் கடல் தொழில் மட்டும் செய்து வாழ்ந்தவர் அல்லர்.

அவர்கள் கடற்கரைப் பகுதியில் பெரும் வணிகர்களாகவும், மன்னர்க்கு நிகரான செல்வச் செழிப்பு உள்ளவர்களாகவும், தமிழகக் கடற்கரையில் நிலப்பகுதிகளில் தனியாட்சி புரிந்த குறுநில மன்னர்களாகவும், வேந்தர்களுக்குப் படையுதவி புரிந்த சிற்றரசர்களாகவும் மேன்மையோடு வாழ்ந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மையே!

பரதவர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபட்டு அவ்வணிகத்தில் உரிமையும் தலைமையும் பெற்று விளங்கினர் என்று சங்க இலக்கிய சான்றுகள் உரைக்கின்றன.

தமிழ்நாடு, கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூறு ஆண்டுகட்கு முன்னரே கிரேக்கம், உரோமம் முதலிய மேலை நாடுகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது வரலாறு கண்ட உண்மையாகும்.

இதற்குச் சிறந்த சான்றுகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாய் காணப்படுகின்றன. அகழ்வாய்வு சான்றுகளும், நாணயச் சான்றுகளும் இவ்வுண்மையை புலப்படுத்துகின்றன.

கடல் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட மரக்கலங்களை இயக்கியவர்கள் பரதவர்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

பரதவர்கள் உலகின் தலைசிறந்த கடலோடிகளாக விளங்கினர் என்பதை இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.

ஆண்டில் குறிப்பிட்ட காலத்தில் வீசும் வணிகக் காற்றின் வரவை அறிந்து கலஞ்செலுத்தும் நுண்ணறிவும் திறனும் பெற்றப் பண்டைத் தமிழர் பரதவர்கள்தான்.

பரதவர்கள் மரக்கலங்களைச் செலுத்தும் வெறும் தொழிலாளர்களாக மட்டுமின்றி, வணிக உரிமையாளர்களாகவும் இருந்துள்ளனர். செல்வமும், செல்வாக்கும் படைத்த பரதவர்கள் கடல் வணிகத்தில் உரிமையேற்று புகழ் பெற்றிருந்தனர்.

இந்திய நாடு உலக நாடுகளுடன் ஆயிரமாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் வணிகத் தொடர்பு கொண்டு வரலாறு படைத்துள்ளது என்றால், அதற்கான பெருமை தமிழகத்தையே சாரும், தமிழகத்தின் பரதவர்களையே சாரும் என்பது எவரும் மறுக்கமுடியாது, மறக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை.

பரவரின் தொன்மை

மனித குலம் தோன்றியவுடன் தொடர்ந்து வருவது வேட்டைத் தொழில் பண்பாடாகும். வேட்டைத் தொழில் என்பது கடல்மீன் வேட்டையையும், காட்டுவிலங்கு வேட்டையையும் குறிக்கும். எனவே, மூத்தகுடி மக்கள் என்ற முறையில் முன்னிற்பவர்கள், மீனவர்களும் வேடவர்களுமே.

இதனை உருசிய நாட்டு ஆய்வாளர் கி.மா. போன்காரத் லேவின் (G.M. Bongard Levin) என்பவர், "தென்னிந்திய இடைக் கற்காலக் குடியிருப்புகளில் வாழ்ந்த மக்கள், கி.மு.4000 ஆண்டின் தொடக்கத்தில் மீன்பிடிப்பிலும் வேட்டையிலும் ஈடுபட்டிருந்தார்கள்" [14] என்று கூறியுள்ளார்.

பரவர் நாகரிகம்

பரவரின் வணிகத்துடன் அவர்களது கலாச்சாரம் பல நாடுகளில் பரவி இருந்தது. அது போன்று ரோமர்களும், கிரேக்கர்களும், அரேபியர்களும், சீனர்களும்

வணிகம் நடத்திய போது அவர்களுடைய கலாச்சாரமும் பரிவர்த்தனையாக அமைந்தது.

தமிழ்நாட்டில் சிந்துவெளி நாகரிக காலத்திலேயே வெளி நாடுகளுடன் வணிகத் தொடர்பு உருவாகியிருந்தது.

பரவர் இனம் பற்றிய குறிப்புகள் மொகஞ்சதாரோ-அரப்பா கல்வெட்டுகளில் பரவலாகக் காணப்படுகின்றன. ஆகவே, இப்பகுதிகளில் பரவர் வாழ்ந்தனர் என்றும், அவர்களின் சந்ததியினர் முத்துக்குளித்துறையின் கடலோரப் பகுதியிலும், இலங்கையின் மன்னார் பகுதியிலும் இன்றும் வாழ்கின்றனர் என்றும் ஹீராஸ் அடிகள் குறிப்பிடுகின்றார்.

ஹீராஸ் அடிகள், "பரதவர்கள் சிந்து சமவெளியில் வாழ்ந்த மிகப் பழமையான இனக்குழுக்களில் ஒன்று; சந்திரசுலப் பரதவர்களாகிய இவர்கள் மதுரை பாண்டிய மன்னர்களின் முன்னோர்கள் மட்டுமல்லாது, இவர்களின் மரபினர்தாம் பரதவர்கள்", என்று கூறுகிறார்.

பிழைப்பைத் தேடி இவர்கள் சிந்து சமவெளியில் இருந்து புறப்பட்டு, தெற்கே நோக்கி வந்து கோரமண்டலக் கடற்கரையின் தென்கிழக்கு பகுதியிலும், இலங்கையின் மேற்குக் கரையிலும் நீர்கொழும்புவிலிருந்து (Negombo) மன்னார் (Mannar) வரையுள்ள பகுதியிலும் குடியேறினர்.

சிந்து சமவெளி கல்வெட்டுகள் பரவர்களுக்கும் நிலாவிற்கும் இடையேயுள்ள வரலாற்றுத் தொடர்பை உணர்த்துகின்றன. பரவர் இனம் நாளடைவில் வளர, அவர்களுக்குள் இரு பிரிவுகள் தானாகவே தோன்றின. இவ்விரு பிரிவுகளும் தங்களை வேறுபடுத்தி காட்டுவதற்காகவே, 'பகல் பரவர்' (Sun Paravas), 'நிலாப் பரவர்' (Moon Paravars) என்ற பெயர்களை ஏற்றுக் கொண்டனர்.

பெரும்பாலான கல்வெட்டுகளில் 'நிலாப் பரவர்' குறிப்பிடப்படுவதால், அவர்கள் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகவும் எண்ணிக்கையில் அதிகமானவர்களாகவும் கருதப்படுகின்றன.

மீனவர்களிடையே பரவர்கள் 'நிலாப் பரவர்' பிரிவை சேர்ந்தவர்களாவார்.

அவர்கள் சிறப்பு வாய்ந்தவர்களாக விளங்கியமையால், அவர்கள் வாழ்ந்த இடம் பரவநாடு என்று வழங்கப்பட்டது.

சங்க இலக்கியத்துள் பரதவர்

'பரதவர்' என்பவர் நெய்தல் நில மக்களாகிய மீன்பிடி குலத்தவர் என்று வின்ஸ்லோ அகராதி (Winslow Dictionary) குறிப்பிடுகின்றது.[15]

வீரமாமுனிவர் தமது சதுரகாதியில், பரதவர் நெய்தல் நில மக்கள் என்றே உரைக்கின்றார்.

பண்டைத் தமிழ் பெருங்குடி மக்களான பரதவர், நெய்தல் நிலத்து மண்ணின் மைந்தர்கள் என்று சங்க இலக்கியத்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

சங்க இலக்கியங்கள்

சங்க காலம் என்பது கி.மு. 300-ஆம் ஆண்டில் தொடங்கி கி.பி.300-ஆம் ஆண்டு வரையிலான சுமார் 6 நூற்றாண்டுகளை குறிப்பிடுவதாகும். சங்க காலத்து இலக்கியங்களே, 'சங்க இலக்கியங்கள்' என்று வழங்கப்பட்டு வருகின்றது.

சங்க இலக்கியம் என இப்போதுள்ள நூலில், மொத்தம் 2381 பாடல்கள் உள்ளன. அவற்றுள் 102 பாடல்களை இயற்றிய புலவர்களின் பெயர் விபரங்கள் கிட்டவில்லை. மீதமுள்ள 2279 பாடல்களை 473 புலவர் பெருமானார் இயற்றியுள்ளனர்.[16]

சங்க இலக்கியங்களில் எட்டுத் தொகையும், பத்துப்பாட்டும் சிறப்பு இலக்கியங்களாகும். எட்டுத் தொகையில் அகத்திணையைச் சேர்ந்த நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அகநானூறு ஆகிய 5 நூல்களிலும், பத்துப்பாட்டில் பெருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய 5 நூல்களிலும், நெய்தல் நிலம் பற்றிய செய்திகள் நிரம்பக் காணப்படுகின்றது.[17]

சங்கத் தமிழ் இலக்கியங்களில் பல புலவர்கள் நெய்தனிலத்தின் சிறப்பையும், அங்கு காணும் செடிகொடி மர வகைகள், உயிரினங்கள்,

மக்கள் வரலாற்றின் சிறப்பையும் பாடியுள்ளனர். சங்க இலக்கியங்கள் கூறும் செய்திகள் பல கல்வெட்டு, செப்பேடு, தொல்லியல் பொருட்களால் உறுதி செய்யப்படுகின்றன.

'பரதவர்' என்ற பெயர், சங்க இலக்கியத்துள் பல இடங்களில் காணப்படுகின்றது.[18]

அவை :

நற்றிணை - 4:1, 38:2, 45:3, 63:1, 74:4, 87:8, 101:8, 111:3, 175:1, 199:6, 207:8, 219:6, 239:2, 303:9, 349:10, 372:11, 388:4;

குறுந்தொகை - 184:6, 304:4, 320:1;

ஐங்குறுநூறு - 195:1;

கலித்தொகை	-	106:24;
அகநானூறு	-	10:10, 28:14, 30:3, 60:1, 65:11, 140:1, 187:22, 210:1, 226:7, 250:11, 280:14, 300:1, 330:15, 340:19, 350:11, 366:6;
பட்டினப்பாலை	-	90, 112;
மதுரைக்காஞ்சி	-	97, 144;
சிறுபாணாற்றுப்படை	-	159 ;
பெருநராற்றுப்படை	-	218 ;
புறுநானூறு	-	24:4, 378:1.

மேற்கண்ட பட்டியலின்படி 50-க்கும் அதிகமான இடங்களில் குறிக்கப்பட்டுள்ள 'பரதவர்' என்ற பெயருக்கு சங்க இலக்கியங்கள் ஈன்றுள்ள முக்கியத்துவம் தெளிவாகிறது. சங்க இலக்கியங்களில் புலவர்களால் பாடப்பட்ட நெய்தல் நிலச் சிறப்பினை கீழ்காணும் பரிமாணங்களில் உணரலாம்.

நெய்தல் நிலம்

நெய்தல் நிலமானது, நிலத்தின் ஐந்து பகுதிகளான குறிஞ்சி முல்லை மருதம் பாலை நெய்தல் ஆகியவற்றில் ஒன்றாகும்.

"நெய்தல் என்பது கடலும் கடல் சார்ந்த பகுதியுமாகும். நெய்தல் நிலப்பகுதியில் மிகுந்து காணப்படும் நெய்தற்பூ காரணங்கொண்டு, 'நெய்தல்' எனப் பெயர் வந்ததென்பர், என்று கலைக்களஞ்சியம் குறிப்பிடுகிறது.[19]

"முல்லை, குறிஞ்சி, நெய்தல், மருதம் ஆகிய இவை, அவை மலரும் நிலத்தின் பெயருமாம்", என்று 'அபிதான சிந்தாமணி' விளக்குகிறது.[20]

"தொல்காப்பியர் காலத்திற்கு பல நூற்றாண்டுகட்கு முற்பட்டத்தமிழ் மக்கள் மலைநாட்டிற்குக் குறிஞ்சி நிலம் எனப் பெயரிட்டார்கள். குறிஞ்சிப் பூவே சிறப்புப் பூவாதலால், குறிஞ்சியென மலையையும் மலை சார்ந்த இடத்தையும் குறித்தார்கள். அவ்வாறே, பிற நிலங்கட்கும் முல்லை, பாலை, மருதம், நெய்தல் எனப் பெயர் வைத்ததற்கும் சிறந்த காரணங்கள் உள்ளன" என நானிலத்திற்கு பெயர் வந்த காரணம் பற்றி தனிநாயகம் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.[21]

நெய்தல் நிலத்து மலர்களும் மரங்களும்

நெய்தல் நிலத்தில் தாழை, புன்னை, ஞாழல், செருந்தி, அடும்பு, நெய்கற்பூ போன்ற எண்ணற்ற மலர்கள் உள்ளன.

தாழை

கடலோரத்திலும் கழியோரத்திலும் அடர்ந்து, செழித்து வளர்ந்திருக்கும் தாழையின் அடிமரம் சொரசொரப்புடையது என்றும், கொத்துக்களாக மேலே எழும்பி தோன்றும் இலைகளின் இரு விளிம்பிலும் முட்கள் உண்டு என்றும், பெருங்களிற்று யானையின் தந்தம் போன்று அரும்பு நீண்டு முதிர்ந்திருக்கும் என்றும், அது பெண்மான் தலைசாய்ந்து நிற்பது போன்று தோன்றும் என்றும் புலவர் நக்கண்ணையார் நயம்பட விவரித்துள்ளார்.

"இறவுப் புறத்து அன்ன பிணர்படு தடவுமுதல்
கறவுக் கோட்டன்ன முள்இலைத் தாழை,
பெருற்களிற்று மருப்பின் அன்ன அரும்புமுதிர்பு,
நல்மான் உளையின் வேறுபடத் தோன்றி" [22]

அடுக்கடுக்கான மடல்களுக்குள்ளே நடுவிடத்தில் வெண்ணிறத்திலும் பொன்னிறத்திலும் அரும்பிப் பூக்கும் தாழை, கடற்கரையில் நறுமணத்தை அள்ளி வீசும் என்பதை,

"கமழும் தாழைக் கானலம் பெருந்துறை" [23]

என்று பதிற்றுப்பத்து பாடலின் அடிகள் கூறுகிறது.

நெய்தல் மக்கள் சுறாமீன் கிழித்த தங்கள் வலையினைத் தாழையின் மீது போட்டு உலர்த்துவார்கள் என்ற செய்தியை,

"கோட்சுறா கிழித்த கொடுமுடி நெடுவலை
தண்கடல் அசைவளி எறிதொறும், வினைவிட்டு
முன்றில் தாழை தூங்கும்" [24]

என்று அகநானூறு பாடல் தெரிவிக்கின்றது.

பரதவர் மகளிர் தாழை விழுதினால் ஊஞ்சல் கட்டியாடுவதை,

"ஞாழல் ஓங்குசினைத் தொகுத்த கொடுங்கழித்
தாழைவீழ் கயிற்று ஊசல் தூங்கி..." [25]

என்று அகநானூற்று பாடல் அடிகள் சுவைபடக் கூறுகின்றன.

புன்னை

கருநில அடிமரமும் கிளைகளும் கொண்ட புன்னை மரங்களில் வெண்ணிற புன்னை மலர்கள் கொத்துக் கொத்தாக பூத்திருக்கும்.

கடற்கரைச் சோலையிலும் மக்கள் வாழ்கின்ற மனை முற்றத்திலும் புன்னை மரங்களில் பூத்த புன்னை மலர்கள் தாழை மலரோடு சேர்ந்து மணம் வீசுகிறது என்று,

"மன்றப் புன்னை மாச்சினை நறுவீ
முன்றில் தாழையொடு கமழும்
தெண் கடற் சேர்ப்பன்" [26]

என்ற நெய்தல் தத்தனாரின் நற்றிணை பாடல் அழகுற இயம்புகிறது.

கடற்கரைச் சோலையில் உள்ள சிறு குடியில் இருந்து கடலில் செல்லும் பரதவர், நீலநிறப் புன்னையின் கொழுவிய நிழலிலே தங்கி, குளிர்ந்த பெரிய கடற்பரப்பில் செல்லுதற்குரிய நல்ல நேரம் பார்த்து, அங்கு முறுக்குண்டு கிடக்கும் வலையைப் பிரித்துப் புலர்த்திக் கொண்டு காத்திருப்பர் என்பதை

"கானல்அம் சிறுகுடிக் கடலிமேம் பரதவர்
நீல்நிறப் புன்னைக் கொழுநிழல் அசைஇ
தண்பெரும் பரப்பின் ஓண்பதம் நோக்கி
அம்கண் அரில்வலை உணக்கும் துறைவன்" [27]

என்ற அம்மூவனாரின் நற்றிணை பாடல் கவிநயத்தோடு விளக்குகின்றது.

புன்னை மரத்தின் நிழலை வர்ணிக்கும் வண்ணம், அகன்ற அல்குலையும், மெல்லிய இடையையும் உடைய பரதவர் தம் இளமகள், புன்னையின் கொழுநிழலில் இருந்துகொண்டு, முற்றாத இளமஞ்சள் கிழங்கின் பசிய புறத்தைப்போல அடுக்கடுக்கான சருச்சரையையுடைய, கழிகளினின்றும் பிடித்த இறாமீன் குவியலை உலர்த்துவதற்காக எதிரே வெயிலில் போகட்டுப் பரப்புவாள் என்று புலவர் வெள்ளியந்தின்னனார் கீழ்க்காணும் பாடலில் பாடியுள்ளார்.

"முற்றா மஞ்சட் பசும்புறங் கடுப்பச்
சுற்றிய பிணர சூழ்கழி இறவின்
கணங்கொள் குப்பை உணங்குதிறன் நோக்கி
புன்னை அம் கொழுநிழல் முன்உய்த்துப் பரப்பும்
....
அகன்ற அல்குல் ஐதுஅமை நுசுப்பின்
மீன்எறி பரதவர் மடமகள்....." [28]

புன்னை மர நிழலை சுவைபட செய்தியோடு அழகுற மதுரை மருதங்கிழார்மகனார் புலவர் பெருங்கண்ணனார் இவ்வாறு பாடியுள்ளார்:

"திண்திமில் பரதவர் ஒண்சுடர்க் கொளீஇ
நடுநாள் வேட்டம் போகி வைகறைக்
சுடர்மீன் தந்து கானற் குவைஇ
ஓங்கு இரும் புன்னை வரிநிழல் இரந்து,
பெரிய மகிழம் துறைவன்" [29]

இப்பாடல், திண்ணிய மீன் படகிலே நுண்ணிய விளக்குகளைக் கொளுத்திக் கொண்டு இரவு நடு ஞாமத்தில் மீன்பிடிக்க செல்லுகின்ற பரதவர், கடலிலே பிடித்த மீன்களை விடியற்காலையில் கொண்டு வந்து கழிக்கரைச் சோலையில் குவித்து, உயர்ந்த கரிய புன்னை மரங்களின் வரிசையாய் அமைந்த நிழலில் அமர்ந்து, உடல்வலி தீர தேன் மணம் வீசும் தெளிந்த கள்ளைத் தமது உறவினருடன் கூடிக் குடித்துப் பெரிதும் மகிழ்வர் என்ற விளக்கத்தைத் தருகின்றது.

ஞாழல்

புலிநகக் கொன்றை என்று பெரிதும் அழைக்கப்படும் ஞாழல் மரத்தில் பூக்கும் ஞாழல் மலர்கள் செம்பொன்னிறங்கொண்டு நறுமணம் வீசுபவையாகும்.

பரதவ மகளிர் ஞாழல் மலரைக் கண்ணியாய்ச் சூடிக் கொள்வர் என்றும், அதன்தளிரைத் தழையடையாய் அணிவர் என்றும் அம்மூவனார் புலவரின்,

"எக்கர் ஞாழல் மலர்இல் மகளிர்
ஓண் தழை அயரும்..."[30]

என்ற ஐங்குறுநூறு பாடல் வரிகளும்

"கானல் ஞாழற் கவின்பெறுந் தழையன்"[31]

என்ற ஐங்குறுநூறு பாடல் அடிகளும் வருணிக்கின்றன.

செருந்தி

கடற்கரையில் காணப்படும் செருந்தி மரங்களில் இம்மலர்கள் பூத்திருக்கும்.

பொன் போன்ற ஒளி பொருந்திய கொத்துக்களை உடைய செருந்தியின் பன்மலர்களைக் கொய்து மாதர்கள் சூடிக் கொள்வர் என்று

"பொன்னடர்ந் தன்ன ஒள்ளிணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பெறு கோதையள்"[32]

என்ற அகநானூற்று பாடலில் புலவர் அம்மூவனார் உவமையோடு கூறியுள்ளார்.

அடும்பு

கடற்கரை மணற்பரப்பில் பரந்து படர்ந்து கிடக்கும் அடம்பங்கொடியில் பூக்கும் அடும்பு மலர்கள் வெண்ணிறமாயும் மங்கிய செந்நிறமாயும் இருக்கும்.

இம்மலரை மகளிர் கூந்தலில் சூடிக்கொள்வர் என்று,

"மாகொடி அடும்பின் மாயிதழ் அலரி
கூந்தல் மகளிர் கோதைக் கூட்டும்"[33]

என்ற நற்றிணை பாடல் வரிகளும்,

"ஆய்பூ அடும்பன் அலர்கொண்டு உதுக்காண்
கோதை புனைந்த வழி"[34]

என்ற கலித்தொகை பாடல் வரிகளும் உரைக்கின்றன.

"அடும்புகொடி சிதையவாங்கி கொடுங்கழிக்
குப்பை வெண்மணற் பக்கம் சேர்த்தி,
நிறைசூல் யாமை மறைத்து ஈன்று, புதைத்த
கோட்டு வட்டு உருவின் புலவு நாறு முட்டை
பார்ப்புஇடம் ஆகும் அளவை பகுவாய்க்

கணவன் ஓம்பும் கானல்'' [35]

என்ற அகநானூற்று பாடலில் புலவர் குமுழி ஞாழவார் நப்பசலையார்.

சூல் நிறைந்த பெண் ஆமை வெண் மணற்கரையில் இட்டுப் புதைத்து வைத்த தந்தத்தால் ஆன சூதாடும் வட்டின உருவினை மானும் முட்டைகளை, மணலால் மூடி அங்கு படர்ந்துள்ள அடப்பங் கொடியினை ஒருங்கே இழுத்துத் திரட்டி, மறைத்து வைக்கும் அந்த முட்டைகள் எல்லாம் குஞ்சாகும் வரை ஆண்யாமை பொறுப்போடும் விழிப்போடும் அந்த அடும்பு அடி முட்டைமேல் இருந்து அடைகாத்து வரும் என்ற செய்தியை அப்படியே அழகுற நம் மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார்.

அடர்ந்து படர்ந்த அடப்பங்கொடிகளைத் திரட்டி, அதன் மீது கைம்மை நோன்பு மேற்கொண்ட மகளிர் கிடப்பதை,

''படிவ மகளிர் கொடி கொய்து அழித்த
பொம்மல் அடும்பின்''[36]

என்ற நற்றிணை பாடலில் புலவர் முக்கல் ஆசான் நல் வெள்ளையார் கூறியுள்ளார்.

நெய்தற் பூ

கடற்கரையை அடுத்து காணப்படும் நீர்க்கழிகளில் படர்ந்திருக்கும் நீர்ப்பூங்கொடியான நெய்தற் கொடிகளில் பூத்துக் குலுங்கும் மலரே, நெய்தல் மலர்,

கடல் சார்ந்த நிலத்தில் மற்ற பூக்களைவிட நெய்தல் மலர்கள் அதிகமாக காணப்படுவதாலும், ஏனைய நிலப்பகுதிகளில் காணப்படுவதைவிட அங்கு மிகுதியாக காணப்படுவதாலும், இந்நிலம் நெய்தல் என்ற பெயர் பெற்றது.

சங்க இலக்கியத்தில் பல பாடல்களில் குறிக்கப்பட்ட நெய்தல் கொடியும் நெய்தற்பூவும், இப்போது கடற்கரைப் பகுதியில் காணப்படாததொன்றும் பலருக்கு புரியாததொன்றும் என்றேயாகிவிட்டது.

இலக்கியத்தில் தவிர, உண்மையில் இப்போதைய கடற்கரைப் பகுதியில் நெய்தல் என்ற ஒரு செடி கொடி வகையே இல்லாமல் போய்விட்டது.

சங்க இலக்கியங்களும் எட்டுத்தொகையின் ஐங்குநுறூறு பாடல்களில் ஒரிடத்திலும், பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப் படை பாடல்களில் ஒரிடத்திலும், மதுரைக்காஞ்சியில் ஒரிடத்திலுமாக மொத்தம் மூன்றிடங்களில் மட்டுமே நிலத்தைச் சுட்டும் பொருளில் நெய்தல் என்ற சொல் ஆளப்பட்டுள்ளது, ஏனையவிடங்களில் எல்லாம் நெய்தல் என்பது நெய்தற் கொடியையோ மலரையோ மட்டும் குறிப்பதாகவே தான் கையாளப்பட்டுள்ளது.[37]

கழியின்கண் பூத்துள்ள நீல மணிபோலும் நெய்தல் மலர்களின் மீது புன்னையின் தங்கத்தாது நிறையச் சொரிந்து திகழ்கிறது என்று புலவர் கீரங்கீரனார்,

''மணிஏர் நெய்தல் மாமலர் நிறைய,

பொன் நேர் நுண்தாது புன்னை தூஉம்,
வீழ்தாழ் தாழைப் பூக்கமழ் கானல்''[38]

என்ற நற்றிணை பாடலில் பொருத்தமுறப் பாடியுள்ளார்.

பரதவ மகளிர் ஞாழல் மலருடன் நெய்தல் மலரையும் சேர்த்துக் கதம்பமாய்க் கட்டி அணிவர் என்று

''.... .... ஞாழல்
வண்டுபடத் ததைந்த கண்ணி, நெய்தல்
தண்ணரும் பைந்தார்...''[39]

என்ற அகநானூறு பாடலில் புலவர் அம்மூவனார் விளக்கியுள்ளார்.

பனை

நெய்தல் நிலத்தில் அன்றும் இன்றும் மிகுதியாய் காணப்படுவது, விண்ணுற ஓங்கிய பெண்ணையாம் பனை மரங்கள்தான். நெய்தனில் மணற்மேடுகளில் கும்பல் கும்பலாக வளர்ந்திருக்கும் பனைமரங்கள் 'பனந்தோப்பு' என்றழைக்கப்படும்.

''பனை மரத்திலிருந்து கள் இறக்கும் பழக்கம் பண்டைய நாளிலிருந்தே வருகிறது என்றும், பரதவர் கள் குடித்து மகிழ்வர் என்றும்''[40] உலோச்சனார் புலவரின் நற்றிணைப் பாடல் வரிகள் எழிலுற இயம்புகின்றன.

நெய்தல் நிலத்துப் பறவைகள்

நெய்தல் நிலத்துக்குரிய பறவைகள் அன்னம், அன்றில், கடற்காக்கை, நாரை, கொக்கு முதலியனவாம். ஆந்தையும் வெளவாலும் கடற்கரைச் சோலையிலே அலைவதுண்டு.

அன்னம், அன்றில் என்ற இரு பறவையினமும் இப்போது இருப்பதாக தெரியவில்லை.

நெய்தல் நிலத்தே, படகில் ஏறி மீன் வேட்டை ஆடுவோர் எறியளியைக் கொம்பினையுடைய கொடுஞ்சுறா மீது விசையாக வீசி எறிவர். அதனைக் கண்டு ஆங்கிருந்த குறுகிய கால்களை உடைய வெண்ணிற அன்னக் கூட்டம் பறந்தோடிவிடும் என்று புலவர் கணக்காணன் தத்தன்

''கொல்வினைப் பொலிந்த கூர்வாய் எறியுளி
முகம்பட மடுத்த முளிவெதிர் நோன் காழ்
தாங்குஅரு நீர்ச் சுரத்து எறிந்து வாங்கு விசைக்
கொடுந் திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய,
நெடுங்கரை இருந்த குறுங்கால அன்னத்து
வெண்தோடு இரியும்''[41]

என்ற குறுந்தொகை பாடலில் அன்னத்தைப் பற்றி விளக்கிக் கூறியுள்ளார்.

நெய்தல் நிலத்து உயிரினங்கள்

நெய்தல் நிலமானது கடலும் கடல் சார்ந்த இடம் என்று கூறப்படுவதாலே, அந்நிலத்தின் உயிரினங்களை கடல்வாழ் உயிரினங்கள், நீர்க்கழிவாழ் உயிரினங்கள் என இருவகைப்படுத்தி கொள்ளலாம்.

கடலில் வாழும் மீனினங்களான சுறா, இறா, ஆமை, அயிரை, ஆரல், அயிலை, கெடிறு, கயல், முதலை ஆகியன காணப்படுகின்றன.

கடற்கரையோரத்து நீர்வாழ் உயிரினங்கள் என அலவன், சங்கு, இப்பி, ஆமை, நீர் நாய் போன்றவை உண்டு.

முத்துச்சிப்பி, பலகறை என்றழைக்கப்படும் சோழி முதலியன கடற்படுபொருட்களாக சங்க இலக்கியங்களில் குறிப்பிடப் பெறுகின்றன.[42]

சுறா

சுறா மீன்களின் வலிமையையும், அதனால் மீனவர்கள் பெருந்துன்பத்திற்கு ஆளாகுவதும் மிகத் தெளிவாக கீழ்க்காணும் 'மதுரை ஆருலவிய நாட்டு ஆலம்பேரி சாத்தனார்' புலவரின் நற்றிணைப் பாடல் வரிகளில் நிறவப்பட்டுள்ளது.

"தெண்கடல்,
வன்கைப் பரதவர் இட்ட செங்கோல்
கொடுமுடி அவ்வலை பரியப் போக்கி,
கடுமுரண் எறிசுறா வழங்கும்
நெடுநீர்ச் சேர்ப்பன்"[43]

தெளிந்த கடலினிடத்தே வலிய கைகளை உடைய பரதவர், மீன் பிடித்தற்கு நெடுக வீசிய, உறுதியாக முடித்த செந்நிற வலையைப் பயங்கரமானதும் தன் கொம்பினால் வீசிக் கொல்லும் வலிமை வாய்ந்ததுமான சுறா மீன் கிழித்துச் சிதைத்துவிடும் என்பதே அப்பாடலின் கருத்தாகும்.

இதே கருத்தைக் கீழ்க்காணும் கலித்தொகை பாடல் வரிகளில்,

"... ... ... விசைக்
கொடுந்திமிற் பரதவர் கோட்டுமீன் எறிய"[44]

புலவர் கணக்காயன் தத்தன் வேகத்தையுடைய வளைந்த மீன் படகையுடைய பரதவர் கொம்பையுடைய சுறா மீனை எறியுளி கொண்டு வீச என்று பொருள்பட கூறியுள்ளார்.

நிறம் மிக்க பெரிய அலைகளையுடைய கடல் மோதி உடைக்கும் மணல்மேடு, தமது பழமையான மீன்பிடி படகுகளை உடைத்தமையால் புதிய வலைகளை உடையராய் இருந்தும் பரதவர், மீன் பிடிக்க செல்லாமல் மோட்டு மணற்கரையில்

தாமே வந்து அகப்பட்ட கொம்பை உடைய சுறா மீனைப் பிடிப்பார் என்று புலவர் அம்மூவனார்.

"குரூ உத்திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கெண்டி"[45]

என்ற அகநானூறு பாடலில் கூறியுள்ளார்.

சங்க இலக்கியங்களில் 'பெருமீன்' என்று நான்கு இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்தும் சுறாமீனையே குறிப்பதாகும். அது திமிங்கிலத்தைக் குறிக்கும் என்று தவறாகக் கருதக்கூடாது.

"... ... ... புலவுத்திரை நளிகடல்
பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் **பரதவர்**"
"ஞான்ற ஞாயிறு குடமலை மறைய
மான்ற மாலை மகிழ்ந்த **பரதவர்**
இனிது பெறு பெருமீன் எளிதினின் மாறி
பனி இரும் பரப்பின்"
"குறியிறைக் குரம்பைக் கொலைவெம் **பரதவர்**
எறிஉளி பொருத ஏமுறு பெருமீன்"[46]

மேற்காணும் மூன்று பாடல்களிலும், பரதவர் வேட்டையாடிய பெருமீன் சுறாமீன்களையே குறிப்பதாகும்.

சுறா மீன்கள் கொல்லும் கொடுமை வாய்ந்தவை என்பதாலும், அவை ஏனைய மீன்களுக்கும் மனிதர்களுக்கும் பெருந்துன்பம் விளைவிக்கக்கூடிய வன்மை கொண்டவை என்பதாலும், அவை இலக்கியங்களில் 'கடுஞ்சுறா' என்று குறிப்பிடப்படுகின்றன. இதனைப் பிடிப்பது அரிதென்பதால், அது பிடிக்கப்படுமானால் பெருவீரச் செயலாகக் கருதி வெற்றிக் களிப்பிலே வேட்டைக்கு போகாமல் மீனவர்கள் ஓய்வாக சிலநாற் கழிப்பர்.

கொல்லுந் தொழிலை உடைய மீனவர், ஒரு பெரிய சுறா மீனைக் குறிவைத்து எறியுளியால் தாக்க, உதிரம் பீறிட்டுப் பெருக்கெடுத்து வழிந்து, கடல்நீர் செந்நீராகக் கலங்கியது. சிவந்து சீறியெழுந்த அந்தக் கொடுஞ்சுறா விண்ணிலே தாவும் வில் போல்விரைந்து திரிந்து, திவலைகள் சிதற, கடலையுழக்கியப் பின் உரன் அழிந்து அடங்கி அயர்ந்து படகுகளின் பக்கத்தே வந்து ஒடுங்கிவிட்டது என்று புலவர் அம்மூவனார்.

".... .... கொலைவெம் **பரதவர்**
எறிஉளி பொருத ஏமுறு பெருமின்
புண் உமிழ் குருதி பலவுக்கடல் மறுப்பட
வசும்புஅணி வில்லின் போகி பசும்பிசிர்த்

திரைபயில் அழுவம் உழக்கி உரன்அழிந்து
திரைதிமில் மருங்கில் படர்தரும்''[47]

என்ற அகநானூறு பாடலில் கூறியுள்ளார்.

''வயச்சுறா எறிந்த புண்தணிந்து எந்தையும்
நீல்நிறப் பெருங்கடல் புக்கனன்''[48]

என்ற குறுந்தொகை பாடலில் புலவர் கல்லாடனார், ''சுறாமீன் வேட்டையாடச் சென்ற பரதவன் வலிமைமிக்க சுறா மீன் விச்சினால் ஏற்பட்டபுண் ஆறும்வரை தொழில்மேற் செல்லாமல் மனையில் தங்கியிருக்க, புண்ணை ஆற்றுதற்கு அவன் மனைவி பெரிதும் துணை புரிந்ததால் புண் ஆறிய பிறகு, நீல நிறப் பெருங்கடலுக்கு மீண்டும் மீன் பிடிக்கச் சென்றான்'', என்று விளக்குகிறார்.

இறா

இறா கடலிலும், கழிகளிலும், நன்னீர் நிலைகளிலும் வாழும் சிறிய மீனினமாகும். இது இலக்கியங்களில் சில விடங்களில் 'இறவு' என வழங்கப்படுகிறது.

மிகுதியாகக் கிடைத்த இறாமீனில், விற்றது போக எஞ்சியதை பரதவ மகளிர் உலர்த்தி வற்றலாக்குவது உண்டென்றும், அதுவே கடற்மணல் பரப்பெங்கும் புலால் நாற்றம் வீசுமென்றம் புலவர் தும்பிசேர் கீரன் பாடிய

''பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கலின்
இருங்கழிக் கொண்ட இறவின் வாடலொடு
நிலவுநிற வெண்மணல் புலவ...''[49]

குறுந்தொகை பாடல், பெருங்கடலில் பரதவர் பிடித்து வந்த மீனும், கழிகளில் இருந்து பிடித்து வந்த இறா மீனும், நிலவு போன்ற வெண்மணல் பரப்பில் உலர்ந்து, புலால் நாற்றம் பரவிக் கொண்டிருக்கும் என்று பொருள்பட உணர்த்துகிறது.

அலவன்

'அலவன்' என்றும், 'ஞெண்டு' என்றும் இலக்கியங்களில் அழைக்கப்படுகிற இந்தக் கரைவாழ் உயிரினம் இப்போது 'நண்டு' என்றே வழங்கப்படுகிறது.

நண்டுகள் கடற்கரையிலும் கழிக்கரையிலும் வளை அமைத்து வாழும்.

கடற்கரை மகளிர் விரைந்து ஓடும் நண்டுகளைப் பிடித்து விளையாடும்போது, அவர்களைக் கண்டு அஞ்சி நண்டு கடலுக்குள் ஓடி ஒளிவதுண்டு.

''ஒரை மகளிர் அஞ்சி ஈர்ஞெண்டு
கடலில் பரிக்கும் துறைவனொடு''[50]

என்ற குறுந்தொகை பாடலில் குறிப்பிடப்பட்ட இவ்விளையாட்டு 'அலவன் ஆட்டல்' எனப்படும்.

கரையோரத்தில் வளையமைத்து வாழ்கின்ற நண்டுகள் 'வெள்ளி நண்டுகள்' என வழங்கப்படுகின்றன. கடல் நீரில் வாழும் வேறு வகை நண்டுகளை 'சீவாளி நண்டுகள்' என்று மீனவர்கள் வழங்குகிறார்கள்.[51]

முத்துச்சிப்பிகள்

பண்டை நாளிலிருந்தே தமிழ்நாடு முத்துக்குப் பெயர் போனது. அம்முத்து ஒரு வகைச் சிப்பியிலிருந்து கிடைக்கிறது. அந்தச் சிப்பிதான் முத்துச்சிப்பி என வழங்கப்படுகிறது.

மீனவர்கள் கடலில் இருந்து மிகுதியாகக் திரண்ட முத்துக்களையுடைய முத்துச்சிப்பிகளைக் கொண்டு வந்து கரையில் குவித்து அவற்றைத் தங்களுக்குள் பங்கீடு செய்து கொள்வர் என்பதை

"... .... விரிதரைக்
கண்டிரள் முத்தங் கொண்டு ஞாங்கர்த்
தேனிமீர் அகன்கரைப் படுக்குங்
கானலம் பெருந்துறைப் **பரதவன்**"[52]

என்ற அகநானூற்று பாடலில் புலவர் அம்மூவனார் அழகுற விளக்கியுள்ளார்.

சங்குகள்

கடலிலும், கழிகளிலும் வாழும் ஓர் உயிரினம் தான், சங்குகள், தென்னாட்டுக் கடலில் முத்துச்சிப்பிகள் போல சங்குகளும் மிகப் பெருகி மலிந்து காணப்படுகின்றன.

"சங்குகளில் சிறந்தவற்றை இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம் என நால்வகைப்படுத்தி, இப்பி ஆயிரம் சூழ்ந்தது இடம்புரி, இடம்புரி ஆயிரம் சூழ்ந்தது வலம்புரி, வலம்புரி ஆயிரம் சூழந்தது சலஞ்சலம், சலஞ்சலம் ஆயிரம் சூழ்ந்தது பாஞ்சல சன்னயம்"[53] எனத் தமிழ் நிகண்டுகள் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களில் சங்குகள் வளை, வலம்புரி என்ற பெயர்களாலேயே வழங்கப்படுகின்றன.

சங்குகள் ஈன்ற முத்தங்களை நெய்தல் நில மக்களான பரதவர் தங்களுக்குள் பங்கீடு செய்து கொள்வர் என்று

"வளைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கன்"

என்ற ஐங்குறுநூற்று பாடலில் புலவர் அம்மூவனார் குறிப்பிட்டுள்ளார். இதில் வளை என்பது சங்கினைக் குறிக்கிறது.[54]

பரந்த கடலுக்குள் முத்துக்குளிப்பது போல் வலம்புரிச் சங்குகளையும் பரதவர் மூழ்கித் திரட்டி வருவர் என்று

"இலங்கு நீர்ப் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்"[55]

என்ற அகநானூறு பாடலில் புலவர் சேந்தன் கண்ணனார் பாடும்போது, சங்கினை வலம்புரி என்றே குறிப்பிடுகிறார்.

சங்குகளில் இருந்து மகளிர் அணியும் அழகிய வளையல் செய்யப்பட்டன. வளை எனப்படும். சங்கினை அறுத்துச் செய்த அணிகலன் என்றதால் தான் அதற்கு 'வளை' என்றும், 'வளையல்' என்றும் பெயர் வழங்கியது.

அயிலைமீன்

இலக்கியங்களில் கூறப்படுகின்ற சிறு மீன்களில் ஒன்று அயிலை மீனாகும். பரதவர் சிறிய கண்ணாக முடித்த வலைகளைக் கொண்டு கொழுத்த அயிலை மீனைப் பிடித்துக் குவித்துப் பகிர்ந்து கொள்வர் என்பதை

"கொடுந்திமிற் பரதவர் வேட்டம் வாய்த்தென
இரும்புலாக் கமழும் சிறுகுடிப் பாக்கத்துக்
குறுங்கண் அவ்வலைப் பயம்பர ராட்டி
கொழுங்கண் அயிலை பருக்கும் துறைவன்"[56]

என்ற அகநானூற்று பாடலில் புலவர் குடவாயிற் கீரத்தனார் இயம்பியுள்ளார்.

நெய்தல் நிலத்துக் குடியிருப்பு

நெய்தல் நில மக்கள் கடலையடுத்த வெண்மணற் திடலிலே சிறுசிறு குடில்களை அமைத்துக்கொண்டு வாழ்வர். இக்குடில்கள் கும்பலாகக் காணப்படும். இவ்வாறான குடியிருப்புகள் ஊர், சீறூர், சிற்றூர் என்றும் அழைக்கப்பட்டுள்ளன.[57]

மக்கள் அக்குடியிருப்புக்களில் தலைமுறை தலைமுறையாக வாழ்ந்து வந்ததால், அவை 'மூதூர்' என வழங்கப்பட்டன என்று இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

நெய்தல் நில ஊர்கள் 'பாக்கம்' என்று இலக்கியங்களில் வழங்கப்பட்டதைப் போன்று, இன்றும் அதே பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன.

'பட்டினம்' என்பது சிறப்பாக நெய்தல் நிலத்தின் நகரத்தைக் குறிக்கும். அதிலும் கடற்கரை நகரம், அதாவது துறைமுக நகரமே 'பட்டினம்' ஆகும்.

இரண்டாம் நூற்றாண்டிலும், அதற்கு நெடுங்காலத்துக்கு முன்னரும் எந்த நிலையில் பரதவர் குடிசைகள் இருந்தனவாக இலக்கியங்கள் குறிப்பிடுகின்றதோ, அதே நிலையில்தான் இன்றும் இந்த இருபத்தியொன்றாம் நூற்றாண்டிலும் பரதவர் சிற்றூர்களில் அவர்களது குடிசைகள் காட்சி அளிக்கின்றன என்பது கருத்தில் கொள்ள வேண்டியது.[58]

மேலைக் கடற்கரையில் சேர நாட்டில் விளங்கிய துறைமுகப்பட்டினமான தொண்டியின் வளஞ்சால் சிறப்பினை,

"... ... . புதுவலைப் **பரதவர்**
மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளங்கெழு தொண்டி"[59]

என்ற அகநானூற்று பாடலில் புலவர் அம்மூவனார். "மணங்கமழ் பாக்கத்தை உடையதுமான வளமிகு கடற்றுறை" என்று புகழ்ந்து பாடியுள்ளார்.

இப்பாடல் தரும் சிறப்பு செய்தி யாதெனில், பரதவர் தொண்டி கடற்றுறைக்கு அருகில் வாழ்ந்தனர் என்பதே!

நெய்தல் நிலத்து மக்கள்

'பெயரும் வினையும்என்று ஆயிரு வகைய
திணைதொறு மரீஇய திணை நிலப் பெயரே'

என்ற தொல்காப்பியச் சூத்திரத்துக்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையினின்றும்,

'ஏனோர் பாங்கினு மொண்ணுங் காலை
யயானா வகையய திணைணநிலைப் பெயரே'

என்ற இன்னுமொரு தொல்காப்பியச் சூத்திரத்துக்கு இளம்பூரணர் கூறிய உரையினின்றும். நெய்தல் நிலத்தில் ஆண்மக்கள் நுளையர், திமிலர், பரதவர் எனவும், பெண்மக்கள் நுளைத்தியர், பரத்தியர், நுளைச்சியர் எனவும் வழங்கப்பட்டனர் என்பது தெளிவாகின்றது.

அங்ஙனமே, நெய்தல் நிலத்தலைவன் கொண்கன், துறைவன், சேர்ப்பன், மெல்லம்புலம்பன், பரப்பன் என்றப் பெயர்களால் வழங்கப்பட்டுள்ளன என்றும் அறிய வருகின்றது.

நெய்தல் நில மக்களின் பெயர்களில், 'நுளையர்' என்ற பெயர் சங்க இலக்கியத்தில் இரண்டு இடங்களிலும் (அகநானூறு 366:11, திணைமாலை நூற்றைம்பது 59:4), 'திமிலர்' என்ற பெயர் இரண்டு இடங்களிலும் (மதுரைக் காஞ்சி 319, அகநானூறு 320:2) மட்டுமே காணப்படுகிறது.

ஆனால், பரதவர் என்ற பெயர் சங்க இலக்கியத்தில் மிகுதியாய், அதாவது 50-க்கும் அதிகமான இடங்களில் குறிக்கப்பட்டுள்ளது.

பெண் மக்கள் பெயரான நுளத்தியர், பரத்தியர், நுளைச்சியர் என்பவை சங்க இலக்கியத்தில் எங்குமே காணபதாகத் தெரியவில்லை.

ஆனால், பரதவர் மகள் நற்றிணையில் இரண்டு இடத்திலும் (நற்றிணை 45 : 3, 349:10), பரதவர் மகளிர் மதுரைக்காஞ்சியில் ஓரிடத்திலும் (மதுரைக்காஞ்சி 97),

பரதவர் மடமகள் கலித்தொகையில் ஓரிடத்திலும் (குறுந்தொகை 184:6) வழங்கப்பட்டுள்ளது.

"இன்று பரதவர், நுளையர், திமிலர் ஆகிய மூன்று பெயர்களுமே மறைந்துவிட்டன. ஆனால் கேரள மாநிலத்தில் விழிஞம் என்ற கடற்கரை ஊரின் மேற்குப்பகுதியிலும், கொடுங்கலூர் என்ற ஊரை அடுத்த மேற்குப்பகுதியிலும் வாழும் மீனவர்கள் 'நுளையர்' என்று இன்றும் அழைக்கப்படுகின்றனர்".[60]

இன்றைய தமிழகத்தின் இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும் பரதர் என்ற பெயர். சங்க இலக்கியத்தில் மூன்று இடங்களில் கையாளப்பட்டுள்ளது என்றாலும், அது இரண்டு இடங்களில் வணிகர்களைக் குறிக்கின்றது.

"மாடம் ஓங்கிய மணல்மலி மறுகின்
பரதர் ஓங்கிய பல்வேறு தெருவின்"[61]

என்ற பெரும்பாணாற்றப்படை பாடல் வரிகளும்,

"முழங்குகடல் தந்த விளங்குகதிர் முத்தம்
அரம்போழ்ந்து அறுத்த கண்ணோர் இலங்குவளை
பரதர் தந்த பல்வேறு கூலம்" [62]

என்ற மதுரைக்காஞ்சி பாடல் வரிகளும் கூறுகின்ற பரதர் என்ற சொல் வணிகர்களையேக் குறிக்கின்றது.

"கடல் கொழித்திட்ட கதிர் மணி முத்தம்
…. ….. …. பரதர் மகளிர்
தொடலை சேர்ந்து ஆடும் துறைவ"

வரும் பரதர் என்று சொல் பொதுவாக நெய்தனில மக்களையே குறிப்பிடுகிறது. "நெய்தல் நிலப் பெண்கள், கடலின் கண்ணுள்ள அலையானது அலசிக் கரையிலிட்ட ஒளியினையுடைய முத்துகளாகிய மணிகளை மாலையாகக் கட்டி விளையாடும் கடல் துறைமுகத்துக்குரியவனே"[63] என்ற பொருள் கூறுகிறது இந்தப் பாடல்.

இப்போது வழக்கிலுள்ள பரவர் என்ற சொல், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களைக் குறிப்பதாக இருந்தாலும், அந்த பரவர் என்ற சொல் சங்க இலக்கியங்களில் எந்தவொரு இடத்திலுமே கையாளப்படவில்லை என்பது விந்தைக்குரியதே!

பரதவர் தொழில்

பரதவ மக்கள் மீன் பிடித்தலை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தாலும், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், உப்பு விளைத்தல் ஆகியவற்றையும் திறம்பட செய்தனர்.

மீன் பிடித்தல்

பரதவர் உபயோகித்த மரக்கலங்களுக்கு, சங்க இலக்கியங்கள் திமில், அம்பி, தோணி, வங்கம், நாவாய், ஓடம், கலம், ப.ஃறி என்ற பெயர்களை வழங்கியுள்ளன.[64]

இதில் திமில், அம்பி, தோணி என்ற மூன்று மட்டுமே மீன் பிடிக்கும் தொழிலுக்குப் பயன்படுத்தப்பட்டன. வங்கம், நாவாய்என்ற மரக்கலங்கள் பயன்படுத்தப்பட்டன. வங்கம், நாவாய் என்ற மரக்கலங்கள் பண்டங்களை ஏற்றி நீண்ட தூரம் கடலில் செல்வதற்கெனக் கட்டப்பட்ட பெருங்கலங்களாகும். ஓடம், கலம், ப.ஃறி என்பவையும் பெரும்பாலும் பண்டமேற்றும் கலங்கள் என்ற பொருளிலேயே இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மீன்பிடித் தொழிலுக்கு திமில்தான் பெரிதும் பயன்படுத்தப்பட்டது.

பரதவர் கடலில் மீன் பிடிக்க வலைகளை திமிலில் கொண்டு சென்றதை,

"மீன்கொள் **பரதவர்** கொடுந்திமில்"

"கொடுந்திமில் **பரதவர்** குரூஉச்சுடர் எண்ணவும்"

"இருங்கழி துழவும் பனித்தலைப் **பரதவர்**
திண்திமில் விளக்கம் எண்ணும் .... ஊரே"

"திண் திமில்
எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் **பரதவர்**"[65]

ஆகிய சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளது.

அம்பி, தோணி என்ற மரக்கலங்களும் மீன்பிடிக்கப் பயன்படுத்தப்பட்டன.

வாளரம் போன்ற வாயினையுடைய சுறா மீன்கள் வாழும் குளிர்ந்த கடல் துறையைக் கடந்து சென்று, பகலில் மீன் வேட்டைக்குப் புறப்படும் பரதவர் தங்குதற்குரிய கடலின்கண் உள்ள தோணிகளைப் போலத் தோன்றுதற்குக் காரணமான, என்ற பொருள்பட,

"வாள்வாய்ச் சுறவின் பனித்துறை நீந்தி
நாள்வேட்டு எழுந்த நயனில் பரதவர்
வைகுகடல் அம்பியின் தோன்றும்"[66]

என்ற அகநானூறு பாடல் கூறுகின்றது.

தோணி என்ற ஒரு சொல் மட்டுமே இன்றும் வழக்கில் உள்ளது, அது போன்று, ஓடம் என்ற சொல் பொதுவாக ஆறுகளிலும் நீர்நிலைகளிலும் இயங்கும் கலத்தைக் குறிப்பதாகவே இன்றும் வழக்காற்றில் உள்ளது.

மீனவர்களின் மரக்கலங்களின் இப்போதைய பெயர்களான கட்டுமரம், படகு, வள்ளம், வத்தை என்ற சொற்கள் சங்க இலக்கியங்களில் எங்குமே குறிப்பிடப்படவில்லை.

அஞ்சா நெஞ்சமும் ஆற்றலும் கொண்ட பரதவர்கள் உள்ளத்தே எழும் செருக்கினால் வெறியூட்டும் கள்ளினை அருந்திக் குரவைக் கூத்தாடிக் குதூகலிப்பர் என்று

"திண்திமில் வன்**பரதவர்**
வெப்புடைய மட்டு உண்டு
தண்குரவைச் சீர்தூக்குந்து"[67]

என்ற புறநானூறு பாடல் குறிப்பிடுகின்றது.

பரதவர்கள் வலைகளைப் படகுகளில் நிரப்பிக்கொண்டு, இடியெனப் பேரலைகள் முழங்கி மோதும் கடலின் ஊடே அப்படகினை செலுத்துவர். அவர்கள் படகின் இருமருங்கிலும் இருந்துகொண்டு கரையிலிருந்து கடலுக்குள் படகை வலிவுடன் தள்ளிச் செலுத்தவது மதமிகுந்த யானையைப் பாகர்கள் பக்கத்தே நின்று தள்ளிச் செல்வதை நிகர்க்கும் என்பதை

"வடிக்கதிர் திரித்த வல்ஞாண் பெருவலை
இடிக்குரற் புணரிப் பௌவத்து இடுமார்
நிறையப் பெய்த அம்பி காழோர்
சிறைஅருங் களிற்றின் **பரதவர்** ஓய்யும்
சிறுவீ ஞாழற் பெருங்கடற் சேர்ப்பனை"[68]

என்ற நற்றிணை பாடலில் புலவர் உலோச்சனார் உவமையுடன் புகன்றுள்ளார்.

"துய்த்தலை இறவொடு தொகைமீன் பெறீஇயர்
வரிவலைப் **பரதவர்** கருவினைச் சிறாஅர்
மரல்மேற் கொண்டு மான்கணம் தகைமார்
வெந்நிறல் இளையவர் வேட்ட எழுந்தரங்கு
திமில்மேற் கொண்டு திரைச்சுரம் நீந்தி
வாள்வாய்ச் சுறவொடு வயமீன் கெண்டி
நீணம்பெய் தோணியர் இருமணல் இழிதரும்
பெருங்கழிப் பாக்கம்" [69]

என்ற நற்றிணை பாடலில் பெயர் தெரியாத புலவரொருவர், வன்தொழில் புரியும் வரிவலைப் பரதவ இளைஞர்கள் இறா மீனோடு வேறு பலமீன்களையும் பிடித்துக் குவிக்கும் வேட்கை மீதூர, வேட்டைக்கு விரைந்து, தங்கள் படகில் பாய்ந்தேறி, திரைத்து வீசும் திரைகடலில் புகுந்து, வாளரம் போன்ற வன்சுறாக்களோடு மற்றைய பெருமீன்களையும் பிடித்துப் படகில் நிறைத்து, பெருமீன்களைத் துண்டங்களாகக் கூறுபடுத்தித் தோணிகளில் குவித்துக் கரையேறித் தங்கள் சுழி சூழ்ந்த பாக்கம் சேர்வர் என்ற பொருள்பட பரதவ இளைஞர்களின் துணிவையம் கடல்மேல் அவர்கள் கொண்ட வேட்கையையும் சிறிதும் மிகைப்படுத்தாமல் கூறியுள்ளார்.

"... .... வளைநீர்க்
கடுஞ்சுறா எறிந்த கொடுந்திமிற் பரதவர்
வாங்கு விசைத் தூண்டில் ஊங்குஊங்கு ஆகி

வளிபொரக் கற்றை தாஅய் நளிசுடர்
நீல்நிற விசும்பின் மீனொடு புரைய....”[70]

என்ற நற்றிணை பாடலில் புலவர் பேரிசாத்தனார், காற்றுக் கடுமையாக வீசிக் கொண்டிருந்தபோது, அக்காற்றுக் கேற்ப பரதவர்கள் தோணியைப் பதமாய் இயக்க, அளவற்ற சுறாமீன்கள் அகப்பட, இரவு முழுவதும் அவ்வாறே தூண்டிலைக் கொண்டு வேட்டையாடியப் பின்னர் வைகறைப் போதில் மீன் வளத்தோடு அவர்கள் கரை திரும்பினர் என்ற செய்தியை வழங்கியுள்ளார்.

கடலில் காணும் மீன்திரட்சியைப் பரதவர் ‘மாப்பு’ என்றும், அம்மீன் கும்பல் கடலில் நகர்ந்து கொண்டிருப்பதை ‘மாப்பு சாய்கிறது’ என்றும் கூறினர்.

காலைப் பொழுதில் கடலுக்கு சென்ற பரதவர்களுக்குப் பகலெல்லாம் மீன்பாடு வாய்க்காத போது, அந்தி மயங்கும் நேரத்தே அளவிறந்து சாய்ந்து வந்தது. பெருமீன் மாப்பு. அக்கொழுமீன்களை விரைந்து பிடித்துத் தங்கள் கொடுந்திமிலில் குவித்துக் கொண்டு கரை திரும்பிய சமயம் எங்கும் இருள் சூழ இரவு வந்துவிட்டதால், பரதவர்கள் தாங்கள் கொண்டு வந்த மீனைக் கரையில் ஒருபுறம் குவித்துக் கிளிஞ்சிலில் மீன்நெய் வார்த்து விளக்கேற்றி, ஓங்கிய புன்னை மரத்தின் கீழ் உடல்வலி தீர உறங்கிவிட்டனர் என்ற சம்பவத்தை

“நெடுங்கடல் அலைத்த கொடுந்திமிற் **பரதவர்**
கொழுமீன் கொள்ளை அழிமணல் குவைஇ
மீன்நெய் அட்டிக் கிளிஞ்சில் பொத்திய
சிறுதீ விள்கில் துஞ்சும் நறுமலர்ப்
பன்னை ஓங்கிய துறைவன்...”[71]

என்ற நற்றிணை பாடலில் பெயர் தெரியாப் புலவர் ஒருவர் நன்கெடுத்து இயம்பியுள்ளார்.

“சிறுகால், அலவனொடு பெயரும் புலவுத்திரை நளிகடல்
பெருமீன் கொள்ளும் சிறுகுடிப் பரதவர்
கங்குல் மாட்டிய கனைகடல் ஓண்சுடர்
முதிரா ஞாயிற்று எதிர்ஒளி கடுக்கும்”[72]

என்ற நற்றிணை பாடலில் தண்டமிழ்ப் புலவர் தாயங்கண்ணனார். “வைகறை பொழுதில், சிறு கால் அலவன் (நண்டு) அலைகடற்கரை அருகே ஆடித்திரிந்து கொண்டிருக்க, ஆழ்கடலில் இரவில் மீன் பிடிக்கச் சென்ற பரதவரது படகின்கண் ஒளிவிளக்குச் சுடர் விட்டெரிந்து கொண்டிருந்ததை, அக்கங்குலில் கரையில் இருந்து கண்ணோக்க, நெடுந்தொலைவில் கடல் நடுவே காணப்பட்ட கதிரொளி கண்டு, இது அடுத்தச் சிறிது நேரத்தில் புறப்படவிருக்கும் உதய ஞாயிற்றுக்கு முன்னோடியோ!” என்று தம் வியப்புணர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

கடலிடத்தில் மீனினம் மலிந்து, பாடு வாய்த்துள்ள காலத்தை மீனவர் 'பருவை' என்பர்.

வன்மைமிகு நூலினைக் கொண்டு முற்றமுடித்துப் பின்னிய வலையை அன்று பகல் கொடுஞ்சுறா சின்ன பின்னமாய்ச் சிதைத்து விட்டதால், விடிந்ததும் அதனைப் பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இளைஞரும் முதியருமான பரதவ மக்கள் இரவோடு இரவு விரைந்து சீர்ப்படுத்திச் செம்மை செய்வதில் முனைந்திருந்தினர் என்பதை

"அல்கல், இளையரும் முதியரும் கிளையுடன் குழீஇ
கோட்சுறா எறிந்தென, சுருங்கிய நரம்பின்
முடிமுதிர் பரதவர்"[73]

என்ற நற்றிணை பாடலில் பெயர் தெரியாப் புலவர் ஒருவர் கூறியுள்ளார்.

"திண் திமில்,
எல்லுத் தொழில் மடுத்த வல்வினைப் பரதவர்
கூர்வளிக் கடுவிசை மண்டலிற் பாய்புஉடன்
கோட்சுறாக் கிழித் கொடுமுடி நெடுவலை
தண்கடல் அசைவளி எறிதொறும் வினைவிட்டு
முன்றில் தாழை தூங்கும்"[74]

என்ற நக்கீரனார் புலவரின் அகநானூறு பாடலின் பொருள். அன்று வீசிய கடுங்காற்றையும் பொருட்படுத்தாமல், பரதவர் தம் படகுகளில் வலைகளை ஏற்றிக் கொண்டு கடலுக்குச் சென்ற, உறுதி வாய்ந்த முறுக்கிய கயிற்றால் முடிக்கப்பட்ட வலையினைக் கடலில் பாய்ச்சி, சிறிது நேரங்கழித்து படகிலிருந்து பாய்ச்சிய வலையைப் பற்றி இழுத்தபோது, வலைமிகக் கனத்துத் தோன்றியதால், மடி நிறைய மீன் மொண்டு கொண்டதாக எண்ணி மகிழ்ந்து மேலும் இழுத்தபோது, வரவர வலை இலேசாகத் தோன்ற, வலையைச் சினச்சுறா சிதைத்துவிட்டதால் ஏமாற்றமுற்ற அவர்கள் கவலையோடு கரைக்குத் திரும்பி, கிழிந்த வலையினைத்தம் மனை முற்றத்தில் இருந்த தாழை மரத்தில் விரித்துப் போட்டு தொழிலுக்குப் போகாமல் வாளாவிருந்தனர்.

இந்தப் பாடலில் பரதவரின் அன்றாட வாழ்க்கையினை அப்படியே நம்மனக் கண்முன் கொண்டு வந்து நிறுத்துகிறார், புலவர் நக்கீரனார்.

உறுதி வாய்ந்த வடம்போன்ற நீளக்கயிற்றால் பெரிய, சிறிய பல வலைகளை ஒன்றோடொன்று இணைத்து, நடுவில் 'மடி' என்று வழங்கப்படும் மிகப் பெரிய பை போன்ற வலையை பிணைத்துள்ளதை 'பெரிய வலை' என்று அழைப்பர். அப்பெரு வலையை ஒரு நாளைக்கு இருமுறைத்தான் கடலில் பாய்ச்ச முடியும். ஒவ்வொரு முறையையும் 'ஒரு பாடு' என்று பரதவர் கூறுவர்.

"நெடுங்கயிறு வலந்த குறுங்கண் அவ்வலை
கடல்பாடு அழிய இனமீன் முகந்து

துணைபுணர் உவகையர் **பரதவ** மக்கள்
இளையரும் முதியரும் கிளையுடன் துவன்றி
உப்புஓய் உமணர் அருந்துறை போக்கும்
ஒழுகை நோன்பகடு ஓப்பக் குழீஇ,
அயிர்திணி அடைகரை ஓலிப்ப வாங்கிப்
பெருங்களம் தொகுத்த உழவர்போல,
இரந்தோர் வறுங்கலம் மல்க வீசி
பாடுபல அமைத்துக் கொள்ளை சாற்றி,
கோடுஉயர் திணி மணல் துஞ்சும் துறைய!''[75]

என்ற அகநானூற்று பாடலில், புலவர்' முடங்கிக்கிடந்த இளஞ்சரலாதனார், நெடிய கயிற்றால் கட்டப்பட்ட குறுகிய கண்களை உடைய அழகிய வலை, கடலில் உள்ள இனமாகிய மீன்களை எல்லாம் கடல் வறிதாம்படி ஒருங்கே முகந்து கொள்ளும்: அவ்வலையினை பற்றி இளையரும் முதியருமான பரதவ மக்கள் சுற்றஞ்சுழ நெருங்கி மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கரை நோக்கி இழுப்பர்; வலிய உடல் கொண்ட அவர்கள் அங்ஙனம் ஒருங்கு குழுமி இழுப்பது, உமணர் வண்டிகளில் பூட்டிச் செலுத்தும் வலிய எருதுகள் ஒன்றுகூடியதையொக்கும்; அவ்வாறு கூடி நுண்மணற் கரையில் ஆரவாரம் பெருக வலையினைக் கரைக்கு இழுப்பர்; பின்னர் அவ்வலை மொண்டு வந்த நிறைந்த மீன்களை, நெற்களத்தில் அறுவடை செய்த உழவர்களைப் போன்று, இரந்தோர்களின் வறுங்கலன்கள் நிறைந்து வழியுமாறு கூறி விற்றுக் கரையுயர்ந்த மணற்பரப்பிலே உறங்குவர் என்று கூறி அக்காட்சியை மிக நுணுக்கமாகப் பொருத்தமுற பாடியுள்ளது வியத்தற்குரியது.

கீழ்க்காற்றுக் கடுமையாக வீசி அலைப்பதால் படகுகள் பழுதடைந்து கரையில் கிடக்கும்போது, பரதவர் அதன் பயனற்றுப் போன பகுதிகளை மாற்றிப் புதுப்பித்துத் தொழிலுக்கு உரிய வகையில் ஆயத்தமாக்குவர் என்று

''கொண்டலொடு, குரூஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந்திமில் கொன்ற புதுவலைப் **பரதவர்**''[76]

என்ற அகநானூறு பாடல்வரிகளில் புலவர் அம்மூவனார் குறிப்பிட்டுள்ளார்.

கடலின்கண் விரைந்தோடும் திமில்களைப் பகலிலும் இரவிலும் பரத மங்கையரும் மற்றவரும் மனையில் இருந்தபடியே கணக்கெண்ணிக் களிப்பதுண்டு,

''மனை இருந்து,
இருங்கழி துழவும் பனித்தலைப் **பரதவர்**
திண் திமில் விளக்கம் எண்ணும்
கண்டல் வேலிக் கழிநல் ஊரே''[77]

என்ற நற்றிணை பாடலில் புலவர் உலோச்சனார்., ''இரவு நேரங்களில், கண்டல் வேலி சூழ்ந்த தம் கடி மனையில் இருந்துக்கொண்டே தண்கருங் கடலில் சென்று, துழலாவி

மீன் பிடிக்கும் திணிதிமில் சுடர் விட்டெரியும் விளக்கினை எண்ணுவர்'', என்று பாடியுள்ளார்.

இதுபோன்று, கடலில் மிதக்கும் திமில்களில் மீன் பிடிக்கும் பரதவ மீனவர்கள் அங்கிருந்து கரையை நொக்கி கரையில் காணும் விளக்குகளை எண்ணிக் களிப்பதும் உண்டு.

கங்குலில் கடலில் சென்ற மீன் பிடிக்கும் பரதவர்கள், கரையில் காணும் பட்டினத்து நீண்டுநெடு மாடங்களின் ஒளி விளக்குகளை உவப்புடன் எண்ணுவர் என்று

''நெடுங்கால் மாடத்து ஓள்ளரி நோக்கிக்
கொடுந்திமில் **பரதவர்** குரூஉச்சுடர் எண்ணவும்''[78]

என்ற பட்டினப்பாலை பாடல் இயம்புகின்றது.

பரதவர் மிகுதியாய் கிடைத்த மீன் கொள்ளையினைத் தங்கள் பாக்கத்தே குவித்து வைத்து, விற்றது போக எஞ்சியவற்றை பரதவ மகளிர் உப்பிட்டு வெயிலில் உணக்க, அவ்வாறே உணங்கிய மீனைக் 'கருவாடு' என்பர்.

''உரவுக்கடல் உழந்த பெருவலைப் **பரதவர்**
மிகுமீன் உணக்கிய புதுமணல் ஆங்கன்
கல்லென் சேரிப் புலவற் புன்னை
விழுவுநாறு விளங்குஇணர் அவிழ்ந்து உடன் கமழும் ஊர்''[79]

என்ற நற்றிணை பாடலில் புலவர் உலோச்சனார். வெயிலில் புலர்த்திப் பரப்பி கிடக்கும் உப்பிட்ட மீன்களால் பரதவர் பாக்கமெங்கும் வீசிக் கொண்டிருக்கும் புன்புலால் நாற்றத்தை, புன்னையின் நறுமணம் மாற்றும் என்று உரைத்துள்ளார்.

கடல் வேட்டத்தில் ஆற்றல் மிகுந்த பரதவர்கள் பருவக் காலத்தின் பாடறிந்து கடலில் வலைப் பாய்ச்சும் திறமையை,

''நாள்வலை முகந்த கோள்வல் **பரதவர்**
நுணங்குமணல் ஆங்கண் உணங்கப் பெய்ம்மார்
பறிகொள் கொள்ளையர், மறுகஉக்க
மீன்...''[80]

என்ற அகநானூற்று பாடலில் புலவர் உலோச்சனார். பாடறிந்து மீன் பிடித்தலில் பண்பட்ட பரதவர்கள் அதிகாலையிலேயே சென்று வலைவீசி அளவற்ற மீன் பிடித்துத் தங்கள் பறிகளை நிரப்பிக் கொண்டு, பின்னர் அவற்றை மணல் திடரில் பெய்து பரப்பிப் புலர்த்துவர் என்று பொருள்பட கூறி மெய்ப்பிக்கின்றார்.

பரந்த பெருங்கடலில் இருந்து பரதவர் பிடித்து வந்த மீன்களும் இருங்கழியில் முகந்த வந்த இறாக்களும் நிலவொளி போனற எக்கர் (கடற்கரை) மணலில் புலர்ந்து. பாக்கம் எங்கும் புலால் நாற்றம் பரவி வீசும் என்று

''பெருங்கடற் பரதவர் கோள்மீன் உணங்கலின்

இருங்கழிக் கொண்ட இறவின் வாடலோடு
நிலவுநிற வெண்மணல் புலவப் பலவுடன்
எக்கர் தொறும் பரிக்கும் துறைவன்"[81]

என்ற குறுந்தொகை பாடலில் புலவர் தும்பிசேர் கீரனார் குறிப்பிட்டுள்ளார்.

முத்துக்குளித்தல்

முத்துச்சிப்பிகள் நிறைந்த கடற்பகுதிகளை அடுத்து வாழ்ந்து வந்த பரதவர்கள், முத்துக்குளிக்கும் தொழிலிலும் ஈடுபட்டிருந்தனர்.

அயல் நாட்டிலிருந்து வந்த வணிகர்கள் தங்கள் நாட்டிலிருந்து கொண்டு வந்த பல்வகைப் பண்டங்களையும் விற்று பண்டமாற்றாக முத்துக்களையும் மணிகளையும் பெற்றுச் சென்றனர் என்ற செய்தியினை,

"பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
சிறந்த தேஎத்துப் பண்ணியம் பகர் நரும்"[82]

என்ற மதுரைக்காஞ்சிப் பாடல் மெய்ப்பிக்கின்றது.

விரிந்த பெருங்கடலில் இருந்து உருண்டு திகழும் முத்துக்களைத் திரட்டிக் கொண்டு வந்து, வண்டிசைக்கும் அகன்ற கரையினிடத்தே பரதவர்கள் பங்கிட்டுக் கொள்வர் என்று

"…. ….. …… விரிதிரைக்
கண்திரள் முத்தங்கொண்டு ஞாங்கர்த்
தேன்இமிர் அகன்கரைப் பகுக்குங்
கானல்அம் பெருந்துறைப் பரதவன் எமக்கே"[83]

என்ற அகநானூறு பாடலில் புலவர் அம்மூவனார் கூறியுள்ளார்.

சங்கு குளித்தல்

சங்கு குளிக்கும் தொழிலிலும் பரதவர் ஈடுபட்டிருந்தனர். "சங்குகளைக் கொண்ட பரதவர் அழகிய வளையல்கள் செய்வர். அதை மகளிர் அழகுற அணிந்து மகிழ்வுடன் விளங்குவர்", என்று

"கடற்கோடு அறுத்த அரம்போழ் அவ்வளை
ஒண்தொடி மடவரல் கண்டிகும் : கொண்க …."[84]

என்ற ஐங்குறுநூற்று பாடலில் புலவர் அம்மூவனார் விள்க்கியுள்ளார்.
சங்கு குளித்தலோடு பரதவர் சங்கறுக்கும் தொழிலிலும் தலைசிறந்து விளங்கினர்.

பரதவர் முத்தும் சங்கும் எடுக்கக் கடலில் மூழ்கும்போது, அங்கு சுறாக்கள் வராமல் தடுப்பதற்குரிய மந்திரமும் அறிந்திருந்தனர். அங்ஙனம், அச்சந்தரும் கொடுஞ்சுறாக்களை அணுகவொட்டாமல் மந்திரத்தால் தடுப்பதை, மந்திரத்தால் கட்டிவிடுதல்' என்றழைப்பர்.

முத்தும் சங்கும் மூழ்கித் திரட்டியதுடன் கடலில் விளையும் பவளத்தையும் பரதவர்கள் எடுத்தனர் என்னும் செய்தியை,

"தாழ் அடும்பு மலைந்த புணரிவளை ஞரல
இலங்குநீர் முத்தமொடு வார்துகிர் எடுக்கும்
தண் கடற் படப்பை"[85]

என்று பதிற்றுப்பத்து பாடல் வரிகள், "தாழ்ந்திருக்கும் அடும்பங்கொடியை அலைத்த அலைகளால் ஒதுக்கப்பட்ட சங்குகள் கிடந்து ஒலிக்க, விளங்குகின்ற கடல் முத்துடனே நீண்ட சங்குகள் கிடந்து ஒலிக்க, விளங்குகின்ற கடல் முத்துடனெ நீண்ட பவளக் கொடிகளையும் அங்கு வாழ்வோர் எடுத்துக் கொள்ளும் குளிர்ந்த கடற்பாங்கான நெய்தல் நிலம்" என்ற பொருள்பட விளக்குகிறது.

பரதவர் பழக்க வழக்கங்கள்

பரதவர்கள் முழுமதி நாட்களில் கடல் பொங்கிக் கொந்தளித்துப் பேரலை வீசுவதால், மீன் வேட்டைக்குச் செல்வதில்லை.

கடல் கொந்தளிப்பால் மீன்பாடு வாய்க்காத நாளன்று, தாழையின் கீழ்க் காணப்படும் வெண்டொளியின் தண்மலரால் மாலைதொடுத்து அணிந்து, கருவுற்ற சுறாமீனின் கூரியவாள் அரம் போன்ற கொம்பினைக் கடற்றுறையிலே நட்டு, அதன்கண் தம் மனைத் தெய்வமாகிய வருணனை ஏற்றுவித்து, அதற்குத் தாழை மலர் சூட்டிப் பனையின் கள்ளையும் தம் பெண்டிரோடும் மக்களோடும் வணங்கி வழிபட்டு வேண்டிய உணவு சமைத்து மனம்போலஆடிப்பாடி மகிழ்வார் என்று

"வீழ்த் தாழைத் தாட்தாழ்ந்த
வெண்கூ தாளத்துத் தண்பூங் கோதையர்
சினைச் சுறாவின் கோடு நட்ட
மனைச்சேர்த்திய வல்அணங்கினான்
மடல் தாழை மலர் மலைந்தும்
பிணர்ப் பெண்ணைப் பிழிமகிழ்ந்தும்
புன்தலை இரும் பரதவர்
பைந்தழைமா மகளிரொடு
பாய்இரும் பனிக்கடல் வேட்டம் செல்லாது
உலவுமடிந்து உண்டு ஆடியும்..."[86]

என்ற பட்டினப்பாலை பாடல் பரதவரின் பழக்கவழக்கங்களை விவரித்து காட்டுகிறது.

பரதவர் மணமுறை

பரதவர் மரபில், ஆண்மகன் தான் விரும்பும் கன்னியை மணப்பதெனின் பரிசமாகப் பொன்னும், திரண்ட பொருளும் அளவற்ற அணிகலன்களும் கொடுக்கும் வழக்கம் உண்டு என்று கருதப்படுகிறது.

இன்றும், இவ்வழக்கம் பரதவ மக்களிடையே பெரும்பாலும் காணப்படுவது, குறிப்பிடத்தக்கது.

பரதவ ஆடவனொருவன் தான் விரும்பும் மங்கையை மணக்க எவ்வாறெல்லாம் செயலாற்றி வெற்றி பெறுகிறான், என்ற நிகழ்ச்சியை,

"பொன்அடர்ந் தன்ன ஒள்இணர்ச் செருந்திப்
பன்மலர் வேய்ந்த நலம்பேறு கோதையர்
திணிமணல் அடைகரை அலவன் ஆட்டி
அசையினள் இருந்த ஆய்தொடிக் குறமகள்
நலம்சால் விழுப்பொருள் கலம்நிறை கொடுப்பினும்
பெறல்அருங் குரையள் ஆயின் அறம் தெரிந்து
நாம் உறை தோம் மரூஉப் பெயர்ந்து, அவனொடு
இருநீர்ச் சேர்ப்பின் உப்புடன் உழுதும்
பெருநீர்க் குட்டம் புணையொடு புக்கும்
படுத்தனம், பணிந்தனம், அடுத்தனம் இருப்பின்
தருகுவன் கொல்லோதானே – விரிதிரைக்
கண்திரள் முத்தம் கொண்டு ஞாங்கர்த்
தேன்இமிர் அகன்கரைப் பகுக்குதட
கானல்அம் பெருந்துறைப் **பரதவன்** எமக்கே?"[87]

என்ற அகநானூற்று பாடலில் செம்மைசால் புலவர் அம்மூவனார் பின்வருமாறு கூறுகிறார்.

பொன்னன்ன செருந்தியோடு பன்மலரும் விரவி முடித்துக் கவினெலாம் திரண்ட கார் கூழலாள், ஆய்ந்த தொடியினை அணிந்த தலைமகள், அவள் தந்தையோடு பரந்த அலைக்கடலில் சிறந்த முத்தையெல்லாம் அள்ளிக் கரையில் குவித்துப் பங்கீடு செய்யும் நிறைந்த செல்வன், சோலை சூழந்த எழில்மிகு துறைக்குத் தலைவன், கார்குழலாளை விரும்பும் பரதவ ஆண்மகன், எவ்வளவு பொருளும் அணிகலன்களும் அளித்தாலும் அவள் தந்தை அவளை தனக்கு அளியான், ஆக தனது ஊரைத் துறந்து, அவனை அடைந்து, அவனைச் சார்ந்து, பெரிய கடற்கரையின் கண்ணுள்ள அவனது உப்பளத்திற் உழைத்தும், உப்புப் பொதியுடன் திரிந்து வருந்தியும், அவனுக்காகக் கட்டுமரத்தில் சென்று மீன் வேட்டையாடி உழைத்தும், அவன் வயமாகித்தாழ்ந்தும், பணிந்தும், தொண்டாற்றியும் வரின அறநெறியினை உணர்ந்து, மனங்கனிந்து அப்பொழுதாவது அவன் மகளை தனக்கு தரமாட்டானா, தருவன் என முடிவு செய்த, அவ்வாறெல்லாம் வினையாற்றி இறுதியில் அவளை மனைவியாய்ப் பெற்று மனையறம் புரிந்து மகிழ்ந்து வாழ்கிறான்.

இங்ஙனம், தமக்கு உறுதுணையாய் உழைக்கும் ஆடவருக்கு தம் மகளிரையே மணமுடித்துத் தம் இல்லத்தோடு வைத்துக் கொள்ளும் வழக்கம், பரதவரிடையே அன்றும் இன்றும் நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

"கானல் நண்ணிய காமர் சிறுகுடி
நீல்நிறப் பெருங்கடல்கலங்க உள்புக்கு
மீன்ஏறி **பரதவர்** மகளே; நீயோ
கடுந்தேர்ச் செல்வன் காதல்மகனே
நும்மோடு புரைவதோ அன்றே
எம்மனோரில் செம்மலும் உடைத்தே" [88]

என்ற நற்றிணை கடற்கரைச் சோலையில் வாழும் சிறுகுடிப் பரதவனின் செல்வமகள் : நீல நெடுங்கடல் கலங்கும் படி அதன் அலைகளைக் கழித்துக் கொண்டு கலத்திற் சென்று மீனைப் பிடித்துவரும் பரதவனின் ஒரே மகள் ! நீயோ நெடுங்கொடியசையும் தேரில் உலாவரும் நிலத்தரசன் மகன். எம்மிடத்தே இவளை மணப்பதற்கு செல்வாக்குமிக்க இளைஞர் உள்ளனர் என்று பெயர் தெரியாப் புலவரொருவர் பாடியுள்ளார்.

பரதவர் விருந்தோம்பல்

பரதவ மக்கள் விருந்தினரை அன்போடு வரவேற்று, இனிதாய் பேணிப் பகிர்ந்து உண்டு வாழும் பண்புடையவர். பரதவ மனைக் கிழத்தியரும் விருந்தினரைப் பேணலில் பேரார்வம் கொண்டவர்கள்தான்.

"மதி ஏக் கறூஉம் மாசுஆறு திருமுகத்து
நுதிவேல் நோக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப
.....
வறற்குழற் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்" [89]

என்ற சிறுபாணாற்றுப்படை பாடல் வரிகள், நல்லியக்கோடன் என்னும் குறுநிலமன்னனின் துறைமுகம் பட்டினமான எயிற்பட்டினத்தின் கடற்கரையை அடுத்து வாழும் பரதவர் மனையொன்றில், மாசற்ற மதிமுகங்கொண்ட அந்தப் பரதவ மகள் அன்று பாணரும் விறலியரும் வருவதை அறிந்து மனமகிழ்ந்து, அவர்களைத் தன் கணவனோடு மனைமுன் சென்று எதிகொண்டு அழைத்து, இல்லத்தில் அமர்த்தி, அவர்கள் காதம் பல கடந்து களைத்துப் போயிருப்பதை உணர்ந்து, பக்குவப்படுத்தி வடித்து வைத்திருந்த பழங்களைச் சாடியோடு கொண்டுவந்து வைத்து, குழல் மீனை நன்றாகப் பொரித்துக் கொண்டு வந்து பரிமாறி, கணவனும் தானுமாக அவர்களை ஆதரவாய்ப் பேணி, அன்புமொழி கூறி, உருக்கமாக உண்பிக்க, விருந்தினர் வயிறார உண்டு, மனமார வாழ்த்தி, விடைபெற்றுச் சென்றனர் என்று கூறி பரதவரின் விருந்தோம்பலை படம் பிடித்துக் காட்டுகிறது.

பரதவரின் இறைவழிபாடு

பரதவர்கள் தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன.

தங்கள் பாக்கியத்தின் பொதுவிடத்தில் உள்ள பனை, புன்னை போன்ற மரங்களில் தெய்வத்தை ஏற்றி வழிபட்டதைப் போல, கடல் தெய்வத்தையும் வணங்கியுள்ளனர்.

இன்றும், பரதவ மக்கள் கடலை தெய்வமாக வழிபடும் வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது.

சைவநாயன்மார்கள் அறுபத்துமூவரில் ஒருவரான 'அதிபத்த நாயனார்' என்ற சிவனடியார் பரதவர் குலத்தில் தஞ்சை மாவட்டத்திலுள்ள நாகப்பட்டினத்தில் தோன்றியவர் ஆவார். நாள்தோறும் தமது வலையில் கிடைத்த மீன்களில் பெரிய மீனைச் சிவபெருமானுக்குக் காணிக்கையாகக் கடலில் மீண்டும் விடுத்து வழிபாடு செய்து சிவபதமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பரதவ குறுநில மன்னர்கள்

பரதவர்கள் சிற்றரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் விளங்கியுள்ளனர் என்பதற்குத் தக்க இலக்கியச் சான்றுகள் உள்ளன.

பாண்டியப் பெருமன்னர்களும், சோழப் பேரரசர்களும் பரதவர்களின் வலிமையையும், திண்மையையும், படை வலிமையையும் கண்டு பலகால் பெருங்கவலை கொண்டிருந்ததாக சங்கஇலக்கியங்கள் உரைக்கின்றன.

> ''செற்ற தெவ்வர் கலங்கத் தலைச்சென்று
> அஞ்சுவரத் தட்கும் அணங்குடைத் துப்பின்
> கோழு உன்குறைக் கொழுவல்சி
> புலவுவில் பொலிகூவை,
> ஒன்றுமொழி, ஒலி இருப்பின்
> தென் பரதவர்''[90]

என்ற மதுரைக்காஞ்சி பாடலில் புலவர் மதுரை மாங்குடி மருதனார், சினங்கொண்ட பகைவர் உள்ளம் கலங்கும்படி அவர்பால் சென்று, அவர்அஞ்சி வருந்தத்தக்க வலிமையினையும், கொழுத்த இறைச்சி கலந்த கொழுஞ்சோற்றினையும், புலால் கமழும் வில்லினையும், கூவைக்கிழங்கினையும், வஞ்சினம் கூறுதலையும், ஆரவாரத்தினையுடைய குடியிருப்புகளையும் உடைய தென்னாட்டில் வாழும் பரதவர் என்று பொருள்பட கூறி பரதவரின்வலிமையினை எடுத்துரைத்துள்ளார்.

பரதவர் மாபெரும் பாண்டிய மன்னனுக்குத் தொல்லை கொடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களை அடக்க முடியாமல் பல்லாண்டுகள் மன்னன் மனமுடைந்து இருந்தான். பெயரைக் கேட்ட அளவிலேயே பகைவர் அஞ்சி நடுங்கும் ஆற்றலும் தோற்றமும் உடையவரும், வஞ்சினங் கூறிப் பொய்யாது அழிக்கும் மெய்யுரம் பூண்டவரும், புலால் மணக்கும் கொடிய விற்போர் வீரமும், தென்திசைக்கண் செருக்குடன் திகழ்ந்த குறுநில மன்னருமான பரதவர் என்ற மதமிகு வேழங்களை

அச்சுறுத்தி அடிமைப்படுத்திய ஆண்சிங்கம் என்று பாண்டியன் நெடுஞ்செழியனை புலவர் மாங்குடி மருதனார் பாடுகின்றார்.[91]

"ஒன்றுமொழி ஒலியிருப்பின்
தென் பரதவர் போர் ஏறே" [92]

என்ற மதுரைக்காஞ்சிப் பாடலில், பரதவரை வென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் ஆற்றலைக் கண்டு 'தென் பரதவர் போரேறு' என்று புலவர் புகழ்ந்து பாடியுள்ளார்.

இதுபோன்றே, செருப்பாழியெறிந்த இளஞ்சேட் சென்னி என்ற சோழ பேரரசனும் தென்பாண்டி நாட்டின் கடற்கரையில் வாழ்ந்த தென் பரதவர் செய்த குறும்பினால் பன்னெடுநாள் வேதனைக் கொண்டுக் கலக்கமுற்றிருந்தான். பின்னர், அவன் அவர்களை அவர்களின் மிடலைச் சாய்த்து வென்ற போது, 'தென்பரதவர் மிடல் சாய்த்த தீரனாக' விளங்கினான் என்று புகழ் பாடுகிறது புறநானூற்றுப் பாடல்.

"தென்பரதவர் மிடல்சாய
வடவடுகர் வாள் ஒட்டிய
தொடைஅமை கண்ணித் திருந்துவேல் தடக்கை
நல்தார் கள்ளின் சோழன்"[93]

என்ற புறநானூற்றுப் பாடலுக்கு விளக்கம் கூறும் உரையாசிரியர் ஔவை துரைசாமிப்பிள்ளை, தென் பரதவர் தென்பாண்டி நாட்டின் கடற்கரையில் இருந்து சில காலங்களில் பாண்டியர்க்கு துணைவராகவும் சில காலங்களில் பகைவராகவும் இருந்து குறும்பு செய்துள்ளனர் என்று இயம்புகின்றார்.

மதுரைக்காஞ்சி உரையாசிரியர் பொ.வே.சோமசுந்தரனார், "தென் பரதவர் என்பவர் தென்னாட்டின்கண் இருந்த குறுநில மன்னர்களாகிய பரதவர் என்றும், அவர்கள் செய்து வந்த குறும்பினைக் கண்டு கலக்கமுற்றிருந்த சோழ மன்னர்களும், பாண்டிய மன்னர்களும் அவர்களை வென்று அடிமைப்படுத்தினர் என்றும் கூறுவர்" என விளக்குகின்றார்.[94]

தமிழகக் கடற்கரையில் பேராதிக்கம் கொண்டு வாழ்ந்த பரதவர்களை தலைமையேற்க தலைவர்கள் இருந்தார்கள். முத்துக்குளித்தலுக்கு முழு உரிமை பூண்டவர்கள், பரதவர்களின் தலைவர்களே. முத்துக்குளித்ததில் வரும் செல்வத்தை அந்தந்தப் பகுதியின் தலைவர்கள் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்வர்.

ஆதலால் பரதவ தலைவர்கள் சிறந்த செல்வமும் செல்வாக்கும், தலைமையும் பெற்றுத் தன்னிகரற்று விளங்கினர். பிற அரசர்களின் கொடுமைகளினின்றும், அவ்வரசர்களின் குடிமக்களால் ஏற்படும் தொல்லைகளினின்றும், தங்களைப் பாதுகாத்துக் கொள்ள, பரதவ தலைவர்கள் படைவீரர்களை வைத்திருந்தனர்.

பரதவர்கள் தங்களிடத்தே இருந்த செல்வச் செருக்காலும் படை பலத்தாலும் எவர்க்கும் அஞ்சாமல், அரசர்களுக்கு அடங்காமல் தொல்லைக் கொடுக்கும் வண்ணம் குறும்பு செய்து வந்தனர் என எண்ணலாம்.

இதுகாறும் சங்க இலக்கியங்கள் தந்த சான்றுகளிலிருந்து பரதவர்கள் சிற்றரசர்களாகவும், குறுநில மன்னர்களாகவும் விளங்கினர் என்றும், தமிழகத்தின் பேரரசர்களாய் திகழ்ந்த பாண்டிய மன்னர்களையும் சோழப் பேரரசர்களையும் எதிர்க்கவல்ல பெரும் படைபலமும், பேராற்றலுடன் பேராற்றலும் பெற்றிருந்தனர் என்றும் உண்மை புலனாகின்றது.[95]

நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கை

கடலைச் சார்ந்த நெய்தல் நிலம் என்று கூறினோம். கடற்கரைக் குப்பங்களிலும் பாக்கங்களிலும் வசித்த நெய்தல் நிலத்து மக்கள் பரதவர் என்றும் பட்டினவர் என்றும் பெயர் பெற்றனர். மணல் நிலம் ஆகையினால் இங்கே நெல், கேழ்வரகு முதலான தானியங்கள் விளையவில்லை. ஆகவே நெய்தல் நிலத்து மக்கள் கட்டுமரங்களிலும் படகுகளிலும் கடலில் வெகுதூரம் போய் வலைவீசி மீன் பிடித்து வந்து விற்று வாழ்ந்தார்கள். கடலில் சுறா, இறால், திருக்கை முதலான ஊர்களில் விற்று (பண்டமாற்று செய்து) தானியங்களைப் பெற்று வாழ்ந்தார்கள். விற்று மிகுந்த மீன்களை உப்பிட்டுப் பதப்படுத்தி உலர்த்திக் கருவாடு செய்து விற்றார்கள்.

சில இடங்களில் கடற்கரையோரங்களில் உப்பளங்கள் இருந்தன. அந்த அளங்களில் கடல்நீரைப் பாய்ச்சி உப்பு உண்டாக்கினார்கள். உப்பை நெல்லுக்கு மாற்றினார்கள்.

நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கை கடினமான வாழ்க்கையே. குறிஞ்சி நிலமக்கள் வாழ்க்கை ஒரு வகையில் கடினமானது என்றால் நெய்தல் நிலத்து மக்கள் வாழ்க்கை வேறு வகையில் கடினமானது.

கடற்கரையோரங்களில் சில இடங்களிலே துறைமுகங்கள் இருந்தன. துறைமுகங்களில் வாணிகக் கப்பல்கள் வந்து இறக்குமதி, ஏற்றுமதி செய்தபடியால் துறைமுக பட்டினங்களில் வாணிகமும் செய்வமும் பெருகின. ஆகவே துறைமுகப் பட்டினங்கள் நாகரிகமும் செல்வமும் பெற்று விளங்கின.

பாலை நிலத்தில் மக்கள் வாழவில்லை என்று கூறினோம். வாழ்வதற்கு எந்த விதத்திலும் வாய்ப்பில்லாத பாலை நிலத்தில் மக்கள் வாழவில்லை. வாழ்ந்தவர்களும் மனதராக வாழவில்லை மக்களைப் போல வாழ்ந்தார்கள்.

இவ்வாறு வெவ்வேறு இயற்கையான சூழ்நிலைகள் அமைந்த இடங்களில் வசித்த அக்காலத்துத் தமிழர் வெவ்வேறு வகையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். விரைவான போக்குவரத்துச் சாதனங்களும் தந்தி தபால் வசதிகளும், மற்றும் இக்காலத்து வசதிகள் பலவும் அக்காலத்தில் இல்லாதபடியால் கல்வி, பொருளாதாரம்,

நாகரிகம் முதலியவை வளர்ச்சியடைய இயலாமற்போயின. இக்காலத்தில் மிக எளிய மக்கள் பெறுகிற வசதியைக்கூடச் செல்வம் பெற்றவர் பெற முடியாத சூழ்நிலை அக்காலத்தில் இருந்தது. இத்தகைய சூழ்நிலை தமிழருக்கு மட்டுமல்ல, உலகத்தில் எல்லா நாட்டிலும் இப்படிப்பட்ட நிலைதான் இருந்தது.

அந்தக் காலத்தில் தமிழருடைய நாகரிகம் மருத நிலத்திலும் துறைமுகப் பட்டினங்களிலும் தான் அக்காலத்து தமிழரின் நாகரிகம், பண்பாடு, கலைகள் எல்லாம் வளர்ந்தன.

தமிழரின் வாணிகம் அக்காலத்தில் எவ்வாறு என்பதைப் பார்ப்போம். இக்காலத்தில் சிறு விலையுள்ள பொருளுக்கும் அதிக விலையுள்ள பொருளுக்கும் காசு பயன்படுகிறது. ஆனால் காசு (நாணயம்) ஆதிகாலத்தில் ஏற்படவில்லை. ஆதிகாலத்தில் பண்டமாற்று ஒரு பொருளைக் கொடுத்து அதற்கு ஈடாக மற்றொரு பொருளைப் பெறுவது நடந்தது. பிறகு பையப்பைய நாணயம் (காசு) வழங்கத் தலைப்பட்டது. நமது ஆராய்ச்சிக்குரிய சங்க காலத்துத் தமிழகத்திலேயே பண்ட மாற்றும் நாணயச் செலவாணியும் நடைபெற்றன.

வேடன் தான் வேட்டையாடிக் கொண்டுவந்த மான் இறைச்சியை உழவனிடத்தில் கொடுத்து அதற்கு ஈடாக நெல்லை மாற்றிக் கொண்டதைக் கோவூர் கிழார் கூறுகிறார். இடைச்சியரும் உழவர்களுக்கு தயிரைக் கொடுத்து நெல்லைப் பெற்றுக் கொண்டனர் என்று இப்புலவரே கூறுகிறார்.

> ‘‘கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
> மான்தசை சொரிந்த வட்டியும், அய்மகள்
> தயிர்கொடு வந்த தசும்பும் நிறைய
> ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
> குளக்கீழ் விளைந்த களக்கோள் வெண்ணெல்
> முகந்தனர் கொடுப்ப உவந்தனர் பெயரும்
> தென்னம் பொருப்பன் நன்னாடு‘‘[96]

பாணர் உள்நாட்டு நீர் நிலைகளில் (ஆறு, ஏரி, குளங்களில்) வலை வீசியும் தூண்டில் இட்டும் மீன் பிடித்தார்கள். அவர்கள் பிடித்த மீன்களைப் பாண்மகளிர் ஊரில் கொண்டு போய்ப் பயற்றுக்கும் தானியத்துக்கும் மாற்றினார்கள் என்று ஓரம் போகியார் கூறுகிறார்.

> ‘‘முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
> அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
> அரிகால் பெரும்பயறு நிறைக்கும்’’ [97]

> ‘‘வலைவல் பாண்மகன் வாலெயிற்று மடமகள்
> வராஅல் சொரிந்த வட்டியுள் மனையோள்
> யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும்’’ [98]

"அஞ்சில் ஓதி அசைநடைப் பாண்மகள்
சின்மீன் சொரிந்து பன்னெற் பெரூஉம்" [99]

கடற்கரையைச் சார்ந்த உப்பளங்களில் நெய்தல் நிலமக்கள்உப்பு விளைத்தார்கள். உப்பு வாணிகர் மாட்டு வண்டிகளிலே நெல்லைக் கொண்டு வந்து கொடுத்து உப்பை மாற்றிக் கொண்டு போனார்கள் என்று நற்றிணைச் செய்யுள் கூறுகிறது.

"தந்நாட்டு விளைந்த வெண்ணல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி
.....
உமணர் போகலும்" [100]

நெய்தல் நிலத்து முதுமகள் ஒருத்தி தன் உப்பளத்தில் விளைந்த உப்பை மாற்றி நெல் கொண்டுவரச் சென்றாள் என்று கல்லாடனார் கூறுகிறார்.

"ஆயும் உப்பை மாறி வெண்ணெல் தரீஇய
உப்பு விளை கழனிச் சென்றனள்?" [101]

ஊர்த் தெருவுகளில் உப்பு விற்ற உமணப் பெண் உப்பை நெல்லுக்கு மாற்றினதை அம்மூவனார் கூறுகிறார்.

"கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளர்ப்ப வீசி
நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச்
சேரிவிலை மாறு கூறலின்" [102]

"நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளிரோ வெனச் சேரிதொறும் நுவலும்" [103]

உப்பை நெல்லுக்கு மாற்றி உப்பு வாணிகர் தமக்குக் கிடைத்த நெல்லைச் சிறு படகுகளில் ஏற்றிக்கொண்டு கழிகளில் ஓட்டிச்சென்றதை கடியலூர் உருத்திரன் கண்ணனார் கூறுகிறார்.

"குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நெல்லோடு வந்த வல்வாய்ப் ப.ஃறி" [104]

உப்பை நெல்லுக்கு மாற்றியதை உலோச்சனார் கூறுகிறார்.

"உமணர் தந்த உப்பு நொடை நெல்" [105]

பரதவ மகளிர் கடல்மீனைத் நடக்கிற ஊர்களில் கொண்டுபோய் எளிதில் விற்றதைச் சீத்தலைச் சாத்தனார் கூறுகிறார்.

"திமிலோன் தந்தக டுங்கண் வயமீன்
தழையணி அல்குல் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகரும்
கானலஞ் சிறுகுடி"[106]

மீனை நெல்லுக்கு மாற்றினார்கள். பண்ட மாற்றினால் கிடைத்த நெல்லை அம்பியில் ஏற்றிக்கொண்டு கழிகளின் வழியே வந்ததைப் பரணர் கூறுகிறார்.

"மீன் நொடுத்து நெல் குவைஇ
மிசை அம்பியின் மனைமறுக்குந்து"[107]

உழவர் மகளிர் தெருக்களில் பூ விற்றதைப் பாலை பாடிய பெருங்கடுங்கோ கூறுகிறார்.

'துகிலினை யனன் துய்த்தலைப் பாதிரி
வாலிதழ் அலரி வண்டுபட ஏந்திப்
புதுமலர் தெருவுதொறும் நுவலும்
நொதுமலாட்டி" [108]

வேடர்கள் ஒன்றுகூடிக் காட்டில் வேட்டையாடிக் கொன்ற யானையின் தந்தங்களை மதுபானக் கடையில் கொண்டு போய்க் கொடுத்து மதுபானம் அருந்தினதை மாமூலனார் கூறுகிறார்.

"வரிமாண் நோன்ஞாண் வன்சிலைக் கொளீஇ
அருநிறத் தழுத்திய அம்பினர் பலருடன்
அண்ணல் யானை வெண்கோடு கொண்டு
நறவுநொடை நெல்லின் நாண்மகிழ் அயரும்" [109]

வேடர் வேதனையும் கிழங்கையும் கொண்டுவந்து மதுபானக் கடையில் மாற்றி அதற்கு மாறாக வறுத்த மீன் இறைச்சியையும் மதுவையும் வாங்கி உண்டதையும், உழவர் கரும்பையும் அவலையும் கொண்டுவந்து கொடுத்து அதற்கு மாறாக வறுத்த மான் இறைச்சியையும் மதுவையும் பெற்று உண்டு மகிழ்ந்ததையும் முடத்தாமக் கண்ணியார் கூறுகிறார்.

"வேனெய்யொடு கிழங்கு மாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்பொடு அவல் வகுத்தோர்
மான் குறையோடு மது மறுகவும்" [110]

கொற்கைக் குடாக்கடலின் கரையோரங்களில் வாழ்ந்த பரதவர், கொற்கைக் கடலில் மீன் பிடித்த போது அதனுடன் முத்துச் சிப்பிகளும் கிடைத்தன. அந்தச் சிப்பிகளை அவர்கள் கள்ளுக்கடையில் மாற்றிக் கள் குடித்ததைப் போராலவாயர் கூறுகிறார்.

"பன்மீன் கொள்பவர் முகந்த சிப்பி

நாரரி நறவின் மகிழ்நொடைக் கூட்டும்
பேரிசைக் கொற்கை”[111]

எயினர் மது அருந்துவதற்காக மதுவிற்கும் இடத்துக்கு வந்து எந்தப் பொருளும் இல்லாதபடியால், காட்டில் வேட்டையாடி யானைத் தந்தங்களைக் கொண்டு வந்து கொடுப்போம். அதற்கு ஈடாக இப்போது கள்ளைக் கடனாகக் கொடு என்ற கேட்டதை மருதன் இளநாகனார் கூறுகிறார்.

“அரிகிளார் பணைத்தோள் வயிறணி திதலை
அரிய லாட்டியார் அல்குமணை வரைப்பின்
மகிழ்நொடை பெறாஅர் ஆகி நனைகவுள்
கான யானை வெண்கொடு சுட்டி
மன்றாடு புதல்வன் புன்றலை நீவும்
அருமுனைப் பாக்கம்” [112]

முத்துக்குளித்தல்

சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் முத்துக்கள், சங்குகள் பற்றி ஏராளமான தகவல்கள் இடம்பெற்றுள்ளன. சங்க இலக்கியங்கள் கொற்கை நகரில் நடந்த முத்துக்குளித்தல், முத்து வணிகம் பற்றிக் குறிப்பிடுவதை ஆய்ந்து நோக்கும்போது, முத்துக்குளித்தலில் ஈடுபட்டவர்கள், பரதவர்கள் என்று கூறப்படும் பரவர்கள் என்றே தெளிவாகுகிறது.[113]

ஆதி வரலாற்றுக் காலத்தில் புகழ்பெற்ற துறைமுகமான கொற்கையிலிருந்தும், பின்னர் மதுரையிலிருந்தும் அரசாண்ட பாண்டியர்கள் முத்துக்குளித்தலையும், முத்து வணிகத்தையும் தங்களது ஏகபோக உரிமையாக தம் வசம் வைத்திருந்தனர். எனினும், முத்துக்குளித்தலிலும் முத்து வணிகத்திலும் முழுமையாக ஈடுபட்டவர்கள் பரதவர்களே!

ஆதி காலத்திலிருந்தே முத்தெடுக்கும் தொழிலை பரதவர்கள் தங்களது குலத்தொழிலாகப் போற்றி வந்தனர். ஆதலின், முத்துக்குளித்தல் வரலாற்று விளக்கங்கள் அனைத்தும் பரவர் வரலாற்றுக்குள் இணைந்துவிடும் என்பதில் ஐயமொன்றுமில்லை.

தமிழகக் கடலோரத்தில் நடைபெறும் முத்துக்குளித்தலைத் தவிர, இந்தியாவில் வேறு எங்கும் முத்துக்குளித்தல் நடைபெறுவதில்லை. ஆதலாலே, தமிழகக் கடலோர முத்துக்குளித்தல் வரலாற்றை ‘இந்திய முத்துக்குளித்தல் வரலாறு’ என்றும் குறிப்பிடலாம்.[114]

முத்துக்குளித்தல் வரலாறும், சங்கெடுப்பு வரலாறும் ஒன்றையொன்று சார்ந்த நிலையிலேதான் உள்ளது.

முத்துக்குளித்துறை

முத்துக்கும் முத்தமிழுக்கும் புகழ்பெற்று பண்புடன் திகழ்ந்த பாண்டிய நாட்டின் தென்கோடிக் கரைதான், முத்துக்குளித்துறை. இப்பகுதி ஈழ நாட்டில் உள்ள மன்னார் வரை பரவியிருந்தது.

முத்துக்குளித்துறை பகுதியின் ஆழ்கடலில் செழித்து வளர்ந்த முத்துச்சிப்பிகளைக் கடற்கரையைச் சார்ந்த நெய்தனில் மக்களான பரதவர் முத்துக்குளிக்கும் காரணம் பொருட்டே இப்பகுதி 'முத்துக்குளித்துறை' (Coast da Pescaria) என்று அழைக்கப்பட்டது.[115]

கீழை நாட்டு முத்துக்கள் (Oriental Pearls) என்று அழைக்கப் பெற்று, பெர்சியன் வளைகுடா (Persian Gulf) மன்னார் வளைகுடா (Guif of Mannar) ஆகியவற்றிலிருந்து கிடைக்கப் பெற்ற முத்துக்களையே பாபிலோன், எகிப்து, கிரேக்கம், ரோமாபுரி, சீனா ஆகிய நாடுகளைச் சேர்ந்த மக்கள் வெகுவாக விரும்பினர்.

கீழை நாட்டு முத்துக்களை இருபதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலம் வரை அதிக அளவில் கொடுத்தது. மன்னார் வளைகுடா என்றழைக்கப்படும் முத்துக்குளித்துறைப் பகுதியே.[116]

தமிழகக் கடலோர முத்துக்குளித்தலின் ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால், மன்னார் வளைகுடாவின் இந்தியக் கடற்கரைப் பகுதி எந்தெந்த காலத்தில் அதிக முத்துக்குளித்தல் வருமானத்தை ஈட்டுகிறதோ, அந்தந்த காலத்தில் இலங்கைக் கடற்கரைப் பகுதியில் வெகு குறைவான வருமானப் பலனைப் பெற்றுள்ளது, என்பதே. இலங்கைக் கடற்கரைப் பகுதியில் ஏராளமான அளவில் முத்துக்கள் பெறப்பெற்ற வேளையில், இந்தியக் கரையோரத்தில் முத்துக்குளித்தலே நிகழாமலும், அல்லது மிகமிகக் குறைவான அளவில் நிகழ்ந்தன என்றும் காணப்படுகின்றது. பண்டைக் காலத்திலிருந்து இன்று வரை இவ்விநோதப் போக்கு தொடர்ந்து நடந்து வருகிறது.

சங்க இலக்கியத்தில்,

> "மலையவும் நிலத்தவும் நீரவும் பிறவும்
> பல்வேறு திருமணி முத்தமொடு பொன்கொண்டு
> சிறந்த தேயத்து பண்ணியம் பகர்நரும்"[117]

என்ற மதுரைக்காஞ்சி பாடலில், தமிழ்நாட்டு வணிகர்கள் தங்களுடைய பொருட்களை வெளிநாடுகளுக்கு வணிகர்கள் தங்களுடைய பொருட்களை வெளிநாடுகளுக்கு எடுத்துச் சென்று விற்றுவிட்டு, தமிழ்நாட்டில் கிடைக்காத அபூர்வமான பொருட்களை வாங்கி வருவதற்காக தொலைதூரப் பிரதேசங்களுக்குச் சென்றனர் என்று கூறப்பட்டுள்ளது.

இதன்மூலம், தமிழர்களால்தான் பிற நாடுகளுடனான முத்து வணிகம் நடத்தப்பட்டது என்பது உறுதியான கருத்தாகுகிறது.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே முத்துக்குளித்துறையில் சங்கெடுத்தல் நிகழ்ந்து வந்திருக்க வேண்டும் என்பதைச் சங்க இலக்கியங்களும், அகழ்வாய்வுகளும் மெய்ப்பிக்கின்றன. சங்கெடுத்தல், முத்துக்குளித்தல் ஆகிய இரு தொழில்களையும் பரதவர்களே மேற்கொண்டிருந்தனர்.[118]

சங்க இலக்கியமான திணைமாலை நூற்றைம்பது பாடலில்,

"பெருங்கடல் வெண்சங்கு காரணமாய் பேணா
திருங்கடல் மூழ்குவர்"[119]

பாடற்புலவர், பெருங்கடல் வெண்சங்கு பெறுதல் காரணமாகத் தங்கள் உயிரைப் பாதுகாவாது கடலினுள்ளே குளிப்பார் என்பது பரதவரைக் குறிக்கிறது என்றுரைக்கின்றார்.

பரதவரும் வணிகமும்

பரதவர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபட்டு அவ்வணிகத்தில் உரிமையும் தலைமையும் பெற்று விளங்கினர் என்று சங்க இலக்கியச் சான்றுகள் உரைக்கின்றன.

பொதுவாக, வணிகத் தொழில் புரிபவர் வணிகர், வாணிகர் என்று அழைக்கப்பட்டனர். பரதவர்கள் மீன், முத்து, சங்கு, உப்பு ஆகியவற்றைக் கொண்டு வணிகம் செய்வதால், அவர்களும் வணிகர்களே! மேலும் கடல் வணிகத்திலும் பரதவர்கள் உரிமையாளர்களாக இருந்துள்ளனர்.

வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்த பரதவரை, சங்க இலக்கியங்களான பெரும்பாணாற்றுப்படை, மதுரைக்காஞ்சி பரதர் என்றே குறிப்பிடுகின்றது.

"நாவாய் சூழந்த நளிநீர்ப் படப்பை
மாடமோங்கிய மணன்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்"[120]

என்ற பெரும்பாணாற்றுப்படை பாடலின் அடிகள், மரக்கலங்கள் சூழந்து நிற்கும் பெருமைமிக்க கடற்பக்கத்தில், மாட மாளிகைகள் உயர்ந்து நின்ற மணல்மிகு சாலைகளில் பரதர் எனும் நெய்தல் நிலத்தோர் பெருகி வாழ்கின்ற பலவாய் வேறுபட்ட தெருக்கள் என்று பொருள் கூறுகின்றது.

மேற்கூறிய பெரும்பாணாற்றுப்படை பாடலை முழுவதுமாய் நோக்கிங்கண்,

"நீர்ப்பெயற்று எல்லைப் போகி...
வால்உளைப் புரவியொடு வடவளம் தரூஉம்
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாடமோங்கிய மணல்மலி மறுகின்
பரதர் மலிந்த பல்வேறு தெருவின்

சிலதர் காக்கும் சேண்உயர் வரைப்பின்

….. ….. ….. …… …….. …… …..

பட்டினம் …. ….”[121]

பாடலில் குறிப்பிடப்பட்டுள்ள நீர்ப்பேயற்றுறை என்ற பட்டினந்தான். பின்னாட்களில் பல்லவ மன்னர்களின் தலைசிறந்த துறைமுகமாகவும், கலைசிறந்த சிற்பக்கலை நகராகவும் திகழந்து நிற்கும் மாமல்லபுரம் என்று விளங்குகின்றது.

“முழங்கு கடல் தந்த விளங்குகதிர் முத்தம்

அரம்போழ்ந் தறுத்த கண்ணேர், இலங்குவளை

பரதர் தந்த பல்வேறு கூலம்”[122]

என்ற மதுரைக்காஞ்சி பாடல், ஒலிக்கும் கடல் தந்து விளங்குகின்ற ஒளியினையுடைய முத்துக்களும் வாளரம் கொண்டு அறுக்கப்பட்ட நேரிதாய் விளங்கும் வளையல்களும், பரதரென்னும் செட்டிகள் கொண்டு வந்த பல்வேறு வகைப்பட்ட பண்டங்களும் என்று பொருள் கூறும்போது, வணிகத் தொழிலில் ஈடுபட்டிருந்த பரதவரை, பரதர் என்று குறிப்பிடுகின்றது.

பெரும் வணிகர்களாகப் பரதவர் விளங்கியதை சிலப்பதிகாரம் எடுத்துரைக்கின்றது.

9-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ‘திவாகரம் நிகண்டு’ வாணிபம் மேற்கொள்ளும் செட்டிகளின் பெயர்களாக 12 பெயர்களைக் குறிப்பிடுகிறது.[123] இவற்றுள், இரண்டாவதாகப் ‘பரதவர்’ என்னும் பெயர் இடம்பெற்றுள்ளது.

இதே நூலில், நெய்தல் நில மக்களின் 6 பெயர்களில் முதற்பெயராகப் ‘பரதவர்’ என்ற சொல் குறிப்பிடப்படுகிறது.[124]

வணிகம் செய்த பரதவர்கள் பெரும்பாலும் ‘பட்டினம்’ என்று அழைக்கப்படும் கடற்கரை நகரங்களில் மட்டுமே வாழ்ந்து வந்தனர். கடற்கரை நகரங்கள் என்பவை துறைமுக நகரங்களேயாகும். பட்டினங்களில் வாழ்ந்து வந்த பரதவர்கள், ‘பட்டினவர்’ என்றே அழைக்கப்பட்டனர்.

வணிகர்களுக்கும் பொதுவாகச் ‘செட்டி’ என்ற பட்டப் பெயருண்டு. வழக்கமாக, அவர்கள் தங்களது பெயருக்கு பின்னால் செட்டி என்ற பட்டப் பெயரையும் சேர்த்தே வழங்குவர். அதுபோலவே, பட்டினங்களில் வாழும் பரதவர்களான பட்டினவர் என்பவர்களும் செட்டி என்றப் பட்டப்பெயரையும் தம் பெயருக்குப் பின் சேர்த்துக் கொண்டனர். இன்றும், இது வழக்கில் உள்ளதாக தெரிய வருகிறது.[125]

சென்னை, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சை, மாவட்டங்களின் கடற்கரைகளில் வாழும் பரதவர்களில் பெரும்பாலோர் பட்டினவர் என்ற பிரிவைச் சார்ந்தவர்களே, அவர்கள் தம் பெயருக்குபின் ‘செட்டியார்’ என்ற பட்டப் பெயரைச்

சேர்த்தே அழைக்கப்படுகின்றனர். அவர்களின் குடியிருப்புகளில் தலைவர்களாகவோ அல்லது நாட்டாண்மைக் காரர்களாகவோ விளங்குபவர்கள், 'ஊர் செட்டியார்கள்' என்றே வழங்கப்படுகின்றனர்.

மேலும், செட்டி என்று அழைக்கப்படும் பரதவர்களில் சிலர் பூணூல் அணியும் வழக்கத்தையும் மேற்கொண்டுள்ளனர். வணிகச்செட்டிகள் மேற்கொண்ட வழக்கத்தைப் பரதவ செட்டிகளும் பின்பற்றினர் என்று கருதலாம்.

தூத்துக்குடி மாவட்டத்தின் பரதவ ஊர்களில் ஒன்றான சிப்பிகுளம் என்னும் ஊரைச் சேர்ந்த மனோன்மணியம்மாளின் மகன் தம்பியா லியோன் என்பவர் தனது 80-ஆம் வயது வரை (1955-ஆம் ஆண்டு வரை) பூணூல் அணிந்திருந்தார் என்ற செய்தியை அதே ஊரைச் சேர்ந்த வரலாற்று ஆசிரியரான திரு.கலாபன் வாஸ் உறுதிபடுத்துகிறார்.

பரதவரும் கடல் வணிகமும்

தமிழ்நாடு, கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூறு ஆண்டுகட்கு முன்னரே கிரேக்கம், உரோமம் முதலிய மேலை நாடுகளோடு வணிகத் தொடர்பு கொண்டிருந்தது என்பது வரலாறு கண்ட உண்மையாகும். இதற்குச் சிறந்த சான்றுகள் சங்க இலக்கியங்களில் மிகுதியாய் காணப்படுகின்றன.[126]

நாணயச் சான்றுகளும், அகழ்வாய்வு சான்றுகளும் இவ்வுண்மையை புலப்படுத்துகின்றன.

கடல் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட மரக்கலங்களை இயக்கியவர்கள் பரதவர்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பரதவர்கள் உலகின் தலைசிறந்த கடலோடிகளாக விளங்கினர், என்பதை இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.

இந்திய நாடு உலக நாடுகளுடன் ஆயிரமாயிர ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் வணிகத் தொடர்பு கொண்டு வரலாறு படைத்துள்ளது என்றால், அதற்கான பெருமை தமிழகத்தையே சாரும், தமிழகத்தில் பரதவர்களையே சாரும் என்பது எவரும் மறுக்கமுடியாத, மறக்க முடியாத, மறைக்க முடியாத உண்மை.[127]

"நளியிரு முந்நீர் நாவாயோட்டி
வளிதொழில் ஆண்டவர்"[128]

என்ற புறநானூற்று பாடல் வரிகள், நீர் மிகுந்த பெரிய கடலில் இயங்கும் காற்றின் திறத்தையும் போக்கையும் உணர்ந்து, கடற்பாயை விரித்து, அக்காற்றினைப் பயன்படுத்தி, தாம் விரும்பும் திசை நோக்கி மரக்கலத்தைச் செலுத்தும் நேர்த்தியை முதன் முதலில் கண்டவர் பண்டைத் தமிழரே என்று விளக்குகின்றது.

ஆண்டில் குறிப்பிட்ட காலத்தில் வீசும் வணிகக் காற்றின் வரவை அறிந்து கலஞ்செலுத்தும் நுண்ணறிவும் திறனும் பெற்றப் பண்டைத் தமிழர், பரதவர்கள்தான்!

மரக்கல வகைகள்

சங்ககால இலக்கியங்கள் தொடர்ந்து 19-ஆம் நூற்றாண்டு இலக்கியங்கள் வரை, இருபது சொற்கள் 'கடற்கலன்' என்ற பொருள்படக் காணப்படுகிறது.

அவற்றில் குறிப்பிடத்தக்கவை :

1.	அம்பி	2.	நாவாய்	3.	திமில்
4.	நாவாய்	5.	வங்கம்	6.	கலம்
7.	தோணி	8.	ஓடம்	9.	படகு
10.	மதலை	11.	மிதவை	12.	தெப்பம்
13.	கைப்பரிசு	14.	கப்பல்	15.	சோங்கு
16.	பாறு	17.	ப.ற்றி		

இவற்றுள் சில கடலிலும், சில ஆறு, குளம், ஏரி ஆகியவற்றிலும் பயன்படுத்தப்பட்டுள்ளன.[129]

''சுமேரிய நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்த சிந்துவெளி மக்களாகிய பரதவர்கள் செல்வத்துடனும் செல்வாக்குடனும் வாழ்ந்தனர் ; அவர்கள் நாவாய்களின் வழியே வெளிநாட்டு வணிகத்திலும் ஈடுபட்டிருந்தனர். வள்ளம் ஆகிய படகை வைத்திருந்ததால், அவர்களை 'வள்ளல்' என்றும் வேதம் குறிப்பிடுகிறது''[130] என்று அறிஞர் வேலு கூறியுள்ளார்.

இயல் முடிவுகள்

இன்று தமிழகத்தின் இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும் பரதர் என்ற பெயர், சங்க இலக்கியத்தில் மூன்று இடங்களில் கையாளப்பட்டுள்ளது.

பாண்டியப் பெருமன்னர்களும், சோழப் பேரரசர்களும் பரதவர்களின் வலிமையையும், திண்மையையும், படை வலிமையையும் கண்டு பலகால் பெருங்கவலை கொண்டிருந்ததாக சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன.

வலைவீசு புராணத்துள் பரதவர் என்ற சொற்கள் வரும் இடங்கள் இங்கே குறிப்பிடப்பட்டுள்ளன.

பைந்தமிழில் பரவன் என்ற சொல்லிற்குக் 'கடல் மனிதன்' என்ற பொருளாகும். இச்சொல்லின் பன்மைப் பதமான 'பரதவர்' பரவர் என்றும் வழங்கப்பட்டனர்

சங்க காலத்திற்கு முன்பிருந்தே முத்துக்குளித்துறையில் சங்கெடுத்தல் நிழ்ந்து வந்திருக்கவேண்டும் என்பதைச் சங்க இலக்கியங்களும், அகழ்வாய்வுகளும் மெய்ப்பிக்கின்றன. முத்துக் குளித்தல், சங்கெடுத்தல் ஆகிய இரு தொழில்களையும் பரதவர்களே மேற்கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழ் பெருங்குடி மக்களான பரதவர், நெய்தல் நிலத்து மண்ணின் மைந்தர்கள் என்று சங்க இலக்கியத்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

நெய்தல் நில ஊர்கள் பாக்கம் என்று இலக்கியங்களில் வழங்கப்பட்டதைப் போன்று, இன்றும் அதே பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன.

பரதவ மக்கள் மீன் பிடித்தலை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தாலும், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், உப்பு விளைத்தல் ஆகியவற்றையும் திறம்பட செய்தனர்.

பரதவர் மரபில், ஆண்மகன் தான் விரும்பும் கன்னியை மணப்பதெனின் பரிசமாகப் பொன்னும், திரண்ட பொருளும் அளவற்ற அணிகலன்களும் கொடுக்கும் வழக்கம் உண்டு என்று கருதப்படுகிறது.

பரதவ மக்கள் விருந்தினரை அன்போடு வரவேற்று, இனிதாய் பேணிப் பகிர்ந்து உண்டு வாழும் பண்புடையவர்.

பரதவர்கள் தெய்வ நம்பிக்கை கொண்டவர்கள் என்று சங்க இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன.

சங்ககாலத் தமிழ் இலக்கியங்களில் முத்துக்கள், சங்குகள் பற்றி ஏராளமான தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

பரதவர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபட்டு அவ்வணிகத்தில் உரிமையும் தலைமையும் பெற்று விளங்கினர் என்று சங்க இலக்கியச் சான்றுகள் உரைக்கின்றன.

கடல் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட மரக்கலங்களை இயக்கியவர்கள் பரதவர்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பரதவர்கள் உலகின் தலைசிறந்த கடலோடிகளாக விளங்கினர், என்பதை இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.

அடிக்குறிப்புகள்

1. மேட்டி. பொ. கேசவராமன், 'பட்டினப்பாலை ஆராய்ச்சிக்கு மறுப்புரை', ப.21.
2. அரு.பரமசிவம், 'பரதவர் இன மீட்டுருவாக்க வரைவியல்', ப.23
3. மேலது, ப.24
4. மேலது, ப.24
5. மேலது, ப.25
6. மேலது, பக்.26-27
7. மேலது, ப.27
8. ரா.பி. சேதுபிள்ளை, 'கடற்கரையில் சிதம்பரனார்' கட்டுரை ப.30.
9. ரா.பி. சேதுப்பிள்ளை, 'தமிழின்பம்', பக்கம் 68
10. K.A.Nilakanta Sastri, 'The Pandyan Kingdom From the Earliest times to the Sixteenth Century', Page 35
11. P.Srinivasa Iyengar, 'Tamil Studies', Page 62
12. Letter of Dutch Commander of Jaffna Hendrik Van Reede to Dutch Govenor of Ceylon Rijckloff Van Goens, P.21.
13. James Hormell, 'The Indian Pearl Fisheries of the Quit of Mannar and Palk Bay', Page 11
14. கி.மா. போன்காரத் லேமின், இந்தியாவின் வரலாறு, ப.13
15. M.Winslow, 'A Comprehensive Tamil – English Dictionary', P.20
16. மொ.அ. துரை அரங்கசாமி, 'சங்க காலச் சிறப்பு பெயர்கள்', பக்கம் 1
17. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.4
18. மேலது, ப.169
19. 'கலைக்களஞ்சியம்', தொகுதி 6, ப.539
20. ஆ.சிங்காரவேலு முதலியார், 'அபிதான சிந்தாமணி', ப.1180
21. தனிநாயகம் அடிகள், 'தமிழ்த் தூது (கட்டுரைக் கொத்து)', பக்.54-55
22. நற்., பா.19
23. பதிற்றுப்பத்து, பா.55
24. அகம்., பா.340
25. மேலது., பா.20
26. நற்., பா.49
27. மேலது., பா.4
28. மேலது., பா.101
29. மேலது., பா.388
30. ஐங்., பா.147
31. மேலது., பா.191
32. அகம்., பா.280

33. நற்., பா.145
34. கலி., பா.144
35. அகம். பா.160
36. நற். பா.272
37. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.23
38. நற்., பா.78
39. அகம்., பா.370
40. நற்., பா.38
41. குறுந்., பா.304
42. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.100
43. நற்., பா.303
44. கலி., பா.304
45. அகம்., பா.10
46. மேலது, பா.210
47. மேலது, பா.210
48. குறுந்., பா.269
49. மேலது, பா.320
50. மேலது, பா.401
51. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.118
52. அகம்., பா.280
53. 'கலைக்களஞ்சியம்' தொகுதி 4, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை, பக். 369-371
54. ஐங். பா.195
55. அகம்., பா.350
56. மேலது, பா.60
57. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.146
58. மேலது, பக். 148-149
59. அகம்., பா.10
60. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', பக்.165-168
61. பெரும்பாணாற்றுப்படை., அடிகள் 322-323
62. மதுரைக்காஞ்சி, பா.315
63. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.171
64. மேலது, ப. 172
65. அகம்., பா.340
66. மேலது, பா. 187
67. புறம்., பா.24
68. நற்., பா.74
69. மேலது, பா. 111

70. மேலது, பா.199
71. மேலது, பா.175
72. மேலது, பா.219
73. மேலது, பா.207
74. அகம்., பா.340
75. மேலது, பா.30
76. மேலது, பா.10
77. நற்., பா.372
78. பட்டினப்பாலை, அடிகள் 111-112
79. நற்., பா. 63
80. அகம்., பா.300
81. குறுந்., பா.320
82. மதுரைக்காஞ்சி, பா.505-506
83. அகம், பா. 280
84. ஐங்., பா. 194
85. பதிற்றுப்பத்து, பா.30
86. பட்டினப்பாலை, அடிகள் 84-93
87. அகம்., பா.28
88. நற்., பா.45
89. சிறுபாணாற்றுப்படை, அடிகள் 157-163
90. மதுரைக்காஞ்சி, பா.139-144
91. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', பக்கம் 171
92. மதுரைக்காஞ்சி, பா.110
93. 'புறநானூறு', ஔவை துரைசாமிப் பிள்ளை உரை, ப.382
94. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', பக்கம் 230
95. மேலது, பக்கம் 232
96. புறம்., பா.33: அடிகள் 1-8
97. ஐங்குறு., மருதம், புலவிப்பத்து, பா.47
98. மேலது., பா.48
99. மேலது., பா.49
100. நற்றிணை, பா.183
101. குறுந்., பா.369
102. அகம், பா.140
103. மேலது., பா.390
104. பட்டினப்பாலை, அடி 28-30
105. நற்றிணை, பா.254

106. அகம், பா.320
107. புறம்., பா.343
108. நற்றிணை, பா.118
109. அகம், பா.61
110. பொருநர் ஆற்றுப்படை, அடிகள் 214-271
111. அகம், பா.296
112. மேலது, பா.245
113. S.Arunachalam, 'The History of the Pearl Fishery of the Tamil Coast', Pg.15
114. மேலது., ப.1
115. A.M. Mundadan, 'History of Christianity in India', Volume 1, Page 391
116. S.Arunachalam, 'The History of the Pearl Fishery of the Tamil Coast', Pg.1
117. மதுரைக்காஞ்சி, பா.11 அடிகள், 504-506
118. ந. அதியமான், 'சங்கு', ப.34
119. ரா. இராகவையங்கார், 'திணைமாலை நூற்றைம்பது', ப.13
120. பெரும்பாணாற்றுப்படை, பொ.வே.சோமசுந்தரனார் உரை, ப.90
121. தி. முத்துக் கண்ணப்பன், 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.245
122. மதுரைக்காஞ்சி', பொ.வே. சோமசுந்தரமனார் உரை, ப.91
123. திவாகரம் நிகண்டு, நூற்பா 192
124. மேலது, நூற்பா 300
125. தி. முத்துக் கண்ணப்பன் - 'சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்', ப.233
126. மேலது, ப.220
127. மேலது, ப.227
128. 'புறநானூறு உரை', கழக வெளியீடு, 1950, ப.175
129. ஆ. சிவசுப்பிரமணியன், 'தோணி', ப.14
130. குருவிக்கரம்பை வேலு, 'அரப்பாவில் தமிழர் நாகரிகம்', ப.35

தற்காலப் படைப்புகளில் நெய்தல் வாழ்க்கை

முன்னுரை

தூத்துக்குடி மற்றும் உவரியை பின்புலமாகக் கொண்ட தற்கால நெய்தல் நில படைப்பாளி ஜோ டி குருஸ் அவர்கள் எழுதிய ஆழி சூழ் உலகு மற்றும் கொற்கை ஆகிய இரு நாவல்களும் அதன் பாத்திரப் படைப்புகளும் இந்த இயலில் திறனாய்வு செய்யப்படுகின்றன.

ஆழி சூழ் உலகு நாவல்

ஆழி சூழ் உலகு நாவல் ஆர்.என். ஜோ டி குருஸ் எழுதிய முதல் நாவல். இந்த நாவல் இன்று தமிழின் தேர்ந்த வாசகர்களால் ஓர் இலக்கிய சாதனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. ஆழி சூழ் உலகு நாவல் மூலம் தமிழ் வாசகர்கள் நடுவே கவனிக்கப்பட்டவர் ஜோ டி குருஸ். தமிழில் மீனவ மக்களின் வாழ்க்கையை எழுதிய முதல் மீனவர் அவர். எழுதப்படாத வாழ்க்கைகளை எழுதும் நவீன தமிழிலக்கியப்போக்கு கண்டடைந்த மிகச்சிறந்த வெற்றி ஆகும்.

இந்நாவலில் சுறா வேட்டையாடுதல், பரதவ மக்களின் நம்பிக்கைகள் வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இறப்புச் சடங்குகள், மீன் விற்பனை, தொழில் பற்றிய செய்திகளைக் காணலாம். திருச்சபையின் விழாக்கள், வழிபாட்டுச் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பரதவ மக்களின் பண்பாட்டுச் செய்திகள், பழக்கவழக்கங்கள், கலாச்சார பரிவர்த்தனைகள் ஆகியவற்றையும் எடுத்துக் கூறுகிறார். 1965ஆம் ஆண்டு ஏற்பட்ட புயலில் தனுஷ்கோடி அழிந்ததை இந்த நாவலில் ஆசிரியர் இடம்பெறச் செய்கிறார்.

பாத்திரப்படைப்புகள்

காப்பியம், நாடகம், நாவல், சிறுகதை போன்றவற்றில் மிகவும் இன்றியமையாதவையாக அமைபவை பொருத்தமான பல பாத்திரங்கள் ஆகும். எண்ணிக்கையில் மிகுதியாகவும் வகையில் பல்வேறு திறத்தனவாகவும் படைக்கப்படும் பாத்திரங்கள் காப்பியச் சிறப்பினை மிகுவிக்கும். கதை, பாத்திரங்கள், நிகழ்ச்சிகள் ஆகிய இவை மூன்றும் காப்பியத்திற்கு செறிவும் உரமும் ஊட்டும் முதன்மையான கூறுகளாகும். இம்முறையினுள் காப்பியத்திற்கு உரமூட்டுவதில் சிறப்பான கூறாக விளங்குவன பாத்திரங்களே ஆகும். வெறும் கதையையும் நிகழ்ச்சிகளையும் மட்டும் கூறிச் செல்வது சுவை பயக்காது. பல்வேறு வகையான பாத்திரங்களே காப்பியத்திற்குப் பொலிவும், சுவையும் உள்ளத்தைக் கவரும் தன்மையும் நல்குவனவாகும். பாத்திரங்கள் காப்பியத்திற்குப் பலவகையான சுவைகளைத் தருதலோடு, கருத்துக்களை வெளியிடும் வாயில்களாகவும் உள்ளன. நன்கு

படைக்கப்பெறும் பாத்திரங்கள் எத்துணை இன்றியமையாதவை என்பதைப் பின்வரும் டபிள்யு.பி.கெர் என்பவரின் கருத்து தெளிவுறுத்துவதாகும்.

நாடகப் பாங்கில் அமைக்கப்பெறும் பாத்திரங்கள் இல்லையேல் காப்பியம் வெறும் வியப்பார்ந்த கதையாக ஆகிவிடும். காப்பியத்தின் பல்வகைத் திறனும் வாழ்க்கை உண்மையும் அதன் பாத்திரங்கள் ஒன்றொடொன்று சந்திப்பதினின்று தோன்றும் நாடகத்திலேயே காணமுடியும்.[1] அரிஸ்டாட்டிலும் காப்பியத்திற்குக் கதையை விடப் பாத்திரமே சிறப்புடையதெனக் கூறுகின்றார்.[2]

தொல்காப்பியர் பொதுவாக அகப்பாடல்களுக்குரிய பாத்திரங்களைப் பற்றிப் பொருளதிகாரத்தில் விளக்குகிறார். அவர் குறிப்பிடும் பாத்திரங்களாவன: தலைவன், தலைவி, தோழி, நற்றாய், செவிலி, காமக்கிழத்தி, அறிவர், கூத்தர், விறலியர், பாணன், பாடினி, இளையர் பார்பார் ஆவர். இப்பாத்திரங்கள் ஒவ்வொருவரின் பண்புகளைப் பற்றியும் தொல்காப்பியர் விளக்குகிறார்.

தலைவன் பெருமையும் அறிவும் வாய்ந்தவனாக இருத்தல் வேண்டும்.[3] தலைவிக்கு எப்போதும் விளங்கித் தோன்ற வேண்டிய பண்புகள் அச்சம், நாணம், மடம் முதலியனவாம்.[4]

முதன்மையான பெண்பாத்திரங்களாகிய தலைவன், தலைவி, நற்றாய், செவிலி ஆகியோருக்குரிய பொதுவான பண்புகளைத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். அவர்கள் நான்கு பேரும் ஈர் உடல் ஓருயிர் போல அத்துணை அன்புடையவராய் இருத்தலோடு நாணமும் மடனும் பொருந்தியவராயும் விளங்க வேண்டும் என்று அவர் உரைக்கின்றார்.[5] மேலும் அவர்கள் செறிவு (அடக்கம்), நிறைவு (அமைதி), செம்மை (மனங்கோடாமை), செப்பு (பொருந்தச் சொல்லுதல்), அறிவு (நன்மை பயப்பனவும் தீமை பயன்பனவும் அறிதல்), அருமை (உள்ளக்கருத்தறிதல் அருமை) ஆகிய பண்புகளையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும் என்று தொல்காப்பியர் விதிக்கிறார்.[6] தலைவனின் தோழனாகிய பாங்கன் முதலில் தலைவனின் களவொழுக்கத்தை கடிந்துரைப்பான். பின்பு தலைவன் தன் கற்பொழுக்கத்தில் அடிக்கடி பரத்தையாரை நாடுவதையும் கடிந்துரைப்பான்.[7] குற்றவேலை செய்தலும் மெய்காத்தலும் பிறவும் இளையர்களுக்குரிய செயல்களாம்.[8] தோழி, நற்றாய், பாப்பார் பாங்கன், பானன், பாடினி, இளையர், விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர் ஆகியோர் வாயில்களாக அமைந்து தலைவன் தலைவியருக்கு அறிவுரை கூறுதற்குரியராவர்.[9]

தமிழ்க் கவிஞர்கள் இத்தகைய இயல்புடைய இப்பாத்திரங்களைத் தங்கள் அகப்பாடல்களில் மட்டுமின்றித் தம் காப்பியங்களிலும், நாடகங்களிலும், நாவல்களிலும், கதைகளிலும் அமைத்துள்ளனர்.

சிறந்த கதை ஆசிரியர்கள் படைத்த கதைகளை நாம் படிப்போமாயின், அவற்றின் பாத்திரங்கள் நம் கற்பனையில் உயிருள்ளவை போல இயங்கும். இவ்வாறு உயிருள்ளவை போலத் தோன்றும் பாத்திரப்படைப்புடைய கதை இலக்கியமே சிறப்புடையதாய் மதிக்கப்பெறும். இக்கதை இலக்கியத்தின் பக்கங்கள்

தோறும் ஆடவரும் பெண்டிருமாகிய பாத்திரங்கள் உயிருள்ள மக்களைப் போல படிப்பவர் உள்ளத்திலே நிலைபெறுவர். இவற்றைப் படித்து நாட்கள் பல ஆயினும் அப்பாத்திரங்கள் நம் நெஞ்சினின்றும் நீங்குவதில்லை. உயிருள்ளவை போன்ற பாத்திரங்கள் உண்மைத் தன்மை வாய்ந்த கற்பனையில் செறிவான உணர்ச்சியால் உருவாவனவாகும். அவை உருவாகும் முறையை மாமென்றே கூறலாம். இப்பாத்திரங்களைப் படைக்கும் ஆற்றல் வாய்ந்தவாகளாலேயே அவை படைக்கப்பெறும் முறையை விளக்க இயலாது. "நான் என் பாத்திரங்களைக் கட்டுப்படுத்துவதில்லை. நான் அவர்களுக்காகக் கட்டுப்பட்டு விடுகின்றேன். அவர்கள் விரும்பிய வண்ணம் என்னை அழைத்துச் செல்கின்றனர்"[10] என்று சாக்ரே என்பவர் கூறுகிறார்.

ஒரு சிறுகதை மற்றும் புதின ஆசிரியருக்குச் சிறப்பும் பயிற்சியுமிக்க திறமை இருப்பினும் அவரால் உயிருள்ளவை போன்ற பாத்திரங்களைப் படைத்தல் இயலாது. அத்திறமையால் நன்கு முயன்று பாத்திரங்களை உருவாக்கலாம். அவற்றை அதனால் படைக்க முடியாது. புடைக்கும் தகவு வாய்ந்தவர்களால்தான் உண்மையியல்பு வாய்ந்த பாத்திரங்களைப் படைக்க முடியும். தாம் எவ்வாறு அப்பாத்திரங்களைப் படைக்கிறார்கள் என்பதை அவர்களாலேயே விளக்க முடியாது.

பாத்திரப்படைப்பில் ஒரு புதின மற்றும் சிறுகதை ஆசிரியரின் வெற்றி நுட்பமாக வருணிக்கும் அவர்தம் திறனையொட்டியுள்ளது. நாடகத்தின் ஒப்பனை, உடை முதலியவைகள் நடிகர்களாகிய பாத்திரங்களின் தனித்தன்மையையும் ஆளுமையையும் புலப்படுத்தத் துணை செய்கின்றன. இத்தகைய துணைச் சாதனங்கள் புதினத்திற்கு இல்லை. ஒரு பாத்திர உருவத்தின் தனித்தன்மை, குறிப்பிடத்தக்க அதன் பண்பு நலன் ஆகியவை படிப்பவர் உள்ளத்தில் தெளிவாக விளங்கும்படி குறிப்பிட வேண்டும். ஒவ்வொன்றையும் வருணிப்பதால் அப்பாத்திரத்தின் பண்புகளை ஆற்றலோடு உணர்த்திவிட முடியாது. திறமை வாய்ந்த ஒரு புதின ஆசிரியர் தம் கலையாற்றலால் முக்கியமான இயல்புகளைத் தேர்தெடுத்து அவற்றை கலையழகு விளங்க இணைத்துப் படிப்பவர் உள்ளத்தில் கற்பனையை உண்டாக்கி விடுவார். இப்பண்புகள் சிறுகதையின் பாத்திரப்படைப்புகளுக்கும் பொருந்தும்.

ஆழி சூழ் உலகு நாவலில் பாத்திரப்படைப்புகள்

ஆழி சூழ் உலகு நாவலில் ஆசிரியர் நிறைய பாத்திரங்களை படைத்துள்ளார். அவர்களுள் குறிப்பிடதக்கவர்கள் 1) கோத்ரா பிள்ளை 2) தொம்மாந்திரை 3) காகு சாமியார் 4) ஜஸ்டின் 5) வசந்தா 6) சிலுவை 7) சூசை 8) மேரி 9) சுந்தரி 10) ரத்தினசாமி நாடார் 11) சுயம்பு 12) வியாகுலம் பிள்ளை 13) போஸ்கோ 14) எஸ்கலின் 15) அமலோற்பவம் 16) இருட்டியா 17) சில்வேரா 18) ஊமையன் போன்றோர்.

சமூக மாற்றம்

1. பொருளாதார பின்னடைவு சமய மாற்றத்திற்கு அடிகோலியது.
2. விதவை மறுமணத்தை ஆதரித்தல்
3. பரதவர்கள் உணர்ச்சிவசப்படுதல்
4. முரட்டுத்தனமாக பழக்கவழக்கங்கள்
5. முறைதவறிய உறவுகள்
6. காதல் உறவுகள்
7. சாதி கடந்து நட்பு பாராட்டும் பண்பு
8. கள்ளக் காதல் உறவு
9. சமூகச் சீரழிவு
10. கிறிஸ்தவ சமய அரவணைப்பு

போன்றவை நாவலில் கதை கருவாக அமைகின்றன.

1. கோத்ரா பிள்ளை

இந்த நாவலை முழுவதும் ஆக்கிரமித்துள்ளப் பாத்திரம் இவர். நாவலில் முக்கிய இடம் பிடித்துள்ளார். தொம்மாந்திரை, போஸ்கோ இவரது நண்பர்கள் வட்டம். இவர்கள் சுறா மீன் வேட்டைக்குச் செல்கிறார்கள்.

சுறாப்பாறு பயணம் என்பது உயிரைப் பணயம் வைக்கும் மிகக் கடினமான தொழில். வீரமும் விவேகமும் நிறைந்தவர்கள்தான் இந்தத் தொழிலுக்குச் சென்று திரும்ப முடியும். போராட்டங்களுக்கு மத்தியில் நல்ல லாபகரமான தொழிலாய்க் கருதப்பட்டாலும்கூட சுறாப்பாறு தொழில் என்பது பரதவர்களுக்கு ஒரு சிம்ம சொப்பனம்தான். ஆடி மாதக் கடலடியிலும் பூண்டு தொழில் செய்பவர்கள்கூட இந்த சுறாப்பாறு என்ற பெயரைக் கேட்துமே அஞ்சி நடுநடுங்குகிறார்கள். காற்றையும் கடலையும் எதிர்த்துப் போரிடுவது இவர்களின் அன்றாட வாழ்வாக நிச்சயம் சுறாப்பாறுக்கு இவர்கள் குறி வைத்துப் போவது சுறாமீன் வேட்டைக்காத்தான். வேளா, இழுப்பா, கொம்பன் சுறா, வரிப் புலியன், உழுவை போன்ற சுறா மீன்களுக்காகத்தான்.

கன்னியாகுமரிக்கு நேர் வெலங்கே சுமார் பதினைந்து கி.மீ தொலைவில் இருக்கிறது சுறாப்பாறை. ஆழ்கடலில் தனியாய் உயரே எழும்பி நிற்கிறது ஒரு பாறை. மிகவும் செங்குத்தாய் இருப்பதாலும் வழுவழுப்பாக இருப்பதாலும் பாறையில் ஏறமுடியாது. இரவு நேரங்களில் தூண்டில் போட்டுவிட்டுக் கிடக்கும்போது காற்றுக்கு ஒதுக்காக மரத்தைப் பாறையோடு அணைத்திருப்பார்கள். ஆமந்துறையிலிருந்து நேர் சோழ வெலங்க சாதகமான காற்றில் ஒருநாள் பூராவும் ஓடினால் சுறாப்பாறையை அடையலாம்.

கடலில் சில இடங்களில் தண்ணீர் முத்துப்போல் தெளிவாகவும் சில இடங்களில் கலங்கலாகவும் வந்தது. திடீரென்று மாங்காச் சாளைக் கூட்டம் மாப்பு மாப்பாக தெரிந்தது. அதன் பின்னாலேயே அதைத் பெரியது மாங்காய் சாளை. சாளை மீனைவிடச் சிறியது. எப்போதும் லட்சக்கணக்கில் கூட்டம் கூட்டமாகவே திரியும். குழந்தை பெற்ற பெண்களுக்கு மாங்காய் சாளையை ஓமக்கறி வைத்துக் கொடுப்பார்கள். சுவையாக இருக்கும். பால்சுரப்பும் அதிகமாகும். சூரை மீன்களின் தோல் வெள்ளி நிறத்தில் தகதகவென மின்னும். சதைப் பகுதி ரத்தச் சிவப்பாக இருக்கும். இந்த மீன்களைப் பதப்படுத்தித்தான் மாசி என்ற சுவையான உலர் மீன் தயாரிக்கப்படுகிறது.

வாழ்க்கையும் இப்புடித்தாங் கோத்ரா. குறிக்கோள் வுட்டுட்டு எடையில வருற மயக்கங்கள்ல வீணா மனச அலய வுட்டுட்டு 'உள்ளதும் போச்சாம் நொள்ளக் கண்ணங்குற' மாரி நிப்போம். சின்னதோ பெருசோ எடுத்த காரியத்துல தெளிவா இருக்கணும் கேட்டியா. நெனப்பு, பேச்சு, வேலை எல்லாமே எல்லாமே எதப் பத்தித்தாமுல இருக்கணும். அப்பதாம் சாதிக்க முடியும்" என்றார் தொம்மந்திரை.

காவடிக் காட்டை நெருங்கினார்கள். சீலாவுக்கு தூண்டில் போடலாம் என்று பார்த்தால் அங்கு மரத்தின் பக்கத்தில் ஓங்கல்கள் வந்து விளையாட ஆரம்பித்தன. மரத்தோடு ஒட்டிவருவதும் பின் வேகமெடுத்து முன்னால் ஓடி நீர்ப்பரப்பின் மேல் எவ்விக் குதிப்பதுமாய் குதியாட்டம் போட்டன இரண்டு ஓங்கல்கள். வயிற்றுப் பகுதி வெள்ளையாகவும் மற்றப் பகுதிகள் கருநீலமாகவும் வழவழவென பார்ப்பதற்கு மிக அழகாய் இருந்தன. போஸ்கோதான் மிரண்டுபோய் இருந்தான். தொம்மந்திரையும் கோத்ராவும் ஓங்கல்களின் குதியாட்டத்தைப் பார்த்து ரசித்தபடியே வந்தார்கள். நடுமரம்வரை வாடப்புறத் தூரத்தின் பக்கமாக வந்துகொண்டிருந்த ஓங்கல் ஒன்று நீருக்கு மேலே தவ்வி மரத்தின் குறுக்கர் பாய்ந்து காற்றில் வில் போல் வளைந்து சோழப்புறம் வந்தது. விரைத்துப் போனான் போஸ்கோ.[11]

கோத்ராவின் மனம் ஒரு நிலையில் இல்லாமல் அலைபாய்ந்தது. தொம்மந்திரை பிந்தலையில் காலை நீட்டியபடி வாரிக்கலில் தலையைச் சாய்த்து உட்கார்ந்திருந்தார். ரத்தப்போக்கு நின்றுவிட்டதென்றாலும் மிகவும் தளர்ச்சியாக இருந்தார். உடனே கரை விடுவோம் என்றால் மீனைப் பிடிக்காமல் கரைக்குப் போனால் கேவலம் என்றுவேறு சொல்லிவிட்டார். முனைத்தூண்டிலில் மாட்டியிருக்கும் வரிப்புலியன் அறுநூறு பாகக் கயிறையும் இளக்கியாயிற்று. ஐந்தாவது முறையாக இழுத்துக்கொண்டு ஓடியிருக்கிறது. நீரோட்டத்தோடு ஓடுவதும் அதற்கு எதிரில் சாடுவதும் எவ்விக் குதிப்பதுமாகத் தன் பலத்தை எல்லாம் காட்டிக்கொண்டிருந்தது. கோத்ராவும் போஸ்கோவும் மாறிமாறி மல்லுக்கட்டிக் கொண்டிருந்தார்கள். தூண்டில் கயிறு இழுத்து இழுத்து இருவரின் கைவிரல்களும் உள்ளங்கைகளும் கன்னிப்போய் இருந்தன.

"தாயோளி மொவம் மீனு இந்த இழுப்பு இழுக்குது" என்றான் கோத்ரா.

"கடல்ல கிடக்கிறவரை அது பெலத்தயெல்லாம் காட்டத்தான செய்யும் கோத்ரா" என்றார் தொம்மந்திரை.

"பொட்டயா ஆணான்னு தெரியில."

"ஆணா இருக்கும். அதுதாம் ஜோடியா நிக்கிற பொட்டகிட்ட பலத்த காட்டுறதுக்கு இந்த துள்ளு துள்ளுறாம். நம்மள மாரி அறிவா அதுக்கு இருக்கும்! ஏதோ எதுலயோ மாட்டிக்கிட்டோம். அத கழட்டிவுடணுமின்னுதாம் இருக்குமே தவிர நம்மள புடிக்கப் போறாங்க, நாம சாகப்போறோமுன்னு அந்த அளவுக்கு அதுக்கு மூள வேல செய்யாது. சிந்திச்சுப் பாத்தா அது நெலமயும் பாவந்தான்."

"கோத்ராண்ண, கயித்துல அனக்கமே இல்லிய..." என்றான் போஸ்கோ.

"எல, பயப்புடாதைங்க. ஜோடிகிட்ட எதும் சொல்லமுடியாம தவிக்கிமாயிருக்கும்."

"சரிதாம் அண்ண, மரத்துகிட்ட சோந்து வரும்போது பாத்தமில்ல. இதுக்கு கிழவே ஒரு கறுப்பு வந்துகிட்டேயிருக்கும்."

"யாருக்குத் தெரியும், பரந்த கடல்ல ஜோடியா சுத்திகிட்டு இருந்திப்பாவ, இப்ப நம்மாளு எதுலயோ மாட்டிகிட்டான, நெனச்ச இடத்துக்கு போவ முடியல்லிய, முத்தங் கித்தம் குடுக்க முடியில்லியேன்னு சோகமா சுத்திகிட்டு இருக்குமாயிருக்கும்."

"இன்னும் எவ்வளவு நேரம் இப்படி போக்கு காட்டுமின்னு தெரியிலியே."

"கோத்ரா, கயித்துல அனக்கமில்லன்னுதான போஸ்கோ சொன்னாம். மெதுவா கயிற வாங்கு ரத்தங் கக்கியிருக்கும். நீவாடு வேற மாறிற்று. இனும சோழக்குளு வரை, அதாம் நச்சுக் குளு வரை ஓடிவரும் . அதுல இன்னுங் கொஞ்சம் பெலக் கொறச்சலாயிரும். மரத்துகிட்ட அது வந்தா கயித்துல வெட்டு வச்சித் தாறம். வாலுல வயித்துல கொளுவி நடுவட்டியோட வச்சிக் கெட்டிருங்க. மீன உசுரோடதாங் கொண்டு போவணும். எக்காரணத்தக் கொண்டும் தாக்குகோலால மண்டயில கிண்டயில அடிச்சிறாதைங்க. மீன் செத்துப்போச்சின்னா கரை புடிக்கிறதுக்குள்ள மத்த மீனுவளுக்கு இரையாப் போயி வெறுங் கூடுதாம் கொண்டு போயி சேக்கமுடியும். அதுனால மீனு உசுரோடியும் இருக்கணும். மீன் மேல எந்தக் காயமும் படக்கூடாது. பொறுப்பான இடங்கள்ல வெட்டு வச்சி மரத்தோட கெட்டிறணும். மத்த மீன்வ பாக்குறதுக்கு வரிப்புலியம் நீந்தற மாரிதாம் இருக்கணும் கேட்டியா?" "சரிண்ண" என்றான் கோத்ரா.[12]

மரம் வாங்குதல்

கட்டுமரத்திற்கு பரதவர்கள் மரத்தை வாங்குவதுண்டு. அதனை இந்த நாவலில் காண முடிகிறது.

பெரிய துறையிலிருந்து மரம் பார்ப்பதற்காக ஆமந்துறை வந்திருந்தார்கள். கீழத்தெருவிலிருந்து மேலத்தெரு வரை கடற்கரையில் ஒரு மரம் விடாமல் அனைத்தையும் பார்த்தவர்களுக்கு கீழத்தெருவில் உயரே பட்டறையில் ஏற்றியிருந்த மரமே பிடித்திருந்தது. விசாரித்ததில் அது கோத்ராப் பிள்ளை மரம் என்று தெரிந்தது. கோத்ரா மரம் பழசாயிருந்தாலும் அதிக பெருசாகவும் இல்லாமல் சின்னதாகவும் இல்லாமல் நடுத்தரமாய் இருந்தது. பெரியதுறைக்காரர்கள் எப்போதுமே பெரிய மரங்களையே விரும்புவார்கள். கடற்துறைகளிலேயே பெரிய மரங்கள் பெரியதுறையில்தான் இருக்கும் என்று சின்னப்பிள்ளை கூட சொல்லும். எந்தத் துறையில் ஒரு நல்ல மரம் இருந்தாலும் அதை எப்படியாவது வாங்கி பெரியதுறை கொண்டு போய்விடுவார்கள். துறைகளுக்கிடையில் எப்போவாவது நடக்கும் மரப்போட்டியில் இன்றுவரை பெரியது துறைக்காரர்கள்தான் ஜெயித்திருக்கிறார்கள்.[13]

கல்இறால் சீசன்

ஆமந்துறையில் கல்இறால் சீசன் ஆரம்பித்திருந்தது. எல்லோரும் இந்தத் தொழிலைச் செய்வது இல்லை. ஊருக்கு ஒதுக்காக உள்ள பாறைகளில்தான் வலை பாய்ச்சவேண்டும். முதல்நாள் பாய்ச்சிய வலையை மறுநாள் சென்று வாங்கிக் கழிக்க வேண்டும். அன்றாடம் பிழைப்புக்கு கஷ்டப்படுபவர்கள்தான் இந்தத் தொழிலுக்கு வருவார்கள். நாள் பூராவும் கடலில் கிடக்கும் இந்த வலையில் நாலோ ஐந்தோ கல்இறால் மாட்டலாம். அதுவும் இல்லாமல் போகலாம். தப்பித்தவறி மாட்டிக் கிடக்கும் மதனம், குறுவலை போன்ற மீன்கள்கூட வலை அதிக நேரம் கடலில் கிடப்பதால் ரத்தம் கக்கி இறந்து வலை பாய்ச்சியவர்கள் கையில் கிடைப்பதற்கு முன்னால் பதம் விட்டுப் போய்விடும். கல்இறால் வலையில் கறிக்கு மீன் கிடைப்பது அரிது. சில வேளைகளில் தப்பித்தவறி வலை வாங்குவதற்கு சற்று முன்னால் பாய்ந்து கிடக்கும். மீன்கள் நல்ல பதமாக இருப்பதுண்டு. கோத்ராப் பிள்ளையும், துப்பாசியாரும் போஸ்கோவும் வலைக்குப் போய்விட்டு திரும்பிக் கொண்டிருந்தார்கள்.[14]

சிறிது நேரம் யோசித்த கோத்ரா, தோக்களத்தாவிடம் மரம் வெட்டும் போது கணக்கு எழுதிய நோட்டை கோண்டுவரச் சொல்லி சிறிது நேரம் பார்த்தார். இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முந்தி எல்லாம். அணாக் கணக்கில் இருந்தது. ஒரு முடிவுக்கு வந்தவராக, எட்டாயிரத்து முந்நூறு குடுத்திற்று மரத்த எடுத்திற்றுப் போங்க என்றார்.

பெரியதுறைக்காரர்கள் அவர்களுக்குள் குசுகுசுவென பேசினார்கள். குட்டியாண்டியார் அவர்களை வீட்டிற்கு வெளியே அழைத்துக் கொண்டு போய் பேசிவிட்டு பின் உள்ளே வந்து அமர்ந்தார்.

"கோத்ரா, மரமும் பழசு. ஒரு முந்நூறக் கொறைச்சி எட்டாயிர முண்ணு முடிச்சிக்கிருவம்."

பெரியவரு கேக்குறதுனால நா ஒத்துக்கிருறம். ஓங்களுக்கு நல்ல யோகந்தாம் போங்க" என்றவாறு சிரித்தார் கோத்ராப் பிள்ளை. ஏற்கனவே கொண்டுவந்திருந்த பணத்தில் ஆயிரம் ரூபாய் முன் பணமாகக் கொண்டு கொடுத்தார்கள். மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டார்.[15]

கலவரம்

மீனவ கிராமங்களில் அடிக்கடி கலவரங்கள் நடைபெறுவதண்டு.

கோத்ராப் பிள்ளையும் துப்பாசியாரும் கிழக்கோயிருந்து கோட்டுமாலையும் கஞ்சிக் கேனையும் சுமந்தப்படி வந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் முக்கு திரும்புவதற்குள் தூரத்தில் பூச்சிமுடியார் பேரன் வேக வேகமாக ஓடி வருவது தெரிந்தது. மேல் மூச்சு வாங்க கோத்ராப் பிள்ளை பக்கத்தில் வந்து நின்றான்.

"மாமா, அங்க சண்ட வாற மாரி இருக்கு. தோக்களத்தா மாமி என்னய ஓடிப்போயி உங்க கிட்ட சொல்லச் சொன்னாவ. கோயிலுக்கு முன்னாலோடி வரக்கூடாதாம். அங்க மானாப் புள்ள ஆள்க்கள்லாம் நின்னுகிட்டு இருக்காங்களாம்" என்ற பகுதி அதனை நினைவூட்டுகிறது.[16]

மீனைப் பத்திரப்படுத்துதல்

அன்று ஆமந்துறை கடற்கரையே பெரும் பரபரப்புடன் இருந்தது. கரை புடித்த எல்லா மரங்களும் வலையோடு கட்டிக்கொண்டு விட்டிருந்தாகள். கடலில் எதிர்பாராத விதமாக மாப்பு மாப்பாக இறால் எழும்பி பட்டது. ஐயாயிரம், பத்தாயிரம் என்று எந்த மரத்திலும் குறைவான எண்ணிக்கையே கிடையாது. நேற்றுவரை இறால் படுவதற்கான எந்த அறிகுறியும் இல்லாமல் இருந்ததால் எந்த ஏஜெண்டும் இறால் எடுக்கத் தயாரில்லை. காரணம் வழக்கமாக கொச்சி, தூத்துக்குடியிலிருந்து வரும் எந்த கம்பெனி வண்டிகளும் அன்று வரவில்லை.

ஊரே பெரும் சோகமாய் இருந்தது. எல்லோரும் இறால் ஏஜெண்டுகளைத் திட்ட ஆரம்பித்துவிட்டார்கள். ரத்னசாமி பண்டகசாலைக்காரர்கள் திருச்செந்தூரிலிருந்து போனுக்கு மேல் போன் போட்டு கோவில்பட்டியில் ரத்னசாமியிடம் ஒப்புதல் வாங்கி

மதியத்திற்குப் பிறகு இறால் எடுக்க ஆரம்பித்தார்கள். ரத்னசாமி பண்டகசாலையிலும் இடம் இல்லை.

கோத்ராப் பிள்ளை என்ன நினைத்தாரோ தெரியாது. தன் தம்பியை அழைத்து இந்த இறாலை எடு, மிகக் குறைந்த விலைக்குக் கிடைக்கும் என்று யோசனை கூறினார். வேலைவெட்டி இல்லாமல் திரியும் தம்பிக்கு யாரும் பெண் கொடுக்க மறுக்கிறார்கள். அவனையும் ஒரு ஆளாக்கிவிடலாம் என்பதுதான் காரணம். சில்வேராவுக்கு அதை எப்படிச் செய்வது என்று தெரியல்லை.

கோத்ராவே ஒரு ஜீப்பை பிடித்துக்கொண்டு ஊர் ஊராக அலைந்து அந்த வட்டாரத்தில் உள்ள அனைத்து ஐஸ் பாக்டரிகளிலும் இருந்து முடிந்தமட்டும் ஐஸ் கொண்டு வந்தார். ஒரு பெரிய குழி வெட்டி அதில் பலகைகளை நான்கு புறமும் இறக்கினார்கள். கீழே மிகப்பெரிய பிளாஸ்டிக் பேப்பர் ஒன்று விரிக்கப்பட்டது. ஐசும் உப்பும் கலந்து வெட்டப்பட்டிருந்த குழியின் நான்கு புறமும் சுவர்போல பருமனாக பூசப்பட்டது. பிறகு அதற்கு மேல் பிளாஸ்டிக் பேப்பர் விரித்தார்கள். மீனை அவற்றின் உள் வைத்து பத்திரப்படுத்தினார்.[17]

கோத்ரா பிள்ளையின் இந்தி எதிர்ப்பு போராட்டம் - 1962

ஊர்வலம் போய்க்கொண்டிருக்கிறது. சைக்கிள்காரர்கள் இரண்டு ஓரங்களிலும் வருகிறார்கள். சைக்கிள் பாரில் கட்டப்பட்ட கொடிகள் சுருண்டு கிடக்கின்றன. தங்கத் தமிழிருக்கத் தரங்கெட்ட இந்தி எதற்கு? சுலோசன முதலியார் பாலம். ரயில் தண்டவாளம். கேட் பூட்டிக் கிடக்கிறது. பாலஸ் தியேட்டரை ஒட்டி போலிஸ் வேன்கள். கூட்டம் சிதறுகிறது. முதுகிலும் காலிலும் லத்தியடி. சென்ட்ரல் தியேட்டர் வழியாக ஓரே ஓட்டம். நெல்லையப்பர் கோவில் வளாகம் இருட்டாக இருக்கிறது. மண்டபத்து தூணில் சாய்ந்து கோத்ரா வெற்றிலை போடுகிறார்.[18]

கோத்ரா - சூசை கள் குடித்தல்

கரையில் வலைகள் வந்து ஓய்தது, வெயிலில் காய்ந்த வலைகளை வெலங்கிக் கொண்டிருந்தார்கள். சூரியன் பனைகளுக்குள் இறங்கினான். வலை வெலங்கும் போது துளசி இலையை அரைத்து தெளிப்பாரும் அய்யாவின் கோவிலில் இருந்து வந்த புதுமைத் தண்ணீரைத் தெளிபாருமாக கடற்கரை சுறுசுறுப்பாய் இருந்தது. பங்குக் கோவிலில் ஆறு மணி அடித்திருந்தாலும் நல்ல வெளிச்சமாகவே இருந்தது. சூசையார் வீட்டில் வளவுக்கு உடைந்து கிடந்த பின்கதவைச் சரி செய்துகொண்டிருந்தார். முற்றத்தில் வந்து மால் முடித்துக்கொண்டிருந்த லூர்தை கிண்டலடித்துக் கொண்டிருந்தார் கோத்ரா பிள்ளை. மேரி களவில் அரிசி புடைத்தவறாயிருந்தாள்.

‘சூச, கள்ளு குடிக்க போவோம் வாறியா?”

சூச, நம்ம நாடாக்குடி ராமசாமி மொவம் மொட்டப்புளிக்கி செத்த வடக்கு அந்த சுள்ள பக்கம் ஒரு விடிலி போட்டுருக்காம்யா. அங்க ஒத்தப் பன கள்ளு இறக்கி வச்சிரிக்கானாம். நம்ம சூடுபோட்டோம் இப்பதாம்யா சொல்லிற்றுப் போறாம்.''

''அதெல்லாம் சரிதாம் கோத்ராப் புள்ள, வரும்போது உம்மள அள்ளிக்கிட்டுல வரனும்''.

இருவரும் மொட்டப்புளியைத் தாண்டி வந்து கொண்டிருந்தார்கள். வடக்கேயிருந்து வரும்போது நாலு ரோடு தாண்டி ஊருக்குச் சற்று வடக்கே உள்ள ஒரு முக்கியமான இடம் மொட்டப்புளி. இந்த இடத்தில் பெரிதாக இரண்டு புளிய மரங்களும் மூன்று கல்லறைகளும் உண்டு. இருட்டிவிட்டால் இந்த இடத்தைக் கடப்பவர்கள் ஒரு உதறல் எடுத்தவாறே கடந்து போவார்கள். பெரியவராக இருந்தாலும் சரி, சிறியவராக இருந்தாலும் சரி மொட்டப்புளியைக் கடக்கும் பொது எல்லோர் வாயிலும் 'இதோ ஆண்டவரின் சிலுவை. அவக்கு எதிரிகளாகிய நீங்கள் விலகிக் போவீர்களாக' என்ற செபம் வரும். இந்தக் குடியிலும் இருவரும் அந்த செபத்தை முணுமுணுத்துக்கொண்டே நடந்தார்கள்.

சரக்கு உள்ளே சென்றுவிட்டால் கோத்ராவின் எண்ணங்கள் சாரீரமாக வெளிபட்டுவிடும்.

''எல பாடு படுகிறாம் கோத்துரா – அதன்
பலன அமுக்கறாம் சில்வேரா.
உழைச்சி கொடுக்குறாம் கோத்துரா – அவம்
ஊர ஏய்க்கிறாம் சில்வேரா.
உண்டி சுருக்குறாம் கோத்துரா – அவம்
உண்டு கொழுக்குறாம் சில்வேரா.
கஞ்சி குடிக்கிறாம் கோத்துரா – அவம்
கஞ்சா அடிக்கிறாம் சில்வேரா...''

என்று பாடியவாறே இருளில் கரைந்து போனார் கோத்ரா.[19]

ஆமந்துறை கிராமம்

இந்த நாவலில் இடம்பெறும் முக்கியமான ஊர் இந்த ஆமந்துறை. திருச்செந்தூரில் இருந்த கன்னியாகுமரி செல்லும் கடலோரப் பாதையில் ஏறக்குறைய சரிபாதி தூரத்தில் அமைந்துள்ளது ஆமந்துறை விலக்கு. நான்கு பாதைகள் சந்திக்கும் அந்த விலக்கிலிருந்து தென்புறமாய் கடலை நோக்கிச் செல்லும் சாலையில் சுமார் இரண்டு பர்லாங் தூரத்தில் கடலோடு அமைந்துள்ளது ஆமந்துறை.

மன்னார் குடாக்கடலில் அமைந்துள்ள பரதவர் துறைகளில் ஆமந்துறை அங்கு கிடைக்கும் மீனுக்கும், தோட்டங்களில் விளையும் வாழை, கத்தரிக்கும் பெயர்

போனது. விலக்கிலிருந்து ஊர் எல்லைவரை பனைமரங்களால் குழப்பட்டிருந்தாலும், ஊரை மூடினாற்போல் தென்னை மரங்கள் நிறைந்திருப்பது ஆமந்துறைக்கு அதிகம் அழகு சேர்த்தது.

கடற்கரையிலிருந்து பார்த்தால் கிழக்கே மணப்பாட்டுத் துறையும் தென்மேற்கே கூத்தன்துறையும் கடலுக்குள் தெரியும். இந்த இரண்டு ஊர்களுக்கு இடைப்பட்ட கடற்துறைப் பகுதி உள்நோக்கி வளைந்திருக்கும். இதன் காரணமாக புயல் காலங்களில் இந்தத் துறை அதிக பாதிப்புகளை அடைந்ததேயில்லை. இந்தப் பகுதி முழுவதும் பாறைகள் நிறைந்த திட்டக் கடலாகவே இருக்கிறது. கரையிலிருந்தே சிறது சிறிதாகப் பரவலாக ஆரம்பித்துச் செல்லும் இந்தப் பாறைகள் கரையிலிருந்து சுமார் ஒரு மைல் தூரத்தில் உள்ள ஆழி என்ற கடல் பகுதியில் கடலுக்குள் நேர்கோடாக முடிவடைகின்றன. இந்த எல்லைக்குப் பிறகு பாறைகள் இல்லாத ஆழ்கடல் கரைப் பகுதியை போலவே நேர்கோடாக அமைந்துள்ள இந்த ஆழியில்தான் அலைகள் ஆக்ரோஷமாய் கிளம்பிக்கரை நோக்கிப் பாய்கின்றன. பெரும்பாலும் கடலில் சாவுகள் இந்தப் பகுதியிலேயே நடக்கின்றன. கட்டு மரங்களில் இந்த ஆழிப் பகுதியைக் கடக்கும்போது மட்டும் மிகவும் கவனமாகவும் பயபக்தியுடனும்தான் கடக்கிறார்கள். இந்தப் பகுதியிலிருந்துதான் ஆமந்துறை மடை ஆரம்பிக்கிறது.

ஒவ்வொரு முறையும் இந்த ஆழிப் பகுதியைக் கடந்துதான் தொழிலுக்குச் சென்றுவர முடியும் என்பதால் காலங்காலமாகவே கட்டு மரங்களைத்தான் பயன்படுத்துகிறார்கள். படகுகள் இங்கே ஆழியைக் கடக்க முடியாது.[20]

2. ஆமந்துரையில் தொம்மாந்திரையார்

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் இரண்டாவது முக்கிய பாத்திரப் படைப்பு தொம்மாந்திரையார்.

ஆமந்துரையில் தொம்மந்திரை அண்ணன் மடுத்தீன் இறந்து போகிறார். அவருடைய இறப்பு ஆமந்துரை மக்களின் மூடநம்பிக்கையினை வெளிப்படுகிறது.

மடுத்தீனின் அடக்கம் முடிய மாலை வெகுநேரம் ஆகிவிட்டிருந்தது. மையாவடியில் மண் போட்டுத் திரும்பியவர்கள் அனைவரும் பணிய இறங்கி கடற்கரையில் கால் நனைத்துக் கொண்டிருந்தார்கள். கடல்துறைகளில் இதுபோல் மையாவடி போய்த் திரும்புபவர்கள் கடலில் கால் நனைத்து பின் வீடு திரும்புவார்கள். புனிதமான கடல்நீர் மேலேபடும்போது அசுத்த ஆவிகள் விலகி ஓடுமாம். கோவில்களிலும் மந்திரிப்பதற்கு பயன்படுத்தும் தண்ணீரில்கூட உப்பு கலந்து பின் ஆசிர்வதித்தே குருவானவர் தெளிக்கிறார். இந்த உப்பு நீர் படும் இடமெல்லாம எதிரியின் ஆளுமை கட்டுப்படுத்தப்படும் என்று கூறியவாறே மக்களை மந்திரிக்கிறார்.

ஈமச்சடங்கு

ஒருசில ஆமந்துறைகாரர்களைத் தவிர மற்ற வெளியூர்க்காரர்கள் ஆண்களும் பெண்களுமாக சேனாப் பீனா விட்டின் முற்றத்தில் கூடியிருந்தார்கள். எல்லோர் முகத்திலும் பெரும் சோகம் அப்பிக் கிடந்தது. தகவல் கிடைத்த ஊர்களில் இருந்து தெரிந்தவர்களும் உறவுக்காரர்களுமாய் வந்திருந்தவர்கள் பொழுது அடைந்து விட்டபடியால் இரவு இங்கேயே தூங்கிவிட்டு மறுநாள் காலையில் கிளம்புவதற்காக முற்றத்திலேயே படுத்துக் கிடந்தார்கள். வீட்டிற்குள் ஒப்பாரிச் சத்தம் நின்றபாடில்லை. வியாதிப்பட்ட உடம்பாய் இருந்ததால் ஊர்க்காரர்களிடம் எதுவும் பேச்சு வந்து விடக்கூடாது என்பதற்காக மாலையிலேயே அடக்கம் எடுத்து விட்டார்கள்.[21]

மூடநம்பிக்கை

"தொம்மந்திரைங்கி என்ன பதில் சொல்லயின்னுதாம் தெரியில" என்றார் வியாகுலம்.

"காகு சாமியாரு அடக்கம் எடுக்க வரும்போதே அதப்பத்தி கவலப்படாதைங்க, அத நாம் பாத்துகிருறமுன்னு சொல்லிற்றாருல்ல" என்றார் இருட்டியார்.

"தொம்மந்தர இருந்தா மட்டும் போற உசுர புடிச்சி நிப்பாட்டவா முடியும்..." என்றார் மன்றாடியார்.

"இல்ல, அண்ணனுக்கு ஒரு புடி மண்ணு கூட போட முடியாம போச்சி பாத்தியா!"

"நம்ம தொழில பாத்தியரா... வீட்டுல நாட்டுல நடக்குற நடப்பு கூட சொல்ல முடியில... என்றார் குட்டியாண்டி

"எனக்கு வீட்டுக்குள வரும்போதே தெரிஞ்சிச்சி, இது ஏதோ செய்வினக் கோளாறுதாம்" என்றார் இருட்டியார்.

" அதாம் பாத்துகிற்று சும்மா இருந்தியராக்கும்' என்றார் வியாகுலம்.

வியாகுலம், அறிவு கெட்டவம் மாரி பேசாத. சேனா பீனா குடும்பம்னா எனக்கு ஆவாதா என்ன?... ஏதோ ஒண்ணு சரியில்லன்னு எனக்கு நேத்து உடுக்க அடிக்கிம்போது தெரிஞ்சிச்சி பாத்துக்க. தொம்மந்திர இருந்திருந்தா அவன்கிட்ட சொல்லியிருப்பம். அவம் இங்க இல்லாததுனால பொம்புளயகிட்ட சொல்லி பயங்காட்ட விரும்பயில்ல. அதுல வேற இது ரெம்ப முத்துன நெல பாத்துக்க, யாரோ வாய் பேசாத வண்ணாம் மொவந்தாம் வச்சிருக்காம். எனக்கு தெரிஞ்சி தொம்மந்திரயும்

கஷ்டப்பட்டுதாம் ஊரு வந்து சேருவாம். உசுருக்கு ஆபத்து இல்ல. காரணம் அண்ணன அடிச்சிற்றுப் போயிற்று பாத்தியரா...!''

வாய் பிளந்தவாறே கேட்டுக்கொண்டிருந்தார்கள் வியாகுலமும் குட்டியாண்டியும். என்னதான் கிறிஸ்துவ விசுவாசத்துக்குள் இருந்தாலும் இன்னும் பேய் விளையாட்டுகளிலும் செய்வினைகளிலும் நம்பிக்கையும் பயமும் அவர்களை ஆட்டிப்படைக்கத்தான் செய்தது. இவர்களின் பயத்தை நிஜமாக்குவதுபோல் நிகழ்வுகளும் அந்த நம்பிக்கைகளையே சார்ந்து நடந்தபடியால் பேய் பிசாசுகளைப் பற்றிய பயத்தை விட சமீபத்தில் மொட்டப்புளி பக்கம் நடந்த சாவு, கிழக்கே சுள்ளைப் பக்கம் ரத்தம் கக்கி இறந்து கிடந்த அமுக்கியாரு... என்று காரணம் தெரியாமல் இறந்தவர்களின் எண்ணிக்கை அதிகம்தான்.

''சேனா பீனாவும் கொழும்புல செத்தாருன்னு சொன்னாவ. ஒடம்ப கொண்டார முடியில. இப்ப செத்த நம்ம மடுத்தீனு... மஞ்சள் காமலைங்கிறது வெறும் பேச்சிதாம். ஏதோ போய் பிசாசு கோளாறு தாம்வ'' என்றார் வியாகுலம்.

'' இருட்டியாரு சொல்றதப் பாத்தா தொம்மந்திர சிறப்பாறுல இருந்து ஒழுங்கா வந்து சேருவானா! ஒரு எழவும் பரியலிய'' என்றார் குட்டியாண்டி.[22]

தொம்மாந்திரை - சுறா வேட்டை

கடலில் தொம்மந்திரை, கோத்ரா, போஸ்கோ ஆகியோரோடு மீன்பிடித்து கொண்டிருந்தார்.

தொம்மந்திரை தீவிரமான சிந்தனையிலிருந்தார். வரும்போது அண்ணன் மடுத்தின் உடல்நிலை சரியில்லாமல் இருந்தார். 'மூத்திரம் மஞ்சளா வருதின்னார... இடிந்தகர வைத்தியரு வந்து பார்ப்பதாய் இருந்தது. வந்தாரோ வரயில்லியோ தெரியலிய. ஆத்தாவும் மதினியும் என்ன பாடு படுறாவளோ! நம்ம வந்திருக்கக் கூடாதோ... தொம்மந்திர என்னதாஞ் சொல்லு... ஒனக்கு பொறும கொஞ்சங் கம்மிதான்.'

தீடீரென்று போஸ்கோ மரத்திலிருந்து தள்ளிக் குதித்தான். ''கோத்ரா, கீழ பாரு.''

கடலில் மரத்துக்குப் பக்கத்தில் கருத்துப் பெருத்த கண்களை உருட்டிக்கொண்ட வரிப்புலியன் இருந்தது. அதைப் பார்ப்பதே குலை நடுக்கச் செய்தது. அதன் பக்கத்தில் தண்ணீருக்கு அடியில் மற்றொரு கறுப்பும் அசைவது தெரிந்தது.

உடலின் மேல்பகுதியில் அடர் பச்சை நிறத்தில் வெள்ளைப் புள்ளிகள். தோல்பகுதி சொரசொரப்பாகவும் வயிற்றுப்பகுதி வெள்ளை வெளேரென்றும் தலைப்பகுதி தட்டையாக முக்கோண வடிவிலும் இருந்தது. தூண்டில் சரியாக கடைவாய்ப் பற்களுக்கு கீழே மாட்டி தாடையைக் கிழித்துக்கொண்டு பூரியிருந்தது. கீழ்த்தாடை அசையும் அமைப்பு பெற்றிருப்பதால் தூண்டிலில் மாட்டிய பின் இந்த மீன் கண்டிப்பாக வலியால் துடிதுடித்திருக்க வேண்டும். வாய் பிளந்து கொண்டு இருந்ததால் மேல்தாடையிலும் கீழ்த்தாடையிலும் உள்ள பற்கள் ரம்பம்போல் தெரிந்தன. வாலில் நீண்டிருந்த தூவி, பக்க வாட்டிலும் முதுகுப் பகுதியிலும் இருந்த தூவிகள் எல்லாம் வெளிர் பச்சையாய் இருந்தன. இந்தத் தூவிகளுக்கு கீழை நாடுகளில் நல்ல கிராக்கி. மீனைச் சம்பையாக்கிய பின் கிடைக்கும் விலையைவிட இந்தத் தூவிகள்தான் அதிக விலைக்குப் போகும்.

"கோத்ரா, இனும் கவனமா இருக்கணும் கேட்டியா, காரணம் வரிப்புலியம் எப்பவும் ஜோடியாத்தாம் அலையும். இப்ப மாட்டிக் கெடக்குறது ஆணா பொண்ணா தெரியில!"

"இப்ப என்ன பண்ண?"

"தப்பித்தவறிக்கூட கால தண்ணீயில வச்சிரக்கூடாது" என்றவாறே கட்டுமரத்தில் தயாராய் இருந்த கயிறுகளில் கத்திரி வெட்டுகள் வைத்துக் கொண்டிருந்தார் தொம்மந்திரை.[23]

மீன் விற்பனை

சுறா வேட்டையாடி வந்த தொம்மந்திரை, கோத்ராவிடம் அதை விற்று தரச் சொல்கிறார்.

"அதுக்கென்ன செய்ய... உக்காந்து ஒமல் மொடைஞ்சாப் போச்சி. கோத்ரா, ராவோட ராவா மீனக் கிழிச்சி நெய்ய எடுத்து பெட்டி ஆபிஸர்கிட்ட குடுத்திருங்க."

"மீன் வெட்டும்போது வயித்துப் போர வட்டமா வெட்டி வீட்டுவள்ல குழும்புக்கு குடுத்துரு கோத்ரா. மத்தத வாலுல இருந்து தல வர ரண்டா வவுந்து வால்ல வெட்டு வச்சி நம்ம வேப்பமரத்துல கெட்டி தலகீழா தொங்க வுட்டுரு."

"கோத்ரா, சம்பயில வெல கூடுனதே இந்த வரிப்புலியஞ் சரக்குதாம். எங் கணக்கு சரியாயிருந்தா மிராண்டாப்புள்ள ஆள்க இந்நேரம் வந்திருக்கணும். ராவோட ராவா கழுதப் பொதி ஏத்துனாலும் ஏத்துவான்வ...!"

"கொழும்புல வரிப்புலியஞ் சரக்குன்னாலே ஆலாப் பறக்குறான்வளாம். வெல ரண்டு ரூபாகூடச் சொன்னாலும் கெடைச்சாப் போதும்னு அலைவான்வளாம். சிங்களன்வளுக்கு இதுல ஒரு ருசி."[24]

புகையிலை இறக்குமதி

பழங்காலம் முதலே தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் ஏற்றுமதி இறக்குமதி நடந்துள்ளது. நாவலாசிரியர் இதனை கதையில் இடம்பெறச் செய்கிறார்.

தொம்மந்திரை தேடி வந்த ரெஜினா நின்றிருந்தது. யாழ்ப்பாணப் புகையிலைச் சிப்பங்களை இறக்கிக்கொண்டிருந்தார்கள். தோணிப்பாலத்தில் நின்றிருந்ததால் பாய், பருமல் எல்லாம் சுருட்டப்பட்டு மேல்தளத்தில் வைத்துக் கட்டப்பட்டிருந்தன. பெரியதுறைக்காரர் ஒருவர்தான் ரெஜினாவில் தண்டலாக இருந்தார். சுங்கத் தடுப்பைக் கடந்து தொம்மந்திரை தோணிப் பக்கம் வந்தார். மேல்தளத்தில் நின்றிருந்த தண்டல் பனிமய மாதாவின் கோவிலை நோக்கி கைகூப்பிப் பாடிக்கொண்டிருந்தார்.

மாதர்களின் மாதிரியே
மாயிருளில் ஒளிர் தாரகையே
மாதரசியே மனவொளி தாராய்
மாக அகலக் செய்வாய்
கலங்கரை தீபமே
கலங்களின் தாரகையே
குலங்கிடும் ஒளியே
கலங்குசோர்க்கு கதியே
காத்திடுவாய் தாயே

தண்டல் ஜெபித்து முடிப்பதுவரை பொறுமையாகக் காத்திருந்தார் தொமந்திரை. தண்டலிடம் சென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவர் கொழும்பில் இருந்து கொடுத்துவிடப்பட்ட சரக்குகள் பற்றிக் கேட்கவும், அவர் அவற்றை முதலிலேயே இறக்கி பெரைரா பார்வர்டிங் கம்பெனியில் கொடுத்துவிட்டதாகக் கூறினார். அந்த கம்பெனி மாதா கோவில் சமீபம் இருப்பதாகவும் அது சம்பந்தமாக ஒரு தாக்கீதும அதன் விலாசமும் கொடுத்தார்.[25]

தொம்மந்திரை - அமலோற்பவம் - எஸ்கலின் - பரதேசி

அமலோற்பவத்தின் பெண்குழந்தை எஸ்கலினுக்கு மூன்று வயது. அமலோற்பவத்தின் சகோதரர்கள் எல்லோரும் கொழும்பில் பிரபல வியாபாரிகளாய் இருந்ததால் குழந்தைக்குத் தேவையான மருந்துகள், வாசனைத் திரவியங்கள், பொம்மைகள், உடுதுணிமணிகள் என்று வந்து குவிந்தவண்ணம் இருந்தன.

தொம்மந்திரை இந்தப் பெண் குழந்தையை இறைவன் தந்த வரம் என்றே எண்ணினார். தனக்குப் பிறந்ததா இல்லை அண்ணனுக்குப் பிறந்ததா என்று அவரால்

உறுதியாகக் கூறமுடியவில்லை. எனவே பாசத்தைவிட ஒருபடி உயர்வாக கடமையுணர்ச்சி வந்து சேர்ந்தது.

எஸ்கலினுக்கு இரண்டு வயது நடக்கும்போதே அமலோற்பவம் கருத்தரித்து ஒரு ஆண் மகவைப் பெற்றாள். பொடியன் நல்ல துடிப்பாக துறுதுறுவென்று இருந்தான். பரதேசி என்று பெயரிட்டு பாசத்தோடு வளர்த்தார்கள்.

சோதிக்காவிளையில் சூசையப்பர் திருவிழா நடந்து கொண்டிருந்தது. அமலோற்பவம் எவ்வளவோ தடுத்தும் கேட்காமல் தொம்மந்திரை குழந்தையை எடுத்துக்கொண்டு சோதிக்காவிளை சென்றுவிட்டார். இங்கு ஆமந்துறையில் எஸ்கலினுக்கு நல்ல காய்ச்சல். எனவே அமலோற்பவம் அவளோடு தங்கிவிட்டாள்.

சோதிக்காவிளை சரியான காட்டுப்பகுதி. தோட்டந்துறவுகள் அந்தப் பக்கத்தில் அதிகம். நடந்துதான் போகவேண்டும். ஆமந்துறையிலிருந்து இடையன்குடிவரை நேர் வடக்கே சென்று அங்கிருந்து இடதுபுறமாகத் திரும்பிக் குறுக்காக நடந்தால் சோதிக்காவிளை.

பாம்பு கடி

அமலோற்பவம் தந்திருந்த கெட்டுச் சோற்றைப் பிரித்து பரதேசிக்கு நாலைந்து உருண்டை ஊட்டிவிட்டு தானும் சாப்பிட்டுவிட்டு குழந்தையைப் பக்கத்திலே படுக்கவைத்து தூங்கிப் போனார். தொம்மந்திரை.

தீடீரென்று ஏற்பட்ட களேபரத்தில் எழும்பினார். கோயில் வளாகத்தில் படுத்திருந்தவர்கள் எல்லோரும் 'பாம்பு பாம்பு' என்று அலறியடித்தபடி ஓடினார்கள். பதறிப்போய் குழந்தையைத் தூக்கியவர் 'எய்யா... எம் மொவனே...'' என்று சத்தம் போட்டார். வாயில் இருந்து நுரை தள்ளிக்கொண்டிருந்தது. சிதறிய கூட்டம் தொம்மந்திரையை நோக்கி வந்தது. வாழ்கையின் எந்த சந்தர்ப்பத்திலும் அழுதிராத அவர் கண்களில் இருந்து மாலை மாலையாகக் கண்ணீர் வழிந்தது.

அந்த இரவிலும் யாரோ போய் தட்டியவுடன் சோதிக்காவிளை வைத்தியர் நவமணி ஓடோடி வந்தார். வரும்போதே வீட்டின் முன்னால் நட்டியிருந்த சிறியாநங்கை மூலிகையில் ஐந்தாறு இலைகள் பறித்து கையில் வைத்துக் கசக்கியபடி வந்தார். பக்கத்தில் வந்த பையனிடம் சொன்னார். எப்பு, அம்மயிட்ட ரண்டு நல்ல மொளவு நசுக்கி வாங்கிற்று ஓடியா.

கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே வந்தவர், அய்ய., மதலயில்லா! நாங் கொஞ்சமாவது வாண்டுப் பயலாயிருப்பா மின்னுல்லா பாத்தாம். இவனுக்கு வாய்க்கிள வச்சி சவைக்க குடுக்க முடியாத'' என்றவாறு அவர் மகன் கொண்டு வந்த நல்ல மிளகுத் துறையும் சிறியாநங்கை இலையையும் திரும்பவும் கையில் வைத்து கசக்கி பரதேசியின் வாயில் சொட்டுகள் விழுமாறு பிழிந்தார். குழந்தையிடம் எந்த அசைவும்

இல்லை. குருத்துப் போல் இருந்த அவன் தேகம் கறுத்துப் போனது. நவமணி வைத்தியர் கையை விரித்துவிட்டார்.

தொம்மந்திரை அழுது புரண்டார். ‘‘ஒங் கோயில்ல வந்துதான இப்புடி நடந்துச்சி, ஒனக்கு கண்ணேயில்லியா, எம் பெண்டாட்டி வேண்டாம் வேண்டாம்னு சொல்லச் சொல்ல நா வந்தனே’’ என்றவாறு மேலும் கெட்ட வார்த்தைகளால் புனித சூசையப்பரை அர்ச்சித்துத் தள்ளினார். குழந்தையின் பிணத்தை எடுத்துத் தோளில் போட்டவர் அங்கிருந்த அனைவரும் தடுத்தும் கேட்காமல் தன்னந்தனியாய் அந்தக் காட்டு வழியே இரவென்றும் பாராமல் தூக்கிக்கொண்டு ஊர் வந்து சேர்ந்தார்.

அமலோற்பவத்தின் நிலை சொல்லி மாளாது. உருண்டாள் புரண்டாள் சுவரில் தலையை வைத்து மோதினாள். தெய்வமே, என் உசிர எடுத்துகிட்டு இந்த புள்ள உசிரக் குடுத்துருன்னு மன்றாடித் தீர்த்தாள். அமலோற்பத்தை யாராலும் அமைதிப்படுத்த முடியவில்லை.

‘புருசன மண்ணுக்குள்ள வச்சி அந்த ஈரங் காயிறதுக்குள்ளயே கொழுந்தன மடக்குனவளாச்சே! என்று ஊர்க்கிணற்றில் பெண்கள் பேசுவதாக அமுக்கி மொவள் வந்து சொல்லிப்போனது வேறு திரும்பத் திரும்ப ஞாபகத்திற்குவந்து அவளைப் பாடாய்படுத்தியது.

‘நா வேண்டாம் வேண்டாமுன்னு சொல்லச் சொல்ல யாரு கேட்டா...

‘மாமி நல்லவங்க. பரதேசி அப்பாவும் நல்லவருதாம் ஆனாலும் இப்புடி ஒரு பேச்சி வந்திற்றே...

‘கடவுளே, என்னய எடுத்துக்கிரும். எம் புள்ள எங்க இருக்கானோ அங்கயே நானும் வந்திருறம். எஸ்கலின அவ அப்பா பாத்துக்கிருவாரு. அவருக்குத்தாம் அவயின்னா உசுராச்ச... எனக்கு வாழ விருப்பமே இல்லை. என்னால முடியில்ல... எம் புள்ளய தூக்கிப் போட்டுட்டு இந்த வாழ்க்க எனக்கு வேண்டாம். என்னய எடுத்துக்கிரும். என்னய எடுத்துக் கிரும்.’

தலைவிரிகோலமாய் உணவு உறக்கமின்றிக் கிடந்தாள்.

குழந்தையின் அடக்கம் எடுத்துப் போகும்பொது அந்த பெட்டியிலேயே ‘‘அய்யா, நீ வேணுன்னா எனக்கு காத்திற்கு இரு. ஆத்தா எண்ணி முப்பதே நாளுல நீ இருக்குற எடத்துக்கே வந்து சேந்திருறம்’’ என்றாள்.

ஆமந்துறையில் எல்லோரும் அவளுக்கு கிறுக்குப் பிடித்து விட்டதென்றே கருதினார்கள். குழந்தை இறந்த சோகத்தில் மனைவியைத் தேற்ற முடியாமல் தொமந்திரை நடைப்பிணம்போல ஆகிப்போனார். அந்த நாட்களில் எந்தக் கட்டுமரமும்

வேலை பார்க்கப்படவில்லை. இருந்த சூழ்நிலையின் காரணமாக ஊரில் யாரும் அவரிடம் பேசவே பயந்தார்கள்.

மகனின் பிரிவைத் தாங்காத அமலோற்பவம் உண்ணாமல் உறங்காமல் பழிகிடையாய்க் கிடந்து சரியாக முப்பதாவது நாள் இறந்து போனாள்.

சோதிக்காவிளை திருவிழா நடக்கும்போது தூத்துக்குடியில் தியானத்துக்காகச் சென்றிருந்த காகு சாமியார் பதினைந்து நாட்கள் கழித்துதான் திரும்பியிருந்தார். அதற்குள் நிலைமை இங்கு மிக மோசமாகி இருந்தது.

அமலோற்பவத்தின் அடக்க பூசை நடக்கும்போது அவரால் கட்டுப்படுத்த முடியாமல் அழுதேவிட்டார். சேனா பீனா குடும்பத்துக்காக ஊரே அழுதது. அடக்க பூசை நடந்து கொண்டிருக்கும்போதே அம்மாமார் வரிசையிலிருந்த ரெஜிஸ் மேரி என்ற வெள்ளைக்கார கன்னியாஸ்திரி தொம்மந்திரை மடியில் இருந்த எஸ்கலினை அழைத்துவந்து பாசத்தோடு பேச்சுக்கொடுத்து கையில் மறைந்து வைத்திருந்த கத்தங்காய்களைக் கொடுத்தார். ஒருவழியாய் அமலோற்பவத்தின் அடக்கம் முடிந்து மூன்று நாள் கழித்து துக்கம் கலைந்தார்கள்.

சேனா பீனா வீட்டில் கருத்தாக் கிழவி, குழந்தை எஸ்கலின், தொம்மந்திரை இவர்களைத் தவிர வேறு ஒருவரும் இல்லை. வீடே வெறிச்சோடிக் கிடந்தது.

தொம்மந்திரை திரும்பவும் மரம் வெட்ட ஆரம்பித்திருந்தார். இடையிடையே ஓமல் முடைவதும் நடந்துகொண்டிருந்தது. ஒருநாள் தொம்மந்திரையை தற்செயலாகப் பார்த்த காகு சாமியார் எஸ்கலினை கூட்டிக்கொண்டு கச்சத்தீவு திருவிழாவுக்குப் போகச் சொன்னார்.[26]

கட்டுமரம்

உதவியாளனிடம் கோடலியை வாங்கினார் மணி ஆசாரி. தொம்மந்திரை கோடாலியைத் தொட்டுக் கொடுத்தார். கோடாலி பார்ப்பதற்கு பயங்கரமாக இருந்தது. அதன் அகலமும் பளபளக்கும் கூர்முனையும் சூரிய ஒளியில் கண்ணாடி போல் மின்னியது.

தொம்மந்திரையின் கைவண்ணத்தில் கோத்ராவின் மரம் தயாராகியது. தேர்ந்த ஓடாவியின் கீழ் வேலை பார்த்ததால் மணி ஆசாரியும் தன் திறமையை எல்லாம் காட்டி மரத்தை இழைத்தார். ஆமந்துறையில் நாலு பேர் கூடும் இடத்திலெல்லாம் இந்த மரம் பற்றிய பேச்சுதான். தன் மரத்தில் போட்டிருந்தது போலவே கோத்ராவின் புதிய மரத்திலும் அணியத்துப் பலகை சொருகுவதற்காக வெளி போடச் சொன்னார் தொம்மந்திரை.

தொம்மந்திரை ரசித்து ரசித்து தன் கைகளாலேயே இழைப்புளி வைத்து இழைத்துக் கொடுத்ததால் அது கடலில் இறங்கும் நாளுக்காக எல்லோருமே ஆவலாகக் காத்திருந்தார்கள்.[27]

ஊர் வழக்கு

இந்தக் கடற்கரைத் துறைகளில் எத்தனையோ வழக்குகளை முடித்தவர் தொம்மந்திரையார். படிப்பெல்லாம் ஐந்து வரைதான். ஆனால் எந்த அதிகாரிகளையும் மடக்கிப் பிடிக்கும் அறிவும், சாமர்த்தியமும் அவருக்கு உண்டு என்பது அனைத்துத் துறைகளுக்கும் தெரியும். ஆமந்துறையிலும் அவருக்கென்று ஒரு தனி மரியாதை உண்டு. ஊர் பிரச்சனை என்று வரும்போது அவர் எடுக்கும் முடிவுகளை எல்லோரும் ஆமோதிப்பது வழக்கம். கூடியிருந்த மொத்த ஊர்க்காரர்களும் அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்க ஆரம்பித்தார்கள். [28]

தொம்மந்திரை - ரத்தினசாமி நாடார்

தொம்மந்திரையும் காகு சாமியாரும் காரில் தூத்துக்குடியிலிருந்து ஆமந்துரைக்கு வந்து கொண்டிருந்தார்கள். இடையில் நடந்து ரத்தினசாமி நாடார் வருகிறார்.

பெரியதுறையை வேகமாகக் கடந்த கார் குட்டத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. எதிரே வந்த எருமைக் கூட்டத்திற்கு வழிவிட்டு சிறிது நேரம் நிற்க, பக்கத்திலே நடந்து வந்துகொண்டிருந்த ஒருவர் குனிந்து "அய்யா, ஆமந்தொறை இன்னும் எவ்வளவு தூரம்." என்று கேட்டார்.

கேட்டவருக்கு வயது முப்பது இருக்கலாம். தளர்ந்துபோய் இருந்தார். கையில் ஒரு மஞ்சள் நிறப் பை வைத்திருந்தார்.

"தொம்மந்திரை, யாரு என்ன விசயமுன்னு கேளு."

"இன்னும் ஏழு மைலு போவணும். நீங்க யாரு அண்ணாச்சி? என்ன விசயமா ஆமந்தொற போவணும்?"

"எய்யா, எம் பேரு ரத்தினசாமி. கோயில்பட்டி பக்கம் இருந்து வருதம். அந்தப் பக்கங்கள்ல பன ஏத்தங் கொறஞ்சி போச்சி. அதாங் கருவாடு ஏதாச்சும் வாங்கி விக்கிலாமான்னு யோசனயில் இந்தப் பக்கம் வந்தம்."

"வேற எங்கயும் போவயில்லியா?"

"எய்யா, கோயில்பட்டியில் இருந்து ரயில்ல வந்தம் பாத்துகிடுங்க. திருச்செந்தூர்ல எறங்கி முருகன எட்டிப் பாத்திற்று அப்புடியே பொடிநடையா பெரியதொற வந்தம். விசாரிச்சம். கையில காசு இருந்தா பேசு இல்லியா போன்னுட்டாங்க."

"சுத்தமாயில்லியா?"

"போக்குவரத்துக்குத்தாம் கொஞ்சம் வச்சிருக்கம் பாத்துக்கிடுங்க..."

"எங்க கூட வண்டியில வாறியரா..."

"அய்ய... அதெல்லாம் வேண்டாம். ஏழு மைல்தான... அப்புடியே ஒரு புடி புடிச்சமுன்னா வந்து சேந்துருவம் பாத்துகிடுங்க."

"தொம்மந்திர, நீ பின்னால வந்திரு, அவர முன்னால ஏத்திக் கிருவம்."

முன்னால் ரத்தினசாமி உட்கார வண்டி கிளம்பியது.

"எய்யா, பெரிய புண்ணியமாப் போச்சி உங்களுக்கு. நீங்க தூரமா போறீக?"

"ஆமந்துறைதாம்."

"பெரிய ஆச எல்லாங் கெடையாது பாத்துகிடுங்க. கொண்டு போற யாவாரத்துல சோத்துப்பாடு கழிஞ்சா அதுவே போதும்."

"அப்ப எவ்வளவுக்குத்தாம் வாங்குலாமுன்னு இருக்கியரு!"

"எய்யா, கடங் கெடைக்கையில்லன்னு வையிங்க... கையில இருக்கிற திற்றுக்கு சரக்க வாங்கிற்று நடந்தே போயிற வேண்டியதாம்."

"நம்பி கடங் குடுக்குலாமா...!"

"எய்யா, இப்ப கொஞ்சம் சம்ப கடனாகக் கொடுத்து உதவி செய்யிங்க. எங் காலம் உள்ள வரைக்கும் மறக்கமாட்டம்."

"தொம்மந்திர, ரத்தினசாமிய பாத்தா நாணயமானவராத் தெரியுது. கொஞ்சம் உதவி செய்யி." [29]

தொம்மந்திரை - சேகர்

தொம்மந்திரை தாத்தாவுக்கு சேகரைக் கண்டாலே சொர்க்கம்தான். ஒவ்வொரு நாளும் காலையில் தாத்தாவைப் பார்க்காமல் அவனாலும் இருக்கமுடியாது.

தொம்மந்திரை தாத்தாவால் தனியாக இப்போது நடக்கமுடியாது. காலைக்கடன் கழிக்க இயலாது. எல்லாவற்றிற்கும் தாத்தாவுக்கு ஒரு துணை தேவைப்பட்டது. தாத்தா என்றால் சேகருக்கு கொள்ளைப் பிரியம். அந்த நெடிந்து உயர்ந்த தேகமும் பரந்து விரிந்த மார்பும் மார்பிலே நிறைந்து கிடந்த வெள்ளை மயிரும் தாத்தாவை ஆஜா பாகுவாய் காட்டின.

பள்ளிக்கூடத்தில் எல்லாப் பிள்ளைகளும் 'எங்கய்யாகிட்ட சொல்லிவரும்' என்று கூறும்போதெல்லாம் இவன் மட்டும் 'எங்க தாத்தாகிட்ட சொல்லிவரும்' என்பான். மழலையாய் இருந்தபோது அவர் முரட்டுக் கரங்களில் விளையாடியதும் தோள் மீது சவாரி செய்ததும் பசுமையாய் சேகரின் நினைவுகளில் பதிந்துபோய் இருந்தது.

இரவு நேரங்களில் தாத்தா தன் பருத்த விரல்களில் உருட்டித்தந்த ஒரு கவளம் சோறே சேகருக்கு வயிராற இருந்தது.

ஒருநாள் சேகர் தாத்தாவின் பழையாகாட் சாரத்தை எடுத்து யாருக்கும் தெரியாமல் உடுத்திப் பார்த்துக் கொண்டிருந்தான். தற்செயலாக வந்த தாத்தா இதைக் கவனித்தார். சேகரை அப்படியே தூக்கி ஆனந்தக் கூத்தாடினார். அவனைத் தோளில் வைத்துக்கொண்டு நடுத்தெரு முழுவதும் வலம் வந்து ''எம் பேரம் சாரம் வுடுத்திற்றாம்'' என்று எல்லோரிடமும் மகிழ்ச்சி பொங்கக் கூறிக்கொண்டிருந்தார். தாத்தாவைப் பற்றிய எந்த நினைவுகளும் மறக்ககூடியதாயில்லை சேகருக்கு.

இடையன்குடியில் படித்துக்கொண்டிருந்தான் சேகர். காலையில் தாத்தாவுக்குத் தேவையான பணிவிடைகள் அனைத்தும் செய்துவிட்டு பள்ளிக்கூடத்திற்கு பிந்திப்போயி சுவி வாத்தியாரிடம் அடி வாங்குவான். பேரனைக் கண்டாலே தாத்தா வாயெல்லாம் பல்லாகக் சிரிப்பார். திட்டு வாங்குவதைப் பற்றியோ தாமதாகப் போவதால் அடி வாங்குவது பற்றியோ கவலையில்லை சேகருக்கு. என்னதான் பாட்டி பிரகாசியம்மா தாத்தாவின் படுக்கையைத் தட்டிப் போட்டுக் கொடுத்தாலும் பேரன் சேகர் வந்து எல்லாவற்றையும் சரிபார்த்தால்தான் அவருக்கு நிம்மதி.

தொம்மந்திரையாருக்கு கட்டில் நடுவீட்டில் போடப்பட்டிருந்தது. கட்டிலுக்குப் பக்கத்திலேயே ஒரு மர நாற்காலியை மத்தியில் ஆசாரியாரை வைத்து குடைந்து அமர்ந்துகொண்டே வெளிக்கிப் போவதற்கு வசதியாய் ஏற்பாடு செய்திருந்தார்கள். அந்த நாற்காலிக்குக் கீழே இரும்பு வாலி இருக்கும். அதில் இரவு கழித்த மூத்திரம், காலையில் வெளிக்கிப் போனது எல்லாவற்றையும் சேகர் கடலில் கொண்டு

கொட்டிவிட்டு வாளியை நன்றாக கடல் மண் வைத்து தேய்த்து கழுவி சுத்தமாகக் கொண்டுவந்து திரும்ப கட்டிலுக்கடியில் வைப்பான்.

தாத்தாவும் பேரனும் பேச ஆரம்பித்தால் பொழுது போவது தெரியாமலே பேசிக்கொண்டிருப்பார்கள். சேகர் இப்படி தாத்தா தொம்மந்திரையாருக்குப் பணிவிடை செய்வது கில்பர்ட்டுக்கு சுத்தமாகப் பிடிக்கவில்லை. முறுமுறு என்று வருவார். இந்த முறுமுறுப்பெல்லாம் விடுமுறைக்கு வரும் இரண்டு மூன்று மாதந்தான். கில்பர்ட் கப்பலில் இருந்து வந்துவிட்டால் குழந்தைகள் எல்லாரும் இந்த சனியன் எப்போது ஒழியும் என்றே காத்திப்பார்கள். காரணம் யாரும் பாட்டி வீட்டிற்குப் போகமுடியாது. கடற்கரையில் விளையாடமுடியாது. ஏதோ மேசைக்காரக் குடும்பம்போல நடந்துகொள்வார் கில்பர்ட்.

அன்றும் வழக்கம்போலவே தாத்தாவுக்குப் பணிவிடைக்களைச் செய்துவிட்டுப் போயிருந்தான். சேகர். மனது சரியல்லாததுபோல் இருந்தது. ஏதோ இனம் புரியாத சோகம் அவனை அப்பிக்கொண்டது. சனிக்கிழமையாதலால் ஒரு மணிக்கு ஸ்கூல் முடிந்தவுடன் யாருடனும் விளையாடாமல் விறுவிறுவென ஆமந்துறையை நோக்கி நடந்தான். தூரத்தில் சிலுவை வருவது தெரிந்தது.[30]

3. வியாகுலப் பிள்ளை

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் மூன்றாவது பெரிய பாத்திரப் படைப்பு வியாகுலப் பிள்ளை.

கடற்கரை வாழ் மக்கள் எளிதில் உணர்ச்சி வசப்படக்கூடியவர்கள் என்பதை நாவலில் ஒரு சம்பவம் நினைவூட்டுகிறது. கடற்கரை கிராமங்களில் கலவரங்கள் நடைபெறுவதை ஆசிரியர் பதிவு செய்கிறார்.

மறுநாள் நடக்கப் போகும் சண்டைக்கான வியூகங்களை இரவில் வகுத்துக்கொண்டிருந்தா பெரியவர் மானாப் பிள்ளை. அவர் மொவன் மூத்தவன் லூக்காஸ் நடுவீட்டின் வலதுபுறம் அமர்ந்திருந்தான். வாடிய முகமே சண்டையில் அவனுக்கு விருப்பம் இல்லை என்பதைக் காட்டியது. முன்னால் முக்காடு போட்டபடி அமர்ந்திருந்த நாலைந்து பேர் மானாப் பிள்ளையைத் தூண்டிவிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே உள்ளே வந்தான் ஜஸ்டின்.

முன்வீட்டில் முக்காடு போட்டபடி ஆள்கள் வந்தனர். ஏதேதோ மானாப்பிள்ளையிடம் குசுகுசுத்துக்கொண்டும் போய்வந்து கொண்டும் இருந்தார்கள்.

ஜன்னல் வழியாக இவற்றைக் கவனித்துக்கொண்டிருந்த அமலி அவசர அவசரமாக வளவுக்குள் ஓடி வந்தாள். வேகமாகத் திரும்பி பக்கத்து ரூமுக்குள்

சென்று பீரோவைத் திறந்து எதையோ பரபரப்பாக எடுத்தவள் அவசர அவசரமாக மூத்த மகள் ரோஸ்லினிடம் பீமணியை அழைத்துவரச் சொன்னாள்.

பீமணி யாரிடமும் அதிகம் பேசமாட்டான். ஆனால் மானாப் பிள்ளையையோ அவர் பிள்ளைகளையோ, பேரன் பேத்திகளையோ யாராவது ஏதாவது சொல்லிவிட்டால் மல்லுக்கட்டிக்கொண்டு சண்டைக்கு நிற்பான். நினைவு தெரிந்த நாளிலிருந்தே இந்த வீட்டிலே சாப்பிட்டு வளர்ந்தவன். வளவுப் பக்கம் கோழிகளை அடைக்கும் இடத்தில் அவனும் இரவு படுத்துக்கொள்வான். கூப்பிட்டு சாப்பாடு போட்டால் சாப்பிடுவான். கூப்பிடாவிட்டால் அவன் யாரைப் பற்றியும் கவலைப்படாமல் வேலை செய்துகொண்டிருப்பான்.

"பீமணி, இங்க வா" என்றாள் அமலி.

மானாப் பிள்ளை வீட்டாரைத் தவித வேறு யார் பீமணி என்று கூப்பிட்டாலும் அவனுக்குப் பிடிப்பதில்லை. அவனுடைய சொந்தப் பெயர் இஞ்ஞானி.[31]

வேலெடுத்து முன்னால் ஓடிவந்து கொண்டிருந்த ஜஸ்டின் சிறிதும் தாமதியாமல் எதிரே இருந்த சந்தில் சென்று மறைந்தான். கல்லெறி முடிந்து கம்போடு கம்பு தொடுக்கும் தருணம்... பெரியவர் மானாப் பிள்ளையின் முகத்தில் கலவரம் குடிகொண்டிருந்தது. பீமணி எங்கே... பரக்க பரக்க விழித்துக்கொண்டிருந்தார்.

மானாப் பிள்ளை கோஷ்டியின் முன்னணி வீரன் ஜஸ்டினைக் காணவில்லை. அவனைத் தேடுவதற்கு நேரமில்லை. திரும்பிப் பார்த்தால் கேவலம். மானாப் பிள்ளை மொவன் மூத்தவன் லூக்காஸ் தான் மந்தாப் பிள்ளை ஆள்களோடு முதல் கம்பு தொடுத்தான். கல்வீச்சு குறைந்து இப்போதும் கடும் கம்புச் சண்டை. அவனவன் படித்த வித்தைகள் அனைத்தையும் காட்டிக் கொண்டிருந்தான். அடிப்பதைவிட அடிக்குத் தப்பி முன்னேறுவதே பெரும் வீரமாய் இருந்தது. மந்தாப் பிள்ளை ஆள்கள் பெரும் உருவங்களாய் இருந்தாலும் மானாப் பிள்ளை கோஷ்டியினரின் தந்திரத்திற்கு ஈடு கொடுக்கமுடியாமல் திணறினார்கள். மானாப் பிள்ளை கை எப்போதும்போல ஓங்கியே இருந்தது. ஆனால் வெட்டுவதினால் தாமதம் தெரிந்தது.

வியாகுலப் பிள்ளை தன் பொறுப்பிலிருந்து ரேஷன் கடையை அவசர அவசரமாக மூடிவிட்டு கடையில் உள்ள கணக்குப் புத்தகங்களையும் எடுத்துக்கொண்டு வேமாக வீடு நோக்கி வந்துகொண்டிருந்தார். அடுத்த இடுக்கில் திரும்பினால் வீடு. இன்னும் வேகம் கூட்டித் திரும்பினார். அவர் இடது பக்கமாகத் திரும்பவும் வலது புறமிருந்து தன் கையில் வைத்திருந்த வேலால் ஜஸ்டின் அவர் விலாவில் குத்தவும் சரியாக இருந்தது.

"வசந்தா..." என்று அலறியபடி கீழே சாய்ந்தார் வியாகுலப் பிள்ளை. அதற்கு மேல் அவரால் பேச முடியவில்லை. இதுவரையில்லாத பயம் ஜஸ்டினின் கண்களில் தொற்றிக்கொண்டது. தகப்பனாரின் அலறல் சத்தம் கேட்டு வெளியே வந்தாள் வசந்தா.

குத்திய வேலைப் பிடுங்கிக்கொண்டிருந்தான் ஜஸ்டின். ஓடிவந்து அவன் வேட்டியைப் பிடித்து உலுக்கினாள். அவளைப் பார்க்க சகிக்காத ஜஸ்டின் அவளைத் தள்ளிவிட்டான்.

ஓடி வந்த வசந்தமாளிகை இடுக்கின் முனையிலேயே நின்று பார்த்தாள். வசந்தமாளிகையின் கண்கள் ஒருமுறை வசந்தாவின் விழிகளைச் சந்தித்து மீண்டன. சொல்ல முடியாத சோகம்.. நேற்று இரவில் வெளியே போகும்போது ஜஸ்டின் சொன்ன வார்த்தைகளின் வன்மம் இப்போதுதான் புரிந்தது வசந்தமாளிகைக்கு. அவளையே அறியாமல் மயிர்க்கூச்செறிய அந்த இடத்தை விட்டு அகன்றாள்.

வியாகுலப் பிள்ளை குத்துப்பட்டார் என்ற வேளம் ஊர் பூராவும் பரவியது. பதறிப் போன கோத்ராப் பிள்ளை சம்பவம் நடந்த இடத்தை நோக்கி ஓடி வந்தார். அதற்குள் வியாகுலப் பிள்ளையின் மூச்சு நின்றிருந்தது. சுற்றி நின்றவர்கள் எப்படி வழக்கு போடுவது, யார் யாரைக் குற்றவாளியாகச் சேர்ப்பது என்று காரசாரமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். பக்கத்துச் சுவரில் சாய்ந்து சுரணை அற்றுக் கிடக்கும் வசந்தாவைச் சீண்டுவாரில்லை. கூட்டத்தின் இடையில் புகுந்து வசந்தாவைத் தூக்கிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார் கோத்ராப் பிள்ளை.

வியாகுலப் பிள்ளை மிதவாதி. சண்டை சச்சரவுகளுக்குப் போகாதவர். ஆனால் ஜஸ்டினும் வியாகுலப் பிள்ளையும் ஒரே கோஷ்டியை சேர்ந்தவர்கள். நடந்து முடிந்த கொலைச் சம்பவம் ஒரு புரியாத புதிராகவோ இருந்தது. மானாப்பிள்ளை கோஷ்டியை பொறுத்த வரையில் அவர்கள் எதிர்பார்த்தபடி அவர்கள் தரப்பிலேயே கொலை விழுந்திருந்தது. ஆனால் பீமணியைக் காணவில்லை. அதற்கு பதில் அவர்கள் கோஷ்டியில் மிகவும் மதிக்கத்தக்கவரும், மூத்தவருமான வியாகுலப் பிள்ளை கொலை செய்யப்பட்டிருக்கிறார்.

கொலை வழக்கில் சேர்க்கப்பட்ட எட்டு குற்றவாளிகளுடன் ஒன்பதாவது குற்றவாளியாகச் சேர்க்கப்பட்டான் ஜஸ்டின் என வரும் பகுதியில் இருந்து கலவரச் செய்தியினை அறியலாம். [32]

4. கோவில்பட்டி ரத்தினசாமி நாடார்

இவர் கோவில்பட்டி மீன் வியாபாரி. ஏற்றுமதி செய்யும் தொழிலதிபர். ஆமந்துரை கிராம மக்களோடும், தொம்மாந்திரையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். நியாயமாக வாழ்பவர்.

சாளை தவிர மற்ற பெரிய மீன்களை பங்குக் கோவிலுக்கு நேர் பணிய இருந்த கடற்கரைப் பகுதியில் ஏலம் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஏலம் எடுக்கப்பட்ட சீலா, கூரல், பாறை போன் மீன்களை கூடைகளில் வைத்துத் தூக்கி மேற்கே உள்ள ரத்னசாமி நாடார் பண்டகசாலையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

பன்னா , பயிந்தி, மாவளா, கத்தாள, குதிப்பு, தும்புவாளை போன்ற மீன்களை பக்கத்து கிராமங்களில் இருந்து வந்தவர்கள் அவசர அவசரமாக தலைச்சுமைப் பெட்டிகளில் அடுக்கிவைத்துக் கிளம்பிக் கொண்டிருந்தார்கள். அடுத்த ஏலத்துக்காக அவ்வாசியார் காவடியோடு ஒரு மரத்தில் சாய்ந்தவாறு காத்திருந்தார்.

இப்பகுதியில் கடலில் கிடைக்கும் பல்வேறு மீன்வகைகளை நாவலாசிரியர் பதிவு செய்கிறார்.[33]

கருவாடு ஏற்றுமதி

ரத்தினசாமி நாடார் மூலம் தூத்துக்குடியிலிருந்து கொழும்பிற்கு கருவாடு ஏற்றுமதி நடைபெற்று வருவதை நாவலாசிரியர் இந்த நாவலில் பதிவு செய்கிறார்.

சம்பை ஏற்றுமதி விசயமாக கொழும்பு செல்வதற்காக ராமேஸ்வரம் வந்திருந்தார் சுயம்பு. தூத்துக்குடியிலிருந்து தோணிமூலம் தான் கொழும்பு போகச் சொன்னார் ரத்னசாமி. தூத்துக்குடியிலிருந்து கொழும்பு செல்லும் தோணிகள் குறைந்தபட்சம் இருபத்துநாலு மணி நேரத்திலிருந்து முப்பது மணி நேரம்வரை எடுத்துக்கொள்ளும். கடலில் அதிக தூரம் தோணியில் போக வேண்டியிருப்பதால் அதற்குப் பயந்து ராமேஸ்வரம் போய் அங்கிருந்து தனுஷ்கோடி செல்லும் ரயிலில் தனுஷ்கோடி பியர் வரை சென்று அங்கிருந்து பயணிகள் படகுமூலம் தலைமன்னார் வழியாக கொழும்பு செல்வதாகத் திட்டம். தனுஷ்கோடியையும் மன்னாரையும் இணைக்கும் இந்த போட்மெயில் ஒரு வரப்பிரசாதம். யாழ்ப்பாணத்துச் சைவர்கள் ராமேஸ்வரம், சிதம்பரம், திருவண்ணாமலை என்று ஷேத்ராடனம் செய்ய இந்த போட்மெயில் பெரும் உதவியாய் இருந்தது.

முதல் தரமான சீலா, நெடுவா, இழுப்பா, வரிப்புலியன் சம்பைக் கட்டுகளோடு சுயம்பு ராமேஸ்வரம் ரயில் நிலையத்தில் நின்று கொண்டிருந்தார். தனுஷ்கோடி பியர் படித்துறையிலிருந்து புறப்படும் போட்மெயில் தலைமன்னாரில் பயணிகளை இறக்கிவிட்டு பின் கொழும்புவரை சென்று திரும்பவும் தலைமன்னார் வழியாக தனுஷ்கோடி பியர் வந்து சேரும். பயணிகளின் வசதிக்காக இரண்டு பெரிய விசைப் படகுகள் இயக்கப்பட்டு வந்தன.

இந்தப் பகுதியில் கொழும்பிற்கான கடல்வழிப் பயணம் குறிப்பிடப்படுகிறது.[34]

தனுஷ்கோடி ரயில் நிலையம்

ரத்தினசாமி நாடார் கொழும்பிற்கு அனுப்பிய அவருடைய மகன் சுயம்பு தனுஷ்கோடி ரயில் நிலையம் வந்தார். பின்பு ரயில் நிலையத்தைவிட்டு வெளியே வந்தார். வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. கடைவீதியில் மக்கள் கூட்டங்கூட்டமாய் நின்று பொருள்கள் வாங்கிக் கொண்டிருந்தார்கள். சிறிய பனை ஓலைப்பெட்டியில் வைத்து விற்கப்பட்ட சுக்குபோட்ட பனைவெல்லம் வடநாட்டவர்களை மிகவும் கவர்ந்தது. வடநாட்டிலிருந்து வந்தவர்கள் கையில் பித்தளைச் செம்புகளைச் சுமந்தபடி புரியாத பாஷையில் பேசியவாறு ராமநாதசுவாமி கோவிலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தார்கள். ஆண்கள் பூணூல் தரித்து முன்னந்தலையை மழித்து பின்குடுமி போட்டிருந்தார்கள். பெண்கள் மடிசார் கட்டியிருந்தார்கள். கடை வீதியில் அநேக வெளிநாட்டவர்கள் ஆண்களும் பெண்களுமாக அரைகுறை ஆடையுடன் அலைந்து கொண்டிருந்தார்கள். ஹிப்பிகள் போல் தெரிந்தது. கழுத்தில் பாசி மாலைகள். தலையில் பனைஓலைத் தொப்பிகள். கடைகளில் இருந்த வெண்சங்குகளை வாங்கி நூதனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். இயற்கையாகவே பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் இருந்த சங்குகள் அவர்களை வெகுவாய்க் கவர்ந்தன.

தூரத்தில் ஆண்களும் பெண்களும் முண்டியடித்துக்கொண்டு ஒரு பிளசர் காரை சுற்றி நின்றார்கள். பக்கத்தில் சென்று விசாரித்ததில் ஜெமினிகணேசனும் சாவித்திரியும் ஏதோ திரைப்பட சூட்டிங்கிற்காக வந்திருக்கிறார்கள் என்று தெரிந்தது. காதல் மன்னன் கருப்பு கலரில் டி சர்ட் போட்டிருந்தார். சாவித்திரி சேலை உடுத்தி கூலிங் கிளாஸ் அணிந்திருந்தார். பார்ப்பதற்கு கணவன் மனைவிபோல் தெரிந்தது. கூட்டத்திலிருந்தவர்கள் காரின் சன்னல் வழியாக கையை நீட்டி அவர்களைத் தொட முயற்சித்தார்கள்.

மாலை மங்கி இருள் சூழ்ந்ததால் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. கோவிலின் எதிரே கிழக்கே தனுஷ்கோடித்துறை கடலுக்குள் அனுமாரின் வால்போல் நீண்டு தெரிந்தது. தனுஷ்கோடி பியர் படித்துறையிலிருந்து தலைமன்னார் பன்னிரண்டு மைல் தூரம்தான். தனுஷ்கோடியில் கோதண்டராமர் கோவிலும் பக்கத்திலிருந்த கிட்டங்கிகளிலும் விளக்குகள் பளிச் பளிச்சென்று மின்ன ஆரம்பித்தன. இந்தப் பகுதியிலிருந்துதான் ராமர் தம்பி இலட்சுமணனோடும் தன் வானர சேனையோடும் இலங்கேசுவரன் இராவணனை அழிப்பதற்காகக் கிளம்பினாராம். இப்போது கோதண்டராமர் கோவிலாக இருக்கும் இந்தப் பகுதியில்தான் இலங்கேஸ்வரனின் தம்பி விபீஷணன் ராமரிடம் வந்து சரணடைந்து அவரோடு இணைந்ததாக ஐதீகம்.

ராமலிங்க விலாஸ் ஓட்டலில் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு திரும்பவும் ரயில் நிலையம் வந்தார் சுயம்பு. காற்றே இல்லாமல் புழுக்கமாய் இருந்தது. ரயில் நிலயத்தில் இருந்த ஒரு பெஞ்சில் கையில் வைத்திருந்த மஞ்சள்

பையைத் தலைமாட்டில் வைத்துச் சாய்ந்தார். அந்தப் புழுக்கத்திலும் உறக்கம் வந்து கவ்விக் கொண்டது.

தூத்துக்குடி தோணித்துறை முகத்திலிருந்து ரத்னசாமி அன்ட் சன் முத்திரையிட்ட சம்பைக் கட்டுகள் தோணியில் ஏறிக் கொண்டிருக்கின்றன. மச்சாது பார்வேடிங் ஆள்களுக்கும் பெரைரா பார்வேட்டிங் ஆள்களுக்கும் சரக்கு ஏற்றுவதில் போட்டி. 'எந்த தோணி மொதல்ல போவுதோ அதுல சரக்க ஏத்துங்கப்பா.. சண்ட போடாதீக..[35]

ரத்தினசாமி நாடார் – தொம்மாந்திரையார் உறவு

ஊர் எல்லையிலேயே தோப்புக் கிணறு அதை ஒட்டினாற்போல் கன்னியர் மடமும் ஆரம்பப் பாடசாலையும். அப்பால் வீடுகள் ஆரம்பிக்கின்றன. இடதுபுறமாகத் திரும்பும் கிழக்குப்பாதை வழியாகச் சென்றால் மையாவடி. தெற்கே இடதுபுறம் வான் முட்டி நிற்கும் ஆமந்துறை பங்குக் கோவிலின் இரண்டு கோபுரங்கள். வலதுபுறமாய் மேற்கு நோக்கித் திரும்பினால் பிரதான வீதி, அதன் இறுதியில் புனித அந்தோணியார் கோவில். இன்னும் மேற்கு நோக்கி நகர்ந்தால் மண் சாலை.

கூத்துப்பத்து கிராமங்களில் ஆமந்துறை பெயரைக் கேட்டாலே மக்கள் நடுங்குகிறார்கள். யாராய் இருந்தாலும அயலூரில் இருந்து உள்ளே வரும்போது ஒரு பயங் கலந்த மரியாதையுடனே ஊருக்குள் வருகிறார்கள். வீரம் விளைந்து கிடக்கும் விபரீத பூமியிது. கலகமும், கம்பெடுப்பதும் இவர்களைப் பொறுத்தவரையில் ஒரு வீரவிளையாட்டு எந்தப் பிரச்சனைக்கும் முடிவு மோதிப்பார்ப்பதுதான். கடல் தொழில் தவிர மற்ற நேரங்களில் களியல், கூத்து என்று இருந்தாலும் சிலம்பாட்டம், வாள்வீச்சு, களரி என்று தற்காப்புக் கலையிலே வாலிபர்கள் அதிக ஆர்வமுள்ளவர்கள்.

ஊர் பங்குக் கோவில் வாசலில் கார் நின்றவுடன் காகு சாமியாரிடம் விடைபெற்று சாமான்களை இறக்கிக்கொண்டு ரத்தினசாமியோடு நடந்தார் தொம்மந்திரை. குறுக்கே ஒற்றை மாட்டு வண்டியில் உப்பு போய்க்கொண்டிருந்தது.

மடிகளில் நல்ல மீன் பாடாய் இரந்தது. மீன்களின் வயிற்றைக் கிழித்து அலசி உப்பு வைத்துக்கொண்டிருந்தார்கள். உப்பு வைத்த மீன்களை ஓலைப் பெட்டிகளில் வைத்துத் தோண்டிய குழிகளில் அடுக்கிக் கொண்டிருந்தார்கள். பார்த்த இடமெல்லாம் மீன்கள் கவுச்சியில் ஊரே நாறிக் கிடந்தது. கடற்கரையில் அங்கங்கு கூட்டங்கூட்டமாய் நின்றிருந்தார்கள். ஏலம் போய்க்கொண்டிருந்தது. ஏலம் முடிந்த மீன்களை நார்பெட்டிகளில் வைத்து தலைச்சுமையில் பண்டகசாலைகளுக்குக் கொண்டுபோனார்கள்.

ரத்தினசாமியின் முகத்தில் ஏகப் பரவசம். அந்தகாரமாயிருந்த வாழ்க்கையில் ஒரு வெளிச்சக்கீற்று வேரிடுவதை அவரால் உணர முடிந்தது. 'எல்லாம்

செந்திலாண்டவன் செயல்' என்று அந்தக் கடலையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டு நின்றார்.

மறுநாள் காலையில் தொம்மந்திரை வீட்டில் சாப்பிட்டுவிட்டு ரத்தினசாமி கிளம்பினார்.

"அண்ணாச்சி, சம்பக் கெட்டு பெருசா இருக்க, இதத் தூக்கிற்று ஒத்தக்கி நடந்துருவியரா?"

"இது என்ன பெரிய விசயம் அண்ணாச்சி, மனசுல தைரியம் இருந்தாப் போதும் பாத்துக்கிடுங்க. அதாம் அந்தக் காலத்துலயே செமதாங்கி கல்லு வச்சிருக்காமில்ல, ரெண்டு மூணு தேரம் செமய வச்சி இறக்குனமுன்னா திருச்செந்தூர் அப்புறம் என்ன பொகை வண்டிதான செமக்குது. நம்மளா செமக்குயம்?"

ரத்தினசாமியின் அசாத்தியத் துணிச்சலையும் உழைப்பின் மேல் அவருக்கிருந்த ஆர்வத்தையும் பார்த்து சந்தோஷப்பட்டார் தொம்மந்திரை. இரண்டு சாக்குகளில் தனித்தனியாக இருந்த கருவாட்டுக் கட்டுகளை இணைத்து ஒன்றுபோல் பனை நாரை வைத்துக் கட்டிக் கொடுத்து தலைமேல் சுமையேற்றிவிட்டார். தொம்மந்திரைக்கு இணையான உயரத்தோடும் உடல் உறுதியோடும் ஒரு பனைவிடலி போல் சுமைதூக்கி நின்றார் ரத்னசாமி.[36]

ரத்தினசாமி நாடாரின் பண்டகசாலை

எல்லா வலைகளிலும் அன்று ஓரளவுக்கு பரவலாக இறால் பட்டிருந்தது. பாடு நன்றாக இருந்ததால் இறால் தவிர பிற மீன்களின் விலை மிக மலிவாய் இருந்தது. கவனம் முழுவதும் இறாலிலே இருந்ததால் மற்ற மீன்களின் ஏற்ற இறக்கத்தைப் பற்றி அக்கறையில்லாமல் கிடைத்த விலைக்கு விற்றுக் கொண்டிருந்தார்கள். சைக்கிள் குட்டைகாரர்களும் தலைச்சுமைக்காரர்களும் இதுதான் வாய்ப்பு என்பது போல் கையில் கிடைத்த மீனை எல்லாம் அள்ளிக் கொண்டிருந்தார்கள். ரத்னசாமி பண்டகசாலைக்காரர்களும் ஆங்காங்கே கூடைகளில் மீன் எடுத்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். கடற்கரையே களை கட்டியிருந்தது. பக்கத்து ஊர்களில் இருந்து மீன் வாங்க வந்திருந்த நாடார் பெண்கள் அவித்த பனம் பழங்களையும், சவ்வு மிட்டாயும், அவித்த கொண்டக்கடலையும் விற்றுக் கொண்டிருந்தார்கள். "சுக்குக் காப்பி... சுக்குக் காப்பி" என்றவாறு ஒருவன் கத்திக்கொண்டிருந்தான்.[37]

மீன்பாடு

வெகு நாட்களுக்குப் பிறகு இவ்வளவு பெரிய மீன்பாடு இருந்ததால் யாரும் யாரையும் தடுக்கவில்லை. அவரவர் இஷ்டத்திற்கு கைவிட்டு மீன் எடுத்துக்கொண்டிருந்தார்கள். ஆமந்துறையில் எல்லா வீடுகளிலும் அன்று இரவு

பாறைக் குழம்புதான். எல்லோரும் எடுத்துப் போன பின்பு மீன்கள் ஏலம் விடப்பட்டன. மொத்த மீன்களையும் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாய்க்கு ரத்னசாமி பண்டக சாலைக்காரர்களே எடுத்துக்கொண்டார்கள். பொதுவாகவே மடிமீன்களுக்கு ருசி அதிகம். காரணம் இவை பிடிபடும்போது ரத்தம் கக்குவதில்லை. ஆனால் நைலான் வலைகளில் மாட்டும்போது அவை ரத்தம் கக்கி விடுகின்றன. சீக்கிரம் பதம் இழந்து போய்விடுகின்றன. மடிகள் பருத்தி நூலால் முடியப்படுகின்றன. இதன் காரணமாகத்தான் இந்த மடிமீன்களுக்கு திருவனந்தபுரம், சங்கனாச்சேரி போன்ற கேரள பச்சைமீன் மார்க்கெட்டுகளில் மவுசு அதிகம். உலர்த்திக் கருவாடாக்கப்படும் மீன்களுக்குக்கூட சுவை அதிகமாகவே இருக்கும். மேசைக்காரர்களாகிப் போன எல்லோரும் இந்த மடிமீன் கொள்முதல் செய்து அதை உலர்த்தி கருவாடாக்கி கொழும்புச் சந்தைக்கு ஏற்றி பெரும் லாபம் சம்பாதித்தவர்கள்தான். ஆனால் கடலில் சிரமப்பட்டு மீன் பிடித்துவரும் கம்மரக்காரர்கள் ஏனோ இன்னும் சாதாரண மீன்படி ஏத்தனங்கள்கூட வாங்க வழியில்லாமல் இருக்கிறார்கள்.[38]

5. வசந்தா

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் பெண் பாத்திரம் வசந்தா. கிராமிய காதலை ரம்மியமாக இந்தப் பாத்திரத்தின் வழி ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

கோத்ரா பிள்ளையின் தங்கை மகள் வசந்தா. அவள் ஜஸ்டின் என்பவனைக் காதலிக்கிறாள். அந்த செய்தி இந்த நாவலில் இடம்பெறுகிறது. ஜஸ்டின் கலவரத்தால் தூண்டப்பட்டு கொலை செய்து விடுகிறான். இதனால் சிறைத் தண்டனைப் பெறுகிறான்.

வசந்தாவும் இன்று வளர்ந்து திருமண வயதைத் தாண்டி நிற்கிறாள். ஆனால் அன்னம்மா கொழும்பில் இருந்து வந்தபாடில்லை. கொழும்பிலிருந்து வந்துபோய் இருப்பவர்கள், அவளுக்கு அங்கு ஒரு சிங்களவரோடு திருமணம் முடிந்துவிட்டது என்றும் குழந்தைகள் இருக்கிறது என்றும் கதைகதையாகச் சொல்வார்கள். ஆனால் வசந்தா இன்னும் தன் தாயை ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தவாறே இருந்தாள். தன்னை இப்படித் தனியாகத் தவிக்க விட்டுவிட்டு அங்கு அப்படி என்ன வாழ்க்கை வேண்டிக் கிடக்கிறது என்று வசந்தா தன் தாயை நினைத்துப் புழுங்காத நாளே இல்லை.

''வசந்தா, அய்யாவ உள்ள போயி படுக்கச் சொல்லு. நா வரும்போதே பாத்தம் பாத்துக்க. முக்காடு போட்டுகிட்டு அங்கயும் இங்கயும் போறதும் வாறதுமாக் கெடக்கு. எனக்கு ஒண்ணுஞ் சரியாப்படல'' என்றவாறு கோத்ராப் பிள்ளை அவர் வீட்டிற்குள் சென்றார்.

கோத்ராவின் வீடு வியாகுலப்பிள்ளை வீட்டிற்கு அடுத்த வீடு. கோத்ராப் பிள்ளைக்கு திருமணம் முடிந்து பல வருடங்கள் ஆகியும் குழந்தையில்லை. ஆனால்

கோத்ராப் பிள்ளை தங்கையின் மூன்று பெண் குழந்தைகளையும் அவரும தோக்களத்தாளும்தான் வளர்த்தார்கள்.

பத்து வருடங்களுக்கு முன்னால் வந்த காலராவில் கோத்ராவின் தங்கை இறந்துவிட்டாள். அவள் கணவன் பிழைப்புக்காக கொழும்புக்குப் போனவன் திரும்பி வரவேயில்லை. மூன்றும் பெண் குழந்தைகளாய் இருந்ததால் அவற்றை வளர்க்கும் முழுப் பொறுப்பும் கோத்ரா, தோக்களத்தா மேல் இருந்தது.

"சவஞ் செத்தாப் பரவாயில்லன்னு மனசு கேக்க மாட்டங்குது. எவனயாவது இழுத்துகிட்டு ஓடிறலாமான்னு பாத்தா இந்த ஜஸ்டின் வேற ஒத்து வரமாட்டங்குறாம்.

திடீரென்று வெளிப்பட்ட இந்த வார்த்தைகளால் ஒரு நிமிடம் கோத்ராவிடம் இருந்து பேச்சே வரவில்லை. எழும்பி வசந்தா அருகில் வந்தவர், "சண்டைன்னு வந்தா கம்பெடுத்து கிட்டு முன்னால நிக்கிறானா! அவனா? அவனுக்கு உன்னய வுட வயசு கம்மியா இருக்கும!"

"அவுருட்ட கொஞ்சம் பேசுங்கண்ண."

"என்னத்தப் பேச?"

"இன்னா கெட்டிகிருறம், நாள கெட்டிகிருறம்னு ஏமாத்திக்கிட்டே இருக்காரு. இந்த சீசன் முடிஞ்சவுடன் கூட்டிட்டு போயிருறம்னு இதோட மூணு சீசம் முடிஞ்சாச்சி."

வசந்தா சொல்வதைக் கேட்டு வாயடைத்து நின்றார்கள். கோத்ராவும் தோக்களத்தாளும். திரும்பி அருகே தூண்களைப் பிடித்துக் கொண்டிருந்த பிள்ளைகளை உள்ளே போய்ப் படுக்கச் சொன்னாள் தோக்களத்தா.

இந்தப் பகுதியில் வசந்தாவின் 'காதல்' வாழ்வு வெளிப்படுகிறது.[39]

சப்பரம் தூக்குதல் - வழிபாடு

வசந்தா கடைக்கு முன்னே வந்தபோது நிறுத்தி பேச்சியும் வசந்தாவும் சப்பரம் தூக்கியவர்களுக்கு ஓடியோடி சர்பத் கொடுத்தார்கள்.

"அண்ண... சொந்த ஊரு கழுதவிள, ரெண்டு வருசமா காலு நடக்க முடியாம கஷ்டப்பட்டம். சரியாயிற்றா அய்யாவோட சப்பரத்த வந்து தூக்குறம்னு வேண்டிக்கிட்டம். சப்பரம் பொறப்புட்டதிலிருந்து கொஞ்சம் இடங்கிடக்காதான்னு அல்லாடுறம், கெடக்கில்லண்ண" என்றவாறு நடுத்தர வயது மதிக்கத்தக்க ஒருவர் மன்றாடிக்கொண்டு வந்தார். சப்பரத்திலிருந்து பிடியை யாரும் விடுவதாக இல்லை.

தூரத்திலிருந்தே இதைக் கவனித்து வந்த சிலுவை ''அண்ணாச்சி இங்க வாரும்'' என்றான்.

''நல்லாயிருப்பியய்யா.''

அந்தோனியாரின் சப்பரம் மானாப் பிள்ளை வீட்டை நெருங்கியது. தெரு முனையிலிருந்தே சீரியல் பல்புகள் போட்டு அலங்கரித்திருந்தார் லூக்காஸ். வீட்டின் தலைவாசலில் இரண்டு கம்புகள் கட்டி அதன் குறுக்காக ஒரு துளவையைக் கட்டி அதன் மேல் ஆறு தேங்காய் முறி விளக்குகள் ஏற்றியிருந்தார்கள். அமல்டா பாட்டிலில் இருந்து எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தாள். பாளையங்கோட்டை கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தவள் திருவிழாவுக்காக வந்திருந்தாள். அப்படியே அமலியின் சாயலில் அழகாக அமைதியாக இருந்தாள். பக்கத்தில் நின்ற அமலி கண்கள் பனிக்க புனிதரின் சுரூபத்தை வைத்த தன் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தாள். சப்பரம் கோவிலை நோக்கிச் சென்றது.[40]

ஊர் கமிட்டி – கட்டு மரப் போட்டி

ஆமந்துறையில் புதிதாக அமைந்திருந்த கமிட்டியில், ஊர் ஒற்றுமைக்காக விழா எடுக்க ஏற்பாடாகியிருந்தது. கடந்த ஒரு வாரமாக ஊரில் ஒரே விழாக் கோலாமாகவே இருந்தது. முதல் நாள் நடந்த கட்டுமரப் போட்டியில் மூன்று பிரிவாகப் பிரிந்து மேலத்தெரு, கீழத்தெரு, நடுத்தெரு என்று மரங்கள் தனித்தனித் தெருவாகப் போட்டியிட்டன. இன்று நடக்கும் இறுதிப் போட்டிக்குத் தயாராய் நின்றன. மேலத் தெருவில் இருந்து ஜெயித்த ஜஸ்டின் மரமும் நடுத்தெருவில் ஜெயித்த கோத்ராப் பிள்ளை மரமும் நடுத்தெருவில் இருந்து விசயன் மரமும் அணிவகுத்து நின்றன. இங்கிருந்து புறப்படும் மரங்கள் கிழக்காக ஓடி கூடுதுறையில் கரை பிடித்து அங்கு தரும் கொடியை சென்றதற்கு அடையாளமாக வாங்கிக்கொண்டு பிறகு ஆமந்துறை வந்து அடைய வேண்டும். அது கச்சான் காத்து வீசும் காலமாக இருந்ததால் வெலங்கு நோக்கி ஒரு ஓட்டு ஓடி பிறகு தட்டு வைத்து திரும்பி கூடுதுறை நோக்கி கரைவிட வேண்டும். பின் நேர் வெலங்க ஓடி திரும்பவும் தட்டி வைத்து ஆமந்துறை அடைய வேண்டும்.

போட்டியைப் பார்ப்பதற்காக ஆண்களும் பெண்களுமாக கடற்கரையில் கூடியிருந்தார்கள். ஆமந்துறையிலிருந்து புறப்பட்டபோது ஒன்றாகவே சென்ற மரங்கள் சிறிது தூரத்தில் பாய் வைத்தபோது அதன் ஓட்டங்கள் வேறுபட்டதால் முன்னும் பின்னுமாக ஓடின. இந்தப் பிராந்தியத்திலே தொம்மந்திரைக்கு இணையான திறமையான கடலோடி என்று பெயரெடுத்தவர் கோத்ராப் பிள்ளை. முதலில் பாய் புடைத்து ஓடிக்கொண்டிருந்த மரத்தில் கம்பீரமாக நின்றுகொண்டிருந்தார். இரண்டாவதாக ஓடிக்கொண்டிருந்தது விசயன் மரம். மூன்றாவதாக ஜஸ்டின் மரம். கடற்கரையில் குழுமியிருந்த பெண்கள் மத்தியில் ஜஸ்டினுக்கு பெரிய வரவேற்பு.

அந்த மூன்று மரத்திலும் பிந்தலையிலிருந்து மரத்தை ஓட்டியவர்களில் வயதில் மிகவும் சிறியவன் ஜஸ்டின்தான். இருபது வயது.

கடற்கரையில் தோக்களத்தாவோடு நின்று கடலையே பார்த்துக் கொண்டிருந்தாள் வசந்தா. மனதுக்குள் 'அந்தோணியாரே, ஜஸ்டின் ஜெயிக்க வேண்டும்' என்று மனமுருகி வேண்டிக்கொண்டிருந்தாள். வசந்தா நல்ல உயரம். நேர்த்தியான உடல்வாகு. செதுக்கிய சிற்பம் போல் அளந்து வைக்கப்பட்ட முன்னழகும் பின்னழகும் காண்போரைச் சுண்டி இழுக்கும் வசீகரமும். ஆனால் அந்த முகத்தில் எப்போதும் ஒரு சோகம். தனிமையில் ஏக்கம்.

ஜஸ்டின் அவளுக்கு தூரத்து முறைமாமன். அவளைவிட இரண்டு வயது இளையவன். ஆனாலும் கட்டுமுட்டு என்று இருந்த அவன் உடல்வாகு பெண்களை ஏங்க வைத்தது. முடிந்தவரை ஜஸ்டின் கண்களில் அடிக்கடி படுகிற விதமாகவே வசந்தா எப்போதும் நடந்துகொண்டாள்.

மானாப் பிள்ளை கோஷ்டியில் முன்னணி வீரன் ஜஸ்டின்தான். எந்தப் பெரிய கூட்டத்தையும் கையில் வேல் எடுத்துக்கொண்டு இரண்டாகப் பிளந்து புகுந்து விடுவான். மரண பயமே அவனுக்கு இல்லாதிருந்தது. சிறிய வயதிலேயே தந்தையை இழந்தவன். தாயின் பராமரிப்பிலேயே வளர்ந்தவன். பள்ளிப் படிப்பென்னவோ ஐந்து வரைதான். நசுரின் வாத்தியாருடன் சண்டை காரணமாக ஆறாம் வகுப்பைத் தொடராதவன். ஆனாலும் சிலம்பம், நாட்டுச் சண்டை, வாள் வீச்சு, வர்மம் என்று பல கலைகளில் தேர்ச்சி பெற்றிருந்தான். ஒத்த வீச்சு, படவீச்சு போன்ற சிலம்ப விளையாட்டுகளில் ஜஸ்டினை ஜெயிக்க அந்த பிராந்தியத்திலேயே ஆள்கள் யாரும் இல்லை. கேட்க ஆள் இல்லாத காரணத்தால் சின்ன வயதிலேயே குடிப்பழக்கம்.

தோழிகள்

மேரியும் வசந்தாவும் தோழிகளாய் இருந்ததால் இருவரும் ஒன்றாகவே கோவிலுக்குப் போவது, காட்டுக்குப் போவது என்றிருப்பார்கள். அப்போது அடிக்கடி ஜஸ்டின் பற்றி பேச்சு வரும். வசந்தாவிடம் எத்தனையோ முறை ஜஸ்டின் வயதில் சின்னவன் என்று மேரி எடுத்துக் கூறியிருந்தாள். அதனால் அதை ஏற்றுக்கொள்ளும் மனநிலையில் இல்லை வசந்தா 'இப்புடி மாஞ்சி மாஞ்சி அவன காதல் பண்ணுறிய... அவனுக்கு இது உண்மையான காதல்னா ஜஸ்டின சந்திக்கிறதுக்கு கண்டிப்பா ஒரு வாய்ப்பு வரும் எஎன்று மேரியிடம் அடித்துச் சொல்லியிருந்தாள். போதாக்குறைக்கு அவ்வப்போது நடக்கும் திருமண ஊர்வலங்களில் ஜஸ்டின் கம்பு வீசுவது கூட்டத்தைக் குதூகலிக்க வைத்தது. கூட்டத்தோடு கூட்டமாய் நின்று அவனையே ரசித்துக்கொண்டிருந்த வசந்தாவை உருக வைத்தது.

கூடுதுறையில் கொடி வாங்கிய மரங்கள் இப்போது முழுவீச்சில் ஆமந்துறையை நோக்கி வந்துகொண்டிருந்தன. கூட்டத்தில் சிலர் கோத்ராப் பிள்ளைதான் ஜெயிப்பார்

என்றும் இன்னும் சிலர் இந்த ஓட்டுக்கெல்லாம் விசயன் மரந்தான் லாயக்கு என்றும் பேசிக்கொண்டனர். சில பெருசுகள் விசயந்தான் ஜெயிப்பானென்றும் வாலிப செட்டுகள் ஜஸ்டின்தான் ஜெயிப்பானென்றும் 'ஏ', 'ஏ' என்று கடற்கரையில் நின்று காது கிழியும்படி கத்திக்கொண்டிருந்தார்கள்.

இப்போது முன்னால் வந்துகொண்டிருந்த கோத்ராப் பிள்ளை மரத்தில் பாய் மாற விழுந்ததில் அதன் அடுக்காக வந்துகொண்டிருந்த ஜஸ்டின் மரம் தாண்டி ஓடியது. ஜஸ்டின் மரத்துக்கு ஈடுகொடுத்து வந்து கொண்டிருந்தது விசயன் மரமும். இரண்டு மரங்களும் ஆழிக்கு சிறிது வெலங்கே வந்துவிட்டன. ஓரே நேர்கோட்டில் வருவதுபோல் வந்து கொண்டிருந்தன. என்ன நினைத்தானோ தெரியவில்லை. பிந்தலையில் நின்று கொண்டிருந்த ஜஸ்டின் தன் மரத்தில் பாயைத் தட்டச் சொன்னான். மரத்திலிருந்த மூன்று பேரும் மாற்றி மாற்றித் தொடுத்தார்கள். ஆனால் விசயன் மரம் பாய் ஓட்டிலேயே வந்து கொண்டிருந்தது. ஆழியில் பொங்கி வந்த ஒரு மாசாவை சரியாக பின்தலையில் வைத்து அமுக்கி விட்டான் ஜஸ்டின். மரம் சில்லி எடுத்துக்கொண்டு கரை வந்து சேர்ந்தது.

இந்தக் கடைசி வினாடிகளைப் பார்த்துக்கொண்டிருந்த வசந்தா மிகவும் பரவசப்பட்டுப் போனாள். உடலுமும் உணர்வும் பூரித்ததில் அவள் பருத்த தனங்கள் மேலும் கீழும் ஏறி இறங்கிக்கொண்டிருந்தன. முகமெல்லாம் ரத்தமேறிச் சிவந்தது. ஜஸ்டினுக்கே இல்லாத சந்தோஷம் அவளுக்கு. பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மேரியைக் கட்டிப் பிடித்துத் தூக்கி 'ச்' என்று கன்னத்தில் ஒரு முத்தம் கொடுத்தாள்.

மரத்திலிருந்து இறங்கிய ஜஸ்டின் ஒரு குட்டி ராஜாவைப்போல் நடந்து வந்தான். கூட்டத்தில் பெண்கள் எல்லோரும் தன்னையே பார்த்துக் கொண்டிருந்தாலும் அங்கு தன்னையே நினைத்து ஏங்கி தான் ஜெபிப்பதற்காக உருகி நின்ற அந்த உயிர்த்துடிப்புள்ள விழிகளையும் ஒருமுறை பார்த்துவிட்டு நடந்தான்.[41]

6. எஸ்கலின் - கில்பர்ட் காதல்

இந்த நாவலில் எஸ்கலின்-கில்பர்ட் காதல் மற்றும் மணம் குறித்த செய்தியும் இடம்பெறுகிறது. இது ஆழி சூழ் நாவலில் இடம்பெறும் மற்றொரு காதல் ஜோடி.

எஸ்கலின் என்றாலே கோத்ராவுக்கு மிகவும் பிடிக்கும். கோத்ராவின் மனைவி தோக்களத்தா தொம்மந்திரைக்கு தூரத்து உறவு. கோத்ராப் பிள்ளை தொம்மந்திரையார் வீட்டிற்கு வரப்போக இருந்தார். நடுத்தெருவில் இருந்து படிக்க வெளியூர் போனது எஸ்கலின் மட்டும் தான். இப்போது வாத்திச்சி வேலைக்கு வேறு எஸ்கலின் படித்து விட்டதால் நல்ல ஒரு மாப்பிள்ளை கிடைக்க வேண்டுமே என்று தொம்மந்திரையாரைவிட கோத்ரா மிகவும் கரிசனையோடு இருந்தார். ஒருநாள் தற்செயலாக வீட்டுக்கு வந்த கோத்ரா தொம்மந்திரையாரும். தோனா மொவளும் பேசிக்கொண்டதைக் கேட்டு மிகவும் நொந்து போனார்.

கில்பர்ட் ஏற்கனவே தன் சித்தி தோனா மொவளிடம் காலைப் பிடித்துக் கெஞ்சியிருந்தான். எஸ்கலின் இல்லாமல் வாழ்க்கையில்லை என்று மறுகியிருந்தான். தான் சாமியாருக்குப் படித்துக்கொண்டிருக்கும் போதே எஸ்கலினை அடிக்கடி போய்ப் பார்த்ததாகவும் அவளோடு குடும்பம் நடத்தி வாழ்வதற்காகவே தான் துறவறத்தை கைவிட்டு வந்ததாகவும் கை மேலடித்து சத்தியம் செய்தான்.

ஒருநாள் தற்செயலாய் தூத்துக்குடியிலிருந்து ஊருக்கு வரும்போது எஸ்கலினைப் பார்த்திருக்கிறான். அன்றிலிருந்து அவனுக்கு துறவறத்தின் மேல் இருந்த ஆசை போய்விட்டது. எஸ்கலினை எப்படியும் அடைந்தே தீருவது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைந்தான். அடிக்கடி அவளை சித்தி மகள் என்ற சலுகையில் சந்தித்தான். தீடீரென்று ஒருநாள் தன் காதலைச் சொன்னபோது எஸ்கலின் கதிகலங்கிப் போனாள். அவளை மீண்டும் மீண்டும் சந்தித்து எப்படியோ மயக்கி சம்மதிக்கவும் வைத்தான். அக்கம்பக்கத்தில் படித்து வேலைக்குப் போன ஆள் என்று கில்பர்ட் மட்டும்தான் இருந்தான்.

இந்தா வாறன் என்றவாறே தொம்மந்திரை முன்னால் வந்து நின்றாள். எஸ்கலின் நல்ல கோதுமை நிறம். நெற்றியில் வகிடெடுத்து சீவிச் சிவப்புக் பொட்டு வைத்துக்கொண்டு அழகாக இருந்தாள்.

தொம்மந்திரையிடம் ஏதாவது கேட்டுப் பெறுவது என்றால் அது எஸ்கலின் மூலமாக மிகச் சுலபமாக நடந்துவிடும் என்று நடுத்தெருவில் எல்லோருக்கும் தெரிந்திருந்தது. அத்தனை கொள்ளை பிரியம் அவருக்கு தன் தலை மூத்த மகள் மீது. தோனா மொவளும் இந்தப் பாசத்தில் இதுவரை குறுக்கிட்டதேயில்லை. மற்றப் பிள்ளைகளைவிட எஸ்கலினுக்கு அவளது கவனிப்பு ஒரு பங்கு அதிகம்தான். எஸ்கலினும் தோனா மொவளிடம் மரியாதை தப்பி நடந்ததேயில்லை. அம்மா என்ற வார்த்தைக்கு மறு வார்த்தையே கிடையாது. தம்பி தங்கையரும் அக்காவுக்குத் தனி மரியாதை கொடுத்தார்கள். மொத்தத்தில் தொம்மந்திரை வீட்டில் எஸ்கலின் வைத்ததுதான் சட்டம். அவள்தான் செல்லப்பிள்ளை. ஆனால் இந்த பாசப் பிணைப்பு அகன்றுவிடாமல் இருப்பதற்காக மிகத் தன்மையோடும் பாசத்தோடும் அக்காவுக்குரிய பொறுப்போடும் நடந்து வந்தாள் எஸ்கலின்.

கப்பலில் வேலையை முடித்துக்கொண்டு வந்தான் கில்பர்ட். அங்கே கப்பலில் செய்வது கரல் சுரண்டுவதும் தீந்தை அடிப்பதும் தான். ஆனால் இங்கு ஆமந்துறையில் விடும் கதையோ தான் கப்பலில் கேப்டனாக இருப்பதாக. அந்தஸ்தை பொறுத்தவரையில் செட்டியாரங் குடும்பம் எங்கோ உயரத்திலும் கில்பர்ட்டின் குடும்பம் படுகுழியிலும் கிடந்தது. சித்தி வீட்டில் பழியாகக் கிடந்து சித்தியை வைத்து தொம்மந்திரையாளரின் மனத்தையும் மாற்றினான். எதற்கும் அசைந்து கொடுக்காத அவர் இறுதியில் மனைவிக்காவும் மகளுக்கும் இதில் விருப்பம் இருக்கிறது என்று அறிந்ததாலும் விட்டுக்கொடுத்தார்.[42]

கில்பர்ட் - எஸ்கலின் வாழ்க்கை

இத்தனை வருடங்கால சண்டை சச்சரவுகளுக்குப் பிறகும்கூட கில்பர்ட் மனதளவில் மாறியதாகத் தெரியவில்லை. ஊருக்கு யோக்கியனாகத் தெரியும் கில்பர்ட் ஒரு முழு நேரக் குடிகாரன். எப்போதும் வாயில் சிகரெட் புகைந்து கொண்டே இருக்கும். கப்பலில் இருந்து வந்தால் கிடையெல்லாம் தம்பி வீட்டில்தான். சில நாள்களில் காலையில் ஆறு மணிக்குப் போகிறவருக்கு பொழுது அடைந்தும் அங்கேதான் கிடப்பு. பிள்ளைகளை இரண்டு மூன்று மறை எஸ்கலின் விட்டு தண்டா பண்ணிய பிறகுதான் வீட்டிற்கு வருவார்.

மூன்று பிள்ளைகளையும் வளர்த்திருந்தாள் எஸ்கலின். இந்தப் பிள்ளைகளை வளர்ப்பதற்கு அவள் பட்டபாடு அந்த கடவுளுக்குத்தான் தெரியும். உள்ளூர் பள்ளியில் வேலையில்லாமல் போனதால் பக்கத்து ஊர்களுக்கு நடந்துபோய் வேலை செய்துவிட்டு வரவேண்டும். எங்கும் நிரந்தரப் பணி கிடைக்கவில்லை. தம்பி மரியதாஸ் முடிந்தவரை அக்காவை சைக்கிளில் வைத்து கூட்டிக்கொண்டு போய் சோதிக்காவிளையில் விட்டு வருவான். மாலையில் எஸ்காலின் அங்கிருந்து தனியே அந்தக் காட்டு வழியே நடந்து வருவாள். மாலை நேரங்களில் வந்து தன்னிடம் இருந்த தையல் மிஷினை வைத்து பக்கத்தில் உள்ளவர்களுக்கு ரவிக்கை, கவுன் தைத்துக் கொடுத்து ஜீவனம் நடத்தி வந்தாள். ஒருவழியாக கில்பர்ட் வீடு மற்றும் சொத்துகளை எழுதிக் கொடுத்த பிறகு தாய் தம்பி குடும்பத்திடமிருந்து தனித்து விடப்பட்டான்.

அதன் பிறகு எஸ்கலின் வடக்குத் தெருவில் பிரகாசி வாங்கிக் கொடுத்த ஒரு சிறிய நிலத்தில் சிறியதாக ஒரு குடிசை கெட்டி வாழ ஆரம்பித்திருந்தாள். கப்பலில் சம்பாதித்த பணம் ஒழுங்காக வீட்டிற்கு வருவதேயில்லை. அங்கு குடி கும்மாளம் என்று பணத்தை எல்லாம் அழித்துவிட்டு எஞ்சிய சிறு தொகையை மட்டும் பொக்கிஷம் போல் கில்பர்ட் கொண்டுவந்து எஸ்கலினிடம் கொடுத்தான்.

எழுபதுகளின் தொடக்கத்தில் இறால் மீன்களுக்கு மவுசு இன்னும் கூட ஆரம்பித்திருந்தது. எக்ஸ்போர்ட் கம்பெனிகள் வந்து இறால் எடுக்க ஆரம்பித்தார்கள். எஸ்கலின் தான் சேமித்து வைத்திருந்த சிறிய தொகையை கட்டுவைக்குப் பிடித்திருந்தாள். கட்டுவைக்காரர்களிடம் இருந்து வாங்கி அவற்றை இறால் கம்பெனிகளுக்குக் கொடுப்பதன் மூலம் கணிசமான தொகை கிடைத்தது. எஸ்கலின் கையில் பணம் ஓரளவு புரள ஆரம்பித்திருந்தது.[43]

7. காகு சாமியார்

இவர் நாவலில் இடம்பெறும், உண்மையான இறைத் தொண்டினை மேற்கொண்டு சமூகப் பணியும் செய்து கிராமிய மக்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் சாமியார்.

மீனவ மக்களின் வாழ்க்கைக்கு சமயமும் அவர்கள் சார்ந்த திருச்சபையும் பெரும்பங்கு வகிக்கின்றனர். அதிலும் குறிப்பாக கிறிஸ்தவ ஆலயங்களில் பணிபுரியும் பங்கு தந்தையின் பணி அளப்பரியது. சான்றாக,

"காகு சாமியார் நல்ல கோதுமை நிறம். ஒளி வீசும் கண்கள் முகத்தில் சாந்தம் குடிகொண்டிருந்தது. கருணையே உருவாய் கனிவோடு அமர்ந்திருந்தார். கதரிலே வெள்ளை அங்கியும் இடுப்பில் சிவப்புக் கச்சையும் கழுத்தில் உத்தரியமுமாய் காட்சியளித்தார்.

அவர் பங்குக் குருவாய் ஆமந்துறை வந்து சேர்ந்திருந்த ஒரு வருடத்தில் யாருமே அவருக்கு எதிர்ப்பேச்சு பேசத் துணியவில்லை. மற்ற சாமிமார்களிடம் இருந்த நரித்தனம் இவரிடம் எள்ளளவும் இல்லை. பிரச்சினைகளைப் பேசி முடிப்பதில் ஆர்வம் கொண்டிருந்தார். பெண்கள் ஊர் கிணற்றில் வாளி கொண்டுபோய் தண்ணீர் எடுப்பது, தலையில் முக்காடு போட்டு கோவிலுக்கு வருவது முதல் வரி பிரிப்பது வரை ஊரில் அனைத்தையும் முறைப்படுத்தி கட்டுப்பாடாக்கியிருந்தார்.

திருச்சபையை வளர்ப்பதுவே அவரது பிரதான பணியாய் இருந்தாலும் சமூகப்பணியின் மூலமே திருச்சபை விசுவாசத்தை வளர்க்கமுடியும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லாதவராய் இருந்தார். மக்கள் நலன் சம்பந்தப்பட்டு ஊரில் அதிகம் மாற்றங்கள் கொண்டு வந்தார். ஆமந்துறையில் பெருகியிருந்த விதவைகளின் மறுமணத்தை ஊக்குவித்தார். மனைவியை இழந்த ஆண்களுக்கும் மறுமணம் புரிய தக்க சமயத்தில் உதவினார். முடிந்தவரை ஊரைவிட்டு வெளியே செல்லாமல் அந்த மக்களோடு மக்களாய் அவர்களின் சுகதுக்கங்களில் சகோதர பாசத்தோடு கலந்துகொண்டார்.[44]

பஞ்சம் போக்குதல்

பஞ்சகாலங்களில் மக்கள் பசியைப் போக்கியவர் காகு சாமியார். கோடைநேரங்களில் கடலில் மச்சமே இல்லாமல் பஞ்சம் தலை விரித்தாடும்போது மக்கள் வாழைக்குத்தியையும் திருக்கை கருவாட்டையும் நம்பித்தான் வாழ்ந்தார்கள். காகு சாமியார் வந்த பிறகு நாகர்கோவில் பக்கமிருந்து மரவள்ளிகிழங்குச் செடிகளை கொண்டு வரச்சொல்லி அதன் பயன்பாட்டை விளக்கி பக்கத்துத் தோட்டங்களில் பயிரிட்டு இந்த மக்களின் கோடைப்பசியை ஓரளவு தீர்த்தார். மேற்றி ராசனத்தில் ஆயரிடம் பேசி மக்களுக்கு மஞ்ச மாவும் அரைக் கோதுமையும் கிடைக்க ஏற்பாடு செய்தார்.

ஒருசில வீடுகளில் பனங்கொட்டைகளை முளைக்கவிட்டு வளர்ந்த கிழங்குகளைப் பிடுங்கிக் காயப்போட்டு வைத்திருப்பார்கள். அதை வத்துலும், சீரகமும் உப்பும் சேர்த்து இடித்து உருண்டை பிடித்துச் சாப்பிடுவார்கள்.

காகு சாமியாரின் காலை உணவு அவித்த கொண்டக் கடலையும் கொஞ்சம் தேனும் நீத்துப்பாகமும்தான். மத்தியானம் தவிடும் கருப்பட்டியும். மாலை நேரங்களில் வெள்ளைப் பூண்டைச் சுட்டு தோல் உரித்துச் சாப்பிடுவார்.[45]

ஆலய வழிபாடு

கிறிஸ்தவ ஆலய வழிபாட்டு முறை பற்றிய செய்தி இங்கே பதிவு செய்யப்படுகிறது.

"துப்பாசி, முன்னால லக்தீன்லதாம் பூசை வைப்பானுவ. இவன்வ என்ன சொல்றானுவ, செவம் படிக்கிறானுவளா அல்லது ஏதாவது உளறுறானுவளான்னுகூட யாருக்குந் தெரியாது."

"அதாம் நம் ஊர்ல முன்னால இருந்த சாமியார பத்தி ஒரு கத ஒண்ணு சொல்லுவாவள."

"யாரு காகு சாமி பத்தியா!"

"காகு சாமியெல்லாம் சாமியாரே இல்ல, தெய்வம், கோயில் கெட்டித்தாம் கும்புடணும். நாஞ் சொல்றது அவுர இல்ல, அவுருக்கு பொறவு வந்தாரே அவுரப் பத்தி..."

காகு சாமியாருக்குப் பிறகு புதிதாக வந்த அல்போன்சு என்ற சாமியார் ஊரில் தங்குவதேயில்லை. எப்போதும் தூத்துக்குடியில்தான் கிடை. எப்போதாவது ஆமந்துறை வருபவர். புரியாத லத்தீன் மொழியில் பூசை வைப்பதால் சீசப்பிள்ளையோடு அவர் பேச வேண்டியது வந்தாலும் பூசை நடக்கும்போதே அதையும் ஏற்ற இறக்கமாகப் பேசி சுற்றி நிற்கும் முட்டாள் சனங்களை இவர் ஏதோ தேவ ஸ்துதி பண்ணுகிறார் என்று விழுந்து விழுந்து கும்பிட வைத்தார்.

"சீசப்புள்ள, எத்தனை முயல் கொண்டுவந்தீர்?"

"பூச நடந்துகிற்று இருக்கிம் போதா" என்றார் துப்பாசியார்

"நாம் பொய்யா சொல்லறம் துப்பாசியார?"

"நிசந்தாம்ல, ஞாயிற்றுகிழம பூசயில முயல் வேட்டைக்கி போவச் சொன்ன சீசப்புள்ள வந்திற்றார, பூச முடிஞ்ச பொறவு கேட்டுக் கிருலாம்னு கூட பொறுமை கெடயாது. இப்புடி நடக்குற பூசயில சேசுநாதர் நற்கருணையில் எங்கருந்து இறங்க!"

"எத்தனை முயல் கொண்டு வந்தீர்?"

"ரண்டு முயல் சாமி."

"ஒன் கறியல், ஒன் பொரியல் ஆமென்."

.இந்த நாவலில் காகு சாமியார், அல்போன்சு என இரண்டு சாமியார்களைப் பற்றிய செய்திகள் இடம்பெறுகின்றன.[46]

8. சுயம்பு

கோவில்பட்டி வியாபாரி ரத்தினசாமி நாடாரின் மகன்தான் இந்த சுயம்பு. அவருடன் வியாபாரத்தில் துணை நிற்பவன்.

தன் மகனுக்கும் இந்த கடற்துறைகளில் அனுபவமும் பழக்கமும் ஏற்படட்டும் என்று ரத்னசாமி கோவில்பட்டியிலேயே இருந்து வியாபாரத்தை கவனித்தார். ஆனாலும் சமீபகாலமாக வியாபாரத்தில் பொறுப்பெடுத்தவுடன் கடற்துறைகளில் கொள்முதல் மட்டுமல்லாமல் பண்டகசாலைக் கட்டுவதிலும், ஐஸ் பேக்டரிகள் கட்டுவதிலும் சுயம்பு ஆர்வம் காட்டினான். சிறுவயதிலேயே தந்தையாரின் கஷ்டத்தையும் அவர் ஒரு பைசா இரண்டு பைசாவையும் கணக்குப் பார்த்து சேமித்ததையும் ரவ்வும்பகலும் மாடாய் உழைத்ததையும் அறிவான் சுயம்பு. தந்தையார் வியாபாரத்தில் அனுசரணையாக நடந்து கொண்டிருந்ததையும் கண்கூடாகப் பார்த்திருந்ததால் சுயம்பு வளர்ந்தவுடன் தந்தையின் தோளோடு தோள் நின்றான். மகனின் பொறுப்பு, அக்கறை, ஆர்வம் இவற்றைக் கண்டுகொண்டதால் ரத்னசாமி தன் மகன் செய்யும் வியாபாரத்தை தள்ளி நின்று ரசித்து வந்தார்.

சுயம்பு கடையில் கல்லாவில் அமர்ந்து வியாபாரம் பேசுவதே தனி அழகுதான். கடற்துறைகளில் தந்தைக்கு இணையான மரியாதை சுயம்புக்குக் கிடைத்தது. கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் அதிக அக்கறை காட்டினான். நஷ்டப்பட்டாலும் கொள்முதல் பணப் பட்டுவாடாவை குறிப்பிட்ட தினத்தில் செய்து கடற்துறை மக்களின் மதிப்பை பெற்றிருந்தான் சுயம்பு. தெற்கே எல்லாப் பெரிய கடற்துறைகளிலும் பண்டகசாலைகள் வைத்தாகிவிட்டது. தூத்துக்குடியிலிருந்து கொழும்புக்கு சம்பை ஏற்றுமதி செய்ய வேண்டும் என்பதே அடுத்த குறிக்கோள்.[47]

9. கன்னியாஸ்திரி ரெஜிஸ்மேரி

முதல் உலகப்போர் 1914-1918ஆம் ஆண்டு நடந்தது. அதனை நாவலில் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

அன்று காலையில் பூசை முடிந்தபின் காகு சாமியாரைச் சந்தித்த ரெஜிஸ்மேரி சிஸ்டர், தோனா மொவள் பிரகாசி பற்றியும் அவளின் தனிமை பற்றியும் தொம்மந்திரையின் இன்றைய நிலை பற்றியும் குழந்தையை வளர்க்க அவர்கள் படும் கஷ்டத்தை பற்றியும் விரிவாகச் சொன்னார்.

முதல் உலகப் போரில் குடும்பத்தினர் அனைவரையுமே ஜெர்மானிய குண்டு வீச்சுக்கு பலி கொடுத்துவிட்டு தனியாய் நிர்க்கதியாய் நின்றபோது பங்குக் குரு பெர்டினான்டின் தூண்டுதல் பேரில் கன்னியாஸ்திரியாகி பின் சேவை செய்வதற்காக பிரான்சிலிருந்து இந்தியா வந்தவர் ரெஜிஸ் மேரி. ஆமந்துறை கன்னியர் மடத்தின் நிர்வாகம் அவரிடம்தான் இருந்தது.

எல்லாவற்றையும் கவனமாகக் கேட்ட காகு சாமியார், ''சிஸ்டர் இந்த விசயமா நானே ஒங்ககிட்ட பேசனுமின்னு இருந்தம். இப்ப நீங்களே அதே விசயத்த வந்து சொல்லுறிய. இதுதாம் கடவுள் சித்தங்கிறது... இதக்கு பிரகாசி சம்மதிப்பாளா?... என்றார்.

''அவளுக்கும் வாழ்க்கைக்கு வேற ஆதாரமே இல்லியே பாதர்.''

''சரி, நா பேசிப் பாக்குறம்'' என்றார்.

இப்போதெல்லாம் எஸ்கலினை ரெஜிஸ்மேரி நேரம் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துப் போய்விடுவார்கள். அவர் தமிழ் பேசுவது விநோதமாக இருக்கும். 'ஆமண்ட்ரை' என்றுதான் சொல்வார். எஸ்கலின் இங்கிலீஸ் பாட்டெல்லாம் அவரிடம் கற்றுக்கொண்டு வீட்டில் வந்து சத்தம் போட்டுப் பாடிக்கொண்டிருப்பாள். அவர்களுக்கு என்னவோ அந்தக் குழந்தைமேல் அவ்வளவு கரிசனம். உன் மம்மி இருந்தா அப்புடித் தருவா இப்புடித் தருவா என்று அதையும் இதையும் மற்ற கன்னியாஸ்திரீகளுக்கு தெரியாமல் தருவார். எஸ்கலின் ஒண்ணாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தாள். ஓய்வு நேரங்களில் அங்கு வரப்போக இருந்த தோனா மொவளுக்கு எஸ்கலினை மிகவும் பிடித்துப் போய்விட்டது. தோனா மொவள் அடிக்கடி கன்னியாஸ்திரி மடத்துக்கு வந்து ஒஸ்தி சுடுவதிலும் கோயிலுக்காக பூக்கள் ஜோடனை செய்வதிலும் உதவியாக இருந்தாள்.[48]

10. இருட்டியார்

மேற்கே தேரியில் தனியாக அமைந்திருந்தது இருட்டியார் வீடு. காரை வீடாக இருந்தாலும் தென்னந்தட்டிக் கூரைதான். யாருமே அந்த வீட்டுப் பக்கம் போகவே பயப்படுவார்கள். அடிக்கடி இந்த வீட்டிலிருந்து உடுக்கைச் சத்தமும் ஏதாவது முனகல் சத்தமும் கேட்டுக் கொண்டே இருக்கும்.

இருட்டியாரின் தகப்பனார் காலத்திலிருந்தே பிள்ளைகளுக்கு கொறிக்கு பார்ப்பதுண்டு. யாருக்காவது பாம்பு கடித்துவிட்டால் அல்லது திருக்கை முள் குத்திவிட்டால் வலி பொறுக்காமல் துடிப்பவர்களை இருட்டியார் வீட்டின் முற்றத்தில் கூட்டிப்போய் வைத்துக்கொண்டு குரல் கொடுப்பார்கள். இருட்டியார் வெளியில் வந்து 'பார்வை' பார்ப்பார். ஊரில் பாவைக்கூத்து நடக்கும்போது மழை விழுந்தால் அந்தக் கூத்து முடியும்வரை மழையைக் கட்டுப்படுத்துவார். இதை அவர் கடலில் ஓடும் நீவாடுகளைப் பிடித்து மாற்றிவிடுவதன் மூலம் செய்வதாகப் பேசிக்கொள்வார்கள்.

இருட்டியார் மலையாளத்தில் மாந்த்ரீகம் படித்ததாகவும் ஏற்கனவே பரம்பரையாக அவர்களுடைய தாத்தா காலத்திலிருந்தே காப்பாற்றப்பட்ட சிலை ஒன்றை அவர் வைத்திருந்தது பூஜை செய்வதாகவும் கதை கதையாய்ப் பேசுவார்கள்.

மாந்த்ரீகத்தோடு நாட்டு அடிமுறைகளும் வர்மமும் தெரிந்து வைத்திருந்தார். கடலில் யாருக்காவது ஆழிமேல் அடிபட்டு மூச்சில்லாமல் கொண்டுவரப்பட்டால் ஒரே தட்டில் மூச்சுவர வைத்து விடுவார். வர்மத்தில் யாராவது அடிபட்டு வந்தாலும் அதற்குரிய வைத்தியம் பார்த்துவிடுவார். ஊரில் செய்வினை போன்ற விசயங்கள் யார் வீட்டிலிருந்தாலும் அதை எடுப்பதற்கு இருட்டியாரே அழைக்கப்படுவார். இதன் காரணமாக கடற்துறைகள் முழுவதற்கும் இருட்டியாரையும் அவர் குடும்பத்தையும் அவர்கள் செய்யும் தொழிலையும் ஏற்கனவே தெரிந்திருந்தது.

ஒருமுறை சில்லிப்பாறில் தூண்டிலில் மீன் பிடித்துக்கொண்டிருந்த அவருடைய மச்சானிடம் ''ஏதாவது கறிக்கு மீன் இருந்தா கொடு'' என்று கேட்டாராம். அவர் ஏற்கனவே பிடித்து வைத்திருந்த மதனக்குட்டியை மறைத்து ''இல்லை'' என்றிருக்கிறார். ''அப்படியா'' என்றபடி இருட்டியார் போய்விட்டாராம். அவர் போனபிறகு மெதுவாகக் கரை வந்த அவரின் மைத்துனரை வேகமாக வந்த ஒரு அலை கீழே விழ வைத்திருக்கிறது. எழும்பியபோது மடியில் மதனம் இல்லை. வருத்தத்தோடு வீட்டிற்கு வந்தவர் ''மீன் ஒண்ணும் படயில்ல. ரசம் வையி'' என்று சொல்லிவிட்டு தோப்புக் கிணற்றில் குளித்துவிட்டு வந்திருக்கிறார். அங்கே அவருக்காக அருமையான மதனக்குட்டி மீன் குழம்பு தயாராக இருந்தது. ''இது ஏது'' என்று கேட்க, ''அண்ணன் வீட்டில் இருந்து வந்துச்சி'' என்று அவர் மனைவி சொன்னாளாம். வேண்டுமென்றே மதனக்குட்டியின் தலைப்பாகத்தை குழம்பில் போட்டு அனுப்பியிருந்தார் இருட்டியார். பிறகு இருட்டியாரிடம் அவர் மச்சான் பொய் பேசுவதேயில்லை.

அந்த காலத்தில் இருட்டியார் தாத்தா கடலுக்குள் சென்று கடை வைத்ததாகவும் அந்தக் கடையில் அதே சமயத்தில் ஊரில் வாழ்ந்த தல்மெய்தா என்பவர் போய் சாமான் வாங்கியதாகவும் கதை கதையாய்ச் சொல்கிறார்கள். தல்மெய்தாவும் சிறிதும் சளைத்தவர் அல்ல. அவர் ஏதோ முனியிடம் வரம் பெற்றவர் என்றும் நாட்டு அடிமுறை, வர்மம், வர்மானியம் முதலியவற்றில் மிகவும் தேர்ச்சியடைந்தவர் என்றும் பேச்சு. பிற்காலத்தில் தல்மெய்தா சென்னைக்கு சென்று அங்கே அடிமுறை மற்றும் சிலம்பப் பயிற்சி அளித்தாரென்றும் அந்தக் காலத்தில் பிரபல பயில்வான்கள் இவரிடம் சண்டைப் பயிற்சி, சுருள்வாள் வீச்சு முதலியவை சுற்றார்கள் என்றம் கதை சொல்கிறார்கள். வெயில் காலங்களில் வெளியில் போகும்போது தல்மெய்தா தன் தோளில் கிடக்கும் துண்டை உதறித் தலைக்குமேல் விடுவாராம். அது குடைபோல அவரோடே வருமாம்.

கடல் வறண்டு போனதற்கு முழுக் காரணம் இருட்டியார்தான் என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்தது. போதாக்குறைக்கு கடந்த வெள்ளிக்கிழமை இரவு

பன்னிரண்டு மணிக்குமேல் அந்தோனியார் கோவில் பின்புறம் நின்றுகொண்டு கடலைப் பார்த்து ஏதோ செய்து கொண்டிருந்ததாகவும் கையில் வைத்திருந்த சிலையை வைத்து யாரையோ ‘‘போ.. கடலுக்குப் போ’’ என்று இருட்டியார் விரட்டியதாகவும் ஊர் முழுவதும் வேளமாய்க் கிடந்தது.

வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட்டிருப்பது அவர்கள் குடும்ப விசயம் அதற்காக ஊர் மக்களைப் பழி வாங்குவதென்பது யாருக்கும் பிடிக்கவில்லை. கமிட்டியிலிருந்து இருமுறை ஆள் அனுப்பி பேசிப் பார்த்தார்கள். எதற்குமே அவர் அசைந்ததாய் தெரியவில்லை. அவர் கோபம் அடங்கியதாகவும் தெரியவில்லை.

பொறுத்துப் பொறுத்துப் பார்த்த மக்களின் பொறுமையின் எல்லை கடந்து அன்று இருட்டியார் வீட்டு முன்னால் கோபாவேசமாகக் கூடியிருந்தார்கள். எல்லோர் முகத்திலும் வெறியிருந்தது.

மக்கள் இருட்டியார் வீட்டை நோக்கி ஓடுவதைக் கேள்விப்பட்ட காகு சாமியார் ஏதாவது விபரீதம் நடந்து விடக்கூடாது என்பதற்காக ஓட்டமும் நடையுமாக மேலத் தெருவுக்கு வந்து சேர்ந்தார். மக்களுக்கு இருந்த ஆவேசத்தில் இப்போது இருட்டியார் வெளியே வந்தால் அடித்துக் கொன்றுவிடுவார்கள் போல இருந்தது.

சாமியாரைக் கண்டவுடன் கூட்டம் சற்றுப் பின்வாங்கியது. ஏற்கனவே இருட்டியாரைப் பற்றி அதிகமாகவே கேள்விப்பட்டிருந்தார். சனங்களுடன் அவரை சமாதானப்படுத்தி வைக்கலாம் என்று காகு சாமியார் வீட்டிற்குள் சென்றார். உள்ளே போனவர் சிறிது நேரமாகியும் திரும்பவில்லை.

உள்ளே அவர் கண்ட காட்சி துறவியான அவரையே உறைய வைத்தது. இருட்டியார் தூக்கில் தொங்கிக்கொண்டிருந்தார். நிச்சயமாக இந்த சனங்கள் உள்ளே வந்தால் அங்கு இருக்கும் சிலைகளையும் பூஜை சாமான்களையும் பார்த்தால் தன்னை உயிரோடு விடமாட்டர்கள் என்று நினைத்திருப்பாரோ என்னவோ, மோட்டுச் சட்டத்தில் கயிறு போட்டுத் தூக்கில் தொங்கினார்.

எத்தனையோ முறை அடிபட்டு வந்தவர்களைக் காப்பாற்றியிருக்கிறார். திருக்கை முள் குத்தியவர்களுக்கு பார்வை பார்த்திருக்கிறார். ஆனாலும் தொழில் இல்லாமல் வயிறு காய்கிறபோது இம்மக்களின் உணர்ச்சி எல்லை மீறி விடுகிறது.[49]

11. சூசை - மேரி சிலுவைக் கலியாணம்

சிலுவைக் கலியாணம் என்பது காதலித்து பெரியவர்களுக்குத் தெரியாமல் வாழ்க்கை அமைத்துக் கொண்டவர்களை மன்னித்து இரவு நேரங்களில் கோவிலில் வைத்து மந்திரித்து அவர்களின் திருமணத்தை திருச்சபை ஒத்துக்கொள்ளும் ஒரு சடங்கு. வழக்கத்திற்கு மாறாக நடப்பதால் தண்டனையாக இருவர் கையிலும் சடங்கு

முடியும்வரை தனித்தனியாக சிலுவை கொடுக்கப்பட்டிருக்கும். பெரும்பாலும் இது யாருக்கும் தெரியாமல் இரவிலேயே நடக்கும்.

ஞாயிற்றுக்கிழமை இரவு சூசை, மேரி தவிர தொம்மந்திரையாரும். கோத்ராப் பிள்ளையும் தோக்களத்தாவும் கோவிலில் இருந்தார்கள். சிலுவைக் கலியாணமாதலால் எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துக்கொடுத்தார் பங்குச் சாமியார். சாட்சியாக கோத்ராப் பிள்ளையும் தொம்மந்திரையாரும் கையெழுத்துப் போட்டார்கள்.

கோத்ராப் பிள்ளை கொடிமரத்துப் பக்கத்தில் இருந்த தன்னுடைய வீட்டில் சூசையை மனைவியோடு வாழ அனுமதித்தார். ''சூச ரண்டாவது புள்ள கலியாணத்துக்கு இந்த வீடு வித்திறலாமுன்னு இருக்கம். யாருட்டயும் குடுக்க விருப்பமில்ல. ஒரு வெலயப் போட்டு நீயே கொஞ்சம் கொஞ்சமாத் தந்துருஇ அவ கலியாணத்த முடிச்சிருவம்.[50]

சுந்தரி டீச்சர் - சூசை உறவு

நாவலாசிரியர் இந்த இருவர் வழி முறையற்ற உறவு ஒன்றை இங்கே பதிவு செய்கிறார்.

'டீச்சர்... டீச்சர்...'' எனச் சூசை வளவுக் கதவைத் தட்டினான். வழக்கமாக இறால் எடுப்பதற்காக எல்லோர் வீட்டிலும் வளவுக் கதவு வழியாகப் புழங்குவது வழக்கம். எல்லா வசதியானவர்கள் வீடுகளைப் போலவே சுந்தரி டீச்சர் வீட்டிலும் கிணறும் துலாவும் இருந்தன.

கிணற்றடியில் டீச்சர் குளித்துக்கொண்டிருந்தாள்.

'யாரது சூசையா... வாங்க. இந்தா வாறன். என்ன றாலா கொண்டாந்திய?''

''வலயில ஒண்ணுமில்ல. இருபத்தி அஞ்சி றாலுதாம் கெடந்திச்சி. அதாம் குளிக்கப்போற பாதயில அப்புடியே ஒங்க வூட்டுல குடுத்திற்று போவச் சொன்னா மேரி.''

டீச்சர் கதவைத் திறந்தவுடன் சூசை கையில் இருந்த பையை மட்டும் நீட்டினான்.

''நாங் குளிச்சிட்டுல இருக்கும். நீங்களே உள்ள கொண்டு போட்டுருங்க'' என்று டீச்சர் சொல்ல நிமிர்ந்து பார்த்த சூசை ஒரு வினாடி ஆடிப்போய்விட்டான். பாவாடையைத் தூக்கிக் கட்டி இருந்த டீச்சரைப் பார்த்தவுடன் சூசை திக்குமுக்காடிப் போனான். குளித்துக்கொண்டிருக்கும்போதே வந்து திறந்ததால் ஈரத்தில் பாவாடை உடலோடு ஒட்டி அங்கங்கு அழகு காட்டியது.

சடாரென்று திரும்பிய அவசரத்தில் வாளியைப் பிடிக்க டீச்சர் முயல் பாவாடை அவிழ்ந்து அம்மணமாய் நின்றாள். சூசை ஒருமுறை தன்னைக் கிள்ளிப் பார்த்துக்கொண்டான். பொறுக்கமுடியவில்லை. அவனால், பின்புறமாய்ப் போய் டீச்சரை இறுக்கிக்கொண்டு நின்றான்.

''சரி சரி, இருபத்தி அஞ்சி றாலு'' என்றவாறு வளவுக் கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்து தெருவில் நடந்தான் சூசை. இந்த இன்ப அதிர்ச்சியிலிருந்து அவனால் மீளமுடியவில்லை. ஒன்றல்ல, இரண்டு இனிய அதிர்ச்சிகள். இதற்கு முன்னால் எத்தனையோ முறை டீச்சரை பார்த்திருக்கிறான். ஆனால் டீச்சர் மேல் ஒரு மோகம் வந்தது இல்லை. இப்படி ஒரு சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை. ''மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்'' என்று வாய்விட்டுச் சொன்னான், அன்றிலிருந்து டீச்சர் வீட்டுக் கிணற்றில் குறிப்பதையே வாடிக்கையாக்கி விட்டிருந்த சூசை.[51]

சூசை - சிலுவை

புலரியில் கடல் தகதகவென்றிருந்தது. சிலுவை மட்டும் விழித்திருந்தான். நம்பிக்கை இன்னும் தளரவில்லை. எப்படியாவது காப்பாற்றப்படுவோம் என்று நம்பினான், தன்னால் இயன்ற போதெல்லாம் மிதந்து கொண்டிருந்த கத்தில் இரண்டு கைகளையும் ஊன்றி தலையை உயர்த்தி நாற்புறமும் பார்த்துக்கொண்டிருந்தான். சூசையாரால் அசைய முடியவில்லை.

''அந்த அந்தோனியாரு புண்ணியத்துல ஏதாவது ஒரு உதவி வராட்டி நம்ம பாடு ரெம்ப கஷ்டம்ய்யா.''

''இந்த கத்தயும் இன்னும் எத்தன நாள் நம்ப முடியும்?''

அந்த தூரத்துப் பாய் கிட்ட வரவர சூசையாரின் முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது. சிலுவை அதை இன்னும் பாய் என்றுதான் நம்பிக்கொண்டிருந்தான்.

கரையோரப் பகுதிகளுக்கு இந்தப் பெரிய மீன்கள் வருவதேயில்லை. அப்படி வழி தவறி வருகின்ற சில மீன்கள் பாறைகளில் மோதிக் கலவரமடைந்து அங்கு மீன் பிடித்துக்கொண்டிருக்கும் மரங்களைத் தாக்குவதுண்டு. சில வேளைகளில் பாறைகளில் மோதுவதால் அதிகமாக செயலிழந்து போகும்போது அவை கரைகளில் ஒதுங்கி அப்படியே இறந்து விடும். பெரும்பாலும் இந்தப் பெரிய மீன்கள் சாதுவானவையே. இவை சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவை என்ற நம்பிக்கை மட்டும் பரம்பரை பரம்பரையாக துறைகளில் நிலவி வருகிறது.[52]

12. சிலுவை

நாவலில் இடம்பெறும் இளைஞர் சிலுவை. கோத்ராப் பிள்ளையுடன் நெருக்கம் கொண்டவன்.

இதுவரையில் அழுதே இராத சூசையார் கேவிக்கேவி அழ ஆரம்பித்தார். மாமாவும் அழுவதைப் பார்த்தவுடன் "அப்பா எங்க?" என்று ஏங்க ஆரம்பித்துவிட்டான் சிலுவை. அதுவரைக்கும் அழுகையைப் பொத்திக்கொண்டிருந்த மேரி முடியாதவளாய் ஓடி வந்து சிலுவையை மார்போடணைத்துக் கூப்பாடு போட்டாள். ஊரே நின்று பார்த்தது. எத்தனையோ முறை எத்தனையோ போர் ஆழி மேல் அகப்பட்டு கஷ்டப்பட்டிருக்கிறார்கள். உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால் யாருக்காவும் ஊரே அழுதது இல்லை. இதுவரையில் என்ன ஆனான் என்றே தெரியாத ஊமையனுக்காக அன்று ஊரே அழுதது.

ஊமையன் பிணமாக ஒதுங்கியிருந்தான். கை இரண்டையும் மேலே தூக்கியபடி விறைத்துப்போய்க் கிடந்தான். கண்களை மீன்கள் தின்றுவிட்டிருந்தன.

ஊமையனைத் தூக்கிக்கொண்டு போயி அவம் வீட்டுல வய்ங்கல, நாள காலயில அடக்கம் எடுத்துருலாம்."

ஊமையனின் பிணத்தை அவன் வீட்டில் எடுத்து வந்து கிடத்தினார்கள்.

"யப்பா, யப்பா..." என்று அலறினான் சிலுவை, வீட்டிற்கு முன்னால் ஒரு கூரப்பாயை விரித்துக் கட்டினாகள்.

கோத்ராப் பிள்ளை, "எல சூசை, ஊமையம் உறவுக்காரங்க கொழும்புல இருக்காங்க. அங்க எப்புடி செய்தி அனுப்பப் போறிய!" என்றவாறே பக்கத்தில் கிடந்த பெஞ்சில் உட்கார்ந்தார்.[53]

ஊமையன் சடங்கு

பங்குக் கோயில் கணக்கப் பிள்ளையும் சக்ரீஸ்தரும் சாமியாரோட சேர்ந்து பாடிக்கொண்டே வந்தார்கள்.

அந்த நாள் பெரிய நாள்
அழிவும் அவதியும் நிறைந்த நாள்
கசப்பு மிகுந்ததே ஆ... பெரிய... நாள்
அப்போது வானமும்
பூமியும் அதிரும்
அப்போது உலகை
நெருப்பால

நடுத்தீர்க்க வருவார்
சுவாமி கிருபையாயிரும்
கிறிஸ்துவே கிருபையாயிரும்
சுவாமி கிருபையாயிரும்

ஜெபம் பண்ணிமுடிந்ததும் சாமியார் பெட்டியை மந்திரித்தார். பிறகு பெட்டியைத் தூக்கினார்கள். கோவிலில் பூசையின்போது சாமியார் ஊமையனைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் சொன்னார். அநாதரவாய் நிற்கும் ஊமையனின் ஒரே பையன் சிலுவையை நினைத்து வருந்திக்கொண்டார். அடக்க பூஜை முடிந்தது.

சென்றுவா கிறிஸ்தவனே
உலகை வென்றுவிட்டாய் நீ
விசுவாசத்தால் சென்றுவா
கிறிஸ்தவனே

காடகர் குழு பாடிக்கொண்டிருக்கும்போதே பெட்டியைத் தூக்கிக் கொண்டு ஊர்வலம் மையாவடியை நோக்கிப் புறப்பட்டது. சாமியாரும் பின்தொடர்ந்தார். யாரிடமும் பேச்சு இல்லை.

பங்குக் கோவில் இருந்து மையாவடிக்குப் போகும்போது கடற்கரை வழியாகத்தான் போயாக வேண்டும். பெட்டியை முன்புறம் சூசையாரோடு தூக்கியபடி நடந்த கோத்ராப் பிள்ளை வலதுபுறம் திரும்பிப் பார்த்தார். செடி செத்தைகளினிடையே மிக்கேல் பர்னாந்து மாளிகையின் இடிபாடுகள் தெரிந்தன.[54]

சிலுவை - மேரி (அத்தை)

பரீட்சை முடிந்து இடையன்குடியிலிருந்து மூன்று மணிக்கே வந்துவிட்டிருந்தான் சிலுவை. பக்கத்துத் தெருக்காரி தாழையா அம்புஜம், மேரிக்கு பேன் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"எய்யா, அமலியக்கா வூட்டுல போயி நாஞ் சொன்னேன்னு ஈர்வலியிருந்தாத் தரணுமாம்னு வாங்கியாங்கய்யா!"

"மேரியக்கா, சிலுவ எட்டடாப்பு பரிச்சயா எழுதிற்று வந்திருக்காம்?"

"ஆமா. என்ன..."

"அவம் ஆத்தாள மாரி நல்ல அழகு என்ன,"

"வாயில தீய வையிக்க! புள்ளிக்கி சுத்தித்தாம் போடணும்."

"எம் ராசா ! குகனிக்குள்ள, ஒரு கோப்பயில ஆறுன சுடுகஞ்சி உலமூடி போட்டு மூடி வச்சிருக்கும். மேல ஒரு சின்ன துண்டு கருப்பட்டியும் இருக்கு. எடுத்து குடிச்சிருங்கய்யா!"

"சரித்த. ராத்திரி ரீத்தையா வாத்தியாரு எல்லாரையும் ஸ்கூல்ல வந்து படிச்சிட்டு தூங்க சொன்னாருத்து."

"யாரு... ரீத்தையாவா..." என்றவாறு வசந்தா முற்றத்தில் வந்து அமர்ந்தாள்.

"ஏக்கி, நீ எதுக்கு இந்த இழுப்பு இழுக்கிற!" என்றாள் அம்புஜம் போவச் சொல்லு" என்றாள் வசந்தா.

"எதுக்குக்கா?"

"போவச் சொல்லுங்கிறம்."

சிலுவை குசுனிக்குள் சென்று மறைந்தான்.

"இந்த வேசப் பய... வாத்தியாம்னுதாம் பேரு, சாமான தூக்கி தோள்லயில போட்டுகிட்டு அலயிறாம்."

"பொம்புள கணக்காப் பேசு" என்றாள் அம்புஜம்.

"என்னத்த சொல்ல..."

"எக்கா, திருழாவோட சப்பரத்து முன்னாடி அவம் ஆசிரியம் படிச்சா எனக்கே கண்ணெல்லாம் கலங்கிரும் கேட்டியா?" என்றாள் மேரி.

"போன வாரம் நடுத்தெருவுல சலசலன்னு கிடந்துச்ச, என்னென்னு நினக்கிறியா?" என்றாள் வசந்தா.

"சொல்லித் தொல" என்றாள் அம்புஜம்.

"இந்த வெங்கப் பய டியுசம் படிச்சி குடுக்கிறம் பேர்வழின்னு மானாப் புள்ள பேத்தி... அந்த சின்னப்புள்ள அமல்டா சங்கிக்கிள கைவுட்டுருக்காம். அது பயந்து போயி வூட்டுல சொல்ல அவுங்க அய்யா, அண்ணமாரல்லாம் இவன அடிக்க வந்து பெருங் கலகம் வருற மாரியில் இருந்துச்சி."

"கமுட்டியில கூப்புட்டு விசாரிக்க வேண்டியதுதான!"

"சிலம்பு கோஷ்டி பூரா அவனுக்குல சப்போட்டு" என்றாள் அம்புஜம்.[55]

குளித்துவிட்டு வந்த சிலுவை கஞ்சி வேண்டாம் என்றான். அவனை ஆச்சரியமாகப் பார்த்த மேரி "லூர்து, ஓடிப்போயி நம்ம மந்தரம் புள்ள கடயில நாலு இட்டிலியும் ரண்டு வடயும் வாங்கிற்று வா" என்றவாறு இடுப்பில் சொருக்கியிருந்த சுருக்குப் பையிலிருந்து காசு எடுத்துக் கொடுத்தாள்.

''வேண்டாந்த்த'' சிலுவையின் கண்களில் கண்ணீர் முட்டியிருந்தது.

''லூர்து, இட்லிக்கி தனியா சட்டினிக்கி தனியா ரண்டு கோப்பய எடுத்திற்றுப் போ.'' ''சரிம்மா'' என்ற லூர்து

மண்ணால் மந்திரம் பிள்ளையை
உண்டாக்கி, அவருக்கு உறுதுணையாய்
ஒத்தாசையை உண்டாக்கி
அவர்கள் கையால்
வடைகள் பல உருண்டு வர
திருவுளமான என் தயாபர
யேசுவே தயபாயிரும்

என்று பாடிக்கொண்டே இடுக்குக்குள் மறைந்தாள்.[56]

சிலுவை - சூசை (மாமா)

சிலுவை இப்போதெல்லாம் சூசையார் வலை வரும்போது கடற்கரையில் நிற்பது, மரம் இறக்கும்போது அடைக்காவி தள்ளுவது, பாய் பருமலை எடுத்து வைப்பது என்று கூடமாட சூசையாருக்கு உதவி செய்ய ஆரம்பித்திருந்தான். கொஞ்சம் வளர்ந்திருந்தான். தன்னை வலைக்குக் கூட்டிக்கொண்டு போகுமாறு நச்சரித்துக் கொண்டிருந்தான்.

''மேரி, சிலுவய எங்க?'

''என்னமோ தெரியில... காலயில இருந்தே ஒண்ணுஞ் சொல்ல மாட்டேங்குறாம். வயிறு சரியில்லங்குறாம். எதுவுஞ் சாப்புடல. கேட்டா வேண்டாங்குறாம்.''

''இப்ப எங்க அவன?''

''பத்தரை செபத்துக்கு போனவம் இன்னும் வந்து சேரல்ல!''

''மூணு மணி செபத்துக்கு நேரமாயிற்று பத்தர செபங்குற?''

''கோயில்ல படுத்து கெடப்பாம். போயிப் பாருங்க.''

சூசையார் அவசர அவசரமாகக் கோவிலை நோக்கி நடந்தார். அங்கு சிலுவை அந்தோனியார் கோவில் மண்டபத்தில் நன்றாக அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். மூணுமணி ஜெபத்துக்காக கோவிலைப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள்.

'சிலுவ, எய்யா...''

கண் விழித்த சிலுவை எதிரே சூசையார் நிற்பதைப் பார்த்தவுடன் "என்ன மாமா?" என்று அவசர அவசரமாக எழும்பினான்.

சிலுவையின் பிடிவாத குணத்தை சிறுவதிலிருந்தே சூசையார் அறிந்திருந்தார். கடலுக்குக் கூட்டிப்போக அவர் மனசாட்சி இடங் கொடுக்காவிட்டாலுங்கூட வேற வழியே இல்லாமல் சிலுவையை கடலுக்குக் கூட்டிக் போவதாக வாக்குக் கொடுத்து அவனை வீட்டிற்கு அழைத்து வந்தார்.[57]

மருத்துவ செய்தி

கடலில் கிடைக்கும் ஆமையின் ரத்தத்தைக் குடித்தால் மனிதனுக்கு வரும் "மூல முளை" என்கிற நோய் குணமாகும் என்கிற நம்பிக்கை மக்களிடம் காலம் காலமாக இருந்து வருகிறது. அதனை இந்த நாவலிலும் ஆசிரியர் இடம்பெறச் செய்கிறார்.

சூச, ஆம ரத்தம் ரெம்ப நல்லது. சீக்கிரம் செமிக்காது. நல்ல வலுவு கூட. எத்தன நாளக்கி இப்புடி பட்டினியோ, யாரு கண்டா. சீக்கிரங் குடிங்கல.

ஆமையின் வாயை சூசையார் பிடித்துக்கொள்ள சிலுவை ரத்தத்தைக் குடிக்க ஆரம்பித்தான். பிறகு சூசையார் குடித்தார். பக்கத்தில் வந்த பெரியவர் இவர்கள் இருவரும் குடிப்பதற்கு வசதியாக ஆமையின் கால்களை அமுக்கிப் பிடித்துக் கொண்டிருந்தார். சிலுவையும் சூசயாரும் ரத்தம் குடித்துக்கொண்டு இருந்ததால் பிடியைத் தளத்தியிருந்தார்கள். திடீரென்று ஆமை எகிறிக் குதித்து கோத்ராப் பிள்ளையின் முகத்தோடு மோதியபடி விழுந்து தண்ணீருக்குள் மறைந்தது. பெரியவருக்கு சரியான அடி. மூச்சுவிட முடியாமல் திணறிக்கொண்டிருந்தார்.

கடலில் விரளமாக இருந்ததாலும் இரவாக இருந்ததாலும் இருட்டுக்குள் பெரியவர் கோத்ராவின் சத்தத்தைதான் கேட்டார்கள். சுதாரித்து பெரியவரைப் பிடிப்பதற்குள் நீவாடு அவரை இழுத்துவிட்டிருந்தது. அலை உயரத்தில் கறுப்பாய் தெரிந்த பெரியவரின் தலையை சிலுவையும் சூசையாரும் எட்டிப் பிடிப்பதற்குள் காலம் கடந்துவிட்டது. சிறிது நேரம் கழித்து திரும்பவும் கறுப்பாய் பெரியவரின் தலைபோல் தூரத்தில் தெரிந்தது. அது உண்மையிலேயே தலையா அல்லது பிரமையா என்று சொல்ல முடியவில்லை. பெரியவர் மூழ்கிப் போனார்.[58]

13. கலிஸ்டா

வட்டிக்கு பணம் கொடுக்கும் பாத்திரப் படைப்பு. கிராமியப் பேச்சு வழக்குகள் இவர்களது பேச்சில் இடம்பெறுகின்றன.

திடீரென்று பக்கத்தில் ஒரே சத்தம். வசந்தாவும் அம்புஜமும் மேரியும் வெளியே வந்து இடுக்கில் நின்று வேடிக்கை பார்க்னக ஆரம்பித்தார்கள்.

"தேவுடியாக் கண்டார ஒளி, வாங்குன கடன குடுக்கத் துப்புல்ல, எடத்துவாத் திருழாவுக்கு போறாளாம்" என்று தலைவிரி கோலமாய் ஆடிக்கொண்டிருந்தாள் கலிஸ்டா. கொண்டை அவிழ்ந்தால் உள்ளே வைத்து முடிந்திருந்த கள்ளமுடி கீழே விழுந்து கேட்பாரற்றுக் கிடந்தது.

"எக்கா, நீங்க பெரிய மனுஷி மாரி பேசுங்க. இந்த சீசன்ல உங்க கடனயெல்லாம் இடச்சிருறோம்" கலிஸ்டாலின் கையைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினாள் மரகதம்.

"ஆமா... மடயில கிடக்கிற றாலெல்லாம் எஞ் சாமானுக்குளதான வரப்போவுது... ஏ தேவுடியா, நா இங்க வாநாள போக்குறம். அங்க எங்கய போற?"

"இதோட வுட்டுட்டான்னா பரவாயில்லை. இல்லாட்டி தலையில இருக்கிற அஞ்சாறு மயிரயும் பின்னிவச்சி குத்திர வேண்டியதுதாம்" என் முனகியவாறு மரகதம் பக்கத்தில் இருந்த தென்னை மர நிழலில் அமர்ந்தாள்.

"அங்க என்னக்கி மொனகலு எம் வாரிய கொணடராட்டு. அவன எந் தூமயக் குடிக்கச் சொல்லுக்கி. அப்பவாவது புத்தி வருதான்னு பாப்பம்!"

மரகததத்தின் முனகல் வெளியே கேட்கவில்லை.

"ஏக்கி, நாங் கட்டுவ பணத்தயா கேக்குறம். இந்தா தாரம் அந்தா தாரம்னு வாங்குனத தான கேக்குறம். அந்த மனுஷம் கஷ்டப்பட்டு கப்பல்ல சம்பாதிக்கிறத எல்லாம் ஒங்க கூதியல தானய கொணடு போடுறம்."[59]

14. லூர்து

வீட்டுக்குக் கிழக்குப்புறம் உள்ள இடுக்கில் பக்கத்துவீட்டுப் பெண் பிள்ளைகளோடு கோடு போட்டு நொண்டி அடித்து விளையாடிக் கொண்டிருந்தாள் லூர்து.

சங்கு சக்கர சாமி வந்து
சிங்குச் சிங்கென ஆடுமாம்
உலகம் மூணும் அளக்குமாம் - அது
ஓங்கி வானம் பிளக்குமாம்
கலகலவென சிரிக்குமாம் - அது
காணக் காண இனிக்குமாம்.

"யம்மா" என்ற அலறல் சத்தம் கேட்டு மடியில் போட்டு கட்டிக்கொண்டு இருந்த வலையை விசிறி எறிந்துவிட்டு இடுக்குக்குள் ஓடிவந்தான் சிலுவை. பின்னால் மேரியும் சப்பாணியாரும் வந்தார்கள். லூர்து அடிவயிற்றைப் பிடித்தபடி அப்படியே குத்தவைத்துக் கொண்டிருந்தாள். அவளோடு விளையாடிய பிள்ளைகள் அவள் தோளில் கை வைத்து புரியாமல் விழித்துக்கொண்டிருந்தார்கள்.

"யத்த, நாந் தூக்கிற்று வாறம்."

"யம்மா, வயித்த சுருட்டிகிட்டு வலிக்கிம்மா."

"இப்புடியே இடுக்கு வழிய பொனா நம்ம கம்மோண்டர் வீடு கிட்ட வந்துரும். தெரு வழியே போனா எல்லாரும் என்ன என்னென்னு கேப்பானுவ!"

பக்கத்தில் வந்து தூக்கிய சிலுவை பதறிப் போனான். அனிச்சையாக கண்களில் கண்ணீர் முட்டியிருந்தது.

"யத்த, வூட்டுக்குள போயி சேலய மாத்திற்று, எனக்கு ஒரு சேட்டு எடுத்திற்று வாங்க. காசும் எடுத்துக்குங்க. இப்புடியே திசயவிளக்கி கொண்டு போயிருலாம்."

அதற்குள் பக்கத்திலிருந்து தாழையா அம்புஜமும் மரகதமும் ஓடி வந்தார்கள். லூர்தை சிலுவை தூக்கி வைத்துக்கொண்டிருந்தான். ரத்தம் பாவாடையைத் தாண்டி அவன் சாரத்திலும் வழிந்துவிட்டிருந்தது.

"வேற ஒண்ணுமில்லக்கா, லூர்து வயசுக்கு வந்திற்றா போல தெரியுது" என்றாள் அம்புஜம்.

"எய்யா சிலுவ, புள்ளய வீட்டுக்கிள கொண்டுவந்துரு. ஆஸ்பத்திரி கீஸ்பத்திரியெல்லாம் வேண்டாம்" என்றாள் மரகதம்.

புரியாமல் விழித்த சிலுவை "சரிக்கா" என்றபடி வீட்டிற்குள் கொண்டுவந்து நடுவீட்டில் மூலையில் லூர்தை உட்கார வைத்தான். ரத்தம் படிந்த கைகளால் கண்களைத் துடைத்துக்கொண்டான்.

"ஒரு நிமிசத்துல உசுர வாங்கிற்றாள" என்றவாறு சிலுவை கையைக் கழுவுவதற்காக வளவைப் பார்க்க நடந்தான். இதையெல்லாம் பார்த்துப் பதறி, வாயடைத்து, பரவசப்பட்டுக் கொண்டிருந்தாள் மேரி.[60]

15. ரெபேக்கா

நாவலாசிரியர் முறையற்ற உறவு ஒன்றை நாவலில் இந்தப் பாத்திரம் வழியாக இடம்பெறச் செய்கிறார்.

வசந்தமாளிகைக்கு முப்பத்தி ஐந்து வயசு இருக்கலாம். இயற்பெயர் ரெபேக்கா. நல்ல கறுத்த நாட்டுக் கட்டை. புருஷன் எலி பாவுல் அவளோடு இல்லை. எங்கோ ஓடிவிட்டான். வெகு காலமாக தூத்துக்குடி பக்கத்தில் இருந்தவள். இப்போது ஆமந்துறையிலேயே குடிசை போட்டு தங்கியிருந்தாள். தூத்துக்குடியிலிருந்து ஒருமுறை பஸ்சில் வந்தபோது வியாகுலப் பிள்ளையைச் சந்திக்க நேர்ந்தது. அந்தக் காலத்தில் தூத்துக்குடியில் இருந்து வரும் கணபதி பஸ் இடையன்குடியோடு நின்றுவிடும். இடையன்குடியிலிருந்து நடந்துதான் ஆமந்துறை வரவேண்டும். ரிப்பேர் ஆன காரணத்தால் அன்று பஸ் பொழுது அடையத்தான் இடையன்குடி வந்து சேர்ந்தது. ஆமந்துறை போவதற்கு வசந்தமாளிகையையும் வியாகுலப் பிள்ளையையும் தவிர வேறு எவரும் இல்லை. வழித் துணையாக வந்தவர்கள் உரசிக் கொண்டதில் நெருக்கம் அதிகரித்து இப்போது தொடர்கதையாகி இருந்தது என்னும் பகுதியில் இச்செய்தி இடம்பெறுகிறது.[61]

16. சில்வேரா

சில்வேரா கச்சத்தீவு திருவிழாவில் காணாமல் போனவர். திருவிழாவுக்கு வந்த கூட்டத்தோடு கொழும்பு சென்ற அவர் அங்கு அநாதையாகப் பல காலம் அலைந்த பிறகு கொச்சிக் கடை அந்தோனியார் கோவில்பக்கம் உள்ள ஒரு கருவாட்டுக் கடையில் வேலை பார்த்துவிட்டு இருபத்தைந்து வருடங்கள் கழித்து கையில் ஒரு கேன் தேங்காய் எண்ணெயோடு அண்ணனைப் பார்க்க வந்திருந்தார். திரும்பிச் செல்ல மனமில்லாமல் இருந்த அவரை தோக்களத்தா நல்ல மரியாதையோடுதான் உபசரித்து வந்தாள். கடைசிப் பெண்ணுக்கு கலியாணத்தை முடித்துவிட்டு அவருக்கும் ஒரு கலியாணம் எடுக்கலாம் என்று கோத்ராவும் தோக்களத்தாவும் பேசி முடித்திருந்தார்கள். ஆனால் அவருடைய நடை உடை பாவனைகள் சரியில்லாமல் இருந்ததால் அவளுக்கு முன்னாலேயே கலியாணம் செய்து வைத்துவிடலாம் என்று பெண் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வேலையில்லாமல் இருந்ததால் அவருக்குப் பெண் கொடுக்க ஊருக்குள் யாரும் தயாராக இல்லை.[62]

17. மோத்தா குடும்பம்

பரதவர்களின் மேசைக்காரக் குடும்பங்களில் மோத்தா குடும்பமும் ஒன்று. காலங்காலமாய் கொழும்பில் தங்கி பெரும் பணம் சம்பாதித்தவர்கள். தூத்துக்குடியின் வடக்கே வேப்பலோடை கிராமத்தையும் அதன் சுற்று வட்டாரத்தையுமே வளைத்துப் போட்டிருந்தார்கள். வேப்பலோடையைச் சுற்றியிருந்த ஆயிரக்கணக்கான ஏக்கர் உப்பளங்களும் மோத்தாக்களுக்கே சொந்தமாய் இருந்தன. பக்கத்து இடங்களையும்

வாங்கி உப்பளங்களாய் மாற்றிக்கொண்டிருந்தார்கள். பரந்து விரிந்த அளங்களை கால்நடையாகச் சுற்றிப் பராமரிப்பது கடினம் என்று குதிரைகள் வைத்திருந்தார்கள்.[63]

18. சாதித் தலைவர்

அந்தக் காலத்திலிருந்தே முத்துக்குளித்துறையின் முழு உரிமையையும் பரதவ மக்களின் சார்பாக அவர்களின் சாதித் தலைவர் பெற்றிருந்தார். பரதவர்களும் கடலில் பெற்ற முத்துக்களில் ஒரு பகுதியை அந்தந்தக் காலங்களில் ஆட்சிப் பொறுப்பிலிருந்த அரசர்களுக்கு தங்கள் சாதித்தலைவர் மூலம் கொடுத்துவிட்டு மீதியை சந்தையில் விற்றுப் பெரும் பொருள் திரட்டி வந்தனர்.

சிறிது நேரத்தில் பல்லக்கில் பாண்டியபதி அமர்ந்திருக்க அவரைச் சுமந்துகொண்டு ஓர் ஊர்வலம் போனது. பக்கத்திலேயே ஒரு குதிரையில் அமர்ந்தபடி கோட்டும் சூட்டும் போட்ட ஒருவர் அவருடன் பேசியபடியே போனார். அவர்தான் பெரும் தனவந்தர் ராவ் பகதூர் குரூஸ் பர்னாந்து என்று தெரிந்தது. தூத்துக்குடியில் தண்ணீர் பஞ்சம் தலை விரித்தாடுவதால் மேற்கே வல்லநாட்டு மலைப்பகுதியில் இருந்து தாமிரபரணியின் கிளைக்கால் நீரைக் கொண்டு வருவதற்கான திட்டம் குறித்து பாண்டியபதியுடன் விவாதித்தபடி சென்றதாகப் பேசிக் கொண்டார்கள்.[64]

தனுஷ்கோடி புயல்

1965ஆம் ஆண்டு தனுஷ்கோடியை புயல் தாக்கி அழிந்தது. இந்த வரலாற்றுச் செய்தியினை நாவலாசிரியர் இங்கே பதிவு செய்கிறார்.

ரயில் அசைந்தது, மெதுவாக ஊர்ந்து சென்றது. இப்போது 'கடமுட'வென சத்தம். ரயில் தனுஷ்கோடி பியர் மேல் ஊர்ந்து கொண்டிருந்தது. பயத்தில் ஜன்னலின் கண்ணாடியை உயர்த்தி வெளியே பார்த்தார். பாதி ரயில் தனுஷ்கோடி பியரிலும் பாதி ரயில் வெளியே பின்னாலும் இருந்தது. வளைந்து நின்றதால் முன்னால் உள்ள எஞ்சினும் பின்னால் கார்டு இருக்கும் பகுதியும் மங்கலாகத் தெரிந்தன. சுயம்பு இருந்த பெட்டி பியரில் கடலின்மேல் நின்று கொண்டிருந்தது.

தீடீரென்று பேய் இரைச்சலோடு காற்று மோதியது. சன்னல்களின் இடைவெளி வழியாக 'உய் உய்' என்ற சத்தம் . கீழே அலைகளின் ஆரவாரம் கேட்டது. ரயில் நின்றுவிட்டது. கோச்சுகளில் எரிந்துகொண்டிருந்த விளக்குகள் மங்க ஆரம்பித்தன. மின்விசிறிகள் எதுவுமே இயங்காததால் உள்ளே ஒரே புழுக்கம். பக்திப் பாடல்கள் பாடியவர்கள் எல்லோரும் இப்போதும் உச்சுக் கொட்டிக் கொண்டிருந்தார்கள். உடம்பெல்லாம் வியர்த்து பிசுபிசுவென்றிருந்ததால் கைகளில் கிடைத்ததை எடுத்து விசிற ஆரம்பித்தார்கள்.

நின்றுவிட்ட ரயில் முன்னேறுவதற்கான அறிகுறியே இல்லை. தூரத்தில் பளீர் பளீர் என்று மின்னல் கடலில் இறங்கியதுபோல் இருந்தது. இடிமுழக்கம். 'சோ' வென பெருமழை வேறு பிடித்துக்கொண்டது. பக்கவாட்டில் இருந்த சன்னல்களை லேசாக திறந்து வைத்திருந்தவர்கள் கூட பட படவென மூட ஆரம்பித்தார்கள். மங்கலாக எரிந்த விளக்குகளும் அணைந்துவிட்டன. தூங்கியவர்களும் புழுக்கத்தில் விழிக்க ஓரே ஆரவாரமாய் இருந்தது.

"வாட் இஸ் தி ப்ராப்ளம்...?" என்றவாறு, சுற்றியிருந்தவர்கள் எவ்வளவு தடுத்தும் கேட்காமல், வெள்ளைக்காரன் ஒருவன் வேகமாக கதவைத் திறக்க குபீரென்று வெள்ளம் உள்ளே பாய்ந்து அடித்தது. மோதியது பெரும் அலையாக இருக்க வேண்டும். கதவைத் திறந்த வெள்ளைக்காரனைக் காணவில்லை.

ஜன்னலை பயந்து பயந்து திறந்து திரும்பவும் எட்டிப் பார்த்தார் சுயம்பு. முன்னால் எஞ்சின் இருந்த பகுதியே தெரியவில்லை. முன்னே எங்கும் ஓரே வெள்ளக்காடாய் நுரைத்துக் கிடந்தது. அலைகள் எழும்பிப்பேயாய் படித்துறையில் மோதுவதை பெட்டியின் ஆட்டத்தை வைத்து உணர்ந்தார்கள். எங்கும் ஒரே கும்மிருட்டு. பேயிரைச்சல், கடலின் ஆரவாரத்தில் உள்ளே இவர்களின் கூச்சல் எதுவும் கேட்கவில்லை.

திடீரென மோதிய ஒரு அலையில் ரயில் பெட்டி வேகமாக முன்னே நகர்ந்து பாய்ந்து படாரென்று கீழே இறங்கியது. படுத்திருந்தவர்களும் உட்கார்ந்திருந்தவர்களும், நின்று கொண்டிருந்தவர்களும் உருண்டு புரண்டு ஒருவர் மேல் ஒருவர் விழுந்தார்கள்.

இடிபாடுகளுக்கிடையே ஊஞ்சாடுவது போன்ற உணர்வு. ஒரே அலறல் சத்தம். பெட்டி பியரிலிருந்து தொங்கிக் கொண்டிருக்க வேண்டும். அடுத்து வந்து மோதிய அலையில் பியரோடு சேர்ந்து சரிந்தது. கிடுகிடுவென உருண்டு எங்கோ வீசப்படுகிறது. தொப்பென்று விழுவது போன்ற உணர்வு.

அங்கங்கு உள்ள உடைப்புகள் வழியாகப் பீச்சியடிக்கும் தண்ணீர் குபுகுபுவெனத் தண்ணீர் உள்ளே வந்தது. கை கால்கள் முறித்து எங்கும் ஒரே ரத்தவாடை. அதன்பின்பு விடாத அடை மழை. புயல் அறிவிப்பு ரேடியோவில் வந்துகொண்டிருந்ததால் யாரும் கடலுக்குச் செல்லவில்லை. கடலும் ஏகத்துக்கு தாளம் போட்டுக் கொண்டிருந்தது. ஆமந்துறையில் வாசகசாலையைச் சுற்றி நல்ல கூட்டம். மழை தூறிக்கொண்டிருந்தது.

ஆகாஷவாணி. திருச்சி வானொலி நிலையம். செய்திகள் வாசிப்பது சரோஜ் நாராயணஸ்வாமி. தமிழ்நாட்டின் தென்பகுதியில் ராமேஸ்வரத்துக்கு நேர் கிழக்கே பத்து மைல் தொலைவில் வங்காள விரிகுடாவில் மையம் கொண்டிருந்த புயல் நேற்று இரவு கரைகடந்தது. டிசம்பர் 22ம் தேதி இரவு ராமேஸ்வரத்திலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு தனுஷ்கோடியை நோக்கிச் சென்ற இன்டோ சிலோன் எக்ஸ்பிரஸ்

வெள்ளத்தில் மூழ்கி அதில் பயணம் செய்த ஆயிரத்தி இருநூறு பேர் அந்த இடத்திலேயே ஜல சமாதியானார்கள். தனுஷ்கோடி ரயில் நிலையமும் வரலாற்று சிறப்பு மிக்க பியர் மற்றும் படித்துறையும் இருந்த இடமே தெரியாமல் மூழ்கிவிட்டன. பொங்கிவந்த கடல் நீர் தனுஷ்கோடியை முழுவதுமாக மூழ்கடித்து இராமேஸ்வரம் ராமநாதசாமிகோவில் படிக்கட்டு வரை ஏறியது. இந்த வெள்ளத்தில் தனுஷ்கோடியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் குறைந்த பட்சம் இரண்டாயிரம் போராவது இறந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது. புயல் கரை கடந்தவிட்ட போதும் அடுத்த இரு தினங்களுக்கு மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறார்கள்...' இந்தச் செய்தி ஆசிரியரின் திறனை வெளிப்படுத்துகிறது.[65]

புயலில் ரத்தினசாமி நாடார் மகன் சுயம்புவும் இறந்து விட்டான்.

ரேடியோவில் புயல் அழிவு பற்றிச் சொன்னபோதே குலை நடுங்கிவிட்டது. மறுநாள் தினத்தந்தி பேப்பரில் வந்த செய்தியை வியாபாரிகள் சங்கத்தில் இருக்கும்போதுதான் வந்து சொன்னார்கள். கை, கால்களில் ஏற்பட்ட உதறல் நிற்கவே பல மணி நேரம் ஆனது. சென்னகேசவன் ஆஸ்பத்திரிக்கு தூக்கிப் போனார்கள். டாக்டர் ஊசி போட்டு வீட்டுக்கு அனுப்பி வைத்தார்

ரததினசாமி வீட்டுக்கு வருவதற்கு முன்னாலேயே தனுஷ்கோடியாபுரம் ரண்டாம் தெருவெல்லாம் ஆட்கள், பெருங்கூட்டம் வீட்டில் கூடியிருந்தது. முன்கூடத்திலேயே நிறைமாத கர்ப்பிணியான மருமகள் தலைவிரி கோலமாய் விழுந்து அழுது அரற்றிக்கொண்டிருந்தாள். மகனைப் பறிகொடுத்ததால் பிரமை பிடித்தவளாக சாமி அறையில் மடியில் பேரனைக் கிடத்தியபடி அழுதுகொண்டிருந்தாள் சின்னம்மை. பக்கத்து வீடுகளில் இருந்து வந்தவர்கள் லட்சுமியைப் பிடித்து சமாதானப்படுத்திக் கொண்டிருந்தார்கள்.[66]

கொற்கை நாவல்

ஆர். என். ஜோ டி குருஸ் எழுதிய கொற்கை நாவல் எழுதியதின் நோக்கத்தை பரதவரின் பூர்வீக பூமியாக விளங்கிய தூத்துக்குடியில் அவர்களது பவுசும் மவுசும் இன்று பழங்கதையாகிப் போனது. இங்கு மாற்றமும் அதன் தேவையும் புரிந்து கொள்ளப்படவே இல்லை. காலத்திற்கேற்றாற் போல் வாழ்க்கையில் மனநிலையில் தொழில்முறையில் பழக்கவழக்கத்தில் மாற்றம் ஏற்படாததன் விளைவுகள் தலைமுறை தலைமுறையாகத் தொடங்கின. நிகழ்வுகளை உன்னிப்பாக அவதானித்தபோது எழுதத் தோன்றியது என நாவலின் முன்னிலையில் ஆசிரியர் பதிவு செய்கிறார். எனவே ''கொற்கை'' என்பது பாண்டிய மன்னர்களின் துறைமுகப்பட்டினம் அல்ல. இது முழுக்க முழுக்க தூத்துக்குடியைப் பற்றிய செய்திகளையும் கொஞ்சம் வரலாற்றையும் கற்பனையுடன் கலந்து எழுதப்பட்ட ஒரு நாவல் வடிவம்.

இதில் பழங்கால கப்பல் பயணம் தோணிகள் மூலம் சரங்குகளை கையாளும் திறம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. தூத்துக்குடி ரயில் நிலையம் குறித்த செய்திகள் அதிலிருந்து பருத்தி, உப்பு மற்றும் மீன் கருவாடு ஏற்றுமதி செய்யப்படும் செய்திகள் இடம்பெறுகின்றன. தற்போது வ.உ.சி. மார்க்கட் பகுதியிலுள்ள சந்தன மாரியம்மன் கோவில் பரதவர்களின் சைவ சமய வழிபாட்டு கோவிலாக திகழ்ந்ததை ஆசிரியர் பதிவு செய்துள்ளார். வெளிநாட்டவராகிய டச்சுக்காரர்கள், போர்ச்சுகீசியர்கள், ஆங்கிலேயர்கள் ஆகியோரின் படையெடுப்புகளால் தூத்துக்குடியில் ஏற்பட்ட விளைவுகளை நாவலில் காணமுடிகிறது. முகமதியர்களுக்கும் பரதவர்களுக்கும் இடையே ஏற்பட்ட சாதிய கலவரங்கள், அதனால் தூத்துக்குடியில் ஏற்பட்ட 'சமய' மாற்றம் போன்ற 1532 ஆம் ஆண்டு வரலாற்றுச் செய்தியினையும் ஆசிரியர் நாவலில் இடம்பெறச் செய்கிறார். முத்துக் குளித்தல், சங்கு குளித்தல், வாழக்கையில் இவற்றின் பயன்பாடு மற்றும் மக்களின் நம்பிக்கைகள் ஆகியவற்றை நாவலில் காணலாம்.

சாயல்குடி அருகே உள்ள மூக்கையூர் 'மறவர்' களுக்கும் பரதவர்களுக்கும் இடையிலான தகராறுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. தூத்துக்குடியின் பெயர் காரணம் (திருமந்திர நகர்) சுதேசி இயக்கம் (1908) காந்திஜியின் உப்பு சத்தியா கிரகம் போன்ற செய்திகளும் நாவலில் இடம்பெறுகின்றன. போர்ச்சுகீசியரின் தொடர்பால் பரதவர் சமூகத்தில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றங்கள், மாதாகோவில் எழுப்பப்பட்டதின் வரலாறு கொழும்பு நகருடன் பரதவர்கள் கொண்டிருந்த வணிகத்தொடர்பு ஆகியவற்றை ஆசிரியர் நாவலில் எடுத்துக்கூறுகிறார். குடி தண்ணீருக்காகத் தூத்துக்குடி மக்கள் பட்ட பாடுகள் குறிப்பாக நல்ல தண்ணீர் தீவிலிருந்து தண்ணீர் கொண்டு வந்த பரிதாபம் கள்ளக்கடத்தல் தொழில் தூத்துக்குடியில் நடைமுறையில் இருந்து வந்த வழக்கம் ஆகியவை பதிவு செய்யப்படுகின்றன.

கத்தோலிக்கத் திருச்சபையினால் பரதவ சமூக பொருளாதார வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் எடுத்துரைக்கப்படுகின்றன. இவற்றோடு இந்த நூற்றாண்டில் தூத்துக்குடியில் ஏற்பட்ட மாற்றங்கள் புதிய வரவுகளையும் நாவலாசிரியர் இடம் பெறச்செய்கிறார்கள். அதில் குறிப்பிடத்தக்கவை 1. புதிய துறைமுகம், 2. புரோட்டா கடைகள், 3. ரயில்வே கேட் பிரச்சனைகள் ஆகியவை ஆகும்.

இவை தவிர ஆசிரியர் பரதவர்களின் தலைவராக ''பாண்டியபதி'' என்பவரை குறிப்பிடுகிறார். இவரின் தலைமையின் கீழ்த்தான் ''முத்து சல்லபம்'' மற்றும் சமூக வளர்ச்சி நடந்தேறியது. நாவலில் தூத்துக்குடியில் புகழ் பெற்று விளங்கும் சில பரதவ மக்களின் குடும்பங்களையும் நாவலில் காணலாம்.

நாவலில் பாத்திர படைப்புகள் குறைவு. ஏனெனில் நாவல் ஒரு வரலாற்றுப் பெட்டகம் போல, கட்டுரை விளக்கம் போலவே அமைந்துள்ளது.

பாத்திரப்படைப்புகளாக குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமானால், பிலிப், தொன் மிக்கேல், பிரான்சிஸ் தல் மொய்தா, டோமினிக் ரிபேரோ, செல்வி சியார், சிங்கராயார், போன்றோரைக் கூறலாம். பாண்டிய குலபதியின் அரன்மணை செய்திகளும் நாவலில் பதிவு செய்யப்படுகின்றன.

தோணி

தூத்துக்குடியில் ஆழமான துறைமுகம் உருவாக்கப்படுவதற்கு முன் பொருள்களை ஏற்றுமதி, இறக்குமதி செய்ய பயன்பட்ட கலமே தோணி, தோணிகளுக்காக 1868இல் ரூ.1,200 செலவில் நூறடி நீளத்தில், மரத்தாலான தங்கு தளம் உருவாக்கப்பட்டது. 1873 இல் தோணிப்பாலம் (தங்குதளம்) நீளப்படுத்தப்பட்டது. தமிழரின் கடல்கடந்த வாணிபத்திற்குப் பேருதவி புரிந்த தோணி பற்றி அறிவது நலம் பயக்கும்.

'தோணி' என்ற சொல் 'தோண்டுதல்' என்ற பொருளிலே உருவாகியுள்ளது. வலுவான மரக்கட்டையை நீளவாக்கில் தோண்டி உருவாக்கப்பட்டதன் அடிப்படையில் தோணி என்று பெயர் பெற்றது. தூத்துக்குடித் துறைமுகத்தை நவீனப்படுத்தும்வரை தோணிகளின் மூலமே வணிகம் நடைபெற்றது.

தூத்துக்குடியில் 'கப்பல் நடை தோணி' 'கோஸ்டிங் தோணி' என இரு வகைகள் உள்ளன. தூத்துக்குடித் துறைமுகம் ஆழம் குறைவானதால் பெரிய கப்பல்களும், அதிகமான எடையுடன் வரும் சிறிய கப்பல்களும் துறைமுகத்திற்கு வெளியே ஏறத்தாழ 6 முதல் 10 கி.மீ. தொலைவில் நங்கூரமிட்டு நிற்கும்.

அக்கப்பல்களில் சரக்குகளை ஏற்றவும் இறக்கவும் பயன்பட்டதே கப்பல் நடை தோணி, இதனை 'லைட்ரேச் தோணி' (Lighterages) என்பர். இத்தோணிகள் ஒரு பாய்மரத்துடன் இயங்குபவை 1980களில் நாற்பதுக்கும் மேற்பட்ட தோணிகள் இயங்கின. தற்போது கப்பல்நடை தோணிகளின் பயன்பாடு இல்லை.

இந்தியத் துறைமுகங்கள், கொழும்பு மற்றும் அரபிக்கடல் துறை முகங்களுக்குச் சரக்குகளை ஏற்றிச் செல்லும் தோணிகள் கோஸ்டிங் தோணிகள் என்று அழைக்கப்படும். பண்டைய காலத்தில் இரண்டு பாய் மரங்களுடன் பயணித்த தோணிகள் பிற்காலத்தில் பதினான்கு பாய்கள் வரை கொண்டதாக மாறியிருக்கின்றது.

இத்தோணிகள் 94 அடி நீளமும் 22அடி அகலமும் 14அடி உயரமும் கொண்டவை பாய்மரத்தின் துணையால் இயக்கப்பட்ட தோணிகள், தொழில் புரட்சியால் இன்று இயந்திரத்தால் இயக்கப்படுகின்றன. தூத்துக்குடியில் தோணிகள் செய்வதற்கென்றே தச்சர்கள் இருக்கிறார்கள்.

கோஸ்டிங் தோணிகள் மூலம் வெங்காயம், கருவாடு, மஞ்சள் உள்ளிட்ட பொருள்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. யாழ்ப்பாணத்தில் இந்திய அமைதிப்படை

இருந்தபோது உணவுப் பொருள்களையும், இறைச்சிக்கான விலங்குகளையும் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து கொண்டு சொல்லும் பணியைத் தோணிகள் மேற்கொண்டன.

தூத்துக்குடியில் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணமாக குடிப்பதற்குத் தண்ணீர் கிட்டாத காலத்தில், மரப்பீப்பாய்கள் தோணிகளில் அனுப்பப்பட்டு கொழும்பு துறைமுகத்திலிருந்து (1927வரை) பீப்பாய்களில் தண்ணீர் கொண்டு வரப்பட்டன. தூத்துக்குடிக்கும் கொழும்புக்கும் தோணிகள் அடிக்கடி சென்று வந்ததால் தோணி உரிமையாளர்கள் வீட்டில் மட்டும் எப்போதும் நல்ல தண்ணீர் கிட்டியது.

1980களில் நாற்பது கோஸ்டிங் தோணிகள் இருந்தன. தற்போது இருபது தோணிகள் மட்டுமே உள்ளன. தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத்தின் வளர்ச்சியால் தமிழரின் பண்பாட்டு அடையாளமான தோணித் தொழில் அழிந்து வருகின்றது. தங்களுடைய வானவியல் மதிநுட்பத்தால், பண்டைய காலத்தில் தோணிகள் மூலம் பலநாடுகளுடன் வாணிபம் செய்தவர்கள் இங்குள்ள கடலோடிகளே, தமிழலக்கியத்தில் கூறப்படும் தமிழரின் கடல்கடந்த வாணிபத்திற்குரிய தோணியைக் காப்பது தமிழரின் வரலாற்றைக் காப்பதாகும். பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன் எழுதிய 'தோணி' என்னும் நூல் இவ்வரலாற்றை எடுத்து இயம்புகிறது.[67]

கப்பல் பயணம்

மலையாள நடை கிளம்பும் முன்னாலேயே விசுவாசம் கர்டோசாவை சந்தித்திருந்தார் கிலுக்கு. கொற்கை மேசைக்காரர்களுக்கு அதிலும் விசேசமாய் ரிபேரோக்களுக்கும், கர்டோசாக்களுக்கும் கடல் கடந்து தங்கள் வணிகத்தைப் பெருக்க வேண்டுமென்ற ஆசை இருந்தது. கொற்கை, கொழும்பென்று நடை செய்தாலும், கொழும்பு ஒரு அயல் நாடு என்ற எண்ணமே பெரும்பாலானவர்களுக்கு இல்லாதிருந்தது. மலையாள நடை செய்யும் தண்டல்களுக்கும் என்றாவது ஒரு நாள் இந்த மேலைக் கடலைக் கடந்து அரபு நாடுகளுக்குச் செல்ல வேண்டுமென்ற ஒரு ஏக்கம் இருக்கும்.[68]

அந்தக் காலத்திலிருந்தே. கொற்கையிலிருந்து வெளிக்கிடும் தோணிகள் குமரியைக் கடந்து, பரந்து விரிந்த கடலில் காற்றையும் கடலையும் எதிர்கொண்டு மலையாள நடைத்தொழில் செய்வதே வீரமாகப் பேசப்பட்டது. குமரிமுனையைக் கடப்பதும் எளிதான சமாச்சாரமில்லை. கொற்கையிலிருந்து வாடைக் கச்சான் காற்றில் மலையாள நடை களிம்பும் தோணிகளுக்கு குமரிமுனையில் திசை மாறியதும் வாடைக் கச்சான் காற்றே அணியத்தில் எதிர்த் திசையிலிருந்து வந்து மோதும். எதிர்த்து வரும் காற்றையும் சுளிப்பெடுக்கும் கடலையும் தாண்ட வேண்டும். பார்க்கடலாகையால் ஆழமில்லாமல் அலைடியும் அதிகமாக இருக்கும். அந்தப் பக்கங்களில் வலை போட்டு மீன் பிடித்துக் கொண்டிருப்பவர்களையும் பக்குவமாக கடந்து போகவேண்டும்.[69]

கொற்கை

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டத்துக்கு அருகில் அமைந்திருந்த கோநகரம்தான் கொற்கை.

பண்டைய காலத்தில் கடலும், தாமிரவருணி ஆறும் சந்திக்கும் இடத்துக்கு அருகில் கொற்கைத் துறைமுகம் இருந்திருக்கிறது. பாண்டிய மன்னனின் தலைநகரமாகவும் இரு விளங்கியிருக்கிறது.

இதைத்தான், 'அலங்கிதழ் நெய்தல் கொற்கை முன்னுறை இலங்குமுத் துறைமுகம் எயிறு கெழுதுவர் வாய் அரம் போழ் அவ்வளைக் குறுமகள் நரம்பார்த் தன்ன தீங்கிள வியளே'[70] என்று சங்க இலக்கியமான ஐங்குறுநூறு வியக்கிறது.

மேலும், 'புகழ் மலி சிறப்பின் கொற்கை' முத்து படுபரப்பின் கொற்கை மன்துறை' என்றெல்லாம்கூட சங்கத் தமிழ் இலக்கியங்களில் கொற்கை வந்தோதப்படுகிறது.

கி.பி. 80களில் கிரேக்க நாட்டு வணிகர் ஒருவரால் எழுதப்பட்ட 'செங்கடல் செலவு' (பெரிப்ளஸ் ஆப் எரித்திரேயன்ஸி) என்ற நூல் கொற்கையை. 'கொல்கி' யென்றே குறிப்பிடுகிறது. கி.பி. 130இல் வாழ்ந்த நில நூல் அறிஞரான தாலமியும் கொற்கைத் துறைமுகத்தைப் பற்றி எழுதியுள்ளார்.

'பண்புசால் பெருநகர் காயல்' என்று மார்க்கோ போலோ கொற்கையைக் குறிப்பிடுகிறார்.

பிஷப் கால்டுவெல் அவர்கள் மொழியியல் அறிஞர் அகழ்வாராய்ச்சியாளர் என பன்முகம் கொண்டவர். அவரை ஒரு பல்கலைக்கழகம் என்று கூறினால் மிகையாகாது. அந்த பேரறிஞர் கால்டுவெல், 1876இல் கொற்கையில் அகழ்வாய்வு ஒன்றினை மேற்கொண்டார். இதில் பல முதுமக்கள் தாழிகளையும் சங்கு அறுக்கும் பட்டறைகளையும் அரேபிய நாணயங்களையும் சீன மட்பாண்டங்களையும் அவர் கண்டுபிடித்தார். அதற்குப் பின் தமிழ்நாடு அரசின் தொல்பொருள் ஆய்வுத்துறையினர் 1968-69இல் முறையான அகழ்வாய்வினை மேற்கொண்டார்கள்.

பேரரசர் அசோகர் காலத்தில், மௌரியப் பேரரசுக்குப் கொற்கைக்கும் இடையே தொடர்பு இருந்தது இந்த அகழ்வாய்வில் தெரியவந்தது. இங்குக் கிடைத் பானை ஓடுகளில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. திரிசூலம், நட்சத்திரம், வில், அம்பு, இலை வடிவம், மீன், சூரியன் ஆகிய கீறல்கள் பானை ஓடுகளில் இருந்ததையும் ஆய்வாளர்கள் கண்டுபிடித்தனர். இவற்றின் காலம் கி.மு.200இலிருந்து கி.பி.200 வரை இருந்திருக்கலாம் எனத் தெரிகிறது.

கொற்கையில் நடந்த அகழ்வாராய்ச்சியில் இந்த நகரம் கி.மு.800இல் தமிழகத்தில் சிறந்த வணிக நகரமாக விளங்கியதும் தெரிய வந்தது. கொற்கையின் அருகில் உள்ள ஆதிச்சநல்லூர் சாயர்புரம் ஆகிய இரண்டு ஊர்களிலும்கூட தொல்பொருட்கள் கிடைத்திருக்கின்றன.

ஆரியப்படை கடந்த பாண்டிய நெடுஞ்செழியனின் காலத்தில், அவரது தம்பி வெற்றிவேல் செழியன், கொற்கை நகரத்தின் அரசப் பிரதிநிதியாக இருந்திருக்கிறார். கொற்கையின் வெண்முத்துகள் கிரேக்க நாட்டிற்கும், உரோம நாட்டிற்கும் ஏற்றுமதியாகியிருக்கின்றன.

கொற்கைத் துறைமுகம் தாமிரவருணி ஆற்றின் கரையிலே இருந்துள்ளதால் அந்த ஆறு கடலில் கலக்கும் இடத்திலிருந்து கப்பல்கள் உள்ளே வந்திருக்க வேண்டும். ஆறும் கப்பலின் கொள்ளளவை தாங்கும் விதமாக அன்று பெரும் நீர்ப்பெருக்குடன் ஆழமாக இருந்திருக்க வேண்டும். இல்லையெனில் கடலில் நங்கூரமிட்டு, கப்பலில் உள்ள சிறிய துடுப்புப் படகின் மூலம் அத்துறைமுகப் பகுதியை வெளிநாட்டு மாலுமிகள் அடைந்திருக்க வேண்டும். பண்டமாற்று முறையில் கொற்கையில் வணிகம் நடந்திருக்கிறது.

நாளடைவில் தாமிரவருணி ஆற்றின் வழித் தடங்கள் மாறியதாலும், ஆற்றின் நீர்வரத்து குறைந்ததாலும் கடலுக்கும் ஆற்றுக்கும் தொடர்பில்லாமல் துண்டாகிப் போனதாலும் கொற்கை அழிந்திருக்கிறது. கடல் பின்வாங்கிப் போனதால் கொற்கைத் துறைமுகம் அழிந்ததாகவும் பரவலான கருத்து உண்டு.

ஆனால் ஜோ டி குருஸ் குறிப்பிடும் 'கொற்கை' இன்றைய தூத்துக்குடி ஆகும்.

கொற்கை ரயில் நிலையம்

கொற்கை மேலூரில் ரயில் சிறிது நேரம் நிற்க வெள்ளைக்காரர் கிளார்க்கோடு வந்த கூட்டம் முழுவதும் அங்கேயே இறங்கியது. விழிப்புருவத்தை அசைத்து பிலிப்பிடமிருந்து விடை பெற்றார் மிஸ்டர் கிளார்க். ஏதோ இனம் புரியாத ஒரு ஈர்ப்பு அவனுள். ரயில் சிறிது தூரம் கிழக்காக ஊர்ந்து கீழூரில் நின்றது. இங்கேயும் இறங்கியவரில் அதிகம் பேர் வெள்ளையராகவே இருந்தார்கள். பிலிப் வந்த ரயில் நின்றிருந்த தண்டவாளத்தின் அருகே தண்ணீர்க்குழாய் இணைப்புகளில் தண்ணீர் பீச்சியடித்தபடியிருந்தது. தண்டவாளங்களில் சளு சளுவென்றிருந்த நரகலைச் சிறிதும் முகம் கோணாமல் அப்புறப்படுத்தியபடியிருந்தார்கள் கொண்டையாவும் கருப்பியும். கூடவே தொரட்டியும் கையுமாக மகன் சின்னையா. தூரத்தில் பெரிய வட்டமாகத் தெரிந்த கிணறு ஒன்றின் நடுவே தண்டவாளம் துண்டுபட்டுத் தெரிந்தது. "குக்... கூ...." என்ற சத்தத்தோடு புகை விட்டபடியே அதன் மேலே சென்ற ரயில் எஞ்ஜினை நிறுத்திப் பக்கவாட்டில் நின்றிருந்த ரயில்வே தொழிலாளர்கள் சுற்றுக் கம்பிகளை வைத்து மாறிச் மாறி சுற்ற, எஞ்ஜின் அப்படியே அரை வட்டமாய்த் திரும்பி எதிர்புறம்

பயணிப்பதற்குத் தயாராய் நின்றது. பிரமிப்பாய் இருந்தது. மற்றொரு எஞ்ஜினிலிருந்து எரிந்த சாம்பல் கரியை இழுத்து வெளியே தள்ளியபடியிருந்தார்கள். சாம்பலை அள்ளுவதற்காக நீராவி எஞ்ஜினின் அடுப்புப் பகுதி திறக்கப்படும்போதெல்லாம் உள்ளே செம்பழுப்பு நிறத்தில் கப கப வென தீப்பிளம்புகள் தெரிந்தன.

பிளாட்பாரத்தில் பிராமணாள் காப்பி ஓட்டல் பக்கம் கூட்டமில்லை. ஆனால் காபியின் மணம் மட்டும் மூக்கைத் துளைத்தது. சரக்குப் பகுதியில் பெரிய சாக்குப் பைகளில் கச்சாப்பருத்தி திருநெல்வேலி, கோவில்பட்டி போன்ற இடங்களிலிருந்து வந்து இறங்கியபடியிருந்தது. பைகளில் சில கிழிந்து பிதுங்கி வெளிவந்த பருத்திப் பஞ்சு காற்றில் மிதந்தபடியிருந்தது. பருத்திப் பைகளில் பெரும்பாலும் ஹார்வி, வால்காட், ராலிஸ் நிறுவனங்களின் முத்திரைகள் தெரிந்தன. இரட்டை மாட்டு வண்டிகளை தனி வரிசையிலும் பாரம் ஏற்றியபடியிருந்தார்கள். நடைமேடையருகே நின்றிருந்த 'குட்ஸ்' வண்டியில் பெரும்பாலும் ரப்பர் சீட்டுக்களாய்த் தெரிந்தது. வியர்க்க விறுவிறுக்க தலைச்சுமையாய் எடுத்து அட்டி போட்டபடியிருந்தார்கள். அவர்கள் பேச்சு வழக்கு பக்கத்து ஊர் உடன்குடியை ஞாபகப்படுத்தியது. ஒடுகலான குட்ஸ் வண்டி திறப்புக்குள் இருவர் நின்று எடுத்துக் கொடுக்க, தலைச்சுமைக்கு நான்கு பேர் அட்டி போட்ட இடத்தில் இரண்டு பேர் என ஒவ்வொரு பெட்டியிலும் தனித்தனிக் குழுக்களாய் வேலை நடந்தபடியிருந்தது. ரப்பர் சீட்டுக்களையே படிக்கட்டுகள் போல் அடுக்கி அதன் அதன் மேலேறி அம்பாரமாய் அட்டி போட்ட விதத்தைப் பார்த்தவாறு குத்த வைத்திருந்தான் பிலிப்.[71]

பருத்தி ஏற்றுமதி

1861இல் அமெரிக்காவில் ஏற்பட்ட சுதந்திரப் போரின் காரணமாக அமெரிக்காவிலிருந்து இங்கிலாந்துக்கு ஏற்றுமதியாகும் பருத்தி தடைசெய்யப்பட்டதாம். இந்தச் சூழலில் காலனி நாடுகளிலிருந்து பருத்தியை இறக்குமதி செய்தாக வேண்டிய கட்டாயத்தால், வெள்ளைக்கார அரசாங்கம் காலனி நாடுகளில் பருத்தி ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களுக்கு முன்னுரிமை தந்து அந்தத் தொழில் வளர்ச்சியடையத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்தது. இதன் காரணமாகவே திருவைகுண்டம், நாங்குநேரி, கோவில்பட்டி போன்ற பகுதிகளில் சுதேசி விவசாயிகள் பருத்தி சாகுபடி செய்ய நிர்பந்திக்கப்பட்டு விளைந்த பருத்தி வகைகள் கொற்கை கொண்டுவரப்பட்டன. அங்கு அவை தரம் பிரிக்கப்பட்டு நூலாகவோ அல்லது பஞ்சாகவோ கொற்கைத் துறைமுகத்தின் மூலமாக ஏற்றுமதி செய்யப்பட்டன. பருத்தி சாகுபடியோடு மேற்கு தொடர்ச்சி மலைப்பக்கம் ஓய்வெடுப்பதற்காகச் சென்றபோது ரப்பர் மரங்களைக் கண்ட வெள்ளையர்கள், ரப்பர் மரங்களில் பால் எடுக்கும் தொழிலையும் ஊக்குவித்து ரப்பர் சீட்டுகளையும் ஏற்றுமதி செய்வதற்கு வழிவகை செய்தார்கள்.

வரலாற்றுக் காலத்தில் முத்துக்குப் பெயர் பெற்ற இடமாய் விளங்கிய கொற்கை இன்றைய நிலையில் பஞ்சு வியாபாரத்திலும் பஞ்சு ஏற்றுமதியிலும் முன்னணித் துறைமுகமாய் மாறியது. இதன் காரணமாகவே பல்வேறுபட்ட தொழில்களும் வளர்ச்சியடையத் தொழில் தேடி பல தரப்பு மக்களும் கொற்கை வர ஆரம்பித்தார்கள்.[72]

சந்தன மாரியம்மன் தோற்றம்

இந்தக் கோவில் தூத்துக்குடி வ.உ.சி. மார்க்கட்டின் தென்புறம் ரயில் நிலையத்திலிருந்து துறைமுகம் செல்லும் இருப்பு பாதையின் மீது அமைந்துள்ளது.

கொற்கையின் வடகிழக்கே கோயில் கொண்டு ஈசானத்தைப் பார்க்கிறாள் சந்தனமாரி. அந்தக் காலத்தில் வலைக்குடி, காளவாசல், கடற்கரைகளில் சுற்றித் திரிந்த சந்தான சித்தர் ஏதோ அசரீரி அறிவிப்பில் இந்த இடத்தில் அமர்ந்து புளிய மரத்தடியில் தோண்டியபோது கிடைத்தது இந்த மாரியம்மன் சிலை. தோண்டி எடுக்கும்போதே சந்தனக்காப்பு சாத்தியிருந்ததாம். கழுத்தில் முத்துமாலை. அதே இடத்தில் அவளுக்குப் பூசை செய்திருக்கிறார் சந்தான சித்தர். நாள்பட அவரும் அங்கேயே ஐக்கியமாகிவிட அவருடைய சீடர்கள் மாறி மாறி அங்கிருந்து அருள் பாலித்திருக்கிறார்கள். முன் காலத்தில் கோவில் கடற்கரையிலிருந்ததாகவும் நாள்படக் கடல் பின் தள்ளிப் பொய்விட்டதாகவும் ஒரு பேச்சு உண்டு. கோவிலின் எதிரே ஜின்னிங் ஆலைக்காக நூலாபீஸ்க்காரர்கள் அஸ்திவாரம் போடத் தோண்டியபோது சங்கும் கிளிஞ்சல்களும் கிடைத்திருக்கின்றன.

கொற்கை நகரிலேயே கோட்டையுள்ள ஓரே கோவில் சந்தன மாரியம்மன் கோவில்தான். கோவிலைச் சுற்றி நாற்புறமும் ரத வீதி. வீதியெங்கும் பரதவரின் குடில்கள், அக்கினி மூலையில் சந்தன அக்னி விநாயகர், கன்னி மூலையில் கன்னி விநாயகர், வாயு மூலையில் அமிர்த விநாயகர். ஈசான் மூலையில் பைரவர், நடுவிலே அம்பாள். அம்பாள் பரதவரின் எல்லைக் காவல் தெய்வம். அவள் பரத்தி. அமைப்பிலேயே மேல் பகுதி உயர்ந்தும் கீழ்ப்பகுதி தாழ்வாகவும் சுடலைப் பார்ப்பது போல் அமைந்திருக்கிறது கோயில்.

கொற்கை உப்புக்கு வடக்கே நல்ல மதிப்பு இருந்தது. மற்ற இடங்களைப் போலல்லாமல் கொற்கையில் கடல் நீரில்தான் உப்பு காய்க்க வேண்டுமேன்ற அவசியமில்லை. சில இடங்களில் கிணற்று நீருமே கடல் நீருக்கிணையாக கரிப்புத் தன்மையோடிருந்தது.[73]

முத்துக்குளித்துறையில் டச்சுக்காரர்கள்

மூர்மதியர்களின் கொடுந்தாக்குதல்களிலிருந்து போர்த்துக்கீசியர்களால் பாதுகாப்பு பெற்ற பரதவர்கள் கிறிஸ்தவ சமயம் தழுவினர். ஆனால் சில

மாதங்களிலேயே போர்த்துக்கீசிய கட்றபடைத் தளபதியாலும் மாலுமிகளாலும் பரதவர்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். ஆனாலும் பரதவர்களிடையே சமயப்பணியாற்றி வந்த குருக்கள் இவர்களுக்கு ஆறுதலாக இருந்தனர். பரதவர்களுக்கு திருமுழுக்கு கொடுத்த முதன்மைக்குரு மிக்கேல் வாஸ் அடிகளார், கி.பி.1542-ம் ஆண்டு கோவாவில் இருந்த ஆளுநர் மார்டிம் அபோன்ஸாவிடம் பரதவர்களின் பரிதாப நிலையைப் பற்றிக் கூறினார். அந்த வருடம் தான் மார்ட்டின் அபோன்ஸ், போர்த்துக்கல் மன்னின் பிரதிநியாக கோவாவின் ஆளுநர் பொறுப்பேற்க கோவாவிற்கு வந்தார். இவர் பயணம் செய்த கப்பலில் தான் இயேசுசபைக் குருவாக இருந்த புனித சவேரியாரும் வந்தார். வரதவர்களின் துயரநிலையைக் கேள்விப்பட்ட ஆளுநர், தவறு செய்த கப்பற்படை வீரர்களைக் கைது செய்த விசாரிக்க ஆணையிட்டார். பரதவர்கள் மீது திணிக்கப்பட்டிருந்த அநியாய வரிச்சுமைகளைக் குறைத்தார்.

தென் தமிழ்நாடு

தென்தமிழ்நாட்டின் வரலாற்றைச் சுற்றுப் புரட்டிப் பார்ப்போமேயானால், தூத்துக்குடியும் அதனைச் சார்ந்த முத்துக் குளித்துறைப்பகுதியும் மூன்று ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தில் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்ததைக் காணமுடியும். கி.பி.1532-ம் ஆண்டு முதல் போர்த்துக்கீசியர்கள் ஆண்டு வந்தார்கள். அவர்களது ஆளுகையின் கீழ் 126 ஆண்டுகள் இருந்த முத்துக்குளித்துறை கி.பி.1658-ம் ஆண்டு முதல் ஆலந்து நாட்டின் டச்சுக்காரர்கள் வசம் சென்றது. கி.பி.1782-ம் ஆண்டு ஆங்கிலேயர்கள் தூத்துக்குடியைக் கைப்பற்றினார்கள். ஆனாலும், அவர்களால் தொடர்ந்து ஆட்சிசெய்ய முடியாமல் போகவே, டச்சுக்காரர்கள் மீண்டும் தூத்துக்குடியைக் கைப்பற்றினார்கள். மீண்டும் கி.பி.1825-ம் ஆண்டு, பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தால் முத்துக்குளித்துறை கைப்பற்றப்பட்டது. அது முதற்கொண்டு, கி.பி.1947-ம் ஆண்டு, நமது இந்திய நாடு விடுதலை பெறும் வரை, ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. இவ்வாறாக முத்துக்குளித்துறையின் ஆட்சியாளர்களாக மூன்று ஐரோப்பிய நாடுகள் கி.பி.1532-ம் ஆண்டு முதல் கி.பி.1947-ம் ஆண்டு வரை அதாவது 415 ஆண்டுகள் தூத்துக்குடி மற்றும் கடலோர ஊர்களான வேம்பார், வைப்பார், வீரபாண்டியன்பட்டினம், திருச்செந்தூர், ஆலந்தலை, மணப்பாடு போன்ற ஊர்களை ஆட்சி செய்துவந்திருக்கின்றன என்பதை எண்ணும்போது மிக வியப்பாக இருக்கிறது. இந்திய நாட்டின் எந்தவொரு பகுதியிலும், இவ்வாறு மூன்று ஐரோப்பிய நாடுகள் வருடக்கணக்கில் ஆட்சிபுரிந்துள்ளனர் என்று பதிவு செய்யப்படவில்லை.

ஏழு கடற்கரை

முத்துக்குளித்துறையில் வேம்பார், வைப்பார், தூத்துக்குடி, புன்னக்காயல், வீரபாண்டியபட்டினம், ஆலந்தலை, மணப்பாடு ஆகிய ஏழு ஊர்களையும் ஒன்றாகச் சேர்த்து ''ஏழு கடற்கரை'' என்றழைக்கப்பட்டது. தூத்துக்குடியைத் தவிர மற்ற ஊர்கள்

ஒவ்வொன்றும் 'பட்டங்கட்டி' என்பவரால் நிர்வகிக்கப்பட்டு வந்தது. அவருக்கு உதவியாக 'அடப்பனார்' என்ற அதிகாரி நிர்வாகத்தில் துணைபுரிந்து வந்தார். தூத்துக்குடியில் 'சாதித்தலைவர்' என்ற பெயரில் முத்துக்குளித்துறையில் உள்ள அனைத்துப் பரதவர்களுக்கும் தலைவராக விளங்கினார். இவர் 'ஏழூர் கோமகன்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தார். இவரது இருப்பிடம் 'பாண்டியபதி' என்றழைக்கப்பட்டது. மேற்சொன்ன ஏழு முக்கிய ஊர்களிலும், அதனோடு இணைந்திருந்த கடற்கரையோர சிறு கிராமங்களில் வாழ்ந்த பரதவர்களும் சாதித் தலைவனது தலைமையின் கீழ் இருந்தனர். பரதவர்களால் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்த சாதித்தலைவரை தனக்கு நெருக்கமாக வைத்துக்கொள்ள போர்ச்சுக்கல் அரசரின் பிரதிநிதியும், கோவாவின் ஆளுநருமான மார்ட்டின் அல்போன்ஷா விரும்பினார். ஏற்கனவே போர்த்துக்கீசிய அரசரின் படைவீரர்களால் மனச்சோர்வு அடைந்திருக்கும் பரதவர்கள் கிறிஸ்தவ மதத்தில் நிலைத்திருக்க வேண்டும் என்று எண்ணிய அவர், பரதவ மக்களின் சாதித்தலைவருக்கு போர்த்துக்கல் நாட்டின் கௌரவப்பட்டமான 'சிஞ்ஞோர்சிஞ்ஞோர் டோம்' (Senhor Senhor Dom) என்ற பட்டத்தை வழங்கிப் பெருமைப்படுத்தினார். கி.பி.1543-ம் ஆண்டு தூத்துக்குடியில் இருந்த விக்கிரமபாண்டியன் என்ற ஜோ டி குருஸ் என்ற சாதித் தலைவருக்கு முதன் முதலாக இந்தப் பட்டம் வழங்கப்பட்டது. சாததித்தலைவர் தனது அதிகாரத்தின் அடையாளமாக, தங்கச்சிலுவை ஒன்றை நீளமான தங்கச்சங்கிலியில் கோர்த்து அணிந்திருப்பார். பரதவர்களுக்கிடையே ஏற்படும் வழக்குகளை தீர்த்து வைக்கும் உரிமையும், தேவைப்பட்டால் தண்டனை அளிக்கும் உரிமையும் அவரிடம் இருந்தது. சமூகத்தில் அவருக்கென்று தனி அந்தஸ்து இருந்தது. சுருங்கச் சொல்லவேண்டுமென்றால் முத்துக்குளித்துறை பரதவர்களின் குறுநில மன்னராக சாதித்தலைவர் இருந்தார்.

பதினாறாம் நூற்றாண்டின் மத்தியில் வேகமாகப் பரவிய கிறிஸ்துவ மதம், பதினேழாம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஒரு மந்த நிலையை அடைந்தது. முத்துக்குளித்துறையில் பணியாற்றி வந்த இயேசு சபைக்குருக்களுக்கும், கொச்சி ஆயர் அந்திரேயாவுக்கும் ஏற்பட்ட உட்பூசல்தான் இதன் காரணமாக இருந்தது. கொச்சி ஆயரால் கிறிஸ்துவ மகக்ள் தாக்கப்பட வேண்டிய சம்பவம் ஏற்பட்டுவிட்டது. தூத்துக்குடி மற்றும் கடலோரக் கிராமங்களில் வாழ்நத கிறிஸ்தவர்கள் துயரத்தில் மூழ்கடிக்கப்பட்ட சம்பவங்கள் சிலவற்றை இங்கே காணலாம்

பாளையக்காரர் ஆட்சி

வளமிக்க பாண்டிய நாடு, விஜயநகர மன்னரின் ஆட்சியின் கீழ் வந்த பிறகு, பாண்டிய மன்னர்கள் தென்தமிழ்நாட்டிற்குச் சென்றுவிட்டனர். தென்காசியைத் தலைநகராகக் கொண்டு, தென்பாண்டி நாட்டை ஆண்டு வந்தார்கள். ஆனால் விசுவநாத நாயக்கர் ஆட்சியின்போது, பாண்டிய மன்னர்கள் விஜயநகரப் பேரரசின் ஆளுகையின் கீழ் வந்தனர். தென்பாண்டி நாட்டில் பாண்டிய மரபினரது தொடர்பு

பதினாறாம் நூற்றாண்டு வரை நீடித்தது. அதன் பிறகு பாளையக்காரர்களின் செல்வாக்கு தென்பாண்டி நாட்டில் மேலோங்கி இருந்தது. மதுரையை ஆண்ட விசுவநாத நாயக்கர்தான் முதன் முதலாகப் பாளையக்கார முறையைப் புகுத்தினார். தென் மாவட்டங்களில் குடியிருப்புகள் அதிகமானதால் தனது ஆட்சி பரவுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள மன்னர் விரும்பினார்.

எனவே தனக்கு விசுவாசமுள்ளவர்களாக இருந்தவர்களை இதற்குப் பயன்படுத்திக்கொண்டார். பாளையங்களின் தலைவர்களாக இருப்பவர்களுக்கு, கோட்டை கொத்தளங்களை பாதுகாப்பது, விவசாயத்தைப் பெருக்குவது, சாலைகளில் மரம் வளர்ப்பது, போன்ற பணிகள் கொடுக்கப்பட்டிருந்தன. நாளடைவில் இந்த பாளையக்காரர்கள் மிகுந்த வலிமையும் செல்வாக்கும் பெற்றவர்களாக விளங்கினார்கள். தம் அதிகார எல்லைக்குள் அமைந்த நாட்டின் பகுதிகளுக்கு ஒரு அரசன்போல் வாழ்ந்தனர். தென் பாண்டிய நாட்டில் கடற்கரைப் பகுதி மட்டும் பாளையக்காரர்கள் வசம் இல்லாது போனது. அங்கு வாழந்து வந்த பரதவர்கள் போர்த்துக்கீசியர்களின் நேரடிப்பாதுகாப்பில் இருந்தனர். பதினாறாம் நூற்றாண்டில் தென்பாண்டிய நாடு பல்வேறு பாளையக்காரர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தாலும், கடற்பகுதி மட்டும் போர்த்துக்கீசியரின் நிர்வாகத்தில் இருந்தது.

அவ்வப்போது மதுரையை ஆட்சிபுரிந்து வந்த நாயக்க மன்னனும், தென்பாண்டி நாட்டின் பாளையக்காரர்களும், முத்துக்குளித்துறையின் உட்பகுதியில் தாக்குதல் நடத்திக் கொண்டிருந்தனர். எப்படியாவது முத்துக்குளித்துறையை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துவிட வேண்டுமென்று உறுதி பூண்டனர். போர்த்துக்கீசியர் படையினர் சோர்வடையும் வேளையில் தூத்துக்குடியையும் அதன் சார்பு ஊர்களையும் கைப்பற்றிக்கொள்ள வேண்டுமென்று திட்டமிட்டிருந்தனர். அவர்கள் நினைத்தபடியே, பதினேழாம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் போர்த்துக்கீசிய படையினர் வாணிபம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட ஆரம்பித்தனர். பரதவமக்களின் பாதுகாப்பில் அதிக அக்கறை காட்டாமல் இருந்தனர். இதுதான் தக்கசமயம் என்று நினைத்த மதுரை நாயக்கர் 1603-ம் ஆண்டு, பரதவர்கள் வரி செலுத்த வேண்டுமென்று ஆணையிட்டார்.

டச்சுக்காரர்களின் அட்டூழியங்களால் பரதவ மக்கள் அந்தக் காலத்தில் கடும் சிரமங்களுக்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஒருபுறம் போர்ச்சுக்கீசியரை வெற்றி கொண்ட டச்சுக்காரர்கள், மறுபுறம் முத்துக்காகப் பழி வாங்கத் துடிக்கும் முகமதியர், அவர்களோடு மதுரை நாயக்கரின் வடுகர் படை. கத்தோலிக்க வேதத்திற்குள்ளும் ஞானாதிக்கப் போட்டி. தாக்குப் பிடிக்க முடியாதவர்கள் தப்பித்தால் போதுமென்றே ஓடியிருக்கலாம். பாண்டியபதியே கொற்கை மக்களோடு ராஜதீவுக்குள் பதுங்கியிருக்கிறார். பல இடங்களுக்கும் சிதறி ஓடியவர்களில் ஒரு குழுவினர் மூக்கையூர்ப் பகுதிக்கும் வந்து குடியேறியிக்கலாம். இலங்கை மன்னார்ப் பக்கம் குடியேறிப் பரதவர்களும் இப்படிச் சென்றவர்கள்தான். அப்படி வந்தவர்கள் தங்கள் கத்தோலிக்க விசுவாசத்தை மட்டும் விடாமல் காப்பாற்றியிருக்கிறார்கள்.

அடக்குமுறையாலும், பொருளாதாரக் கட்டுப்பாடுகளாலும் டச்சுக்காரர்களும் சரி, அவர்களுக்குப் பிறகு வந்த ஆங்கிலேயர்களாலும் சரி, பரதவர்களைப் பததி மார்க்கத்துக்கு திருப்பவே முடியவில்லை.[74]

தொழில் : பனை ஏறுதல்

இடைச்சிவிளை தேரிப்பனங்காட்டில் சித்ரவேல் நாடாரின் விடுலி. நாடார் மேல் பக்கம் மூலையில் பனையோலைப் பாயில் முடங்கிக் கிடந்தார். பலநாள் சவரம் செய்யப்படாததால் முகத்திலும் தாடையிலும் கறுப்பு வெள்ளை கேசங்கள் அங்கங்கே துறுத்திக் கொண்டிருந்தன. உடுத்தியிருந்த நாலு முழ வேட்டி செம்பழுப்பேறியிருந்தது. முடங்கிக் கிடந்ததால் வேட்டியை இழுத்துப் போர்த்திருந்தார் நாடார். பக்கத்திலேயே மனைவி முத்துப் பாப்பா குத்த வைத்திருந்தாள். மூத்தவள் செல்லத்தாய் வாழ்க்கைப்பட்டுப்போன இரண்டாம் வருடமே சின்னவள் கட்டித் தங்கமும் சமைந்து தயாராக, வேறு வழியில்லாமல் சட்டிக்குள் பெட்டிக்குள் கிடந்தது எல்லாவற்றையும் போட்டு மகளைக் கெட்டிக் கொடுத்திருந்தார் சித்திரவேல். மூத்தவள் செல்லத்தாயை முத்துப் பாப்பாவின் கூடப்பிறந்தவனுக்கே கொடுத்திருந்தார்கள். படிப்பில்லை, ஆனாலும் ஆள் அங்குமிங்கும் ஓடி வீட்டை நடத்துவான். செல்லத்தாயும் விரும்பியே தாய் மாமன் பிச்சைக்கனியைக் கட்டிருந்தாள்.

தோட்டக் காடுகளில் அரைக்கீரை, தண்டுக்கீரை அறுத்துக்கொண்டு போய்ப் பக்கத்து ஊர்களில் வியாபாரம் பார்த்தாலும் கைக்கும் வாய்க்குமே சரியாய் இருந்தது. ஒரு முறை வண்டிமாடு போட்டுக் கொற்கைக்கு கருப்புக்கட்டி வியாபாரத்துக்காக பயணப்பட்டவர்களோடு வந்தவன் ஊர் பிடித்துப்போக கொற்கையோடே ஒட்டிக்கொண்டான்.[75]

பரதவர்கோன் பாண்டியபதி

மண்டையைப் பிளக்கும் உச்சி வெயிலையும் பொருட்படுத்தாது வெள்ளைக்கார அதிகாரிமாரும் சப்கலெக்டர் காலினும் காளவாசல் கடற்கரையில் அமர்ந்திருந்தார்கள். எல்லா வள்ளங்களும் கரை பிடித்திருந்த நிலையில் முத்துச்சிலாபம் ஆரம்பிப்பதற்கான நேரம். தேரியில் அரைக்கு மேலே வெற்று உடம்போடு நான்கு பேர் பல்லக்கைத் தூக்கிவர கட்டியம் கூறும் கட்டியங்காரன் முன்னே ஓடி வந்தான். பல்லக்கைத் தூக்கி வந்தவர்கள் காளவாசல் மரவீட்டை நெருங்கிப் பல்லக்கை கீழிறக்கிப் பவ்வியமாய்ப் பணிந்து நின்றனர். அதற்குள் கொற்கை மேசைக்காரத் தனவந்தர்கள் கூட்டமும் கூடிவிட, கட்டியங்காரன் குரலெடுத்தான்.

"அயொத்திப் பரவன்
அலைகடலுக்கரசன்
சிற்பமாய் மண்படகு
செய்து ஓட்டினோம் ...

யாகி யோகி...
தீர்க்காபிசேகன்...
பாண்டியன் மகளை
பவுள்சுர வளர்த்தோம்
பார்வதி சிவனுக்கு
பகற் மணம் கூட்டினோம்
பல்லக்கு பெற்றோம்
உத்திரகோச மங்கையில்
கல்தேர் ஓட்டினோம்
துஷ்யந்த் மகராச.....
சுக பௌத்திரரான
பாண்டியபதி வருகிறார்
பராக்... பராக்... பராக்....

பல்லக்கின் திரை விலக்கி வெளியே வந்தார் பரதவர்கோன் பாண்டியபதி குணதாசியுஸ். கைதூக்கி விட்டனர் அருகிலிருந்த உதவியாளர்கள். அங்கே எழுந்து நின்றிருந்த வெள்ளைக்கார அதிகாரிகளையும் சப்கலெக்டரையும் பார்த்துப் புன்னகைத்தவாறே தனக்குரிய ஆசனத்தில் போய் அமர்ந்தார் பாண்டியபதி. தாடு பாய்த்துக் கட்டிய பட்டு வேட்டி. காப்பிக் கலரில் கழுத்தில்லாத கோட்டும் தோளில் பட்டு நேரியலும் அணிந்திருந்தார். கழுத்தில் கோட்டுக்கு வெளியே தொங்கிய தங்க மாலையில் பாரம்பரியக் குருசு தொங்கியது. தலையில் அணிந்திருந்த கிரீடத்தைக் கழற்றி உதவியாளரிடம் கொடுத்தார் பாண்டியபதி.

சிறிது நேரத்தில் வள்ளங்களிலிருந்து கொண்டுவந்த முத்துச் சிப்பிகள் கொண்டுவரப்பட்டு அவரவர் பங்கு அவரவர் முன் குவிக்கப்பட்டன. ஏற்கனவே பர்னாந்துமாரிடமிருந்து வசூலிக்கப்பட்ட சிப்பிகளையும் கொண்டுவந்து பாகம் பிரித்துப் போட்டார்கள். வெகுநாளானதால் அவை சீழ் வடிந்து அதிலிருந்து கிளம்பிய துர்நாற்றம், குதிரைச் சாண நெடியையும் தோற்கடிப்பதாய் இருந்தது. சப் கலெக்டர் முன் குவிக்கப்பட்டிருந்த சிப்பிகளைச் சாக்கு மூட்டைகளில் கட்டிச் சுமந்து கொண்டு போய்த் தயாராய் நின்றிருந்த மாட்டு வண்டிகளில் ஏற்றினார்கள். சாதித் தலைவனார் பங்குக்கு வந்த சிப்பிகளை அவர் கையில் வைத்திருந்த சிறு குச்சால் கிளறிப் பார்த்துவிட்டுத் தன் உதவியாளர்களைக் கூப்பிட்டு அவற்றை அள்ளிக் காளவாசலுக்குப் பணிய இருந்த தொட்டிகளில் போடச் சொன்னார். தொட்டியைச் சுற்றி சாதித் தலைவனாரின் உதவியாட்கள் காவலுக்கு நிற்க, சாதித் தலைவனார் புறப்படத் தயாரானார். சப் கலெக்டர் காலின் எழுந்து பவ்வியமாய்த் தலையசைத்து மரியாதை செய்ய, பாண்டியபதி தன் பல்லக்கில் ஏறி அமர்ந்தார். அவர் கிளம்பிய அடுத்த நொடியே சப் கலெக்டரும் கிளம்பிவிட, அங்கே அடுத்த சந்தை ஆரம்பமானது.

சாதித் தலைவரை வழியனுப்பித் திரும்பியிருந்த மேசைக்கார்க் கூட்டமும் இப்போது சந்தைக்குள் புகுந்திருந்தது.[76]

பாண்டியபதியின் படுக்கையறை, மேல் மாடத்தில் கடற்கரைச் சாலையை ஒட்டியே அமைந்திருந்தது. நடுச்சாமத்தில் தோணியைப் பாலத்தில் பிடித்தவர்கள் சாலை வழியே நடந்து போகும் காலடிச் சத்தமும் அவர்கள் பேசுவதும் கேட்டது.

''செல்வமின்னா செல்வம் அப்புடி மலபோல குமிஞ்சி கெடக்குமாம் முத்தும் பவளமும் அள்ளி அள்ளிக் குடுப்பாராம். இன்னைக்கி எவம் எவனோ கடலரசமிங்குராள்வ. எதுத்தால கண்டாலே ஆணும் பொண்ணும் கமுரடிச்சி வுழுந்து வணங்குமாம்.''

சத்தம் அருகிக் கேட்டது. பின் அவர்களின் காலடிச் சத்தம் பிறகு ஊ ஊவென சன்னல் வழியாக வந்து மோதிய காற்றின் ஓசை மட்டுமே கேட்டபடியிருந்தது. பாண்டியபதியிடம் அசைவில்லை. உறங்கிப்போயிருந்தார்.

''அப்பா படுத்திருக்க கட்டுலுக்கு கீழதாம் இருந்திச்சாம்'' என்றாள் குணசீலி.''

''எதம்மா...?'' கேட்டாள் பெற்றீசியா.

''அதாம் பேயலசு. பாட்டி பாண்டிமாதேவி, பேரு மர்க்ரீத் மரிய ரத்தினமின்னு சொல்லுவாவ. அவுங்கதாம் அத எடுத்துவச்சி செல்வா வெள்ளியில பூச பண்ணுவாவளாம். அவுக போயி சேந்த பெறகு யாருமே அத தொடலயாம்.''

பரம்பரை பரம்பரையாக வந்த பாண்டியபதி வம்சம் ஆண்வாரிசு இல்லாத காலங்களில் பெண் வயிற்றுப் பிள்ளைகள் மூலம் தொடர்ந்திருக்கிறது. கத்தோலிக்கராய் இருந்தாலும் வழிவழியாய்க் கும்பிட்டு வந்த தாய் தெய்வ வழிபாடுகளை அரண்மனைக்குள்ளேயே நடத்தி வந்திருக்கிறார்கள். பாண்டியபதியாய் மகுடாபிசேகம் பெறும் யாராய் இருந்தாலும், அவர் முதன்முதலாய்க் குமரி ஆத்தாளை கும்பிட்டு மதுரையில் மீனாட்சியை வணங்கித் திருஉத்திரகோசமங்கையில் மங்களேசுவரியைத் தரிசித்துப் பின் கொற்கையில் சந்தனமாரியை வணங்கி வந்த பின்தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்பது வழக்கமாய் இருந்திருக்கிறது. கால காலமாக நடந்துவந்த இந்த நடைமுறையை மாற்றி விட்டுத்தான் வேடிக்கை பார்த்தார்கள் மேற்றிராசனக் குருக்கள். ஏழு கடல்துறையும் அது சார்ந்த மற்ற கடற்கரையூர்களிலும் பாண்டியபதி ஆட்சியைக் குலைத்து மேற்றிராசனத்தின் பரிபூரண ஆட்சி அதிகாரத்தைக் கடற்கரையூர்களில் நிலைத்து நிறுத்துவதே பொறுப்பெடுத்த ஒவ்வொரு சாமியாரின் தலையாய கடமையாய் இருந்திருக்கிறது. வஞ்சிக்கப்படுவது தெரியாமலேயே கத்தோலிக்கம் வாழ அனைத்து வழிவகைகளும் செய்து கொடுத்திருக்கிறார்கள் பாண்டியபதிகள்.[77]

முத்து, சங்கு குளித்தல்

பண்டைய தூத்துக்குடியின் முதன்மைத் தொழில்களாக முத்துக்குளித்தலும் சங்கு குளித்தலும் விளங்கின. தூத்துக்குடியின் சிறப்புக்கு மட்டுமன்று பாண்டியரின்

ஆட்சிக்காலப் பெருமைக்கும், தமிழரின் புகழ் கடல் கடந்து பரவுவதற்கும் வித்திட்டது தூத்துக்குடி முத்துகளே. பாண்டியநாடு முத்துடைத்து என்றும் சொல்வழக்கு இதனை உணர்த்துகின்றது. மேற்கூறிய தொழில்கள் நலிவடைந்த காலத்தே மீன்பிடித்தலை முதன்மைத் தொழிலாக மேற்கொண்டனர். முத்துக்குளித்தல் பற்றிய விரிவான தகவல்கள் தமிழ் இலக்கியங்களில் இல்லை. கொற்கை நாவலில் முத்துக்குளித்தல் மற்றும் சங்கு குளித்தல் இடம்பெறுகிறது.

பாண்டியரின் ஆட்சிப் பகுதியான தூத்துக்குடியில் முதலாம் நூற்றாண்டுக்கு முன்னரே முத்தெடுத்தல் நடந்துள்ளது. சந்திரகுப்த மௌரியரின் அரசவையில் கிரேக்கத் தூதராக இருந்த மெகஸ்தனிஸ், கி.பி.முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த ரோமானிய எழுத்தாளர் ஏப்ரியன் (Aelian), பெரிப்புளூஸ், பிளினி, தாலமி ஆகியோரிடமிருந்து கிடைக்கும் தகவல்கள் இதனை உறுதிபடுத்துகின்றன.[78] முத்துக்குளிப்பவர் தூத்துக்குடியில் பலருண்டு. இங்கு கிடைக்கும் முத்துகள் உலகிலேயே மிகச்சிறந்தவை.[79]

பாண்டியரின் ஆட்சிக்கு முத்துக்குளித்தல் மூலமே பெரும் வருவாய் கிட்டியது. இம்முத்துக்கள் மீது அந்நியர் கொண்ட பற்றுதலே பிற்காலத்தில் பாண்டியரின் வீழ்ச்சிக்கும் அடிகோலியது என்கின்றனர் வரலாற்று ஆய்வாளர்கள்.

பலவகை முத்துகள் நிலத்திலும் நீரிலும் விளைகின்றன. நிலத்தில் விளையும் முத்துக்களுக்கு மதிப்பில்லை. மூங்கிலின் கணுக்களிலும் முத்துகள் உருவாகும். அவை மக்களால் விரும்பப்படுவதில்லை. மாறாக, கடலில் விளையும், முத்துகளையே உலக மக்கள் விரும்பி அணிந்தனர். இதனுடன் நன்னீர் முத்துகளும் கிடைக்கப் பெறுகின்றன.

சங்கிலிருந்து முத்து எடுக்கப்படுவதாகச் சிலர் எழுதியுள்ளனர். இதனையே உண்மையென நம்பியவர்களுமுண்டு, உண்மையில் சிப்பியில் இருந்தே முத்துகள் உருவாகிறது. கடலின் மேற்பரப்புக்கு வரும் சிப்பி வாய் திறக்கும்போது அதனுள் விழும் மழைத்துளி முத்தாக மாறுவதாக இன்றும் பலரால் நம்பப்படுகிறது. இதுவும் முன்னதைப் போன்று கற்பனையான செய்தியாகும். ஒன்பதுக்குமேற்பட்ட முத்துச்சிப்பி இனங்களில் ஹேலியாடிஸ், பிலாக்குனா என்பவை தவிர பிற அனைத்தும் பிங்டடா பேரினத்தைச் சார்ந்தவை. பிங்டடா. பியுகேடா, பிங்டடா மார்கரீடி.்.பெறா, பிங்டடா வல்காரிஸ் போன்றவை தரமான முத்துகளை உருவாக்குகின்றன. இதில் இறுதி வகைதான் முத்துச்சிப்பி வளர்த்தலுக்கு ஏற்றது. யுனியோ போன்ற நன்னீர் மட்டிகளும் முத்துகளை உருவாக்குகின்றன. அவற்றுக்குப் பெரிதான மதிப்பில்லை.

சிப்பியில் ஆண், பெண் இனங்கள் உண்டு, இதன் வழியாகக் கடல் நீரில் சிப்பியின் இளம் உயிரிகள் (Larva) உற்பத்தியாகிறது. அவை சிறிது வளர்ந்தபின் ஸ்பாட்டுகளாகி உருமாற்றமடைந்து கடலடித்தரையில் வீழ்ந்துபட்டு கடலில் பாறை போன்ற கடினமான பரப்புகளில் ஒட்டிக்கொண்டு பெரிதாக வளரும்.

சிப்பிகள் மெல்லுடலி வகையின. அவற்றின் உடலை மூடிப்பொதிந்து மேன்டில் என்னும் மென்மையான மதிப்பு உள்ளது. மணல்துகள் அல்லது ஓட்டுத்துண்டு போன்ற உறுத்தல் தரும் கடினப் பொருள் சிப்பியின் மேண்டில் பகுதியில் புகுந்தால் அவ்வுறத்தலைக் குறைக்கும் விதமாக சிப்பியின் மேன்டில் பகுதியிலிருந்து சுரக்கும் நாக்கர் (Nacre) என்னும் திரவமே படிந்து படிந்து கெட்டியாகி நாளடைவில் முத்தாகிறது.

எல்லா சிப்பிகளிலும் முத்துகள் உருவாவதில்லை. துன்பத்திற்கு உள்ளாக்கப்படும் சிப்பியிலிருந்து முத்து கிடைக்கின்றது. முத்து சிப்பிகள் ஓட்டிவளர மன்னார் வளைகுடாவில் காணப்படும் கடலடிப் பாறைகள் தகுந்த பகுதிகளாக உள்ளன.

முத்தெடுத்தல்

முத்தெடுப்பதில் கடலடியில் ஆழத்தினால் ஏற்படும் அழுத்தம் முக்கியமான சிக்கல். ஒவ்வொரு பத்து மீட்டருக்கும் ஒரு மடங்கு காற்று மண்டல அழுத்தம் கூடுகிறது. அதிக அழுத்தத்தை உடல் கவசம் போன்ற சிறப்பு ஏற்பாடுகள் இல்லாமல் சமாளிக்க இயலாது.

முத்தெடுப்பதில் கைதேர்ந்த மீனவர்களால் முத்துகள் கிடைக்குமிடம் தேர்வு செய்யப்படும். ஏப்ரல் மாதத்தில் தொடங்கும் இத்தொழில் மே மாதம் வரை நடைபெறும். இக்காலத்தில் அலைகள் குறைந்தும், கடல் தெளிந்து இருக்கும்போது முத்துக்குளிப்பு நடைபெறும்.[80] (ச.டெக்லா, 2009, பக்.5) முத்துக்குளித்தல் அக்டோபர், நவம்பர் மாதங்களில் நடைபெற்றதாகவும் பதிவுகள் உள்ளன.

முத்தெடுப்பவர் தண்ணீரில் 24 முதல் 60 அடி (Four to Ten Fathoms) ஆழம் வரை மூழ்குகின்றனர், 78 அடிகள் (பதின்மூன்று .ாதம்ஸ்) ஆழத்தைத் தாண்டி ஒரு போதும் செல்வது இல்லை.[81] இந்த ஆழத்தைத்தாண்டி கடலுக்குள் சென்றால் கடல்நீரின் அழுத்தத்தால் காதின் செவிப்பறை கிழிந்துவிடும். சில சமயம் உயிருக்கும் ஆபத்து நேரிடும். கரையிலிருந்து பத்து அல்லது பனிரெண்டு மைல்களுக்கு அப்பால் கடலினுள் அமைந்துள்ள பாறைகள், மேடுகள் மீது நின்றவாறு முத்தெடுப்பர்.

முத்தெடுக்கச் சென்ற முதல் குழுவினர் படகுக்கு வந்ததும் அடுத்தக் குழுவினர் கடலுக்குள் செல்வர். தண்ணீல் மூழ்கி முத்தெடுத்தல் மிகவும் களைப்பை ஏற்படுத்தக் கூடியது. மிக்க வலிமை வாய்ந்த ஒருவன் ஒரு நாளில் ஏழு அல்லது எட்டு முறைக்கு மேல் கடலில் மூழ்க இயலாது.[82] கடலில் இறங்குவதற்கும் காதுகள், மூக்குத் துவாரங்களில் நீர் புகுந்திடாதிருக்கவும் எத்தகையை கருவிகளையும் மீனவர்கள் பயன்படுத்தவது இல்லை. சிறுவயது முதலே முத்துக்குளிக்கப் பழகிவிடுவதால் கருவிகளின் உதவிகள் தேவையற்றதாகி விடுகிறது.

முத்துக்குளிப்பவர் பெரிய கல் ஒன்றைக் கயிற்றால் கட்டி அக்கல்லின்மேல் நின்றபடியே கடலுக்குள் செல்வார். முத்துக் குளிப்பவரின் இடுப்பைச் சுற்றி கட்டப்பட்ட நீளமான கயிற்றின் ஒரு முனை படகில் இருப்போரிடம் இருக்கும். முத்தெடுப்பவரின் சைகைக்குக் கட்டுப்பட்டுச் செயல்பட படகில் இருப்போர் எப்போதும் விழிப்புடன் இருப்பர்.

முத்துக்குளிப்பவர் மூச்சை அடக்கிச் சிப்பிகளைச் சேகரித்த பிறகோ தன்னால் மூச்சை இனியும் அடக்க இயலாத வேளையிலோ, தன் இடுப்பில் கட்டப்பட்டுள்ள கயிற்றைப் பிடித்து இழுப்பார். இந்தச் சைகையைப் புரிந்து கொண்டு படகில் இருப்போர் கயிற்றைத் தூக்குவர். முத்துக் குளிப்பவர் மீன்களால் தாக்கப்பட்டால் கடலில் தெரியும் குருதியை வைத்து படகில் இருப்போர் நிலைமையைப் புரிந்து கொண்டு மீனவரைக் காப்பாற்றுவதுமுண்டு.

கயிற்றைப் பிடித்திருக்கும் பொறுப்பு முத்தெடுப்பவரின் மைத்துனர் (மனைவியின் சகோதரன்) படகில் இருந்தால் அவர் வசம் ஒப்படைக்கப்படும். படகில் இருக்கும் மைத்துனரின் கவனக்குறைவால் முத்தெடுப்பவரின் உயிர்போயின் சகோதரியின் வாழ்வும் கேள்விக் குறியாகிவிடும். எனவே படகில் இருப்பவர் சகேதரியின் தாலிக் கயிற்றைப் பிடித்திருப்பது போன்ற பொறுப்புடன் அத்தானின் இடுப்புக் கயிற்றைப் பொறுப்புடன் பிடித்திருப்பார்.

முத்துக்குளிப்பவர் கடலுக்குள் சென்று பாறையில் ஒட்டியிருக்கும் சிப்பிகளைப் பிடுங்கி இடுப்பில் கட்டியிருக்கும் வலையில் சேகரிப்பர். சிப்பிகளைச் சேகரித்தபின் கல்லை விடுத்து நீரில் நீந்தி மேல் மட்டத்திற்கு வருவர். சிலர் கல்லின்மேல் நின்றபடியே படகில் இருப்போர் உதவியுடன் மேலே வருவதும் உண்டு. இவ்வாறு சேகரித்துக் கரைசேர்க்கப்பட்ட சிப்பிகளைத் திறந்து முத்தெடுப்பர். எடுக்கப்பட்ட முத்துக்களைத் தரவாரியாகப் பிரிப்பர். முத்து எடுக்கும் காலத்தில் தினமும் குறைந்தது இரண்டு இலட்சம் முத்துச்சிப்பிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.[83]

முத்துப்படுகை

மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடி கடற்கரைப் பகுதியிலும் எதிரே இலங்கையின் மன்னார் தீவுப்பகுதியிலும் முத்துப்படுகைகள் உள்ளன. முத்துப்படுகை என்பது முத்துச் சிற்பி வளரும் பாறையைக் குறிக்கும், மன்னார் வளைகுடாவின் கடற்கரை ஓரத்திலிருந்து 10 முதல் 20 கிலோ மீட்டர் தூரத்தில் 14 முதல் 24மீ வரை ஆழப்பகுதியில் படுகைகள் காணப்பட்டன. இப்பாறை தூத்துக்குடி அருகே ஏழு மைல் நீளமும் இரண்டு மைல் அகலமும் கொண்டு இந்தியக் கடற்கரையில் மிகப்பெரிய முத்துப்படுகையாய் அமைந்துள்ளது.[84]

முத்துச் சலாபம்

சிப்பியிலிருந்து எடுக்கப்பட்ட முத்தில் பத்தில் ஒரு பங்கு அப்பகுதியை ஆட்சி செய்யும் மன்னனுக்கு வழங்கப்பட்டது. கடலைக் கட்டி முத்தெடுக்க உதவிய கடல் கட்டிகளுக்கு இருபதில் ஒரு பங்கு வழங்கப்பட்டது. மீதியிருப்பதைச் சாதித் தலைமை, மதத்தலைமை, படகின் உரிமையாளர், முத்தெடுப்பவர்கள் பங்கிடுவர். படகின் உரிமையாளர் சிலர் பங்கு கொடுப்பதற்குப் பதில் முத்தெடுப்பவருக்குக் கூலி பேசி அழைத்துச் செல்வதுமுண்டு. தூத்துக்குடியில் முத்துக்குளித்தல் நடைபெற்ற காலத்தில் 18.000 ∴ப்ளாரின்களை (பழங்கால ஐரோப்பிய நாணயங்களை) ஈட்டியுளளனர்.[85]

முத்துச்சிப்பி வளர்த்தல்

கடலில், முத்துச் சிப்பியில் முத்து உருவான முறைப்படியே ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வாராய்ச்சியால் சப்பானிய விஞ்ஞானி முத்து உற்பத்தி செய்யும் நுட்பத்தை அறிமுகம் செய்தார்.[86] தமிழகத்தில் இம்முறைப்படி இராமேசுவரத்திலுள்ள மண்டபம், தூத்துக்குடி அருகேயுள்ள வேப்பலோடை கடல்பகுதியில் முத்து உற்பத்தி நடைபெற்று வருகின்றது.

அழிந்துபோன முத்தெடுப்பு

பாண்டியரின் செல்வச் செழிப்புக்கு அந்நியரின் படையெடுப்புக்கும் காரணமான முத்துச் சிப்பிகள் தற்போது இப்பகுதியில் இல்லை. 1960களுக்குப் பின் முத்தெடுக்கும் தொழில் தடைபட்டுப் போனது. ஆயினும், தற்போது தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் வாழும் வலைஞர் (வலைஞர் = வலையர்) என்ற மீனவ இனக் குழுவினர் சங்கு குளித்தல் (சங்கு எடுத்தல்) தொழிலைக் குறிப்பிட்ட காலங்களில் செய்து வருகின்றனர்.

தூத்துக்குடிக் கடலின் மாசுபாடு காரணமாக முத்துப்படுகைகள் பல கிலோ மீட்டர் தொலைவுக்கு நகர்ந்து விட்டதாகச் சொல்கின்றனர். மன்னார் வளைகுடாவில் பெருகிவிட்ட கப்பல், விசைப்படகுகளின் போக்குவரத்தும் நவீன மீன்பிடி சாதனங்களின் பயன்பாட்டாலும் முத்துச் சிப்பியின் உற்பத்தி தடைபட்டுப் போனது.

பாண்டியர் ஆட்சிக் காலத்தில் முத்தெடுக்கும் தொழிலை இந்துசமய பரதகுல மீனவர்களே செய்தனர். இந்து பரதவர்கள் கிறிஸ்தவராக சமயம் மாறிய பிறகும் முத்துக்குளித்தனர். முதலில் முத்துக் குளித்தல் ஓர் கோமகனின் ஆட்சிக்குள்ளேயே பரவர் அல்லது பரதவர் எனப்பட்டு வந்த சமூகத்தின் குலத்தொழிலாக நடந்துள்ளது.[87]

பரதவர் என்று சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டவர்கள் இன்று பரவர், பரவன், முக்குவர், மீனவச் செட்டியா, பருவத ராஜகுலம், செம்படவர், மீனவப்

படையாச்சி, நாட்டார், வர்ணகுல முதலியார், பெத்தவர், சீவிலியர், வலையர், அம்பலக்காரர், முத்தையர், பட்டங்கட்டி, கடையர், கரையர், பரமன், ஓடக்காரர் என பல்வேறு சாதிப்பெயர்களைத் தாங்கி மீன்பிடிப்பைச் செய்து வருகின்றனர்.

சங்கு குளித்தல்

முத்துக்குளித்தல் நடைபெற்ற பண்டைய காலந்தொட்டே சங்கு குளித்தலும் (கடலில் மூழ்கி சங்கு எடுத்தல்) தூத்துக்குடியில் நடைபெற்றுள்ளது. சங்கு குளித்தல் அக்டோபர் முதல் மே வரை நடைபெற்று உள்ளது. முத்துப் படுகைகளின் சுற்று வட்டாரத்தில் ஏறத்தாழ ஏழு முதல் பத்து கடலடி ஆழத்தில் சங்குகள் இருக்கும். சங்குகள் முத்துச் சிப்பிகளைப் போல் பாறையில் ஓட்டிக் கொண்டு இருக்காது. கடலடியின் மணற்பரப்பில் புதைந்தோ பவளப்பாறையின் வெடிப்புகளுக்கு இடையிலோ காணப்படும்.

சங்கு குளிப்பவர்கள் படகின் மூலம் சங்கு கிடைக்கும் இடத்திற்குச் செல்வர். சங்கு குளிப்பதற்கென்று எத்தகைய சாதனங்களையும் பயன்படுத்தாது முத்து எடுப்பவர்கள் போன்றே இவர்களும் காலில் கல்லையும் இடுப்பில் கயிற்றையும் கட்டிக் கொண்டு கடலில் மூழ்கிச் சங்குகளைச் சேகரித்துள்ளனர். கடல் மணலில் புதைந்துள்ள சங்குகளை எடுத்து இடுப்பில் கட்டியுள்ள வளையில் சேகரித்தபின் கடலின் மேற்பரப்புக்கு வருவர். தான் சேகரித்த சங்கின் எடையினால் கடலின் மேற்பரப்புக்கு வரமுடியாமல் இறப்பதும் நிகழ்ந்துள்ளது. சங்கெடுப்பவர்கள் நீருக்கடியில் நாற்பது முதல் ஐம்பது வினாடிகள் மட்டுமே இருப்பர். சங்கு குளிப்பவர்களும் கடல் கட்டிகளின் துணையினை நாடி உள்ளனர்.

டச்சுக்காலனி ஆதிக்கத்தின் கீழ் தூத்துக்குடி இருந்த போது சங்கு குளித்தல் ஏலத்துக்கு விடப்பட்டுள்ளது. ஏலம் எடுத்தவர்கள் சங்கு குளிப்பவர்களைக் கூலிக்கு அமர்த்தியுள்ளனர். இதே நடைமுறை ஆங்கிலேயர் ஆட்சியிலும் தொடர்ந்துள்ளது. சங்கு குளிப்பவர்கள் கூலி உயர்வுக்காகப் போராட்டம் நடத்தி அரையணா கூலியை உயர்த்திப் பெற்றுள்ளனர். முத்துக் குளித்தலில் கிடைத்ததைப் போன்றே சங்கு குளித்தலிலும் ஆட்சியாளர்களுக்கு வருமானம் கிடைத்துள்ளது.

சங்கின் வகைகள்

கொற்கை நாவலில் பக்கம் 191-192 ஆகியவற்றில் சங்கின் வகைகள் இடம்பெறுகின்றன. வலம்புரிச் சங்கு. சாதாரண சங்கு என இருவகை சங்குகள் உள்ளன. வலம்புரிச் சங்கின் வாய் இடமிருந்து வலம் நோக்கியும், சாதாரண சங்கின் வாய் வலமிருந்து இடம் நோக்கியும் இருக்கும். வலம்புரிச் சங்குகள் அபூர்வமாகவே கிட்டும். தூத்துக்குடி சங்கு பருமன், எடை, உறுதி ஆகியவற்றால் பெயர் பெற்றவை. சங்கின் வளர்ச்சி அவ்வப் பகுதியின் கடலின் தட்ப வெப்பம் மற்றும் கடல் மாசுபடாமல் இருப்பதைப் பொருத்து அமையும்.

இப்பியாயிரமே சூழ்ந்த திடம்புரி யென்று கூறும்
ஒப்பில் சங்காயி ரம்சூ முறும்வலம் புரியென்றோதும்
அப்படி யதுவும் சூழ்ந்த சலஞ்சல மாகும் மற்றைத்
தப்பிலாச் சலஞ்ச லங்கள் சூழ்ந்தது பாஞ்ச சன்யம்''

என்ற பாகம்பிரியாள் பிள்ளைத் தமிழ்ப் பாடல் வழியே இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்ச சன்யம் என்று சங்குகளுக்குப் பெயரிட்டு உள்ளதை அறிகிறோம்.[88]

கிருஷ்ணனின் சங்கு பாஞ்சசன்யம் என்றும், அர்ஜீனனின் சங்கு தேவதத்தம் என்றும், பீமரின் சங்கு பௌந்திரம் என்றும், யுதிஷ்ட்ரரின் சங்கு அனந்த விஜயம் என்றும், நகுலன் சங்கு சுகோசம் என்றும் , சகாதேவன் சங்கு மணிபுஷ்பகம் என்றும் பகவத் கீதை கூறுகின்றது.

சங்கின் பயன்பாடு

பண்டைய காலந்தொட்டு இன்றுவரை சங்கு புனிதப் பொருளாகக் கருதப்படுகிறது. இந்துக்களின் தெய்வமான விஷ்ணுவின் கையில் வலம்புரிச் சங்கு இருப்பதைக் காணமுடியும், விஷ்ணுவுக்குச் சக்கரபாணி என்றதொரு பெயருமுண்டு. இந்துக்கள் சங்கைப் பூசை அறையில் வைத்து வழிபடுகின்றனர். வலம்புரிச் சங்கினை வைத்திருந்தால் நன்மை கிட்டும் என்ற கருத்து இசுலாமியர்களிடமும் உள்ளது.

பகைநாட்டின் மீது தாக்குதல் தொடுக்கும் முன் ஊதப்படும் சங்கொலி மூலம் பகைநாட்டு மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்கினர். இதனால் போரில் மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கப்பட்டது. சங்கொலி எழுப்பிப் போர் தொடுப்பதை மரபாகவே கைக்கொண்டனர் அக்கால மன்னர்கள்.

குழந்தைகளுக்குச் சங்கின் மூலம் பால் ஊட்டுவதும், இறப்பு நிகழ்ச்சியில் சங்கு ஊதி ஒலி எழுப்புவதும் இன்றும் வழக்கில் உள்ளது. வீட்டு முற்றத்தில் சங்குகளைப் பதிக்கும் வழக்கம் இன்றும் பரதர் சமூகத்திடம் காணப்படுகிறது. மகாபாரதம் பகவத்கீதையில் சங்கு பற்றிய செய்திகள் உள்ளன. தமிழிலக்கியங்கள் சிலவற்றிலும் சங்கு பற்றிய செய்திகள் காணக்கிடக்கின்றன. சங்கிலிருந்து எடுக்கப்படும் சதையை மீனவர்கள் பக்குவப்படுத்திப் பொரித்து உண்ணுகின்றனர்.

அணிகலனான சங்கு

கொற்கையில் சங்கு வளையல் தொழிற்கூடங்கள் இருந்துள்ளன. பண்டைய இந்தியரின் அணிகலன்களுன் ஒன்றாகச் சங்கும் இருந்துள்ளது. சங்கில் செய்யப்பட்ட வளையல்களைத் தமிழ்ப் பெண்டிர் விரும்பி அணிந்துள்ளனர். பண்டைய தமிழ்நாட்டில் சங்கு தாலியுடன் இணைக்கப்பட்டுள்ளது.

கி.பி.500க்கு முன்பு, தமிழ்நாட்டில் சங்குகளை வளையல்களாக வெட்டி இந்தியாவின் பிறகு பகுதிகளுக்கு அனுப்பியுள்ளனர். சங்கு குளித்தலைச் செய்து

வந்த பரவர்கள் போர்ச்சுக்கீசியர்களால் சமய மாற்றம் செய்யப்பட்ட பின்னரும் அத்தொழிலைச் செய்து வந்தனர்.

விலை குறைந்த கண்ணாடி வளையலின் வரவு சங்கு வளையலின் பயன்பாட்டைக் குறைத்து விட்டது. சங்கினை வளையலாகச் செய்து அனுப்பாமல் முழு சங்கையே மேற்கு வங்கத்திற்கு அனுப்பத் தொடங்கினர். அந்த ஏற்றுமதி இன்றும் தொடர்கிறது. சங்கு அறுக்கும் தொழில் தமிழகத்தில் தடைப்பட்டபோது மேற்குவங்கம் அத்தொழிலைத் தனதாக்கிக் கொண்டு இன்றும் அதனைச் செய்து வருகின்றது.

சங்கு பற்றிய அயலாரின் செய்திகள்

தமிழரின் வாழ்வியல் பற்றி அறிய அயலாரின் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன. கொற்கை, தூத்துக்குடியில் மேற்கொள்ளப்பட்ட சங்கு குளித்தல் பற்றி அயலவர் பலரும் குறித்துள்ளனர். ஆறாம் நூற்றாண்டில் தமிழகத்திற்கு வருகை புரிந்த எகிப்தின் காலஸ்மோஸ் துறவி, கி.பி.851இல் வருகை தந்த அரேபியரான அபுசயத், பதினாறாம் நூற்றாண்டின், பார்போசா, கார்ஸியா டி ஓர்த்தா (1563), பொக்காரோ (1644) பட்டே (1971) கால்டுவெல் போன்றோர் தரும் செய்திகள் சங்கு, அதன் பயன்பாடு, வணிகம் பற்றி அறிய உதவுகிறது.

இன்றைய சங்கு குளிப்பு

தூத்துக்குடியில் இன்றும் சங்கு குளித்தல் தொழில் செய்யப்படுகிறது. சங்கு குளிக்க அறிவியல் சாதனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. சங்கு குளிக்கும் மீனவர்கள் தூத்துக்குடியிலிருந்து எட்டு முதல் பத்து கடல் மைல் தொலைவில் அறுபது முதல் எண்பது அடி கடல் ஆழத்திற்குச் சென்று கடல் மணலில் புதைந்துள்ள சங்குகளை எடுத்து வருகின்றனர்.

சங்கு குளிக்கும் தொழிலாளர்கள் கடலில் மூழ்கி சங்குகளைச் சேகரிக்க கடலடி சுவாச கருவிகளைப் பயன்படுத்துகின்றனர். கடல் கட்டிகளின் துணையின்றியே இன்று சங்கு குளிக்கும் தொழில் செய்யப்படுகிறது. எடுத்து வரும் சங்குகளுக்கு ஏற்ப கூலி பெறுகின்றனர் சங்கு குளி தொழிலாளர்கள்.

தொழிற்சாலைகளின் கழிவுகள் கடலில் கலப்பதாலும், பெருகிவிட்ட கப்பல் போக்குவரத்தாலும், கடல்வாழ் உயிரினங்களின் வாழ்விடமான பவளப் பாறைகள் அழிக்கப்படுவது தொடர்வதாலும் மெல்லுடலியான சங்கின் உற்பத்தி குறைந்து வருகின்றது. தூத்துக்குடியில் அரிதாகவே வலம்புரிச் சங்கு கிட்டுகின்றது. சங்கின் எடையைப் பொறுத்தே அதன் விலை அமையும். சிறிய வலம்புரிச் சங்கு இலட்ச ரூபாய் மதிப்புடையது. சங்கு குளிக்கும் மீனவர்கள் தூத்துக்குடியில் திரேஸ்புரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் வாழ்கின்றனர்.[89]

வலைக்குடி காளவாசல் கடற்கரையிலிருந்து சங்குமால் வரையிலும் விரிந்த மணற்பரப்பில் சிறு சிறு குவியல்களாக முத்துச் சிப்பிகளைக் குவித்து ஏலம் போட ஆரம்பித்தார்கள் பரதவப் பெண்டிர். மலபார்த் தோட்டத்துச் சிப்பி, பூந்தோட்டத்துச் சிப்பி, பெரியப்பார்ச் சிப்பி, உப்புத்தண்ணித்தீவுச் சிப்பி என் சிப்பிகளில் பல வகைகள் கூவிக்கூவி ஏலம் விடப்பட்டன. மலபார்த் தோட்டத்துச் சிப்பிகளுக்கு நல்ல கிராக்கியிருந்தது. சுண்டு முத்து, ஆணி முத்துகளுக்குப் பெரும்பாலும் நல்ல விலை கிடைத்தது. வங்காளிகளும் மராத்தியரும் சிந்திகளும் மலையாளிகளும் போட்டி போட்டுக்கொண்டு ஏலம் எடுத்தார்கள். வாய் பிளந்து அனைத்தையும் பராக்குப் பார்த்தபடி வந்த பிச்சைக்கனி ஆண்டாமணியாரைப் பார்த்துக் கேட்டான்.

முத்துக்குளிப்பும், சங்குக் குளிப்பும் அரசாங்கக் கட்டுப்பாட்டில் இருந்தது. முத்துச் சிப்பிகளைக் கணக்குக் காட்டி அரசாங்கத்திடம் ஒப்படைத்துவிட வேண்டுமென்றால் போராடிக் கொண்டுவரும் சங்குகளுக்கும் அதே நிலைதான். அரசாங்கமே விலை நிர்ணயித்துக் கொள்முதல் செய்து கொள்ளும் கிடைக்கும் விலை தொழிலாளிகளின் குடும்பத்தின் அரை வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழி செய்யாது. பெரும்பாலும் யாருமே சரியான கணக்குக் காட்டுவதில்லை. சங்கோடு கரைக்கு வருமுன் எங்காவது மதியில் வைத்து கடலுக்குள் அரச்சாலோடு விட்டு விட்டு வவார்கள். அதிகாரிமார் சங்குமாலை விட்டுக் கிளம்பியதும் பொழுது அடைய, கள்ளச் சந்தை கூடு பிடிக்கும்.

“காலங்காலமா சாதித்தலம, சாதித்தலமயின்னு என்னத்தக் கண்டோஞ் சொல்லு. நாற்காலி போட்டு உட்காந்திற்று அம்புடையும் அள்ளிற்றுப் போறான்வ. எய்யா நம்ம இவன்வளுக்குக் கப்பங் கெட்றேமின்னா இவன்வ எவனுக்கெல்லாமே கப்பங் கெட்றான்வ”. [90]

திருமந்திர நகர்

கொற்கையில் கடல் அமைதியாய் இருப்பது பற்றி புராணகாலச் செய்தியாக வாய் வழிக் கதையென்று உண்டு. தென்னாடுடைய சிவன் கோவில் கொண்டுள்ள தலங்களுள் கொற்கையும் ஒன்று. சூரனை சம்காரம் செய்த வேலவனை கண்டுகொள்ள அம்மையும் அப்பனும் சேதுவின் மேட்டிலிருந்து பயணிக்கிறார்கள். இடையே ஒரு நெய்தல் சோலையில் களைப்பாறுகிறார்கள். அங்கே அம்மையின் வேண்டுகோளுக்கிணங்க அப்பன் ‘நமசிவாய’ என்ற ஐந்தொழுத்து மந்திரத்தை ஓதிக் கொடுக்கிறார். மந்திரத்தை அம்மை ஓதும்போது பனையோலையின் சரசரப்பும் கடலலையின் ஆர்ப்பரிப்பும், குயவனின் பானை தட்டும் ஓசையும் இடைஞ்சல் தர அம்மை அப்பனிடம் முறையிடுகிறாள். அம்மையின் வேண்டுகோளுக்கிணங்கி இந்தச் சத்தங்களிலிருந்து கொற்கைக்கு விடுதலை தந்திருக்கிறார் அப்பன்.

"கொற்கைக்கி இன்னொரு பேரு திருமந்திர நகர்ம்பாவ. எடப்பட்ட காலத்துல காசிப முனிவர்ன்னு ஒரு அடியாரு இங்க கோலயில ஒரு லிங்கத்த கண்டுபிடிச்சி அதுக்கு பூச பண்ண இப்ப பெரிய சிவதலமாகிப் போச்சி". [91]

திருமந்திரநகர் - பெயர்க்காரணம்

தூத்துக்குடி என்று பொதுவாக அனைவராலும் அழைக்கப்பட்டாலும், பரதவர்கள் இன்றும் தங்களது ஆலயப்பாடல்களிலும், விருத்தப்பாக்களிலும் தூத்துக்குடியை 'திருமந்திரநகர்' என்றே குறிப்பிடுகின்றனர்.கால கல்வெட்டுக் குறிப்புகளில் 'திருமந்திர' என்ற சொற்கள் பொறிக்கப்பட்டிருப்பதை "கல்வெட்டுக் கலைச்சொல் அகராதி" என்ற புத்தகத்தில் காணமுடிகிறது.

"திருமந்திர ஓலை நாயகம்" என்ற கல்வெட்டில் காணப்படும் வார்த்தைக்கு, "அரசன் ஆணையை ஓலையில் எழுதிய மன்னர், அவ்வோலையை, அரசனிட்ட ஆணையோடு ஒப்பிட்டுப் பார்த்து அனுமதியளிக்கும் உயர் அதிகாரி" என்ற பொருள் கொடுக்கப்பட்டிக்கிறது. அதுபோல் மற்றொரு வார்த்தை "திருமந்திர போனகப் புறம்" என்பதாகும். "கோவில் வழிபாட்டுக்கும், கோவிலில் வழங்கப்படும் உணவைத் தயாரிப்பதற்காக ஏற்படும் செலவினங்களைக் கொடுப்பதற்காக குறித்து வைக்கப்படும் ஊர்" என்ற பொருளாகும்.

மேற்கண்ட இரண்டு கல்வெட்டுச் சொற்களை ஆராய்ந்து பார்க்கும்போது சில செய்திகள் தெரியவருகின்றன. பாண்டியர் ஆட்சியில், முத்துக்குளித்துறையின் பரதவகுலத் தலைவர் ஒரு குறுநில மன்னராகவே கருதப்பட்டிருக்கிறார். மதுரையை ஆண்ட பாண்டிய மன்னர் இடும் அரசாணையை, முத்துக்குளித்துறை பரதவ மக்களுக்கு தெரிவிக்கும் அதிகாரத்தை பெற்றிருந்தபடியால், பரதவர்குலத் தலைவர் 'திருமந்திர ஓலை நாயகம்' என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். அதுபோலவே தூத்துக்குடியில் முத்துக்குளிக்கும்போது கிடைக்கும் வருவாயில் ஒரு பகுதியை, கோவில் வழிபாட்டுக்கும், அன்னதானம் செய்வதற்கான செலவினங்களுக்கும், பரதவர் குலத்தலைவர், பாண்டிய மன்னர்களுக்கு கொடுத்திருக்க வேண்டும். எனவே பாண்டிய மன்னர்களால் தூத்துக்குடி "திருமந்திர போனகப்புறம்" என்ற சிறப்புப் பெயரால் அழைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கண்ட இரண்டு கல்வெட்டில் காணப்படும் வார்த்தைகளின் மூலம், 'திருமந்திர ஓலை நாயகம்' அல்லது 'திருமந்திர போனகப்புறம்' என்ற சொற்கள் மருவி, திருமந்திரநகர் என்று பரதவர்களால் தூத்துக்குடி குறிப்பிட்டிருக்கவேண்டும்.

பாதை மாறாத பரதவர்கள்

இஸ்லாமியர் பல ஆண்டுகளாக முத்துக்குளித்துறையில் அதிகாரம் செலுத்தி வந்தார்கள். ஆனால் ஒரு பரதவன் கூட இஸ்லாம் மதத்தை தழுவவில்லை. நூற்று

ஐம்பது ஆண்டுகள், டச்சுக்காரர்கள் ஆட்சியில் முத்துக்குளித்துறை இருந்தது. கத்தோலிக்க மதத்திற்கு எதிரான தங்களது காலனியக் கோட்பாடுகளை ஏற்குமாறு பரதவர்களைத் துன்புறுத்தினர். அவர்களது வழிபாட்டுத் தலங்களை சீரழித்தனர். ஆனாலும் ஒரு பரதவனைக்கூட அவர்களால் மதமாற்றம் செய்ய முடியவில்லை. அவர்களுடன் வந்திருந்த மத போதகர் பல்தேயுஸ், இந்த உண்மையை ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொள்கிறார். பரதவர்கள் பலமைல் தூரம் நடந்துசென்று தங்களின் ஆன்ம தேவைகளை, கத்தோலிக்க, குருக்களிடம் பெற்றுச் சென்றார்களே தவிர, ஒரு போதும் அவர்கள் 'புரொட்டஸ்டான்ட்' மதத்தின் கொள்கைகளை ஏற்றுக் கொள்ளவில்லை. தங்கள் வாழ்விலும் இறப்பிலும், கத்தோலிக்க திருச்சபைக்கு விசுவாசமுள்ளவர்களாகவே இருக்க வேண்டும் என்ற அவர்களது முடிவில் எந்த மாற்றத்தையும் யாராலும் செய்ய முடியவில்லை. டச்சுக்காரர்கள் ஆட்சியிலும், அதன்பிறகு வந்த ஆங்கிலேயர்கள் ஆட்சியிலும் ஒரு பரதவன்கூட பிரிவினை சபையை நோக்கிச் செல்லவில்லை என்பது, தென்னிந்திய கத்தோலிக்க திருச்சபையின் வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கப்பட வேண்டிய நற்செய்தியாகும்.

இன்றும் பரதவர்க்கென்று ஒரு பெருமை உண்டு. பல்வேறு அரசாட்சிகளையும், அரசர்களையும், பேரழிவுகளையும், அடக்குமுறைகளையும், அவமானங்களையும் தாண்டி பரதவர் நிலைத்து நிற்கின்றனர். சேரரும், சோழரும், பாண்டியரும் மறைந்து விட்டனர். விஜயநகர அரசு, மொகலாயப் பேரரசு, மராட்டியர் ஆட்சி, நாயக்கர் ஆட்சி என்பனவையெல்லாம், வரலாற்று நூல்களில் தடம் பதித்துவிட்டு மறைந்துவிட்டன. போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர், ஆகியோரின் ஆதிக்கம் முடிந்துவிட்டன. பலநூறுமுறை இந்திய நாட்டில் உள்ள எல்லைகளும் ஆட்சிகளும் மாறி மாறிப் போய்க் கொண்டிருக்கின்றன. இத்தனைக்கும் மத்தியில் பரதவர் மட்டுமே முத்துக்குளித்துறையில் நிலைத்து நிற்கிறார்கள். காலம் காலமாக மீன்பிடித்துக் கொண்டும், சங்கு குளித்துக்கொண்டும் இருக்கிறார்கள். மலைகளில் உள்ள காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. நீர்வளமும், நிலவளமும் கொண்ட விளை நிலங்கள் விலை போய்விட்டன. குறிஞ்சி நிலத்து மக்களும், முல்லை நிலத்து மகக்ளும், மருத நிலத்து மக்களும், தங்களின் இன அடையாளங்களைத் தொலைத்து விட்டு நிற்கின்றனர். ஆனால் பரதவர் மட்டுமே, முத்துக்குளித்துறையில் நிலையாக இருக்கிறார்கள். நாள்தோறும் நடக்கம் துயரங்களுக்கும், பயங்கரங்களுக்கும் நடுவில், அவர்கள் கடலில் பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். தங்கள் கடவுளுக்கும், தாய்த் திருச்சபைகளுக்கும், அதன் தலைவரான பாப்பரசருக்கும் விசுவாசமுள்ளவர்களாகப் பரதவர்கள் வாழ்ந்து வருகிறார்கள்.[92]

சுதேசி இயக்கம்

"எண்ணேம் போனது வெறிப்புடிச்ச கூட்டம் யாரையும் யாராலயுங் கட்டுப்படுத்த முடியாது. அந்தப் பக்கம் லோனத் தவுர மத்தவம் பூராவும் சுதேசி, என்னதாம் அவன்வ துரோகம் பண்ணுணாலும் அவள்வள வெட்ட இவன்வளுக்குக் கையி வருமா. கொடைச்சவனப் போட்டுத் தள்ளிற்றான்வ."

"ராப்படையில இங்க சிவங்கோயில் பக்கத்துலயும், வாடித் தெருவுலயும் ஆள்க்க நடமாட்டமாக் கெடக்கு."

"பெஞ்சமின் அண்ணாச்சி பொண்டாட்டி புள்ள உண்டாயிருந்தாவளாம். போலிசு முடுக்க ஓடுனதுல கர்ப்பம் கலைஞ்சி போச்சின்னு ஒரு செய்தி கெடக்கு. உண்மையா பொய்யான்னு தெரியில பாத்துக்கிடுங்க."

"அய்ய செத்து கித்துப் போயிறாம. அங்கனோடி ஆஸ்பத்திரியளும் இல்லிய."

"மணப்பாட்டுல ஆஸ்பத்திரி இருக்குல்லா. ஆமா நம்ம ஞானம் அண்ணாச்சி....."

"எப்பவே கள்ளத்தோணியில கொழும்புக்குப் போயாச்சி" என்றான் அய்யாக்கண்ணு.

"எனக்குத் தெரிஞ்சி கேசுல மாட்டுனவுங்க, காந்தியாருக்கு எழுதாம, மெட்ராசுல ராசகோபாலாச்சாரிக்கி எழுதியிருக்குலாம்."

"எதுக்குண்ணேம் காந்தியாருதான இப்ப எல்லாருக்குந் தலைவரா இருக்காரு."

"இவம் அய்யங்காரு.... இந்தப் பக்கத்து பிரச்சனய இவம் வழியாத்தாம் கொண்டுபோவணுமின்னு எதிர்பாப்பாம். காந்தியாரு சொன்னா, தட்ட வழியில்லாமச் செய்வாம். ஆனாலும் நம்மள வுட்டுட்டு மேல பாஞ்சிற்றான்வளயிங்குற நெனைப்பு இருக்கும். இந்தப் பிரச்சினயிலயும் பாத்தியா, நம்ம பக்கத்துல ஆளு இல்லாததுனால அவன்வகிட்ட சரணடயத்தாம் வேண்டியிருக்கு. அதாஞ் சொல்லுறம் நம்ம புள்ளய படிக்கணும்."[93]

முத்து நகரில் விடுதலைப் போர்

இந்திய விடுதலைப் போராட்டங்களில் தூத்துக்குடிக்கு மிக முக்கியப் பங்குண்டு. அவ்வகையில் 19-ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த நிகழ்வுகளில் சில மட்டுமே இந்திய வரலாற்றில் இடம்பெற்றுள்ளன. மாறாக, முத்துநகரில் 16ஆம் நூற்றாண்டிலேயே விடுதலைக்கான போராட்டங்கள் தொடங்கி விட்டன என்றே கூறலாம். முத்துக்குளித்துறை என்றழைக்கப்பட்ட தூத்துக்குடியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குறிப்பிட்ட காலங்களில் இந்து பரதவர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபட்டுவந்தனர். இப்பகுதியில் கிடைத்த முத்துகளுக்கு உலகச் சந்தையில் தனிமதிப்பு இருந்தது.

முத்துக்குளித்தல் தொழிலை மீனவர்கள் மட்டுமே செய்து வந்தனர். இந்நிலையில் கடல் வாணிபத்தின் பொருட்டு அரேபிய முகமதியர் இப்பகுதியில் குடியேறியுள்ளனர். 14-ஆம் நூற்றாண்டில் ஏற்பட்ட முகமதியர்களின்

படையெடுப்புக்குப்பின் முத்துக்குளிக்கும் தொழில் முகமதியரின் கை ஓங்கத் தொடங்கியது. தொடக்கத்தில் மீனவர்களோடு நட்புறவு கொண்டே இத்தொழில் முகமதியர் ஈடுபட்டனர். பின்னாளில் முத்துக் குளித்தலைத் தங்களின் முழுக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். தென் தமிழகத்தின் கடற்கரைப் பகுதிகள், வெவ்வேறு குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்த காரணத்தினால் படைவலிமையுடன் நிகழ்ந்த அரேபிய முகமதியர்களின் வளர்ச்சியை முத்துக்குளித் துறையில் கட்டுப்படுத்த முடியாமல் போயிற்று.

முத்துக்குளித்தல் தொழிலில் மீனவர்கள் முகமதியரால் பெருந்துன்பத்தை அனுபவித்து வந்தனர். இந்நிலையில் முகமதியர் ஒருவருக்கும் மீனவப் பரவர் ஒருவருக்கும் ஏற்பட்ட கைகலப்பு பெரும் கலவரமாக மாறியது. முகமதியரின் படையைச் சமாளிக்கவும் முத்துக்குளித்தல் தொழிலின் பொருட்டு இழந்த உரிமையை மீட்டெடுக்கவும் மீன்வத் தலைவர்கள் போர்ச்சுக்கீசியரின் உதவியைப் நாடினர்.

அரேபிய முகமதியரின் மதத்தின் மீது வெறுப்பிலிருந்த போர்ச்சுக்கீசியர்களுக்கு முத்துக்குளித்துறையின் வருமானத்தின் மீதும் ஒரு கண் இருந்தது. இந்த பரதகுல மீனவர்களை முகமதியரிடமிருந்து காப்பாற்றுவதன் மூலம் முகமதியரை வீழ்ச்சியடையச் செய்வது, இதன் மூலம் முத்துக்குளித்துறை பகுதியைப் போர்ச்சுக்கீசிய ஆளுகைக்கு உட்படுத்துவது என்ற திட்டத்துடன் கி.பி.1536இல் போர்ச்சுக்கீசியரின் படை முகமதியரின் படையை முறியடித்தது.

தங்களுக்கு முத்துக்குளிக்கும் உரிமையை மீண்டும் பெற்றுத்தந்த போர்ச்சுக்சீசியரின் ஆதரவு தங்களுக்குத் தொடர்ந்து கிட்டிட, கடலோர இந்து மீனவர்கள் ஒட்டுமொத்தமாகக் கத்தோலிக்க சமயத்திற்கு மாறினர்.

தொடர்க்கத்தில் முத்துக்குளித்துறைப் பகுதியில் பிரான்சிஸ்கன் சபைக் குருக்கள் சமயப்பணியைத் தொடங்கினர். சவேரியாரின் வருகையைத் தொடர்ந்து இயேசு சபைக் குருக்களும் இங்கே பணி செய்ய வந்தனர். மீனவர்களுக்குத் துன்பம் வரும்பொழுதெல்லாம் இயேசு சபையினர் மீனவர்களுக்காகப் பரிந்து பேசியும் சில சமயம் போராடவும் செய்தனர். இதனால் மீனவ மக்களிடையே இயேசு சபையினர் நன்மதிப்பைப் பெற்றனர். கி.பி.1557இல் கோவாவிலிருந்து பிரிந்து கொச்சி தனி மறைமாநிலமாகியது. முத்துக்குளித்துறை முழுவதும் கொச்சி ஆயரின் ஞான ஆதிக்கத்தின் கீழ் வந்தது.

தங்களால் சமயம் மாறிய மீனவர்களிடத்தில் இயேசு சபையினருக்குப் பெருகி வரும் செல்வாக்கையும் அவர்களின் பின்னால் மீனவர்கள் அணிவகுப்பதையும், பிரான்சிஸ்கள் குருக்கள் விரும்பவில்லை. எனவே, இயேசு சபையினர் பற்றி தவறான தகவல்களை கோவா ஆளுநருக்கும் கொச்சி ஆயருக்கும் கொடுத்து வந்தனர்.

கி.பி.1603இல் மதுரை நாயக்கர் பெருந்தொகையை வரியாக விதித்தார். அத்தொகையை மீனவர்கள் கட்ட மறுத்ததால் மதுரை நாயக்கர் தன் படையோடு

தனது சிற்றரசான கயத்தாறு மன்னனையும், விஜயநகரப் பேரரசின் வடுகர் படையினரையும் சேர்த்து, தூத்துக்குடி மீது படையெடுத்து பெருந்தாக்குதலை நடத்தி வீடுகளையும் ஆலயங்களையும் சேதப்படுத்தித் தீக்கு இரையாக்கினர்.

இப்பெரும் படையை மீனவர்களோடு சேர்ந்து இயேசு சபையினர் எதிர்கொள்ள முடியாமல் ராஜ தீவில் (இன்று முயல் தீவு) குடியேறினர். இத்தீவுக் குடியேற்றம் ஏறத்தாழ 6 ஆண்டுகள் நீடித்தது. இப்புதிய குடியேற்றப் பகுதிக்குப் பனிமயப் அன்னையின் சொரூபம் கொண்டு செல்லப்பட்டது. அங்கு ஆலயம், நீர்த்தேக்கத் தொட்டி, கோட்டைச்சுவர் முதலியன எழுப்பப்பட்டன. இக்குடியேற்றத்திற்குக் கோவா ஆளுநரின் அனுமதியையும் இயேசு சபையினர் பெற்றிருந்தனர்.

இயேசு சபையினரின் துணையோடு மீனவ மக்கள் இராஜ தீவில் குடியேறி உள்ளதை இலங்கைக்குச் சென்றிருந்த கொச்சி ஆயர் அந்திரேயாஸ் அறிந்தார். இந்த ஆயரோ பிரான்சிஸ்கன் சபையைச் சார்ந்தவர். தன் ஞான ஆதிக்கத்திலிருந்து விடுபடவே இயேசு சபையினர் மீனவர்களை ராஜ தீவில் (முயல் தீவில்) குடியேறச் செய்துள்ளனர் என்ற தவறான புரிதலுக்கு ஆயர் உள்ளானார். பழைய இடங்களுக்குத் திரும்பிட ஆயர் ஆணை பிறப்பித்தார். ஆயரின் கட்டளையினை மக்கள் ஏற்க மறுத்தனர். எனவே, கிறிஸ்துவ மீனவ மக்களையும் இயேசு சபையினரையும் திருச்சபையிலிருந்து ஆயர் விலக்கினார்.

மீனவ மக்களை மதத்திலிருந்து விலக்குவதன் மூலம் பழைய பகையின் காரணமாக அரேபிய மூர்களின் தாக்குதலுக்கு மீனவர்கள் உள்ளாவார்கள், தங்களை மூர்களிடமிருந்து காத்துக் கொள்ள மீனவர்கள் தனது ஆணையை ஏற்று மீண்டும் பழைய பகுதியில் குடியேறுவர் எனக் கணக்குப் போட்டார் ஆயர்.

இது நடவாது போனதால் தனக்கு ஆதரவு தரும்படி மதுரை நாயக்கரோடும் கயத்தாறு மன்னரோடும் ஆயர் போர் ஒப்பந்தம் செய்தார். நான்கு பெரிய போர்க் கப்பல்கள், ஏழு ஆயுதம் தாங்கிய தோணிகள் கொண்ட பெரும்படை ராஜ தீவைச் சுற்றி வளைத்தது. இந்த முற்றுகை 22 நாட்கள் நீடித்தன. போர்ச்சுக்கீசிய ஆயரின் பெரும் படையுடன் இயேசு சபையினர் தலைமையில் மீனவப்படை மோதியது. பலரின் உயிரிழப்புக்குப்பின் ஆயரின் படை வெற்றி பெற்றது.

தூத்துக்குடியிலிருந்து கொண்டு வரப்பட்ட பனிமய அன்னையின் சொரூபம் வைக்கப்பட்டிருந்த ஆலயம், வீடுகள், நீர்த்தேக்கத் தொட்டிகள் சேதப்படுத்தப்பட்டன. மக்கள் மீண்டும் பழைய இடங்களில் பலவந்தமாகக் குடியமர்த்தப்பட்டனர். இயேசு சபையின் குருக்கள் முத்துக்குளித்துறைப் பகுதியில் பணி செய்யத் தடை விதிக்கப்பட்டது. இப்பகுதிகள் பிரான்சிஸ்கன் சபை குருக்கள் வசம் ஒப்படைக்கப்பட்டன.

கி.பி.18ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த சிப்பாயக் கலகத்தையும் 19ஆம் நூற்றாண்டில் காந்தியின் தலைமையில் நிகழ்ந்த அறப்போராட்டங்களையும் விடுதலைப்

போரில் பதிவு செய்துள்ளோம். தன் ஞான அதிகாரத்தால் அறப்பணி செய்ய வேண்டிய ஆயரோ, ஆயுதம் தாங்கிய போரை நடத்தி உள்ளார். தங்களால் காக்கப்பட வேண்டிய மீனவர்களைப் போர்ச்சுக்கீசியப் படையே சொன்று குவித்துள்ளது. தங்களைக் காத்துக்கொள்ள முத்துக்குளித்துறை மக்கள் போர்ச்சுக்கீசியரை எதிர்த்துப் போரிட்ட இந்நிகழ்வும் விடுதலை வேட்கையின் வெளிப்பாடே இதுபோன்ற போர்கள் நிகழ்ந்ததற்கான சான்றுகள் இருந்தும் வரலாற்றில் பதிவு செய்யபடாமல் உள்ளன. ஆங்கிலேயரை எதிர்த்த போர்கள் மட்டுமே விடுதலைப் போர் என்று கூற முடியாது. போர்ச்சுக்கீசியரும் அந்நியர் என்ற அடிப்படையில் இம்மண்ணின் மைந்தர்கள் நடத்திய போராட்டங்களும் போர்களும் விடுதலைப் போராகக் கருதப்பட வேண்டியவையே. முத்துநகரில் 16-ஆம் நூற்றாண்டில் போர்ச்சுக்கீசியப் படை மீனவர்கள் மீது நடத்திய இப்போரை ஆய்வு செய்வோமானால், மறைக்கப்பட்ட உண்மைகள் பல வெளிவரும் என்பதில் ஐயமில்லை.[94]

பரதவர்களும் கிறித்தவமும்

பரதவர், நுளையர், திமிலர் ஆகியோரே நெய்தல் நில மக்கள் எனப் பண்டைய இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்றனர். ஆனால் 16-ஆம் நூற்றாண்டில் கரையர், வலையர் போன்றோரும் நெய்தல் நில மக்கள் பட்டியலில் இடம்பெறுவதைச் சேசுசபைக் குருக்களின் மடல்கள் வாயிலாக அறிகின்றோம். இன்றோ செட்டியார், முதலியார், படையாட்சியர் ஆகியோருடன் சில பகுதிகளின் இசுலாமியரும் கடல் தொழிலில் ஈடுபடுவதால் அவர்களும் நெய்தல் நில மக்கள் பட்டியலில் இடம்பெற்றவர்களாகவே கருதப்பட வேண்டும்.

பாண்டிய நாட்டுக் கடற்கரைப் பகுதிகளில் 11-ஆம் நூற்றாண்டிலிருந்தே இசுலாமியருக்கும் பரதவர்களுக்குமிடையே உறவு சுமுகமாக இருக்கவில்லை. பாண்டியப் பேரரசு சிதைந்து, பல சிற்றரசுகள் உருவானபோது, சிற்றரசர்களுக்குள் எழுந்த போட்டிகளும் நாட்டில் குழப்பத்துக்குக் காரணமாயின.

விஜயநகரப் பேரரசின் முதலாம் புக்கர் (1356 -1377) மதுரையை வென்று தமது பேரரசுடன் இணைத்துக்கொள்ள விரும்பினார். ஆகவே தம் மகன் இரண்டாம் கம்பணரைப் பாண்டிய நாட்டுக்குப் பெரும்படையுடன் செல்லுமாறு பணித்தார். அவ்வாறே பெரும்படையுடன் வந்த இரண்டாம் கம்பணர் மதுரையை வென்று அங்கு விஜயநகரப் பேரரசின் ஆட்சியை நிறுவினார்.

மதுரை விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டதும் அதுவரை மதுரையில் செல்வாக்குடன் விளங்கிய முகமதியர் பலர் முத்துக்குளித்துறையில் குடியேறி, அங்குத் தங்கள் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்டத் தொடங்கினர். அதுவரை பரதவர்களின் தனிப்பெரும் தொழிலாக விளங்கிய முத்துக் குளித்தலிலும் முகமதியர் அதிகாரம செலுத்தலாயினர்.

போர்த்துக்கிசீயர் இந்தியா வந்து சேர்ந்த காலத்தில் இரண்டாம் சாளுவ நரசிம்மன் (1496-1505) விஜயநகரப் பேரரசராக விளங்கினார். முத்துக்குளித்துறைக்குப் போர்த்துக்கிசீயர் 1520-ஆம் ஆண்டில் வந்த போது கிருஷ்ணதேவராயர். விஜயநகரப் பேரரசராக விளங்கினார். முத்துக்குளித்துறை விஜயநகரப் பேரரசின் பகுதியாக விளங்கினாலும் அது மூன்று மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளைக் கொண்டிருந்தது. கொல்லம் கன்னியாகுமரி. தென்திருநெல்வேலிச் சீமை (அதாவது தாமிபரணி ஆற்றுக்குத் தெற்கே உள்ள பகுதி) ஆகியவை கொல்லம் பேரரசரின் ஆட்சிக்கு உட்பட்டவை. ஆகவே தாமிரபரணி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள புன்னைக்காயல் போர்த்துக்கிசீயர் வருசையின்போது கொல்லம் பேரரசரின் ஆட்சிக்கு உட்பட்டதாகவே இருந்தது.

புனித சவேரியார் 1542-ஆம் ஆண்டில் முத்துக்குளித்துறைப் பகுதிக்கு வந்தபோது உன்னி கேரளத் திருவடியின் அரசின் வடக்கு எல்லையில் புன்னைக்காயல் அமைந்திருந்தது. தூத்துக்குடியோ கயத்தாறு பாண்டிய அரசனாகிய வெட்டும் பெருமாளின் ஆட்சிக்கு உட்பட்டதாக இருந்தது. கயத்தாறு மன்னனும் தென்தமிழகத்தின் வடபகுதியை (வேம்பாறு வைப்பாறு) ஆண்ட தும்பிச்சி நாயக்கனும் விஜயநகரப் பேரரசுக்கு உட்பட்டவர்கள்.

உன்னி கேரளத் திருவடி, வெட்டும் பெருமாள். தும்பிச்சி நாயக்கன் ஆகிய மூவருமே முத்துக்குளித்துறையில் முத்துச் சலாபங்கள் மூலம் வரும் வருமானத்தினால் ஆதாயம் பெற்றுவந்தனர். மேற்குக் கடற்கரையில் செல்வாக்குப் பெற்று அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற ஏற்றுமதிப் பொருள்கள்மீது அதிகாரம் செலுத்தி வந்த இசுலாமியர் கிழக்குக் கடற்கரையில் திருவாங்கூர் அரசுக்கு உட்பட்ட காயல்பட்டினத்திலும், உடக்கே தும்பிச்சி நாயக்கனின் ஆட்சிக்கு உட்பட்ட கீழக்கரையிலும் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தனர்.

குதிரை வாணிகத்தின் மூலமாகவே போர்த்தக்கேயர் முத்துக்குளித்துறைக்கு வந்தனர். அன்றைய விஜயநகரப் பேரரசு பல சிற்றரசுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு சிற்றழசம் ஒரு நாயக்க மன்னரின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. அவ்வாறு விளங்கிய கன்னியாகுமரிப் பகுதி நாயக்க மன்னரக்கு 1512-ஆம் ஆண்டிலேயே போர்த்துக்கேயர் குதிரைகளை விற்றதாக அறிகிறோம். அவ்வாறே குதிரை வாங்குவதில் விருப்பம் கொண்ட பரமக்குடி நாயக்க மன்னருக்குக் குதிரைகளை விற்றதன்மூலம் அவரது அதிகாரத்திலுள்ள கீழக்கரையில் போர்த்துக்கேயர் கால் பதிக்க முடிந்தது. முத்துக்குளித்துறையிலிருந்த போர்த்தக்கேயர் ஓர்முஸ் துறைமுகத்திலிருந்து கோவா, கண்ணூர் வழியாக முத்துக்குளித்துறைக்குக் குதிரைகளை அனுப்பிவைக்குமாறு கோவா ஆளுநருக்கு வேண்டுகோள் விடுத்தனர். தும்பிச்சி நாயக்கருக்குக் குதிரை விற்கும் அதிகாரத்தைத் தமக்கு மட்டுமே வழங்குமாறு சுவாம் தா குரூஸ் (இவரே பரதவர்கள் கிறித்தவ சமயத்தைத் தழுவுவதற்கு வழிகாட்டி உதவியவர்) போர்த்துக்கல் மன்னருக்கே எழுதினார்.

கிறித்தவத்தைத் தழுவிய பரதவரின் நலம் காக்க முத்துக் குளித்துறைப் படைத்தலைவராக 1542-ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட கோஸ்மெ தெ பாய்வா தூத்துக்குடியில் தமது தலைமையகத்தை அமைத்துக்கொண்டார். திருநெல்வேலிப் பகுதியை ஆண்ட பாண்டிய மன்னராகிய மாறவர்மன் சுந்தர பாண்டியரக்குக் (1531-55) குதிரைகள் விற்பதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டினார்.

இந்துக்களாகிய பரதவர்கள் திருச்செந்தூர் முருகன் கோவில்மீது தனிப் பற்றுதல் கொண்டிருந்தனர். முருகப் பெருமானின் இருமனைவியருள் ஒருவரான தெய்வயானை பரதவ இனத்தைச் சார்ந்தவர் என அவர்கள் நம்பியதே இதற்குக் காரணம். மணப்பாடு, ஆலந்தலை, வீரபாண்டியன்பட்டினம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பாறு, வேம்பாறு ஆகிய ஏழு ஊர்களைச் சார்ந்த பரதவர்களும் திருச்செந்தூர்க் கோவில்மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர்கள். வீரபாண்டியன்பட்டினத்தில் அன்று வாழ்ந்துவந்த சாதித்தலைவரே (அல்லது தலைமைப் பட்டங்கட்டி) திருச்செந்தூர்க் கோவில் தேர்வடத்தை முதலில் இழுக்கும் உரிமையினை 18-ஆம் நூற்றாண்டு வரையில் பெற்றிருந்தார் எனச் சொல்லப்படுகிறது.

தொடக்கத்தில் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், உப்பு எடுத்தல் ஆகியவை பரதவர்களின் தனி உரிமையாக இருந்தன. இத்தொழில்களைப் பரதவக் குடும்பங்களே செய்துவந்ததால், வேறு தொழிலாளர்களுக்குப் பெரும்பாலும் அங்குத் தேவை இருக்கவில்லை. எனினும் கரையர்களைப் பரதவர்கள் கூலிகளாக அமர்த்தியிருந்தார்கள் என அறிகிறோம். மீன்பிடித்தல் காரணமாகப் படகு ஓட்டுதல், கப்பல் ஓட்டுதல் ஆகியவை பரதவர்களுக்குக் கைவந்த கலையாக இருந்தன. கரையிலிருந்து சரக்குகளைக் கப்பலில் ஏற்றுதலும் இறக்குதலும் பரதவர்களின் தொழிலாக மாறின.

கடல் தொழில் அடிப்படையில் அமைந்த சமுதாயமாயினும் பொருளாதாரத்தின் அடிப்படையில் மேசைக்காரர், கமர்க்காரர் என்னும் ஒரு பிரிவுகள் தோன்றின.இவ்விரு பிரிவுகளுக்கிடையில் போர்த்துக்கேயர் காலத்தில் திருமணங்கள் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டன. இரு பிரிவுகளும் இரு வேறு சமுதாயங்களைப் போன்றே வாழ்ந்துவந்தனர்.மணப்பாடு முதல் தூத்துக்குடி வரையுள்ள பகுதியில் முத்துக்கள் மிகுதியாகக் கிடைத்தன. ஆகவே அப்பகுதி மக்கள் பிற பகுதி மக்களைவிடப் பொருளாதாரத்தில் உயர்ந்திருந்தனர்.

ஒவ்வொரு பரதவ ஊரும் பட்டங்கட்டிகளின் பொறுப்பில் விடப்பட்டிருந்தது. உதாரணமாக அந்தோணியோ பர்னாண்டஸ் 1536-இல் பழையகாயல் பட்டங்கட்டியாகவும், மனுவேல் தெ லீமா 1544-இல் புன்னைக்காயல் பட்டங்கட்டியாகவும் இருந்தனர் எனப் பேராசிரியர் ஜெயசீலா ஸ்டீபன் எழுதுகின்றார். பட்டங்கட்டிகளை மன்னரே நியமித்தார். புனித சவேரியாரின் மடல்களிலேயே இதை உறுதிப்படுத்தும் குறிப்புகளை நாம் காண்கிறோம். பட்டங்கட்டிகளுக்கு உதவியாக ஊரார் என்னும் மேலாண் அவை இருந்ததாக அறிகிறோம். ஊரார் என்னும் அவையின்

உதவியோடு பட்டங்கட்டிகள் ஒவ்வோர் ஊரையும் நிர்வகித்து வந்தனர். இவர்கள் செல்வமும் செல்வாக்கும் மிகுந்தவர்கள். அவர்களுள் சிலர் கப்பல் உரிமையாளர்களாக இருந்தார்கள் எனவும், 1567-ஆம் ஆண்டில் முத்துக்குளித்தல் குத்தகையை எடுத்திருந்தார்கள் எனவும் அறிகிறோம். அவர்களிடம் படைக்கருவிகளும் படைவீரர்களும் இருந்ததாகவும் அறிகிறோம். ஆகவே ஊர் மக்கள் தங்களுக்கு எதிராக எழுந்தால் அவர்களை அடக்கியாளும் ஆற்றல் கொண்டவர்களாகப் பட்டங்கட்டிகள் விளங்கினர். முத்துக்குளித்தலின் தொடக்க நாளையும் நிறைவு நாளையும் குறிப்பவர்கள் பட்டங்கட்டிகளே.

உள்நாட்டில் அராபிய மூர்களுக்கம், பரதவர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நடந்தது கொண்டுதான் இருந்தது. இந்நிலையில்தான் மலபாரைச் சேர்ந்த குதிரை வணிகராகிய சுவாம் தா குருசு பரதவரின் உதவிக்கு வந்தார். கேரளத்திலுள்ள கள்ளிக்கோட்டையில் செட்டி குடும்பத்தில் பிறந்த இவர் திறமை மிக்கவர். அதனால், அரவது 15-ஆம் வயதில் கள்ளிக்கோட்டை சாமொரின் மன்னரால் போர்த்துக்கல் நாட்டுக்குத் தூதராக அனுப்பப்பட்டார். அன்றைய போர்த்துக்கல் மன்னராகிய மனுவேல் என்பவரால் மதிக்கப்பட்ட இவர் 1515-ஆம் ஆண்டில் சுவாம் தா குருசு என்னும் பெயருடன் திருமுழுக்குப் பெற்று நாடு திரும்பினார். தம் புதிய மதத்தின்மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட இவர் கள்ளிக்கோட்டையில் ஒரு கோவிலைக் கட்டியெழுப்பினார். கிறித்தவ சமயத்தைத் தழுவிய இவர் தம்மிடம் பணியாற்றுவதைச் சாமொரின் மன்னர் விரும்பவில்லை. ஆகவே சுவாம் தா குருசு வாணிகத்தில் ஈடுபட்டார். வாணிகத்தில் தோல்வியுற்ற இவர் மனம் தளராமல் வேறு முயற்சிகளை மேற்கொண்டார். 1535-ஆம் ஆண்டில் தாம் இறக்குமதி செய்த குதிரைகளுக்காகக் காத்திருந்த போது, பரதவர்களைச் சந்தித்தார். இசுலாமியருடன் தங்களுக்கு ஏற்பட்ட பிரச்சினைகளைத் தம்மிடம் விளக்கிய பரதவர்களிடம் கிறித்தவ மதத்தைத் தழுவினால் போர்த்துக்கேயரின் ஆதரவைப் பெறலாம் என அவர் எடுத்துரைத்தார்.

1535-ஆம் ஆண்டின் இறுதியில் போர்த்துக்கேயக் கப்பல்கள் கொச்சிக்குத் திரும்பியபோது, சுவாமும் பரதவர்களுள் முக்கியமான பதினைந்து பேரும் அவற்றில் பயணம் செய்தனர். கொச்சியில் படைத்தலைவராக இருந்த பேரோ வாஸ் பரதவர்களுள் பதினைந்து பேர் மட்டுமே வந்ததால் சற்றே தயக்கம் காட்டினார். ஆகவே, பதினைந்து பேருள் ஒருவர் ஊர் திரும்பி, மேலும் எழுபது பேரை அழைத்துக் கொண்டுவந்தார்.

கோவா மறைமாவட்டம் 1533-ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது எனினும் அதன் இரண்டாம் ஆயராகிய மேதகு சுவாம் அ.்.போன்சோ தெ ஆல்புகெர்க்கே ஆண்டகையே கோவாவில் 1538-ஆம் ஆண்டு முதல் தங்கிப் பணியாற்றத் தொடங்கியவர்.

பரதவர்கள் கிறித்தவ சமயத்தை ஏற்க முன்வந்துள்ள செய்தி 1536-ஆம் ஆண்டின் தொடக்கத்தில் கோவாவை எட்டியது. அவ்வமயம் ஆயர் கோவாவில் இல்லை. கோவாவின் முதன்மைப் பொறுப்பாளராக அவ்வமயம் பணியாற்றி வந்தவர்

மிக்கேல் வாஸ் என்பவர். முதன்மைக் குருவின் (Vicar General) பொறுப்பை ஏற்றிருந்தாலும் அவர் குருப்பட்டம் பெறாதவர். ஆகவேதான் முதன்மைப் பொறுப்பாளர் என அவரைக் குறிப்பிடுகிறோம். இது வழக்கமாக நடைபெறாத ஒன்று. 153-ஆம் ஆண்டிலிருந்தே அதாவது கோவா தனி மறைமாவட்டம் ஆகாமல் ∴புஞ்சால் மறைமாவட்டத்தின் ஒரு பகுதியாக இருந்த காலத்திலிருந்தே அவர் இந்தியாவில் ∴புஞ்சால் ஆயரின் முதன்மைப் பொறுப்பாளராக விளங்கினார். 1533-ஆம் ஆண்டில் கோவா மறைமாவட்டம் உருவாக்கப்பட்டது. அதன் முதல் ஆயராகிய பிரான்சிஸ்கோ டிமெல்லோ ஆண்டகை இந்தியாவுக்குப் புறப்படுமுன்பே லிஸ்பனில் இறந்துவிட்டார். 1532-ஆம் ஆண்டு முதல் 1547-ஆம் ஆண்டு சனவரிவரை மிக்கேல் வாஸ் முதன்மைப் பொறுப்பாளராக இருந்தார். முன்னரே தெரிவித்ததுபோல அவர் குருப்பட்டம் பெறாதவர். ஆனால் திருச்சபைக் சட்டத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். சிறந்த நிர்வாகி ஒழுக்கத்திலும் பக்தியிலும் மிகச் சிறந்தவராகச் சவேரியாராலும் வேறு பலராலும் போற்றப்பட்டவர். பரதவர்களைக் கிறித்தவ சமயத்தில் சேர்ப்பதற்கு ஒப்புதல் வழங்கியவர் இவரே.

பரதவர்கள் கிறித்தவர்களாகி விட்டால் போர்த்துக்கேயரின் ஆதரவுடன் அவர்களின் கை ஓங்கிவிடும் என்பதால் இசுலாமியர்கள், போர்த்துக்கேயரின் உதவியைத் தாங்கள் பெற முயற்சி செய்தனர். இதற்காகக் கொச்சியில் வாழ்ந்துவந்த செரீனா மரைக்காயர் என்னும் செல்வரின்மூலம் முத்துக்களும் பணமும் விலையுயர்ந்த துணிகளும் கையூட்டாகக் கொடுக்க முனைந்தனர். மலைபோலச் செல்வத்தைக் கொடுத்தாலும் தாங்கள் இசுலாமியருக்கு உதவி செய்ய இயலாது எனக் கொச்சிப் படைத்தலைவர் உறுதியாக மறுத்துவிட்டார்.

போர்த்துக்கேய ஆளுநராகிய நூனோ த கூஞ்வின் அறிவுறுத்தலில் 1536-ஆம் ஆண்டு பெப்ருவரித் திங்களில் போர்த்துக்கேயரின் கடற்படை முத்துக்குளித்துறைக்குப் புறப்பட்டது. படைவீரர்களோடு சுவாம் தா குருசு, முதன்மைப் பொறுப்பாளர் மிக்கேல் வாஸ், கொச்சிப் பங்குத் தந்தை அருள்திரு.பேதுரு கொன்சால்வஸ் ஆகியோரும் வேறு மூன்று குருக்களும் முத்துக்குளித்துறை நோக்கிப் பயணம் மேற்கொண்டனர். இவர்களுக்குத் தமிழ்மொழி தெரியாததால், எத்தகைய மறைக்கல்வியும் வழங்கப்படாமலே 1536 மார்ச்-ஏப்ரல் திங்களில் பரதவ மக்களுக்குத் திருமுழுக்கு வழங்கப்பட்டது. முத்துக்குளிக்கும் சலாபத்தின் அருகில் ஆண்களுக்கும், பின்னர் கிராமங்களில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் முதியோருக்கும் திருமுழுக்கு வழங்கப்பட்டது. கன்னியாகுமரிப் பகுதி முதல் புன்னைக்காயல் வரையுள்ள ஊர்களில் முதலில் திருமுழுக்கு வழங்கப்பட்டது. கன்னியாகுமரிப் பகுதி முதல் புன்னைக்காயல் வரையுள்ள ஊர்களில் முதலில் திருமுழுக்கு வழங்கப்பட்டது. அடுத்த ஆண்டில் மீண்டும் முத்துக்குளித்தல் நடைபெற்றபோது தாமிரபரணி ஆற்றின் வடக்கேயுள்ள ஊர்களில் பழையகாயல் முதல் தூத்துக்குடி, வேம்பாறு, வைப்பாறு, பெரியபட்டினம் முதலிய ஊர்களில் திருமுழுக்கு வழங்கப்பட்டது. 1537-ஆம் ஆண்டு இறுதிக்குள் பரதவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. குருவாக இல்லாவிட்டாலும்

பரதவர்கள் பலருக்கு மிக்கேல் வாஸ் திருமுழுக்கு வழங்கினார் என்னும் செய்தியை அண்டிறீக்கிப் பாதிரியாரின் மடல்கள்மூலம் நாம் அறிகின்றோம்.

திருமுழுக்கின்போது பரதவர்களுக்கு வழங்கப்பட்ட கிறித்தவப் பெயர்கள் போர்த்துக்கேயப் பெயர்களாகவே (பேதுரு, அந்தோணியோ, மடுத்தீன், பவுலு என்பது போல) அமைந்தன. அத்துடன் போர்த்துக்கேயர்களின் குடும்பப் பெயர்களையே பரதவர்கள் தங்கள் குடும்பப் பெயர்களாக ஏற்றுக் கொண்டனர்.[95]

அவை பின்வருமாறு,

பர்னாந்து ∴பர்னாந்தீஸ்	பல்தான்
கோமஸ்	ரோச்
பிஞ்ஞேயிர	டிவோட்டா
கொறைரா	மோத்தா
மச்சாது	பசாஞ்ஞா

வணிகக் குழுக்கள்

தமிழகக் கடற்கரையில், முக்கியமாக மூத்துக்குளித்துறையில், வணிகக்குழுக்கள் போர்ச்சுக்கீசியர் காலத்தில் மிக முக்கிய பங்கினை வகித்தன. தங்கள் பகுதிகளிலும் பிற கடற்கரை பகுதிகளிலும், அயல்நாட்டுக் கடற்கரையிலும் சிறந்த முகவர்களாகவும் இவவணிகக் குழுவினர் திகழ்ந்தனர். முதலியார். செட்டியா, மரக்காயர்கள், மாப்பிழாக்கள், காயலார்கள், லெப்பைகள், ராவுத்தர்கள் ஆகியோர் மக்கியமான குழுக்கள், இவர்களில் கீழக்கரையில் உள்ள மரக்காயர்கள் முத்துக்குளித்துறையில் மிக முக்கிய பங்கினை வகித்தனர்.[96]

போர்த்துக்கீசியர்களின் வருகை

ஐரோப்பிய கண்டத்திலிருந்த போர்ச்சுகல் நாட்டின் அரசர், கடல் மார்க்கமாக இந்திய நாட்டில் வியாபாரம் செய்ய வேண்டும் என்று நினைத்தார். அதுவரை அராபிய நாட்டினரே கேரள மலபார் கடற்கரைக்கு வந்து வியாபாரம் செய்தனர். போர்ச்சுக்கல் அரசரின் ஆணைப்படி, வாஸ்கோடகாமா என்ற மாலுமி, இந்தியாவின் மேற்குக் கடற்கரையான மலபார் பகுதியில் இருந்த கள்ளிக்கோட்டை அருகே உள்ள காப்புக் கடவு என்ற பகுதிக்கு 22-05-1498ல் கப்பல் மூலம் வந்தார். அந்தப் பகுதிகளில் கிடைத்த கிராம்பு, பட்டை, ஏலம், மிளகு போன்ற வாசனைத் திரவியங்களை தங்களது நாட்டுக்கு கப்பலில் ஏற்றிச் சென்றனர். அதுவரை அராபிய மூர்களே, இப்பொருட்களை ஐரோப்பிய சந்தைகளில் விற்று வந்தனர்.

ஒரு சில வருடங்களில் கோவா, கொச்சின் துறைமுகங்களை கையகப்படுத்தி, தங்கள் வியாபாரத்தைப் பெருக்கும் வண்ணம் அவ்விடங்களில் தங்கினர். போர்த்துக்கீசியர்கள் இந்தியாவிற்கு வருவதற்கு சில வருடங்களுக்கு முன், அதாவது கி.பி.1493-ம் ஆண்டு, ஆறாம் அலெக்சாண்டர் என்ற பாப்பரசர் 'பதுரோதோ' என்ற ஒரு விசேச அதிகாரத்தை போர்த்துக்கல் மன்னருக்கு வழங்கினார். இதன்படி போர்த்துக்கல் மன்னர், தான் வெற்றிகொண்ட நாடுகளிலும், மேலும் வெற்றி பெற்று தனது ஆளுகையின் கீழ்க் கொண்டுவரும் நாடுகளிலும் கிறிஸ்துவ மதத்தை வளர்க்க வேண்டும் என்றும் ஆலயங்கள் கட்டவேண்டும் என்றும் வழிபாடுகள் நடத்துவதற்கு தேவையான குருக்களை நியமித்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர்களுக்கு ஏற்படும் செலவினங்களை போர்த்துக்கல் மன்னர் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறப்பட்டிருந்தது. இவ்வாறாக, கேரளாவின் மலபார் பகுதிகளும், கோவாவும், போர்த்துக்கீசியர்கள் வசம் வந்தபின் கிறிஸ்துவ மதம் அவ்விடங்களில் வளரலாயிற்று.

தென்தமிழ்நாட்டின் கடற்கரைப் பகுதியில் விலையுயர்ந்த முத்துக்கள் கிடைப்பதையறிந்த போர்த்துக்கீசியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக முத்துக்குளித்துறை நோக்கித் தங்களது பயணத்தை தொடங்கினர். அச்சமயம், முத்துக்குளிக்கும் உரிமை அனைத்தும் பரதவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு அராபிய மூர்கள் வசம் இருந்தது. அப்போது இலங்கையிலிருந்த போர்த்துக்கீசிய தளபதி கி.பி.1519-ம் ஆண்டு நவம்பர் மாதம் போர்த்துக்கல் அரசருக்கு கடிதம் எழுதினார். அதில் முத்துக்குளிக்கும் உரிமையை முகமதியரிடமிருந்து பெற வேண்டும் என்றும், அதற்குரிய நடவடிக்கையில் ஈடுபடுவதற்கு மன்னர் அனுமதி தரவேண்டும் என்று எழுதியிருந்தார். போர்த்துக்கல் மன்னரும் இதற்கு சம்மதம் தெரிவித்து கடிதம் எழுதினார். அப்போது கோவாவில் இருந்த போர்த்துக்கீசிய ஆளுநர், கொச்சியிலிருந்து ஒரு கப்பலை தூத்துக்குடிக்கு செல்லுமாறு உத்தரவிட்டார். அந்தக் கப்பலில் போர்த்துக்கீசிய வீரர்கள், முத்துக்குளிப்பின்போது, முத்துக்குளித்துறையை மேற்பார்வையிடுவார்கள் என்றும், அதற்காக ஒரு தொகையை கொடுக்க வேண்டும் என்று மூர்முகமதியர்களுக்கு கட்டளையிட்டார். அதன்படி ஜான்.்.பிரோலோஸ் என்ற கப்பற்படைத்தளபதி கி.பி.1524-ம் ஆண்டு நடைபெற்ற முத்துக்குளித்தலை கண்காணித்தார். இதற்குரிய சன்மானமாக 72,000 சிறிய தங்க நாணயங்களை மூர்முகமதியர், போர்த்துக்கீசியர்களுக்கு கொடுத்தனர்.

போர்த்துக்கீசியர் - அராபிய மூர்கள் மோதல்

கோவா ஆளுநர், முத்துக்குளித்துறைக்கு கப்பலை அனுப்பியதன் நோக்கம், சில ஆண்டுகளுக்கு முத்துக்குளித்தல் நடைபெறுவதை கண்காணித்து, அதன் நெளிவு, சுளிவுகளைத் தெரிந்த பிறகு முத்துக்குளிக்கும் உரிமையை முற்றிலும் தாங்கள் எடுத்துக்கொள்ளலாம் என்று நினைத்திருக்கக்கூடும். போர்த்துக்கீசியர்களின் இந்த திடீர் நடவடிக்கையால், தங்கள் வருவாயை இழக்கக் கூடும் என்று மூர்கள் அஞ்சினர். அச்சமயம் கள்ளிக்கோட்டையில் இருந்த மூர்களின் கப்பற்படைத்தளபதி பேட்டே

மரக்கார் (மரக்கர் என்ற பெயர் பிற்காலத்தில் மரக்காயர் என்று அழைக்கபடலாயிற்று). கி.பி.1527-ம் ஆண்டு போர்த்துக்கீசிய தளபதி ஜான்.்பிரோலோஸைக் கடலில் கொன்றுவிட்டான்.

அது முதற்கொண்டு அராபிய மூர்களின் படைகளும், போர்த்துக்கீசியர்களின் படைகளும் அடிகக்டி முத்துக்குளித்துறைக் கடலில் சண்டையிட்டன. கி.பி.1529-ம் ஆண்டு, பேட்டே மரக்கார் தனக்குச் சொந்தமான நாற்பது மரக்கலங்களில் (பெரிய படகுகள்) சென்று, வேம்பார் அருகே நிலைகொண்டிருந்த நான்கு போர்த்துக்கீசிய கப்பல்களைத் திடீரென்று தாக்கினான். வேம்பார் அருகே பயங்கரச்சண்டை நடந்தது. முகமதியர்களின் கடூரமான தாக்குதல்களை எதிர்கொள்ள இயலாத போர்ச்சிக்கீசியர்களின் நான்கு கப்பல்களும் கொச்சிக்கு திரும்பி ஓடிவிட்டன.

கி.பி.1533-ம் ஆண்டு பேட்டே மரக்காரின் மைத்துனன் குனாலி மரக்கார், கன்னியாகுமரி அருகே போர்த்துக்கீசிய படைகளின் கப்பலைத் திடீர் எனத் தாக்கினான். போர்த்துக்கீசியர்களைப் பரம எதிரிகளாகக் கருதிய குனாலி மரக்கார், அவர்களை ஈவு இரக்கமின்றி கொன்று போட்டான். பிறகு இறந்தவர்களின் மண்டை ஓடுகளை எடுத்து, அவைகளை பீரங்கிக் குழாய்களுக்குள் மருந்தைத் தள்ளிவிடும் பெரிய இரும்புக் கம்பிகளால் அடித்து நொறுக்கினான். இவ்வாறாக, முத்துக்குளித்துறைக் கடலில் நடந்து வந்த சண்டைகளால் பரதவர்களின் பாழ்வு சீரழியத் தொடங்கியது. மீன்பிடிக்கக் கூட செல்லமுடியாத அவலநிலைக்கு ஆளாக்கப்பட்டனர். வருடக்கணக்கில் நடைபெற்று வந்த சண்டையின் காரணமாக மீன்பிடித்தல், சங்கு எடுத்தல், முத்துக்குளித்தல் போன்ற எந்தத் தொழிலும் செய்ய இயலாது சோர்ந்து போயினர். பரதவர்கள் வாழ்வில் கொடிய வறுமை தாண்டவமாயிற்று. அரேபிய மூர்களின் கொட்டத்தை உடனடியாக அடக்கி ஒடுக்கவேண்டும் என்று நினைத்து, கொச்சியிலிருந்த துணை நிலை ஆளுநர் பெரோவாஸ் தனது தளபதி அந்தோனிளோ சில்வா தலைமையில் பன்னிரண்டு கப்பல்களை கி.பி.1534-ம் ஆண்டு முத்துக்குளித்துறைக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் கீழக்கரை என்ற ஊரின் அருகே கன்னியாமேடு என்ற கடற்பகுதியில், முகமதியர்களுடன் போரிட்டு, அவர்களை அடக்கினர். குனாலி மரக்கார் தப்பியோடி விட்டான். முத்துக்குளித்துறையில் அமைதி ஏற்பட்டது.

ஆனாலும் உள்நாட்டில் அராபிய மூர்களுக்கம், பரதவர்களுக்கும் அடிக்கடி மோதல்கள் நடந்தது கொண்டுதான் இருந்தது. தூத்துக்குடியில் பணியாரம் விற்றுவந்த ஒரு பரதவப் பெண் இசுலாமியர் ஒருவரால் துன்புறுத்தப்பட்டதை அறிந்த அப்பெண்ணின் கணவர் அந்த இசுலாமியரைத் தட்டிக் கேட்டபோது இருவருக்குமிடையில் வன்முறை வெடித்தது. பரதவரின் நீண்ட காதுகளுள் ஒன்றை அந்த இசுலாமியர் வெட்டிவிட்டார். அக்காலத்தில் ஒரு பரதவருக்கு ஏற்படக்கூடிய மிகப் பெரிய அவமானமாக அது கருதப்பட்டது. ஏனெனில் அக்காலத்தில் பரதவ ஆண்கள் காதுகளில் நகை அணிந்து வந்ததால் அவர்களின் காதுகள் தோள்கள்வரை நீண்டிருந்தன. தனிப்பட்ட ஒரு பரவதரின் காது வெட்டப்பட்டாலும். அது பரதவ

சமுதாயத்துக்கே அவமானம் என்று கருதப்பட்டது. அப்பரதவர் தம் நண்பர்கள் உறவினர்களோடு அந்த இசுலாமியரையும் அவரது தோழர்களையும் தாக்கத் தொடங்கினார். சிலர் கொல்லப்பட்டனர். கடலுக்குள் சென்று தப்பிக்க முயன்ற இசுலாமியர் சிலர் கடலில் புயலால் பாதிக்கப்பட்டு இறந்தனர். காயல்பட்டினத்திலும் கீழக்கரையிலும் மிகுந்த செல்வாக்குடன் விளங்கிய இசுலாமியரின் உதவியோடு பரதவர்களைப் பழிவாங்கும் படலம் தொடங்கியது. பரதவர்கள் தாக்கப்பட்டனர். கொல்லப்பட்டனர். கரையிலும் கடலிலும் இத்தாக்குதல்கள் தொடர்ந்தன. இப்பழிவாங்கும் செயல்களுக்கு இந்து சமயம் சார்ந்தவர்களையும் இசுலாமியர் துணைக்கு அழைத்துக் கொண்டனர். இதனால் பரதவர்கள் தப்பிக்க இயலாமல் தடுமாறினர். பரதவர்களைக் கொன்று, கொண்டுவரும் ஒவ்வொரு தலைக்கும் இசுலாமியர்கள் ஐந்து பணம் வழங்கினர். அவ்வாறு கொண்டு வரும் தலைகளின் எண்ணிக்கை மிக அதிகமாகிவிட்டதால், தலைக்கு விலை ஒரு பணமாகக் குறைக்கப்பட்டது. இதனால் தாக்குதல் தொடர்ந்தாலும், குறையத் தொடங்கியது. பரதவர்களின் அனைத்துக் குடியிருப்புகளும், படகுகளும் தீக்கரையாக்கப்பட்டன. பரதவ இனம் முழுவதையும் அழித்துவிட வேண்டுமென அராபியமூர்கள் திட்டமிட்டனர்.

மீளாத்துயரத்தில் பரதவர்கள்

தூத்துக்குடியிலும், மற்றக் கடற்கரை கிராமங்களிலும் பரதவர்களின் பிணங்களாகவே கிடந்தன. தீயினால் எரிந்துபோன வீடுகளும், படகுகளும், மீன்பிடி வலைகளும் கிராமங்களில் சிதறிக் கிடந்தன. வெந்தும் வேகாததுமான பிணங்களுக்காக, ஓநாய்களும், பிணந்தின்னிக் கழுகுகளும் ஊரை வட்டமிட்டுக் கொண்டிருந்தன. பரதவர்களின் சகாப்தம் முடிந்துவிட்டது. பரதவர் என்ற இனம் இப்பகுதியில் இருந்தது இப்போது இல்லை என்ற வரிகள் வரலாற்றுச் சுருளில் எழுதவேண்டிய நேரம் வந்துவிட்டது. பரதவர்களுக்கு இனி விடுதலை இல்லை. விடியல் இல்லை என்று நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், கடவுள் தனது தேவதூதனாக டாம் ஜோ குருஸ் என்ற கேரளமலபாரைச் சேர்ந்த குதிரை வியாபாரி ஒருவரை தூத்துக்குடி பரதமக்களிடம் அனுப்பிவைத்தார். இவர் கள்ளிக்கோட்டையில் பிறந்தவர். ஷெட்டி என்ற இனத்தைச் சேர்நதவர். குதிரை வியாபாரம் செய்வது நிமிர்த்தமாக போர்ச்சுக்கல் நாட்டுக்கு சென்று, அங்கு அரசை சந்தித்து கிறிஸ்துவ மறையைத் தழுவியவர். பரதகுலத் தலைவர்களான பட்டங்கட்டிகளிடம் இவர் பேசினார். மூர் முகமதியர்களின் இன்னல்களிலிருந்து அவர்கள் மீள வேண்டுமென்றால், கிறிஸ்தவ மறையைத் தழுவ வேண்டும் என்ற ஆலோசனை கூறினார். அவர்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவினால் அவர்களுக்கு போர்த்துக்கீசிய படைகளின் ஆதரவு முழுமையாகக் கடைக்கும் என்று உறுதி அளித்தார். தங்கள் சமூகத்துக்கு பாதுகாப்பு கிடைக்கும் என்று நினைத்த பரதவத் தலைவர்கள் அதற்கு சம்மதம் தெரிவித்தனர்.

கிறிஸ்துவ மறையில் பரதவர்கள்

கி.பி.1535-ம் ஆண்டு இறுதியில் பதினாறு பரதவ குலத் தலைவர்கள், டாம் ஜோ குரூஸ் தலைமையில் போர்த்துக்கீசியரின் கப்பலில் கொச்சி சென்றனர். கொச்சியிலிருந்த படைத்தளபதி பெரோவாஜ், மேலும் பரதவர்கள் கொச்சிக்கு வந்து தாங்கள் கிறிஸ்தவ மறையைத் தழுவ விரும்புவதாக வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். அதன்படி மேலும் எழுபது பரதவர்கள் கொச்சிக்குச் சென்றனர். அப்போது, அங்கிருந்த முதன்மைக்குரு மிக்கேல் வாஜ் அடிகளார், பரதவர்களுக்கு திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவமறையைத் தழுவினர். முதன்முறையாக எண்பத்தி ஐந்து பரதவர்கள் திருமுழுக்கு பெற்று கிறிஸ்துவமறையைத் தழுவினர். திருமுழுக்கின் அடையாளமாக அவர்களுக்கு போர்த்துக்கீசியர்களின் குடும்பப் பெயர்களைச் சூட்டினார். பர்னான்டோ, கர்வாலோ, விக்டோரியா என்று போர்த்துக்கீசிய குடும்பப் பெயர்கள் பரதவர்களுக்கு கொடுக்கப்பட்டது. கி.பி.1536-ம் ஆண்டின் துவக்கத்தில் இவர்கள் திருமறையைத் தழுவினர். அதே ஆண்டு பிப்ரவரி மாதம், தளபதி பெரோவாஸ் ஒரு பெரும் கட்றபடையை முத்துக்குளித்துறைக்கு அனுப்பி வைத்தார். அவர்கள் வேதாளை என்ற ஊருக்கருகில், அராபிய மூர்களுடன் கடுமையாகப் போரிட்டனர். அவர்களது படகுகள் தீவைக்கப்பட்டன. கடலில் தப்பிக்க வழியின்றி அவர்கள் நாட்டின் உட்பகுதிக்கு ஓடிவிட்டனர். இந்தப்போரில் மூர் முகமதியர்களின் பலம் முற்றிலுமாக முறியடிக்கப்பட்டது. முத்துக்குளித்துறையின் கடற்பகுதி முழுவதும் போர்த்துக்கீசியர்களின் வசம் வந்தது. பரதவர்கள் கிறிஸ்துவ மறையைத் தழுவலாயினர். ஏறத்தாழ 20,000க்கும் அதிகமான பரதவர்கள் ஏககாலத்தில் திருமுழுக்குப் பெற்றனர். இந்தியாவில் ஒரு இனம் மட்டும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் கிறிஸ்துவமறையைத் தழுவியதென்றால் அது பரதவர் குலம் மட்டுமேயாகும். இவ்வாறு கடவுள், ஒரு பரதவனின் காதை இழக்கவைத்து அவர்களின் பாதையை மாற்றினார். கி.பி.1536-ம் ஆண்டு, மார்ச், ஏப்ரல் மாதங்களில் உவரி, மணப்பாடு, ஆலந்தலை, வீர பாண்டியன் பட்டனம், புன்னக்காயல் பகுதிகளில் வாழ்நத பரதவர்கள் திருமறையைத் தழுவினர். தூத்துக்குடி, வைப்பார், வேம்பார், ஊர்களில் வசித்து வந்த பரதவர்கள் கி.பி.1537-ம் ஆண்டு திருமுழுக்கு பெற்றனர். இயேசு சபைக்குருவான, அருட்திருமனுவேல் தெக்ஸ்யிரா சுவாமிகள், கி.பி.1580-ல் எழுதிய கடிதத்தில் "ஆண்டவர் ஒரு காதை வெட்டக் கொடுத்துவிட்டு, ஆயிரக்கணக்கான ஆன்மாக்களை மீட்டுக் கொண்டார்" என்று பரதவர்கள், திருமறையைத் தழுவியதை நயம்பட குறிப்பிடுகிறார்.

கடலையும், காற்றையும் தெய்வங்களாக நம்பிக் கொண்டிருந்த பரதவர்களுக்கு, கிறிஸ்தவம் ஒரு புதிய வெளிச்சத்தையும், நம்பிக்கையையும், அரவணைப்பையும் கொடுத்தது. பரதவர் சமுதாயம் முன்னேற்றமடைந்து, இன்றளவும் மாறாமல் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில், பாப்பரசரின் தலைமையின் கீழ் நிலைத்து நிற்பது, அவர்களின் ஆழ்ந்த விசுவாசத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் செயலாகவே உள்ளது என்பது நிதர்சனமான உண்மையாகும்.[97]

போர்ச்சுக்கீசியர் ஆட்சியில் தூத்துக்குடி

கொச்சியிலிருந்து வந்த கப்பற்படை கடற்கரையிலுள்ள முகம்மதியர்களை அடக்கி வென்றதும் அதில் வந்து இறங்கிய பாதர் மிச்சல் வாஸும் அவருக்கு உதவி செய்ய துணைவந்த துறவிகளுமப பரவர்களை மதம் மாற்றியபொழுது. 1532 இல் போர்ச்சுக்கீசியர் முதன்முதலில் தூத்துக்குடியில் தோன்றினர். அவர்களால் மதம் மாற்றப்பட்டவர்களின் எண்ணிக்கை சுமார் 20,000 என்றும் அவர்கள் கன்னியாகுமரியிலிருந்து வடக்கேயுள்ள முப்பது கிராமங்களில் வசித்து வந்தார்கள் என்றும் கூறப்படுகிறது. அத்தைய கிராமங்களுள் ஒன்று தூத்துக்குடிக் கிராமம். ஆனால், எப்பொழுது அங்கு நிலையான போர்ச்சுக்கீசியக் குடியேற்றம் ஏற்பட்டது என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. 1543இல் புகழ்பெற்ற சேவியர் தூத்துக்குடிக்கு வந்தபொழுது அங்கே ஒரு போர்ச்சுக்கீசியக் கவர்னர் இருந்தார். எனவே அவர்கள் குடியேற்றத்தை ஏற்படுத்தியது 1532 முதல் 1545 வரை உள்ள பத்து வருடகால அளவிற்குள்ளேதான் இருக்க வேண்டும். ஆனால், 1532 முதல் சுமார் ஐம்பது ஆண்டுகள் வரை மதம் மாற்றப்பட்ட பரதவர்களைப் போலவே தூத்துக்குடி மக்களும் போர்த்துக்கீசிய மக்கள் என்று மதிக்கப்பட்டார்கள்.

தூத்துக்குடி என்ற இடத்தின் சரியான ஆங்கிலப் பெயர் 'டூட்டிகொரின்' என்பது ஐரோப்பியர்களின் உச்சரிப்பில் தூத்துக்குடி என்பதிலுள்ள இறுதிவல்லின இகரம் ரகரமாக ஒலிக்கப்பட்டதால் தூத்துக்குடிக்கு இப்பெயர் ஏற்பட்டது. இதேவிதமாகவே அருகிலுள்ள மற்றோர் ஊரின் பெயராகிய மணப்பாடு என்பது 'மணப்பார்' என்றாயிற்று. டூட்டிகொரின் என்பதிலுள்ள கடைசி னகர மெய் ஓசைநயம் காரணமாகச் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். அதேபோலக் கொச்சி என்பது கொச்சின் ஆகவும் கமரி என்பது கோமரின் எனவும் மாறின. தூத்துக்குடி என்ற சொல்லுக்குக் 'கிணறுகள் தூர்த்து நிரப்பப்பட்ட நகரம்' என்பது பொருள். தூத்து என்பது சரியான தமிழில் 'தூர்த்து' என வழங்கும். கிணற்றை நிரப்பித் தரைமட்டமாக்குதல் என்பது இதன் பொருள். குடி என்பது வசிக்குமிடம். அதாவது, நகரம். இந்தச் சொல்லிலக்கணம் சரியோ தவறோ, ஆனால் ஏறக்குறையத் தகுதியானப் பொருளைத் தருகிறது. ஏனெனில், பழைய கிணறுகளைத் தூர்த்து விட்டுப் புதிய கிணறுகளை வெட்டுவது தூத்துக்குடியில் நாள்தோறும் நடைபெறும் நிகழ்ச்சியாகும். தூத்துக்குடி சாதாரண கிராமந்தான். போர்ச்சுக்கீசியர் வருகைக்கு முன் சிறிது வியாபாரமும் இங்கு நடைபெற்று வந்தமை தெரிகிறது. ஆனால், போர்த்துக்கீசியர் இவ்விடத்தைப் பெரிதும் விரும்பித் தேர்ந்தெடுத்ததற்குக் காரணம். இங்குத் துறைமுகம் இருந்ததுதான். சோழ மணடலக் கடற்கரையிலேயே இது ஒன்றுதான் முழு இயற்கைத் துறைமுகம். எல்லாப் பருவக்காற்றுகளிலிருந்தும் இத்துறைமுகம் தீவுகளாலும் மணல் மேடுகளாலும் இயற்கையிலேயே காப்பாற்றப்பட்டிருந்தது. ஆனால், இதன் ஆழம் மிகக் குறைவாயிருந்தமையால், இங்கு அறுபது டன் எடையுள்ள கபல்கள் மட்டுமே மிதக்கும். இந்தக் குறைபாடு மட்டும் இல்லாதிருந்தால், தூத்துக்குடி சென்னையையும்

மிஞ்சிவிடும். எனவே, போர்த்துக்கீசியர் சில காலம் வரை புன்னக்காயலைத் தமது முக்கிய நிலையமாக வைத்துக் கொண்டனர். ஆனால், அங்குத் துறைமுகத்திற்கான எவ்வித பொருத்தமும் இல்லாமல் திறந்த வெட்ட வெளி சாலை ஒன்றுதான் இருந்தது. ஆகையால் சுமார் 1580ஆம் ஆண்டில் போர்ச்சுக்கீசியர் தூத்துக்குடியைத் தலைமைக் குடியேற்ற நகர் ஆக்கிக் கொண்டனர். பழம் போர்த்துக்கீசியர் பயன்படுத்திய மரக்கலங்கள் ஐரோப்பியாவில் கட்டப்பட்டன. எனினும், அவை பெரிய உருவமுள்ள நல்ல நாட்டு மரக்கலங்களைவிட மிகப்பெரியனவல்ல. அதனால் அவை துறைமுகத்திற்குள் சுமையை ஏற்றி இறக்க வசதியுள்ளனவாய் இருந்தன. மேலும் இப்போது இருப்பதைவிட மிகக் குறைவான ஆழமே அத்துறைமுகத்திலிருக்க வேண்டும்.

கலங்கரை விளக்கம் அமைக்கப்பட்டிருக்கின்ற முக்கியமான தீவு பாண்டியன் தீவு என்று வழங்கப்படுகிறது. இந்தத் தீவிற்கு வெளியேயுள்ள ஆழமற்ற தண்ணீரில் கடல் நுரைக்கல் அதிமாகக் கிடைக்கின்றது. தூத்துக்குடி நகரத்தில் மக்கள் தரையைத் தோண்டினால் இரண்டு அடி ஆழத்தில் ஒரு மெல்லிய படிவை (அடுக்கு) கண்டனர். அங்குக் காணப்பட்ட சிறிய தானியம் போன்ற மணற்கற்களை உள்நாட்டு மக்கள் உப்புக்கல் என்று கூறுவார்கள். கடல்நீரில் இந்நிலம் மூழ்கிய பொழுது மேற்படலம் கடினமானதால் ஏற்பட்டதே இந்த உப்புக்கல். அதற்குக் கீழுள்ள படலம் பெரிய தானிய அளவுள்ள கற்கள். மேலும், சிறிய கற்கள் கீழுமாக வண்டல் தெளியும் போது ஏற்படுவது போலக் கடல் மணல் இருப்பதை காணலாம். கடல் மணல், கிளஞ்சில்கள், ஆழமான கடலிலுள்ள கிளிஞ்சில்கள் முதலியன மேல்மட்டத்திலோ அல்லது அதற்குச் சில அங்குலங்கள் கீழேயோ இருக்கின்றன. இத்தகைய மணல் பாளையங்கோட்டைக்குச் செல்லும் வழியில் ஐந்தாவது மைல் கல்லருகே உள்ள கோரம்பள்ளம் வரை அமைந்திருக்கின்றது.[98]

டச்சுக்காரர் ஆட்சியில் தூத்துக்குடி

1595இல் முதன்முதல் டச்சு வியாபாரக் கப்பல் கிழக்கு நோக்கிப் புறப்பட்டது. 1602இல் டச்சுக்கப்பல் இலங்கைக்கு வந்தது. அந்த ஆண்டிலிருந்து 1658 வரை போர்ச்சுகீசியர் இலங்கையிலிருக்கும் சோழமண்டலக் கடற்கரையிலிருந்தும் வெளியேற்றப்பட்ட காலம் வரை டச்சுக்காரர்களும் போர்ச்சுகீசியரும் ஓயாத போரில் ஈடுபட்டிருந்தனர். தூத்துக்குடியைப் பிடிப்பதற்கு மூன்று ஆண்டுகளுக்கு முன் 1655 இல் டச்சுக்காரர்கள் கொழும்பைக் கைப்பற்றினார்கள்.

டச்சுக்காரர்களுக்கு வேம்பாறு, வைப்பாறு, புன்னைக்காயல், பழைய காயல், மணப்பாடு, கன்னியாகுமரி முதலிய இடங்களில் வர்த்தகசாலைகள் இருந்தன. தலைமை வர்த்தக சாலைகளிலிருந்து நெடுந்தூரத்தில் உள்நாட்டிற்குக் கூட உதாரணமாக ஆழ்வார்திருநகரியைப் போன்ற இடங்களில் பல வாணிபசாலைகள் இருந்தன.

நெடுங்காலத்திற்குப்பின் தூத்துக்குடியில் கவர்னரைவிடச் சிறப்புப் பொறுப்புகள் அதிகாரங்கள் வாய்ந்த ராஜப் பிரதிநிதியை நியமித்தனர். டச்சுக்காரர்கள் போர்ச்சுகீசியரைப் போன்று கடற்கரைச் செம்படவராகிய பரதவர்களை ஆளும் ஆட்சி அதிகாரத்தைக் கேட்கவில்லை. ஆனால், அவர்களுடைய ஆதரவாளர்களும் காப்பாளர்களுமாய் இருந்தார்கள். எனவே பரதவர்கள் உள்நாட்டு இந்து முகம்மதிய அரசர்களின் படையெடுப்புக் கொடுமைகளினின்றும் காப்பாற்றப்படுவதற்காக அருகிலுள்ள டச்சுக்காரருடன் நட்புரிமையுடன் வாழ வேண்டியிருந்தது. டச்சுக்காரர் வருகைக்கு முன்பு பரதவர் சாதியைச் சேர்ந்தவர்களின் தலைவனாகிய சாதித் தலைவன் வீரபாண்டியன் பட்டணத்திலிருந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால், சாதித் தலைவனுக்கு இருக்கின்ற செல்வாக்கைப் பயன்படுத்திக் கொள்ள எண்ணிய டச்சுக்காரர்கள் சாதித் தலைவனைத் தூத்துக்குடியிலேயே வசிக்குமாறு தூண்டினார்கள்.

1700இல் பிரஞ்சு மதபோதகரான தவத்திரு மார்ட்டினின் ஒரு கடிதம் லாக்மானுடைய 'கிறிஸ்தவ மதபோதகரின் பயணங்கள்' என்பதில் வெளியிடப்பட்டுள்ளது. அதில் அவர் தூத்துக்குடி 50,000 மக்களுக்கு மேல் வாழும் செழிப்பான நகரம் என்பதை விவரித்துள்ளார். அதே ஆசிரியர் கடற்கரையிலுள்ள ஒரே இயந்கைத் துறைமுகம் தூத்துக்குடிதான் என்று எழுதியுள்ளார். இங்குப் புயற்காலங்களில் ஐரோப்பிய மரக்கலங்கள் சிறியனவாய் இருந்தனவோ, அல்லது இரண்டும் சேர்ந்திருந்தனவோ. ஏதோ ஒரு காரணத்தால், 1700இல் ஐரோப்பிய மரக்கலங்கள் துறைமுகத்திற்குள் நுழைந்தன என்பது தெரிகிறது. அவர் மேலும் கூறுவதாவது: 'கடல் வழியாகத் தூத்துக்குடிக்குச் செல்பவர்களுக்கு அது அழகிய ஒரு நகரமாய்க் காட்சி அளிக்கின்றது. அங்குள்ள இரண்டு தீவுகளிலும் மிக உயரமான கட்டடங்கள் நிழல்தருமாறு அமைந்துள்ளன. டச்சுக்காரர்கள் சில ஆண்டுகளுக்குப்பின அதே போல உள்நாடுகளிலிருந்து வரும் விக்கிரக ஆராதனைக்காரர்களின் அவமதிப்பினின்றும் தங்களைக் காத்துக் கொள்ள ஒரு சிறிய கோட்டையும் கட்டப்பட்டது. கடற்கரை ஓரத்திற் பல விரிவான பண்டசாலைகள் கட்டப்பட்டன. அவை அனைத்தும் மிக ஆழகான தோற்றமுடையனவாயிருந்தன.

டச்சுக்காரர் தூத்துக்குடியிலிருந்து போதுமான வரிவசூல் செய்து வந்தனர். முழு முத்துக்குளித்தல் கடற்கரையும் பாதி மதுரை அரசருக்கும் மற்றவை மறவர் இளவரசனுக்கும் உரிமையாயிருந்தன. இம்மறவ நாட்டு இளவரசன் மதுரை அரசனுக்குக் கப்பம் கட்டுபவன். ஆனால் அவன் விரைவிலேயே மதுரை அரசனை வேரோடு அசைத்து ஆட்டங்காணச் செய்துவிட்டான். சில ஆண்டுகளுக்குப் பிறகு முத்துக்குளித்தல் கரையின் முழு உரிமையையும் அதைச் சார்ந்த நாடுகளின் அதிகாரத்தையும் விலைபேசி வாங்க டச்சுக்காரர்கள் முயன்றார்கள். இக்காரணத்தால் டச்சுக்காரர்கள் மறவ நாட்டரசரிடம் மிக அழகிய பரிசுகளுடன் ஒரு திறமையுள்ள தூதுவரை அனுப்பி வைத்தார்கள். இளவரசரோ பரிசுகளைப் பெற்றுக் கொள்வதே தகுதியானது என்று ஏற்றுக் கொண்டு, பல கருத்துகளுக்கு வாக்களித்தார். ஆனால், அவர் வாக்குப்படி நடந்து கொள்ளவில்லை.

அதற்குள் டச்சுக்காரர்கள் மதுரை அரசரிடமிருந்து திருநெல்வேலிக் கடற்கரை முத்துக்குளிப்பிடங்களின் அதிகாரங்களைப் பெற்றுவிட்டார்கள். அதனால், முத்துக்குளிக்க அனுமதிபெறும் கட்டண வருமானத்தில் அவர்களுக்குப் போதுமான வருமானம் வந்தது. முத்துக்குளிக்க விண்ணப்பிக்கும் ஒவ்வொருவருக்கும் தலைக்கு அறுபது எகுகள் (இதை எழுதிய ஆசிரியர் பிரெஞ்சுக்காரரானத்தால், அக்காலத்தில் வழக்கிலிருந்த பிரெஞ்சு நாணயத்திலேயே மதிப்பகைக் குறிப்பிடுகிறார். எகு என்பது ஐந்து பிராங்குகள் மதிப்புள்ளது. இக்காலத்தில் அந்த நாணயம் வழக்கற்று விட்டது) வரிவிதிக்கப்பட்டிருந்து. சில சமசமயங்களில் அனுமதிக்கப்படும் ஒவ்வொரு படகிற்கும் அதிகப்படியான வரிவிதிப்பதும் உண்டு. இவ்வாறு அனுமதி பெற்ற மரக்கலங்கள் அறுநூறு அல்லது எழுநூறாயிருக்கும். சங்கு, சிப்பி எடுத்தலும் அதே முத்துக்குளிக்கும் வரையறைக்குட்பட்டிருந்தது. இதனாலும் நல்ல லாபம் கிடைத்தது. மதுரையில் நெய்யப்பட்ட துணிகளை வாங்கிக் கொண்டு அவற்றிற்குப் பதிலாக ஜப்பான், தோல், மொலுகா வாசனைத் திரவியங்களைக் கொடுத்துச் சாதாரணமாக வாணிபம் செய்வார்கள்.[99]

முத்துக் குளியல்களின் இழப்பு

மார்க்கபோலோ, சீசர், பிரடரிக்கு என்பவர்களால் விவரிக்கப்பட்டுள்ள ஆரம்ப முத்துக்குளியல்களில் இத்தகைய இழப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஆண்டுதோறும் கடற்கரையில் ஏதேனும் ஓர் இடத்தில் முத்துக்குளித்தல் வெற்றிகரமாக நடைபெற்று வந்தது. ஆனால், பிற்காலத்தில் அடிக்கடி இழப்பு ஏற்பட்டதெனக் கூறப்பட்டது. ஆனால், அது ஒரு முழு வம்ச காலத்திற்கு நிலையாகிவிட்டது. கொச்சி பிஷப்பான பாரெட்டோ 1615இல் வெளியிட்ட மதபோதனையில் முத்துக்குளியல் கடற்கரையில் நடந்த முத்துக்குளியல்கள் முப்பது நான்கு ஆண்டுகளாக இழப்பையே விளைவித்தன என்று குறிப்பிட்டிருப்பதாக டாக்டர் பர்னல் கூறியுள்ளார். மறுபடியும் முத்துக்குளித்தல் நான்கு ஆண்டுகட்கு முன்புதான் ஆரம்பிக்கப்பட்டது. இதுதான் அடிக்கடி இழப்பை உண்டு பண்ணிய முத்துக்குளியல் ஆரம்பம். இதுவே இக்காலத்து முத்துக்குளியலின் முக்கிய இயல்பாயும் இருக்கிறது. 1700இல் ஏற்பட்ட இழப்பைப்பற்றி, தவத்திரு. மார்ட்டின் கூறுவதை நாம் பார்த்தோம். 1784இல் கிழக்கு இந்தியக் கம்பெனியின் மேற்பார்வையில் முதன் முதல் முத்துக்குளியல் நடைபெற்றது. இந்த வருமானத்தை மேற்பார்வையிடும் அதிகாரியாக அல்லது ஆணையாளராக நியமிக்கப்பட்டிருந்தவர் பெருமைக்குரிய இர்வின் என்பார். இந்த ஆண்டில் நடந்த முத்துக்குளியலிலும் இழப்பு ஏற்பட்டதென அவர் கூறுகிறார். அத்தகைய இழப்புகளுக்குக் காரணம் இன்றுவரை இன்னதென்று அறிந்து கொள்ள இயலாத மறைபொருளாய் இருக்கிறது.[100]

டச்சுக்காரர்களின் ஆதிக்கம்

தூத்துக்குடியில் டச்சுக்காரர்களின் முதல் ஆதிக்கம் ஏற்பட்ட காலம், டச்சு சமாதிக்கல்லில் காணப்படும் 1706 ஆம் ஆண்டுதான். ஓர்மில் டச்சுக்காரரைப் பற்றிய

செய்தி குறிப்பிடப்படுகிறது. அதில் 1706 இல் நடைபெற்ற நிகழ்ச்சிகள் தொடர்பாக குறிப்புதான் அடுத்தப்படியாகத் தூத்துக்குடி டச்சுக்காரரைப் பற்றியுள்ளது. பாளைக்காரர்கள் அடிக்கடி டச்சுக்காரர்களின் உதவியையும் ஊக்கத்தையும் பெற்றுவந்தனர் என்பது தெரிகிறது.

பிறகு அடங்காத திருநெல்வேலிப் பாளையக்காரருடன் டச்சுக்காரர்கள் ஆங்கிலேயருக்குப் பகையாக, நிலையான உடன்பாடு செய்துக் கொண்டதாகக் கர்னல் புல்லர்ட்டன் என்பவர் கூறுகிறார். தேசியப் பொறாமை காரணமாக ஆங்கிலேயர்கள் ஆதாரமற்ற செய்திகளாகச் சொல்லவில்லை. ஏனெனில், கர்னல் புல்லர்ட்டன் பாளையங்குறிச்சியை 1763இல் கைப்பற்றியபோது கொழும்பிலிருந்த டச்சு அரசாங்கத்தினருக்கும் கட்டபொம்மன் நாயக்கனுக்கும் ஏற்பட்ட உடன்பாட்டின் மூலசாசனம், அவன் கோட்டையில் அகப்பட்டது.

திருநெல்வேலி வியாபார வரலாற்றைப் பற்றிய முக்கியமான சில ஆண்டுகள் இங்குச் சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில பிற்காலத்துச் செய்திகளாயிருப்பினும், முந்தைய தேதியிட்டுத் தரப்பட்டுள்ளன:

1. 1658 இல் டச்சுக்காரர் தூத்துக்குடியைப் போர்ச்சுகீசியரிடமிருந்து கைப்பற்றினர்.
2. 1782 இல் தூத்துக்குடி ஆங்கிலேயர்களால் டச்சுக்காரரிடமிருந்து கைப்பற்றப்பட்டது.
3. 1783 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2 ஆம் தேதி ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி, 1785 இல் தூத்துக்குடியை ஆங்கிலேயரிடமிருந்து டச்சுக்காரர் மீண்டும் பெற்றனர்.
4. 1795 இல் மறுபடியும் ஆங்கிலேயர் தூத்துக்குடியைக் கைப்பற்றினர்.
5. 1818 பிப்ரவரி 9 ஆம் தேதி மறுபடியும் தூத்துக்குடி டச்சுக்காரரிடம் திருப்பிக் கொடுக்கப்பட்டது.
6. இறுதியாக 1825 ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் முதலாந்தேதி சாமாதானமாக டச்சுக்காரர் ஆங்கிலேயரிடம் தூத்துக்குடியைக் கொடுத்துவிட்டனர்.[101]

பனிமயமாதா பேராலயம், தூத்துக்குடி

இன்று தூத்துக்குடி, இந்திய நாட்டின் மிகப் பெரிய துறைமுகங்களில் ஒன்றாக விளங்குகிறது. துறைமுக அபிவிருத்தி பணிகளும், பல்வேறு தொழில்துறை வளர்ச்சிகளும் தூத்துக்குடியை தென்தமிழ்நாட்டின் முக்கிய நகராமாக்கி விட்டது. தமிழ்நாட்டின் வரலாற்றை புரட்டிப் பார்த்தால் பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து, நமது நாடு சுதந்திரம் பெறும் வரை தூத்துக்குடி வெளிநாட்டினரால் மாறி மாறி ஆளப்பட்டு வந்திருப்பதை அறியமுடியும். இங்கு துறைமுக வசதி இருந்தால் வியாபார நிமித்தம் இங்கு வந்த வெளிநாட்டினர் இங்கேயே தங்கி தங்கள் ஆட்சியை செலுத்தியுள்ளார்கள்.

பதினாறாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை பாண்டிய மன்னர்கள் ஆட்சியில் இருந்த தூத்துக்குடி 1532-ம் ஆண்டு போர்த்துக்கீசியர்கள் வசமானது. அவர்கள் ஆட்சியின் கீழ் 126 ஆண்டுகள் இருந்த தூத்துக்குடியும் அதன் சார்பு ஊர்களான வேம்பாறு, வைப்பார், வீரபாண்டியன்பட்டினம், ஆலந்தலை, மணப்பாடு ஆகியவை ஆலந்து நாட்டிலிருந்து இலங்கை வழியாக வியாபாரம் செய்ய வந்த டச்சுக்காரர்கள் பிடிக்குள் சென்றது. 1658-ம் ஆண்டு முதல் டச்சக்காரர்கள் வசம் சென்ற இந்த ஊர் மக்கள் 1782-ம் ஆண்டு முதல் ஆங்கிலேயர் கைக்கு மாறியது. பின்னர் சிலகாலம் டச்சுக்காரர்கள் வசம் சென்றது. 1825-ம் ஆண்டு முதல் இந்திய விடுதலை பெற்ற 1947-ம் ஆண்டு, வரை, அதாவது 122 ஆண்டுகள் தூத்துக்குடி ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ் இருந்தது.

அச்சமயம் தூத்துக்குடியிலும் அதனைச்சார்ந்த ஊர்களிலும் பரதவர்கள் என்னும் கடல் தொழில் புரிவோர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் கடல் நீருக்குள் மூழ்கி, முத்துச்சிப்பி எடுப்பதில் திறமை வாய்ந்தவர்களாக இருந்தனர். அவர்களிடம் முத்துக்கள் வாங்கி வியாபாரம் செய்வதற்காக வந்த அராபியர்களுக்கும், பரதவர்களுக்கம் அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. தங்களையும், தங்களது உடமைகளையும் பாதுகாத்துக்கொள்ள பரதவர்கள், போர்த்துக்கீசியர்களின் உதவியை நாடினர். அவர்களின் வேண்டுகோளின்படி, கொச்சியிலிருந்து, போர்த்துக்கீசிய தளபதி பெரோவாஸ் என்பவர் 1536-ம் ஆண்டு ஒரு பெரும் கப்பற்படையை அனுப்பி, அரேபிய மூர்களோடு போரிட்டு அவர்களை அடக்கினார். இதன் நன்றிக் கடனாக பரதவர்கள், தங்களைக் காப்பாற்றிய போர்த்துக்கீசியர்களின் மதமான கத்தோலிக்க கிறித்துவ மதத்தை தழுவினர்.

1536-ம் ஆண்டு, தூத்துக்குடியிலும் அதனைச் சார்ந்த கடலோரக் கிராமங்களிலும் இருந்த 20,000க்கும் அதிகமான பரதவர்கள் கிறித்துவ மதம் தழுவியதாக, பிஷப் கால்டுவெல் தனது 'திருநெல்வேலி சரித்திரம்' என்ற நூலில் குறிப்பிடுகிறார்.

முதல் ஆலயம் தோன்றிய வரலாறு

பதினாறாம் நூற்றாண்டின் துவக்கத்தில் கத்தோலிக்க மதம் தழுவிய பரதவர்களுக்காக கொச்சி பங்குக்குருவாக இருந்த பேதுரு கொன்சால் வாஸ் என்பவரால் தூத்துக்குடியில் புனித பேதுரு ஆலயம் முதலில் கட்டப்பட்டது, கி.பி.1542ல் தூத்துக்குடிக்கு மறைபரப்பு பணியாற்ற வந்த புனித சவேரியார், இக்கோவிலை கண்காணிக்கும் பொறுப்பை ஏற்றார். அவருக்குப் பிறகு இயேசுசபைக் குருவான என்ரிக்ஸ் அடிகளாரின் கண்காணிப்பில் 1557-ம் ஆண்டு வரை இக்கோவில் இருந்தது. அச்சமயம் கொச்சி மறை மாவட்ட ஆயருக்கும், தூத்துக்குடியில் இருந்த இயேசு சபைக் குருக்களுக்கும் ஏற்பட்ட சில சச்சரவுகளினால் பேதுரு கோவிலின் பொறுப்பு, இயேசு சபைக் குருக்களிடமிருந்து விலகிப் போய் விட்டது. எனவே இயேசு சபைக் குருக்கள் 1582-ம் ஆண்டு ஒரு கோவிலை கட்டினர். இந்தக் கோவில்

இரக்கத்தின் மாதாவுக்கு அர்பணிக்கப்பட்டது. ரோமாபுரியில் உள்ள பனிமயமாதா கோவில் திருநாளான ஆகஸ்ட் 5-ம் தேதி புனிதப்படுத்தப்பட்டு, முதல் திருப்பலி நடைபெற்றது.

பனிமய ஆலயத்திருவிழா

ஒவ்வாரு ஆண்டும் ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி, இவ்வாலயத்தில் பனிமயமாதா திருவிழா நடைபெற்றது. காலப்போக்கில் இரக்கத்தின் மாதா ஆலயம் என்பது மாறி, பனிமயமாதா ஆலயம் என அழைக்கப்படலாயிற்று. 1600-ம் ஆண்டு நடைபெற்ற பனிமயமாதா திருவிழாவினைப் பற்றி, இயேசு சபைக் குருவும், தென் தமிழகத்தின் கத்தோலிக்க வரலாற்று ஆசிரியருமான லியோன்பெஸ் என்பவர் தனது நூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார். ‘‘1600-ல் நடைபற்ற பனிமயமாதா திருவிழாவிற்கு கோவாவில் இருந்து அதன் வட்டாரக் குரு நிக்கொலாஸ் பிமொன்மோ வந்திருந்தார். அன்று நடைபெற்ற பவனியில் அதிதூதர் மிக்கேல், புனித செபஸ்தியார், புனித சின்னப்பர், புனித இராயப்பர் சப்பரங்கள் முன்னே செல்ல அதனைத் தொடர்ந்து குழந்தை இயேசுவைக் கையில் தாங்கிய புனித மரியாளைத் தாங்கி அழகிய சப்பரமும் பவனியாக வந்தது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதைத் தொடர்ந்து நற்கருணை நாதரின் பவனியும் வந்தது. ஆயிரக்கணக்கானோர் பங்கு கொண்டு சிறப்பித்த இந்த திருவிழா இரண்டு நாள் நடைபெற்றது.

பனிமயமாதா திருவுருவம்

1542-ம் ஆண்டு, தூத்துக்குடிக்கு மறைபரப்பு பணியாற்ற வந்த புனித சவேரியார், பெண் தெய்வ வழிபாட்டில் ஈடுபாடுடன் இருந்த மதம் மாறிய பரதவர்களுக்கு ஒரு மாற்றுவழி காட்டியாக பிலிப்பைன்ஸ் தலைநகர் மணிலாவில் ஒரு கன்னியர் மடத்தில் இருந்த அழகிய மாதா சுரூபத்தை முத்துக்குளித்துறை பரதவர்களுக்கு அன்பளிப்பாக கேட்டதாகவும், ஆனால் அந்தக் கன்னியர்கள் சவேரியாருக்கு கொடுக்க மறுத்து விட்டதாகவும் சொல்லப்படுகிறது. பின்னர் சவேரியார் மரணமான பிறகு அவரது அருமை பெருமைகளை கேள்விப்பட்ட அந்த கன்னியர்கள் 1555-ம் ஆண்டு ஜுன் மாதம் 9-ம் தேதி, ‘சந்தலேனா’ என்ற கப்பல் மூலம் தூத்துக்குடிக்கு அனுப்பி வைத்ததாக பனிமயமாதா ஆலய வரலாற்று குறிப்பேடு தெரிவிக்கிறது. இந்தக் கருத்தை சிலர் மறுத்தாலும், ஏராளமான வரலாற்று குறிப்பேடுகள், பனிமயத் தாயின் புதுமைச் சுரூபம் மணிலாவில் இருந்துதான் வந்ததாக தெரிவிக்கின்றன. 1552-ம் ஆண்டு, புனிதசவேரியார் சான்சியன் தீவில் மரணமடைந்தார். அவரது உடலை சவப்பெட்டிக்குள் வைத்து, அதனுள் நிறைய சுண்ணாம்புக் கட்டிகளை நிரப்பி அடக்கம் செய்தனர். அவ்வாறு அடக்கம் செய்தால், விரைவில் அவரது உடல் அழிந்து விடும் என்றும், பிறகு எஞ்சியிருக்கும் எலும்புகளை கோவாவிற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்று திட்டமிட்டிருந்தனர். இரண்டு மாதங்களுக்குப் பின்னர் அந்தச் சவப்பெட்டியை திறந்து பார்த்த போது அவரது உடல்

எவ்வித அழிவுமின்றி புத்தம் புதிதாக இருந்தது. 1553-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் அழியாத அந்த உடல் மலாக்காவுக்கு கொண்டு செல்லப்பட்டது. பின்னர் 1554-ம் ஆண்டு, மார்ச் 16-ம் தேதி கோவாவிற்கு கொண்டு வரப்பட்டு அங்குள்ள 'பாம் ஜுசஸ்' தேவாலய வெள்ளிப் பேழையில் வைக்கப்பட்டது. இந்த விவரங்கள் மணிலாவில் இருந்த கன்னியர்களுக்கு தெரிய வந்திருக்கும். எனவே புனித சவேரியார் மீது கொண்ட மரியாதை நிமித்தம் 1555-ம் ஆண்டு, புனித பனிமயமாதாவின் சுரூபத்தை தூத்துக்குடிக்கு அனுப்பியிருக்கக்கூடும் என்று போதுமான அளவில் நம்புவதற்கு இடமுண்டு.

புதிய ஆலயம்

கத்தோலிக்க கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையின் வளர்ச்சிக்கேற்ப, புதிய ஆலயம் கட்ட, அப்போதைய பங்குக்குரு விஜிலியுஸ்மான்சி முடிவு செய்தார். 1712-ம் ஆண்டு, ஏப்ரல் 4-ம் தேதி, புதிய கோவிலுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மக்களின் தாராளமான நன்கொடையால் ஆலய பணி துரிதமாக நடைபெற்றது. 1713-ம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 5-ம் நாள், புதிய ஆலயம் அர்ச்சிக்கப்பட்டது. அன்றைய காலக்கட்டத்தில் இந்த ஆலயம் மிகவும் பெரியதாகக் கட்டப்பட்டிருந்ததால் 'பெரிய கோவில்' என்று அழைக்கப்பட்டது. இன்றும் அந்த ஆலயம் 'பெரிய கோவில்' என்றே அன்புடன் அழைக்கப்படுகிறது. இந்த ஆலயத்தில் அமைக்கப்பட்டுள்ள அழகிய பளிங்குப் பீடத்தில் பனிமய அன்னையின் சுரூபம் வீற்றிருக்கிறது. தன்னை நாடிவரும் பக்தர்களுக்கும், தன்மகன் இயேசுவிடம் பரிந்துரை செய்து, நாள்தோறும் அருள் பாலித்து வருகிறாள் பனிமய அன்னை.

தங்கத் தேர் விழா

முதன்முறையாக இந்த ஆலயத்தில் 1806-ம் ஆண்டு, பிரம்மாண்டமான தங்கத்தேர் இழுக்கப்பட்டது. இதை செய்வதற்கு மிகவும் உறுதுணையாக இருந்த சமுதாயத் தலைவர் டாம் கபிரியேல் டி குருஸ் 'தேர் மாறன்' என்றழைக்கப்பட்டார். அதன் பிறகு ஆலயத்தின் முக்கிய நிகழ்வின் போது தேர் இழுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆலயத்தின் நானூறாவது ஆண்டு நிறைவு விழா 1982-ம் ஆண்டு நடைபெற்றது. அப்போது தங்கத்தேர் இழுக்கப்பட்டது. பின்னர் இயேசு கிறிஸ்துவின் இரண்டாயிரம் ஆண்டு பிறப்பு விழாவினைச் சிறப்பிக்கம் வகையில் 2000-வது ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி, 13-வது முறையாக தங்கத்தேர் இழுக்கப்பட்டது. 1982-ம் ஆண்டு, பாப்பரசர் இரண்டாம் அருள் சின்னப்பர் அவர்களால் இந்த ஆலயம் 'பசிலிக்கா' என்று அழைக்கப்படும் பேராலய நிலைக்கு உயர்த்தப்பட்டது. ஒரு ஆலயத்தின் வரலாற்று மாண்பினை சிறப்பிக்கும் வகையில், ஒரு சில கத்தோலிக்க கிறிஸ்தவ ஆலயங்கள் 'பரிசிலிக்கா' என்ற நிலைக்கு திருத்தந்தையால் உயர்த்தப்படும். அவ்வாறே பனிமயமாதா ஆலயமும் போராலயமாக உயர்த்தப்பட்டது. இந்த ஆலயத்தின் 425-வது ஆண்டு நிறைவு விழாவும், 'பசிலிக்கா' என்ற உயர்நிலைக்கு உயர்த்தப்பட்டதின்

வெள்ளி விழா நினைவாகவும் 2007-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5-ம் தேதி தங்கத்தேர் இழுக்கப்பட்டது. நமது இரட்சகராம் இயேசுவை மார்பிலும் தோளிலும் சுமந்து சென்ற அன்னை மரியாள் நம்மையும் அரவணைத்துச் செல்வாள் என்று அசைக்கமுடியாத நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.[102]

பண்பாட்டு மயமாக்குதல்

பரதவர்களின் சமய மாற்றத்திற்குப்பின், போர்ச்சுக்கீசியரின் பழக்க வழக்கங்கள், சடங்குகள், கலை நுணுக்கங்கள் அனைத்தும் முத்துக்குளித்துறையில் பரவத் தொடங்கின. முத்துக்குளித்துறையில் கிறிஸ்தவமயமாக்கல் தாக்கத்தை ஏற்படுத்திய பத்ரவாதோ போர்ச்சுக்கீசியரின் பண்பாடுகளையும், நாகரீகத்தையும் கூடவே விதைத்தது. இவற்றின் தாக்கம் இன்றும் இக்கடற்கறைப்பகுதியில் வெளிப்படையாகவே தெரிகிறது. இந்தப் பண்பாட்டுமயமாக்குதல், மீனவர்களை மற்றக் குழுமங்களிலிருந்து தனியாகப் பிரித்தது. இக்கிறிஸ்தவர்களும் தங்களுடைய சிறப்பான சமய, சமுதாய பழக்கவழக்கங்களால் தமிழகத்திலுள்ள மற்ற கிறிஸ்தவர்களிடமிருந்து தனித்து நின்றனர்.

பத்ரவாதோ மறைப்போதகர்களால் சமய மாற்றத்திற்குள்ளான மக்கள் தங்களுடைய திருமுழுக்கின்போது கிறிஸ்தவப் பெயர்களையும் போர்ச்சுக்கீசியரைப் போல துணைப் பெயர்களையும் அவர்களிடமிருந்து பெற்றனர். கோவா, மங்களூர், மும்பை போன்ற இடங்களில் உள்ள கத்தோலிக்கர்களும் முத்துக்குளித்துறைப் பகுதியில் உள்ள பரதவர்களும் போர்ச்சுக்கீசியத் துணைப்பெயர்களைக் கொண்டிருக்கிறார்கள். பரதவர்களின் பொதுவான துணைப் பெயர் ∴பர்னாண்டோ. ஆனால் ஏழு துறைமுகங்களில் உள்ளவர்கள் அதிக பரிச்சயம் இல்லாத அல்மெய்தா, கோமஸ், லோபோ, மச்சாடோ, மோத்தா, வாஸ் போன்ற பெயர்களையும் கொண்டிருக்கிறார்கள். பரதவர்கள் இப்பெயர்களைக் கொண்டிருப்பதில் பெருமையடைகிறார்கள். ஏனென்றால் தலைமுறை தலைமுறையாக இவர்கள் இப்பெயர்களைத் தங்கள் குடும்பப் பெயர்களாகக் கொண்டிருக்கின்றார்கள். இப்பெயர்கள் இவர்களின் சாதிப்பெயர்கள் அல்ல. ∴பர்னாண்டோ அல்லது பர்னாந்து என்ற துணைப் பெயரை பரதவர் என்ற சாதிப்பெயரோடு ஒப்பிடுகிறார்கள் சிலர். ஆனால் மற்ற துணைப் பெயர்களால் இவர்களுக்கு எந்த இடைஞ்சலும் இல்லை. எண்பதுக்கும் மேற்பட்ட குடும்பப்பெயர்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

போர்ச்சுக்கீசிய அதிகாரிகள் பரதவர்களுடைய தலைவர்களுக்கு மதிப்புமிக்க டாம் என்ற பெயரை வழங்கி அவர்களைக் கவுரப்படுத்தினர். இதனால் இவர்கள் பிரபுகளுக்குரிய நிலையைப் பெற்றவர்களாய் சிலுவைப் பதிக்கப்பட்ட தங்கச் செயினையும் மதிப்புமிக்க ஒரு பதக்கத்தையும் அணியும் தகுதி பெற்றனர்.

புதிய கிறிஸ்தவர்கள் தாங்கள் முன்பே பின்பற்றி வந்த சில பழக்க வழக்கங்களைச் சில மாற்றங்களுடன் பின்பற்ற அனுமதிக்கப்பட்டனர். தமிழ்மரபுப்படியே

திருமணச் சடங்குகள் நடைபெற்றன. ஆனால் திருமணத்தின்பொது கிறிஸ்தவ மணப்பெண் அணியும் தாலியில் சிலுவை அடையாளம் அல்லது மரியன்னையின் உருவம் பதிக்கப்பட வேண்டும் என்று மறைப்பணியாளர்கள் வலியுறுத்தினர்.

திருமணத்திற்கு முன் மூன்று ஞாயிற்றுக்கிழமை திருப்பலியில் ஓலை அல்லது பறை என்றழைக்கப்படும் மணஅறிக்கை வாசிக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தினர். இதை மீறுபவர்கள் தண்டனையாகப் பத்து பர்தாக்களைக் கொடுப்பதுடன் திருச்சபைக்கும் வெளியே புறம்பாக்கப்படுவார்கள் எனவும் எச்சரிக்கப்பட்டனர். இப்பகுதியிலிருந்துதான் ஓலை வாசிக்கும் பழக்கம் பிற பகுதிகளுக்குச் சென்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

போர்ச்சுக்கீசியர், புனிதர்கள் மற்றும் பிற விழாக்கள் கொண்டாடுவதை இங்குத் தொடங்கினர். குறிப்பாகப் பரிசுத்த பனிமய அன்னை விழாச்சிறப்பு இதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆனால் கொண்டாடும் முறையில் எராளமான இந்திய பண்பாட்டுமயமாக்கல் இருந்தது. இப்பரதவர்கள் தாங்கள் ஏற்கனவே உள்வாங்கி இருந்த சில சடங்குகளையும் புதிய வழிபாட்டு முறைகளோடு இணைத்துக் கொண்டனர். பனிமய அன்னையின் விழாவைக் கொண்டாடும் முறை இந்தப் பண்பாட்டு மயமாக்கலுக்கு ஒருசிறந்த உதாரணம்.

தூய பனிமயமாதா அன்னையின் சுரூபம் 1555ஆம் ஆண்டு ஜூன் 9ஆம் நாள் செயின்ட் ஹெலினா என்ற கப்பலில் தூத்துக்குடி வந்து சேர்ந்தது. பின்னர் அச்சுரூபம் இரக்கத்தின் அன்னை ஆலயத்தில் வைக்கப்பட்டது. சக்தி வழிபாடு தமிழ்நாட்டில் மேலோங்கி இருந்ததால் மரியன்னை பக்தியையும் புதிய கிறிஸ்தவர்களிடையே கொண்டுவர போர்ச்சுக்கீசியர் தீர்மானித்தனர். இம்மரியன்னை பக்தி, மத்தியகாலத்தில் கிறிஸ்தவர்களிடம் அதிகமாக இருந்தபோதிலும் தொடக்கக் காலத்திலும் இப்பக்தி கிறிஸ்தவர்களிடையே காணப்பட்டது.

போர்ச்சுக்கீசியர் ஆழந்த கத்தோலிக்க விசுவாசத்தை மட்டும் பரதவர்களிடம் கொண்டுவர விரும்பவில்லை. மாறாகச் சடங்குகள், சம்பிரதாயங்கள், மக்களின் பண்பாடுகளோடு இணைந்து செல்ல வேண்டும் என்பதிலும் போர்ச்சுக்கீசியர் தெளிவாக இருந்தனர். பரதவர்கள் சமயமாற்றத்திற்கு பின்பும் மதுரை, திருச்செந்தூர் கோவில் திருவிழாக்களில் ஆர்வம் காட்டியமையால், இங்கு புனிதர்களின் சுரூபங்களைக் கொண்டு குருசடி, கெபி போன்ற சிறு அமைப்புகளையும், தேர் சப்பரத் திருவிழாக்களையும் அறிமுகப்படுத்தினர். கத்தோலிக்க வழிபாட்டு முறைகளும் இந்திய மரபுடன் இணைந்து காணப்பட்டன. அதே நேரத்தில் கத்தோலிக்க சமயக் கோட்பாடுகளுடன் முரண்படாமலும் பார்த்துக் கொண்டனர்.

பிரான்சிஸ் சவேரியார் முத்துக்குளித்துறையிலிருந்த மீனவர்களுக்கு மதுரை மீனாட்சி அம்மன் மீது இருந்த அளவிடமுடியாத பக்தியைப் பார்த்தார். எனவே அவர் மணிலா சென்றிருந்தபோது அங்கு அகுஸ்தீன் சபை கன்னியர் மடத்துக் கோவிலில்

இருந்த அழகிய பனிமய மாதா (Our Lady of Snows) சுரூபத்தைத் தூத்துக்குடிக்கு எடுத்துச் செல்ல வேண்டினார் என்ற நம்பிக்கை பரதவர்களிடம் வேருன்றி உள்ளது. பரதவர்கள் இவ்வன்னையை 'பனிமய மாதா' என்றும் 'பரதவர்களின் மாதா' என்றும் அழைத்தார்கள். ஆண்டுதோறும் இவ்வன்னைக்கு எடுக்கும் விழா முத்துக்குளித்துறை முழுவதற்கும் உரிய திருவிழாவாக மாறியது. முதன்முறையாக அன்னையின் ஆண்டுவிழா 1582ஆம் ஆண்டு கொண்டாடப்பட்டது. இவ்விழா பரதவர்களின் பண்பாட்டை வெளிப்படுத்துவதாக மட்டுமல்ல மாறாக இவர்களின் அரசியல், பொருளாதார, சமுதாய வாழ்விலும் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது. ஏனெனில் இம்மக்களின் விழாக்கள் சமயம் சார்ந்தவை மட்டுமல்ல. மாறாக இவை ஒரு சமுதாயத்திலுள்ள மக்களை ஒன்று சேர்ப்பதாகவும், அங்குள்ள படிநிலை அதிகாரம், செல்வம், மூதாதையரின் பராம்பரியம் அனைத்தையும் வெளிப்படுத்தும் சந்தர்ப்பமாகவும் அமைந்திருந்தது.

முதன்முறையாகப் பனிமய அன்னை விழா கொண்டாடப்பட்டபோது திருச்செந்தூரிலும், மதுரையிலும் கோவில் திருவிழாக்களின்போது பரதவத் தலைவர்களிடையே இருந்த படிநிலைச் சம்பிரதாயங்கள் தூத்துக்குடியிலும் நுழைந்தன. அங்குக் கோவில் அதிகாரிகள், தலைவர்களுக்கும் கிராமத் தலைவர்களுக்கும் விருந்து கொடுப்பதுபோல இங்கும் சேசுசபைக் குருக்கள் அனைத்துப் பரதவத் தலைவர்கள் மற்றும் சாதித் தலைவனுக்கும் விருந்து கொடுத்தனர். கி.பி.1600 ஆம் அண்டு நடைபெற்ற திருவிழாவையொட்டிய விருந்தினைப் பற்றிய விவரம் பின்வருமாறு கூறுகிறது. சேசுசபையினர் முத்தக்குளித்துறையிலுள்ள அனைத்து முதன்மை வாய்ந்த கிறிஸ்தவர்களை விருந்திற்கு அழைத்தனர். விருந்திற்கென ஒரு பெரிய மேசை ஒன்று செய்யப்பட்டிருந்து. அதில் நூறு பேர் அமர்ந்தனர். இவ்விருந்தில் பரதவ பிரமுகர்களைக் கவுரவப்படுத்தும் வண்ணம் நன்றிப் பாடல் பாடப்பட்டது.

நாளடைவில் இந்த விருந்து பரதவர்களிடையே ஒரு வேறுபாடு ஏற்படக் காரணமாக அமைந்தது. சேசு சபையினருடன் பந்தியில் அமர்ந்து உணவருந்த வந்திருந்தவர்கள் தங்களை மேசைக்காரர் என்று அழைத்துக் கொண்டனர். மற்றவர்கள் தங்களைக் கம்மாரக்காரர் என்று அழைத்தனர். இன்னொரு கூற்று, பரதவர்களிடையே செல்வமும், செல்வாக்கும் பெற்றவர்கள் போர்ச்சுக்கீசியருக்கு வியாபாரத்திற்கென கடன்தொகை வழங்கினர். இத்தகையவர்கள் தாம் போர்ச்சுக்கீசியரோடு மேசையில் ஒன்றாக அமர்ந்து உணவுண்டனர்.

சாதித்தலைவன், ஏழு ஊர்களின் அடப்பனார்கள், பட்டங்கட்டிகள் மற்றும் படித்தவர்கள் கிறிஸ்தவர்களில் முதன்மையானவர்களாகக் கருதப்பட்டனர். இந்தப் பழக்கம் டச்சுக்காரர் தூத்தக்குடியை 1658இல் கைப்பற்றிய பின்னும் தொடர்ந்தது. அச்சமயத்தில் சேசுசபையினரின் செயல்பாடுகள் பாப்பானவரால் தடை செய்யப்பட்டன. இச்சமயத்தில் பனிமயமாதாவின் ஆண்டு விழாவின்போது சாதித்தலைவன் பெரிய

விருந்தினைக் கொடுத்தார். தொடர்ந்து பரதவர்களிடையே கடலுக்குச் செல்பவர்கள், கடலுக்குச் செல்லாதவர்கள் என்ற பெரும் பிளவு ஏழு ஊர்களில் மிகவும் வெளிப்படையாகக் காணப்பட்டது. மேசைக்காரர் கம்மாரக்காரர்களைவிடத் தங்களை உயர்ந்தவர்களாகக் கருதினர். இருதரப்பினருக்கும் இடையே திருமண உறவுகள் நிகழவில்லை. திருவிழாக்களின்போது மேசைக்காரர்கள் மதிப்புக்குரிய உயர்ந்த இடங்களைப் பெற்றனர். சமயவிழாக்கள் சமுதாயத்தில் சில அதிர்வுகளை ஏற்படுத்தின. இச்சமயங்களில் பரதவ இனம் மற்ற இனத்தவரிடமிருந்து தனித்து நின்றது. மறுபுறம் பரதவச் சாதிக்குள்ளேயே இரு பிரிவுகள் இருந்தும் வெளிப்படையாகத் தெரிந்தது.[103]

முத்துச் சலாபம் செல்வம் கொழிக்கும் தொழில். ஆனால் அத்தொழிலைத் தனது கட்டுப்பாட்டுக்குள் கொணரப் பரவர்களால் முடியாமல் போகிறது. அவர்களைப் பாதுகாப்பதாய்ச் சொல்லி உள்ளே நுழைந்த சமயம் வலிக்க வலிக்கச் சுரண்டுகிறது. முத்துச் சலாபத்தின் பெரும்பயன் போர்ச்சுக்கேய அரசுக்குப் போய் விடுகிறது. பரவர் சமூகம் செய்வதறியாது திகைத்து நிற்கிறது.

பரவர்களின் முத்துச்சலாபத்தில் பெரும்பகுதியைப் போர்ச்சுக்கேயர் சுரண்டினர். செவ்வாய்க் கிழமை தெறிப்பு, ஐந்து மீன் குத்தகை, துவிக்குத்தகை முதலிய பல வடிவங்களில் கத்தோலிக்க சபையானது முத்துக்குளித்துறைப் பரவர்களைத் சுரண்டிக் கொண்டிருந்தது. பொருளாதாரச் சுரண்டல்களாலும் உட்சாதிப் பிளவுகளாலும் விரக்தியுற்றுக் கிடந்த மக்களுக்கு மது ஒரு நிவாரணமாய்த் தோன்றியிருக்கக்கூடும். கல்வி வாய்ப்பு, மாற்றுத் தொழில் களங்கள் மூலமாகப் பொருளாதார விடுதலை சாத்தியமாகியிருந்தால் ஒருவேளை மதுப்பழக்கம் தணிந்திருக்கலாம். பரவர் சமூகத்தின் பின்னடைவுக்கு சுரண்டலுக்கான கருவிகளில் ஒன்றாக மது பயன்படுத்தப்பட்டிருக்கலாம். சற்றுநேரத்திற்காவது மது கடலுழைப்பாளியை சொர்க்கத்துக்கு அழைத்துச் சென்றது. வாழ்வில் காணமுடியாத சொர்க்கத்தை அவன் மதுவில் காண முயன்றிருக்கலாம். வாழ்வுரிமையை, நிம்மதியான, சுதந்திரமான வாழ்வை அவனிடமிருந்து பறித்தவர் யார் என்பதை நாம் வரலாற்றில் தேட வேண்டியிருக்கிறது. வெறுமனே 'பரவன் குடித்துக் கெட்டான் என்று சொல்லிக்கொண்டிருப்பது வரலாற்றுப் புரிதலைத் தட்டையாக்கும் கூற்று.

வறட்சியும் வாழ்வாதார நெருக்கடியும் பரவர் இனத்தோரில் ஒரு பகுதியினர் மூக்கையூர் போன்ற கிராமங்களிலிருந்து பெயர்ந்து இராமேசுவரத்தில் குடியேறச் செய்தது. பரவர்களோடு தென்திருவிதாங்கூர் முக்குவர்களின் குடும்பங்களையும் இராமேஸ்வரத்தில் பார்க்கலாம். இராமேசுவரம் முத்துச் சாவடிப் பகுதியிலும் முத்துக் குளித்துறையிலும் கடையர், பரவர் இன மக்களுடன் புலம் பெயர்ந்த முக்குவர்களும் முத்து, சங்கு குளித்தலில் ஈடுபட்டு, பிற்காலத்தில் அங்கேயே நிரந்தரமாகக் குடியமர்ந்திருக்கவும் வாய்ப்புண்டு. பரதர்களின் இராமேஸ்வரம் குடியேற்றம் ஏறத்தாழ 50 ஆண்டுகால வரலாறே. முத்துக்குளித்துறையிலிருந்து தோணித் தொழில், வணிகம்

காரணமாக பரவர்களின் கொழும்புக் குடியேற்றம் போர்ச்சுக்கேயர் வரவின் காலமான பதினாறாவது நூற்றாண்டில் நிகழ்ந்திருக்கலாம்.[104]

பரவர் மேல் வறுமை யாராலும் சுமத்தப்பட்ட ஒன்றல்ல. கல்வி கற்று, வேறு துறைகளுக்குச் செல்லாமல் கடலையே நம்பியிருந்தது. உழைத்துக் கிடைத்த பொருளைச் சரியாகச் சந்தைப்படுத்தத் தெரியாத அறிவின்மை, என பல காரணிகளைச் சொன்னாலும், இந்த இனத்தை ஆய்வு செய்த பலரும், மிதமிஞ்சிய குடிப்பழக்கத்தையே அழுத்தமான காரணமாகப் பதிவு செய்திருக்கிறார்கள்.

"As a community they are too fond of drink, a vice, which some of their leaders deplore and are attempting, though with little success, to check. To this habit is ascribed their growing inferiority to Arabs as divers, a fact which recent fisheries have proved…."[105]

பரவரின் குடிப்பழக்கம் இன்று நேற்று தொடங்கிய ஒன்றல்ல. சங்க இலக்கியத் தொகை நூல்களில் ஒன்றாகிய பத்துப்பாட்டில் சிறுபாணாற்றுப்படை வரிகள் கூறுகின்றன.

"நுதிவேல் நொக்கின் நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப"[106]

என்று பொருள். (பழம்படு தேறல்-பழைய புளித்து மூத்த கள், மடுப்ப-அதற்கு மேல் குடிக்க முடியாத அளவுக்கு வயறு முட்டக் குடித்தல்).

"பனைக்குடி பரதவர் கலத்தொடு மறிய"[107]

என்று கல்லாடம் என்ற நூலில் 17ஆவது அகவல் கூறுகிறது. எனவே, தங்கள் முன்னேற்றத்திற்குப் பெரும் தடைக்கல்லாக இருக்கும் குடிப்பழக்கம் தலைமுறை வழிவந்த தீமையாக (Trans generational evil) இருப்பதால் மாற்றுவது எளிதல்ல. ஆனால் மாற வேண்டும்.

பரதவரில் சங்கு குளிப்போர் எந்த அளவிற்கு மதுப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்தனர் என்பதைக் குறித்து 19ஆம் நூற்றாண்டுப் பதிவுகளை ஆய்வு செய்தவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதைப் பார்க்குமுன் அக்காலகட்ட வரலாற்றுப் பின்னணியைச் சிறிது பின்னோக்கிப் பார்த்தல் அவசியம். ஆங்கிலேயருக்கும் டச்சுக்காரர்களுக்கும் 1824இல் இறுதியாக ஏற்பட்ட உடன்படிக்கைப்படி தூத்துக்குடி நிரந்தரமாக ஆங்கிலேயர் கைக்கு மாறியது. அதைத் தொடர்ந்து டச்சுக்காரர்கள் பரத ஜாதித் தலைமையோடு பகிர்ந்து கொள்ளுதல் என்ற முறையில் அனுபவித்து வந்த முத்துச் சலாபமும் சங்கு குளித்தலும் ஆங்கிலேயர் மேலாதிக்கத்துக்கு மாறியது. ஆங்கிலேயர் அவர்களுக்குரிய உரிமையை ஏலம் நடத்தி, சங்கு குளித்தலை மாத்திரம் குத்தகைக்கு விடும் முறையைப் பின்பற்றினர்.[108]

இயல் முடிவுகள்

ஆழி சூழ் உலகு நாவல் ஆர்.என். ஜோ டி குருஸ் எழுதிய முதல் நாவல். இந்த நாவல் இன்று தமிழின் தேர்ந்த வாசகர்களால் ஓர் இலக்கிய சாதனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நாவலில் சுறா வேட்டையாடுதல், பரதவ மக்களின் நம்பிக்கைகள் வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இறப்புச் சடங்குகள், மீன் விற்பனை, தொழில் பற்றிய செய்திகளைக் காணலாம்.

திருச்சபையின் விழாக்கள், வழிபாட்டுச் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பரதவ மக்களின் பண்பாட்டுச் செய்திகள், பழக்கவழக்கங்கள், கலாச்சார பரிவர்த்தனைகள் ஆகியவற்றையும் எடுத்துக் கூறுகிறார்.

சிறந்த கதை ஆசிரியர்கள் படைத்த கதைகளை நாம் படிப்போமாயின், அவற்றின் பாத்திரங்கள் நம் கற்பனையில் உயிருள்ளவை போல இயங்கும். இவ்வாறு உயிருள்ளவை போலத் தோன்றும் பாத்திரப்படைப்புடைய கதை இலக்கியமே சிறப்புடையதாய் மதிக்கப்பெறும்.

ஆழி சூழ் உலகு நாவலை முழுவதும் ஆக்கிரமித்துள்ளப் பாத்திரம் கோத்ரா பிள்ளை. நாவலில் முக்கிய இடம்பிடித்துள்ளார். தொம்மாந்திரை, போஸ்கோ இவரது நண்பர்கள் வட்டம்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் இரண்டாவது முக்கிய பாத்திரப் படைப்பு தொம்மாந்திரையார்.

பழங்காலம் முதலே தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் ஏற்றுமதி இறக்குமதி நடந்துள்ளது. நாவலாசிரியர் இதனை கதையில் இடம்பெறச் செய்கிறார்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் மூன்றாவது பெரிய பாத்திரப் படைப்பு வியாகுலப் பிள்ளை.

கோவில்பட்டி ரத்தினசாமி நாடார் மீன் வியாபாரி. ஏற்றுமதி செய்யும் தொழிலதிபர். ஆமந்துரை கிராம மக்களோடும், தொம்மாந்திரையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். நியாயமாக வாழ்பவர்.

ரத்தினசாமி நாடார் மூலம் தூத்துக்குடியிலிருந்து கொழும்பிற்கு கருவாடு ஏற்றுமதி நடைபெற்று வருவதை நாவலாசிரியர் இந்த நாவலில் பதிவு செய்கிறார்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் பெண் பாத்திரம் வசந்தா. கிராமிய காதலை ரம்மியமாக இந்தப் பாத்திரத்தின் வழி ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

இந்த நாவலில் எஸ்கலின்-கில்பர்ட் காதல் மற்றும் மணம் குறித்த செய்தியும் இடம்பெறுகிறது. இது ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் மற்றொரு காதல் ஜோடி.

காகு சாமியார் நாவலில் இடம்பெறும், உண்மையான இறைத் தொண்டினை மேற்கொண்டு சமூகப் பணியும் செய்து கிராமிய மக்களை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் சாமியார்

கிறிஸ்தவ ஆலய வழிபாட்டு முறை பற்றிய செய்தி இங்கே பதிவு செய்யப்படுகிறது.

முதல் உலகப்போர் 1914-1918ஆம் ஆண்டு நடந்தது. அதனை ஆழி சூழ் உலகு நாவலில் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் இளைஞர் சிலுவை. கோத்ராப் பிள்ளையுடன் நெருக்கம் கொண்டவன்.

கடலில் கிடைக்கும் ஆமையின் ரத்தத்தைக் குடித்தால் மனிதனுக்கு வரும் ''மூல முளை'' என்கிற நோய் குணமாகும் என்கிற நம்பிக்கை மக்களிடம் காலம் காலமாக இருந்து வருகிறது. அதனை இந்த நாவலிலும் ஆசிரியர் இடம்பெறச் செய்கிறார்.

1965ஆம் ஆண்டு தனுஷ்கோடியை புயல் தாக்கி அழிந்தது. இந்த வரலாற்றுச் செய்தியினை நாவலாசிரியர் இங்கே பதிவு செய்கிறார்.

''கொற்கை'' என்பது பாண்டிய மன்னர்களின் துறைமுகப்பட்டினம் அல்ல. இது முழுக்க முழுக்க தூத்துக்குடியைப் பற்றிய செய்திகளையம் கொஞ்சம் வரலாற்றையும் கற்பனையுடன் கலந்து எழுதப்பட்ட ஒரு நாவல் வடிவம்.

இதில் பழங்கால கப்பல் பயணம் தோணிகள் மூலம் சரங்குகளை கையாளும் திறம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. தூத்துக்குடி ரயில் நிலையம் குறித்த செய்திகள் அதிலிருந்து பருத்தி, உப்பு மற்றும் மீன் கருவாடு ஏற்றுமதி செய்யப்படும் செய்திகள் இடம்பெறுகின்றன.

தற்போது வ.உ.சி. மார்க்கட் பகுதியிலுள்ள சந்தன மாரியம்மன் கோவில் பரதவர்களின் சைவ சமய வழிபாட்டு கோவிலாக திகழ்ந்ததை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

கொற்கை நாவலில் பாத்திர படைப்புகள் குறைவு. ஏனெனில் நாவல் ஒரு வரலாற்றுப் பெட்டகம் போல, கட்டுரை விளக்கம் போலவே அமைந்துள்ளது

ஜோ டி குருஸ் குறிப்பிடும் 'கொற்கை' இன்றைய தூத்துக்குடி ஆகும்.

தென்தமிழ்நாட்டின் வரலாற்றைச் சுற்றுப் புரட்டிப் பார்ப்போமேயானால், தூத்துக்குடியும் அதனைச் சார்ந்த முத்துக் குளித்துறைப்பகுதியும் மூன்று ஐரோப்பிய நாடுகளின் ஆதிக்கத்தில் பல நூற்றாண்டுகளாக இருந்து வந்ததைக் காணமுடியும்.

முத்துக்குளித்துறையில் வேம்பார், வைப்பார், தூத்துக்குடி, புன்னக்காயல், வீரபாண்டியபட்டினம், ஆலந்தலை, மணப்பாடு ஆகிய ஏழு ஊர்களையும் ஒன்றாகச் சேர்த்து "ஏழு கடற்கரை" என்றழைக்கப்பட்டது.

தூத்துக்குடியில் 'சாதித்தலைவர்' என்ற பெயரில் முத்துக்குளித்துறையில் உள்ள அனைத்துப் பரதவர்களுக்கும் தலைவராக விளங்கினார். இவர் 'ஏழூர் கோமகன்' என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தார். இவரது இருப்பிடம் 'பாண்டியபதி' என்றழைக்கப்பட்டது.

பரதவர் என்று சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டவர்கள் இன்று பரவர், பரவன், முக்குவர், மீனவச் செட்டியா, பருவத ராஜகுலம், செம்படவர், மீனவப் படையாச்சி, நாட்டார், வர்ணகுல முதலியார், பெத்தவர், சீவிலியர், வலையர், அம்பலக்காரர், முத்தையர், பட்டங்கட்டி, கடையர், கரையர், பரமன், ஓடக்காரர் என பல்வேறு சாதிப்பெயர்களைத் தாங்கி மீன்பிடிப்பைச் செய்து வருகின்றனர்.

தங்களுக்கு முத்துக்குளிக்கும் உரிமையை மீண்டும் பெற்றுத்தந்த போர்ச்சுக்சீசியரின் ஆதரவு தங்களுக்குத் தொடர்ந்து கிட்டிட, கடலோர இந்து மீனவர்கள் ஒட்டுமொத்தமாகக் கத்தோலிக்க சமயத்திற்கு மாறினர்.

பரதவர் சமுதாயம் முன்னேற்றமடைந்து, இன்றளவும் மாறாமல் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில், பாப்பரசரின் தலைமையின் கீழ் நிலைத்து நிற்பது, அவர்களின் ஆழ்ந்த விசுவாசத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் செயலாகவே உள்ளது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

அடிக்குறிப்புகள்

1. W.P. Ker, Epic and Romance, P.17.
2. Aristotle on the Art of Poetry by Ingram By water, P.38.
3. தொல்., பொருளதிகாரம்., கள., நூற்., 7.
4. மேலது, நூற்., 8
5. மேலது, நூற்., 6
6. மேலது, நூற்., 14
7. மேலது, கற்., நூற்., 41
8. மேலது, நூற்., 30
9. மேலது, நூற்., 52
10. தா.ஏ.ஞானமூர்த்தி, இலக்கியத் திறனாய்வியல், பக்., 329-331
11. ஆர்.என். ஜோ டி குரூஸ், ஆழி சூழ் உலகு நாவல், பக்கம் 24-27
12. மேலது, பக். 45-46
13. மேலது, ப. 212
14. மேலது, ப. 196
15. மேலது, ப. 215
16. மேலது, ப. 198
17. மேலது, ப. 302
18. மேலது, ப. 374
19. மேலது, பக். 381-384
20. மேலது, ப. 60
21. மேலது, ப. 42
22. மேலது, ப. 43
23. மேலது, பக். 44-45
24. மேலது, பக். 48-49
25. மேலது, ப. 52
26. மேலது, பக். 87-90
27. மேலது, ப. 93
28. மேலது, ப. 174
29. மேலது, பக். 58-59
30. மேலது, பக். 385-387
31. மேலது, பக். 206-208
32. மேலது, பக். 210-211
33. மேலது, ப. 152
34. மேலது, ப. 216
35. மேலது, பக். 218-219
36. மேலது, பக். 61-62
37. மேலது, ப. 363

38. மேலது, பக். 255-256
39. மேலது, பக். 200-202
40. மேலது, ப. 426
41. மேலது, பக். 140-142
42. மேலது, ப. 156-158
43. மேலது, ப. 290
44. மேலது, ப. 64
45. மேலது, ப. 96
46. மேலது, ப. 350
47. மேலது, பக். 230-231
48. மேலது, ப. 97
49. மேலது, பக். 100-103
50. மேலது, பக். 228-229
51. மேலது, பக். 257-258
52. மேலது, பக். 390-391
53. மேலது, பக். 270-271
54. மேலது, பக். 274
55. மேலது, ப. 360
56. மேலது, ப. 364
57. மேலது, ப. 378
58. மேலது, பக். 183-184
59. மேலது, ப. 361
60. மேலது, பக். 417-418
61. மேலது, ப. 204
62. மேலது, ப. 286
63. மேலது, ப. 70
64. மேலது, ப. 51
65. மேலது, பக். 220-223
66. மேலது, ப. 232
67. பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன், தோணி, பக். 60-61
68. ஆர்.என். ஜோ டி குரூஸ், கொற்கை நாவல், ப. 80
69. மேலது, ப. 77
70. ஐங்குறுநூறு, அடி 185
71. ஆர்.என். ஜோ டி குரூஸ், கொற்கை நாவல், ப. 95
72. மேலது, ப. 96
73. மேலது, ப. 118
74. மேலது, பக். 180-181
75. மேலது, ப. 193
76. மேலது, பக். 209-210

77. மேலது, பக். 510-511
78. எஸ்.அருணாச்சலம், தமிழகக் கடலோரத்தில் முத்துக்குளித்தல் வரலாறு, பக்.12-13
79. வரகவி வீரபாண்டியப்புலவர், பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ், ப.vii
80. ச.டெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், 2009, ப. .5
81. எஸ்.அருணாச்சலம், தமிழகக் கடலோரத்தில் முத்துக்குளித்தல் வரலாறு, ப. 73
82. கால்டுவெல், திருநெல்வேலி வரலாறு, ப. 126
83. வீ.நாகநாதன், தமிழ்நாடு அரசு வனத்துறை மன்னார் வளைகுடா கள கையேடு, இராமநாதபுரம், ப. 86
84. தம்பி ஐயா பர்னாந்து, பாண்டியர் பண்பாட்டில் பழையகாயல், ப. 21
85. எஸ்.அருணாச்சலம், தமிழகக் கடலோரத்தில் முத்துக்குளித்தல் வரலாறு, ப. .5
86. பீட்டர் தேவதாஸ், தூத்துக்குடி பனிமயமலர், தேரோட்ட மலர், ப. 72
87. டி.எஸ்.தண்டபாணி, தூத்துக்குடி பனிமயமலர், தேரோட்டம் மலர், ப. 29
88. வரகவி வீரபாண்டியப்புலவர், பாகம்பிரியாள் பிள்ளைத்தமிழ், ப. 118
89. நெய்தல் யு.அண்டோ, எனது ஊர் தூத்துக்குடி, ப. 15-24
90. ஆர்.என். ஜோ டி குரூஸ், கொற்கை நாவல், பக். 212-210
91. மேலது, ப. 334
92. கோநகர் கொற்கை, பக். 79-81
93. ஆர்.என். ஜோ டி குரூஸ், கொற்கை நாவல், ப. 400
94. நெய்தல் யு.அண்டோ, அலைவாய்த் தேடல், பக். 88-91
95. அமுதன் அடிகள், வரலாற்றில் புன்னைக்காயல், பக். 16-26
96. ச.டெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், 2009, ப. 66
97. கோநகர் கொற்கை, பக். 31-36
98. மேலது, பக். 116-118
99. மேலது, பக். 122-124
100. மேலது, ப. 128
101. மேலது, ப. 120
102. மேலது, பக். 87-92
103. ச.டெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், 2009, பக்கம் 116-120
104. ஜெ எச் செல்வராஜ் மிராந்தா, காலனியும் சமயம் பரவர் (1900-50) சில வரலாற்றுக் குறிப்புகள், பக். 22-30
105. The Madras District Gazetteer- Tirunelveli –volume I – Chapter III- Page 122.
106. சிறுபாணாற்றுப்படை, அடிகள் 15-159
107. கல்லாடம், அகவல்.1
108. ஜெ.எச்.செல்வராஜ் மிராந்தா, காலனியும் சமயம் பரவர் (1900-50) சில வரலாற்றுக் குறிப்புகள், பக். 48-49

சங்ககாலம் மற்றும் தற்கால நெய்தல் படைப்புகள் ஓர் ஒப்பியல் பார்வை

முன்னுரை

இந்த இயல் கிட்டத்தட்ட ஆய்வின் தலைப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைகிறது. சங்ககால நெய்தல் வாழிடங்கள், பரதவர்கள் வாழ்க்கை, பரதவர்களின் வரலாறு மற்றும் பரதவர்கள் கடந்து வந்த பல நூற்றாண்டு காலங்கள் சுருக்கமாக இடம்பெறுகின்றன.

தற்காலப் படைப்புகளைப் பொறுத்தவரை 'கொற்கை' என்பது நாம் நினைப்பது போல சங்ககால கொற்கை அல்ல. அது ஆயிரம் ஆண்டு கால தூத்துக்குடியின் நிலைப்பாடு. குறிப்பாக கி.பி. 1532ஆம் ஆண்டிற்கு பிந்தைய தூத்துக்குடியின் வாழ்க்கை முறைகள். 'ஆழி சூழ் உலகு' நாவல் முழுவதும் இப்போதைய உவரி முதல் கன்னியாகுமரி வரையிலான பரதவர்களின் வாழ்க்கை முறைகளை எடுத்துரைப்பது ஆகும். எனவே சங்ககால நெய்தல் பதிவுகளும், தற்கால நெய்தல் பதிவுகளும் முற்றிலும் வேறுபட்டவை. இதில் முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், மீன்பிடித்தல் போன்றவை மட்டும் பொதுவாக உள்ளன. ஏனைய செய்திகள் முற்றிலும் வேறுபட்டவை என்பதை இங்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

முத்துக்குளித்துறை

சங்ககாலம் தொட்டு இன்றுவரை முத்துக்குளித்துறைக்கு ஒரு நீண்ட வரலாறு உண்டு. கிறிஸ்தவத்தின் தொடக்ககால நூற்றாண்டு முதல் பதினைந்தாம் நூற்றாண்டுவரை தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள் அனைவரும் முத்துக்குளித்தலின் ஏகபோக உரிமையை அனுபவித்து வந்தனர். கீழைய நாடுகளுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே முத்து வாணிபம் ஒரு பாலமாக அமைந்திருந்தது. வெளிநாட்டுப் பயணிகள் இந்தக் கடற்கரையிலுள்ள விலையுயர்ந்த முத்துக்களுக்காக இங்கு வந்ததற்கான பல சான்றுகள் உள்ளன. ஆழ்கடலிலிருந்து கரைக்கு முத்துக்களைக் கொணர்ந்தவர்கள் பரதவர்கள். இவர்கள் வீரத்திற்குப் பெயர் போனவர்கள். முத்து மட்டுமல்ல மற்ற பொருட்களிலும் வணிகம் நடைபெற்றது.

மன்னார் வளைகுடாவில் அமைந்துள்ள முத்துக்குளித்துறை இயற்கையான முத்துச்சிப்பிகளைப் பிறப்பிக்கும் ஒரு வளமான முத்துப் படுகையாக இருந்தது. இக்கடல் பகுதிக்குப் பல பெயர்கள் உண்டு. அவையாவன, :பரலியா, கோல்கிக் குடா, மலபார், சோரமண்டல் கரை, கோரமண்டல், கன்னியாகுமரி கடற்கரை, முத்துக்குளித்துறை, முத்துக்குளித்தல் மீன்பிடிக்கும் கடற்கரை, கிழக்குக் கடற்கரை, திருநெல்வேலி கடற்கரை, தெற்கு கோரமண்டல் ஆகிய பெயர்கள் அனைத்தும்

முத்துக்குளித்துறையைச் சுட்டிக் காட்டுகின்றன. அன்று தூத்துக்குடி முத்துக் குளித்துறையின் சமய, பொருளாதாரத் தலைநகரமாக விளங்கியது.

முத்துக்குளித்துறையின் வரலாற்றையும் பரதவர்களின் வரலாற்றையும் பிரிக்க முடியாது. இந்த வரலாறு இம்மக்கள் எவ்வாறு பலவகையான தொழில்களில் ஈடுபட்டிருந்தனர் என்பதை வெளிப்படுத்துகிறது. மீனவர்கள் மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், சங்கறுத்தல், உப்பு உற்பத்தி செய்தல், கடல் கடந்து வாணிகம் நடத்துதல் மற்றும வியாபாரம் செய்தல் போன்ற பல தொழில்களில் தேர்ச்சி பெற்றவர்களாயிருந்தனர்.

பரதவர்களின் தோற்றம்

பரதவர்கள் ஒரு குழுவாகத் தங்களுடைய இனப்பெயர், தொழில், வாழ்வுமுறை, சமயச்சடங்குகள், அவர்களுடைய முக்கிய குணங்களான வீரம், விருந்தோம்பல் ஆகியனவற்றைக் கொண்டவர்கள். இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன.

பரதவர்களுடைய தோற்றத்தைப் பற்றிய பல கருத்துகள் வரலாற்று ஆசிரியர்களால் ஆராயப்பட்டு வருகின்றன. எட்கார் தெஸ்டனின் Historica Ecclesiastica என்னும் நூலில், பைபிளில் கூறப்படும் பர்வீம்களும் பரதவர்களும் ஒன்றே என்றும் இவாகள்தான் சாலமோன் அரசன் காலத்தில் கடற்பயணங்களை மேற்கொண்டவர்கள் என்றும் கூறுகின்றார் (தெஸ்டன் 1909:140). மேலும் பேட்ரிக் அ. ரோச் பின்வருமாறு கூறுகிறார்: பரதவர்களும் பர்வீம்களும் ஒன்றே; இவர்கள் இஸ்ராயேலின் கடைசி இனக்குழு. தற்போதைய பரதவர்களின் கிராமமான உவரி, பைபிளில் வரும் ஓபீரையே குறிப்பிடுகிறது. முத்துக்குளித்துறையின் தென்பகுதியில் கன்னியாகுமரிக்குச் செல்லும் வழியில் உவரி அமைந்துள்ளது.

தெஸ்டனின் மற்றொரு கூற்று: பரதவர்களின் பூர்வீக இடம் அயோத்தியாகும்; மகாபாரதப்போர் தொடங்கும் முன்பே யமுனை நதியோரத்தில் இவர்களுடைய குடியிருப்புகள் அமைந்திருந்தன.

எட்கார் தெஸ்டன் மீண்டும் கூறுவார்: ஒருகாலத்தில் பரதவர்கள் மிகவும் வலிமையுடையவர்களாய் இருந்தனர்; இவர்கள் அரசர்கள் வழிமரபினர்; இவர்களுள் ஆதி அரசன் என்று அழைக்கப்பட்ட ஒருவர் உத்தரகோசமங்கையைத் தலைமை இடமாகக் கொண்டிருந்தார். இது இராமநாதபுரத்திற்கு அருகிலுள்ள பெரும்புகழ் பெற்ற இந்து திருத்தலமாகும்.

ஹென்றி ஹெராஸ் பரதவர்களின் பூர்வீக இடத்தைப் பற்றி சற்றே வித்தியாசமான ஒரு கருத்தைக் கூறுகிறார். இவர்கள், சிந்து சமவெளியில் வாழ்ந்த மிகப் பழமையான இனக்குழுக்களில் ஒன்று என்றும், சந்திரகுலப் பரதவர்களாகிய

இவர்கள் மதுரை பாண்டிய மன்னர்களின் முன்னோர்கள் என்றும், இவர்களின் மரபினர்தாம் பரதவர்கள் என்றும் கூறுகிறார்.

இவர்கள் குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு சிந்து சமவெளியை விட்டுவிட்டு பிழைப்பைத் தேடி தெற்கு நோக்கி இடம் பெயர்ந்தனர். பின் கோரமண்டலக் கடற்கரையின் தென்கிழக்குப் பகுதியிலும், இலங்கையின் மேற்குக்கரையிலும், நெகம்பிலிருந்து மன்னார் வரையுள்ள பகுதியிலும் குடியேறினர்.

பரதவர்கள் தங்களுடைய தனித்தன்மையை இங்கு நிலைநாட்டி தமிழ்நாட்டில் தங்களுக்கென ஒரு இடத்தைத் தக்க வைத்துக் கொண்டனர். மிகவும் தொன்மை வாய்ந்த தமிழ் கல்வெட்டு ஒன்றில், இவர்கள் மதுரைப் பாண்டிய மன்னரின் மகள் அல்லியரசானிக்குக் கப்பம் கட்டி முத்துக்குளித்ததாக ஒரு குறிப்பு காணப்படுகிறது. அந்தக் காலத்தில் முத்துக்குளித்த ஒரே குலம் பரதவர் குலமே ஆகும்.

பரதவர்களின் தோற்றுவாய் எதுவாக இருந்தபோதிலும் வரலாற்றில் இவர்கள் மீன் பிடிப்பவர்களாக, முத்துக்குளிப்போராக, முத்துச் சலாபத்தை நிர்வகிப்பவர்களாக, அதன் பலன்களை நிறைவாகப் பெற்று அனுபவித்தவர்களாகக் காணப்படுகின்றனர். 'பரவன்' என்ற தமிழ்ப்பதத்திற்குக் கடல் மனிதன் என்று அர்த்தமாகும். பரதர் அல்லது பரதவர் பாண்டிய அரச மரபைத் தோற்றுவித்த குலசேகர பாண்டிய மன்னரின் தாத்தா ஆவர்.

இந்தியாவின் முதல் கடல் பயணிகள் இப்பரதவர்களிடமிருந்தே பிறந்தனர். இவர்கள்தான் மேற்கே ஆப்பிரிக்கா, அரேபியா போன்ற நாடுகளுக்கும் கிழக்கே மலேசியா, சீனா போன்ற நாடுகளுக்கும் இந்தியப் பொருட்களை ஏற்றிச் சென்றனர். மேலும் பரதவர்களுள் பெரும்பான்மையோர் முத்து, சங்கு குளித்தலில் ஈடுபட்டிருந்தனர். அக்காலத்தில் கொற்கை முத்துவாணிபத்திற்குப் பெயர்பெற்ற நகரமாக விளங்கியது. இங்குள்ள மக்கள் முத்துக்குளிப்பதிலும் சங்கு அறுப்பதிலும் ஈடுபட்டிருந்தனர்.[1]

முத்துக்குளித்துறையில் பரதவர்கள் மிகவும் செழிப்புடன் வாழ்ந்ததாக, சங்க இலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன. பலவகையான அரசர்களால் நாளடைவில் இக்கடற்பகுதி ஆட்சி செய்யப்பட்டபோது இங்குள்ள மக்களின் வாழ்வின் மாற்றங்கள் ஏற்பட்டன.

தமிழ் அரசர்களின் ஆட்சியில் முத்துக்குளித்துறை

முத்துக்குளித்துறை பல்வேறு தலைநகர்களைக் கொண்ட பல அரசர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. முத்துக்கள் அதிகம் காணப்பட்ட கொற்கை, பாண்டியர்களின் முதல் மற்றும் முதன்மையானத் துறைமுகமாகவும், வணிகத்தளமாகவும் விளங்கியது. நாளடைவில் ஆற்றுப்படுகையின் மண் மூடியதால் கொற்கை கடலிலிருந்து துண்டிக்கப்பட்டது. எனவே மக்கள் இத்துறைமுகத்தை விட்டுவிட்டு ஆற்றின்

மறுமுகத்துவாரத்தில் அமைந்திருந்த பழைகாயல் என்னும் துறைமுகப்பட்டணத்திற்கு இடம் பெயர்ந்தனர். இது முத்துக்குளித்துறையின் இரண்டாவது முக்கிய துறைமுகமாகும். தூத்துக்குடிக்குத் தெற்காக 15 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது பழையகாயல் கிராமம். இங்கு கடலும், ஆறும் சந்திக்கும் முகத்துவாரம் இருக்கிறது. கடல் அலைகள் உயர எழும்பும்போது இப்பகுதியில் வெள்ளமும், அலைகள் இல்லாத காலத்தில் வறண்டும் காணப்படும்.

மேலும் பல துறைமுகங்கள் வழியாக முத்துக்குளித்துறையில் கடல் வாணிகம் சிறப்புற்று விளங்கியது. தூத்துக்குடி மற்ற துறைமுக ஊர்களைப்போன்று அதிகம் பேசப்படாவிட்டாலும் தொடக்க, மத்திய, நவீன காலங்களில் கடல் பயணிகள் அவ்வூரைப் பற்றியக் குறிப்புகளைத் தந்துள்ளனர். முத்து வணிகத்திற்குப் பெயர்போனதாகத் தூத்துக்குடி இருந்தது என்று டாலமி கூறுகின்றார்.

மன்னார் வளைகுடாவில் தூத்துக்குடிக்கும் பாம்பன் துறைமுகங்களுக்குமிடையே உள்ள மற்றொரு முக்கியமான துறைமுகம் கீழக்கரையாகும். தொடக்க காலத்திலிருந்தே மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து வணிகர்கள் இங்கு வருவதுண்டு. பாண்டிய மன்னர்களால் அராபியாவிலிருந்து கீழக்கரைக்கு குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன.

கிறிஸ்தவ சமயம் தொடங்கிய முதல் நூற்றாண்டுகளில் பாண்டியர்கள் முத்துக்குளித்தலில் ஏகபோக உரிமையை அனுபவித்து வந்தனர். முத்துக்களைத் தவிர சங்குகளும் பிடிக்கப்பட்டன. கி.பி. எட்டாம் நூற்றாண்டில் கீழக்கரையில் குடியேறிய அராபியர்கள் பாரசீக நாட்டிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்தனர். மேலும் தங்களிடமுள்ள கண்ணாடி, மண்பாண்டங்கள், மிளகு துணிகள் பெறுவதற்காகப் பண்டமாற்று வியாபாரம் செய்தனர். இவர்கள் இலங்கை, சீனா மற்றும் முத்துக்குளித்துறையுடன் வணிக உறவுகளை வலுப்படுத்திக் கொண்டனர். அஞ்சுவண்ணம் என்ற வணிகக்குழு மூலம் கிழக்குக்கரையின் வணிகத்தைத் தங்கள் கட்டுப்பாட்டின் கீழ்க் கொணர்ந்தனர். முத்துக்கள், சங்குகள் அதோடு விலையுயர்ந்த கற்களும் குறிப்பாக பெரில் என்ற கல் வகையும் மன்னார் வளைகுடாவில் காணப்பட்டன.

கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் முத்துக்குளித்துறை சோழர்களின் கைக்கு மாறியது. இவர்கள் இதற்குச் சோழமண்டலக் கரை என்று பெயரிட்டனர். இவர்களும் முத்தக்குளித்துறையில் ஆதிக்கம் செலுத்தினர் என்பது இந்திய சீன தூதுக்குழு சந்திப்பிலிருந்து தெரிய வருகிறது.

இரண்டாம் பாண்டிய மன்னர்கள் காலத்தில் பழையகாயல் தொடர்ந்து மிக முக்கிய வணிகத்தளமாக விளங்கியது. மார்க்கோ போலோ என்ற வெனிஸ் நாட்டுப் பயணியும், ஸே.ப் என்ற அராபிய நாட்டுப் பயணியும் மாறவர்மன் குலசேகரப் பாண்டிய மன்னனின் ஆட்சியின்போது பழையகாயலுக்கு வந்தனர்.

மார்க்கோ போலோ பழையகாயலைப் பற்றி பின்வருமாறு கூறுகிறார்: காயல் (பழையகாயல்) ஒரு பெரிய புகழ்வாய்ந்த நகரமாகத் திகழ்ந்தது. அரச பரம்பரையைச் சார்ந்த ஐந்து சகோதரர்களில் மூத்தவரான ஆஷார் என்பவருக்கு இந்நகர் சொந்தமானது. ஏடன், அராபியா போன்ற நாடுகளிலிருந்து குதிரைகளை ஏற்றிவந்த கப்பல்களும், ஓர்மூஸ், கிஸ் போன்ற துறைமுகங்களிலிருந்து மற்றப் பொருட்களை ஏற்றி வந்த கப்பல்களும் பழையகாயலில் நின்றன. அயல்நாட்டு வாணிகத்திற்கு ஏற்ற ஒரு சந்தை நகரமாக இருந்ததால் வணிகர்கள் பழையகாயலைச் சந்திக்காமல் சென்றதில்லை. முத்துக்குளித்தல் இங்குள்ள தமிழர்களின் முக்கிய தொழிலாக இருந்தது. ஏப்ரல் மாதத்தில் ஆரம்பிக்கும் இத்தொழில் மே மாதம் பதினைந்தாம் தேதி வரை நடைபெறும். பெரிய, சிறிய முத்துக்கள் பாண்டிய நாட்டில் கிடைத்தன. முத்துக்குளிப்பின்போது முதல் பத்து பாகமும் அரசனுக்குக் கொடுக்கப்பட்டன. பதினோராவது பாகம் மந்திரவாதிகளுக்குக் கொடுக்கப்பட்டது. இவர்கள் முத்துக்குளிப்பின்போது எந்தவித ஆபத்தும் நிகழாமல் இருக்க சில மந்திரங்களை ஓதுவார்கள். அடுக்கப்பட்ட முத்துக்கள் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. தமிழகத்தை ஆண்ட அரசர்கள் முத்து வாணிபத்திலிருந்து நிறைய இலாபங்களைப் பெற்றனர். பாண்டிய நாட்டிலிருந்து வரும் முத்துக்களுக்கு உலகச் சந்தையில் அதிக செல்வாக்கு இருந்தது.

பழையகாயலில் நடைபெற்ற குதிரை வாணிபம் அரசில் முக்கியத்துவம் வாய்ந்தது. அதன் வருமானத்தின் கணிசமான பகுதி அரசனுக்குக் குதிரைகள் வாங்க செலவழிக்கப்பட்டது. குதிரை வியாபாரத் தரகர்கள் குதிரை வணிகத்தில் ஈடுபட்டதாகத் திருவிதாங்கூர் கல்வெட்டு (எண். 161, 1907) கூறுகின்றது. இங்குள்ள முஸ்லீம்கள் அராபியாவிலிருந்து குதிரைகளை இறக்குமதி செய்து பாண்டிய மன்னர்களிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து முத்துக்கள், விலையுயர்ந்த கற்கள், இதர பொருட்கள் ஆகியவற்றைப் பெற்றனர். பாரசீகத்திலிருந்தும் குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. வெள்ளியும், தாமிரமும் தூரக் கிழக்கு நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. இங்குள்ள தமிழர்களுக்கு, குதிரைகள் வளர்ப்பதைப் பற்றி பயிற்சியும் கொடுக்கப்பட்டது.

மேற்குக் கடற்கரையோரத்தில் குடியேறியிருந்த முஸ்லீம்கள் பிழைப்பைத் தேடி பழையகாயல் அதன்பின் காயல்பட்டினம் நகர்ந்தனர். இவர்களுக்குப் பலவிதமான பெயர்கள் வழங்கின. கேரள நாட்டில் அவர்கள் மாப்பிழாக்கள் என்றும் சோழநாட்டில் லெப்பை, ராவுத்தர், மரைக்காயர் அல்லது மரக்கார் என்றும் அழைக்கப்பட்டனர். இவைகள் சாதிப்பெயர்கள் அல்ல. மாறாக ஒவ்வொரு குழுவும் மேற்கொண்ட தொழிலின் அடிப்படையில் இப்பெயர்கள் வழக்கில் இருந்தன. மரக்கார் அல்லது மரக்காயர் என்பது மலையாளச் சொல்லான மரக்கான் என்பதிலிருந்து வந்தது. மரக்கான், மரக்கலம் (படகு) என்ற சொல்லிலிருந்து மருவி வந்தது. போர்ச்சுக்கீசியர் முதன்முறையாக தமது ஆவணங்களில் மரக்கார் என்ற சொல்லைப் பயன்படுத்தி உள்ளனர்.

முஸ்லீம்கள் வெறும் வணிகத்தோடு நிறைவடையவில்லை. இவர்கள் அரசியல், சமுதாய வாழ்விலும் ஈடுபட்டனர். கடல் வாணிகத்தில் ஏகபோகம், அராபியர்களோடு குதிரை வணிகம், இத்தோடுகூட முத்துக்குளித்துறை அரசியலிலும் ஒரு முக்கியப் பங்கினை இவர்கள் வகித்தனர்.

முஸ்லீம்கள் எவ்வாறு இந்தியாவின் மேற்குக்கரையில் தங்களது முழு அதிகாரத்தையும் செலுத்தினார்களோ அதே போன்று கிழக்குக் கரையிலும் காயல்பட்டினத்தை மையமாகக் கொண்டு முத்துக்குளிக்கும் உரிமையைக் குத்தகைக்கு எடுக்குமளவுக்குச் செல்வாக்கு உடையவர்களாய் இருந்தனர். இவர்கள் அடிக்கடி தென்கிழக்கு ஆசியா நாடுகளுக்கும் மலாக்காவுக்கும் (இன்றைய மலேசியா, இந்தோனேசியா) வாணிகத்தின் பொருட்டு சென்று வந்தனர்.

அராபியர்கள் இந்தியாவின் தெற்குப் பகுதியில் குடியேறி படிப்படியாக வளர்ந்து கி.பி. பதிமூன்றாம் நூற்றாண்டில் கடல் வாணிகத்தில் ஏகபோக உரிமை பெற்றவர்களாய் இருந்தனர். மதுரையில் சுல்தான் ஆட்சி அமையுமுன்பே இவர்கள் பொருளாதாரத்தில் மிக்க செல்வாக்குடன் காணப்பட்டனர்.

பாண்டியர்கள் முத்துக்குளித்துறை பரதவர்களின் தொன்மையான அரசர்கள் என்றும் இதனால் இவர்கள் தங்களை மீனவர்கோன் அதாவது மீனவர்களின் அரசர்கள் என்று அழைத்துக்கொண்டனர். முத்துக்குளித்துறையில் ஏறக்குறைய ஆயிரத்தைந்நூறு ஆண்டுகள் பாண்டிய மன்னர்கள் அனுபவித்து வந்த பொருளாதார மேலாண்மை மாலிக்கபூரின் படையெடுப்புக்குப் பின் (1311) முஸ்லீம்களின் கைவசம் மாறியது.[2]

முத்துக்குளித்துறை மீனவர் வரலாறு

தமிழக கத்தோலிக்கர்களுக்காக 1837-ஆம் ஆண்டில் புதிய மதுரை மறைத்தளத்தை பிரெஞ்சு நாட்டு சேக் சபையினர் தோற்றுவித்தப்போது, மறைப்பணியாற்றிட பிரான்ஸ் நாட்டிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்தவர், அருட்பணி, அதிரியான் கௌசானல் (Fr. Adrian Caussanel : 1850 – 1930) ஆவார்.

சபை பணியுடன், சேசு சபைக்கே உரித்தான மரபிற்கேற்ப வரலாற்று ஆவணங்களை உருவாக்கும் பணியினையும் மேற்கொண்ட கௌசானல் அடிகள், 'Historical Notes in Tinneveli District' என்ற தலைப்பில் 487 பக்கங்களைக் கொண்ட கையெழுத்துப் படியொன்றை எழுதி வைத்திருந்தார்.

இவ்வாவணத்தில் இடம்பெற்ற பரவர் குறித்த இரு அத்தியாயங்களை, பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், முத்துக்குளித்துறை மீனவர் வரலாறு என்றொரு சிறு நூலாக 2006-ஆம் ஆண்டில் வெளியிட்டது.

அந்நூலில் இருந்து சில வரலாற்றுக் குறிப்புகள் பின்வருமாறு தொகுக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டின் கடற்கரையில் வாழும் பாரம்பரியமிக்க பரவர்களைக் குறித்தது, இவ்வரலாறு.

பாண்டிய வம்சத்தைத் தோற்றுவித்தவரும், இந்தியாவின் முதல் பேரரசருமான பரதனின் நேரடி வாரிசுகளாகப் பரதவர் தங்களைக் காணுகிறார்கள். மேலும், பரதவர் ஒரு பிராமண ஆணுக்கும் தாழ்த்தப்பட்ட சாதியைச் சார்ந்த ஒரு பெண்ணுக்கும் பிறந்தவர் என்றும், அல்லது ஒரு குறவ ஆணுக்கும் செட்டியினத்துப் பெண்ணொருத்திக்கும் பிறந்த வாரிசுகள் என்றும் கூறப்படும் பழங்கதைகள், வரலாற்று ரீதியாக எவ்வித ஆதாரமும் இல்லாது இச்சமூகத்தைக் கேவலப்படுத்தும் நோக்கத்தில் கற்பனையாக உருவாக்கப்பட்டவை.

ஆனால் பரதவர் போனீஷியர்கள் (Phoenician) வெனீசியர்கள் (Venetians) போன்ற ஒரே மாலுமிகள் குழுமமாக வாழ்ந்தார்கள் என்பது மறுக்க முடியாத ஒன்று. இவர்கள்தான் இந்தியப் பெருங்கடலின் முதல் மாலுமிகள்.

பாண்டிய அரசின் உண்மையான பூர்வ குடிமக்கள் தகுதிக்கு பல இனத்தவர்களும் உரிமை கொண்டாடும்போது, பரல்யாவின் (Paralia) அதாவது முத்துக்குளித்துறையின் பூர்வ குடிமக்கள் யாரென்பது குறித்து சந்தேகம் ஏதுமில்லை. ஏனெனில் பாண்டிய நாட்டின் இதர பகுதிகளைப் போலன்றி முத்துக்குளித்துறையின் வரலாறு தெளிவாக காணக் கிடைக்கின்றது.

உலகின் மிகப் பெரிய வர்த்தகச் சந்தையான கொற்கையைக் கூட்டாக ஆண்டு வந்த சகோதரர்களே சேர, சோழ, பாண்டியர் என்றும், முக்காணியில் அவர்களது பொது நிலங்கள் இருந்ததென்றும், மாரமங்கலம் அவர்களது முன்னோர்களின் தலைநகரமாக இருந்ததென்றும், பின்னர் அவர்கள் தங்களுடைய பங்குகளைப் பிரித்துக்கொண்டு சேரன் மேற்கே செல்ல, சோழன் வடக்கே செல்ல, பாண்டியன் கொற்கையிலேயே தங்கி தென்பகுதி அரசை ஆண்டதாகவும் நிலவுகின்ற கருத்திற்கு வரலாற்று ஆவணங்கள் ஏதுமில்லை.

ஆனால் பாண்டிய மன்னர்கள் முத்துக்குளித்துறையின் இருந்து வந்தவர்கள் என்பதும், பரதவர் பர்ண்டிய அரசின் மாலுமிகள் என்பதும், மாலுமிகளாக இருந்ததால் பரதவர் கடற்கரையில் வாழ்ந்தனர் என்பதும், உண்மையாக இருக்கக்கூடும்.

வரலாற்றில் நிலைத்து நிற்கும் சான்றுகளாக, கிரேக்கர்களால் பரல்யா என்றழைக்கப்பட்ட முத்துக்குளித்துறை மன்னார் வளைகுடாவின் கொற்கையைத் தலைமையாகக் கொண்டு அமைந்த புவியியல் அமைப்பு, பரதவ நாட்டின் வரலாற்றைத் தலைமுறை அனைத்திற்கும் என்றென்றும் எடுத்துரைக்கும்.

முத்துக்குளித்துறையுடன் கிரேக்கர் வியாபாரத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளும் முன்னர் இப்பகுதியில் வாழ்ந்த மக்கள் பரதர் (Bharatas) அல்லது

பண்டனர் (Pandanahs) அல்லது பாண்டியர் (Pandiyans) என்று அழைக்கப்பட்டிருக்கலாம். ஆனால் கிரேக்க மாலுமிகளின் வருகைக்குப் பின்னர் இவர்கள், பரதவரே.

இவர்கள்தான் இங்க முத்துக்குளித்தவர், இந்தியாவின் மாலுமிகளாக இருந்தவர், பெரும்பாலான கடற்கரைகளின் காவலர்களாக இருந்தவர்கள். உறுதியாகப் பரதவர் என்பதே இவர்களின் பெயர். இதுவே இவர்களின் பாரம்பரியப் பட்டம், மேலும், இது அவர்களது கடந்த காலத்தின் உயகுடித் தன்மையையும், மேன்மையையையும் குறிக்கும் பட்டமுமாகும்.

முத்துக்குளித்துறையில் முத்துக்குளித்தவர்கள் அதற்காகவே பயிற்சி பெற்றவர்கள் என்றும், இவர்கள் முத்துக்கள் இருக்கும் இடங்களை நன்றாக அறிந்தவர்கள் என்றும், பண்டைக் காலத்தில் இருந்தே உலகம் முழுவதையும் முத்துக்குளித்துறைக்கு ஈர்ப்பதற்குக் காரணமாக இருந்த முத்துக்களைக் கண்டுபிடித்தவர்கள் இவர்களாகத்தான் இருக்க வேண்டும் என்றும், எளிதாகவும் உறுதியாகவும் கூறலாம்.

கிரேக்க முத்துக்குளித்துறையை அறிந்து அதனுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதற்கு நம்முடைய புனித நூலின அரசர் ஆகமம் 3-ஆம் புத்தகம், பரலிபோமேனன்2-ஆம் புத்தகம் ஆகியவற்றில் வரலாற்று ஆதாரங்கள் காணப்படுகின்றன. சாலமோன் (Solomon) செங்கடலின் கரையிலுள்ள ஆசியோங்காபாரில் (Asiongabar) பல கப்பல்களைக் கட்டினான் என்றும், உலகின் தலைசிறந்த மாலுமிகளான போனீஷியர்கள் இக்கப்பல்களில் மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒ.்பிருக்குச் சென்றனர் என்றும் இந்நூல்களில் நாம் காண்கிறோம். ஒ.்பிர் (Ophir) என்பது தப்ரோபனம் (Taprobanam) என்ற சலியான்ஸ் (Salianus) என்பவர் குறிப்பிடுகிறார். கொற்கையைத் தனது முகத்துவாரத்தில் கொண்டிருந்த தாமிரபரணி ஆற்றின் கிரேக்கப் பெயர்தான் 'தப்ரோபனம்' என்பதை நாம் அறிவோம். ஒ.்பிர் என்ற துறைமுகம், தற்போது திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஓவரி என்ற ஊராகும்.

மேலும் இக்கப்பல்கள் ஒ.்பிரிலிருந்து திரும்பி வரும்போது முத்துக்களையும் விலைமதிப்பற்ற கற்களையும் கொண்டு வந்தன என்பதும் மேற்சொன்ன நூல்களில் கூறப்பட்டுள்ளது.

உலகின் அனைத்து முத்துக்களும் முத்துக்குளித்துறையில் இருந்துதான் வந்தன என்றும், முத்துக்குளித்துறைகளும் அரேபியாவின் பல்வேறு மக்களுக்குமிடையே நிலையான வர்த்தகத் தொடர்புகள் இருந்தன'' என்றும் மார்கோபோலோ கூறுகிறார்.

எனவே கிறிஸ்து பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, முத்துக்குளித்துறையில் முத்துக்குளிப்போர் இருந்தனர் எனறும், இந்தியப்

பெருங்கடலின் மாலுமிகள் முத்துக்குளித்துறையின் குடிமக்கள் என்றும் உறுதியாகக் கூறமுடியும்.

மேலும், பரவர் இல்லாத முத்துக்குளித்தலையும் முத்துக்குளித்துறையையும் யாராலும் கற்பனைகூட செய்ய முடியாது.

பாண்டிய மன்னர்களும், மூன்று பிரிவுகளான சேர, சோழ, பாண்டிய அரசுகளை உருவாக்கியவர்களும் முத்துக்குளித்துறையில் பிறந்தவர்கள்தான் என்ற பெருவாரியான கருத்தை நாம் ஏற்கலாம், அல்லது மறுக்கலாம். ஆனால் பாண்டிய மன்னரின் ஆட்சி அதிகாரத்தை அங்கீகரித்து, அவர்களுக்கு நிதி குறித்தவற்றில் தாராளத் தன்மையுடன் காலங்காலமாகத் துணை நின்றவர்கள் எனினும், பரவர் தங்களுக்கென ஒரு சுயாட்சிக் குடியரசு முறையைக் கொண்டிருந்தனர் என்பது உறுதி.

பரவருக்கு மற்றொரு சிறப்பும் உண்டு. பல்வேறு அரசுகளையும், அரசர்களையும், பேரழிவுகளையும், ஒடுக்கு முறைகளையும், அவமானங்களையும் தாண்டி பரவர் மட்டுமே நிலைத்து நிற்கின்றனர்.

எத்தனையோ உலகளாவிய அழிவுகளுக்கும் இடையில் பரவர் மட்டுமே முத்துக்குளித்துறையில் நிலைத்து நிற்கிறார்கள். தொடர்ந்து முத்துக்குளித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். ‘‘பரவரை நீக்கி முத்துக்குளித்துறை இருக்க முடியாது.

மார்க்கோபோலோ காலத்தில் இருந்ததைப் போன்றே பரவர் இன்றும் உறுதியாக இருக்கிறார்கள். இவர்கள் தங்கள் கடவுளுக்கும், திருச்சபைக்கும், முத்துக்குளித்துறைக்கும், விசுவாசமாக, என்றும் உறுதியான பரவராக நிலைத்து நிற்கிறார்கள். ‘‘பட்டங்களாலும், பெயர்களாலும் அல்லாமல் மனதாலும், மதத்தாலும், தங்கள் வாழ்வாலும், இறப்பாலும் உயர்ந்தவராக இருப்பதையே பரவர் விரும்பகிறார்கள். ‘‘இதுவே உண்மையான மகிமை. இதைத்தவிர உண்மையான மகிமை வேற ஏதுமில்லை.’’[3]

மக்களை முன்னிலைப்படுத்தி எழுதப்பட்டுள்ள இவ்வரலாற்று ஆவணத்திலிருந்து பரவரைப் பற்றிய சில வரலாற்றுக் குறிப்புக்கள் மேலே கூறப்பட்டுள்ளன.

பரதவரே பாண்டியர்

ஒரு மொழியானது கருவாகி உருவாகி, வளர்ந்து இலக்கணம் படைத்து, இலக்கியங்களை வடிக்க வேண்டுமென்றால், அதுதடை பல தாண்டி, ஆயிரமாயிரம் ஆண்டுகள் கடந்திருந்தால்தான் இலக்கியக் கருவூலங்களை விட்டுச் சென்றிருக்க முடியும் என்று சரித்திரம் சான்று பகர்கிறது. அப்படி முன்தோன்றிய மூத்தகுடிகளுள் பரவர் அல்லது பரதவர் எனச் சங்கப்புலவர்களால் பாடப்பட்ட நெய்தல் நிலத்தோன்றல்கள், சிந்துவெளி, ஹரப்பா நகரீகத்துக்குச் சொந்தக்காரர்கள் என்பது ஆராய்ச்சியாளர்களின் கூற்று.

வாழ வழிதேடி வடக்கிலிருந்து வந்த ஆசிரியர்கள் இவர்களை 'பரத்' என்றும், தாசர்கள் என்றும் அழைத்தனர். அந்தத் தாசர்களில் 'திவோதாசன்' 'சுதாசன்' என்பவர்கள் வீரத்திற்கும், விவேகத்திற்கும் சான்றாக விளங்கி உள்ளனர். சுதாசன் எனும் பரதகுல மன்னனை எதிர்க்க, பத்து ஆரிய மன்னர்கள் ஒன்று திரண்டு போரிட்டுத் தோற்றுப்போய் ஓடிய, ஆரிய மன்னர்கள் சுதாசன் எனும் பரதகுல மன்னவனுக்கு இந்தியாவின் மேலாண்மையைக் கொடுத்து, அவனை முதல் சக்கரவர்த்தியாக முடிசூட்டிக் கவுரவித்ததை ரிக் வேதகால வரலாறு வருணிக்கிறது.

சுதாஸ் எனும் பரதகுல மன்னரின் பெயராலே இந்திய நாடு 'பாரத நாடு' என அழைக்கப்படுகிறது என்பதையும் "தமிழ்பேசிய மீனவனே இந்தியாவின் முதல் சக்கரவர்த்தி" எனும் நூலில் விரிவாக விரித்துரைக்கப்பட்டுள்ளது.

நெய்தல் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகிய பரதவர் பற்றி தொல்காப்பியம் தொட்டு, மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, நற்றிணை, குறுந்தொகை, அகம் ஆகியவை நம் பரதவர் வாழ்வும் வளமும் குறித்து நயம்பட நவில்கிறது.

"திண் திமில் எல்லுத் தொழின் மடுத்த
வில் வினைப் பரதவர்..."[4]

"இலங்கு இரும்பரப்பின் ஏறி சுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான் திமிற் பரதவர்..."[5]

"கானல் அம் சிறுகுடிக் கடல் மேம்பரதவர்"[6]

"நுண்வலைப் பரதவர் மடமகள்
கண்வலைப் படூஉம் கானலானே..."[7]

"வரிவலைப் பரதவர் கருவினைச் சிறாஅர்.." [8]

"ஒன்றுமொழி, ஒலி இருப்பின்
தென் பரதவர்..."[9]

"தென்பரதவர் மிடல் சாய
வட வடுகர் வாள் ஒட்டிய..."[10]

"சிறை அருங் களிற்றின் பரதவர் ஓய்யும்
சிறுவீ ஞாழற் பெருங்கடற்..."[11]

இவ்வாறாகப் பரதவர் பற்றிய பாடல்கள் பரவலாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மகாபாரதப் போருக்கு முன்பு, பரதவர் அயோத்தியினைச் சார்ந்தவர்களாகவும், ஒரு மீனவப் பெண்ணும் (மச்சகந்தி) வியாசரும் கலந்ததால் பிறந்த ஆரியக் கலப்பற்ற பரதவரே இந்த மண்ணின் மைந்தர்களே என்பதை ரிக்வேதமும், வரலாறுகளும் உறுதி

செய்கின்றன. சிவன் பரதவனாக (மீனவனாக) வந்து திரையம்பகன் மகள் பார்வதியை மணமுடித்த கதையும், வலைவீசு புராணத்தில் உண்டு.

'பாண்டிய குலத்தவரும் பரதவர்' என்ற வரலாறும் வழக்கில் உள்ளது. பரதர்களின் ஊர்களை தென்தமிழ்க் கடற்கரை கிராமங்களில் கள ஆய்வு செய்த வீரபாண்டியன்பட்டினத்தை சேர்ந்த ஆஞ்சல் முராயிஸ், பரதவர்கள் சந்திரகுலத்தை சார்ந்தவர்கள் என்பதற்கு இன்றும் பரதகுல திருமணங்களில் 'சந்திரவட்டக்குடை' ஏந்திச் செல்லும் பழக்கம் உண்டு என்பதைக் கொண்டு நிரூபித்துள்ளார்.

"வேட்டம் பொய்யாது வலை வளம் சிறப்புக்
பாட்டம் பொய்யாது பரதவர்பகர"[12]

என நற்றிணைச் செய்திகள். மழை பெய்தால் கழனி வயல்களில் நெல்வருவாயும், கடலில் மீன் பெருவருவாயாகவும், மழை இல்லையென்றால் உப்பு விளைவால் பிற நிலத்தினரைவிட எக்காலமும் நிறைவாய் இருந்தனர்.

ஒரு காலத்தில் பரதவர் மிகப்பெரும் செல்வந்தர்களாகவும், செல்வாக்குடையவர்களாகவும் கடற்பயணம் பற்றிய தங்களின் அறிவாற்றலின் காரணமாக மற்ற இனத்தவர்மீது ஆதிக்கம் செலுத்தியவர்களாகவும் இருந்துள்ளனர்.

இவர்களுள் ஆதி அரசன் என்று பட்டம் தரித்த அரசமரபினர் இருந்ததாகவும், இவர்களில் சிலர் உத்திரகோசமங்கையில் இருந்து ஆட்சி செய்ததாகவும், இந்த நகரம் இன்று இராமனாதபுரத்திற்கு அருகில் உள்ள உத்திரகோசமங்கை என்ற ஊர்தான் என "தென்னிந்தியர் குலங்களும், குடிகளும்" எனும் நூலின் தொகுதி ஆறில் மிகத் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளன.

இவர்களின் எண்ணிக்கை பெருகப் பெருக அரசனின் நேரிடை ஆளுகைக்கு உட்படாத தங்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவனின் கட்டுப்பாட்டின் கீழ் சாதித்தலைவர் எனும் தலைமையின் கீழ் இருந்துள்ளனர்.

முத்துக்குளிப்பே இவர்களின் பரம்பரைத் தொழிலாகவும், இதை அண்ணியருக்கு விட்டுக் கொடுக்காமல், அரேபிய மூர்களுடனும், வணிகநோக்கமுடன் வந்த வடுகருடனும் ஏற்பட்ட பிணக்கு காரணமாக 1542-ம் ஆண்டிற்குப் பிறகு, போர்த்துக்கீசியருடன் உறவு கொண்டு தங்கள் உரிமையை நிலைநாட்டப் பாடுபட்டுள்ளனர்.

தங்களுக்கென்று தனிப்படை வீரர்களும், போர் மறவர்களுடன் கூடிய ஆட்சி நடத்தியதால், போர்த்துக்கீசியர்களும், டச்சுக்காரர்களும் ஏழு துறைமுகங்களின் இளவரசர் என்றே இவர்களை அழைத்துள்ளனர் என்பதும், தென்னிந்தியர் குலங்களும் குடிகளும், எனும் நூலில் பொதிந்துள்ள உண்மைகளாகும்.

1735-ல் தரங்கம்பாடியில் உள்ள கிறிஸ்துவ திருச்சபையின் வரலாற்று ஆசிரியர் பரதகுல மக்களை கிறிஸ்துவ மக்களின் விவிலியம் எனும் பைபிளில்

கூறப்பட்ட பர்வையம் என்பவர் பரத குலத்தவர் என்றும், சாலமன் காலத்தில் கடல் பயணங்கள் மேற்கொண்டிருந்தவர்களுள் இவர்கள் பெயர் பெற்று விளங்கியவர் எனவும் குறித்துள்ளார். இந்த பரதகுலத் தோன்றல்கள் கடலில் கலம் செலுத்தும் மாலுமிகளாக சிறப்புற்றதால் இவர்களை மீகாமர் என அழைத்தனர்.

'பரதவர்' என்ற பெயருக்கு உரியவர் தமிழ், மலையாளம், கன்னடம் ஆகிய மொழிகள் பேசும் மூன்று பிரிவுகளாக உள்ளனர். இம்மூன்று பிரிவினருக்கும் தமிழ்பேசும் பரதவனே முன்னோடி என்றும், இவர்களின் தலைமைப்பீடம் தூத்துக்குடியாக இருந்ததென்றும், இவர்கள் தங்களைப் பாண்டியர் பரம்பரையினர் என்றும் கூறியதாக அந்த நூல் விளக்குகிறது.

மேலும் புனித சவேரியார் தூத்துக்குடியில் தங்கியிருந்தபோது, இலயோலா இஞ்ஞாசியார் எனும் தலைமைக் குருவுக்கு எழுதிய மடலில் முத்துக்குளித்துறை ஏறத்தாழ 134 மைல் தூரம் பரவி உள்ளதென்றும், முப்பது கிராமங்களின் பரதவர் தலைமைப் பீடமாக தூத்துக்குடி விளங்கி வருகிறதென்றும் எழுதியுள்ளார்.[13]

சங்ககால கொற்கை

பாண்டியரின் சிறந்த துறைமுகம் இதுவாகும். இத்துறைமுகம் பழங்காலத்தில் மக்களால் மிகவும் விரும்பப்பட்ட முத்துக்குப் பேர் போன இடமாகும். சேரநாடு மிளகிற்குப் பேர்போனது போலப் பாண்டிநாடும் முத்துக்கு பேர் போனது. மதுரைக்காஞ்சியும் சிறுபாணாற்றுப்படையும் முற்றி ஒளி முதிர்ந்த சீரிய முத்தினையும் விளங்குகின்ற சங்கினையுமுடைய பெரிய சங்கு குறிப்பார் இருப்பினையும், கள்ளாகிய உணவினை மாந்தும் குடிகளைக் கொண்ட சீறூர்களையுமுடைய கொற்கையென மதுரைக்காஞ்சி குறிக்கும்.

"விளைந்துமுதிர்ந்த விழுமுத்தின்
இலங்குவளை இருஞ்சேரிக்
கட்கொண்டிக் குடிப்பாக்கத்து
நற்கொற்கையோ நசைபொருந"[14]

அகநானூற்றுப்பாட்டுக்கள் பல கொற்கைப் பட்டிணத்து முத்தைச் சிறப்பிக்கின்றன. முத்துச் சிறந்து பொலியும் சீரம் பெருமையும் வாய்ந்த கொற்கை பட்டிணத்தை அறத்தோடு காப்பர் பாண்டியர்.

"மறப்போர்ப் பாண்டியர் அறத்திற் காக்கும்
கொற்கையும் பெருந்துறை முத்தின் அன்ன"[15]

பரக்கும் அலைகள் கொணர்ந்து வீசிய குளிர்ந்த ஒளியினையுடைய முத்துக்கள், விரும்பும் நடையினையுடைய குதிரையது காலினை வடுச்செய்து அதன் செலவினைக் கெடுக்கும் கொற்கை என அகநானூறு கூறும்.

"இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்

நற்றோர் வழுதி கொற்கை முன்றுறை"[16]

பாண்டியனது புகழ் மிக்க சிறப்பினையுடைய கொற்கை பதியின் கடற்றுரையிலே ஒளியினையுடைய முத்துப்பிரகாசிக்கும்.

வினை நவில் யானை விறற்போர்ப் பாண்டியன்
புகழ்மலி சிறப்பிற் கொற்கை முன்றுரை
அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து

வெண்மையான ஓடங்களினின்றும் கருமையான கடலிலே மூழ்கிச் சுறாவின் வாயினின்றும் தப்பி வலம்புரிச் சங்கை எடுத்து வெற்றிசங்கை ஊதும் பரதவர் மலிந்திருந்தனர் கொற்கையில். நெருங்கிய நீர் மிக்க முத்துக்கள் விலையும் கடற்பரப்பினை உடையது கொற்கை.

இலங்கிவரும் பரப்பின் எறிசூறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்
ஒலிதலைப் பணிலம் ஆர்ப்பக்கல்லெனக்
கலிகெழு கொற்கை எதிகொள இழிகரும்

கொற்கையைப் பற்றிய இக்குறிப்புக்கள் யாவும் கிரேக்க உரோம வரலாற்று ஆசிரியர் கூறுவனற்றோடு ஒத்திருக்கின்றன். கொற்கையில் முத்துக்குளிப்பவர் சிறையிலுள்ள குற்றவாளிகளென பெரிப்புளுசு என்னும் நூலால் அறியலாம். இது தொடர்ந்து கூறுவதாவது: குமரிதொடக்கம் கொல்சி (கொற்கை) வரையும் இந்நாடு உள்ளது. கொல்சியில் முத்துக்குளிக்கும் இடம் பல உள: முத்துக்குளிப்பவர் சிறையிடப்பட்ட குற்றவாளிகள்: கொல்சி பாண்டிய அரசனுக்கு உரியது.

காண்டொருங் கலுழ்த லன்றியு மீண்டுநீர்
முத்துப்படுபரத்திற்கு கொற்கை முன்றுரை

இவ்வாறு மேனாட்டவரால் சிறப்பிக்கப்பெற்றது கொற்கை.

இறக்குமதிப் பொருட்களும் ஏற்றுமதிப் பொருட்களும்.

அக்கால வியாபாரப் பொருட்களைப் பற்றிய குறிப்புக்களைப் பட்டினப்பாலையிலும் மதுரைக்காஞ்சியிலும் விரிவாகக் காணலாம். கப்பல்களில் நிமிர் பரிப் புரவிகள் வந்து இறங்குவன: மிளகு மூடைகள் வண்டியில் வருவன: வடமலையிற் திறந்த மணியும் பொண்ணும், குடமலைத் பிறந்த சந்தனமும் அகிலும், தென்கடலிற் பிறந்த முத்தும், குணக்கடலிற் பிறந்த பவளமும் குவிந்து கிடப்பன. கங்கை காவிரி ஆகிய ஆறுகளின் பயன்களும், ஈழத்துணவும், காழகத்து ஆக்கமும் சிறந்து விளங்குவன. இவ்வாறு அருமையும் பெருமையும் சான்ற பொருட்கள் பல காவிரிப்பூம்பட்டிணத்து மறுகுகளில் மண்டியும் மயங்கியும் கிடக்கின்றன எனப் பட்டினப்பாலை ஆசிரியர் கூறுவர்.

"நீரின் வந்த நிமிர்பரிப்புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப்பிறந்த ஆரமும் அகிலும்

கேன்கடன் முத்தும் குணக்கடற் றுகிரும்
கங்கை வாரியுங் காவிரிப் பயனும்
ஈழத்துணவுங் காழகத் தாக்கமும்
அரியவும் பெரியவும் நெரிய வீண்டி
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்''[17]

சேறு நிரம்பிக் கரியதாய் விளங்கும் கழிகளில் விளைந்த உப்பையும் இனிய புளியினையும், பரதவரால் மணலிலே பரப்பிச் செய்யப்பட்ட துடியின் பக்கங்களையொத்த கருவாட்டையும் வேற்றுநாட்டுக் கப்பல்கள் சிறந்த குதிரைகளைக் கொண்டு வருவன.

''இருங்கழிச் செறுவின் தீம்புளி வெள்ளுப்புப்
பரங்தோங்கு வரைப்பின் வன்கைத் திமிலர்
கொழுமீன் குறைஇய துடிக்கட் டுணியல்
விழுமிய நாவாய் பெருநீ ரோச்சுநர்
நனந்தலைத் தேஎத்து நன்கல னுய்ம்மார்
புணர்ந்துடன் கொணர்ந்த புரவியொ டனைத்தும்''[18]

ஆணிகளை விற்பனைக்காகத் தூர தேசங்கட்கு எடுத்துச் செல்லும் வணிகர் கொண்டு செல்லும் பொருட்களை மதுரைக்காஞ்சி குறிப்பிடும்.

குதிரை வணிகம்

காயல் துறைமுகத்தின் வழியாக பாண்டிய மன்னர்களுக்கு ஆண்டுதோறும் இறக்குமதி செய்யப்பட்டன. இதற்காக அரேபியர்கள் கி.பி.1200 பின் இங்கே வருகிறார்கள். இவர்கள் குதிரைகளை பராமரிக்கும் தொழிலைச் செய்து வந்தார்கள்.

குதிரைகள் பராமரிக்கப்பட்ட இடம் சோனஹன்விலை எனப்படுகிறது. அரேபியர்கள் இங்குள்ள பெண்களை மணந்து கொண்டு இங்கேயே குடியேறினார்கள். இவர்களை அரேபியச் சேட்டுகள் என்று அழைப்பர்.

பரதவர்களுடைய மீன் பிடித்தல், முத்துக்குளித்தல், சங்குகுளித்தல் போன்ற வணிகத்திற்கு இவர்களே வழிகாட்டும் தலைவர்களாக விளங்கினார்கள். இதனால் இங்குள்ள பரதவர்கள் இசுலாமியர்களின் அடிமைகளாயினர். இதனால் இவர்கள் இருவருக்குமிடையே இனச்சண்டை ஏற்பட்டது. அதன் விளைவாக இருபக்கமும் பெரும் உயிர்ச்சேதமும் பொருட்சேதமும் ஏற்ப்பட்டது.

இந்த ராஜ்யத்தில் யாரும் குதிரை வளர்ப்பதில்லை. அதனால் அரசன் தனக்கு வேண்டிய குதிரைகளை வெளிநாட்டாரிடமிருந்தே வாங்குவது அவசியமாகிறது. அதற்காக இந்த ராஜ்யத்தின் செல்வத்தின் ஒரு பெரும் பகுதி செலவிடப்படுகிறது. கிஸ், ஹார்மஸ், டோபர், சோபர், ஏடன் ஆகிய ஊர்களைச் சேர்ந்த வணிகர்கள் போர்க்குதிரைகளையும் பிற குதிரைகளையும் ஏராளமாய்த் திரட்டி, அவற்றை இந்த அரசன் ஆட்சியிலுள்ள ராஜ்யத்திற்கும் இவனுடைய நான்கு சகோதரர்களுடைய

ஆட்சியிலிருக்கும் ராஜ்யங்களுக்கும் கொண்டு வருகிறார்கள். இங்கு ஒரு குதிரையின் விலை 500 சக்கி பொன். அதாவது 100 வெள்ளி மார்க்குகளை காட்டிலும் அதிகம், விலை இவ்வளவு அதிகமாக இருந்தாலும் ஆண்டுதோறும் ஏராளமான குதிரைகள் இங்கு விற்பனையாகின்றன. இந்த அரசன் மட்டும் ஆண்டுதோறும் இரண்டாயிரத்திற்கும் அதிகமான குதிரைகளை வாங்க விரும்புகிறான். அவனைப் போலவே அவனுடன் பிறந்தார் நால்வரும் குதிரை வாங்க விரும்புகின்றனர். ஒவ்வொருவரும் எதற்காக இத்தனை குதிரைகளை வாங்குகிறார்கள் வாங்கிய குதிரைகள் ஓராண்டு முடிவதற்கு முன்னரே இறந்து போகின்றன. அவற்றுள் ஒரு நூறு குதிரைகளேனும் எஞ்சி நிற்குமா. என்பது ஐயமே. இந்த நாட்டு மக்களக்குக் குதிரையை எவ்வாறு பேண வேண்டும் என்பதே தெரியாது. குதிரைகளுக்கு லாடங் கட்டுபவர்களும் இங்கே இல்லை. குதிரை வணிகர்கள் இலாடக்காரர்களை அழைத்துக்கொண்டு வருவதில்லை. லாடக்காரர் யாரேனும் வர முயன்றாலும் அவர்களை வணிகர்கள் தடுத்து விடுகிறார்கள். அப்படிச் செய்யாவிட்டால். குதிரை வாணிகம் குறைந்து போகுமென்று அவர்கள் அஞ்சினார்கள். அந்த வாணிகத்தில் அவர்களுக்கு ஆண்டு தோறும் பெரும் பொருள் கிடைத்து. அந்த லாபத்தை இழப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. குதிரைகளை அவர்கள் கப்பலில் ஏற்றுகிக்கொண்டு வந்தார்கள்.

பாண்டிய மன்னர்களுக்கு எரிய 612 யானைகளும், 20,000 குதிரைகளும், 96,000 மணங்கு பொன்னும், முத்துக்களும் அணிகலன்களும் அடங்கிய பல பெட்டிகளையும் மாலிக்கபூர் கொள்ளையடித்துச் சென்றான் என்று பார்னி கூறியுள்ளது அறியத்தக்கது.

தமிழர்கள் தேர்ப்படை, காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை, கப்பற்படை என ஐவகைப் படையை வைத்திருந்தனர். முதன் முதலாக அவர்கள் தேர்ப்படை, காலாட்படை, யானைப்படை, குதிரைப்படை ஆகிய நான்கு படைகளைத்தான் வைத்திருந்னர். அப்பால் தேர்ப்படைகளை ஒழித்துவிட்டுக் கப்பற்படையை நிறுவினர். குதிரைப்படையை விரிவுபடுத்தினர். அரபியாவில் நல்ல குதிரைகள் கிடைத்தமையால் அங்கிருந்து ஏராளமான குதிரைகளை வாங்கினர்.

அரபியர்கள் கங்கள் மரக்கலங்களில் ஏராளமான குதிரைகளைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு இங்குள்ள பொருள்களை வாங்கிச் செனற்னர்.

அரபிய வணிகர்களுக்குத் தமிழ் மன்னர்கள் எல்லா வசதிகளையும் செய்து கொடுத்தனர். அவர்கள் குடியேறுவதற்கு இடம் அளித்தனர். குதிரைகளுக்கு நல்ல விலையும் கொடுத்தனர். அவர்களுக்கு மதசுதந்திரம் அளித்தனர். அவர்களுக்கு அரசாங்கத்தில் உயர் பதவிகளுக்கு அளித்தனர். முற்கால அரபியர்கள் பருவக்காற்றின் பலன்களை நன்கறிந்தவர்களாய் விளங்கினர். தென் மேற்கு பருவக் காற்று வீசும்பொழுது அரபியாவிலிருந்து புறப்பட்டுத் தமிழகத்தை அடைந்து, கப்பலில் கொண்டுவந்த குதிரைகளை விற்றுப் பாரத நாட்டில் கிடைக்கும் பண்டங்களை

வாங்கிக் கொண்டு, வடகிழக்குப் பருவக்காற்று அடிக்கும்பொழுது தாயகம் திரும்பி விடுவார்கள்.

மிளகு

இது தமிழ்நாட்டிலிருந்து உரோமர் பெற்ற பொருட்களில் நான்கின் மூன்று பகுதி மிளகு. முசிறித் துறைமுகத்திலிருந்து இம் மிளகு ஏற்றுமதி செய்யப்பட்டது. இறைச்சி முதலிய உணவுகளைப் பழுதுபடாது பேணுவதற்கு உரோமர் மிளகைப் பயன்படுத்தினர். மருந்து ஆக்குவதற்கும் மிளகு உதவியது. கிப்போக்கிரிட்டசு (Hippocrrtes) கலென் (Galen) பிளினி முதலிய வைத்திய ஆசிரியர் மிளகை மருந்துக்குப் பயன்படுத்தினர். கிப்போக்கிரிட்டசு மிளகை இந்திய மருந்தெனக் கூறுவர். உரோமாபுரியில் ஒரு இறாத்தல் மிளகி விலை பதினைந்து தெனாறி (Denarir) என்றும் இந்தியாவில் அவ்விலையின் அரைப்பங்கு கூட இல்லை என்றும் பிளினி கூறுவர்.

துகிர் (பவளம்)

பட்டினப்பாலை இதனை ஒரு வியாபாரப் பொருளாகக் குறித்தபோதும் இப்பொருள் தமிழ்நாட்டினின்றும் ஏற்றுமதியானதற்கும் ஒரு சான்று இல்லை. பவளமணியை ஓர் இந்தியன் எவ்வளவுக்கு மதித்தானோ அவ்வளவுக்கு ஒரு முத்தை உரோமப் பெண்மணி மதித்தாள் எனப் பிளினி கூறுவர்.

கங்கைவாரி

இப்பொருள்கள் யானை, இரத்தினம், முத்து, பொன் எனப் பட்டினப்பாலைக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் குறிக்கின்றார். இவற்றைத் தவிர வேறு எப்பொருள்கள் கங்கையாற்றின் கரைப் பகுதிகளிலிருந்து வந்தன என்று கூறமுடியாது. வேற்று நாட்டவர்க்கு விற்கும் பொருட்டு இப்பொருட்கள் காவிரிப்பூம்பட்டினத்திற்குக் கொண்டு வரப்பட்டன.

உள்நாட்டு வணிகம்

உள்நாட்டு வணிகத்தில் வியாபாரப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு வண்டிகளும் கழுதைகளும் பயன்பட்டன. எருதுகள் இழுத்து நிரையாகச் செல்லும் உப்பு வண்டிகளைப் பற்றிச் சிறுபாணாற்றுப்படை கூறும். உப்புப் பொதியேற்றி இவ்வண்டியினை உமணப் பெண்டிரே ஓட்டிச்செல்வர். இவ்வாறு செல்லுமிடத்து அவ்வண்டியின் இரு புறத்தும் உப்பு வணிகர் வண்டியின் அச்சு முறியாமற் பாதுகாத்து நடப்பர். அவ்வாறு செல்லும்பொழுது, வண்டியில் முன் பூட்டிய எருதுகள் இளைத்தால், அவற்றின் இடத்திற் பூட்டுவதற்கு சில எருதுகளையும் மேலதிகமாக உடன் நடத்திச் செல்வர்.

> ‘‘முடலை யாக்கை முழுவலி மாக்கள்
> சிறுதுளைக் கொடுநுக நெறிபட நிரைத்த

பெருங்கயிற் றொழுகை மருங்கிற் காப்பச்
சில்பத வுணவின் கொள்ளை சாற்றிப்
பல்லெருத் துமணர் பதிபோகு நெடுநெறி''[19]

மிளகுப் பொதிகளைக் கழுதைகளின் முதுகில் ஏற்றி நடத்திச் செல்வதும் உண்டு. சுளைகளை உடைய பலாப் பழத்தைப் போன்ற மிளகு மூட்டைகளைச் சுமக்கும் நேரான காதினையும் குறிசுட்ட உரமான முதுகையுமுடைய கழுதைகளைப் பற்றிப் பெரும்பாணாற்றுப்படை குறிக்கும்.

வெள்ளை உப்பைக் கொடுத்து நெல்லைக் கொண்டுவரும் சிறு ஓடங்களைப் பற்றிப் பட்டினப்பாலை கூறும்.

''குறும்பல்லூர் நெடுஞ்சோணாட்டு
வெள்ளை யுப்பின் கொள்ளை சாற்றி
நல்லொடு ந்த வல்வாய்ப் ப.்றி''[20]

உள்நாட்டு வணிகத்திற்கு பண்டமாற்று முறையே பெருவழக்கிலிருந்தது. நெல்லை அளவாக வைத்தே மற்றைய பொருட்களை மதிப்பெடுத்தனர் அக்காலத்து மக்களெனத் தமிழலக்கியத்திலிருந்து அறிகின்றோம். நெல்லுக்காக உப்புக் கொடுக்கப்பட்டதை மேலே குறித்த பட்டினப்பாலையின் பகுதி விளக்கும். பெரிய கடலில் மீன்வேட்டை செய்யும் சிறு குடியில் வாழும் பரதவர் பெரிய உப்பங்கழியாய் வயலில் விளைவித்த வெள்ளாப்பின் விலைகூறி, ஞாயிற்றின் வெம்மையாலாகிய பிளப்புக்களையுடைய குன்றங்களைக் கடந்து செல்லுவாள் உப்பு வணிகரது காதலையுடைய இளையமகள். இவள், திரண்ட ஒளி பொருந்திய வளைகளை ஒலிக்க வீசி, நெல்லுக்கு ஒத்த அளவினதே வெள்ளய கல்லுப்பு என்று சேரியிற் பண்டமாற்றாகிய விலை கூறுவாள்.

''பெருங்கடல் வேட்டத்துச் சிறுகுடிப் பரதவர்
இருங்கழிச் செறுவின் உழா அது செய்த
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர குன்றம் போகும்''[21]

பற்றியும், ஊரவரே, நெல்லும் உப்பும் விலை ஒப்பாகும் கொள்வீராக என்று சேரிகள் தோறும் கூறி விற்கும் அழகிய விளைந்த உந்தயினையும் மூங்கில் போன்ற தோளினையுமுடைய நெய்தல் நிலப் பெண்ணைப் பற்றியும் அகநானூறு கூறும்.

''நெல்லும் உப்பும் நேரே ஊரீர்
கொள்ளீ ரோவெனச் சேரிதொறும் நுவலும்
அவ்வாங் குத்தி அமைத்தோ ளாய''[22]

உப்பை விற்று வெண்ணெல்லைப் பெறுவதைப் பற்றிக் குநற்தொகையும் கூறும்.

''உப்பை மாறி வெண்ணெற் றரீஇய''[23]

மலைநாட்டு வேட்டுவர் தயிர் கொணர்ந்த முட்டிகளுக்குள் பாண்டிநாட்டு உழத்திகள் நெல்லைச் சொரிவர்.

''கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்

மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்
தயிர்கொடு வந்த தசும்பு நிறைய
ஏரின் வாழ்நர் பேரி லரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணல்
முகந்தனர் கொடப்ப வுகந்தனர் பெயரும்''[24]

உரிய பற்களையுடைய வலைப்பாண்மகள் இனிமையுடைத்தென்று கொள்ளப்படும் கெடிற்று மீனைச் சொரிந்த அகன்ற பெட்டி நிறையப் பண்டமாற்றாக மனையோள் பெரும் வற்றை நிறைப்பள் என்றும்,

''வலையையுடைய வலிய
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி''

நெல்லின் நேரே வெண்கல் உப்பெனச் சேரி விலைமாறு கூறலின்

''முள்ளெயிற்றுப் பாண்மக ளின்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகாற் பெரும்பயறு நிறைக்கு மூர''[25]

என ஐங்குறுநூறு கூறும். மீனைக் கொடுத்து நெல்லுப் பெறும் வழக்கத்தைப் புறநானூறும் கூறும்.

''மீனொடுத்து நெற்குவை'' [26]

நெல் அளப்பதற்குரிய அளவையைப் பதிற்றுப்பத்து எடுத்து விளம்பும்.

''தொன்றுதிறை தந்த களிற்றொடு நெல்லின்
அம்பண வளவை யுறைகுவித் தாங்குக்
கடுந்தே றுறுகிறை மொசிந்துறை போகிய''[27]

தேனையும் உணவுக்குகந்த கிழங்கு வகைகளையும் மீனின் கொழுப்புக்காகவும் நறவத்துக்காகவும் விற்கும் வழக்கத்தையும், கள்ளுக்காகவும் மான் இறைச்சிக்காகவும் கரும்பையும் சோற்றையும் கொடுக்கும் வழக்கத்தையும் பொருநராற்றுப்படையிலிருந்து அறியலாம்.

''தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவுமறுகவும்
தீங்கரும்போ டவல்வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவும்''[28]

தயிர் புள்ளியாகத் தெறிந்த வாயையுடைய மோர்ப் பானையைச் சுமட்டின்மேல் வைத்துக் கொண்டு திரியும் ஆய்மகள், தான் நெய்யை விற்கின்ற விலைக்குக் காட்டியாகப் பசும் பொன்னைக் கொள்ளாது.

பாலெருமையையும் நல்ல பசுவையும் கரிய எருமை நாகினையும் நெய்க்கு ஒப்பாகப் பெறுவள்

''உறையமை தீந்தயிர் கலக்கி நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட் டிரீஇ

நாண்மேர் மாறு நன்மா மேனிச்
சிறுகுழை துயல்வருங் காதிற் பணைத்தோட்
குறுநெறிக் கொண்ட கூந்த லாய்மகள்
ஆளைவிலை யுணவிற் கிளையுட னருத்தி
நெய்விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்
எருமை நல்லான் கருநாகு பெறூஉம்
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்''[29]

மேலே கூறியவற்றிலிருந்து அக் காலத்தில் உழுதுண்டு வாழ்வார்க்கிருந்த சிறப்பையும் அறிந்துகொள்ளலாம்.

வணிகர் பண்பு

பண்டைக் காலத்தில் தமிழகத்தில் வணிகம் உலக நன்மைக்காகவே நடந்துவந்தது. பொருள் ஈட்டுவது என்னும் கருத்தால் மட்டும் அவர் இத்தொழிலை நடந்தவில்லை. பல இடங்களில் விளையும் பலவகைப் பண்டங்களை ஓரிடத்திற் கொண்டு வந்து குவித்து, அப்பண்டங்கள் கிடைக்காத வேறிடங்களுக்கு அவற்றை அனுப்பி, நாடு முழுவதும் வருடங்களுக்கு அவற்றை அனுப்பி, நாடு முழுவதும் வறுமையின்றி நலமாக இருக்க அவர் வழி தேடினர். காவரிப்பூம்பட்டினத்திலிருந்த வணிகர் உண்மை பேசும் பண்பு வாய்ந்தவர். பொய் பேசுவதை நாணுதற்குரியது என்று கருதுவர். தமக்கு உண்டாகும் ஊதியத்தை வெளிப்படையாகத் காட்டிப் பண்டங்களை விலை கூறி விற்பர். பிறர் பொருளை மிகுதியாகக் கொள்ளாமலும், தம்முடைய பண்டங்களைக் குறைத்துக் கொடாமலும் நடுவு நிலைமையோடும் உண்மையோடும் அவர் வணிகம் செய்வர். இவ்வாறு தமது செல்வத்தை அறம் தவறாது ஈட்டுவரெனப் பட்டினப்பாலை கூறும்

''நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும் பிறவு மொப்ப நாடிக்
கொள்வதூஉ மிகைகொளா
குறைப்பதுங் குறைகொடாது''[30]

வணிகம் இவ்வளவு நேர்மையான முறையில் நடந்தமையாலேயே தமிழ் நாடும் பெருமையுடன் சிறப்புற்று விளங்கியது.

மீன் விற்றல்

இது செய்வார் பரதவர். இவர்கள் கடல் வாழ்நர், திமில் வாழ்நர், நுளையர், வலை வாழ்நர் என்றும் குறிக்கப்பெறுவர்.

கள்ளுக்கு மீனும், மீனுக்குக் கள்ளுமாக அக்காலத்தில் பண்டமாற்றும் நடைபெற்றது. மருவூர்பாக்க நகரவீதியில் மீன் விற்போர் விளக்குகளையும், மீன்களைக்

குறுக்கிட்டுத் தடுத்து அகப்படுக்கும் வலையுடைய பரதவர் திமிலில் வைத்த விளக்குகளும் நிறைந்திருந்தன என்னும் செய்தியும் உண்டு.

''மீன்விலைப் பரதவர் வெள்ளுப்பு பகருநர்''[31]

''இடையிடை மீன்விலைப் பகர்வோர் விளக்கமும்
விலங்கு வலைப் பரதவர் மீன்திமில் விளக்கமும்''[32]

வலை வளத்தால் வாழ்வு நடத்துகின்றவர் வாழ்கின்ற சேரியிலே, வலையினை உலர போட்டிருக்கின்ற முற்றத்திலே, ஒரு பூங்கொம்பினைத் தன் கையிலே ஏந்தியவளாக, விற்பதற்குரிய மீன்விற்றல் உலர்வதனைக் காத்து நின்றாள் ஒரு கன்னி. இது அவள்பால் காமுற்றவன் அவள் அருளாததால், தன் துயரை அக்கன்னியைப் முன்னிலைப்படுத்தி கூறுகின்றான். அப்போது அவர்களது தொழிலைக் கூறுவதாக அமைந்துள்ளது.

''விலைமீன் உணங்கல் பொருட்டாக
வேண்டு ருவம் கொண்டு, வேறு ஓர்
கொலைவேல் நெடுங்கண்
கொடுங்கூற்றம் வாழ்வது
அலைநீர்த் தன் கானல், அறியேன்,
அறிவேனல், அடையேன் மன்னோ?''[33]

மேலும் அவளது முகத்தைத் திங்களோ என வியந்து திமில் என்னும் மீன்பிடி படகினால் வாழ்பவருடைய சிற்றூரின் கண் அது (திங்கள் போன்ற முகம்) அரவு விழுங்கிடுமோ என மறைந்து வாழ்கின்றதோ என்கிறான்.

''திங்களோ காணீர் திமில் வாழ்நர் சிறூர்க்கே
அம்கண் ஏர் வானத்து அரவு அஞ்சிவ வாழ்வதுவே''[34]

கடல் வளத்தால் வாழ்வு நடத்துபவருடைய சிறிய ஊர் அப்பெண்ணின் ஊர் என்றும், புலால் நாறுகின்ற மீனின் வெள்ளிய வற்றலைக் கவரும் பறவைகளை ஓட்டிக் கண்டவர்களுக்கு மனம் தடுமாறுகின்ற காமநோயினைச் செய்பவள் அவள்.

''புலவுமீன் வெள்உணங்கல் புள்ஒப்பிக் கண்டார்க்கு
அலவநோய் செய்யும் அணங்கு இதுவோ''[35]

என்பதால் மீன் வற்றலுக்குக் காவல் தொழிலைச் செய்பவர்கள் பெண்கள் என்பதையும் உணர்த்துகின்றனர் இளங்கோ,

அதே கானல்வரியில் மாதவி செவ்வழிப்பாலை என்னும் பண்ணிகளை யாழிலே எழுப்பி பின் நுளையரது விளரிப் பாலையைப் பாடுகின்றாள்.

''நுழையர் விளரி நொடிதரும் தீம்பாலை''[36]

அதாவது நுளையர் என்பார் மின்களைக் குறுக்கே வலை வைத்துப் பிடித்து விற்கும் தொழிலைச் செய்து வாழ்பவர் என்பது மாதவி பாடலாலும் அறியவருகின்றது.

மேலும் பலவகையான ஊன்களை விற்பவரும், எண்ணெய் வாணிகரும் நெருங்கியிருக்கும் பல்வகைப் பொருள்களும் மலிந்த கடைத்தெருக்கள் மருவூர்ப்பாக்கத்தில் இருந்தன என்பதை

"பாசவர், வாசவர், பல்நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன்மலி இருக்கையும்"[37]

என்னும் வரிகளால் அறியலாம்.

உணவுப் பொருள்களுள் ஒன்றான யவனர் நாட்டு அயிர் (கண்டு சர்க்கரை) புகாரில் இறக்குமதி செய்யப்பட்டது

முத்துவணிகம்

பாண்டிய நாட்டின் கொற்கை பழந்துறையில் ஏராளமான முத்துக்கள் எடுக்கப்பட்டன. யவனர்கள் தங்கள் நாட்டுப் பொற்காசுகளைக் கொடுத்து முத்துக்களை வாங்கிக் கொண்டனர். தமிழ்ப்பெண்கள் முத்துக்களைக் கோர்த்து கழுத்தில் மாலைகளாக அணியும் வழக்கதைக் கொண்டிருந்தனர். சிலம்பிலும் முத்து கோர்த்தல் இடம்பெறுகிறது. அணிகலன்களுள் ஒன்றான முத்துக்களை முறையாகக் கோர்த்தல் தொழிலை செய்தவர்கள் திருமணிக் குயிற்றுநர் எனப்பட்டனர்.

கொற்கைத் துறைமுகம் நகரமாகும். இது முத்துக்குப் பெயர் போனது பாண்டியர்க்குரியது.

"கொற்கையும் பெருந்துறை முத்தொடு பூண்ட
கொற்கைக் கொண்கள் குமரித் துறைவன்"[38]

மாடல் மறையோன் செங்குட்டுவனிடம் கூறுவதாய் அமைந்த பகுதியில் மதுரையில் பொற்கொல்லர் ஆயிரவர் இருந்ததாகத் தெரிகின்றது.

"கொற்கையில் இரந்த வெற்றிவேல் செழியன்
பொன் தொழிற் கொல்லர் ஈர் ஐந்நூற்றுவர்"[39]

என்பன அவ்வரிகள்.

அடுத்ததாக நவமணிகளின் தரம் தெளிந்து விற்றலும் வாங்குதலுமாகிய தொழில்களைச் செய்தவர்கள் மதுரையில் இரத்தினக் கடைத்தெருவில் இருந்தார்கள் என்னும் செய்தி ஊர்காண் காதையில்

"காக பாதமும் களங்கமும் விந்துவும்
ஏகையும் நீங்கி, இயல்பிறக் குன்றா

வகை தெரி மாக்கள் தொகை பெற்றுஓங்கிப்
பகை தெறல் அறியாப் பயங்கெழு வீதியும்"[40]

என்ற பாடலில் இடம்பெற்றுள்ளது.

நெய்தல் நில மக்கள்

மீன் பிடிப்பதே இவர்கள் செய்யும் தொழிலாகும். கரையோரங்களில் இவர்கள் வாழ்ந்த குடியிருப்புகள் பட்டினம் எனப்படும்: சிறு குடியிருப்புகள் பாக்கம் எனப்படும். குளிர்ச்சி பொருந்திய நீரையுடைப் பட்டினம் என்று சிறுபாணாற்றுப்படை கூறும். கள்ளாகிய உணவினையருந்தும் குடிகளைக் கொண்ட பாக்கம் என மதுரைக்காஞ்சியும், செருக்கினையுடைய பல குடி எழுந்திருத்தற்குக் காரணமான பகையை அறியாத பாக்கம் எனப் பட்டினப்பாலையும், துறைக்கு அணித்தாயுள்ள பாக்கம் என நற்றிணையும் செம்படவர் ஊராகிய பாக்கத்தைச் சிறப்பித்துக் கூறும்.

"பனிநீர்ப் படுவிற் பட்டினம்" [41]

"கட்கொண்டிக் குடிப்பாக்கத்து"[42]

"விலங்குபதை யல்லது விலங்குகை யறியாக்
கொழும்பல்குடிச் கொழும்பாக்கத்து"[43]

"துறைநணி யிருந்த பாக்கமும்"[44]

பட்டினம் என்னுஞ்சொல் இப்பொழுது வழக்கொழிந்துவிட்டது எனலாம். சென்னைப்பட்டணம் என்பதிற்போலப் பட்டணம் என்ற சொல்லே பெயரும் நகரங்களைக் குறிக்க இப்பொழுது வழங்கும்.

குடியிருப்புக்களே இவ்வாறு பெரும்பட்டணங்களாகச் சிறந்திருத்தல் வேண்டும். இதற்கு அச்சிறு நகரங்களில் வணிகம் பெருகியமையை ஒரு காரணமாகக் கூறலாம். இக்காலத்திலேயும் கரையோரங்களிலுள்ள நகரங்களே பட்டணம் என வழங்கும். விசாகப்பட்டணம், நாகப்பட்டணம் என்ற இடங்களின் பெயர்கள் கவனிக்கத்தக்கன. உள்நாட்டு நகரங்களாகிய தஞ்சாவூர் முதலியனவே ஊர் என்ற சொல்லை இறுதியாக உடையன. தொடக்கத்தில் செம்படவர் நகரங்களாக இருந்தனவென்பதும், ஊர் என்று முடிவனத் தொழிலிற் சிறந்த நகரங்களாக இருந்தனவென்பதும் புலனாகும்.

நெய்தல் நிலத்து மக்களை நுளையர், பரதவர், வலைஞர் எனப் பலவாறு அழைப்பர். பெரிய தோளினையும் சந்திரன் விரும்புவதற்குக் காரணமான மறுவற்ற அமைதி பொருந்திய முகத்தினையும், முனையினை உடைத்தாகிய வேல் போலும் பார்வையினையும் உடைய நுளைமகளைப்பற்றிச் சிறுபாணாற்றுப் படையிலிருந்து அறியலாம்.

"மதியேகறூஉமாசறு திருமுகத்து
நுதிவே னுக்கினுளை மகள்"[45]

நுளையர் என்ற சொல்லின் அடிப்பொருள் தெரியவில்லை. இ.ஃது இப்பொழுது 'குறைந்த' 'இழிவான' என்ற கருத்துக்களில் வழங்கும். பரதவர் என்ற சொல் 'தொகுதி' 'பரந்த' என்ற பொருள்களையுடைய பரப்பு என்னுஞ் சொல்லுடன்

தொடர்புடையதாக இருக்கலாம். கடலிற் செல்வோர் என அதற்குப் பொருள் கூறலாம். வளைந்த திமிலைக்கொண்டு கடலிலே செல்லும் பரதவர் நெடுங்கால் மாடங்களில் விடியற் காலத்தும் அவியாது விளங்கும் விளக்குகளைப் பார்ப்பரெனப் பட்டினப்பாலை கூறும்.

"நெடுங்கான் பரதவர் குரூஉச்சுட ரெண்ணவும்
கொடுந்தமிற்கு"[46]

தெளிந்த கடற்றிரையின் மேலே பாயும் திண்ணிய திமிலையுடைய வலிய பரதவனனெப் புறநானூறு பாடும்.

"தெண்கடற்றிரை மிசைப்பாயுந்து திண்டிமில் வன்பரதவர்"[47]

கொல்லுந் தொழிலிற் பொலிவு பெற்ற கூரிய முகத்தையுடைய எறிந்துகொல்லும் எறி உளியையும், வேகம் கொணட வளைந்த மீன் படகையும் உடைய பதவரைப் பற்றிக் குறுந்தொகையும் கூறும்.

"கொல்வினைப் பொலிந்த கூர்வா யெறியுளி முகம்பட
மடுத்த முளிவெதிர் நோன்காழ் தாங்கரு நீர்ச்சுரத்
தெறிந்து வாங்குவிசைக் கொடுந்திமிற் பரதவர்"[48]

வலைகொண்டு மீன் பிடிப்போர் வலைஞர் எனப்படுவர். தான் பிடித்த மீனை விற்கும் வலைஞனைப்பற்றி மதுரைக் காஞ்சி மூலம் அறியலாம்.

"வள்ளை நீக்கி வயமீன் முகந்து
கொள்ளை சாற்றிய கொடுமுடி வலைஞர்"[49]

மீன்புரளும் முற்றத்தையுடைய வலைஞரைப் பற்றிப் பட்டினப் பாலை பாடும்.

"வலைஞர் முன்றின் மீன்பிறழவும்"[50]

மீன் பிடிப்போர் இப்பொழுது கரையர் எனப்படுவர். (கடற்கரையோரத்தில் வாழ்பவர்). அவர்களின் தொழிலில் உயிர் நீக்கம் நிகழ்வதால் அவர்கள் பிற்காலத்தில் குறைந்த சாதியினரெனக் கருதப்பட்டனர்.

மீன் பிடிப்போருடைய குடிசைகள் பின்வருமாறு பெரும்பாணுற்றுப்படையிற் சித்திரிக்கப்படும். வஞ்சி மரத்தின் கொப்புகளாலும் வெண் காஞ்சியின் கொப்புகளாலும் குறுகிய குடிசைகள் கட்டப்பட்டிருக்கின்றன. வரிச்சு தாழை நாராற் கட்டப்பட்டு, ஒழுங்காக உள்ளன. இக்குடிசைகள் தருப்பைப் புல்லினால் வேயப்பட்டவை. சுரைக்காய் முதலியவற்றின் கொடி தவழும் மணற் பரப்பு பினையும் வளைந்த புன்னையின்று கொப்பினைக் கால்களாகவும் கொண்ட குடிசைகளின் முற்றத்தே மீன் கூடைகள் இருக்கும். இவ்விடத்தில் இளையவரும் முதியவரும் சுற்றத்துடன் கூடியிருப்பர்.

வலைஞர் இல்லத்திலே தங்கும் விருந்தினர் பாம்பு உறையும் புற்றின்கண் கிடக்கும் புற்றாம் பழஞ் சோற்றையொக்கும் நல்ல நென்முளையின் மா கலக்கப்பெற்ற குற்றாத கொழியலரிசிக் கூழைப் பெறுவர். அக்கூழ், அகன்ற வாயையுடைய தட்டுப் பிழாவிலே உர ஆற்றப்பட்டது. விரலாலே அலைத்துப் பின்னர் இரண்டு பகலும் இரண்டு இரவும் இனிமை பிறக்கும்படி புளிக்க வைக்கப்பெற்ற கள்ளையும் பெறுவர். இவற்றுடன் புலராத மீன்பொரியலையும் பெறுவர்''

வணிகம்

ஒரு நாட்டின் தொழில்களிலே உழவும் வணிகமுமே தலை சிறந்தன என்பது அறிஞர் கொள்கை. ஒரு நாட்டின் மேம்பாட்டுக்கு இவ்விரு தொழில்களும் ஒருங்கு செழித்திருந்தல் வேண்டும். தமிழகமும் சங்ககாலத்தில் இவ்விரு தொழிலையும் குறைவறப் பெற்றிருந்தது. மதுரைக் காஞ்சியில்.

வியன்மேவன் விழுச்செல்வத்து
இருவகையா னிசைசான்ற
சிறுகுடிப் பெருந்ததொழுவர்
குடிகெழீஇய நானிலவரொடு

என வரும் அடிகளாலும் அப்பகுதிக்கு ஆசிரியர் நச்சினார்க்கினியர் ''உலகத்துத் தொழில்களில் மேலாகச் சொல்லும் உழவு வாணிகம் என்கின்ற இரண்டு கூற்றாலே அகலம் பொருந்துதலையுடைய சீரிய செல்வத்தாலே புகழ் நிறைந்த குடிமக்கள் பொருந்தின நான்கு நிலத்து வாழ்வாருடனே'' எனக் கூறும் உரையாலும் தமிழ்நாட்டில் இவ்விரு தொழிலும் பெற்றிருந்த செல்வாக்குப் பெறப்படும்.

பண்டைக்காலத்திலே வணிகத்தின் பெருமையை நன்குணர்ந்து அதனைத் தம் தொழிலாகக் கொண்டு வாழ்ந்த புலவர் பலர் உளர். கூல வாணிகன் சீத்தலைச் சாத்தனார், நெல் புல் வரகு முதலிய தானியங்களை விற்ற கூல வணிகனவார். அறுவை வணிகன் இளவேட்டனார் என்பவர் ஆடை வியாபாரி. பலசரக்கு வியாபாரம் செய்தவர் மதுரைப் பண்ட வாணிகன் இளநத்தனார் என்பவர். மதுரைப் பெருங் கொல்லனார், உறையூர் இளம்பொன் வாணிகன் சாத்தங் கொற்றனார் முதலியோரின் பெயரும் மேற்கூறிய பொருளை வலியுறுத்தும்.

பரதவர் சமுதாயம்

ஏறக்குறைய முத்துக்குளித்துறையின் அனைத்து கிராமங்களிலும் பரதவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருசில கிராமங்களில் மறவர்களும், கரையர்களும் இருந்தனர். கரையர்கள் மீன் தொழிலில் ஈடுபடுபட்டனர். இவ்வினம் பரதவர்களைவிடச் சமுதாய அந்தஸ்தில் குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர். சிங்கித்துறை, கொம்புத்துறை மற்றும் முத்துக்குளித்துறையின் வடபகுதியில் இவர்கள் குடியிருந்தனர். கன்னியாகுமரியிலும் அதற்கு மேற்கிலும் முக்குவர்கள் காணப்பட்டனர். முத்துக்குளித்துறையின்

கடைக்கோடியில் வாழ்ந்த மீனவர் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள். பரதவர், கரையர், முக்குவர் ஆகிய மூவரும் முத்து, சங்குக் குளிப்பதில் ஈடுபட்டிருந்தனர்.

பரதவர்கள் நேர்மையானவர்கள், நம்பிக்கைக்குரியவர்கள், நட்புடன் பழகுவதில் சுமாராகவே காணப்பட்டார்கள். மற்றவர்களைக் கைகூப்பி வாழ்த்தி வரவேற்பர் என்று ஜோசப் விக்கி கூறுகின்றார். இருண்ட பழுப்பு நிறத்தைக் கொண்ட இவர்கள் இடையில் ஒரு சிறிய துண்டையும், தலையில் தலைப்பாகையையும் அணிந்திருந்தார்கள். ஆண்கள் தம் இனத்தின் பெருமைக்கு அடையாளமாகக் காதில் முத்துக்கள் பதித்த தங்கக் கடுக்கண் அணியும் வழக்கம் கொண்டிருந்தார்கள் கன்னியாகுமரி கடற்கரையில் வாழ்ந்த மீனவர்கள் அறவே கல்வியறிவு அற்றவர்களாய் இருந்தனர்.[51]

பொதுவாகவே பரதவர்களிடமும் முக்குவர்களிடமும் கொடிய வறுமை நிலவியது. மேலும் அவர்களிடம் குடிப்பழக்கம் அதிகம் இருந்தது. கல்வியறிவு ஒரு துளியும் இல்லாமல் இருந்தது.[52]

செல்வந்தர்களாக விளங்கிய பரதவர்களிடம் அடிமைகள் பணிபுரிந்தனர். மேலும் அடிமைகள் கோவில்களிலும் வீடுகளிலும் வேலை செய்தனர். சதிப்பழக்கம் நிலவியது. சதியை நிறைவேற்ற மறுத்த பெண்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டனர். சதியை எதிர்த்தவர்கள் கொல்லப்பட்டனர். அதை மேற்கொண்டோர் புகழ்ச்சிக்கு உரியவராயினர். சதியை நிறைவேற்றுவோர் மறுமையில் தங்கள் கணவரோடு இன்புற்றிருப்பர் என்ற நம்பிக்கை மக்களிடம் நிலவியது. மூடப்பழக்க வழக்கங்கள் மலிந்து காணப்பட்டன. குறிசொல்வோர் இம்மக்களுடைய வாழ்வில் மிக முக்கியப் பங்கை வகித்தனர்.[53]

பரதவர்களின் சமயம்

பரதவர்கள் சைவசமயத்தைப் பின்பற்றினார்கள். இவர்கள் வாழ்ந்த அனைத்து ஊர்களிலும் இந்துக் கோவில்கள் இருந்தபோதிலும், திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி முருகன் கோவிலின் மீது பரதவர்களுக்கு அதிக பக்தியும் பற்றும் இருந்தன. ஏனெனில் முருகனின் இரண்டாவது மனைவியான தெய்வானை ஒரு பரதவப் பெண் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது. திருச்செந்தூர் கோவிலில் நடைபெறும் பெரிய திருவிழாவில் பரதவரின் ஏழு ஊர்களைச் (மணப்பாடு, ஆலந்தலை, வீரபாண்டியன்பட்டணம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பார், வேம்பார்) சார்ந்த மக்கள் முக்கியப் பங்கினை வகித்தனர். பரதவ சாதித்தலைவரின் வீடு வீரபாண்டியன்பட்டணத்தில் அமைந்திருந்தது. திருச்செந்தூர் தேரின் முதல் வடத்தை இவர்தான் இழுப்பதுண்டு. வீரபாண்டியன்பட்டணத்திலுள்ள செல்வந்தர்கள் பல்லக்குகளில் வலம் வந்ததாகக் கூறப்படுகிறது.

முத்துக்குளித்துறை கிராமங்களில் தீய ஆவியின் உதவியுடன் குறிசொல்பவர்கள் நிறைய பேர் இருந்தனர். எதற்கும் மந்திரவாதிகளின் உதவியை

நாடும் பரிதாபமான பரதவர்கள் நிறைபேர் இருந்தனர். முத்துக்குளிக்கும்போது சுறாமீன்களிடமிருந்து மீனவர்களைக் காப்பாற்ற பிராமணர்கள் மந்திரங்கள் ஓதினர்.[54]

மந்திரங்கள் ஓதி சுறா மீன்களை விரட்டுபவர்கள் மீதும், கடலைக் கட்டுபவர்கள் மீதும் முத்துக்குளிப்பவர்கள் அதிக நம்பிக்கைக் கொண்டிருந்தனர். இவர்கள் ஓதும் மந்திரங்கள்தான் தங்களுடைய உயிரைக் காப்பாற்றுவதாக இம்மீனவர்கள் நம்பினர்.

பரதவர்களின் அரசியல்

ஒவ்வொரு கிராமமும் தன்னுடைய நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டது. கிராம அதிகாரம் முழுவதும் பட்டங்கட்டிகள் கையில் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள செல்வாக்கு மிகுந்த நபர்களிடமிருந்து பட்டங்கட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். பட்டங்கட்டிகளின் தலைவர் பட்டங்கட்டிமார் என்று அழைக்கப்பட்டார். பரதவர்கள் பொதுவாக ஏழு முக்கிய ஊர்களிலும் வாழ்ந்து வந்தனர். இவர்களின் தலைவரான சாதித்தலைவர் ஏழு துறைமுகங்களுக்கும் தலைவர் என்றழைக்கப்பட்டார்.[55]

பரதவர்களின் பொருளாதாரம்

ஜேம்ஸ் ஹார்னெல் கூறுவார்: போர்ச்சுக்கீசியர்கள் கன்னியாகுமரியைச் சுற்றிவந்தபோது மன்னார் வளைகுடாவில் உள்ள முத்துக்குளித்துறையில் பரதவர்கள் என்றழைக்கப்பட்ட ஒரு இனத்தவர் வசமிருந்தன. இவர்கள் காலங்காலமாக இத்தொழிலில் ஈடுபட்டிருந்தனர்.[56]

மீன்பிடித்தல், முத்துக்குளித்தல், உப்பு உற்பத்தி செய்தல் போன்ற முக்கிய தொழில்களைப் பரதவர்கள் தம் கைவசம் மட்டுமே வைத்திருந்தனர். இத்தகைய தொழில்கள் குடும்பத்திலுள்ள அனைவராலும் இணைந்து செய்யப்பட்டன. மற்றவர்களை இவ்வேலைக்குக் கூலி கொடுத்து அமர்த்தும் பழக்கம் இவர்களிடம் இல்லை. பெரியவர்களும் இளைஞர்களுமாக அனைவரும் மேற்கூறிய தொழில்களைச் செய்துவந்தனர். தொழில்நுட்பமுறை தலைமுறை தலைமுறையாகப் பரிமாறப்பட்டது. எனவே உற்பத்தி முறைகள் இவர்களிடமிருந்து மற்ற இனத்தவருக்குப் பகிர்ந்து கொள்ளப்படவில்லை. இவர்கள் பொருட்களை அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தல், அந்நாட்டுப் பொருட்களை இறக்குமதி செய்தல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தனர். ஆழ்கடலில் நங்கூரம் பாய்ச்சி நின்ற கப்பல்களிலிருந்து சரக்குகளைக் கையாடல் முறையில் தேர்ச்சி பெற்ற படகுகளை ஓட்டும் திறமை பெற்றவர்களும் இவர்களில் இருந்தனர்.

மீனவர்களாகவும், கடல்மார்க்க வணிகர்களாகவும் விளங்கிய பரதவர்களை தங்களை ஒரு இனக்குழுக்களாகக் கட்டமைத்துக் கொண்டனர். அவர்களுடைய சமுதாயம் சற்றே வித்தியாசமான குணாதியங்களைக் கொண்டிருந்தது. இவர்களைப்

பற்றிய ஒரு கூற்று பின்வருமாறு: மிகவும் செல்வம் உடையவர்கள், படகு சொந்தக்காரர்கள் என இரண்டு குழுக்கள் இவர்களிடையே இருந்தன. இருதரப்பினருக்கும் இடையே திருமண உறவுகள் அதாவது கொடுக்கல் வாங்கல் இல்லாமல் இருந்தன.[57]

முத்துச்சிப்பிகள் அதிகம் காணப்பட்ட பகுதியாகிய வேம்பாரிலிருந்து உவரி வரைக்கும் உள்ள மீனவர்களுக்குள் அதிக நெருங்கிய தொடர்புகள் இருந்தன. உவரியிலிருந்து கன்னியாகுமரி வரைக்கும் உள்ள மக்கள் தங்களுக்குள் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டனர். பொருளாதாரத்திலும் பிந்தைய குழுவினர் சற்று பின்தங்கியவர்களாக் காணப்பட்டனர்.

முத்துக்குளித்துறை மீனவர்கள் கடல் வாணிகம் சார்ந்த அனைத்து தொழில்நுட்ப அறிவுள்ளவர்களாகத் திகழ்ந்ததால் மற்றவர்களின் கவனத்தை அதிகம் பெற்றனர். பெரிய அளவில் வியாபாரம் நடக்கும் மார்க்கங்களின் மையப்பகுதியில் இம்மக்கள் வாழ்ந்து வந்தனர். இந்துமகா சமுத்திரத்தில் அமைந்து தென்னிந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் இடத்தில் முத்துக்குளித்துறை அமைந்திருந்ததால் முத்துக்குளித்தலும் முத்து வணிகமும் இங்குக் கைகோத்துச் சென்றன.

மணப்பாட்டிலிருந்து தூத்துக்குடி வரைக்கும் அல்ஜோ.்பர் என்ற ஒளி பொருந்திய சிறிய முத்துக்கள் கிடைத்தன. இவைகள் விலைமதிப்புள்ளதாகக் கருதப்பட்டன. இங்குள்ள மக்கள் பொருளாதாரத்தில் மற்றவர்களைவிட உயர்ந்து விளங்கினர்.

முத்துக்களை விற்கும் உரிமையைப் பரதவர்கள் தங்களை ஆண்ட அரசனிடமிருந்து பெற்றனர். முத்துக்களை விற்க ஒரு சந்தை நாள் அறிவிக்கப்படும். இந்தியா மற்றும் பல அயல் நாடுகளிலிருந்தும் வியாபாரிகள் இங்கு வந்து கூடுவர். மண்ணின் மக்கள், வருவோர் அனைவருக்கும் வேண்டிய வசதிகளைச் செய்து தருவர். சந்தை கூடும் நாளில் ஏற்படும் மோதல்களைத் தவிர்க்க, அரசன் தரப்பில் காப்பாளர்களும் நீதிபதிகளும் அமர்த்தப்படுவர். பட்டங்கட்டிமாரும் தங்கள் தரப்பிலிருந்து ஆயுதங்கள் தாங்கிய படைவீரர்களைக் கொண்டுவருவர்.

முத்துக்குளிப்பினைத் தொடங்கி வைப்பதும் பட்டங்கட்டிமார்கள்தான். ஒருமாதம் கழித்து அதை முடித்து வைப்பவர்களும் அவர்களே. வணிகர்கள் தங்கள் பொருட்களை ஏற்றிக்கொண்டு கடல்வழி பயணத்தை மேற்கொள்வர். தற்காலிகக் குடிசைகள், முகாம்கள் கலைக்கப்படும் அல்லது எரிக்கப்படும். வியாபாரிகள் சென்றபின் முத்துச்சலாபம் நடந்த இடம் வெறுமனே காட்சியளிக்கும். அப்பகுதியில் வாழும் மக்கள் தப்பித்தவறி ஏதாவது முத்துக்கள் கிடைக்காதா என மண்ணை அலசுவர். முத்துக்குளிப்பின்போது நோயினால் அல்லது சுறாமீன்களால் கொல்லப்பட்ட தம் தந்தையரை, கணவர்களை, சகோதரர்களை, மகன்களை நினைத்து பெண்கள் எழுப்பும் அவல ஓலம் கடற்கரைகளில் கேட்கும்.[58]

பரதவர்கள் தங்கள் படகுகள் மூலம் பொருட்களைப் பிற இடங்களுக்கும் ஏற்றிச் சென்றனர். இவர்கள் பெரிய துறைமுகங்களிலிருந்து வரும் பொருட்களை இறக்கும் பணியிலும் ஈடுபட்டனர். நாளடைவில் கப்பல் வழி வணிகம் செய்ய முற்பட்டனர். கோரமண்டலக் கடற்கரை, மதுரை, மலபார்கரை, இலங்கை ஆகிய இடங்களில் வணிகம் தளைத்தோங்க பரதவர்கள் உறுதுணையாக இருந்தனர்.

போர்ச்சுக்கீசியர் முத்துக்குளித்துறையில் இறங்கியபோது கடல் சார்ந்த அனைத்து தொழில்களிலும் பரதவர்கள் கைதேர்ந்தவர்களாக விளங்கியதைக் கண்டனர். பரதவர்கள் உள்நாட்டு வியாபாரக் குழுக்களோடும், முஸ்லீம்களோடும் இந்துமாக்கடலில் வணிகம் நடத்தி வந்தாலும், முஸ்லீம்களின் பலம் ஓங்கி வளர்ந்து வந்ததினால் அவர்களோடு போராடுவதையும் போர்ச்சுக்கீசியர் கண்ணுற்றனர்.

பரதவர் – அராபிய முஸ்லீம்களின் மோதல்

இந்துமகா சமுத்திரத்தில் முதன்முறையாகக் கடல் பயணத்தை அராபியர்கள் தொடங்கி வைத்தாலும் அவர்களுக்கு முன்பே முத்துக்குளித்துறையில் பரதவர்கள் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியதை வரலாறு சுட்டிக்காட்டுகிறது. ஆனால் பரதவர்கள் இதைத் திட்டமிட்டு செயல்படுத்தவில்லை. வணிக ஒப்பந்தம், வணிக பிரதிநிதிகளை வெளிநாட்டுக்கு அனுப்புதல், கடல் எல்கையை நிர்ணயம் செய்தல், பண்டமாற்றம், துறைமுகத்தொடர்பு ஆகிய அனைத்திலும் ஐரோப்பியர்களுக்கு முன்னோடிகளாக இருந்தவர்கள் முஸ்லீம்கள் என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியதொன்றாகும்.

மேற்குக்கரையில் குடியேறிய அராபியர்கள் அங்குள்ள பெண்களை மதமாற்றித் திருமணம் புரிந்தனர். இவர்கள் ஏழாம் நூற்றாண்டில் பழையகாயலிலும் அதன்பின் காயல்பட்டினத்திலும் குடியேற ஆரம்பித்தனர். இவர்கள் முத்து, குதிரை வியாபாரத்தில் ஈடுபட்டனர். மேலும் திருமணம், சமயமாற்றம் வழி தமிழ் முஸ்லீம் குழுக்களைக் கட்டி எழுப்பினர். இக்காலக்கட்டத்தில்தான் அராபிய முஸ்லீம்களால் பரதவர்கள் முத்துக்குளித்துறையிலிருந்து அந்நியராக்கப்பட்டு கடல் பொருளாதாரத்தின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டனர். காலங்காலமாக முத்துக்குளித்தலில் ஏகபோக உரிமையை அனுபவித்துவந்த பரதவர்களைப் புறந்தள்ளிவிட்டு நேற்று வந்த முஸ்லீம்கள் மன்னார் வளைகுடாவின் முத்துக்கள் நிறைந்த இடங்களை ஆக்கிரமிப்பு செய்தனர்.[59]

பதினான்காம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஏற்பட்ட முதல் முஸ்லீம் படையெடுப்பிற்குப்பின் தெற்குக்கரையில் கூட்டங்கூட்டமாக முஸ்லீம்கள் காணப்பட்டனர். இவர்கள் மேற்கு, கிழக்கு கடற்கரையில் வணிகத்தில் சிறந்து விளங்கியதால் கடலில் அவர்களை யாரும் எதிர்க்க முடியாத ஓர் இனத்தவராயினர். இவர்கள் பரதவர்களைக் கொடுமைப்படுத்த ஆரம்பித்தனர். முஸ்லீம்களின் உத்தரவின்றி முத்துக்குளித்துறையின் சொந்த மக்கள் முத்துக்குளிக்க முடியாத

சூழல் ஏற்பட்டது. முத்துக்குளித்தல், முத்து வணிகம் சார்ந்த அனைத்திலும் முஸ்லீம்கள் ஏகபோக உரிமையை நிலைநாட்டினர். பரதவர்கள், முஸ்லீம்களை அத்துமீறுபவர்களாகவும் வன்முறையில் ஈடுபடுபவர்களாகவும் கருதியதால் தாங்களும் ஆயுதங்களைக் கையில் எடுத்துப் போராடத் துணிந்தனர்.

வடஇந்தியாவிலும் தென்இந்தியாவிலும் கொடிகட்டிப்பறந்த முஸ்லீம்களுக்குக் கோழிக்கோடு சாமரினுடைய (அரசர்) ஆதரவும் கிடைத்தது. இவர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபட்டாலும்கூடப் பரதவர்களை ஒடுக்குவதிலே முனைப்பாயிருந்தனர். பரதவர்கள் பதிலடி கொடுத்தாலும்கூட எதிரிகளின் பலத்திற்கு இவர்களால் ஈடுகட்ட முடியவில்லை.

பரதவர்களைப் போலவே முஸ்லீம்களுக்கும் முத்துக்குளித்துறையில் ஒரு புகழ்செறிந்த வரலாறு உண்டு. ஒரு கட்டத்தில் இம்முஸ்லீம்கள் பரதவர்களையும் மிஞ்சி பொருளாதார பலத்துடன் காணப்பட்டார்கள்.

ரோச் என்பவர் இதற்கு ஒருசில காரணங்களைக் கூறுகிறார். உள்நாட்டு முஸ்லீம்கள் அல்லது காயலார்கள் முத்துக்குளித்தல் தொழில்நுட்பங்களோடு, கடல் வாணிகப் போக்குவரத்துத்துறையிலும் கைதேர்ந்தவர்களாய் இருந்தனர். இதனால்தான் இந்த ஒரு குழு மட்டுமே பரதவர்களைப் பொருளாதார ரீதியாக எதிர்த்தது. பரதவர்களின் வாழ்வாதாரங்களுக்கு ஆபத்தைக் கொடுத்தது. இது பரதவர் என்ற இனத்திற்குப் பெரும் இழப்பாக வந்து நின்றது, இதனால் ஒரு குழு மற்றொரு குழுவை இக்கடற்கரைப் பகுதியிலிருந்து விரட்டிவிட முயற்சி செய்தது.

பரதவர் முஸ்லீம்களின் போராட்டம் முத்து, சங்குத் துறைகளை மையமாகக் கொண்டு நடைபெற்றது. முத்துக்களும், சங்குகளும் விலைமதிப்புள்ள பொருட்களாக இருந்ததால் இவைகளுக்கு வங்காளம், சீனா நாடுகளின் சந்தைகளில் அதிக வரவேற்பு இருந்தன. இருதரப்பினருக்கும் இடையே நடந்த சண்டைகளுக்கும் மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. முத்துக்குளித்துறையில் ஆதிக்கம் செலுத்துவோர் பாக் ஜல சந்தி வழியாக இலங்கையிலும் ஆதிக்கம் செலுத்த முடியும் என்பதை இரு குழுக்களும் உணரத் தவறவில்லை.[60]

பரதவர்களுக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் தொடக்கத்தில் தொழில் சார்ந்த நெருங்கிய உறவுகள் இருந்தன. பின்னால் ஏற்பட்ட விரிசல்கள் மூன்று நூற்றாண்டுகளாக வளர்ந்துகொண்டு வந்தன. இதற்கு இரண்டு காரணங்கள் சுட்டிக்காட்டப்படுகின்றன; ஒன்று: ஒருசில பரதவர்கள் காயல்பட்டினத்திலுள்ள முஸ்லீம்களைத் திருமணம் புரிந்தது. மற்றொன்று பரதவர்கள் இஸ்லாம் சமயத்தைத் தழுவியது.

பரதவர்கள் இக்காலகட்டத்தில் அனுபவித்த கொடுமைகள் அவர்களுக்குப் புதிதல்ல. போர்ச்சுக்கீசியர் வருமுன் உள்நாட்டு அரசர்கள் முத்துக்குளித்துறையை ஆண்டபோது மீனவர்களையும், முத்துக்குளிப்பவர்களையும் வருமானத்தைப் பெற்றுத்

தரும் கருவிகளாகவே கருதி அடக்கி வந்தனர். இதுமட்டுமல்ல; ஒரு வலிமைபடைத்த முஸ்லீம் வணிக உலகத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கத்துடன் மலபார் கடற்கரையை ஆண்ட மன்னர்கள், பணம் படைத்த வியாபாரிகளைத் தூண்டிவிட்டு பரதவர்களை மனம் மாற்றவும் விழைந்தனர்.

பார்போஸா என்ற கடல் பயணி அன்றைய பரதவர்களின் நிலைமையைப் பின்வருமாறு விளக்குகிறார்: பரதவர்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் முஸ்லீம்களான தனது படகுகளின் உரிமையாளர்களுக்கென முத்துக்குளிப்பர். மேலும் முத்துக்குளிக்கும் காலம் முடிவடையும் காலத்தில் கடைசி ஒருவாரம் முழுவதும் பழையகாயலில் வசிக்கும் முஸ்லீம்களின் தலைவனுக்கென்று முத்துக்குளிக்க வேண்டும். முஸ்லீம்கள், படகுகளின் சொந்தக்காரர்களாகும் அளவுக்கு செல்வத்திலும், பலத்திலும் மேலோங்கி நின்றார்கள்.[61]

விஜயநகரப் பேரரசு தமிழகத்தின் தென்கோடியில் அமைந்துள்ள பகுதியைத் தங்களின் முழு ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயற்சிகள் எடுக்கவில்லை. இம்மன்னர்கள், வடக்கே தக்காணத்தில் உள்ள சுல்தான்களுக்கும் தெற்கே மதுரை சுல்தான் ஆட்சிக்குமிடையே அகப்பட்டுக் கொண்டு தத்தளித்துக் கொண்டிருந்தனர்.

முத்துக்குளித்துறை எல்லா வகையான கடல் வளங்களால் நிறைந்திருந்த போதிலும் விஜயநகர மன்னர்கள், அவர்களின் ஆளுநர்கள். நாயக்கர்கள் இப்பகுதியின்மீது ஆதிக்கம் செலுத்தத் தவறினர். ஒருவேளை வேதவிதிகளை முழுமையாகக் கடைப்பிடித்ததால் கடல் கடந்து வாணிகம் செய்வதைத் தீட்டுக்குரியதாகவும் இவர்கள் கருதி இருக்கலாம்.

எனவே, முத்துக்குளித்துறையில் முஸலீம்களின் அடக்குமுறையை ஒடுக்க எந்தச் சக்தியும் இல்லாமற் போனது. இவர்கள் நாளுக்குநாள் தங்களின் பொருளாதாரப் பலத்தைப் பெருக்கிக்கொண்டே போயினர். பரதவர்கள் கடற்கரையின் விளிம்பிற்கே தள்ளப்பட்டனர். இறுதியில் முத்துக்குளித்துறையில் எந்தவிதமான சொந்தமும் கொண்டாட முடியாத ஒரு பரிதாப நிலையில் இவர்கள் இருந்தனர்.

இக்கடல் பரப்பைக் கூறுபோட்டு ஆட்சி செய்துவந்த குறுநில மன்னர்களும் பெரும்பாலும் பணம்படைத்த முஸ்லீம்களுக்கே ஆதரவாக இருந்தனர். இம்மன்னர்கள் முஸ்லீம் வியாபாரிகளோடு நல்ல தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டனர்.

முஸ்லீம்களின் சிறந்த இராணுவம் மற்றும் கடல் ஆதிக்கத்திற்கு முன் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இருந்த பரதவர்கள் வெளிநாட்டவரின் உதவியை நாட முற்பட்டனர். அயலாரின் உதவி தங்களுக்குக் கிடையாது என்று உணர்ந்த இவர்கள் தங்களது பொருளாதாரம் முழுவதுமாக அழிந்துவிட விரும்பில்லை. கடல் சார்ந்த தொழிலில் கொடிகட்டிப் பறக்கும் முஸ்லீம்களுக்கு இணையாகத் திகழ்ந்த போர்ச்சுக்கீசியரின் உதவியை நாட முடிவெடுத்தனர்.

இந்தக் காலகட்டத்தில் உலகச் சூழல் எவ்வாறு இருந்தது என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். கி.பி.1453 ஆம் ஆண்டு கான்ஸ்டாண்டிநேபிள் வீழ்ச்சியுற்றாலும் சிலுவைக்கும், பிறைக்கும் இடையே நிலவிய பதற்றம் நின்றபாடில்லை. இதே நிலைமை இந்துமகாக் கடலிலும் காணப்பட்டது. எங்கெங்கு போர்ச்சுக்கீசியர் முஸ்லீம்களைச் சந்தித்தார்களோ அங்கெல்லாம் அவர்களுக்குத் தாங்கள் வெறுக்கும் ஸ்பெயின் நாட்டு முஸ்லீம்களே நினைவுக்கு வந்தார்கள். எனவே இவர்கள் முத்துக்குளித்துறையில் இருக்கும் முஸ்லீம்களை ஒடுக்க நினைத்தனர். அதற்கான ஒரு தருணத்தை எதிர்பார்த்து இருந்தனர்.

முத்துக்குளித்துறையில் ஒரு பெரிய இனத்தவர் முஸ்லீம்களின் பிடியினின்று விடுதலைபெறத் துடித்ததையும் போர்ச்சுக்கீசியர்கள் கண்டனர். தங்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறும் காலம் கனிந்துவரக் காத்திருந்தனர்.

"வாசனைப் பொருட்களும், கிறிஸ்தவர்களும்" என்ற இரு குறிக்கோள்களுடன் போர்ச்சுக்கீசியர்கள் மேற்குக்கரையில் தடம் பதித்தனர். கிழக்குக்கரையில் "முத்துக்களும் கிறிஸ்தவர்களும்" என்ற விருதுவாக்குடன் வலம் வந்தனர். வெகு சீக்கிரத்தில் முத்துக்குளித்துறையில் கால்பதித்த முதல் ஐரோப்பிய நாடு போர்ச்சுக்கல் என்ற பெயரையும் இது பெற்றது.[62]

உப்பு

ஆதிகாலத்திலிருந்தே மக்களால் உணவுக்கு சுவையூட்டுவதற்கு உப்பு பயன்பட்டு வந்தது. உணவுக்கு மட்டுமல்லாமல், நெய்தல் நிலத்துப் பரதவர்களுக்கு கருவாடு தயாரிப்பதற்கும் உப்பு மிகவும் அவசியமானதாக இருந்தது. எனவே அவர்கள் கடற்கரைகளில் உப்பளங்கள் அமைத்து, அதில் உப்பை விளைவித்தனர். கடற்கரைகளில் குறுக்கும் நெடுக்குமாகப் பாத்திகள் கட்டி, அதில் கடல்நீரைப் பாய்ச்சுவார்கள். அவ்வாறு பாய்ச்சப்பட்ட கடல்நீர், கடும்வெயில் ஆவியாகிப் போய், அந்தப் பாத்திகளில் உப்பு பூத்து நிற்கும். இதனைப் புலவர் உலோச்சனார் நற்றிணையில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"தூங்கல் அம்பித் தூவலஞ் சேர்ப்பின்
கடுவெயில் கொதித்த கல்விளை உப்பு"

மேலும் அதே புலவர், மற்றொரு பாடலில் ஊர் பிடித்து நிலத்தை உழாமல், நெய்தல் நிலத்துப் பரதவர்கள் உவர் நிலத்தின் உப்பு விளைவித்த படியால், அவர்களை "உழாஅ உழவர்" என்று நயம்படக் கூறுகிறார்.

"உவர் விளை உப்பின் உழாஅ உழவர்"[63]

சங்கு

சங்கு என்ற சொல்லுக்குத் தமிழ்ப் பெயர் வளை என்பதாகும். பழந்தமிழர் நாட்டின் மூன்று பகுதிகளிலும் கடல் சூழ்ந்திருந்தபடியால், அதிக அளவில் சங்குகள்

கிடைத்தன. இவைகளில் வலம்புரிச்சங்கு, இடம்புரிச்சங்கு என்று இருவகை உள்ளன. இவற்றில் வலம்புரிச்சங்கு மிகவும் அரிதாகவே கிடைக்கும். இதனால், இந்தச் சங்கின் விலை மிகவும் அதிகமாவே இருந்தது. கோவில்களில் பூசைக்குரிய பொருளாகவும், கோவில்களிலும் மற்றும் முக்கிய நிகழ்ச்சிகளின் போதும் வலம்புரிச்சங்கு ஊது கருவியாகப் பயன்பட்டு வந்தது.

நெய்தல் நிலத்துப் பரதவர் கடலில் முழ்கிச் சங்கு எடுத்து வரும்போது, சங்கு முழங்கி ஊருக்கு அறிவித்தாக அகநானூறு கூறுகிறது.

> ''இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
> வலம்புரி மூழ்கிய வான்திமில் பரதவர்
> ஒலிதலைப் பணிலம் ஆர்பக் கல்லெனக்
> கலிகெழுகை கொற்கை''[64]

சங்குகளை அறுத்து வளையல் செய்தனர். அக்காலத்தில் தமிழ் மகளிர் அனைவரும் சங்கு வளையல்கள் கையில் அணிந்திருந்தனர். பெண்கள் சங்கு வளைகளை அணிவது அக்காலத்திய சமுதாயத்தில் மிகவும் மங்கலமாக கருதப்பட்டது. அரண்மனையில் வாழ்ந்த அரசகுமாரிகள் முதல் குப்பங்களில் வாழ்ந்த பெண்கள் அனைவரும் சங்கு வளைகளை அணிந்து வந்தார்கள்.

கொற்கைக் கடலில் மட்டுமல்லாது, தென் தமிழ்நாட்டின் ஏனைய கடற்பகுதிகளிலும் சங்கு எடுக்கப்பட்டது. கடலில் இருந்து கொண்டு வரப்படும் சங்குகளை சிறு வாளினால் அறுத்து, அரத்தினால் அராவி அழகான வேலைப்பாடுகள் நிறைந்த வளையல்களைச் செய்தனர். கடலில் இருந்து சங்கு பிடித்து வருவதைக பொதுவாக சங்கு குளிப்பு என்றே சொல்வார்கள். இடம்புரிச் சங்கில் செய்த வளையல்களை சாதாரண நிலையில் உள்ள பெண்களும், விலையதிகமான வலம்புரிச் சங்கில் செய்த வளையல்களை அரசகுமாரிகளும், செல்வ மகளிரும் அணிந்து வந்தனர்.

சங்கு குளியர்கள், சங்குகளை சிறிய படகுகளில் நிரப்பி கரைக்கு கொண்டு வரும்போதே, அவற்றின் உட்புறத்திலுள்ள சதைப் பகுதியை வெளியே எடுத்து விடுவார்கள். இந்தச் சங்குக் கூட்டினுள் இருக்கும் பூச்சி முதுகெலும்பில்லாத பிராணி வகையைச் சார்ந்ததாகும். இந்தச் சதைப் பகுதியை சிறு சிறு துண்டுகளாக நறுக்கி வெயிலில் உலர்த்துவார்கள். இவ்வாறு உலர்த்தப்பட்ட துண்டுகள் 'சங்குச் சதை' என்றழைக்கப்பட்டது. இது வறுக்கப்பட்டு தொடுகறியாக உணவுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இது வெஞ்சனம் என்று அழைக்கப்பட்டது.

பாண்டியர்களும் பரதவர்களும்

சங்க இலக்கியங்களிலும் மேலைநாட்டு சரித்திர ஆசிரியர்களின் வரலாற்று ஏடுகளிலும் முத்துக்குளித்துறையைச் சார்ந்த பரதவர்களைப்பற்றிய குறிப்புகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. ஆனால் இடைப்பட்ட காலத்தில் அவர்களைப் பற்றிய

வரலாறு தெளிவாகத் தெரியவில்லையென்றாலும், அவர்கள் தங்களை பாண்டிய வம்சத்தினர் என்றும், தங்கள் முன்னோர்கள் பாண்டிய மன்னனின் கப்பற்படையை இயக்கி வந்துள்ளனர் என்று கூறுகின்றனர்.

மேலும் பாண்டிய நாட்டின் பொருளாதாரம், பரதவர்கள் செய்து வந்த கடற்தொழில்களான மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல், சங்கு குளித்தல், முத்துக் குளித்தல் போன்றவற்றின் மூலம் மிகவும் வலுவுள்ளதாக இருந்திருக்க வேண்டும். தாங்கள் கடலில் குளித்து எடுத்த முத்துக்களை விற்று அதற்கு மாற்றாக உலகின் தலை சிறந்த பொருட்களை ஈட்டியததால், பாண்டிய நாட்டின் உபகாரிகளாக அவர்கள் இருந்திருக்கிறார்கள். பாண்டிய நாட்டின் உட்பகுதியில் பஞ்சம் ஏற்படும் பொழுதெல்லாம், தாங்கள் பிடித்த மீன்களை நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் கொண்டு சென்று, ஆயிரக்கணக்கான குடும்பங்களைக் காப்பாற்றியவர்கள் இந்தப் பரதவர்கள்.

தென்தமிழ்நாட்டின் கடலோரக் கிராமங்கள் 'முத்துக்குளித்துறை' என்று அழைக்கப்பட்டது. இங்கு முத்துக் குளித்தல் நடைபெற்று வந்ததால் இந்தப்பகுதி முழுவதும் பொதுவாக முத்துக்குளித்துறை என்றே அழைக்கப்பட்டு வந்தது. முத்துக்குளித்துறை மக்களையும் மாலுமிகளையும் கொண்ட ஒரு சிறிய குடியரசாக இருந்திருக்க வேண்டும். இவர்களுக்கென்று இரு தலைவர் இருந்தார். அவரின் ஆலோசகராக ஒவ்வொரு முக்கிய கடற்கரை ஊர்களிலும் செயல்பட்டவர்கள் 'பட்டங்கட்டி' என்று அழைக்கப்பட்டார்.

இவர்கள் பாண்டிய மன்னிடம் தங்களது தலைவனது பிரதிநிதிகளாக இருந்தனர். நிர்வாகப் பொறுப்பை 'அடப்பன்' என்பவர் கவனித்து வந்தார். வரவு செலவுகளைக் கவனித்து வரி வசூலிப்பவராக 'கணக்குபிள்ளை' என்பவர் இருந்தார். ஒருநாட்டின் சுயாட்சியை அமைப்பதற்கான அனைத்து வசதிகளும் அவர்களிடம் இருந்தன என்றால் அது மிகையாகாது. சங்க இலக்கியங்களைப் படிக்கும் பொழுதெல்லாம் பரதவர்களைப் பற்றிய குறிப்புகள் அதிகம் காணப்பெறுகின்றன. பாண்டிய மன்னர் பலமுறை இவர்களோடு போரிட்டுள்ளனர் என்ற கூறுகிறது.

பாண்டியர் - பரதவர்கள் போர்

அரிகேசரி என்ற பாண்டிய மன்னன் கி.பி.640-ம் ஆண்டு பட்டத்துக்கு வந்தான். இவனுக்கு மாறவர்மன் என்ற மற்றொரு பெயரும் உண்டு. இவனது ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு உயர்நிலையில் இருந்தது. இந்த அரசன் பரதவர்களோடு போரிட்டு அடக்கினான் என்று கேள்விக்குடி சாசனம் தெரிவிக்கிறது.

அரிகேசரி மன்னன், பரவர்களோடு போரிட்டு அவர்களைப் பாழ்படுத்தியிருக்க வேண்டும் என்று தெரிகிறது. அரிகேசரி மன்னன் வென்றடக்கிய பரவர் என்பவர் பாண்டிய நாட்டின் தெற்குப் பகுதியில் வாழ்ந்த குறுநிலமன்னர் ஆவார் என்று வரலாற்று ஆராய்ச்சிப் பேரறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் கூறுகிறார்.

தமிழகம் பண்டைய நாளில் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இம்மூன்று பகுதிகளையும் முறையே சேரர், சோழர், பாண்டியர் என்ற மன்னர்கள் ஆண்டுவந்தனர். தமிழகத்தின் மேற்குக் கடற்கரையில் அமைந்த மலைநாட்டு பகுதியினை சேரமன்னரும், வடக்கே வேங்கடமலை முதல் தெற்கே திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட நிலப் பகுதியை சோழமன்னரும், இதற்குத் தெற்கே இருந்த நிலப் பகுதிகளையும் அதனைச் சார்ந்த நெய்தல் நிலத்தையும் பாண்டிய மன்னர் ஆட்சி புரிந்து வந்தனர். சேரமன்னருக்கு பணை மாலையும், சோழர்க்கு ஆத்தி மாலையும், பாண்டியர்க்கு வேப்ப மாலையும் அயைடாள மாலைகளாகக் கொள்ளப்பட்டன.

போந்தை வேம்பே ஆர்என வருஉம்
மாபெந் தானையர் மலைந்த பூவும்

என்ற தொல்காப்பியத் தொடரால் இது விளங்குகிறது.

பரதவர்களின் வீரம்

பாண்டியர்கள் கடல்சார்ந்த நாட்டினை ஆண்டு வந்தமையால், அவ்வப்போது தங்கள் நாட்டிற்கு கடல் வழியாக வரும் இன்னல்களிலிருந்து தங்கள் குடிமக்களை பாதுகாத்துக் கொள்வது அவர்களுக்கு மிகப் பெரிய கடமையாக இருந்தது. எனவே பாண்டிய மன்னர்கள், தென்கடற்கரையில் வாழ்ந்து வந்த நெய்தல் நில மக்களாகிய பரதவர்களுக்கு போர்ப்பயிற்சி கொடுத்து, தங்களது படைவீரர்களையும், கடற்கரைப் பகுதியின் காவலர்களையும் வைத்திருந்தனர் என 'மதுரைக் காஞ்சி' கூறுகிறது. பரதவர்கள் மிகவும் வலிமை மிக்கவர்களாக இருந்திருக்கின்றனர். எந்தவித அச்சமின்றி, அவர்கள் கடலுக்குள் சென்று திமிங்கலம், கொடிய சுறா போன்ற மீன்களை எளியுறியால் எறிந்து கொல்லும் ஆற்றல் உடையவர்களாக அவர்கள் இருந்திருக்கின்றனர்.

''கடுஞ்சுறா எறிந்த கொடுத்தாள் தந்தை''[65]

என்ற நற்றிணைப் பாடல் பரதவர்களைப் பற்றிக் கூறுவதன் மூலம் இதனை தெரிந்து கொள்ள முடியும். மேலும் கடலில் பெரிய மரக்கலங்களைச் செலுத்தி வெளிநாடு சென்று வாணிபம் செய்யும் முறை இந்த நெய்தல் நிலத்து மக்களாகிய பரதவர்களால் தொடங்கப்பட்டதேயாகும். மேலும் தங்கள் உடல் வலிமையைப் பெருக்கிக் கெள்வதற்காக போர்ப்பயிற்சி பட்டறைகளையும் அமைத்திருந்தனர். அங்கு இருவருக்கொருவர், முதுகு காட்டாமல், நேருக்கு நேராக கையாற்குத்தியும், ஈட்டியால் குத்தியும் போர்ப்பயிற்சி பெற்றிருக்கின்றனர் என்று 'பட்டினப்பாலை' என்ற சங்கப்பாடல் தெரிவிக்கிறது.

பரதவரை தலையாங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் போரிட்டு அடக்கினான் என்ற செய்தியை பத்துப்பாட்டில் ஒன்றான 'மதுரைக்காஞ்சி' என்ற சங்கப்பாடல் இவ்வாறு தெரிவிக்கிறது.

மேலும் சோழன் செருப்பொழியெறிந்த இளஞ்சேட்சென்னி இப்பரதவர்களுடன் போரிட்டு வென்றதனை "தென்பரதவர் மிடல் சாய"[66] என்று புறநானூற்றுப் பாடல் தெரிவிக்கிறது. கடல்பகுதி முழுவதையும் தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்த இவர்கள் போர்க்குணம் கொண்டவர்களாக இருந்தனர். எனவே பாண்டிய மன்னர்கள் அவவ்ப்போது பரதவர்கள் மீது போரிட்டு, அவர்களை அடக்கி வைத்திருக்கிறார்கள் என்பதை சங்ககாலப் பாடல்கள் மூலம் அறிய முடியகிறது. ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, பரதவர் கடற்கரைப் பகுதிகளில் நிலையாக வாழ்ந்தனர் என்பது பல்வேறு ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இதனால் தமிழ்நாட்டின் மூத்த குடிமக்களில் ஒருவராக பரதவரும் இருந்தனர் என்று திரு.சீனிவாச அய்யங்கார் தனது Tamil Studies என்ற நூலில் குறிப்பிடுகிறார். அகநானூறு, புறநானூறு, மதுரைக்காஞ்சி, நற்றிணை, பட்டினப்பாலை என்று பல்வேறு சங்க இலக்கியப்பாடல்கள் பரதவர்கள் வாழ்க்கைமுறை பற்றியும் அவர்களது போர்க்குணத்தைப் பற்றியும் கூறுவதன் மூலம், பரதவர் தமிழ்நாட்டின் தொன்மைக் குடியினர் என்பது தெள்ளத் தெளிவாக விளங்குகிறது.

பரதவர் திறம் கண்டு வியந்த பாண்டிய மன்னர்கள் நெய்தல் நிலப்பகுதியை ஒரு குறுநில நாடாகவே கருதியிருக்கிறார்கள். பரதவர்களின் 'சாதித்தலைவரை' ஒரு குறுநில மன்னனாகவே பாண்டிய அரசர்கள் கருதிவந்தனர். நெய்தல் நிலத்தின் படைவீரர்களாகத் திகழ்ந்த பரதவர்கள் காலப் போக்கில் தங்களது வலிமையாலும், திறமையாலும் ஒரு குறுநாட்டை நெய்தல் பகுதியில் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அவர்களுக்கென்று சொந்தமாக ஒரு கொடியிருந்தது. அது சிவப்பு வண்ணத்தில் மீன், வில், அம்பு சின்னங்கள் பொறிக்கப்பட்டிருந்தது. அவர்களின் ஊர்களில் உள்ள முக்கியமான இடங்களில் அதனை ஏற்றி வைத்திருந்தனர்.

பரதவர்களைப் பற்றி சங்ககாலம் காட்டும் மரபுகள் சில

பரதவர்குப்பம் : பரதவர்கள் சிறுசிறு குடியல்களில் கூட்டம் கூட்டமாக வாழ்ந்தனர். அவை சிற்றூர்களாக இருந்தன. மணல் மேட்டில் அமைந்திருந்தன. ஒருபுறம் கடல்நீராலும் மறுபுறம் பனை மரங்களாலும் சூழப்பட்டிருந்தன.

பரதவர் பட்டினம் : இது மீனவர் குடியிருப்பான மற்றொரு பகுதியாகும். இங்கு அதிக அளவில் மீனவர்கள் வசதியோடு வாழ்ந்து வந்தனர். இது ஒரு துறைமுக நகரம். அரண்மனை போன்ற வீடுகளும், அகன்ற தெருக்களும், அங்காடிகளும் நிறைந்த ஊராகும். மரக்கலங்கள் வந்து போகும் துறைமுகம் இங்கு இருந்தது.

மக்கள் பெயர்கள் : நெய்தல் நில மக்கள் பெயர்களாகப் பரதவர், நுழையர், கடலர், வலையர், திமிலர் என்று பல பெயர்கள் இருந்த போதிலும் பரதவர் என்ற பெயரே சங்க இலக்கியங்களில் அதிக அளவில் குறிப்பிடப் பட்டுள்ளது.

பரதவரின் வாய்மொழி இலக்கியம் : பரதவர்கள் பாடிய தொழிற் பாடல் 'அம்பா'. இது கடற்கரை மக்களின் நாட்டுப்புறப் பாடல். இது 'அம்பாப் பாட்டு' என்று அழைக்கப்பட்டது.

பரதவர்களின் வீரம் : பரதவர்களில் தென்பரதவர் என்பவர், தென்பாண்டிய நாட்டில் (கன்னியாகுமரி முதல் வேம்பார் வரை வாழ்ந்தவர்கள்) இருந்து கொண்டு, பாண்டிய மன்னர்களோடு அடிக்கடி போரிட்டுக் கொண்டிருந்தவர்கள். இவர்கள் ஒரு காலத்தில் பேராற்றல் மிக்கவர்களாக விளங்கினார்கள். கடற்பயணத்தில் தமக்கிருந்த திறமையும், அனுபவமும், அவர்களை உயர் தலைமையாளர்களாகச் செய்தன. அவர்களுக்குள் முறையான அரச பரம்பரையும் இருந்து வந்தது.

பாளையக்காரர்கள்

பாளையங்கள் என்பவை ஒருவகை படைமானிய ஏற்பாட்டால் அமைந்த நாட்டுப் பிரிப்புகள். பாளையத்தின் தலைவன் பாளையக்காரன். பாளையக்காரர் பெரும்பாலும் ஆந்திர மாநிலத் தலைவர். மதுரை நாயக்கரின் கீழ் தங்களுக்கு விடுப்பட்ட பாளையம் என்ற பிரிவிலிருந்து மக்களிடம் வரிவசூல் செய்யும் உரிமையைக் குத்தையாகப் பெற்றவர்கள். வசூல் செய்த பணத்தில் ஒரு குறிப்பிட்ட தொகையைப் பேரரசிற்குக் கப்பமாக கட்டிவிட்டு எஞ்சியதைத் தாங்களே வைத்துக்கொள்வர். போர்க் காலத்தில் பேரரசிற்குப் படை அனுப்பி உதவ வேண்டும். இதை படைமான்யம் என்பர்.

பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தக்காணத்தில் சிவாஜி மகாராஷ்டிரா சாம்ராஜ்யம் ஏற்படுத்திய போர் விசய நகர ஆட்சி முற்றிலும் முடிவுற்றது. அதனைத் தொடர்ந்து மதுரை நாயக்கமும் மறைந்தது. இதன்பின் பாளையக்காரர்களை அடக்குவாரின்மையால் பாளையக்காரர்கள் தம்முள் பகைத்துப் போர்புரிதலையும், தத்தம் பாளையங்களில் விருப்பம் போல் வரிவசூலித்து, அண்டையப் பாளையங்களில் கொள்ளையடித்து, வருவாயைப் பெருக்கிக் கொள்தலையும் வாழ்க்கையாகக் கொண்டனர்.

சில ஆண்டுகளாக ஒருவருக்கும் கட்டுப்படாமல் கப்பமோ, வரியோ கட்டாமலிருந்து பழகிவிட்டதால், சுதந்திரமாகச் செயல்பட்ட பாளையக்காரர், மேலரசு ஒன்று தோன்றி அவர்களிடம் வரிகேட்டபோது அதனை எதிர்த்தனர். சான்றாகப் பாஞ்சாலங்குறிச்சி பாளையக்காரர் வீரபாண்டிய கட்டபொம்மனிடம் ஆங்கிலேயர் அரசு வரிகேட்டபோது 'வானம் பொழியுது பூமி விளையுது' என முழக்கமிட்டு வரிகொடுக்க மறுத்துப் போரிட்ட வரலாறு அனைவரும் அறிந்ததொன்று.

பரதவரையும் பகைத்த பாளையக்காரர்

சுதந்திரமாக ஆதிக்கம் செய்த பாளையக்காரர், புரத்தார் அல்லது அந்நியர் தங்கள்மேல் அதிகாரம் செய்வதை விரும்பாது அவர்களை எதிர்த்துப் போரிட்டனர் எனக் கண்டோம். இதுவகையில் ஆங்கிலேயரை எதிர்த்ததுபோல் இதற்குமுன் வந்த

டச்சுக்காரர், டேனிஷ்காரர், பிரெஞ்சுக்காரர் என் பிற நாட்டவரையும் எதிர்த்துள்ளனர். ஆனால் போர்த்துக்கீசியர் கடல் ஆதிக்கத்தை மட்டுமே பிரதானமாகக் கொண்டிருந்தனர். நாடு பிடிக்கும் எண்ணம் இல்லாதவர்கள் முக்கியத் துறைமுகங்களில் கப்பல் தளங்கள் அமைத்து வணிகம் செய்தனர். அரச கட்டளையாகக் கிறிஸ்தவத்தைப் பரப்பினர். இதை நிறைவேற்றப் போதகர்களும் (பாதிரிமார்) உடன் தங்கிச் செயல்பட்டனர்.

நாட்டுப்பறப் பகுதிகளில் பாளையங்கள் அமைத்து ஆதிக்கம் செலுத்திய பாளையக்காரர் கடலில் ஆதிக்கம் செய்த போர்த்துக்கீசியரை எதிர்க்கொண்டு தாக்கமுடியவில்லை. எனவே அவர்களின் சீற்றம் போர்த்துக்கீசியரின் உதவிபெற்று, முத்தெடுப்பில் முகமதியரின் பிடியிலிருந்து விடுதலைபெற்ற பரதவர் மேல் திரும்பியது.

பரதவர் போர்த்துக்கீசியரின் கத்தோலிக்கக் கிறிஸ்தவ மதத்தை ஏற்றதோடு, அந்நாட்டு பிரஜைகளாக தங்களை உட்படுத்திக்கொள்ள உடன்பட்டனர். தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கிறிஸ்தவப் பெயர்களுடன் போர்த்துக்கீசியக் குடும்பப் பெயர்களான "பர்னாந்து, கர்வாலோ, குருஸ்" போன்ற பெயர்களையும் பெற்றுக் கொண்டனர். இவர்கள் பிற குடிகளிலிருந்து பிரிந்து வாழ்ந்நதனர். இவர்கள், பரதவரை மக்கள் அந்நியராகக் கருத வித்திட்டது. எனவே பாளையக்காரர்களின் தாக்குதலின்போது பரதவர் தனித்து விடப்பட்டனர். பிற குடிகளிடமிருந்து பாதுகாப்புக் கிட்டவில்லை. சில சந்தர்ப்பங்களில் பிற குடிகளும் லாபநோக்கில் எதிரிகளுடன் சேர்ந்து கொண்டனர்.

முதன்முதலான பரதவர் மத்தியில் கிறிஸ்தவத் தொண்டு செய்த சவேரியார் என்னும் இயேசுசபைப் போதகர் எழுதியுள்ள மடல்களில் பாளையக்காரர் தாக்குதலை, வடுகர் படையெடுப்பு என்பதாகக் குறிப்பிடுகிறார். அதன் பயனாக பரதவர் அடைந்த இன்னல்களையும் அப்போது அவர் செய்த இரக்கச் செயல்களையும் பற்றி பல மடல்களில் குறிப்பு உண்டு.[67]

பாளையக்காரர்களால் பரதவக் குடியிருப்புகள் தாக்கப்பட்டு தீவைக்கப்பட்ட நிலையில் மக்கள் படகில் கடலினுள் சென்று தீவுகளில் தஞ்சம் அடைந்தபோது அங்குப் பசியாலும், தாகத்தாலும் துயரப்படும் வேளையில் அம்மக்களுக்கு உணவு, தண்ணீர் கொடுத்து உதவிட பிற ஊர்த்தலைவர்களுக்குச் சவேரியார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

உள்நாட்டில் சிற்றரசர்கள் ஒருவருக்கொருவர் சண்டையிடும் சமயங்களிலும் கிறிஸ்தவர்கள் பாதிப்படையாதபடி அவர்களைப் பிற மாநிலங்களில் குடிபெயர சவேரியார் ஏற்பாடு செய்துள்ளார். சான்றாக உன்னி திருவடிக்கும், வெட்டும் பெருமாளுக்கும் மோதல் ஏற்படவிருந்த சமயத்தில் மக்கள் பாதிப்படையாதப்படி பழையகாயல் பரதவர்களையும் தூத்துக்குடிப் பரதவருள் சிலரையும் சேர அரசர் உண்ணிக்கேரளவர்மா திருவடிக்குச் சொந்தமான இடங்களில் பாதுகாப்பாக குடிபெயர ஏற்பாடு செய்ததை 14-5-1544, 1-8-1544 அன்று சவேரியார் எழுதிய மடல்களில் காணமுடிகின்றது. மேலும் பின்னைய மடலில், அவ்வாறு வெளிமாநிலத்தில் குடி

சென்றவர்கள் மீண்டும் பழைய காயலுக்குத் திரும்பி வராதபடி பார்த்துக் கொள்ளுமாறு அவ்வூரின் அந்தோணி பர்னாந்துவிடமும், ஊர்த்தலைவர்களான பட்டங்கட்டிகளிடமும் சொல்லும்படி எழுதுகிறார். பழைய காயல் அந்தோணி பர்னாந்துவை இனம்காட்ட பருமனான மனிதர் அந்தோணி எனச் சுட்டுகிறார்.[68]

பாளையக்காரர்களின் படையெடுப்பின்போதும் உள்நாட்டரசர் சண்டையின்போதும் பெரிதும் அல்லல்பட்ட கிறிஸ்துவர்களான பரதவர்களைக் காலத்துக்காலம் வேற்றிடங்களுக்குப் பாதுகாப்பாக அழைத்துச்சென்று குடியமர்த்தியுள்ளனர் புனித சவேரியாருக்குப் பின் வந்த இயேசுசபையார். 1560இல் முத்துக்குளித்துறை என்ற தமிழகக் கடலோரப் பரதவர்களை இலங்கை மன்னார் தீவில் சில வருடங்கள் குடியமர்த்தி வைத்திருந்ததாக அப்போது கிறிஸ்தவத் தொண்டு செய்த இயேசு சபைக்குரு அன்றிக்கஸ் அடிகளார் 19-12-1561இல் எழுதிய மடலில் குறிப்பிடுகின்றார்.[69]

சமயங்களின் வளர்ச்சி

கொற்கையில் காணப்படும் சமய வழிபாட்டுப் பண்பாடுகள் காயலில் சற்று மிகுந்து காணப்படுகின்றன. தொன்மையான சமண மதச்சின்னங்களாக இரு தீர்த்தரங்கர் சிலைகள், இங்குள்ள குளக்கரையில் உள்ளன. பாண்டிய அரசருள் சிலர் சமண மதத்தைப் பின்பற்றினர். காலப்போக்கில் அது மறைந்தது அல்லது அகற்றப்பட்டது எனலாம். இந்நிலைகள் இச்சிலைகள் இரண்டும் வழிபாட்டுப் பயன்பாடற்றுத் தொல்பொருளாகவே காட்சியளிக்கின்றன. இவை குளக்கரையில் இருப்பதால் சில சந்தர்ப்பங்களில் மக்கள் துணி துவைக்கப் பயன்படுத்துவதாக பேட் என்ற ஆங்கிலேயர் குறிப்பிடுகிறார்.[70] தீர்த்தங்கரர் அதாவது பிறவிக் கடலைக் கடந்தவர் என்பதை வலியுறுத்தச் சமணத் துறவியரின் சிலைகளை நீர் நிலைகளையொட்டி வைப்பது சமணர் பாரம்பரியம்.

அடுத்து சிறு தெய்வங்களுக்கான வழிபாட்டுத் தலங்கள் காயலில் உள்ளன. அவற்றுள் முத்தாரம்மன், கரைமேல் சாத்தான், பொன்னாச்சியம்மன், காப்பிரிச் சாமி போன்ற கிராம தேவதைகளுக்கு வழிபாடு கொடைவிழா நடக்கின்றன. வைணவர் வழிபட்ட புராதனமான பெருமாள் கோயில் அழகான அமைப்பைக் கொண்டுள்ளது. கருவறைச் சுவரில் கல்வெட்டு உள்ளதை முன்னர் கண்டோம். இக்கோயில் வழிபாட்டிற்குப் பயன்படுத்தப்படாத நிலையில் இடிந்து சீர்கெட்டுக் காணப்பட்டது. அண்மையில் இக்கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சைவர்கள் வழிபடும் சிவன் கோயில் இதனை அடுத்து உள்ளது. இதனை சங்குமுக ஈஸ்வரன் கோயில் என்பர். தினமும் வழிபாடு நடப்பதால் இக்கோயில் நல்ல நிலையில் காணப்படுகிறது.

முருகனையே ஆதிகாலந்தொட்டுத் தமிழர் கடவுளாக வழிபட்டனர். தமிழ்நாட்டில்தான் முதன்முதலாகப் பக்தி இயக்கம் தொடங்கிற்று என்பது அறிஞர் கூற்று. தமிழ்நாட்டின் பெண்களான வள்ளி, தெய்வானையை முருகக் கடவுள் மணந்து

கொண்டதாகப் புராணம் கூறும். இதில் தெய்வானை மீனவப்பெண் என்பதால், திருச்செந்தூர் முருகன் கோயிலைப் பரதவர் மிகவும் மதித்துப் போற்றி, ஒரு கால் தங்கள் குலத்தின் வழிபாட்டு மையமாகக் கொண்டிருந்தனராம்.[71]

இதேபோன்று நாயக்கர்களும் முருகபக்தியில் சிறந்தவர்கள். திருச்செந்தூர் கோயிலின் சிலையை டச்சுப்படை வீரர் கவர்ந்து சென்று கடலில் எறிந்துவிட்டுச் சென்றதாகவும், வடமலையப்பன் பிள்ளை என்ற பாளையக்காரருக்குக் கடலினுள் அச்சிலை இருக்கும் இடம் கனவில் அறிவிக்கப்பட்டு அவர் அதனை எடுத்து வந்து கோயிலை நிலைப்படுத்தியதாகவும் வரலாறு கூறும்.[72]

முன்னர் கூறப்பட்ட பழையகாயல் பெருமாள் கோயிலுக்குப் பின்புறம் ஒரு சிறு மண்டபம் தற்போது இடிந்து காணப்படுகின்றது. சங்கோசை நகரா மண்டபம் எனக் குறிப்பிடும் இது பாஞ்சாலங்குறிச்சி கட்டபொம்ம நாயக்கரால் கட்டப்பட்டது என்பர். இதேபோன்று திருச்செந்தூரிலிருந்து பாஞ்சாலங்குறிச்சி வரை நாற்பது மைல் தொலைவிற்கு இவ்வகை மண்டபங்கள் இடைகிடையே கட்டப்பட்டுத் திருச்செந்திலாண்டவனுக்கு நடுப்பகல் பூசை முடிந்ததைப் பாளையக்காரருக்குத் தெரிவிக்க அவற்றில் முரசொலி வரிசையாக ஒலிக்கப்படும். பாஞ்சாலக்குறிச்சியின் கடைசி நகரா மண்டபத்தில் ஒலி கேட்ட பின்னரே கட்டபொம்மன் பகல் உணவு உண்டதாகச் சொல்லப்படுகின்றது. சிலர் இதனை மணி மண்டபம் எனக் குறிப்பிடுவர். திருச்செந்தூர் சுப்பிரமணியசாமி கோயில் இராசகோபுரத்தின் ஏழாவது நிலையில் இருந்து ஒலிக்கப்படும் மணியோசை வரிசையாக கட்டப்பட்டுள்ள மண்டபங்கள் வழியாக கட்டபொம்மன் பாளையக்காரருக்குத் தெரிவிக்கப்பட்டு அதன் பின்னரே அவர் உணவருந்துவது வழக்கமாம்.

இதே முறையில் திருச்செந்தூர் கோயில் தீர்த்தத்தைத் கொண்டு செல்ல குதிரைவீரர் நியமிக்கப்பட்டிருந்ததாக அண்மையில் கிடைத்த செப்பேட்டுச் செய்தி தெரிவிக்கின்றது.[73]

இதுகாறும் கூறப்பட்ட பெருமாள் கோயில், சிவன்கோயில், நகரா மண்டபம் சமணர் சிலைகள் எல்லாம் பழைய காயலின் வடபாகத்தில் சூரன்காடு என்ற மேட்டுப் பகுதியில் உள்ளது. இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்த முகமதியர்களும் கத்தோலிக்கம் தழுவிய பரதவர்களும் ஊரின் தெற்குப்பகுதியில் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றனர்.[74]

கி.பி. 9ஆம் நூற்றாண்டில் கேரளக் கடலோரத்தில் வந்திறங்கிய அராபியர் காலப் போக்கில் கிழக்குக் கடற்கரைக்கும் வந்து சேர்ந்தனர். இவர்களின் முக்கியக் குடியிருப்பாக காயல்பட்டினம் இருந்துள்ளது. கேரளநாட்டு அராபியரை ''மாப்பிள்ளை'' எனவும் கிழக்குக் கடற்கரையில் அவர்களை ''லெப்பை'' எனவும் அழைத்துள்ளனர். தமிழர் அவர்களைப் பொதுவாகக் துலுக்கர், சோனகர் என அழைப்பர். மரைக்காயர் என்ற பெயரும் அவர்களுக்கு உண்டு. அதாவது மரக்கலராயர் முதன் முதலாக

மரக்கலங்களில் பயணம் மேற்கொண்டவர்கள் என்ற பொருளில் அவ்வாறு அழைத்தனர் எனக் கூறப்படுகிறது.

வாஸ்கோடகாமாவின் குறிப்பில் காயலில் முகமதிய அரசன் வாழ்ந்ததாகக் குறித்துள்ளார். சுந்தரபாண்டியனுக்கு உதவ வந்த தில்லி சுல்தானின் தளபதி மாலிக்கபூர் முதற்கொண்டு (1310-1358) எட்டு முகமதிய அரச பிரதிநிதிகள் பாண்டிய நாட்டை ஆண்டுள்ளனர்.

அடுத்து, கிறிஸ்தவ மதத்தைப் பற்றிக் கூறும்போது இங்குள்ள பரதவர் என்ற வகுப்பினர் அனைவரும் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்களானவர்கள். இவர்கள் காலங்காலமாகச் சுதந்திரமாக முத்துத் தொழில் செய்து வந்த இனம். கிழக்குக் கடலோரத்தில் ஏறத்தாழ முப்பது கிராமங்களில் வாழந்த இவர்கள் ஒரு தலைவனின் கீழ் முத்துக்குளிப்பு நடத்தி வந்தனர். இத்தலைவனைச் சாதித்தலைவன் என்பர்.

கொற்கையில் முத்தெடுத்து வந்த இவ்வினத்தினர் கடலோடு சேர்ந்து இடம் பெயர்ந்து மாரமங்கலம், காயல், புன்னக்காயல் என நகர்ந்து பின்னர் தூத்துக்குடியில் முத்துக்குளிப்பை செய்துள்ளனர். போர்த்துக்கீசியர், டச்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகியோர் தங்கள் ஆட்சியின்போது பரதவருக்குப் பல சலுகைகள் அளித்து முத்தெடுப்பினால் இலாபம் அடைந்தனர்.

பரதவர் போர்த்துக்கீசியருக்கு விசுவாசமானவர்கள். இவர்கள் செய்த முத்துத்தொழிலைத் தாம்பிரபரணியாற்று எல்லை வரை அபகரித்துக் கொண்ட சேர அரசனிடம் முகமதியர் குத்தகைக்கு எடுத்துப் பரதவரைத் தங்களுக்கு முத்தெடுத்துக் கொடுக்கக் கட்டாயப்படுத்தினர். இவர்களை முகமதியர் பிடியிலிருந்து விடுவித்து முத்தெடுப்பில் பாதுகாப்பளித்து கத்தோலிக்கர்களாக, போர்த்துக்கீசிய குடிமக்களாகத் தேர்ந்து கொண்டனர் போர்த்துக்கீசியர். எனவே பரதவர் போர்த்துக்கீசியருக்கு பிரமாணிக்கமாயிருந்ததில் வியப்பொன்றுமில்லை.

இஸ்லாமியரின் தாக்குதலிலிருந்து பரதவரைப் போர்த்துக்கீசியர் விடுவித்து கி.பி. 1532இல் என்பர். சிவர் 1535-1536 என்பர். இந்நிகழ்ச்சி அநேகமாகப் பழையகாயலில் தான் நடந்துள்ளது எனக் கருத இடமுண்டு. காரணம் காயல் துறையில் முத்தெடுப்பு கி.பி. 16ஆம் நூற்றாண்டுவரை நடந்துள்ளதாகக் குறிப்பு உள்ளது.[75]

அடுத்து ஜான்-டி-குருஸ் என்பவரே (குதிரைச்செட்டி) பரதவரைப் போர்த்துக்கீசியர் உதவியை நாட ஆலோசனை கூறியவர் என்பதைக் கண்டோம். எனவே பரதவர் திருமுழுப்புர் பெற்றபோது சில தலைவர்களை ஜான்-டி-குருஸ் என்ற பெயரை நன்றியறிதலாக தங்களுக்கு வைத்துக் கொண்டனர். இவர்களுள் விகரமபாண்டியன் என்ற சாதித்தலைவரும் அடங்குவார். ஜான்-டி-குருஸ் என்ற பெயரேற்ற விக்ரமபாண்டியன் பழைய காயலில் பிறந்தவன் என்றும் மதுரை ஆட்சியை

பாண்டியர் இழந்தபின் காயலில் ஒதுங்கி வாழ்ந்த பாண்டிய வம்சத்தவன் என்றும் செய்தி உள்ளூர்வாசிகளால் குறிப்பிடப்படுகின்றது.[76]

அடுத்து, பழையகாயல் என்ற ஊரில் பரதவர் தலைவனாக, அரசனாக விளங்கியவர் தாணுல் (தானியேல் என்ற பெயரின் மரூவு ஆக இருக்கலாம்) என்ற குறிப்பு "அதிரியார் அம்மானை" என்னும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. தாணுல் அரசர் அவையில் தலைமைப் புலவராக இருந்த மனுவேல் என்பவர் அதிரியார் (St. Adrian) வரலாற்றை 1699இல் காவியமாகப் பாடியுள்ளார்.[77]

தமிழகக் கடலோரத்தில் கத்தோலிக்கரான பரதவர்க்கு திருமுழுக்கு மட்டும் கொடுத்த கோவா பிரான்சீஸ்சன் சபைக் குருக்கள் திரும்பிச் சென்றுவிட்டனர். எட்டு ஆண்டு இடைவெளிக்குப் பின் போர்த்துக்கல் அரசர் இயேசு சபைப் போதகர் புனித சவேரியாரை அனுப்பி வைத்தார். இவர் கடற்கரை ஊர்கள் தோறும் கால்நடையாகவே சென்று முதலில் திருமுழுக்கு பெறாத குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் திருமுழுக்குக் கொடுத்தார். பின்னர் மதத்தைப் பற்றிய உண்மைகளை சவேரியார் சில மொழிப் பெயர்ப்பாளர்கள் உதவியோடு விளக்கினார்.

புனித சவேரியார் தொடக்கத்தில் குடிசைக் கோயில் அமைக்க ஊர்த் தலைவர்களைப் பணித்தார். அவருக்குப் பின்வந்த இயேசு சபையார் கற்கோயில்கள் கட்டுவித்தனர். இவ்வாறு பழையகாயலில் புனித சவேரியாருக்குப் பின்வந்த போதகர்கள் கி.பி. 1700இல் குருக்கள் இல்லம் அமைத்து 1708இல் பூரணமாதாவிற்கு புதிய ஆலயம் கட்டியதாக சுவாமி பெஸ் எழுதியுள்ளார். பின்னர் இருந்த ஆலயம் மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்ததாக 1644ஆம் ஆண்டு குறிப்பு கூறுகின்றது.

தந்போது இந்த ஆலயம் அழகுற புதுப்பிக்கப்பட்டுள்ளது. இங்குள்ள மீனவர் கடலோடிகள் கத்தோலிக்கத்தில் இணைந்ததை நினைவுபடுத்த மாதா ஆலயத்தில் படகு வடிவில் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இது அனைவரின் பாராட்டுதலைப் பெற்று சுற்றுலா வருவோரையும் ஈர்த்து வருகின்றது.

முன்னர் இவர்கள் மச்சக்கன்னி என்ற கடவரி மீன் இனத்தைத் தெய்வமாக வணங்கி வந்தனர். இந்த உருவம் உடவின் மேல்பகுதி பெண்ணின் உருவத்திலும் கீழ்பகுதி மச்ச வடிவத்திலும் அமைந்திருக்கும் (அபிதா சிந்தாமணி). தற்போது இவர்கள் கன்னியும் தாயுமான பரிபூரண மாதாவை முன்வைத்து வழிபடும் சிறந்த பக்தர்களாகக் காணப்படுகின்றனர்.

இதற்கு முன்னர், புனித சவேரியாரை அடுத்து மேலைநாட்டிலிருந்து வந்த புன்னைக்காயலில் தங்கிக் கொண்டு பழையகாயல், தூத்துக்குடி ஆகிய ஊர்களில் சமயப் பணி செய்தவர் அன்றிக்குஷ் அடிகளார் என்ற இயேசு சபைக் குரு. இலத்தீன் மொழியில் எழுதப்பட்டிருந்த பல் நூல்களைத் தமிழ்க் கிறிஸ்தவர் நலன் கருதி தமிழ் மொழியில் மொழி பெயர்த்தார். அவை தம்பிரான் வணக்கம், கிரிசித்தியானி வணக்கம், கொம்பேசியோனாயரு, அடியார் வரலாறு முத்துக்குளித்துறையில் அச்சிட்டதாக

அந்த்தாம் தெ ப்ரயோன்சா அடிகளாரும் (1625-1669) புன்னக்காயலில் அச்சிடப்பட்டதாக யோசப் விக்கி, சே.ச. அடிகளாரும் குறிப்பிடுகின்றனர்.

புனிதர்களின் வரலாற்று (அடியார் வரலாறு (Flos Sanctorum) அச்சிட்டு வெளியிடக் கருதி தம்மைப் போல் சமயப் பணியாற்றிய சேசு சபைக் குருக்களையும் தமிழகத்துப் புலவர் சிலரையும் கூட்டி அவர்களின் ஒப்புதலைப் பெற்று 1586ஆம் ஆண்டு அதனை அச்சிட்டு வெளியிட்டார். போர்த்துக்கீசிய மொழியில் அன்றிக்குஸ் பாதிரியார் இயற்றிய தமிழ் இலக்கணம் அண்மையில் ஜெர்மனியில் அச்சுப் பெற்றிருக்கிறது. அவர் தொகுத்த அகராதி நமக்குக் கிடைக்கவில்லை.

இவ்வாறு அன்றிக்கஸ் அடிகளார் கூட்டிய அறிஞர் குழுவை 'சங்கம்' என அழைத்துளள்ளதை,

"பொங்குதிரை வாழும் புதுக்காயல்
மாநகரில்
சங்கம் திரண்டு தமிழ்ப்படுத்தி
வைத்தகதை"[78]

என்று அதிரியார் அம்மானையில் படித்தறியலாம். பண்டைக்காலப் பாண்டியர் பண்பாட்டில் அரசர்கள் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்ததுபோல், கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சிக்காகப் பழையகாயல், புன்னைக்காயல் ஊர்களில் கிறிஸ்தவ சங்கம் அமர்வு நடத்திய சிறப்பான செய்தி வியப்பைத் தருகிறது.[79]

பதினெட்டாம் நூற்றாண்டில் பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் நடந்த சண்டையில் ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரரை வென்று தமிழ்நாட்டைப் பகுதியாக ஆளத்தொடங்கினர். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ்நாடு முழுவதும் ஆங்கிலேயர் வசமாகியது. ஆங்கிலேயர் ஆட்சியில் ராபர்ட் கிளைவின் மகன் எட்வர்ட் கிளைவ் ஆளுமையில் பாளையக்காரர்களின் படை மானியக் கலகங்கள் ஒடுக்கப்பட்டு அமைதி நிலவிற்று. கி.பி.1798இல் பாளையக்காரர்களின் செயல்பாடுகள் முற்றிலும் மறைந்தன.[80]

உவரியே ஓபீர் துறைமுகம்

ஓவரிதான் ஓபீர் என அறுதியிட்டு கூற கடல் சார் தொல்லியல் அகழ்வாராய்ச்சிகள் எதுவும் இதுவரை செய்யப்படவில்லை.

ஆதனால், உவரிதான் ஓபீர் என்பதை நிரூபிக்க தொல்லியல் சான்றுகளோ, இலக்கியச் சான்றுகளோ இல்லை.

ஆனால் எபிரேய மொழியில் உள்ள தமிழ்ச் சொற்கள் பல, உவரியே ஓபீர் துறைமுகம் என்பதை உறுதிப்படுத்துகின்றன. ஓபீர் துறைமுகத்தில் இருந்து சாலமோன் பெற்றதாகக் கூறப்படும் அனைத்துப் பொருள்களும் தென்னிந்தியச் சரக்குகள். எபிரேய மொழியில் மொத்தம் 31 தமிழ்ச் சொற்கள் உள்ளன.

ஜெர்மன் நாட்டுப் பேரறிஞர் திரு.மாக்ஸ் முல்லர் தனது 'விஞ்ஞானத்தின் மொழி' என்ற நூலில், ''ஓபீர் என்பது தென் இந்தியத் துறைமுகமே!'' எனக் குறிப்பிடுகின்றார். திராவிட மொழியியல் அறிஞரான பிஷப் கால்டுவெல் அவர்களும் இதை உறுதிப்படுத்துகிறார்.

முதல் இந்திய பிஷப்பாக இருந்த அசரியா அவர்களும், அன்னாரின் தம்பி உயர்திரு. தாமஸ் அவர்களும், சென்னைக் கிறிஸ்துக் கல்லூரி நூல் வெளியீடு ஒன்றில், பழைய ஏற்பாட்டில் குறிப்பிடப்படும் ஓபீர் என்பது திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள உவரியே என உறுதிபடுத்துகிறார்கள்.

புலவர் கா.அப்பாத்துரை அவர்கள், அவருடைய 'தென்னாடு' என்ற நூலில் பண்டைய ஓபீர் துறைமுகம் உவரிதான் என்று கூறுகிறார்.

இடையன்குடியில் பாதிரியாராக இருந்த திரு.மதுரம் ஐயர் அவர்களும், அவரது சமயச்சொற்பொழிவுகளில் உவரியே ஓபீர் என்று குறிப்பிட்டுள்ளார்.

'நம் நாட்டுக் கப்பற்கலை', 'தமிழ்நாட்டுப் படைக்கலன்கள்', 'தொல்பொருள் ஆய்வு' என்ற மூன்று நூல்களின் ஆசிரியரான சாத்தான்குளம் அ. இராகவன் அவர்களும் உவரியே ஓபீர் துறைமுகம் என்கிறார்.

'முத்துக் குளித்துறையில் போர்ச்சுக்கீசியர்' என்ற நூலில் அருட்சகோதரி ச.டெக்லா அவர்களும் 'கடல்' என்ற நூலின் திரு. கு.ராஜாராம் அவர்களும் ஓபீர் என்பது ஓவரி எனக் குறிப்பிடுகின்றனர்.

'உவரியும் ஓபீரும்', 'சந்தன உவரியில் சாலமோன் கப்பல்' என்ற நூல்களின் ஆசிரியரான திரு.மோகனரூபன் அவர்களும், ஓபீர் என்பது உவரியே எனச் சுட்டிக் காட்டுகிறார்.

ஓவரிப் பட்டினத்தில் பொன்னை நிலவறைகளில் பாதுகாத்திருக்கலாம். காவலர்கள், மன்னன் அல்லது அவரது பிரதிநிதிகள் இங்கு இருந்து கப்பல் வணிகத்தைக் கண்டிப்பாகக் கவனித்திருக்க வேண்டும். பின்னர் வந்த கடல்கோளால் எல்லாமே நிர்மூலமாகியிருக்கக் கூடும்.

ஓபீர் துறைமுகத்துக்கு அன்று வணிகம் புரிய வந்த பினீசியர்களை பரதவர்களின் கட்டுமரம் மிகவும் அதிசயிக்க வைத்திருக்கும். பரதவர்களின் கட்டுமரம் போன்ற அதிசய நீர் ஊர்தி உலகிலேயே வேறு எதுவும் கிடையாது.

பொதுவாகப் படகின் அடிப்பகுதியில் ஓட்டை விழுந்தால் அதன் வழியாக நீர் உட்புகுந்து படகு மூழ்கிவிடும். ஆனால் கட்டுமரம் இதற்கு விதிவிலக்கு.

மரக்குத்திகளை அழகுற சேர்வை செய்து இணைத்துக் கட்டுப்படும் கட்டுமரங்களில், பலகைவெளி எனப்படும் துளைகள் உண்டு. அதன் வழியாகக்

கடல்நீர் உள்ளே புகுந்து விளையாடுவதும் உண்டு. ஆனால் எவ்வளவுதான் கடல் நீர் உள்ளே புகுந்தாலும் கட்டுமரம் மூழ்காது.

உலகிலேயே இதுபோன்ற ஓர் அதிசய நீர்ஊர்தி இல்லை என்று அக்கால பினீசியர்கள் பிரமித்துப் போயிருப்பார்கள். ஓட்டகம் போல கட்டுமரம், பெரும் பாரத்தைச் சுமப்பதும், அவர்களுக்கு ஆச்சரியத்தை அளித்திருக்கும்.

பொதுவாகப் படகுகள் ஆமையைப் போலக் கவிழ்ந்தால் அதன்பிறகு அவற்றைப் புரட்டுவது எளிதல்ல. ஆனால் கட்டுமரம் கவிழ்ந்தால் அதை நிமிர்த்துவது எளிது. இதுவும் பினீசியர்களை ஆச்சரியப்பட வைத்திருக்கும்.

கட்டுமரத்தின் முன் பகுதியான அணியத்துக்கு வாரிக்கல் என்று பெயர், தமிழர்கள் கடலை அழுவம், அம்பரம், அளக்கர், ஆழி, ஆகலி, உவரி, ஓதம், கார்மலி, சலதி, நேமி, பரவை, பாராவாரம், புணரி, பெருநீர், பௌவம், மாவாரி, முந்நீர் வலயம், முத்திரை, குட்டம் எனப் பல பெயர்களில் அழைத்தனர். 'வாரி' என்றும் கடலை அவர்கள் அழைத்தனர். வாரியென கடலை அழைத்ததால், கட்டுமரத்தின் முன் கொம்பு 'வாரிக்கல்' என வழங்கலாயிற்று.

அதுபோல, உலகிற்கு காவி, கடும்காவி வண்ணங்களை அறிமுகப்படுத்தியவர்கள் தமிழக மீனவர்களே, இவர்கள் வெண்பருத்தித் துணியை கட்டுமரப்பாயாக பயன்படுத்தினர். காற்றை அணைத்து விரைப்பு நிலையடைய புளியவிதைத்தோட்டை நீரில் காய்ச்சி பாய்மரத்துணியில் ஊற்றி அவர்கள் ஊற வைத்தார்கள். பின்னர் பாயை வெயிலில் காயவைத்து அதை எடுக்கும்போது அது காவி வண்ணத்தைப் பெற்றது. இப்படிப் பலமுறை ஊற வைக்கப்படும் பாய்த்துணி கடும்காவி நிறமாக மாறியது.

பினீசியர்களின் சிறு மரக்கலங்களோ வேறு மாதிரியானவை, பலகைகள், நாணல் கோரைகள், தார், ஆட்டுத்தோல் போன்ற பலவகைப் பொருள்களால் உருவாக்கப்பட்டவை. பினீசியர்களின் பாய்த்துணிகள் சணலால் ஆனவை.

ஜான் டி குருஸ் அவர்களின் 'ஆழி சூழ் உலகு' நாவலில் இடம்பெறும் பரதவர்கள் உவரி மற்றும் அங்கிருந்து குமரி வரை உள்ள பரதவர்கள் வாழிடங்கள்.

ஜோ டி குருஸின் கொற்கை மற்றும் ஆழி சூழ் உலகு நாவல்களில் மீனவ வாழ்வியல்

சங்க இலக்கியக் காலம் தொட்டே தமிழர் வாழ்வு அகம், புறம் என்றே பகுக்கப்பட்டுள்ளது. மக்களின் வாழ்க்கை வெளிப்பாடாக விளங்கும் இத்தகு நெறிமுறையைப் பின்பற்றி நெய்தல் நில மக்களான கானலங்குடிப் பரதவர் வாழ்வை, நெறிமுறையை இவ்விரு வகையிலேயே பகுத்துக் கொள்ளலாம். கடல் போன்ற இப்பரந்த தலைப்பில் பரதவர் அக வாழ்வு, பொருளாதாரம், மொழி, சமயம், சாதி,

புறவாழ்வு என பல்வேறு விஷயங்களைப் பேசும் வாய்ப்பு கிட்டியுள்ளது. ஆழமும் அகலமும் நிறைந்த இப்பரதவர் குடியின் தொன்மை சொல்லாமலே விளங்கும். மருதம் வளம் பெற்று அதிகாரத்துடன் ஆட்சி செய்யும் இந்நாளில் குறிஞ்சி வாழ்ப் பழங்குடி மக்களும் நெய்தல் வாழப் பரதவருமே தங்கள் தொன்மையை இழக்காமல் பண்பாட்டைச் சமரசம் செய்து கொள்ளாமல், கால ஓட்டத்தை எதிர்த்து நிற்கின்றனர். அதனாலேயே இவ்விருவரும் பல்வேறு தொல்லைகளுக்கும் ஆட்பட்டு வருகின்றனர். அவர்தம் நிலப்பகுதிகளும் சூறையாடப்பட்டு, வாழ்விடங்களில் இருந்தே வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.

தனி மனிதத் துயரம் விரிவு பெற்று வாழ்க்கையின் மனித உறவுகள் சார்ந்த கேள்விகளாக மாற்றம் பெற்று வாழ்வு தொடர்பான தேடலாகப் பரிணமிப்பதே இலக்கிய வகைமைகளாகும். அதிலும் நாவல் வடிவம் இவ்விரிவான தேடலுக்குத் துணை நிற்பதால் வாழ்வின் தரிசனத்தை விவாதங்களின், உயிர்ப்புடன் நம் முன் பரத்துகிறது. கடலுக்கும் கரைக்குமான இடையறாத பயணமாகத் தம் வாழ்வைக் கொண்டிருக்கும் பரதவரின் பல நூற்றாண்டுப் பயணத்தைத் தம் இரு கைகளாலும் அள்ள முயற்சித்திருக்கிறார் ஜோ டி குருஸ்.

> ‘‘நாவாயின் அணியத்திலிருந்து கடலிறங்கிய நங்கூரக் கயிற்றைச் சுற்றியபடி போக்குக்காட்டிய கெழித்தி மீன் கூட்டம்.... பொருனையின் காயல். குச்சு குச்சாய்ப் பனைமரங்கள், உடங்காடுகள்... வட துறை உப்பு வயல்கள், பரதவரின் அம்பா ஓசை, களியல் கழியாட்டம்’’[81]

என நெய்தல் நில வருணனையோடே நாவல் தொடங்குகிறது.

> கானலம் சிறுகுடிக் கடல்மேமம் பரதவர்
> நிறப்புன்னைக் கொழு நிழல் அசைஇ,
> தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி,
> அம்கண் அரில்வலை உணக்கும் துறைவனோடு

என்று நற்றிணையில் அம்மூவனாரால் பாடப்படும் முந்நீர்ப் பழமையும் பெருமையும் வளமும் செறிந்தது. கடல் வளம் மட்டுமல்லாது கடற்கரை மணலும் இல்மனைட் போன்ற தாதுக்களும் நிறைந்தது. பனையும் தென்னையும் பாக்கும் ஞாழலும் அடர்ந்தது. கட்டுமரமும் வத்தையும் வள்ளமும் தோணியும் கப்பலும் கொண்டு கடலை ஆளும் இப்பரதவர் புற வாழ்வியல் சார்ந்து நோக்கையில், அவர் தம் வீரம், வாழ்வை எதிர்த்து நிற்கும் ஆற்றல், கடலெறிந்து மேற்செல்லும் துணிச்சல், இன்ன பிற பண்புகள் வெளிப்படக் காணலாம். கடல் மேற்செல்கையில் அவர்க்குக் கிடைக்கும் நம்பமுடியாத அனுபவங்களும் திருப்பங்களும் அவர் தம் வாழ்விலும் பிரலிபலிக்கக் காணலாம்.

கொற்கையில் லொஞ்சியின் தண்டலாகச் செல்லும் தோணியைக் கொள்ளையடிக்கக் கடற்கொள்ளைக்காரர்கள் நெருங்குகையில் தோணியிலிருந்த குந்திருக்கத்தையும் மெழுகையும் அண்டாவில் கொதிக்க வைத்து அவர்கள் மேல் ஊற்றி எந்தச் சேதாரமுமின்றி அவர்களிடமிருந்து தப்பியது அவர் தம் நுண்ணறிவை

வெளிபடுத்துகின்றது. உணவு தீர்ந்து போய்ச் சில நாட்கள் கடலுக்குள் இருக்க நேர்கையிலும் உப்பு நீரையும் பச்சை மீனையுமே புசித்து அச்சமின்றி அந்நிலையை எதிர்த்துப் போராடுவதை ஆழி சூழ் உலகில் சிலுவை, சூசை, கோத்ரா ஆகியோர் வாயிலாகச் சித்திரப்படுத்தியிருப்பார் நாவலாசிரியர். ஆமந்துறை அந்தோணியார் திருவிழா நாட்களில் தம் ஊருக்கு வரும் மக்களை பரதவர் உள்ளன்போடு தங்கள் வீட்டிலேயே தங்க வைத்து உபசரிப்பதன் மூலம் அவர் தம் விருந்தோம்பல் பண்பு வெளிப்படுகிறது. நுண்ணறிவும் வீரமும் மனத்திடமும் கொண்ட இந்த மக்களிடம் மூடக் கோபமும் போலிப் பெருமையும் ஒற்றுமையின்மையும் இருந்த காரணத்தாலேயே மீன் வேட்டுவர் என்று அகநானூற்றில் பெருமைப்படுத்தப்பட்ட இம்மக்கள் வாழ்வியல் தரத்தில் சமூகத்தின் அடியாழத்தில் கிடக்கின்றனர்.

சுறாப்பாறுப் பயணம் என்று சொல்லப்படுகின்ற சுறாமீன் வேட்டைக்குச் செல்லும் வீரம் கொண்ட இவர்கள் குடியின் காரணமாக அழிவதை, வறுமையில் வாடுவதை இரு நாவலிலுமே காட்சிப்படுத்தி இருப்பார் நாவலாசிரியர் ஜோ டி குரூஸ். வேலைச் சுமை, மரணத்தை எதிர்நோக்கிய அவர் தம் அன்றாட வாழ்வு, உறுப்புகளை இழத்தல், பாடு கிடைக்காமல் வெறுங்கையாய்த் திரும்புதல், சம்மாட்டிமாரின் ஏமாற்றுதல்கள், கடன் வாங்கி மீளவே முடியாமல் வாழ்வித்தல் எனக் கடல்வாழ் பரதவர் படும் பாடு கடலின் சீற்றம், அலை படும் வேகம், ஓங்காரம் ஆகியவற்றை ஒத்ததே. பருவத்தின் போக்கிற்கேற்ப மாறும் வாழ்வின் நிச்சயமின்மை அவர்களை மூர்க்கமானவர்களையும் அன்றன்றைய பொழுதை வாழும் தீவிரமிக்கவர்களாகவும் மாற்றியுள்ளதைக் காணலாம். இவ்வகப் பண்புகளே இரு நாவல்களின் போக்கையும் தீர்மானிக்கும் உந்து சக்தியாக விளங்குகிறது.

> ‘‘நமக்குத்தான் தலையெழுத்து இந்த மாரி மழைக்கிலயும் காது வெடிக்கிற கூதலுக்குள்ளயும் கெடந்து சாவணுமின்னு’’[82]

என்னும் சவரியாப்பிச்சை - லொஞ்சியின் உரையாடல் பரதவர் வாழ்வின் துன்பியலை உணர்த்தும்.

கலப்பு மிகக் குறைவாக இருக்கின்ற நூற்றாண்டுகளின் கால ஓட்டத்திலும் கூடப் பெரும்மாறுதலில்லாத நெய்தல் நிலப்பரதவர் நானூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் போர்த்துக்கீசியர்களால் கிறிஸ்துவர்களாக மதம் மாற்றப்பட்ட இனக்குழுவினர். பர்னாந்துமார் என்றழைக்கப்படும். இக்கிறிஸ்தவர்கள் கம்மரர், மெனக்கெடன்மார், மேசைமார், கோட்டு போட்டவம் எனப் பல்வேறு வகையாக ஒரு சாதிக்குள்ளேயே பிரிந்து நின்று தன் சாதிக்குள்ளேயே ஏற்றத்தாழ்வு பார்த்துப் பழகுவதும் வர்க்க பேதம் பார்த்து உதவி செய்வதும் செய்யாமல் கடப்பதும் தங்களுக்குள்ளேயே வெற்றாய்ச் சினம் கொண்டு ஒருவரை ஒருவர் பழி வாங்கிக் கொள்வதும், அதற்கான தருணம் பார்த்திருப்பதும் பரதவ மகா சமூகம் முன்னேறாததன் காரணங்கள் என்று ஆசிரியர் பதிவு செய்திருப்பதன் வழி அச்சமூகத்தாரின் அகப் பண்புகள் சிலவற்றை நமக்குக்காட்டி நிற்கும். தங்களுக்குள்

ஊர் முன்னேற்றத்திற்கான கமிட்டிகளை அமைத்தல், பிறகு அற்பக் காரணங்களுக்காக உடைத்தல் என்று இன்னும் இதனை விரிவாகக் கூறலாம்.

"இந்தச் சமுதாயம் பிந்தங்கி இருக்கிறதுக்குக் காரணம் என்னென்னு நெனக்கிறிய....

சரி சொல்லு.

வீண் பெருமை. இவன்வள மாரி பெருமையும் பீத்தக் கலயமுமா எவனும் இருக்க மாட்டானுவ."[83]

ஆழி சூழ் உலகு நாவலில் சிலுவையும் சப்பாணியாரும் இப்படிப் பேசிக் கொள்ளும்போதும் மேலும் வாய்ப்புக் கிடைக்கும் இடங்களிலும் ஆற்றல் நிறைந்த அச்சமூகம் சீரழியும் அவலத்தைப் பதிவு செய்திருப்பார் நாவலாசிரியர் குரூஸ்.

அன்றைய வாழ்வை அன்றே வாழந்து முடிக்கும் தனித்த பண்பு கொண்டமையால் இச்சமூகம் பாலியல் சுதந்திரத்துடன் இயங்குவதுடன் அதனை ஒழுங்கீனமாகக் காணும் போக்கை மிதமாகவே கொண்டு இலங்குகின்றது. அந்தரங்க உறுப்புகள் சார்ந்த சொற்கள் மிகச் சாதரணமாக அவர்களின் உரையாடலில் கலந்திருப்பதை நாவலில் பார்க்க முடிகிறது. இப்படிக் கையாளுகின்ற அதே சமயத்தில் அச்சொற்களை மிகுந்த வன்மத்துடன் வசவுச் சொற்களாகப் பிரயோகிப்பதையும் இந்நாவலே காட்டி நிற்கிறது. நாவலின் முதன்மைப் பாத்திரங்களாக காலத்தையும் மரணத்தையும் காமத்தையும் சொல்லலாம்.

அகப் பண்பாட்டின் இன்றியமையா ஒழுக்கங்களான களவு, கற்பு இரண்டுமே பரதவர் வாழ்வியலில் இடம்பெற்றிருப்பதைக் காண முடியும். மனிதன் தோன்றிய காலம் தொட்டு அவனை இழுத்துச் செல்லும் கட்டுப்படுத்த இயலாக் காம இச்சையே இரு நாவல்களையும் முன்னகர்த்துவதில் பெரும் பங்கு வகிக்கிறது எனலாம். ரஞ்சிதம், அல்வாரிஸ், பபிலோன் பாதிரி, தெரேசா, வலேரியா, (கொற்கை) வசந்தா, ஜஸ்டின், சூசை, சுந்தரி டீச்சர் (ஆழி சூழ் உலகு) என நாவல் முழுதும் கிளர்ந்தெழும் காமத்தால் அலைக்கழிக்கப்படும், வதைபடும் கதை மாந்தர் அனேகர். இளம் வயதில் விதவைகளாவோர் அதிகரிக்கையில் அச்சமூகம் மேலும் பல அவலங்களைச் சந்திக்கும் என்று அறிந்திருந்ததாலேதான் காகுச் சாமியார் விதவைத் திருமணங்களை நடத்தி வைத்தார் என்றாலும் சமூகத்தால் முறையற்றது என்று சொல்லப்படும் அளவிலான காமம் கூட இந்நாவலில் பதிக்கப் பெற்றிருக்கிறது. இதனை அச்சமூகத்தின் பாலியல் சுதந்திரத்தின் ஒரு தன்மையாகக் கொள்ளலாம்.

விதவைகள் எல்லாச் சமூகங்கள் போல, இங்கும் ஒதுக்கி வைக்கப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். பிலிப், சந்தக்குருஸின் விதவையான சலோமியை மணக்க நினைக்கையில் அவன் தாய் லூர்து அவளை 'அறுதலி' என்று மறுதலிப்பதையும் (கொற்கை) மடுத்தீனை இழந்த அமலோற்பவத்தின் துயரத்தையும்

(ஆழி சூழ் உலகு) வெளிப்படுத்துகையில் இதை அறிய முடிகிறது. கணவனை இழந்த கைம்பெண்கள் வெள்ளைச் சீலை உடுத்திப் பிறர் பார்வையில் படாமல் வாழ நேரும் அவலத்தை, பூவும் பொட்டும் அவர்களுக்கு மறுக்கப்படுவதை பிலிப் வாயிலாகவும் பேசுகிறார் ஆசிரியர்.

பொதுவாக நம் நாட்டில் ஆறுகளுக்குப் பெண் பெயர்கள் வைப்பது போலவே, இச்சமுதாயத்திலும் கடலை அன்னையாக, குமரி அன்னையை ஆதி பரத்தி என்று சிறப்பித்துப் பேசுவது போலவே தோணிகளுக்கும் கப்பல்களுக்கும் பெண் பெயர்களைச் சூட்டுவது இவர்தம் மரபாக இருக்கிறது. (உ-ம்) ஜெய மேரி. ரெஜினா, ஞானம்மாள், பாக்கிய லட்சுமி. தோணி சார்ந்த வருணனைகளில் கூட பெண்ணோடு ஒப்பிட்டுப் பேசும் வழக்கை இந்நாவல் வெளிக்காட்டுகிறது. கடலைக் கூட ஆண் கடல், பெண் கடல் என்றும் பிரித்து அலையடிக்கும் கடலை ஆண் கடலென்றும் அமைதியாக இருக்கும் கடலைப் பெண் கடல் என்றும் பேதப்படுத்தி, பெண் அமைதியாய் இருக்க வேண்டியவள் என்பதைச் சொல்லாமல் சொல்லி நிற்கிறது. பஞ்சாயத்துத் தீர்ப்பில் கூட 'சேலை கட்டி முக்காடு போட்டு, பொம்புள மாறி ஊர்ப் பொதுவுல மன்னிப்புக் கேக்கனும்' என்பதே தீர்ப்பாக இருந்தது. பெண் என்பவள் இழிவானவள் என்று எண்ணும் எண்ணப்போக்கை வெளிப்படுத்துவதாக இத்தீர்ப்பு அமைகிறது. எல்லாச் சமூகங்களையும் போலவே இச்சமூகத்திலும் மிஞ்சி இருக்கும் ஆணாதிக்கத்தை அவர்தம் வெளிப்படையான இச்செய்கைகள் நமக்குக் காட்டி நிற்கிறது.

அகப் பண்பாடு பற்றிய பரதவர் வாழ்வியல் சார்ந்து சில செய்திகளைச் சொல்லிச் செல்லும் குருஸின் படைப்புகள் பரதவர் வாழ்வியல் அவர் தம் தொன்மம், திருமணம், மரணம், அது சார்ந்த சடங்குகள், இறை நம்பிக்கை, மாந்திரீகம், தோணி சார் நம்புதல்கள், உணவு முறை எனப் பல்வேறு செய்திகளை வெளிப்படுத்துகின்றன. பரதவர்களின் அம்பாப்பாட்டு, தாலாட்டு, பட்டமேற்கையில் பாடும் பாடல், மரியைத் துதித்து பாடும் பாடல்கள் படைப்புகளினிடையில் சரியாகச் செருகப்பட்டு கூடுதல் பலம் சேர்ப்பதுடன் அவர் தம் வாழ்வியல் பதிவாகவும் அமைகிறது.

மனிதன் நம்பிக்கைகளாலானவன். அது பற்றியே ஏராளமான சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நாளது வரையிலும் பின்பற்றி வருகிறான். காரணத்தோடும் காரணமின்றியும் பல்வேறு நம்பிக்கைகள் நம்மிடையே வழங்கி வருகின்றன. தோணி தன் பயணத்தைத் தொடங்கும் சமயத்தில் ''அணியத்து ஏராக்கட்டையின் முனையைக் கழுவி, முதலில் கோவிலைப் பார்க்கும்படி வரச் செய்து, பூமாலையை ஏராக்கட்டையின் முனையில் மாட்டி ஊதுபத்தி பற்ற வைத்து இறை வழிபாடு''[55] செய்யும் சடங்கு பரதவர் சமுதாயத்தில் இருப்பதை அறிய முடிகிறது. மனிதன் தோன்றிய பிறகு தோன்றிய சாதியும் மதமும் அது சார்ந்த சடங்குகளுக்கும் அவன் அளிக்கும் முக்கியத்துவத்தை, அதன் நம்பிக்கைகளை இதன் மூலம் அறியலாம். கடல்சார் நம்பிக்கைகள், நிலம் சார் நம்பிக்கைகள் என்றும் இவற்றைப் பகுக்கலாம். கடல் சார்ந்தவகைகளில், வலம்புரிச் சங்கை 'இராஜ சங்கு' என்று அழைத்து அதைக்

கண்டாலே யோகம் என்றும் மூழ்கி அச்சங்கை எடுப்பவனுக்கு யோகம் என்றும் பலபடக் கூறுவர். சந்தக்குருஸ் கடலில் முழ்கிச் சங்கெடுக்கையில் அது பற்றிய ஏராளமான தகவல்களைத் தம் கொற்கை நாவலில் ஜோ டி குருஸ் தந்திருப்பார்.

மீன்கள் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டவை. கடலில் பாடு செல்லும்போது ஓங்கல்கள் எதிரில் தென்பட்டால் நல்லது. கடலுக்குள் சிறு பிள்ளைகள் அழுவது போலக் கேட்டால் அபசகுனம் போன்ற செய்திகளையும் இந்நாவல் பதிவு செய்துள்ளது. இயற்கையின் பிரம்மாண்டத்திற்கு முன்னால் நிற்க முடியாத தன் தோல்வியை, பிரமிப்பை அதை வழிபடுவதன் மூலம் மனிதன் காட்டி நிற்கிறான். நெருப்பு, பாம்பு, மழை, கடல் என அனைத்தும் அவ்வகையில் அவன் வழிபடும் தெய்வங்களாயின. பிறகு இதுவே தாய்த் தெய்வ வழிபாட்டின் தொடக்கமாகவும் அமைந்ததெனலாம்.

பரதவப் பழங்குடியினர் மிகவும் தொன்மை வாய்ந்த பழங்குடியினர். அதிகம் மாற்றத்துக்குள்ளாகாதவர் என்பதை இன்றைக்கும் அவர்களிடம் இருக்கும் தாய்த் தெய் வழிபாட்டு முறை மூலம் நாம் அறியலாம். ஆதியில் குமரி அன்னையை வணங்கியவர்கள் மத மாற்றம் நிகழ்ந்த பின்பு மரியன்னையை வழிபடுகின்றனர். தோணிகளில் ஜெபமாலை படிப்பது அந்த நாளிலிருந்தே பழக்கப்பட்டிருக்கிறது. இவர்கள் இந்து மதத்தை விட்டுக் கிறித்துவ மதத்திற்கு மாறிய பின்பும் அவர்களிடம் ஆதிக்கம் செலுத்திய இந்து மதச் சடங்குகளை அவர்கள் கை விடவில்லை. திருமண, மரணம் எங்கும் இந்துச் சடங்குகளே விரவி நிற்கின்றன. அது மட்டுமல்லாமல், கிறித்துவப் பாதிரிமார் பல முறை கண்டித்தபோதும் கூட, அவர்கள் முன்னர் பூசித்து வந்த இந்து மதத் தெய்வங்களை வழிபடுவதையும் அவர்கள் நிறுத்தவில்லை. தோணிகளில் பயணம் செல்கையில் துன்பம் நேரும்போது 'தேவ தாயே', 'சித்தாந்திரத் தாயே' என்று ஓலமிடுவது போலவே 'சந்தன மாரி'யையும் அழைத்து வணங்குகிறார்கள். கிறித்துவ மதத்தில் இருந்தபடியே சந்தனமாரியை அவள் கோயிலில் சென்று வழிபடுவதும் விளக்குப் போடுவதும் கொடை செலுத்துவதையும் செய்து கொண்டிருக்கிறார்கள்.

> "சலோமி, தன் கணவன் பிலிப் தோணி வாங்கினால் சந்தனமாரிக்கு வெள்ளிக் காப்பு செய்து போடுவதாக வேண்டிக் கொள்கிறாள்."[84]

இன்றைக்கும் தோணியில் செல்கையில் குமரிமுனை தாண்டும்போது ஆத்தாளுக்குத் தேங்காய் உடைக்கும் வழக்கம் அவர்களிடையே இருப்பதை குருஸ் கொற்கை நாவலில் பதிவு செய்திருப்பார். பரதவர் பாடும் அம்பாப் பாட்டில் மாதாவைப் பற்றி இருப்பது போலவே பரத்தி மகள் தெய்வானை பற்றியும், அவளை மணந்து கொண்ட முருகனைப் பற்றியும் கதைகள் இருப்பதைப் பாடல்கள் புலப்படுத்துகின்றன. அத்துடன் நில்லாமல், நாட்டுப்புறத் தெய்வமான ஒத்தப்பனை முனுசாமி கோயில் பற்றிய அவர் தம் நம்பிக்கைகள் தண்டல் தோமாஸ், பிச்சையா வாயிலாக வெளிப்படுத்தப்படுகிறது.

பரதவர் குலத் தலைவரான பாண்டியபதியும் கூட வருடா வருடம் மகுடமேற்ற நாளில் கன்னியாகுமரி, மதுரை மீனாட்சி, திரு உத்தரகோச மங்கை, கொற்கை சந்தனமாரி கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து கொடை கொடுக்கும் வழக்கம் இருந்திருக்கிறது. சந்தன மாரி கோயிலுக்குச் சென்று குறி கேட்டல், முத்தாரம்மன் கோயில் சென்று அவளுக்கு, வாழைக்குலையும் அரிசி மாவும் இடித்துப் படைக்கும் பழக்கம் பற்றி தொம்மந்திரையார் மூலம் அறிய முடிகிறது. போர்ச்சுக்கீசியர்களின் உதவிக்காக மதம் மாற ஒப்புக் கொண்ட பரதவர் சமுதாயம் தம் பழக்க வழக்கங்களையும் கோவில் வழிபாடுகளையும் மாற்றிக் கொள்ளவேயில்லை. அது மட்டுமின்றி அச்சடங்குகளைக் கிறித்துவ மதத்திலும் புகுத்தி விட்டனர்.

அம்மக்களிடையே வெகு விமரிசையாக நடக்கும் முயல் தீவு அந்தோணியார் திருவிழா, ஆமந்துறை அந்தோணியார் திருவிழா, ஸ்ரீவைகுண்டம் திருவிழா போன்ற திருவிழாக்கள் பற்றியும் ஆசிரியரின் நாவல்கள் விரிவாகப் பேசுகின்றன. இறைசார்ந்த நம்பிக்கைகளாக, மாதா கன்னத்தில் கருப்பாக இருந்ததை அழிக்க முயன்றதும் முடியவில்லை என்றும் அதனால் கொற்றகைக்குக் கெட்ட காலம் தொடங்குகிறது என்றும் நம்பிக்கை கொண்டனர். யேசுநாதர் சிலுவையில் பாடுபட்டு உயிரை ஒப்புக்கொடுத்த நேரம் வேண்டிக் கொண்டால் நினைத்தது நடக்குமென்பதையும் கொற்கை பதிவு செய்கிறது.

பரதவர் தொன்மம் சார்ந்த செய்திகளாக, மறவர் குலத் தெய்வம் முருகன், அங்கே தாய் வழிப் பாசம் மற்றும் தெய்வானை பரத்தி பற்றிய தொன்மம், நரியைப் பரியாக்கியதால் நரிப்பையூர் என்றும் சூர்ப்பனகை மூக்கை அரிந்ததால் மூக்கையூர் என்றும் பெயர் பெற்றதாகத் தொன்மச் செய்திகள் கூறுகின்றன. அதிக விசை தேவைப்படும்போதெல்லாம் பரதவர் மந்திரச் சொல்லாக 'மரியே, மாதாவே, தாயே' ஆகிய சொற்களையே பயன்படுத்துகின்றனர்.

மாந்திரீகம் சார்ந்த பரதவர் நம்பிக்கைகளாகப் பல செய்திகள் இரு நாவலிலும் சொல்லப்பட்டுள்ளன. பாண்டியபதி அரண்மனையில் இருந்ததாகச் சொல்லப்படும் பேயலசு, அதைப் பற்றிய கதைகள் கொற்கை முழுவதும் பரவி இருப்பதையும் நாவல் பதிவு செய்கிறது. உலகம் முழுதும் உள்ள பல்வேறு மதங்களிலும் மாந்திரீகம் (Black Magic) தொடர்பான நம்பிக்கைகள் பல உள்ளன. அப்படி, 'ஆழி சூழ் உலகு' புதினத்தில் இருட்டியார் என்றும் பாத்திரம் தொள்ளாளியாகத் தொழில் செய்கிறார். பரதவருக்கே உரித்தான சொற்களில் ஒன்றான 'தொள்ளாளி' என்ற சொல்லுக்கு மாந்திரீகம் செய்பவன் என்பதே பொருளாளகும். இருட்டியார் மாந்திரீகம் செய்து கடலை வறண்டு போகச் செய்வதால் பாடின்றி மக்கள் வறுமைப்படுவதையும் மீறிச் செல்லும் மக்கள் கை முறிந்து கால் முறிந்து வந்ததையும் அதனால் கோபாவேசம் கொண்ட மக்கள் இருட்டியாரைத் தாக்கச் செல்ல மக்களுக்குப் பயந்து அவர் தூக்கு மாட்டிக் கொண்டு தற்கொலை செய்து கொள்வதாகவும் ஒரு அத்தியாயம் முழுதும் விவரித்திருப்பார் ஆசிரியர். அது மட்டுமல்லாமல் யாரோ வைத்த செய்வினையினால்

தான் மடுத்தீன் இறந்ததாக இருட்டியார் மூலமாகப் பதிவு செய்கிறார் ஆசிரியர். 'பேவெள்ளி' பற்றி வரும் குறிப்பில் கூட அது அமாவாசை இருட்டில் தான் வரும் அதனை அம்மணமாக ஏறி வெளக்குமாற்றால் அடித்தால் அது போய் விடும் என்றும் அது சார்ந்த நம்பிக்கையை நாவலில் கூறுகிறார். அமுதனின் அக்கா சுமதியின் கணவர் வெளிநாட்டில் இறந்து அவர் ஆவி கொற்கை வருவதாகவும் கதையை விரித்திருப்பார். இப்படி மாந்திரீகம் பேய், ஆவி சார்ந்த நம்பிக்கைகளை குருஸின் படைப்புகள் வெளிப்படுத்துகின்றன. என்னதான் கிறித்துவ விசுவாசத்தில் இருந்தாலும் இன்னும் பேய் விளையாட்டுகளிலும் செய்வினைகளிலும் நம்பிக்கையும் பயமும் அவர்களை ஆட்டிப்படைக்கத்தான் செய்கிறது என்று ஆழி சூழ் உலகில் ஆசிரியர் பதிவு செய்திருப்பதே அம்மக்களின் இது சார்ந்த அதீத நம்பிக்கைகளைக் காட்டி நிற்கும்.

பரதவர் திருமண முறை அல்லது மரணச் சடங்குகளில் கூட இந்து மதத்தின் தாக்கத்தை வெகுவாகக் காண முடியும். வழிபடும் இறைவடிவம் மாறியதே அன்றி வழிபாட்டு முறைகளிலும் சடங்குகளிலும் பெரும் மாற்றத்தை அவர்கள் ஏற்றுக் கொள்ளவேயில்லை. விதவைத் திருமணம், வயதில் மூத்த பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளுதல் போன்றவை இச்சமூகத்தில் இயல்பானதாக இருக்கின்றன. மணமக்கள் ஊர்வலம் செல்லும்போது ஊரில் எத்தனை தெருக்கள் இருக்கின்றதோ, ஒவ்வொரு தெருவுக்கும் வெற்றிலைப் பெட்டி வைக்க வேண்டும். திருமணத்தன்று மாப்பிள்ளை பாண்டியபதி ராஜாவாகக் கருதப்பட்டு அன்றைய தினம் மாப்பிள்ளைக்குக் குடை பாவாடை பிடித்து, கட்டியம் கூறி, நடை விரிக்கும் பழக்கம் இருந்து வருகிறது. ஊர்த்தலைவர் மாப்பிள்ளைக்குப் பாரம்பரியத் தொப்பிய மாட்டி ஊர்வலம் வந்த பிறகு மஞ்சள், குங்குமம் கரைத்து சூடம் கொளுத்து ஆரத்தில் எடுக்கும் பழக்கமும் இன்றைக்கும் இருந்து வருகிறது.

சிலுவைக் கலியாணம் என்பது அவர்களின் திருமண முறைகளில் ஒன்று. பெற்றோர் சம்மதமின்றிக் காதலித்துத் திருமணம் செய்வோர் தேவாலயத்தில் பாதிரியார் முன்பு இருவர் சாட்சிக் கையெழுத்திடத் திருமணம் செய்வதே சிலுவைக் கலியாணமாகும். கோயில் மணி அடிப்பதில் கூட பரதவரின் தனி வழக்கம் வெளிப்படுகிறதை நாவல் சொல்கிறது. அஸ்திவார மணி, துக்க மணி என ஒவ்வொன்றும் ஒவ்வொரு முறையில் அடிக்கப்பட்டு வருகிறது.

மரணச் சடங்குகளில் இறந்தவர் உடலைப் பெட்டியில் வைத்து அடக்கம் செய்கையில் பிடிமண் போடுதல், பால் ஊற்றுதல் ஆகிய இந்துமதச் சடங்குகள் காணக்கிடக்கின்றன. இறந்தவரின் உடல் அடக்கம் செய்யப்படும் மையவாடிக்குச் சென்றவர்கள் கடலில் கால் நனைத்துப் பின் வீடு திரும்புவது அவர் தம் வழக்கம். காரணம் புனிதமான கடல் நீர் படுகையில் அசுத்த ஆவிகள் விலகி ஓடுமென்பது நம்பிக்கை. கடற்துறைகளில் இறந்த உறவினர்களை வருடத்திற்கு ஒரு முறை நினைவு கூர்ந்து அவர்களுக்காகப் பலி பூசை கொடுக்கும் முறை உண்டு. பூசை

முடிந்த பிறகு கல்லறைக்குச் சென்று மெழுகுவர்த்தி கொளுத்தி மலர் மாலைகள் சார்த்தி பிராத்தனை நடக்கும்

பரதவரின் தொழில் பற்றியப் பேசுகையில் கடலில் சென்று மீன் பிடித்தல், சங்கு குளித்தல், முத்தெடுத்தல் ஆகியவை அவர்களின் பிரதானத் தொழிலாக உள்ளன. அதனாலேயே இந்நாவல்களில், கட்டுமரம் பற்றியும் தோணி கட்டும் முறை பற்றியும் மிக விரிவாக விளக்கி நிற்பார் ஜோ டி குருஸ். அது போலவே முத்து விளைச்சல் இருக்குமிடம் பற்றியும் ஆணி முத்து, கண்டு முத்து போன்ற வகை வகையான முத்துக்களைப் பற்றியும் மூச்சடக்கி முத்து மற்றும் சங்கு எடுத்தலைப் பற்றியும் பேசியிருக்கின்றார்.

பரதவரின் உணவு பெரும்பாலும் கடல் சார்ந்தே அமைந்திருப்பதில் வியப்பொன்றும் இருக்க முடியாது. வார முழுதும் மீன் குழம்பு, கருவாட்டுக் குழம்பும் அவர்கள் பிராதான உணவாகவும் ஆட்டுக்கறி எடுத்து சமைத்தல் என்பது விசேஷமாகவும் சொல்லப்பட்டுள்ளது. இவ்விரு நாவல்களில் அவர்களின் பிரத்தியேக உணவு முறைகள் பற்றியும் சிலவற்றின் செய்முறையும் கூடக் கொடுக்கப்பட்டுள்ளது. சிறப்பு சங்கு சதையை எடுத்துத் தூய்மை செய்து காய வைத்து அவிச்சுத் தின்றால் அபார ருசியாக இருக்குமெங்கிறார் குருஸ். கொட்டப்புளி கரைத்து மசாலா சேர்த்து பதம் விடாமல் வெங்காயம் உரிச்சி ஒரு பச்ச மொளகாயும் நசுக்கிப் போட்டுக் கொதிக்க வைத்து இறக்கினால் காரப்பொடி மீன் வாசம் தூக்கும். இன்னும் வேளா முட்டைப் பணியாரம் திருக்கைக் குடல் வறட்டி என்று வெவ்வேறு வகையான அவர்களுக்கே உரிய உணவு வகைகளைக் கூட விட்டு வைக்காமல் இந்த இரு நாவல்களிலும் சொல்லியிருக்கிறார்.

பெருங்குடிப் பரதவரின் வாழ்வியல் சார்ந்த நெறிமுறைகளை ஜோ டி குருஸின் இரு நாவல்களுமே விரிவாகப் பதிவு செய்கின்றன. 'ஆழி சூழ் உலகு' கட்டுமரம் ஏறி மீன் பிடிக்கச் செல்பவர் பற்றியும் கொற்கை தோணியேறிக் கடல் பயணம் செல்பவர் பற்றியும் பதிவு செய்கின்றன. இரண்டுக்கும் பரதவர் வாழ்க்கையே களமாக அமைகின்றன. நமக்கு மிகக் குறைவாகவே இலக்கியவடிவம் பெற்றிருக்கக் கூடிய நெய்தல் நிலம் சார்ந்த பரதவர் வாழ்வை இவ்விரு நாவல்களும் விரிவாகப் பேசி மேலும் பல தகவல்களை நம்பிக்கைகளை வாழ்வு சார்ந்த துயரங்களை அவர்தம் பாடுகளைப் போராட்ட வாழ்வை, கடலே வாழ்வாய் வாழ்வே கடலாய் இருக்கு நிலையைத் தீவிரமாக வெளிப்படுத்துகிறது ஜோ டி குருஸின் படைப்புலகு.

இயல் முடிவுகள்

இந்த இயல் கிட்டத்தட்ட ஆய்வின் தலைப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைகிறது. சங்ககால நெய்தல் வாழிடங்கள், பரதவர்கள் வாழ்க்கை, பரதவர்களின் வரலாறு மற்றும் பரதவர்கள் கடந்து வந்த பல நூற்றாண்டு காலங்கள் சுருக்கமாக இடம்பெறுகின்றன.

தற்காலப் படைப்புகளைப் பொறுத்தவரை 'கொற்கை' என்பது நாம் நினைப்பது போல சங்ககால கொற்கை அல்ல. அது ஆயிரம் ஆண்டு கால தூத்துக்குடியின் நிலைப்பாடு.

சங்ககால நெய்தல் பதிவுகளும், தற்கால நெய்தல் பதிவுகளும் முற்றிலும் வேறுபட்டவை. இதில் முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், மீன்பிடித்தல் போன்றவை மட்டும் பொதுவாக உள்ளன.

பரதவர்கள் ஒரு குழுவாகத் தங்களுடைய இனப்பெயர், தொழில், வாழ்வுமுறை, சடங்குகள், அவர்களுடைய முக்கிய குணங்களான வீரம், விருந்தோம்பல் ஆகியனவற்றைக் கொண்டவர்கள். இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன.

முத்துக்குளித்துறையில் பரதவர்கள் மிகவும் செழிப்புடன் வாழ்ந்ததாக, சங்க இலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன. பலவகையான அரசர்களால் நாளடைவில் இக்கடற்பகுதி ஆட்சி செய்யப்பட்டபோது இங்குள்ள மக்களின் வாழ்வின் மாற்றங்கள் ஏற்பட்டன.

முத்துக்குளித்துறை பல்வேறு தலைநகர்களைக் கொண்ட பல அரசர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. முத்துக்கள் அதிகம் காணப்பட்ட கொற்கை, பாண்டியர்களின் முதல் மற்றும் முதன்மையானத் துறைமுகமாகவும், வணிகத்தளமாகவும் விளங்கியது.

''உலகின் அனைத்து முத்துக்களும் முத்துக்குளித்துறையில் இருந்துதான் வந்தன என்றும், முத்துக்குளித்துறைகும் அரேபியாவின் பல்வேறு மக்களுக்குமிடையே நிலையான வர்த்தகத் தொடர்புகள் இருந்தன'' என்றும் மார்கோபோலோ கூறுகிறார்.

நெய்தல் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகிய பரதவர் பற்றி தொல்காப்பியம் தொட்டு, மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, நற்றிணை, குறுந்தொகை, அகம் ஆகியவை நம் பரதவர் வாழ்வும் வளமும் குறித்து நயம்பட நவில்கிறது.

பாண்டியரின் சிறந்த துறைமுகம் இதுவாகும். இத்துறைமுகம் பழங்காலத்தில் மக்களால் மிகவும் விரும்பப்பட்ட முத்துக்குப் பேர் போன இடமாகும்.

மீன் பிடிப்பதே நெய்தல் நில மக்கள் செய்யும் தொழிலாகும். கரையோரங்களில் இவர்கள் வாழ்ந்த குடியிருப்புகள் பட்டினம் எனப்படும்: சிறு குடியிருப்புகள் பாக்கம் எனப்படும்.

ஏறக்குறைய முத்துக்குளித்துறையின் அனைத்து கிராமங்களிலும் பரதவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருசில கிராமங்களில் மறவர்களும், கரையர்களும் இருந்தனர். கரையர்கள் மீன் தொழிலில் ஈடுபடுபட்டனர். இவ்வினம் பரதவர்களைவிடச் சமுதாய அந்தஸ்தில் குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

பரதவர்கள் சைவசமயத்தைப் பின்பற்றினார்கள். இவர்கள் வாழ்ந்த அனைத்து ஊர்களிலும் இந்துக் கோவில்கள் இருந்தபோதிலும், திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி முருகன் கோவிலின் மீது பரதவர்களுக்கு அதிக பக்தியும் பற்றும் இருந்தன. ஏனெனில் முருகனின் இரண்டாவது மனைவியான தெய்வானை ஒரு பரதவப் பெண் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது.

திருச்செந்தூர் கோவிலில் நடைபெறும் பெரிய திருவிழாவில் பரதவரின் ஏழு ஊர்களைச் (மணப்பாடு, ஆலந்தலை, வீரபாண்டியன்பட்டணம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பார், வேம்பார்) சார்ந்த மக்கள் முக்கியப் பங்கினை வகித்தனர்.

ஒவ்வொரு கிராமமும் தன்னுடைய நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டது. கிராம அதிகாரம் முழுவதும் பட்டங்கட்டிகள் கையில் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள செல்வாக்கு மிகுந்த நபர்களிடமிருந்து பட்டங்கட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். பட்டங்கட்டிகளின் தலைவர் பட்டங்கட்டிமார் என்று அழைக்கப்பட்டார்.

உணவுக்கு மட்டுமல்லாமல், நெய்தல் நிலத்துப் பரதவர்களுக்கு கருவாடு தயாரிப்பதற்கும் உப்பு மிகவும் அவசியமானதாக இருந்தது. எனவே அவர்கள் கடற்கரைகளில் உப்பளங்கள் அமைத்து, அதில் உப்பை விளைவித்தனர்.

'முத்துக் குளித்துறையில் போர்ச்சுக்கீசியர்' என்ற நூலில் அருட்சகோதரி ச.டெக்லா அவர்களும் 'கடல்' என்ற நூலின் திரு. கு.ராஜாராம் அவர்களும் ஓபீர் என்பது ஓவரி எனக் குறிப்பிடுகின்றனர்.

அடிக்குறிப்புகள்

1. அகம்., பா.350:11
2. ச.டெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், பக். 1-7
3. பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், முத்துக்குளித்துறை மீனவர் வரலாறு, ப.25
4. அகம்., பா.340
5. மேலது., பா.350
6. நற்றிணை, பா.4
7. குறுந்., பா.184
8. நற்றிணை, பா.11
9. மதுரைக்காஞ்சி, அடி 143
10. புறம்., பா.378
11. நற்றிணை, பா.74
12. நற்., பா.38
13. அ.ஜோ.இவாரியஸ் பர்னாண்டோ, நீலக் கடலும் நீண்ட கனவும், பக். 29-32
14. மதுரைக்காஞ்சி, அடிகள் 135-138
15. அகம்., பா.27
16. மேலது., பா.130
17. பட்டினப்பாலை, அடிகள் 185-193
18. மதுரைக்காஞ்சி, அடிகள் 318-323
19. பெரும்பாணாற்றுப்படை, அடிகள் 61-65
20. பட்டினப்பாலை, அடிகள் 28-30
21. அகம்., பா.140
22. மேலது., பா.390
23. குறுந்., பா.269
24. புறம்., பா.33
25. ஐங்., பா.47
26. புறம்., பா.343
27. பதிற்றுப்பத்து, பா.66
28. பொருநராற்றுப்படை, அடிகள் 214-2147
29. பெரும்பாணாற்றுப்படை, அடிகள் 158-166
30. பட்டினப்பாலை, அடிகள் 206-210
31. சிலம்பு., பா.5
32. மேலது., பா.27
33. மேலது., பா.27
34. மேலது., பா.10
35. சிலம்பு., பா.4
36. மேலது., பா.5

37. மேலது., பா.4
38. மேலது., பா.1
39. மேலது., பா.5
40. மேலது., பா.5
41. சிறுபாணாற்றுப்படை, அடி 153
42. மதுரைக்காஞ்சி, அடி 137
43. பட்டினப்பாலை, பா.26-27
44. நற்றிணை, பா.101
45. சிறுபாணாற்றுப்படை., அடிகள் 156 -158
46. பட்டினப்பாலை, அடிகள் 111-112
47. புறம்., பா.24
48. குறுந்., பா.1-4
49. மதுரைக்காஞ்சி, அடிகள் 255-256
50. பட்டினப்பாலை, அடி 197
51. Wicki, Joseph, ed., Documenta Indica, Vol.II, 1950, Page 550-560
52. Pye-Smith, CHarlie, Rebels and Outdcasts – A Journey through Christian India, New Delhi, Page 189-190
53. Wicki, Joseph, ed., Documenta Indica, Vol.II, Page 557-560
54. Wicki, Joseph, ed., Documenta Indica, Vol.III, Page 231
55. Arunchalam, The History of the Pearl Fishery Coast of the Tamil Coast, Annamalai Unviersity, Page 76-77
56. மேலது., ப.79
57. Hornell, James, The Indian (Pandyas) Pearl Fisheries and the Gulf of Mannar and Palk Bay, Vol.XVI, Page 6
58. Schurhammer, Georg, Francis Xavier – His Life, His Times, Vols. I-III, Page 188
59. Arasarathnam, Sinnappah, Merchants, Maritime India in the Seventeenth Century, New Delhi, Page 145
60. Roche, A.Patrick, Fisherman of the Coromandel – A Social Study of the Paravas of the Coromandel, New Delhi, Page 40-41
61. Barbosa, Durate, The Book of Duarate Barbosa, Vol II, Page 22-24
62. ச.டெக்லா, முத்துக்குளித்துறையில் போர்ச்சுக்கீசியர், பக். 11-18
63. நற்றிணை, பா.331
64. அகம்., 350:11-13
65. நற்றிணை, பா.392
66. புறம்., பா.378

67. புனித சவேரியார் எழுதிய மடல்கள் : மணப்பாடு : 16-6-1544, 30-6-1544, 1-8-1544, திருச்செந்தூர் 7-9-1544.
68. மேலது, 14-5-1544, 1-8-1544 எழுதிய மடல்கள்
69. இயேசு சபைக்குரு அன்றிக்கஸ் அடிகளார் 19-12-1561இல் எழுதிய மடல்
70. Pate, H.R., Madras Dictrict Gazetters, Tinnelvelly, Vol.I, Madras, Page 435
71. Schurhammer, Georg, Francis Xavier – His Life, His Times, Vols. I-III, 1997, Page 354
72. Pate, H.R., Madras Dictrict Gazetters, Tinnelvelly, Vol.I, Madras, 1917, Page 271
73. பேராசிரியர் வெ. மாணிக்கம், தமிழ் அமுது, நெல்லை வானொலி, 9.8.09
74. Caldwell, R., A History of Tinnevely, New Delhi, Page 286
75. Schurhammer, Georg, Francis Xavier – His Life, His Times, Vols. I-III, Page 299
76. அருளாளர் ஜோசப் பர்னாந்து வெள்ளி விழா மலர், ப. 13
77. டாக்டர். ஆ.பி.அந்தோணி இராசு, கிறிஸ்தவ அம்மானைச் சிந்தனைகள், ப. 58
78. அதிரியார் அம்மானை, கண்ணி 29-54
79. ஆ.பி.அந்தோணி இராசு, கிறிஸ்தவ அம்மானைச் சிந்தனைகள், பக். 58, 60
80. தம்பி ஐயா பர்னாந்து, பாண்டியர் பண்பாட்டில் பழையகாயல், பக். 50-59
81. ஜோ டி குருஸ், கொற்கை நாவல், ப. 15
82. மேலது, ப. 325
83. மேலது, ப. 378
84. மேலது, ப. 579

முடிவுரை

சங்ககால நிலப்பிரிவின் அடிப்படையில் அந்தந்த நில மக்கள் தங்களின் தொழில்களை செய்தனர். அதோடு காலம் காலமாக மரபு நிலையில் செய்து வரும் பண்பாட்டு பிரதிபலிப்புத் தொழில்களும் பல வழக்கில் இருந்தன. சங்ககாலம் உணவு தேடி வாழும் இனக் குழு வாழ்க்கை. கால்நடை வளர்ப்பினை மையமாகக் கொண்ட மேய்ச்சல் நில வாழ்க்கை, உணவு உற்பத்தி செய்யும் ஒரு விதமான நிலவுடைமை சமுதாய வாழ்க்கை. மூன்று வகை சமூக அமைப்புகளாக வெவ்வேறு நிலப்பகுதிகளில் ஒரே நேரத்தில் நிலவிய காலம்.

நெய்தல் நிலப்பகுதியில் மீன் பிடித்தலும் உப்பு உற்பத்தி, உலர்மீன் உற்பத்தி செய்தல், இவற்றைப் பிற நிலப்பகுதிகளுக்குக் கொண்டு சென்று பண்டமாற்று செய்வதும் முக்கியத் தொழில்கள் ஆயின. அதன் வளர்ச்சியாகக் கடல் வாணிகம் உருவானது. நெய்தல், மருதம் ஆகிய இரு நிலங்களிலும் மீன் பிடித்தனர் மக்கள். மீன்பிடித் தொழிலை வேட்டைத் தொழிலோடு ஒப்பிட்டு 'மீன்வேட்டை' என்றும் கூறுவர். இம்மக்கள் நெய்தல் நிலத்தில் 'பரதவர்' என்றும் மருத நிலத்தில் 'பாணர்' என்றும் அழைக்கப்பட்டனர். மீன்பிடிக்க பயன்படுத்திய படகு 'திமில்' எனப்பட்டது. இரவு நேரத்தில் சென்று வைகறையில் திரும்பினர். வலை, உளி, பறி, தூண்டில் ஆகிய கருவிகளால் மீன்பிடித்தனர். குறுங்கண் வலை, நாள் வலை, கோல்வலை எனப் பலவகை வலைகளை மீன்பிடிக்கப் பயன்படுத்தினர். இறால், சுறா, அயிரை, வரால், கெளுத்தி, வாளை எனப்பல மீன்களை கள்ளுக்கு துணை உணவாகப் பொறித்து கள்ளுக் கடைகளில் விற்றுள்ளனர்.

பெருங்குடி பரதவரின் வாழ்வியல் சார்ந்த நெறிமுறைகளை ஜோடி குருஸின் இருநாவல்களும் விரிவாகப் பதிவு செய்துள்ளன. கடலுக்கும் கரைக்குமான இடையறாத பயணமாகத் தம் வாழ்வைக் கொண்டிருக்கும் பரதவரின் பல நூற்றாண்டுப் பயணம் இந்த நாவலில் தெளிவாக பளிச்சிடுகிறது.

நெய்தலைப் பாடிய புலவர்கள் பலர் இருப்பினும், தலைசிறந்து விளங்குபவர்கள் மூவர் ஆவார். அவர்கள் முறையே உலோச்சனார், அம்மூவனார், நல்வந்துவனார் என்பவராகும்.

திருவள்ளுவர், இளங்கோவடிகள், சீத்தலைச் சாத்தனார் ஆகியோரை நெய்தல் நிலத்தைச் சார்ந்த புலவர்கள் என்று கடற்கரைப் படைப்பாளிகள் என்ற நூலில் ஆசிரியர் திரு.தொ.சூசைமிக்கேல் குறிப்பிடுகிறார்.

தூத்துக்குடி மாவட்டம் உவரி கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஜோடி குரூஸ் கொற்கை என்ற புதினத்தையும் ஆழி சூழ் உலகு என்ற நூலையும் எழுதியுள்ளார். அவரது இரு புதினங்களும் மீன்பிடி தொழில் புரியும் பரதவர் வாழ்க்கையைக்

களமாகக் கொண்டவை. மேலும் 2013-இல் வெளியான மரியான் திரைப்படத்துக்கு வசனம் எழுதியுள்ளார்.

இவரது 'கொற்கை' என்ற புதினத்திற்காக 2013-ஆம் ஆண்டிற்கான சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டுள்ளது.

இவர் எழுதிய 'ஆழி சூழ் உலகு' எனும் நூல் தமிழ்நாடு அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் 2004-ம் ஆண்டுக்கான சிறந்த நூல்களில் புதினம் எனும் வகைப்பாட்டில் பரிசு பெற்றிருக்கிறது.

இன்று தமிழகத்தின் இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்களுக்கு வழங்கப்படும் பரதர் என்ற பெயர், சங்க இலக்கியத்தில் மூன்று இடங்களில் கையாளப்பட்டுள்ளது.

பாண்டியப் பெருமன்னர்களும், சோழப் பேரரசர்களும் பரதவர்களின் வலிமையையும், திண்மையையும், படை வலிமையையும் கண்டு பலகால் பெருங்கவலை கொண்டிருந்ததாக சங்க இலக்கியங்கள் உரைக்கின்றன.

சங்க காலத்திற்கு முன்பிருந்தே முத்துக்குளித்துறையில் சங்கெடுத்தல் நிழ்ந்து வந்திருக்கவேண்டும் என்பதைச் சங்க இலக்கியங்களும், அகழ்வாய்வுகளும் மெய்ப்பிக்கின்றன. முத்துக் குளித்தல், சங்கெடுத்தல் ஆகிய இரு தொழில்களையும் பரதவர்களே மேற்கொண்டிருந்தனர்.

பண்டைத் தமிழ் பெருங்குடி மக்களான பரதவர், நெய்தல் நிலத்து மண்ணின் மைந்தர்கள் என்று சங்க இலக்கியத்துப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

நெய்தல் நில ஊர்கள் பாக்கம் என்று இலக்கியங்களில் வழங்கப்பட்டதைப் போன்று, இன்றும் அதே பெயரால் அழைக்கப்பட்டு வருகின்றன.

பரதவ மக்கள் மீன் பிடித்தலை முக்கிய தொழிலாகக் கொண்டிருந்தாலும், முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், உப்பு விளைத்தல் ஆகியவற்றையும் திறம்பட செய்தனர்.

பரதவர் மரபில், ஆண்மகன் தான் விரும்பும் கன்னியை மணப்பதெனின் பரிசமாகப் பொன்னும், திரண்ட பொருளும் அளவற்ற அணிகலன்களும் கொடுக்கும் வழக்கம் உண்டு என்று கருதப்படுகிறது.

. பரதவ மக்கள் விருந்தினரை அன்போடு வரவேற்று, இனிதாய் பேணிப் பகிர்ந்து உண்டு வாழும் பண்புடையவர்.

பரதவர்கள் முத்துக்குளித்தலில் ஈடுபட்டு அவ்வணிகத்தில் உரிமையும் தலைமையும் பெற்று விளங்கினர் என்று சங்க இலக்கியச் சான்றுகள் உரைக்கின்றன.

கடல் வணிகத்தில் பயன்படுத்தப்பட்ட மரக்கலங்களை இயக்கியவர்கள் பரதவர்களே என்பது மறுக்க முடியாத உண்மையாகும். பரதவர்கள் உலகின் தலைசிறந்த கடலோடிகளாக விளங்கினர், என்பதை இலக்கியங்கள் மெய்ப்பிக்கின்றன.

ஆழி சூழ் உலகு நாவல் ஆர்.என். ஜோ டி குருஸ் எழுதிய முதல் நாவல். இந்த நாவல் இன்று தமிழின் தேர்ந்த வாசகர்களால் ஓர் இலக்கிய சாதனையாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்நாவலில் சுறா வேட்டையாடுதல், பரதவ மக்களின் நம்பிக்கைகள் வழிபாடுகள் இடம்பெறுகின்றன. இறப்புச் சடங்குகள், மீன் விற்பனை, தொழில் பற்றிய செய்திகளைக் காணலாம்.

திருச்சபையின் விழாக்கள், வழிபாட்டுச் செய்திகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பரதவ மக்களின் பண்பாட்டுச் செய்திகள், பழக்கவழக்கங்கள், கலாச்சார பரிவர்த்தனைகள் ஆகியவற்றையும் எடுத்துக் கூறுகிறார்.

ஆழி சூழ் உலகு நாவலை முழுவதும் ஆக்கிரமித்துள்ளப் பாத்திரம் கோத்ரா பிள்ளை. நாவலில் முக்கிய இடம்பிடித்துள்ளார். தொம்மாந்திரை, போஸ்கோ இவரது நண்பர்கள் வட்டம்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் இரண்டாவது முக்கிய பாத்திரப் படைப்பு தொம்மாந்திரையார்.

பழங்காலம் முதலே தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் ஏற்றுமதி இறக்குமதி நடந்துள்ளது. நாவலாசிரியர் இதனை கதையில் இடம்பெறச் செய்கிறார்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் மூன்றாவது பெரிய பாத்திரப் படைப்பு வியாகுலப் பிள்ளை.

கோவில்பட்டி ரத்தினசாமி நாடார் மீன் வியாபாரி. ஏற்றுமதி செய்யும் தொழிலதிபர். ஆமந்துரை கிராம மக்களோடும், தொம்மாந்திரையோடும் நெருங்கிய தொடர்பு கொண்டவர். நியாயமாக வாழ்பவர்.

ரத்தினசாமி நாடார் மூலம் தூத்துக்குடியிலிருந்து கொழும்பிற்கு கருவாடு ஏற்றுமதி நடைபெற்று வருவதை நாவலாசிரியர் இந்த நாவலில் பதிவு செய்கிறார்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் பெண் பாத்திரம் வசந்தா. கிராமிய காதலை ரம்மியமாக இந்தப் பாத்திரத்தின் வழி ஆசிரியர் வெளிப்படுத்துகின்றார்.

கிறிஸ்தவ ஆலய வழிபாட்டு முறை பற்றிய செய்தி இங்கே பதிவு செய்யப்படுகிறது.

முதல் உலகப்போர் 1914-1918ஆம் ஆண்டு நடந்தது. அதனை ஆழி சூழ் உலகு நாவலில் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர்.

ஆழி சூழ் உலகு நாவலில் இடம்பெறும் இளைஞர் சிலுவை. கோத்ராப் பிள்ளையுடன் நெருக்கம் கொண்டவன்.

கடலில் கிடைக்கும் ஆமையின் ரத்தத்தைக் குடித்தால் மனிதனுக்கு வரும் மூல முளை என்கிற நோய் குணமாகும் என்கிற நம்பிக்கை மக்களிடம் காலம் காலமாக இருந்து வருகிறது. அதனை இந்த நாவலிலும் ஆசிரியர் இடம்பெறச் செய்கிறார்.

1965ஆம் ஆண்டு தனுஷ்கோடியை புயல் தாக்கி அழிந்தது. இந்த வரலாற்றுச் செய்தியினை நாவலாசிரியர் இங்கே பதிவு செய்கிறார்.

கொற்கை என்பது பாண்டிய மன்னர்களின் துறைமுகப்பட்டினம் அல்ல. இது முழுக்க முழுக்க தூத்துக்குடியைப் பற்றிய செய்திகளையம் கொஞ்சம் வரலாற்றையும் கற்பனையுடன் கலந்து எழுதப்பட்ட ஒரு நாவல் வடிவம்.

இதில் பழங்கால கப்பல் பயணம் தோணிகள் மூலம் சரங்குகளை கையாளும் திறம் ஆகியவை குறிப்பிடப்படுகின்றன. தூத்துக்குடி ரயில் நிலையம் குறித்த செய்திகள் அதிலிருந்து பருத்தி, உப்பு மற்றும் மீன் கருவாடு ஏற்றுமதி செய்யப்படும் செய்திகள் இடம்பெறுகின்றன.

தற்போது வ.உ.சி. மார்க்கட் பகுதியிலுள்ள சந்தன மாரியம்மன் கோவில் பரதவர்களின் சைவ சமய வழிபாட்டு கோவிலாக திகழ்ந்ததை ஆசிரியர் பதிவு செய்துள்ளார்.

ஜோ டி குருஸ் குறிப்பிடும் கொற்கை இன்றைய தூத்துக்குடி ஆகும்.

முத்துக்குளித்துறையில் வேம்பார், வைப்பார், தூத்துக்குடி, புன்னக்காயல், வீரபாண்டியபட்டினம், ஆலந்தலை, மணப்பாடு ஆகிய ஏழு ஊர்களையும் ஒன்றாகச் சேர்த்து ஏழு கடற்கரை என்றழைக்கப்பட்டது.

தூத்துக்குடியில் சாதித்தலைவர் என்ற பெயரில் முத்துக்குளித்துறையில் உள்ள அனைத்துப் பரதவர்களுக்கும் தலைவராக விளங்கினார். இவர் ஏழூர் கோமகன் என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்பட்டு வந்தார். இவரது இருப்பிடம் பாண்டியபதி என்றழைக்கப்பட்டது.

பரதவர் என்று சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டவர்கள் இன்று பரவர், பரவன், முக்குவர், மீனவச் செட்டியா, பருவத ராஜகுலம், செம்படவர், மீனவப் படையாச்சி, நாட்டார், வர்ணகுல முதலியார், பெத்தவர், சீவிலியர், வலையர், அம்பலக்காரர், முத்தையர், பட்டங்கட்டி, கடையர், கரையர், பரமன், ஓடக்காரர் என பல்வேறு சாதிப்பெயர்களைத் தாங்கி மீன்பிடிப்பைச் செய்து வருகின்றனர்.

தங்களுக்கு முத்துக்குளிக்கும் உரிமையை மீண்டும் பெற்றுத்தந்த போர்ச்சுக்சீசியரின் ஆதரவு தங்களுக்குத் தொடர்ந்து கிட்டிட, கடலோர இந்து மீனவர்கள் ஒட்டுமொத்தமாகக் கத்தோலிக்க சமயத்திற்கு மாறினர்.

பரதவர் சமுதாயம் முன்னேற்றமடைந்து, இன்றளவும் மாறாமல் கத்தோலிக்க கிறிஸ்தவ மதத்தில், பாப்பரசரின் தலைமையின் கீழ் நிலைத்து நிற்பது, அவர்களின் ஆழ்ந்த விசுவாசத்தை உலகுக்கு எடுத்துச் சொல்லும் செயலாகவே உள்ளது என்பது நிதர்சனமான உண்மையாகும்.

இந்த இயல் கிட்டத்தட்ட ஆய்வின் தலைப்பை எடுத்துக்காட்டும் வகையில் அமைகிறது. சங்ககால நெய்தல் வாழிடங்கள், பரதவர்கள் வாழ்க்கை, பரதவர்களின் வரலாறு மற்றும் பரதவர்கள் கடந்து வந்த பல நூற்றாண்டு காலங்கள் சுருக்கமாக இடம்பெறுகின்றன.

தற்காலப் படைப்புகளைப் பொறுத்தவரை 'கொற்கை' என்பது நாம் நினைப்பது போல சங்ககால கொற்கை அல்ல. அது ஆயிரம் ஆண்டு கால தூத்துக்குடியின் நிலைப்பாடு.

சங்ககால நெய்தல் பதிவுகளும், தற்கால நெய்தல் பதிவுகளும் முற்றிலும் வேறுபட்டவை. இதில் முத்துக்குளித்தல், சங்கு குளித்தல், மீன்பிடித்தல் போன்றவை மட்டும் பொதுவாக உள்ளன.

பரதவர்கள் ஒரு குழுவாகத் தங்களுடைய இனப்பெயர், தொழில், வாழ்வுமுறை, சடங்குகள், அவர்களுடைய முக்கிய குணங்களான வீரம், விருந்தோம்பல் ஆகியனவற்றைக் கொண்டவர்கள். இவர்களைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கிய நூல்களில் காணப்படுகின்றன.

முத்துக்குளித்துறையில் பரதவர்கள் மிகவும் செழிப்புடன் வாழ்ந்ததாக, சங்க இலக்கிய நூல்கள் குறிப்பிடுகின்றன. பலவகையான அரசர்களால் நாளடைவில் இக்கடற்பகுதி ஆட்சி செய்யப்பட்டபோது இங்குள்ள மக்களின் வாழ்வின் மாற்றங்கள் ஏற்பட்டன.

முத்துக்குளித்துறை பல்வேறு தலைநகர்களைக் கொண்ட பல அரசர்களின் ஆதிக்கத்தில் இருந்தது. முத்துக்கள் அதிகம் காணப்பட்ட கொற்கை, பாண்டியர்களின் முதல் மற்றும் முதன்மையானத் துறைமுகமாகவும், வணிகத்தளமாகவும் விளங்கியது.

"உலகின் அனைத்து முத்துக்களும் முத்துக்குளித்துறையில் இருந்துதான் வந்தன என்றும், முத்துக்குளித்துறைககும் அரேபியாவின் பல்வேறு மக்களுக்குமிடையே நிலையான வர்த்தகத் தொடர்புகள் இருந்தன" என்றும் மார்கோபோலோ கூறுகிறார்.

நெய்தல் நிலத்திற்குச் சொந்தக்காரர்களாகிய பரதவர் பற்றி தொல்காப்பியம் தொட்டு, மதுரைக்காஞ்சி, சிறுபாணாற்றுப்படை, சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, நற்றிணை, குறுந்தொகை, அகம் ஆகியவை நம் பரதவர் வாழ்வும் வளமும் குறித்து நயம்பட நவில்கிறது.

பாண்டியரின் சிறந்த துறைமுகம் இதுவாகும். இத்துறைமுகம் பழங்காலத்தில் மக்களால் மிகவும் விரும்பப்பட்ட முத்துக்குப் பேர் போன இடமாகும்.

மீன் பிடிப்பதே நெய்தல் நில மக்கள் செய்யும் தொழிலாகும். கரையோரங்களில் இவர்கள் வாழ்ந்த குடியிருப்புகள் பட்டினம் எனப்படும்: சிறு குடியிருப்புகள் பாக்கம் எனப்படும்.

ஏறக்குறைய முத்துக்குளித்துறையின் அனைத்து கிராமங்களிலும் பரதவர்கள் வாழ்ந்து வந்தனர். ஒருசில கிராமங்களில் மறவர்களும், கரையர்களும் இருந்தனர். கரையர்கள் மீன் தொழிலில் ஈடுபடுபட்டனர். இவ்வினம் பரதவர்களைவிடச் சமுதாய அந்தஸ்தில் குறைந்தவர்களாகக் கருதப்பட்டனர்.

பரதவர்கள் சைவசமயத்தைப் பின்பற்றினார்கள். இவர்கள் வாழ்ந்த அனைத்து ஊர்களிலும் இந்துக் கோவில்கள் இருந்தபோதிலும், திருச்செந்தூர் சுப்ரமணியசுவாமி முருகன் கோவிலின் மீது பரதவர்களுக்கு அதிக பக்தியும் பற்றும் இருந்தன. ஏனெனில் முருகனின் இரண்டாவது மனைவியான தெய்வானை ஒரு பரதவப் பெண் என்ற நம்பிக்கை மக்களிடம் இருந்தது.

திருச்செந்தூர் கோவிலில் நடைபெறும் பெரிய திருவிழாவில் பரதவரின் ஏழு ஊர்களைச் (மணப்பாடு, ஆலந்தலை, வீரபாண்டியன்பட்டணம், புன்னைக்காயல், தூத்துக்குடி, வைப்பார், வேம்பார்) சார்ந்த மக்கள் முக்கியப் பங்கினை வகித்தனர்.

ஒவ்வொரு கிராமமும் தன்னுடைய நிர்வாகத்தைக் கவனித்துக் கொண்டது. கிராம அதிகாரம் முழுவதும் பட்டங்கட்டிகள் கையில் இருந்தன. ஒவ்வொரு கிராமத்திலுமுள்ள செல்வாக்கு மிகுந்த நபர்களிடமிருந்து பட்டங்கட்டி தேர்ந்தெடுக்கப்பட்டார். பட்டங்கட்டிகளின் தலைவர் பட்டங்கட்டிமார் என்று அழைக்கப்பட்டார்.

உணவுக்கு மட்டுமல்லாமல், நெய்தல் நிலத்துப் பரதவர்களுக்கு கருவாடு தயாரிப்பதற்கும் உப்பு மிகவும் அவசியமானதாக இருந்தது. எனவே அவர்கள் கடற்கரைகளில் உப்பளங்கள் அமைத்து, அதில் உப்பை விளைவித்தனர்.

'முத்துக் குளித்துறையில் போர்ச்சுக்கீசியர்' என்ற நூலில் அருட்சகோதரி ச.டெக்லா அவர்களும் 'கடல்' என்ற நூலின் திரு. கு.ராஜாராம் அவர்களும் ஓபீர் என்பது ஓவரி எனக் குறிப்பிடுகின்றனர்.

துணைநூற்பட்டியல்

1. அண்டோ. யூ. நெய்தல் - அலைவாய்த் தேடல்
நெய்தல் வெளி
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
இரண்டாம் பதிப்பு : ஜீன் 2012

2. மேலது., - எனது ஊர் தூத்துக்குடி
அம்மா பதிப்பகம்,
183, காந்தி நகர், ஜார்ச் சாலை
தூத்துக்குடி – 1
முதல் பதிப்பு : ஆகஸ்ட் 2014

3. அதிரியான் கௌசானல். சே.ச. - முத்துக்குளித்துறை
மீனவர் வரலாறு,
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்
தூய சவேரியார் கல்லூரி
பாளையங்கோட்டை. 2006

4. அப்பாத்துரை. கா - 1800 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகம்
ராமையா பதிப்பகம்
10/14, தோப்பு வெங்கடாசலம் தெரு,
திருவல்லிக்கேணி
சென்னை- 600 005
முதல் பதிப்பு : பிப்ரவரி 2006

5. மேலது., - தென்னாடு
பூம்புகார் பதிப்பகம்
127, பிரகாசம் சாலை (பிராட்வே)
சென்னை – 600 018
முதல் பதிப்பு : ஜீலை 2003

6. அன்றனிடெலி. S. - தொல்துறைமுகங்கள்
நெய்தல் வெளி
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
முதல் பதிப்பு : மார்ச் 2014

7. அமுதன் அடிகள் - வரலாற்றில் புன்னைக்காயல்
தியான இல்லம்
வேளாங்கண்ணி – 611 111
முதல் பதிப்பு: அக்டோபர் 2012

8. இராசேந்திரன். ஜே.எம்.ஏ. - மதத்தால் வீழ்ந்தோமா?
மதமாற்றம் பரதவர்களை முன்னேற்றியதா,
பாகம் - II கட்டுரைத் தொகுப்புகள்
நெய்தல் வெளி
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
முதல் பதிப்பு : அக்டோபர் 2013

9. காசுமான். மி - குமரியர் நாவலந்தீவின் உரிமை மாந்தர் வரலாறு
காசுமான் பதிப்பகம்
நந்தன்காடு
மார்த்தாண்டம்
குமரி மாவட்டம்
முதல் பதிப்பு : டிசம்பர் 2011

10. சதாசிவப் பண்டாரத்தார் - பாண்டியர் வரலாறு
மணிவாசகர் பதிப்பகம்
சென்னை (1998)

11. சந்திரசேகரன். இரா (ப.ஆ.,) - சங்க இலக்கியம் கருத்தியல் வளம்
மகாகவி பாரதியார் நூலகம்
வி.வி.ஆர். ரங்கம்மாள் இல்லம்
No.7, R.K. நகர்
பாரதியார் யூனிவர்சிட்டி (P.O)
நவலூர் பிரிவு,
மருதம்பாளையம் ரோடு
கோயம்புத்தூர் – 641 046
முதல் பதிப்பு: டிசம்பர் 2003

12. சிதம்பரனார் சாமி - எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும் அறிவுப் பதிப்பகம், 142, ஜானி ஜான்கான் ரோடு,
ராயப்பேட்டை, சென்னை-600014
இரண்டாம் பதிப்பு: ஜூலை 2008

13. சிவசுப்பிரமணியம். ஆ - அடித்தள மக்கள்
மக்கள் வெளியீடு
சென்னை

14. மேலது., - கிறிஸ்தவமும் சாதியும்
காலச்சுவடு பதிப்பகம்
நாகர்கோவில். 2001

15. சீநிவாசன்.கு - சங்க இலக்கியத் தாவரங்கள்
தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் -613 001
முதற்பதிப்பு: ஜீன் 1981

16. செயபால். இரா (உ.ஆ.,) - அகநானூறு
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஏப்ரல் 2004

17. மேலது., - அகநானூறு – 2
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஏப்ரல் 2004

18. சேதுராமன் சாத்தப்பன் - ஏற்றமதியில் சந்தேகங்களா?
பாகம் -II
விஜயா பதிப்பகம்
20, ராஜவீதி
கோயம்புத்தூர் – 641 001
மூன்றாம் பதிப்பு : நவம்பர் 2011

19. மேலது., - வெற்றிகரமான
ஏற்றுமதியாளராவது எப்படி?
விஜயா பதிப்பகம்
20, ராஜவீதி
கோயம்புத்தூர் – 641 001
ஐந்தாம் பதிப்பு : நவம்பர் 2013

20. சோனல்தாஸ் அ.ம. - அகநானூற்றில் கானலம் பெருந்துறை மக்கள் வாழ்வியல்
செம்முதாய் பதிப்பகம்
நெ.17, தாகூர் தெரு,
எம்.எம்.டி.ஏ.நகர்
சிட்லபாக்கம்
சென்னை- 600 064
முதல்பதிப்பு: ஏப்ரல் 2012

21. டெக்லா.ச. - முத்துகுளித்துறையில் போர்ச்சுக்கீசியர்
நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
சென்னை – 600 098
முதல்பதிப்பு: செப்டம்பர் 2009

22. டேவிட் பாக்கியமுத்து - திருநெல்வேலிக்கு கிறிஸ்தவம் வந்தது
யாதுமாகி பதிபபகம்,
பாளையங்கோட்டை, 2003

23. தட்சிணாமூர்த்தி . அ. - ஐங்குநுறூறு
புத்தகம் - 1
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஏப்ரல் 2004

24. தமிழண்ணல் - சங்க இலக்கியத் தொன்மை அகச்சான்றுகள்
நோக்கு
4/1083, நேரு நகர்,
2வது முதன்மைச் சாலை
கொட்டிவாக்கம்
சென்னை-600 096.
முதல்பதிப்பு : நவம்பர் 2008

25. நாகராசன். வி (உ.ஆ.,) - கநற்தொகை – 1
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஏப்ரல் 2004

26. மேலது., - கநற்தொகை – 2
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர்
சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஏப்ரல் 2004

27. பரமசிவம் . அரு - பரதவர் - இன மீட்டுருவாக்க வரைவியல்,
காவ்யா வெளியீடு
சென்னை (2005)

28. பாலகுரு. கே. பட்டி (தொ.ஆ.,) - தங்கத் தமிழ்நாடு ஆறாம்பாகம்
கலா ஆப்செட் காலண்டர்ஸ்
சிவகாசி.

29. பால்தாமஸ்(ஹீதையா கான்ஸ்தந்தின்) - நினைவலைகள்
நெய்தல் வெளியீடு
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
முதல் பதிப்பு : ஜீன் 2013

30. பாலையன்.அ.ப. - நற்றிணை
மூலமும் உரையும்
சாராதா பதிப்பகம்
ஜி-4இ சாந்தி அடுக்ககம்
3, ஸ்ரீகிருஷ்ணாபுரம் தெரு
ராயப்பேட்டை சென்னை-14
முதல்பதிப்பு: டிசம்பர் 2009

31. பிரிட்டோ வின்சென்ட் .சே.ச (ப.ஆ.,) - தூய சவேரியார் கடிதங்கள்,
நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்,
பாளையங்கோட்டை, 2002

32. பூவண்ணன் - தமிழ்நூல்கள் அன்றுமுதல் இன்றுவரை
சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக
வெளியீடு
சென்னை (1987)

33. பெர்லின்.சி.குறும்பனை - நீந்திக் களித்த கடல்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஆகஸ்ட் 2009

34. வசந்தி.சீ - தமிழக அகழாய்வில் சாதனைகள்
பூவழகி பதிப்பகம்
29/2, சீனிவாச பெருமாள் சந்நிதித் தெரு,
இராயப்பேட்டை
சென்னை – 600 014
முதல்பதிப்பு : 2010

35. வலம்புரிஜான் - சாதனைச் சரித்திரம் சவேரியார்,
பாணு சரணம் பதிப்பகம்,
பாளையங்கோட்டை, 1995

36. வறீதையா கான்ஸ்தந்தின் - மீன்வள மசோதா (2009)

அடித்தள மக்கள் நோக்கில்
உழைப்பவர் ஆயுதம்
மணிமொழி பதிப்பகம்
திருவண்ணாமலை – 606601
பிப்ரவரி – 2010

37. மேலது., - பேரலைக்கு அப்பால்
தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன்
13/2, முதல்தளம், கேசரி தெரு,
நாகர் கோவில் - 629001
முதல்பதிப்பு : நவம்பர் 2006

38. மேலது., - நெய்தல் சுவடுகள்
தமிழ்நாடு மீன்தொழிலாளர் யூனியன்
13/2, முதல்தளம், கேசரி தெரு,
நாகர் கோவில் - 629001
முதல்பதிப்பு : 2005

39. மேலது., - கொந்தளிக்கும் கடல்
ஜோடிகுருஸ் படைப்புலகம்
ஆழி பப்ளிஷர்ஸ்
1A, திலகர் தெரு,
பாலாஜி நகர்,
அய்யப்பன் தாங்கல்
சென்னை – 600 077
முதல்பதிப்பு: டிசம்பர் 2011

40. மேலது., - கரைக்கு வராத மீனவத்துயரம்
உயிர் எழுத்து பதிப்பகம்
9, முதல் தளம்
தீபம் வணிக வளாகம்,
கருமண்டபம், திருச்சி-1
முதல்பதிப்பு : டிசம்பர் 2013

41. மேலது., - விளிம்பு, மையம், மொழி
ஆழி பப்ளிஷர்ஸ்
1A, திலகர் தெரு,
பாலாஜி நகர்,
அய்யப்பன் தாங்கல்
சென்னை – 600 077
முதல்பதிப்பு: டிசம்பர் 2011

42. மேலது., - ஆழிப்பேரிடருக்கு பின்
காலச்சுவடு பதிப்பகம்
669, கே.பி.சாலை
நாகர் கோவில்-629001
முதல்பதிப்பு : டிசம்பர் 2006

43. மேலது., - எக்கர்
உயிர் எழுத்து பதிப்பகம்
9, முதல் தளம்
தீபம் வணிக வளாகம்,
கருமண்டபம், திருச்சி-1
முதல்பதிப்பு : டிசம்பர் 2013

44. மேலது., - என்னைத் தீண்டிய கடல்
காலச்சுவடு பதிப்பகம்
669, கே.பி.சாலை
நாகர் கோவில்-629001
முதல்பதிப்பு : டிசம்பர் 2006

45. மேலது., - அணியம்
நெய்தல் வெளியீடு
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2011

46. மேலது., - முக்குவர், வரலாறு, வாழ்வியல், எதிர்காலம்
நெய்தல் வெளியீடு
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
முதல் பதிப்பு : டிசம்பர் 2010

47. விசுவநாதன். அ(உ.ஆ.,) - கலித்தொகை
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : ஏப்ரல் 2004

48. வெள்ளைவாரணன்.க - சங்கக் காலத் தமிழ்மக்கள்
நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி
சென்னை (1950)

49. வெனான்சியுஸ்.எஸ் - இடியின் இரகசியம்
புதிய பூமி பதிப்பகம் (1986)

50. வேங்கடசாமி. சீனி, மயிலை - பழங்காலத் தமிழர் வாணிகம்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி)லிட்
41-பி. சிட்கோ
இண்டஸ்டிரியல் எஸ்டேட்
அம்பத்தூர் சென்னை – 600 098
முதல்பதிப்பு : 1974

51. ஜஸ்டின் திவாகர் - கொல்லணி
நெய்தல் வெளியீடு
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
முதல் பதிப்பு : டிசம்பர் 2010

52. மேலது., - ஜோடி குருஸ் எழுத்தும் பேச்சும்
நெய்தல் வெளியீடு
153C, ஈத்தாமொழி சாலை
நாகர் கோவில் - 629002
முதல் பதிப்பு : ஆகஸ்ட் 2014

53. ஜார்ஜ் ஜெகதீசன் - தூத்துக்குடி மறைமாவட்ட வரலாறு,
தூத்துக்குடி, 1973

54. ஜெரார்டு ராயன் - வெகுசனக் கத்தோலிக்கம்
காலச்சுவடு பதிப்பகம்
669, கே.பி.சாலை
நாகர் கோவில்-629001
முதல்பதிப்பு : டிசம்பர் 2008

55. ஜேம்ஸ் மரிய ஆரோக்கியம்.த - பரதவர் வாழ்வியல்,
தேன்மழைப் பதிப்பகம்,
சென்னை, 1990

56. ஜோ.டி குருஸ் - ஆழிசூழ் உலகு
பாவை பிரிண்டர்ஸ்
சென்னை- 14
முதல்பதிப்பு: டிசம்பர் 2004

57. ஜோ.டி குருஸ் - கொற்கை
காலச்சுவடு பதிப்பகம்
669, கே.பி.சாலை
நாகர் கோவில்-629001
முதல்பதிப்பு : டிசம்பர் 2008

தமிழ் அகராதி

1. கதிரைவேற்பிள்ளை, நா., - **தமிழ் மொழியகராதி**
காஞ்சி, நாகலிங்க முதலியார் (திருத்தியவர்),
ஆசியன் எஜிகேஷனல் சர்வீஸஸ்,
புதுதில்லி, 1993

2. கோபலகிருஷ்ணகோன். இ.மா. - **மதுரைத் தமிழ் பேரகராதி,**
முதற்பாகம்,
திருநெல்வேலி, 1956

3. கௌமாரீஸ்வரி. எஸ்.(ப.ஆ.,) - கௌரா தமிழ் அகராதி
சாரதா பதிப்பகம்
சென்னை – 600 014
முதல்பதிப்பு: மே. 2006

ஆங்கில அகராதி

4. Winslow's - A Comprehensive,
Tamil and English Dictionary,
Asian Educatinal Services.
New Delhi. 1983.

கலைக்களஞ்சியங்கள்

தமிழ்

1. …….. - கலைக்களஞ்சியம்,
தொகுதி I
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை. 1954.

2. …….. - கலைக்களஞ்சியம்,
தொகுதி II
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை. 1955.

3. …….. - கலைக்களஞ்சியம்,
தொகுதி IV
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
சென்னை. 1956.

4. …….. - வாழ்வியல் களஞ்சியம்,
தொகுதி 7
தமிழ் வளர்ச்சிக் கழகம்,
தஞ்சாவூர். 1991.

ஆங்கிலம்

5. …….. - Encyclopedia Americana Volume XIV
Americana Corporation,
International Head Quarters,
Newyork. 1976.

6. …….. - The Encyclopedia Britannica,
Volume IV.
Newyork. 1929 (14th Edition)

7. …….. - Encyclopedia of the Social Science
Volume (III),
The Macmillan Company,
New york. 1954. (11th Printing)

8. …….. - Tamil Lexicon,
Volume IV, Part I,
University of Madras,
Madras. 1982.

9. …….. - The New Encyclopedia Britannica,
Volume V
Micropaedia,
University of Chicago. 1973 -74.

கவுரவமிக்க சாகித்ய அகாடமி விருதை கொற்கை நாவல் வென்றுள்ள சூழலில் தி இந்து நாளேட்டுக்காக ஜோடி குருஸ் அளித்த பிரத்தியேகப் பேட்டி :

இந்த நாவலை எழுத 5 ஆண்டு காலத்தை செலவிட்டுள்ளீர்கள். இந்த பெரும் உழைப்புக்கு இவ்வளவு உயர்ந்த தேசிய விருதை எதிர்பார்த்தீர்களா?

நிச்சயமாக இல்லை. ஆனால் எனது பணியை என் சமுகத்தின் தம்பிமார்கள் ஒருநாள் புரிந்து கொள்வார்கள் என எதிர்பார்த்தேன். தமிழ்ச் சமூகம் ஒரு நாள் என்னை அங்கீகரிக்கும் என நம்பினேன். ஆனால் அது எப்படிப்பட்ட அங்கீகாரம் என்பதை என்னால் ஊகிக்க இயலவில்லை.

இன்று மிக உயர்ந்த விருது கிடைத்துள்ளதை எப்படி உணர்கிறீர்கள்?

கடற்கரை சமூகங்களுக்கு கிடைத்த முதல் அங்கீகாரமாகக் கருதுகிறேன். அதுவும் தேசிய அளவிலான அங்கீகாரம் என்பது மகிழ்ச்சியாக உள்ளது. அதே நேரத்தில் மிரட்சியாகவும் உள்ளது.

பெரும் கொண்டாட்டம் தரும் விருது என இதனைக் கருதலாமா?

நிச்சயமாக இல்லை. கொண்டாட இதில் எதுவும் இல்லை. குறிப்பாக கொண்டாடுவதற்கான மனநிலை என்னிடம் இல்லை. மாறாக நான் பிறந்த சமூகத்தின் மீதான எனது பொறுப்புகளையும் கடமைகளையும் அதிகப்படுத்தியுள்ளதாக கருதுகிறேன். எனக்கு முன்னால் இறைந்து கிடக்கும் மிகப்பெரும் களப்பணியை நினைவூட்டுவதாக எண்ணுகிறேன்.

நீங்கள் எப்படி எழுத்துலகுக்கு வந்தீர்கள்?

பொதுவாகவே அனுபவங்களையும், தகவல்களையும் சேகரித்து சிறுசிறு குறிப்புகளாக பதிவு செய்யும் வழக்கம் என்னிடம் உண்டு. ஆனால் அதனை ஒரு இலக்கியமாக பதிவு செய்வேன் என்று ஒரு நாளும் எண்ணியதில்லை. தமிழினி பதிப்பகத்தின் வசந்தகுமாருடன் எனது கடல் சார் வாழ்க்கையின் அனுபவங்களை பகிர்ந்து கொண்ட காலத்தில் அவர்தான் என்னை எழுதுங்களேன் என்று முதலில் கூறினார். அதனைத் தொடர்ந்து நான் எழுதிய நாவல்தான் 'அழி சூழ் உலகு' என்ற பெயரில் அவர் பதிப்பகத்திலிருந்து வெளிவந்தது. ஆக, வசந்தகுமாருடன் நான் நிகழ்த்திய உரையாடல்களின் நீட்சி தான் எனது எழுத்து.

மிகப்பெரும் வணிக நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பில் உள்ள உங்களால் எப்படி நேரம் ஒதுக்கி எழுத முடிகிறது?

நான் அலுவலகத்தில் எதுவும் எழுதுவதில்லை. வீட்டுக்கு திரும்பிய பிறகுதான் எழுதுவேன். நான் மிகவும் தனிமை விரும்பி. இதனை புரிந்து கொண்டமையால் வீட்டில் நான் தனிமையில் இருக்கும் நேரத்தில் என் மனைவி அதில் குறுக்கீடு செய்ய மாட்டார். அவரது இந்த ஒத்துழைப்புதான் நான் படிப்பதற்கும், எழுதுவதற்கும் பெரும் உதவியாக உள்ளது.

உங்களைப் பற்றிய உங்கள் மனைவியின் ஆசை...?

"ஏன் இப்படியே இருக்கீங்க மையப்படுத்தியது. இரண்டாவது நாவல் பாய்மரக் கப்பலோடு தொடர்புடையது. அடுத்து நான் பெரிய கப்பலில் பயணிக்க விரும்புகிறேன். குறிப்பாக என்

தொழில் சார்ந்த வணிகக் கப்பல்கள் மற்றும் அவைகளுடன் தொடர்புடைய மனிதர்களைப் பற்றியதாக அது இருக்கும்.

சாகித்திய அகாடமி விருது வென்றதால் பிரபலமானவரும், மீனவ மக்களின் நலன் பேணுபவராக, தன்னை காட்டிக்கொள்பவரும்தான் ஜோடி குரூஸ் என்ற எழுத்தாளர். இவர் எழுதிய "ஆழி சூழ் உலகு, கொற்கை" எனும் இருநாவல்களில் "கொற்கை" நாவலுக்குத்தான் சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டது.

ஆழி சூழ் உலகு – நாவல் எழுதும் போது குரூஸின் மனதில் காவி குடியேறிருக்கவில்லை.

இந்த விருதுக்கு முன்பே இவர் தனது அரசியல், தத்துவ நோக்கை பார்ப்பனியத்திடமிருந்து பெற்றுக் கொண்டதாக மாறிப் போனார். இதன் தொடர்ச்சியாக 'இந்திய ராஜபக்சே' கொலைகார மோடி பிரதமராக வருவதை ஆதரித்து சமீபத்தில் கருத்து தெரிவித்திருந்தார். 2002 குஜராத் முசுலீம் மக்கள் இனப்படுகொலையின் நாயகனை பகிரங்கமாக ஆதரிக்கும் முடிவையடுத்து அவர் எழுதிய "அழி சூழ் உலகு" நாவலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிடவிருந்து நவயனா பதிப்பகம், பதிப்பித்து வெளியிடும் பணியினை நிறுத்துவதாக அறிவித்தது. நாவலை மொழிபெயர்த்த எழுத்தாளர் - ஆய்வாளர் வ.கீதாவும் ஜோடி குரூஸுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக தனது மொழிபெயர்ப்பை திரும்பப் பெறுவதாக அறிவித்திருக்கிறார்.

முதலில் அரசியலிருந்து துண்டிக்கப்பட்ட கலை இலக்கியம், எழுத்தாளர் சுதந்திரம் போன்ற போதை வஸ்துக்கள் சூழ்ந்திருக்கும் இலக்கிய உலகில், இப்படி ஒரு முடிவை எடுத்ததற்காக நவயனா பதிப்பகத்திற்கும், வ.கீதாவுக்கும் நமது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்வோம். மோடிக்கு ஆதரவளிக்க கோரி.்.பேஸ்புக்கில் பிரச்சாரம் செய்திருந்த குரூஸ் மோடி ஒரு புரட்சியாளர், தொலைநோக்கு பார்வை கொண்டவர், தன் செயலுக்கு தானே பொறுப்பேற்கிற (!) தகமையாளர், இந்திய கடற்கரை மக்களின் வாழ்க்கையை புரிந்து கொண்டவர் என்றெல்லாம் அடுக்கிவிட்டு அதனால் மோடியை ஆதரிக்குமாறும் கேட்டுக் கொண்டிருந்தார்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள நவயனா பதிப்பகம், மூன்று தலைமுறை மீனவமக்களின் தனித்துவமான வரலாற்றை தன் நாவலில் பதிவு செய்த எழுத்தாளரான ஜோடி குரூஸ், மோடி போன்ற ஒரு பாசிஸ்டை 'தொலைநோக்குடையவர்' என்ற கூறி ஆதரிப்பது தங்களுக்கு அதிர்ச்சியும் கவலையும் அளிப்பதாகவும், மோடி ஆதரவு என்பது அவரது தனிப்பட்ட கருத்து என்ற போதிலும் இது போன்ற நபர்களுக்கு தங்கள் பதிப்பகத்தில் எந்த இடமுமில்லை என்றும் கூறி புத்தகத்தை பதிப்பிக்கும் முடிவை திரும்ப பெற்றுக் கொண்டுள்ளது. பதிப்பிக்கும் முடிவை திரும்பப் பெறுவதால் ஏற்படும் இழப்பைக் குறித்த கவலையை விட ஜோ-டி-குரூஸ் எடுத்திருக்கும் அரசியல் நிலைப்பாடு குறித்து தாங்கள் அதிகம் கவலைப்படுவதாகவும் தெரிவித்துள்ளது. நாவல் வெளிவரும் முன்னரே குரூஸ் குறித்து தெரிய வந்தது மகிழ்ச்சி என்றும் அறிவித்துள்ளது. வ.கீதாவுக்கும் நவயானா பதிப்பகத்துக்கும் நமது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்வோம்.

இந்த புத்தகத்தை மொழிபெயர்த்துள்ள வ.கீதா, வெளியிட்டுள்ள செய்தியில், மோடியை ஆதரித்து ஜோ-டி-குரூசின் அறிக்கையை படித்து தான் வேதனையடைந்ததாகவும், அவருக்கு தனிப்பட்ட அரசியல் கருத்தை கூற எல்லா உரிமையும் இருக்கிறது என்றும், ஆனால் மோடியுடன் தொடர்புடைய எவருடனும் இணைந்து செயல்பட தான் விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார். மேலும் 2002 குஜராத்தை படுகொலைகளை நாம் மறக்கக் கூடாது, யாரையும் மறக்கவிடக்கூடாது என்றும் தெரிவித்தவர். ஜோ-டி-குரூசின் ஆழி சூழ் உலகு மீனவ மக்களின் வாழ்வை படம் பிடிக்கும் சிறப்பான நாவல், அதை ஆதரிப்பதாகவும், ஆனால் குரூஸ் தன் எழுத்தாற்றலை ஒரு அபாயகரமான பாசிச அரசியலுக்கு விற்க முடிவு செய்துள்ளது குறித்து மிகவும் கவலைப்படுவதாகவும் அதனால் தன் மொழிபெயர்ப்பை திரும்ப பெற்றுக் கொள்வதாகவும் அறித்துள்ளார்.

புத்தகம் பதிப்பிப்பது இவ்வாறு முடிவுக்கு வந்ததும் தனக்கு அநீதி இழைக்கப்பட்டிருப்பதாக மோடியை தூக்கி பிடிக்கும் கார்ப்பரேட் ஊடகங்களில் குய்யோ முய்யோ என்று குதிக்கிறார் குரூஸ். மீனவ மக்களுக்கு மட்டுமல்லாமல் மொத்த சமூகத்திற்கும் அநீதி இழைத்திருக்கும் குரூஸ்,"ஏழைகளை பற்றி எழுதினால் அதற்காக என்னை இடதுசாரி என்று நீங்களாகவே எப்படி கருதிக் கொள்ளலாம்?" என்று இப்புத்தகத்தை பதிப்பிக்க முன்வந்த நவயனா பதிப்பகத்திற்கு கேள்வி எழுப்பியுள்ளார்.

ஆயிரக்கணக்கான மக்களை ஈவு இரக்கமில்லாமல் கொன்றொழித்த கொலைகாரனை கண்டிப்பதற்கு இடது சாரியாகத்தான் இருக்க வேண்டும் என்பதல்ல, ஒரு மனிதனாக இருந்தாலே போதும். அப்படி குறைந்தபட்ச மனிதநேயம் கூட இல்லாத குரூஸ் ஒரு இலக்கியவாதியாக இருந்து என்ன பயன்? மனிதபிமானம் கூட இல்லாத ஒரு நபருக்கு இலக்கியமோ இல்லை நாவலோ அவை வரவேற்பை பெற்றிருந்தாலும் கூட அதை வைத்து மட்டும் தகுதியோ அங்கீகாரமோ கோர முடியாது.

'குரூஸின் மீனவ மக்களுக்காக 'போராடும்' மோடியின் காவி பயங்கரவாதி!'

இதுதான் இலட்சணமென்றால் குரூஸை நாம் ஒரு மனிதனாக ஏற்பதே சாத்தியமில்லை. இதற்கு மேல் இவரை மனித குலத்திற்காகப் போராடும் இடதுசாரியாக யாராவது கருதினால் அது நிச்சயமாக பெரும் பிழைதான். நாங்களும் இதற்காக சம்பந்தப்பட்டவர்களை 'கண்டிக்கின்றோம்'.

மேலும், தான் மோடியைஆதரிப்பதற்கான காரணங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார் குரூஸ். குஜராத் மாடல் வளர்ச்சியும், உறுதியான தலைமையும் தான் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை உயர்த்தும் என்று உணர்ந்திருப்தாலேயே இவர் மோடியை ஆதரிக்கிறாராம். வேலை நிமித்தமாக குஜராத்திற்கு 12 ஆண்டுகளாக சென்று வருவதாகவும் குஜராத்தின் வளர்ச்சி குறித்து அறிந்திருப்பதாகவும், மோடி ஆளும் வர்க்கத்தை பயன்படுத்தி ஏழைகளை உயர்த்துவதாகவும் தெரிவித்துள்ளார் குரூஸ்.

குரூஸ் அடுக்கிய இந்த வார்த்தைகளைத்தான் தமிழக தொலைக்காட்சிகளில் பாஜக கோயாபல்ஸுகள் அடித்து பேசுகிறார்கள். இதையே கோயாபல்ஸ்தனத்தில் கொட்டை போட்ட அரவிந்த நீலகண்டன் போன்ற பெருச்சாளிகளிடம் பேசி உள்ளே இறக்கியிருக்கிறார் குரூஸ். இதற்கு நம்பகத்தன்மை வேண்டும் என்பதற்காக, தான் குஜராத்திற்கு 12 வருடமாக சென்று வருவதாக கூறுகிறார். சரி, வளர்ச்சி எனும் இந்த பொய் மூட்டையை விடுவோம், இத்தனை ஆண்டுகளில் அவர் குஜராத் கலவரங்களில் உறவுகளையும், வாழ்வையும் இழந்த ஒரு முசுலீமைக் கூட சந்திக்கவில்லையா? இல்லை அவர்களது குடியிருப்புகளுக்கோ, தடுப்பு முகாம்களுக்கோ போவதற்கு வழி தெரியவில்லையா? இசுலாமியர்களை விடுங்கள், தற்கொலை செய்த விவசாயிகள், மலத்தை கையால் அள்ளும் தொழிலாளிகள், வெளி மாநிலங்களில் இருந்து வந்த குறைந்த கூலிக்கு கொத்தடிமையாக இருக்கும் தொழிலாளிகள் இவர்களைக் கூட குரூஸ் ஏன் சந்திக்கவில்லை?

தமிழகத்தில் குமுதம் முதலாளி, ஜுவி ஆசிரியர் குழுவினர் உட்பட நாடெங்கும் உள்ள ஊடகங்களை மோடி அரசாங்கம் அழைத்து வந்து செட்டப் காட்சிகளையும், கணக்குகளையும் காட்டி பிரச்சாரம் செய்கின்றனர். அதையே தனது சொந்த அனுபவமாக முன்வைக்கிறார் குரூஸ். இதனால் குஜராத் போனவர்களெல்லாம் குஜராத் மக்களைப் பற்றி தெரிந்தவர்கள் என்பது கொயாபல்ஸ் கோமகன்களது உத்தியே அன்றி உண்மை அல்ல.

குஜராத்தில் ஒடுக்கப்பட்ட இசுலாமிய மக்களையும் இதர உழைக்கும் மக்களையும் கண்டுகொள்ளவில்லை என்பதிலிருந்தே இவர் தமிழக மீனவ மக்களுக்காக கவலைப்படுவது நாடகம் என்பது புரிகிறது.

குரூஸ் சொல்கிறபடி குஜராத்தில் ஏற்றம் பெறும் ஏழைகள் யாரென்றால் அதானி, டாடா, அம்பானி போன்ற ஒரு வேளை கஞ்சிக்கு வழியில்லாதவர்கள்தான்.

ஏழைகளை உயர்த்த ஆளும் வர்க்கத்தை மோடி பயன்படுத்துவதாக குரூஸ் சொல்கிறார். இதுதான் பித்தலாட்டத்தின் உச்சகட்டம். ஜோ-டி-குரூசின் நேர்மையை இதன் மூலம் யாரும் உரசிப் பார்த்துக் கொள்ளலாம். குஜராத்தில் தொழிலாளர்களின் சராசரி ஊதியம் நகர்ப்பறத்தில் 106 ரூபாய், கிராமப்புறத்தில் 86 ரூபாய். இந்தியாவிலேயே குறைந்த ஊதியம் குஜராத்தில்தான். இதை எதிர்த்து தொழிலாளர்கள் போராட முடியாது மீறி போராடினால் போலீசின் குண்டாந்தடி தான் வரும். இப்படி தொழிலாளர்களை சுரண்ட கார்ப்பரேட் முதலாளிகளுக்கு வாய்பளிப்பதால் தான் அவரை வளர்ச்சியின் நாயகன் என்று கொண்டாடுகிறார்கள் முதலாளிகள்.

குரூஸ் சொல்கிறபடி குஜராத்தில் ஏற்றம் பெரும் ஏழைகள் யாரென்றால் அதானி, டாடா, அம்பானி போன்ற ஒரு வேளை கஞ்சிக்கு வழியில்லாதவர்கள்தான்.. மற்றபடி உண்மையான ஏழைகளை சிவலோக பதவிக்கு தான் உயர்த்தியிருக்கிறார். இதை அங்கு நடக்கும் விவசாயிகள் தற்கொலைகள் மூலம் புரிந்து கொள்ளலாம். 2012 – ல் மட்டும் அதிகாரபூர்வ புள்ளிவரப்படி 564 விவசாயிகள் குஜராத்தில் தற்கொலை செய்து கொண்டுள்ளனர்.

கடல் எனும் பிரம்மாண்டமான இயற்கைத் தாயின் மடியில், வாழ்வதற்காக கருணையோடும் வீரத்தோடும் போராடும் மீனவ மக்களின் ரத்தமும் சதையுமான வாழ்க்கையை உயிர்ப்போடு சித்தரித்த "ஆழி சூழ் உலகு"

ம.க.இ.க. உள்ளிட்ட புரட்சிகர அமைப்புகள் குஜராத் வளர்ச்சியின் மாயையை தமிழகத்தில் திரை கிழித்த பிறகு, குஜராத்தின் வளர்ச்சி குறித்த பம்மாத்து முன்பு போல் அப்படியே செல்லுபடியாகாது என்பதால் ஜ.வி யே கூட தன்னை நடுநிலையாளனாக காட்டிக்கொள்ள குஜராத்தின் பலவீனங்களை துளியாவது பட்டியலிடும் நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறது. இது ஒரு ஏமாற்றும் தந்திரம் என்றாலும் மட்டையடியாக வளர்ச்சிதான் என்று சொன்னால் மதிப்பு இருக்காது.

ஒரு வேளை குரூஸ் எதுவும் தெரியாத அப்பாவி என்றால் முதலாளித்துவ அமைப்புகளே தூக்கிப் பிடிக்கும் குறியீடுகளிலும் கூட குஜராத் பின்தங்கியிருக்கிறது என்பதோடு தமிழ்நாடு முன்னிடங்களில் இருக்கிறது என்பதை நினைவூட்ட சில புள்ளிவிவரங்கள்.

ஒரு வேளை இளவயதிலேயே ஆர்.எஸ்.எஸ். ஷாகாக்களுக்கு சென்று 'மீன் நாற்றத்தை' கழுவி சுத்தப்படுத்தி ஊதுபத்தி – சாம்பிராணியாக குரூஸ் மாற்றப்பட்டிருந்தால் நமக்கு,"ஆழி சூழ் உலகி"ற்கு பதில் 'காவி கொல் கடற்கரை' தான் கிடைத்திருக்கும்.

இந்த நாவலில் இடம்பெற்றிருக்கும் காலம் அவரது இள வயது ஞாபக சேமிப்பில் மட்டும் இருப்பதால், நல்ல வேளையாக நாவலில் இந்துத்துவம் இல்லை. ஆனால் நாவல் எழுதப்பட்ட வயது, வேலை நிமித்தம் ஏற்பட்ட வர்க்க மாற்றம், நாவரை எழுதத் தூண்டிய, திருத்தியபதிப்பாளர், பிறகு ஜெயமோகன், அரவிந்தன் நீலகண்டன் என்று எல்லாமும் சேர்ந்து அவரை இந்துஞான மரபில் இழுத்துக் கொண்டிருந்த போது அதில் ஊற்றப்படும் நெருப்பாக திருச்சபை பாவி பாதிரிகள் நடந்து கொண்டனர். ஒரு வேளை இளவயதிலேயே ஆர்.எஸ்.எஸ் ஷாகாக்களுக்கு சென்று 'மீன் நாற்றத்தை' கழுவி சுத்தப்படுத்தி ஊதுபத்தி – சாம்பிராணியாக குரூஸ் மாற்றப்பட்டிருந்தால் நமக்கு,"ஆழி சூழ் உலகி"ற்கு பதில் 'காவி கொல் கடற்கரை' தான் கிடைத்திருக்கும்.

இதனிடையில் ஆழிசூழ் உலகில் திருச்சபையை நாறடித்து விட்டார் என்று குரூஸ் ஊர் விலக்கம் செய்யப்பட்டார். அவரது உவரி வீடும் தாக்கப்பட்டது. இது குரூஸ்க்கு தாங்கவொண்ணாத வடுவாக அமைந்து விட்டது. அந்த வடுவை பயன்படுத்திக் கொண்டுதான் ஆர்.எஸ்.எஸ். அயோக்கியர்கள் அவரது சிந்தனையில் காவி வண்ணரோடு போட்டிருக்கிறார்கள். இதை வறுமைக்கோட்டுக்கு கீழே வாழும் ஏழைகள் குஜராத்தில் 23 % தமிழகத்தில் 17 % கேரளாவில் 12 % தான். கல்வியறிவு பெற்றோர் எண்ணிக்கையில் இந்தியாவில் குஜராத்திற்கு 18 வது இடம், மாநிலத்தின் உற்பத்தி மொத்தத்தில் மராட்டியம் முதலிடம், தமிழகம் மூன்றாமிடம்,குஜராத்

ஐந்தாமிடம். கடந்த 12 ஆண்டுகளில் தொழில் முதலீடுகளில் வரவில் மகாராட்டிரம் முதலிடம், தமிழகம் 4 வது இடம்,குஜராத் 5 வது இடம்! குஜராத்தின் வளர்ச்சியை அம்பலப்படுத்தி வினவில் ஏராளமான கட்டுரைகள் வந்துள்ளன.

அதே நேரம் மேற்கண்ட விவரங்கள் குறித்து அறியாத அளவுக்கு ஜோ-டி-குரூஸ் அவ்வளவு முட்டாளாக இருக்க வாய்பில்லை. மோடியை 'டெவலெப்மன்ட்' என்ற பெயரில் ஆதரிக்கும், ஏதோ ஒரு சாதாரண நடுத்தரவர்க்க கோயிந்து கிடையாது இவர். இந்துத்துவ கருத்தியலை கடைவிரிக்கும் இவரது பிரசங்கங்கள் யூடியூபிலும், இந்துத்துவ ஆதரவு தளங்களிலும் ஏராளம் காணக் கிடைக்கின்றது. ஆக இவர் மோடியை ஆதரிப்பதன் பின்னணி, வளர்ச்சியோ வெங்காயமோ கிடையாது. பார்ப்பனிய இந்துமதவெறி பாசிசத்தை இவர் கருத்தளவில் மனதார ஏற்றுக் கொண்டுள்ளார்.

நெல்லை மாவட்டம் உவரியில் மீனவ குடும்பத்தில் பிறந்த இவர் நெய்தல் நிலமக்களின் வாழ்வையும், அவர்கள் மீதான கத்தோலிக்க திருச்சபையின் சுரண்டல்களையும் உள்ளடக்கி எழுதிய முதல் நாவலான ஆழி சூழ் உலகு தமிழ் இலக்கிய உலகில் நல்ல வரவேற்பை பெற்றது. கடல் எனும் பிரம்மாண்டமான இயற்கைத் தாயின் மடியில், வாழ்வதற்காக கருணையோடும் வீரத்தோடும் போராடும் மீனவ மக்களின் ரத்தமும் சதையுமான வாழ்க்கை அந்த நாவலில் உயிர்ப்போடு இருப்பது உண்மையே.

தொடர்ந்து குரூஸ், கத்தோலிக்க திருச்சபைக்கு எதிராக இருக்க வேண்டி நிர்பந்திக்கப்பட்டார். இப்படித்தான் அவரது கத்தோலிக்க ஆதிக்க எதிர்ப்பு பார்ப்பனியத்திற்கு மடை மாற்றப்பட்டது.

கத்தோலிக்கம் கடற்கரை மக்களுக்கு இழைத்துள்ள கொடுமைகளை விலாவரியாக விளக்கும் குரூஸ், தன் பாரம்பரிய வேர்களை பார்ப்பனிய எதிர்ப்பு மரபில் தேடுவதற்கு பதில் பார்ப்பனியத்திலேயே தேடி தஞ்சம் அடைந்தார். மதங்கள் அனைத்துமே தோன்றிய காலம் தவிர்த்து ஆளும் வர்க்க ஆன்மீக அடியாட்களாக விரைவிலேயே மாறினாலும் இந்துமதம் மட்டும்தான் தோற்றத்திலேயே ஆளும் வர்க்கத்தின் நோக்கை நிறைவேற்றி வருகிறது. கிறித்தவம் இந்தியாவிற்குள் நுழைந்ததற்கு வேண்டுமானால் காலனிய நோக்கம் இருந்தாலும், வளர்ந்ததற்கு காரணம் பார்ப்பனிய கொடுங்கோன்மைதான். இது குறித்து கண்ணை மறைக்கும் காவிப் புழுதி தொடரில் நிறைய கட்டுரைகள் இருப்பதால் இங்கே தவிர்க்கிறோம்.

ஆக வர்ணாசிரம சாதிய கொடுமைகள் பொறுக்க முடியாமல் தான் மக்கள் வேறு மதம் மாறினார்கள். ஆனால் விரைவிலேயே கிறித்தவ மதமும் பார்ப்பனியத்தின் வருணாசிரமத்தை ஏற்றுக் கொண்டுதான் இங்கே நீடிக்க முடிந்தது. ஒடுக்கப்பட்ட பழங்குடி, தாழ்த்தப்பட்ட, மீனவ மக்களுக்கு கிறித்தவம்தான் முதல் முதலில்தான் சேவை செய்தது என்றாலும் நிறுவன ரீதியில் அது பார்ப்பனிய சமூக அதிகாரத்தை ஏற்றுக் கொண்டே செயல்பட்டது. இந்த வரலாற்று உண்மைகளை மறுத்து ஆர்.எஸ்.எஸ் கும்பல் முன் வைக்கும், இந்துமதத்தில் சாதி இல்லை - இடைச் செறுகல், வியாசர் ஒரு மீனவப் பெண்ணின் மகன், பரதவ மக்கள் தொன்மையான இந்துமத நாகரீகத்தின் தொல்குடிகள், கிறித்தவ - இசுலாம் அன்னிய சதி, பாரதத்தை குலைக்க

கிறித்தவ - இசுலாமிய நாடுகள் சதி போன்ற கோயாபல்ஸ் விளக்கத்தில் திளைத்த குரூஸ் தற்போது அவற்றையே நம்புகிறார், பேசி வருகிறார்.

தன் இந்துத்துவ சித்தாந்த அரிப்பின் தொடர்ச்சியாக மோடியை ஆதரிக்கும் இவர் அதை விடுத்து மோடி பிரதமாரவது தான் மீனவ மக்களுக்கு நலன்னுக்குகந்தது என்று அதை மீனவ மக்களின் மேல் ஏற்றி கூறுவது மோசடியானது, வன்மையாக கண்டிக்கத்தக்கது. மீனவ மக்களின் வரலாறும், நாட்டின் வரலாற்றுணவர்வும் தெரியாமல் தன்னை மீனவ மக்களின் பிரதிநிதியாக இவர் முன்வைப்பது மேட்டிமைத்தனமானது. மேலும் அந்த மக்களின் வாழ்வை மாற்றுவதற்கு இவர் தன்னறிய எந்த விதமான சமூக, அரசியல் போராட்டங்களிலும் கலந்து கொண்டதில்லை. அவையெல்லாம் 'கீழ்த்தரமானது' என்று கருதும் சிற்றிலக்கியவாதிகளின் சமூக விரோத சிந்தனைதான் இவருடையதும். மேலும் சாகித்ய அகாடமி விருது பெற்றது மீனவ மக்களுக்கு கிடைத்த அங்கீகாரம் என்று உளறுமளவுதான் இவருடைய சமூக பார்வை உள்ளது.

பாய்மரக் கப்பலின் பாகங்கள்

1. முதல் தண்ணிப்பாய்
2. இரண்டாவது தண்ணிப்பாய்
3. முதல் ஜீப் பாய்
4. இரண்டாவது ஜீப் பாய்
5. தன்மரத்துப் பாய்
6. தன்மரத்து டவுசர்
7. வடமரத்துப் பாய்
8. வடமரத்து டவுசர்
9. கோஸ் பாய்
10. கோஸ் மரத்து டவுசர்
11. தன்மரத்து ஆஞ்சான்
12. தன்மரம்
13. வடமரம்
14. கோஸ் மரம்
15. பெரிய பண்பாய்
16. வட மரத்து பண்பாய்
17. கோஸ்மரத்து பண்பாய்
18. கோமுட்டி துண்டு
19. நடுப் பருவான்
20. தைசா - பருவான்
21. தன்மரத்து பருவான்
22. வடமரத்து பருவான்
23. வங்கு
24. வாரி
25. காணாக் கம்பு
26. சுக்கான்
27. கமர் பலகை
28. மூராக் கயிறு
29. லேக்கிக் கயிறு
30. ஏராக் கட்டை
31. ஜீப் பருவான்
32. பொய்போடுதை
33. கால் ஆஞ்சான்
34. பீக் ஆஞ்சான்
35. அவுத்தியால்
36. அணியத்துக் கட்டை

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்

திருநெல்வேலி – 12

முனைவர் பட்டம் - பி.எச்.டி.

முன்மாதிரி வாய்மொழித் தேர்வு

மதிப்பீட்டறிக்கை

ஆய்வுத் தலைப்பு: "சங்ககால நெய்தலும் தற்காலப் பதிவுகளும் (எட்டுத் தொகையில் அகம் சார்ந்தவை)"

பதிவு எண் : 9645

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகத்தின் சார்பில் தூத்துக்குடி ஏ.பி.சி. மகாலெட்சுமி மகளிர் கல்லூரி தமிழாய்வு மையத்தில் 01.07.2015 அன்று காலை 9.30 மணி அளவில் தெ.சந்திரா, (முழுநேர ஆய்வாளர், பதிவு எண் : 9645) அவர்களுக்கு முன்மாதிரி வாய்மொழித் தேர்வு நடத்தப்பெற்றது.

முனைவர். நீ.கந்தம்மாள் அவர்கள் (தமிழ்த்துறைத் தலைவர், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி) இணைந்து முன்மாதிரி வாய்மொழித் தேர்வு நடத்தப்பட்டது.

தமிழாய்வு மைய ஆய்வாளர்களும், கல்லூரிப் பேராசிரியப் பெருமக்களும் கலந்து கொண்டனர். ஆய்வுச் சுருக்கத்தினை ஆய்வாளர் வழங்கினார். பார்வையாளர் தொடுத்த வினாக்களுக்கும், ஐயங்களுக்கும் ஆய்வாளர் தக்க விடைகள் தந்து விரிவான விளக்கமும் அளித்தார்.

இறுதியில் தேர்வுக்குழுத் தலைவர் கேள்விகளைக் கேட்டதற்கு ஆய்வாளர் பொருத்தமான விடைகளையும், விளக்கங்களையும் தந்தார். ஆய்வாளர் தந்த பதில்கள் மன நிறைவைத் தந்தன.

சு.பானுமதி

முனைவர். சு.பானுமதி
இணைப் பேராசிரியர்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி,
தூத்துக்குடி.

Dr. S. BANUMATHI, M.A., M.Phil., D.G.T., Ph.D.,
Associate Professor
Dept. of Tamil & Research Centre
A.P.C. Mahalakshmi College for Women
Thoothukudi-628 002.

A.P.C MAHALAKSHMI COLLEGE FOR WOMEN
அன்பு அறிவு அறம்

ISBN 978-93-81006-83-2

தொகுதி 1

பயன்பாட்டியல் பார்வையில் தமிழ் இலக்கியங்களும் ஆவணங்களும்

பதிப்பாசிரியர்

முனைவர் இரா.கிருஷ்ணமூர்த்தி

முனைவர் கலை இராம.வெங்கடேசன்

முனைவர் மு.இராசேந்திரன்

திருவாளர் த.பொன் இராஜாசிங்

முனைவர் நாஞ்சில் நீல. மாதவன்

முனைவர் சு.சதாசிவம்

செம்முதாய்

85. **கார்மல் ஷர்மிளா .ஹெ** 386
கம்பராமாயணத்தில் தமிழும் தமிழ்நாடும்

86. **பா. மனோன்மணி** 390
சங்க இலக்கியத்தில் பேஎய்

87. **K. THUYAVARMAN** 394
Rock Art - Sittannavasal monument and
its cave paintings

88. **MISS. M. KANIKA PRIYA** 399
Foreshadowing history the novel ponniyin Selvan
focus on literature and its benefits

89. **முனைவர் ப. சுத்திரகரமேரி** 404
சங்கப் புலவர்களது கருத்தியல் உணர்வு

90. **S. DEEPIKA** 409
Brahmauasta - Early sculpture of Muruga

91. **முனைவர் ஏ.தே.கிளாரா இன்னசெண்ட்** 414
சிவகாமி, பாமா புனைகதைகளில் கதைப்பின்புலம்

92. **கொ. சத்தியபாமா** 418
பயன்பாட்டியலில் சங்க அக இலக்கியங்கள்

93. **அ. சவரிமுத்து** 423
பயன்பாட்டியல் நோக்கில் தொல்காப்பிய களவியல்

94. **தெ. சந்திரா** 428
நெய்தல் நிலவாழ் மக்களின் வாணிபம்

95. **முனைவர் ஆ. பவுனம்மாள்** 432
சங்க இலக்கியங்களில் அரசன் சார்ந்த
நம்பிக்கைகளும் சடங்குகளும்

96. **முனைவர் தே. ஷீஜா மோஷி** 437
கல்வி வளர்ச்சிக்கு வழிகாட்டிய இலக்கியங்கள்

97. **க. பிரியங்கா** 442
பெரும்பாணாற்றுப்படை காட்டும்
விருந்தோம்பல் சிறப்பு

98. **இரா. கிருத்திகா** 446
பத்துப்பாட்டில் மன்னர்களைச் சார்ந்த கட்டிடங்கள்

99. **முனைவர் க. கலாவதி** 451
இலக்கியங்களில் வரலாற்றுச் செய்திகள்

தெ. சந்திரா
முனைவர் பட்ட ஆய்வாளர்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி
தூத்துக்குடி.

94. நெய்தல் நிலவாழ் மக்களின் வாணிபம்

முன்னுரை

சங்ககால மக்கள் வாணிபத்தில் சிறந்து விளங்கினர். நெய்தல் நிலம் வாணிபத்திற்கு சிறந்த தளமாக விளங்கியது. கடற்பகுதியான நெய்தலில் கடலே வாணிபத்திற்கு அடிப்படையாக அமைகின்றது. கடலில் விளையும் பொருட்களைக் கொண்டு பரதவர்கள் தங்களை வளப்படுத்திக் கொண்டனர். மீன், சங்கு, சிப்பி, முத்து, இறால், கடற்பாசி, நண்டு, பவளப்பாறை போன்ற அரியப் பொருட்களை வழங்கும் சுரங்கமாக கடல் காட்சியளிக்கிறது. இதனைக்கொண்டு, உள்நாட்டுப் பொருளாதாரம் வளர்ச்சியடைந்தது. எனினும் நெய்தல் நில மக்களின் பொருளாதார வாழ்க்கை மிகவும் பின்தங்கியே இருந்தது. அயல்நாட்டு வாணிபத்திற்கு கடல்வழிப் போக்குவரத்தே சிறந்ததாகக் கருதப்பட்டது.

பண்டமாற்று

சங்க காலத்தில் பண்டமாற்று முறையைக் கையாண்டனர். தம் நிலத்தில் விளைந்த பொருட்களைப் பிற நிலத்தினரிடம் விற்று அவர்களிடமிருந்து தமக்குத் தேவையான உணவுப்பொருட்களைப் பெற்றுக்கொண்டனர். பெரிய பட்டினங்களிலும், நகரங்களிலும் காசு கொடுத்து வாங்கும் முறை இருந்தது. இருப்பினும், ஊர்களிலும், கிராமங்களிலும் பண்டமாற்று முறையே வழக்கில் இருந்தன. பாணர்கள் ஆறு, ஏரி, குளம் இவற்றில் பிடித்த மீனை விற்று பயிறும், தானியமும் பெற்று வந்ததாக ஓரம்போகியோர் குறிப்பிடுகின்றார்.

"முள் எயிற்றுப் பாண்மகள் இன்கெடிறு சொரிந்த
அகன்பெரு வட்டி நிறைய மனையோள்
அரிகால் பெரும்பயிறு நிறைக்கும் ஊர!"

உமணர்கள் உப்பை விற்று நெல் பெற்றமையை,

"உமணர் தந்த உப்புநொடை நெல்லின்"

என்னும் நற்றிணைப் பாடலடி உணர்த்துகின்றது. நெய்தலில் விளைந்த உப்பை மருத நிலத்தினர் பெற்றுக் கொண்டனர். மாற்றாக தம் நிலத்தில் விளைந்த நெல்லைக் கொடுத்தனர்.

"தம் நாட்டு விளைந்த வெண்ணெல் தந்து
பிறநாட்டு உப்பின் கொள்ளை சாற்றி"

என்ற பாடலடிகள் மூலம் சங்ககாலத்தில் நிகழ்ந்த பண்டமாற்று முறையை அறியமுடிகின்றது.

வணிகம்

தமிழகம் மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டது. எனவே தமிழர்கள் இயற்கையாகவே கடற்பிரயாணம் செய்வதிலும் கப்பல் மூலம் வாணிபம் செய்வதிலும் தொன்றுதொட்டு விளங்கினர். நெய்தல் நிலத்தினர் தினமும் கடலுக்குள் சென்று மீன்பிடித்து வாழ்க்கை நடத்தினர். எனவே கடல் வாணிபத்திற்கு முன்னோடிகளாக நெய்தல் நிலத்தினர் திகழ்ந்தனர்.

வணிகத்திற்கென வணிகக்குழுக்கள் இருந்தன, வணிகக்குழுக்கள் துறைமுகத்தோடு நெருங்கிய உறவு கொண்டிருந்தனர். கி.பி.12-13ம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டுக்களில் சித்திரமேழி என்ற வணிகக்குழு முக்கிய இடம் பெறுகின்றது. மூன்றாம் குலோத்துங்கன் கல்வெட்டில் இக்குழுவினர் சித்திரமேழி பெரியநாட்டார் எனக் குறிப்பிடுகின்றனர். இவ்வணிகக்குழு தமிழகத்தில் தோன்றிப் பின்னர் தென்னிந்தியாவின் பிற பகுதிகளில் பரவியதாகக் காணப்படுகிறது. இக்குழு விவசாயத்தைத் தொழிலாகக்கொண்ட விவசாய அமைப்பாக இருந்தது. நகரத்தார் என்னும் வணிகக் குழு 'வணிகச்சக்கரவர்த்திகள்' என அழைக்கப்பட்டனர். நானாதேசி என்ற வணிகக் குழு புடவை (துணி) மிளகு, பாக்கு போன்ற பொருட்களை வாணிபம் செய்தனர், இவ்வணிகக்குழுவினர் கி.பி. 10 நூற்றாண்டில் இலங்கை மற்றும் தென்னிந்தியப் பகுதிகளில் கடல்சார் வாணிபத்தில் ஈடுபட்டிருந்தனர்.

உள்நாட்டு வணிகம்

மீனவன் ஆழ்கடலுக்குள் சென்று மிகுந்த போராட்டத்திற்குப் பின் மீனைப் பிடித்து கரை திரும்புகிறான். வேட்டத்தில் கொண்டு வந்த மீனைக் கரையில் உலர்த்தி, பதப்படுத்தி சந்தைப்படுத்துகின்றனர். சந்தைப்படுத்துதல் பெண்ணின் கடமையாக இருந்ததை சங்க இலக்கியம் எடுத்துரைக்கின்றது,

"ஓங்கு திரைப் பரப்பின் வாங்குவிசை கொளீஇத்
திமிலோன் தந்த கடுங்கண் வயமீன்
தழையணி யல்குற் செல்வத் தங்கையர்
விழவயர் மறுகின் விலையெனப் பகரும்"

உப்பு விளைவித்தல் நெய்தலின் மாற்றுத் தொழிலாக இருந்ததை அறிகின்றோம்.

"உவர் விளை உப்பின் உழாஅர் உழவர்
வானம் வேண்டா உழவின் எம்
கானல் அம் சிறுகுடிச் செந்தனைச் செலினே"

வெளிநாட்டு வணிகம்

நெய்தல் நிலத்தினர் கடல் கடந்து வாணிபம் செய்யும் திறன் பெற்றிருந்தனர். உள்நாட்டிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. பல நாடுகளிலிருந்தும் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டன. வணிகத்திற்காக பல்வேறு நாடுகளிலிருந்தும் நாவாய்கள் (கப்பல்கள்) வந்து சென்றதை 'பலவினை நாவய் தோன்றும் பெருந்துறை' என ஔவையார் குறிப்பிடுகின்றார். கப்பல்களில் தங்கள் நாட்டுக் கொடிகள் ஏற்றப்பட்டிருக்கும் என்பதை கா. அப்பாத்துரை அவர்கள் 'இடர்நிறைந்த ஆழ்கடலைக் கடந்து வரும் கப்பல்கள் பலவந்து குழுமி விலையேறிய சரக்குகளை இறக்குமிடம் துறைமுகம் அச்சமயங்களில் கப்பல்களின் பாய்மர உச்சியல் கொடிகள் பறக்கும். சரக்குகள் வந்துள்ளதை வணிகர்களுக்குத் தெரிவிக்கும் முறையில் கரையில் முரசங்கள் முழங்கும்' என்று கூறுகிறார். இதனை அகநானூற்றுப் பாடல் தலைவன் தன் தோழனிடம் கொடிகள் அசையும் தோணிகளைக் காண்போம் வருவாயாக என கூறுவதாக,

"நெருங்கொடி நுடங்கும் நாவாய் தோன்றுவ
காணலாமோ?"

என்னும் பாடலடிகள் விளக்குகின்றன.

சங்கு குளித்தல் மற்றும் முத்து எடுத்தல்

மீன் வேட்டையாடுதலோடு நின்று விடாமல் ஆழ்கடலில் மூழ்கி சங்குகளையும், முத்துகளையும் எடுக்கும் தொழிலையும் பரதவர்கள் செய்தனர், உயிரைப் பணையமாக வைத்து இத்தொழிலைப் புரிவர். திரண்ட வடிவினையுடைய அம்முத்துக்களைக் கடற்கரைச் சோலையில் குவிந்தனர். அதனைப் பலருக்கும் பகுத்துக் கொடுத்தனர். அரிய சங்குகளிலிருந்து பெற்ற விலையுயர்ந்த முத்துக்களைத் தகுந்த பொருள் கொடுப்பவரிடம் விற்றனர். இவற்றை

"பெருங்கடல் வெண்சங்கு காரணமாகப் பேண
திருங்கடன் மூழ்குவார்"

"இலங்கிரும் பரப்பின் எறிசுறா நீக்கி
வலம்புரி மூழ்கிய வான்றிமிற் பரதவர்"

"வலைபடு முத்தம் பரதவர் பகரும்
கடல்கெழு கொண்கண்"

என்னும் அகப்பாடலடிகள் உணர்த்துகின்றன.

உப்பு விளைவித்தல்

கடல்நீரிலிருந்து உப்பு எடுக்கும் பழக்கம் தொன்றுதொட்டுத் தமிழகத்தில் நடைபெற்று வருகிறது. கடல்நீரை உப்புப் பாத்திகளில் பாய்ச்சி, உப்பை விளைவித்துக் கொள்வர். உப்பை விற்பதற்காக வண்டிகளில் ஏற்றிக்கொண்டு பிற ஊர்களுக்குச் செல்வர். மழைக்காலத்தில் பரதவர் நெல் விளைவித்துப் பயன்பெறுவர்.

"பெயினே விடுமான்உழையினம் வெறுப்பத் தோன்றி
இருங்கதிர் நெல்லின் யாண ர.:தே
வறப்பின், மாநீர் முண்பகந் தாஅய்சேறு புலர்ந்து
இருங்கழிச் செறுவின் வெள்ளுப்பு விளையும்
அழியா மரபின்"

முடிவுரை

கடல்வழி வாணிபத்திற்கு சிறந்த தளமாக நெய்தல் நிலம் விளங்கியது. ஏற்றுமதி, இறக்குமதி மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிபம் மேன்மை அடைந்தன. மீன்பிடித்தல், சங்கு மற்றும் முத்து எடுத்தல் நெய்தல் நில மக்களின் முக்கியத் தொழிலாக விளங்குகின்றது.

தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறிகள்

தொகுதி - 1

பதிப்பாசிரியர்

முனைவர் கலை. இராம.வெங்கடேசன்

முனைவர் மு. இராசேந்திரன்

முனைவர் சாமிக்கண்ணு ஜெயமணி ஐசக்

திரு மன்னர் மன்னன்

முனைவர் நாஞ்சில். நீல. மாதவன்

வெளியீடு

ORANGE PUBLICATION

27-B-FIRST FLOOR,MAHANADU DHARMARAYAR STREET,

BIG KANCHEEPURAM -631502.

நூல் விபரம்

தலைப்பு	:	தமிழ் இலக்கியங்களில் பக்தி நெறிகள்
பொருள்	:	ஆய்வுக் கட்டுரைகள் - தொகுதி – 1
பதிப்பு	:	முதற்பதிப்பு, டிசம்பர் 2015
ISBN	:	978-81-925388-0-8
உரிமை	:	பதிப்பாசிரியருக்கு
மொழி	:	தமிழ், ஆங்கிலம்
நூல் அளவு	:	1/8, டெம்மி
பக்கங்கள்	:	32 + 736
விலை	:	ரூ.700/-
வெளியீடு	:	**ORANGE PUBLICATION** 27-B- FIRST FLOOR, MAHANADU DHARMARAYAR STREET, BIG KANCHEEPURAM- 631502. MOB NO :9444748233.
அட்டை வடிவமைப்பு & அச்சாக்கம்	:	**TODAY GRAPHICS** S.R.COMPLEX 14/192, BELLS ROAD CHENNAI-5

(குறிப்பு: இந்நூற் கட்டுரைகளில் இடம்பெற்றுள்ள கருத்துப் பதிவுகளுகக்குக் கட்டுரையாளர்களே முழுப்பொறுப்பாவார்கள். ஆய்வாளரைத் தொடர்புகொண்டு விளக்கம் பெறும் வகையில் ஒவ்வொரு கட்டுரையாளர்களின் முகவரியும் தரப்பட்டுள்ளது)

47. முதலாழ்வார்கள் மூவர் 313
-முனைவர் திருமதி.அருணா சங்கர வேலாயுதம்

48. நம்மாழ்வாரின் பக்திநெறி 318
-முனைவர் மு. அவையாம்பாள்

49. அற்புதத் திருவந்தாதியில் காரைக்கால் அம்மையாரின் பக்திச் சிறப்பு 325
-முனைவர் க. அழகர்

50. பாரதியின் பக்தி வெளிப்பாடுகள் 329
-பாலமுருகன் சி

51. சித்தர்கள் மரபும், சிவவாக்கியரும் 336
-செ.பாலமுருகன்

52. சித்தர் பாடல்களில் பக்திநெறி 342
-முனைவர். டே. பியூலா

53. நாயன்மார்கள் அருளிய பக்தி நெறிகள் 349
-முனைவர் கு.ஜெ.பாரதி

54. ஞானப்புகழ்ச்சியில் பக்தி நெறி 356
-பன்னூலாசிரியர் முனைவர். தக்கலை எம்.எஸ்.பஷீர்

55. சைவம் உணர்த்தும் சமூகம் 361
-தெ.சந்திரா

56. ஆழ்வார்களின் பாடல்களில் காணலாகும் கலைத்திறன் 366
- க.சித்திரா

57. ஆண்டாள் பாசுரங்களில் புராணச் செய்திகள் 371
-திருமதி சி. தமயந்தி

58. கவிஞர் மேத்தாவின் கவிதைகளில் பக்தி நெறி 377
-சு.தீபா

59. கந்தர்கலி வெண்பாவில் சாத்திரக் கருத்துக்கள் 382
-ச.தெய்வசிகாமணி

60. அகப்பாடல்களில் பக்திச்சுவை 388
-முனைவர் தே. தெளா கிறிஸ்டபெல்

61. பெரியபுராணம் வழியாக சேக்கிழாரின் பக்திச்சுவை 393
-முனைவர் தே. தெளா இசபெல்

62. தமிழரின் அன்பு நெறி 397
-J. தேவசேனா

தெ.சந்திரா
உதவிப்பேராசிரியை (சுயநிதிப்பிரிவு)
தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி)
தூத்துக்குடி.

55. சைவம் உணர்த்தும் சமூகம்

முன்னுரை

பக்தி மனிதனை மேம்படுத்துவது, பக்திநெறி மனிதன் இறைநிலை அடைவதற்கும், இறைவனோடு தொடர்புபடுத்தவும் உதவுகிறது. இப்பிறவி என்னும் பெருங்கடலிலிருந்து நம்மை விடுவிக்கும் இறைவனோடு தொடர்பு ஏற்பட உதவுவது சைவம். "சைவம் சிவனுடன் சம்பந்தமாவது" என்பர் திருமூலர். உலகில் உள்ள மக்கள் அனைவரும் தங்களுக்குள் உயர்ந்தோர், தாழ்ந்தோர், சிறியோர், பெரியோர் என்ற சாதி ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டிருக்கும் நிலையைக் கடந்து இறையடியாராக தொண்டர்குலாமாக நினைக்கும் நிலையை சைவசமயத்தில் காணமுடிகிறது.

சைவம்

சைவம் சாதீய நெறியன்று; தெய்வீக நெறி. பல நிலைகளிலுள்ள சமுதாயச் சூழலில் வாழ்பவர்களும் சைவர்களாக வாழலாம்; சிவனருள் பெற்றுய்யலாம் என்பதே சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறு உணர்த்துகிறது.

"சாதி குலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி நாயேனை அல்லலறுத்தாட் கொண்டு
பேதைகுணம் பிறர்உருவம் யான் எனது என்னுரை மாய்த்துக்
கோதில் அமுதானானைக் குலாவு திலை கண்டேனே"

என்று மாணிக்கவாசகப் பெருமான் பாடுகிறார். நால்வர் பாடிய திருமுறைகள் யாவும் சமூக நலன் விரும்பியே பாடப்பட்டவை. அத்திருமுறைகளை தில்லையிலும் பாடலாம் உலகின் எந்த எல்லையிலும் பாடலாம். வான்முகில் வாழாது பெய்க, மலிவளம் சுரக்க, மன்னன் கோன்முறை அரசு செய்க என்று உலக சேமத்திற்காக பாடப்பட்டதுதான் சைவத் திருமுறைகள். 'இந்தியன்' என்ற சொல் எவ்வாறு பல மாநிலங்களின் மக்களையும் ஒன்றிணைக்கிறதோ அதுபோல் 'சைவம்' என்ற நாமம் பலவர்ணத்தினரையும் ஒன்றினைக்கும் உயரிய கோட்பாட்டு நெறியாகும்.

அடியார் வழிபாடு

சைவர்கள் சிவனடியார்களைக் கண்டால் வழிபடுங்கள்; அது நாம் செய்யும் 'புண்ணியம்' என்பர். மனிதர்களின் உருவில் காணும் சாதி, இன வேறுபாடுகளைக் கடந்து அடியார் என்ற புனித நிலையைச் சைவம் கூறுகிறது. 'பொய்யன் பில்லா அடித்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே' என்பது அப்பர் சுவாமிகளது பாடல். அடியவர்களுக்கு அடியவரும் பணியத்தக்கவர்களே என்ற கருத்தில்

'தொண்டர் தொண்டரைத் தொழுதடி பணிமின்கள்
தூநெறி எளிதாமே'

எனத் திருஞானசம்பந்தர் பாடுவர். அடியவர்கள் திருவேடம் சிவவேடத்தை எதிரொலிப்பது; எனவே அடியவர் வேடத்தில் சிவ சொரூபத்தைக் கண்டு வழிபடுவதையே அடியார் வழிபாடாகக் கூறுவர்.

"எவரேனும் தாமாக இலாடத்திட்ட திருநீறும் சாதனமும்
கண்டால் உள்கி
உவராதே அவரவரைக் கண்டபோது உகந்தடிமைத்திறம்
நினைந்து அங்குவந்து நோக்கி
இவர்தேவர் அவர்தேவர் என்று சொல்லி இரண்டாட்டா
தொழிந்து – ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்றாப்பூர்
நடுதறியைக் காணலாமே"

எனப் பாடுவர் அப்பர் சுவாமிகள். அடியவர் வழிபாட்டில் ஈசனையே வழிபடுகின்றனர். அவ்வாறு வழிபடுவோர் நெஞ்சில் இறைவன் கோவில் கொள்கிறான் என்ற கருத்தும் இப்பாட்டில் உள்ளது. திருமுறைகள் உணர்த்தும் தொண்டும் துறவும் இதனையே வலியுறுத்துகின்றது.

சாதி வேற்றுமையை ஒழித்த சைவம்

சிவனடியார்களை சிவனாகக் காண்பதை விட்டு அவர்கள் பிறப்பினை ஆய்வது சைவமன்று.

"குறியில் நான்கு குலத்தினராயினும்
நெறியின் அக்குலம் நீங்கினராயினும்
அறிவு சங்கரற்கு அன்பர் எனப்பெறில்
செறிவுறப் பணிந்து ஏத்திய செய்கையார்"

என்பது திருமுறை. சினடியார்களைச் சிவனிலிருந்து வேறுபடுத்திக் காண்பது பேதமை என்கிறது கந்தபுராணம்.

"நாதன் தன்னையும் நாதன் தம்புயப்
பாதஞ்சேர்ந்து பரவினர் தம்மையும்

பேதஞ்செய்வது பேதமை நீரென
வேதங் கூறும் விழுப்பொருள் பொய்க்குமோ"

என்னும் பாடல் கருதத்தக்கது. சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்தில் 'உலகெலாம்' எனத் தொடங்கி இடையிலும் 'உலகெலாம்' எனப் பாடி இறுதியிலும் 'உலகெலாம்' என்று முடியும் உலகப் பொது இலக்கியத்தைப் படைத்தார். சேக்கிழார் கண்ணோட்டத்தில் மனிதகுலம் அனைத்தும் ஒன்றே; யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றக் கோட்பாடு இருந்தது.

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"

என்றார் வள்ளுவர். சேக்கிழார் பெருமான் சாதியால் உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று எண்ணாமல் ஒழுக்கத்தால், தொண்டினால், சிவவழிபாட்டினால் மனிதனை உயர்ந்தோர், தாழ்ந்தோர் என்று பிரித்தார்.

"பிறப்பிலே சாதிமதத்திலே சாதி பேசிடும் மொழியிலே சாதி
நிறத்திலே சாதி நாட்டிலே சாதி நீதியில் நினைவினில் சாதி
அறத்திலே சாதி ஆலயஞ் சாதி அழுகிய பிணத்திலும் சாதி
புறத்தகஞ் சாதி நாற்றமே எங்கும் புங்கல அழித்தல் நிற்கரிதேர்"

என்னும் திரு.வி.க பொதுமை வேட்டலில் கூறியது போன்று சாதிகள் மலர்ந்திருக்கும் இக்காலத்தில் சாதிகளைக் கடந்து அடியாராக, நாயன்மார்களை பாவித்த பெரியபுராணத்தின் வழியில் 63 அடியார்களையும் நாயன்மார்களாக குருபூஜை விழா நடத்தி வழிபடும் நிலையை சைவத்தில் காணமுடிகிறது.

சைவம் போற்றும் தத்துவம்

சைவத் திருமுறைகள் பன்னிரெண்டு. அவற்றுள் 12ம் திருமுறை எனப் போற்றப்படும் பெரியபுராணம் அடியார்களின் பெருமையைக் கூற எழுந்த காப்பியமாகும். சாதி, இன, உயர்வுத்தாழ்வுகளைக் கடந்த தேசியக்காப்பியம் ஆகும். 63 அடியவரும் பல்வேறு வர்ணத்தினர் எனினும் சிவநாமத்தினால் ஒன்றுபட்டு அன்பு பாராட்டி மகிழ்ந்தனர். அந்தணர் குலத்தில் தோன்றிய அப்பூதியடிகள் வேளாளர் குலத்தில் தோன்றிய திருநாவுக்கரசப் பெருமானையே தான் வணங்கும் தெய்வமாகக் கொண்டார். அப்பூதியடிகள் நாவுக்கரசர் பெருமானைக் கண்ணால் பார்க்காமலேயே அவரது இறைத் தொண்டினைக் கேள்வியுற்று அவருக்கு அடியாராகிய நிலையைக் காணலாம். அறுபத்துமூவரில் அரசர், குடிமக்கள், குயவர், பாணர், பரதவர்,

வேடர், சான்றோர், சாலியர், செக்கார், ஏகாலியர், புலையர், ஷத்திரியர், வைசியர், வேளாளர், இடையர், பிராமணர் என்று பல்வேறு வர்ணத்தினரும் நாயன்மார்களாகப் போற்றப் பட்டமையை அறியலாம். பெரியபுராணம் சாதிகளைக் கடந்த சமதர்மக் காப்பியம் எனினும் மிகையாகாது.

சிவப்பேற்றுக்கு அடியார் கூட்டுறவு இன்றியமையாதது என்கிறது சைவம். சீவன் முக்தி நிலை அடைந்த சிவனடியார்களும், 'வாசனாமலம் முற்றுமகல" அடியவர்களோடு ஒருங்கிருந்து வாழ வேண்டும்; அவர்கள் திருவேடத்தைச் சிவமெனவே கண்டு வாழ வேண்டும் எனச் சாத்திரங்கள் கூறுகின்றன.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம்தானும் அரனெனத் தொழுமே"

என்பது சிவஞானபோதம். 'பத்தரது சிவவேடத்தையும், சிவாலயத்தையும் பரமேசுவரன் எனக்கண்டு வழிபடுக' என விதிக்கிறது சிவஞானபோதம்.

சைவம் தரும் தீர்வு

சைவத்தை வளர்த்த சமயக் குரவர்களும், அடியார்களும் சாதியத்தை வெறுத்தத் தன்மையையே திருமுறைகள் உணர்த்துகின்றன. சைவக் குரவரான திருநாவுக்கரசர் பெருமான் மனித குலமே ஒன்று என்று கருதும் மாண்பு படைத்தவர்.

"சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?"

எனச் சாதித் திமிரையும், கல்விச் செருக்கையும் ஒருங்கே கண்டிக்கிறார். நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுக்குள்ளே இறைவன் புக்கு நிற்பான் எனப் புகலுகின்றார். இறையடியார்கள் எப்படிப்பட்டவராயினும் அங்கமெலாம் குறைந்து அழுகும் தொழுநோயாராய் இருப்பினும் அவர் கண்டால் யான் வணங்கும் கடவுளரே என்று குறிப்பிடுகின்றார்.

"அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோ யராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர்கண்டீர் யாம் வணங்கும் கடவுளாரே"

இறைவன் எல்லா இடங்களிலும் உறைபவனாயினும் சில இடங்களில் முனைத்து நிற்கின்றான் என்பர். அவ்விடங்களில் திருக்கோவில் ஒன்று. 'உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயமாக வாழும் அடியவர் கூட்டம் பிறிதொன்று. திருக்கோவில் போன்று சிவ சொரூபத்தைப் புலப்படுத்தி

நிற்பதாலேயே அடியவர்களை 'நடமாடும் கோவில் என்பர்". நடமாடும் கோவிலாகப் பாவித்தால் மட்டும் போதாது, அவர்களின் பசி போக்குவதோடு பிறவகையில் உதவுவதையும் சிவத்தொண்டு என்று கூறுவர்.

"படமாடக் கோயிற் பகவற்கொன்றீயில்
நடமாடக் கோயில் நம்பர்க்கங்காகா
நடமாடக் கோயில் நம்பர்க்கொன்றீயில்
படமாடக் கோயில் பகவற்கதாமே"

என்பது திருமந்திரம். இவ்வாறு உதவுவதை 'மகேசுவர பூஜை' என்பர். சிவத்தினை அன்பு வடிவாக எண்ணினார் திருமூலர் எனவே

"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்.
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே"

என்று பாடினார். எனவே அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்த வேண்டிய உயரிய நெறியினை சைவம் போதிக்கிறது. மேலும் திருமூலர் கூறும் ஒன்றே குலம் என்ற கொள்கையினையும் சைவம் ஏற்றுக் கொள்கிறது. திருவாரூரில் இறைவன் வீதியுலா வந்தபோது எல்லாச் சாதியினரும் சேர்ந்து தெருவில் நின்று வணங்கியதாக சேக்கிழார்

"தேவர் பெருமான் எழுச்சிதிரு மணலிக் கொருநாள் எழுந்தருள யாவ ரென்னா துடன்சேவித் தெல்லாக் குலத்தி லுள்ளோரும் மேவட அன்பர் தாமுமுடன் சேவித் தணைந்து விண்ணவர்தங் காவ லாளர் ஓலக்கம் அங்கே கண்டு களிப்புற்றார்"

என்று நமிநந்தியடிகள் புராணத்திலே குறிப்பிடுகின்றார். இன்று நாம் போற்றும் சமத்துவ சகோதரத்துவ சமுதாயத்தை சேக்கிழார் 'பெரியபுராணம்' என்னும் காப்பியமாகப் படைத்துக் காட்டினார்.

முடிவுரை

சிவவழிபாடு, சிவநெறி இவற்றில் நிலைத்திருப்பதே சைவமாகும். சிவநெறி வழிபாட்டில் நிலைத்திருப்போர்களிடம் வர்ணம் அற்றுப்போய்விடும். இதற்கு உதாரணமாகத் திகழ்பவர்கள் நாயன்மார்களும் சிவனடியார்களும் எல்லா உயிர்களையும் இறைவன் வாழும் கோயிலாக எண்ணும்போது சாதியப் பிரிவினைகளும், பாகுபாடுகளும் தோன்றுவதில்லை என்று சைவம் இயம்புகிறது. சைவம் என்பது இறைவனோடு மனிதனை இணைக்கும் உயரிய கோட்பாடு ஆகும். சாதி இனம் கடந்து அடியார் என்னும் நாமத்தினால் மக்களை ஒன்றிணைப்பது சைவம்.

◈ ◈ ◈



சிந்தியா கப்பல்



முத்து மற்றும் சங்கு படுகை

சர். ராபர்ட் பிரிஸ்டோ



மண்தோண்டிக் கப்பல்



பாண்டியபதி முத்து சிலாபத்திற்காக பல்லக்கில் வந்து இறங்குகிறார்

ஜாதித் தலைவ மோரவர்களுக்குச் சலாபத்தில் சர்க்காரால்
வழங்கப்படும் மானிய முத்துச் சிப்பிகள்



அருள்திரு. அல்போன்ஸ் மரிய காகு

(24.04.1901 - 05. 08. 1984)